Visit Dwarkadheeshvastu.com For

FREE Vastu Consultancy, Music, Epics, Devotional Videos
Educational Books, Educational Videos, Wallpapers

****

All Music is also available in CD format. CD Cover can also be print with your Firm Name

****

We also provide this whole Music and Data in PENDRIVE and EXTERNAL HARD DISK.

Contact : Ankit Mishra (+91-8010381364, dwarkadheeshvastu@gmail.com)

****

SRIMAN NARAYANIYAM

(SATIK)

(Tamil)

****

॥ ஸ்ரீஹரி: ॥

தேவநாகரி எழுத்துக்கள்

வடமொழிச் சொற்களைப் பிழையின்றி உச்சரிக்க உதவியாக, ஆங்கில எழுத்துக்களின் துணைகொண்டு 2, 3, 4 என்னும் குறியீடுகளுடன் வடமொழி எழுத்துக்களுக்கு நிகரான தமிழ் ஒலி வடிவங்களும் தரப்பட்டுள்ளன.

[ka] क க	[kha] ख க$_2$	[ga] ग க$_3$	[gha] घ க$_4$
[ca] च ச	[cha] छ ச$_2$	[ja] ज ஜ	[jha] झ ஜ
[ta] ट ட	[tha] ठ ட$_2$	[da] ड ட$_3$	[dha] ढ ட$_4$
[ta] त த	[tha] थ த$_2$	[da] द த$_3$	[dha] ध த$_4$
[pa] प ப	[pha] फ ப$_2$	[ba] ब ப$_3$	[bha] भ ப$_4$
[śha] श ஶ	[sha] ष ஷ	[sa] स ஸ	
[gna] ज्ञ ஜ்ஞ	[ksha] क्ष க்ஷ	[ṛi] ऋ ரு	

'ஶ' என்னும் எழுத்து பிசகு, கசடு என்னும் சொற்களில் வரும் 'ச' வைப் போல் ஒலிக்கும்.

'ரு' என்னும் எழுத்து எருது, விருது என்னும் சொற்களில் வரும் 'ரு' வைப் போல் ஒலிக்கும்.

ஸம்ஸ்கிருத சுலோகங்களில் சில இடங்களில் 'ऽ' அல்லது 'ऽऽ' என்னும் குறியீடுகளைக் காணலாம். இதற்கு 'அவக்₃ரஹம்' என்று பெயர். இந்த இடங்களில் முறையே 'அ', 'ஆ' என்னும் எழுத்துக்கள் தொக்கி நிற்கின்றன என்பது பொருள்.

॥ ஸ்ரீஹரி: ॥

பொருளடக்கம்

தசகம் எண்	பொருள்	பக்கம் எண்
	முன்னுரை	iii
	தேவநாகரி எழுத்துக்கள்	x
	பொருளடக்கம்	xi
தசகம் 1 முதல் 3 வரை (ஸ்ரீமத் பாகவதம் முதல் ஸ்கந்த ஸாரம்)		
1.	ஸ்ரீபகவானின் பெருமை = மக்களின் பெரும்பேறு	1
2.	பகவானின் திருமேனி வர்ணனை	7
3.	பக்தலக்ஷணம்	11
தசகம் 4 முதல் 7 வரை (இரண்டாவது ஸ்கந்த ஸாரம்)		
4.	அஷ்டாங்க யோகம்	14
5.	விராட்புருஷ உற்பத்தி (தோற்றம்)	17
6.	விராட்புருஷனே உலக வடிவம்	20
7.	பிரம்மதேவனின் தோற்றமும், வைகுண்ட தரிசனமும்	23
தசகம் 8 முதல் 15 வரை (மூன்றாவது ஸ்கந்த ஸாரம்)		
8.	மஹாப்பிரளயமும், உலகின் தோற்றமும்	25
9.	உலகத்தின் தோற்றம்	28
10.	படைப்பின் பல வகைகள்	31
11.	ஸநகாதிகள் வைகுண்டம் செல்லுதல்	33
12.	ஸ்ரீவராஹாவதாரம்	35
13.	ஹிரண்யாக்ஷன் வதம்	38
14.	ஸ்ரீகபிலர் அவதாரம்	41
15.	கபில உபதேசம்	43
தசகம் 16 முதல் 19 வரை (நான்காவது ஸ்கந்த ஸாரம்)		
16.	நர நாராயணாவதாரம் – தக்ஷ யாகம்	47
17.	ஸ்ரீதுருவ சரிதம்	50
18.	ப்ருது சரிதம்	53
19.	தக்ஷன் தோற்றம்	55
தசகம் 20 முதல் 21 வரை (ஐந்தாவது ஸ்கந்த ஸாரம்)		
20.	ரிஷபதேவர் சரித்திரம்	58
21.	வெவ்வேறு த்வீபங்களில் பகவானது ஆராதனை	60

தசகம் எண்	பொருள்	பக்கம் எண்
தசகம் 22 முதல் 23 வரை (ஆறாவது ஸ்கந்த ஸாரம்)		
22.	அஜாமிளோபாக்கியானம்	63
23.	சித்ரகேது உபாக்கியானம்	66
தசகம் 24 முதல் 25 வரை (ஏழாவது ஸ்கந்த ஸாரம்)		
24.	ஸ்ரீபிரஹ்லாத சரித்திரம்	69
25.	ஸ்ரீநரஸிம்ம அவதாரம்	72
தசகம் 26 முதல் 32 வரை (எட்டாவது ஸ்கந்த ஸாரம்)		
26.	கஜேந்திர மோக்ஷம்	74
27.	அம்ருத மதனம்	77
28.	ஸ்ரீமஹாலக்ஷ்மி திருவவதாரம்	80
29.	மோஹினி திருவவதாரம்	81
30.	ஸ்ரீவாமனாவதாரம்	84
31.	ஸ்ரீவாமன சரிதம் – பலியின் செருக்கழித்தல்	87
32.	ஸ்ரீமத்ஸ்யாவதாரம்	90
தசகம் 33 முதல் 36 வரை (ஒன்பதாவது ஸ்கந்த ஸாரம்)		
33.	அம்பரீஷ சரிதம்	92
34.	ஸ்ரீராம சரிதம்	94
35.	ஸ்ரீராம சரிதம் (தொடர்ச்சி)	97
36.	ஸ்ரீபரசுராமர் வரலாறு	100
தசகம் 37 முதல் 39 வரை (பத்தாவது ஸ்கந்தம் முதல் பாகம்)		
37.	ஸ்ரீகண்ணன் திருவவதாரம் – முன்னுரை	104
38.	ஸ்ரீகண்ணன் திருவவதாரம்	106
39.	யோகமாயையை எடுத்து வருதல்	109
தசகம் 40 முதல் 49 வரை (பத்தாவது ஸ்கந்தம் இரண்டாவது பாகம்) கோகுல லீலை		
40.	பூதனை வதம்	112
41.	பூதனை மோக்ஷம்	113
42.	சகடாஸுர வதம்	116
43.	திருணாவர்த்தன் வதம்	118
44.	திருப்பெயர் சூட்டுதல்	120
45.	தீராத விளையாட்டுப் பிள்ளை	122
46.	மண் தின்ற மாயோன்	125
47.	உரலில் கட்டுண்ட கண்ணன்	127

தசகம் எண்	பொருள்	பக்கம் எண்
48.	யமளார்ஜுனர்களுக்கு மோக்ஷம் அளித்தல்	129
49.	பிருந்தாவனமேகுதல்	132
தசகம் 50 முதல் 73 வரை (பத்தாவது ஸ்கந்தம் மூன்றாவது பாகம்) பிருந்தாவன லீலை		
50.	வத்ஸாஸுரன் – பகாஸுரன் வதம்	134
51.	அகாஸுர மோக்ஷம்	137
52.	நான்முகனே மயங்குதல்	139
53.	தேனுகாஸுர வதம்	142
54.	காளியன் வரலாறு	144
55.	காளிய நர்த்தனம்	146
56.	காளியன் சரணாகதியும், காட்டுத் தீயும்	148
57.	பிரலம்பாஸுர வதம்	150
58.	காட்டுத் தீயிலிருந்து காத்தல்	152
59.	வேணுகானம்	154
60.	கோபிகைகளின் துகில் கவருதல்	157
61.	அந்தணப் பெண்டிர்க்கு அருளுதல்	159
62.	இந்திர வேள்வியைத் தடுத்தல்	161
63.	கோவர்த்தன கிரியைக் குடையாகக் கொண்டமை	164
64.	ஸ்ரீகோவிந்த பட்டாபிஷேகம்	166
65.	குரவைக் கூத்து – ராஸக்ரீடை (**i**)	169
66.	ராஸக்ரீடை (**ii**)	172
67.	ராஸக்ரீடை (**iii**)	173
68.	ராஸக்ரீடை (**iv**)	175
69.	ராஸக்ரீடை (**v**)	178
70.	சுதர்சனன் வரலாறு, சங்கசூடன் வதம் முதலியன	181
71.	கேசி வதம்	183
72.	அக்ரூரர் வருகை	186
73.	பகவான் மதுரைக்குப் புறப்படுதல்	189
தசகம் 74 முதல் 77 வரை (பத்தாவது ஸ்கந்தம் நான்காவது பாகம்) மதுரா லீலை		
74.	பகவான் மதுரைக்கு எழுந்தருளுதல்	191
75.	கம்ஸ மோக்ஷம்	194
76.	உத்தவர் தூது	197
77.	முசுகுந்தனுக்கருளியது	200

தசகம் எண்	பொருள்	பக்கம் எண்
தசகம் 78 முதல் 90 வரை (பத்தாவது ஸ்கந்தம் ஐந்தாவது பாகம்) துவாரகா லீலை		
78.	ஸ்ரீபலராமனின் திருமணம்	204
79.	ஸ்ரீருக்மிணீ கல்யாணம்	206
80.	ஸ்யமந்தகமணி வரலாறு	208
81.	சுபத்திரை திருமணம் முதலியன (அஷ்டமஹிஷீ விவாஹம்)	211
82.	உஷாபரிணயம்	214
83.	பௌண்ட்ரகன் வதம்	217
84.	ஸமந்தபஞ்சகம் அடைதல்	220
85.	ஜராஸந்தன் வதமும், தருமநந்தனன் ராஜஸூய வேள்வியும்	222
86.	பாரதப் போர்	225
87.	குசேலோபாக்கியானம்	229
88.	ஸந்தான கோபால சரித்திரம்	231
89.	வ்ருகாஸுர வதமும், ஸ்ரீவிஷ்ணு பரத்வமும்	235
90.	ஸ்ரீகிருஷ்ணனே பரமாத்மா	238
தசகம் 91 முதல் 97 வரை (பதினோராவது ஸ்கந்த ஸாரம்)		
91.	பக்தியின் மேன்மை	242
92.	கர்மமும், பக்தியும்	246
93.	காண்பதெல்லாம் குருவே	249
94.	உண்மையறிவும் (தத்துவஞானமும்), பக்தியும்	253
95.	தியானயோகம்	257
96.	விபூதியோகம்	260
97.	பக்தியைத் தந்தருள்	264
தசகம் 98 முதல் 100 வரை (பன்னிரண்டாவது ஸ்கந்த ஸாரம்)		
98.	உலகின் தோற்றம் – பரப்பிரம்ம தத்துவம்	268
99.	பகவானின் பெருமைகளை வர்ணித்தல்	272
100.	பகவானைத் திருமுடி முதல் திருவடி வரை வர்ணித்தல்	277
	பகவான் வேதவியாஸரின் அத்யாத்ம ராமாயணம் — பாலகாண்டம் — முதலாவது ஸர்க்கம், இரண்டாவது ஸர்க்கம்	281

" ஸ்ரீஹரி: "

ஸ்ரீமந் நாராயணீயம்

முதல் ஸ்கந்தம்

முதல் தசகம்

ஸ்ரீபகவானின் பெருமை = மக்களின் பெரும்பேறு

ஸாந்த்³ராநந்த³ாவபோ³தை⁴காத்மக–மநுபமிதம் காலதோ³ஷாவதி³ப்⁴யாம்
நிர்முக்தம் நித்யமுக்தம் நிக³மஸஹஸ்ரேண நிர்பா⁴ஸ்யமாநம் ।
அஸ்பஷ்டம் த்³ருஷ்டமாத்ரே புநருருபுருஷார்தா²த்மகம் ப்³ரஹ்ம தத்வம்
தத்தாவத்³பா⁴தி ஸாக்ஷாத்³கு³ருபவநபுரே ஹந்த பா⁴க்³யம் ஜநாநாம் ॥ 1 ॥

பரிபூர்ணமான ஆனந்தமும், ஞானமுமே ஸ்வரூபமாக உடையதும்; உண்மையானதும்; உவமையற்றதும்; காலம், தேசம் இவற்றின் எல்லைகளைக் கடந்ததும்; என்றும் விடுபட்டதும், ஆயிரக்கணக்கான உபநிஷத்துக்களால் கொண்டாடப்படுவதும்; ஆனால் அறிவதற்கரிதானதும்; கண்டபோதே (தரிசனம் செய்த உடனேயே) பரம புருஷார்த்தமான மோக்ஷஸ்வரூபமாவதும் (மோக்ஷத்தையளிக்கவல்லதும்); முக்குண மாயையினின்றும் முற்றிலும் விடுபட்டதுமான அந்த பரப்பிரம்மமே குருவாயூரில் கண்ணெதிரில் விளங்குகிறது. இதுவன்றோ மக்களின் பெரும்பேறு. அறியவொண்ணாத பரப்பிரம்மமே குருவாயூரில் ஸ்ரீகுருவாயூரப்பனாகக் காட்சியளிக்கிறாரே – இது மக்களின் பெரும்பேறன்றோ! (1)

குறிப்பு:– ஸ்ரீநாராயண பட்டதிரி ஒவ்வொரு சுலோகத்தின் முடிவிலும், 'ஸ்ரீகுருவாயூரப்பா! இவ்வாறு நடந்தது சத்தியமா?' என்று கேட்க, ஸ்ரீபகவானும் 'ஆம்' என்று கூறித் தன் தலையசைத்து அங்கீகாரம் செய்ததாக வழிவழி வந்த செய்தி. நாமும் அவ்வாறே கொள்ள வேண்டும்.

இங்ஙனம் பகவான் எளிதாகக் கிடைத்திருப்பினும் அவரைத் துதிக்காத மாந்தரை என் சொல்வது என்று ஏங்குகிறார் பட்டதிரி.

ஏவம் து³ர்லப்⁴யவஸ்துந்யபி ஸுலப⁴தயா ஹஸ்தலப்⁴தே³ யத³ந்யத்–
தந்வா வாசா தி⁴யா வா ப⁴ஜதி பத ஜந: க்ஷுத்³ரதைவ ஸ்பு²டேயம் ।
ஏதே தாவத்³வயம் து ஸ்தி²ரதரமநஸா விஸ்வபீடா³பஹத்யை
நிஸ்ஸேஷாத்மாநமேநம் கு³ருபவநபுராதீ⁴ஸமேவாஸ்ரயாம: ॥ 2 ॥

இவ்வாறு கிடைத்தற்கரிய பொருளான ஸ்ரீபகவான் எவ்வித முயற்சியுமின்றி கைக்குக் கிட்டியிருந்தும் மக்கள் உடல், சொல், மனது ஆகியவற்றால் வேறு தெய்வத்தை வணங்குகிறார்களே – இது அவர்களது அறியாமையே. அந்தோ! பரிதாபம்! ஆனால் இதையுணர்ந்த நாங்கள் உலகோரின் துன்பம் துடைப்பதற்காக ஒரே மனதுடன் அனைத்தினுள்ளும் அந்தராத்மாவாக விளங்கும் ஸ்ரீகுருவாயூரப்பனையே தஞ்சமடைகிறோம். (2)

(இச்சுலோகத்திற்கு, 'பக்தப்பிரியா' உரையாசிரியர் மூவகையாக உரை வகுத்துள்ளதைக் கீழே காணலாமே.)

முதற்பொருள் :

இவ்வாறு கிடைத்ததற்கரிதான மானிடப்பிறவி பெற்றும் பகவானையடைவதை விடுத்து, வேறு பிறவிகளினாலேயும் பெறக்கூடிய உலகியல் இன்பங்களை உடல், சொல், மனதால் விரும்புகிறார்களே இம்மாந்தர்கள். அந்தோ!

இங்கு ஸ்ரீமத்பாகவத இரண்டாவது சுலோக ஒப்புமை பின்வருமாறு காண்க :–

தர்ம ப்ரோஜ்ஜித கைதவோ அத்ர	=	தந்வா, வாசா, தியா வா புருஜி
வாஸ்தவம் வஸ்து	=	துர்லப்யவஸ்துநி
கிம் வா பரை:	=	அந்யது பூத
தாபத்ரயோந் மூலநம்	=	விஸ்வபீடாபஹத்யை
ஸத்யோ ஹ்ருத்யவருத்யதே	=	ஸ்திரதரமநஸா
ஈஸ்வர:	=	நிஸ்ரோஷாத்மாநம்

இரண்டாவது பொருள் :

கிடைத்தற்கரிதான ஸ்ரீமத்பாகவத புராணம் பிரம்மா, நாரதர், வியாஸர், சுகர் என்று பரம்பரையாக எளிதில் கிடைத்திருக்க அதை விடுத்து மனோவாக்காயத்தால் வேறு நூல்களைப் படித்துத் தன் பிறவியை வீணடித்துக் கொள்கின்றனரே மாந்தர், அந்தோ! ஆனால் இதை நன்கறிந்த நாங்கள், பெண்பாலரும், நான்காம் வருணத்தவரும்கூட முக்தி பெற வேண்டி, பாகவத புராண ஸாரமான ஸ்ரீகுருவாயூரப்பனையே அடைக்கலமாகப் பற்றுகின்றோம். இக்கருத்தை விளக்கும் ஸ்ரீமத்பாகவத சுலோகம் ஒப்பு நோக்குக:

துர்லப்யவஸ்துநி	=	நிகமகல்பதரோர்பலம் பாகவதம் ரஸம்
லோபதயா ஹஸ்தலப்தே	=	சுகமுகாத் புவிகலிதம்
ஜநோ அந்யத் பதஜி இதி யத் ஸா க்ஷுத்ரதா ஏவ	=	பிப த பாகவதம்
ஏதே வயம்	=	ரஸிகா பாவுகா:

மூன்றாவது பொருள் :

இவ்வாறு நல்வினைப் பயனாலன்றிக் கிடைத்தற்கரிதான பக்தியோகம் (பகவானின் ஸ்வரூப, ரூப, குண, விபவ ஐசுவர்யங்களான லீலாரஸம் நிரம்பிய கதைகளைக் கேட்பதனாலேயே) எளிதில் கிடைத்திருக்க, அதை விடுத்து உண்மை அறியாத மக்கள் உடலால் கர்ம யோகத்தைச் செய்தும், வாக்கினால் தர்க்கம் முதலியன பேசியும், தெரியாத மறை நிலங்களை மனதினால் நினைத்தும் தன் பிறவியைப் பாழடித்துக் கொள்கின்றனரே! அந்தோ! ஆனால் பக்தியோகத்தை நன்கறிந்த நாங்கள் உடலால் வழிபாடு செய்தும், பக்தியோகத்தினால் ஒருநிலைப்பட்ட மனதால் பகவத் ஸ்வரூபத்தைத் தியானித்தும், வாக்கினால் துதித்தும் அந்த ஸ்ரீகுருவாயூரப்பனையே தஞ்சமடைகிறோம் – உலகின் துன்பம் துடைத்தற்காக.

இவ்வாறு பக்தியோகத்தினால் பகவானை உபாஸிப்பதைப் பற்றிக் கூறி, முக்தர்கள் உபாஸிக்கும் பகவானின் ஸ்வரூபத்தை வர்ணிக்கிறார்.

ஸத்வம் யத்தத் பராப்⁴யாமபரிகலநதோ நிர்மலம் தேந தாவத்³–

பூ⁴தைர்–பூ⁴தேந்த்³ரியைஸ்தே வபுரிதி பபூ⁴ஷு: ஶ்ரூயதே வ்யாஸவாக்யம் ।

தத் ஸ்வச்ச²தவாத்³–யதா³ச்ச²தி³த–பரஸுகா²தி³க³ர்ப⁴–நிர்ப⁴ஸரூபம்

தஸ்மிந் த³ந்யா: ரமந்தே ஶ்ருதிமதிமது⁴ரே ஸுக்²ரஹே விக்³ரஹே தே ॥ 3 ॥

ஹே குருவாயூரப்பா! முக்குணங்களில் ரஜோ குண, தமோ குணங்களை நீக்கி அப்பழுக்கற்ற தூய ஸத்வ குணத்தினால் தங்கள் திருமேனி சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. மேலும் மஹத்தத்வம், அஹங்காரம், ஐந்து தன்மாத்திரைகள் - இவற்றாலும், பதினொரு புலன்களாலும் தங்கள் திருமேனி (தங்கள் விருப்பப்படி) ஆக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீவியாஸ முனிவர் புராணங்களில் பலவாறு கூறியுள்ளார். தங்கள் திருமேனி மிகவும் தூயதாகவும், தெளிவாகவும் இருப்பதால் உள்ளிருக்கும் பரமானந்த ரூபமான, ஞானமே வடிவெடுத்த பிரம்மம் மறைக்கப்படாது மிக்க ஒளியுடன் விளங்குகிறது. செவிக்கும், மனதிற்கும், மற்றுமுள்ள புலன்கள் அனைத்திற்கும் இன்பத்தையளிக்கக்கூடிய தங்களது திருமேனியைக் கண்டு பெரும்பேறு பெற்ற புண்ணியாத்மாக்களான பக்திமான்கள் பேரானந்தமடைகிறார்கள். (3)

(பகவானுடைய சுத்த ஸத்வமயமான மூர்த்தி ஸ்வரூபத்தை வர்ணித்த பட்டதிரி, அந்த ஸ்வரூபம் உருவமற்ற நிஷ்கல பிரம்மத்தினின்றும் வேறுபட்டதன்று என்று விளக்குகிறார்.)

நிஷ்கம்பே நித்யபூர்ணே நிரவதி⁴பரமாநந்த³பீயூஷரூபே

நிர்லீநாநேக–முக்தாவலிஸுப⁴க³தமே நிர்மல–ப்³ரஹ்மஸிந்தௌ⁴ ।

கல்லோலோல்லாஸ–துல்யம் கலு விமலதரம் ஸத்த்வமாஹுஸ்–ததா³த்மா

கஸ்மாந்நோ நிஷ்கலஸ்த்வம் ஸகல இதி வசஸ்–த்வத்கலாஸ்வேவ பூ⁴மந் ॥ 4 ॥

பரிபூர்ண ஸ்வரூபனான ஹே குருவாயூரப்பா! தாங்கள் விகாரமற்றவர்; நித்தியமானவர்; நிறைந்த பரிபூரணர்; காலதேச எல்லைகளைக் கடந்த உயரிய ஆனந்தமான அம்ருத மயமானவர்; தம்மையே அடைந்திருக்கும் முக்தர்களால் அழகாக விளங்குபவர். பரிசுத்தமான ஸத்வ குணத்தை அப்பழுக்கற்ற தூயதான பிரம்மமாகிற சமுத்திரத்தின் அலைகளாக அல்லவா பெரியோர்கள் வர்ணிக்கின்றனர். அப்படிப்பட்ட சுத்த ஸத்வ ஸ்வரூபனாகிய தங்களை நிஷ்கல பிரம்மம் அல்ல என்பது எங்ஙனம்? தங்களை ஸகலர் (கலைகளோடு கூடியவர்) என்று சொல்வது தங்கள் அம்சாவதாரங்களைக் குறிக்குமேயன்றி பரிபூரணரான தங்கள் நிஷ்கல பிரம்ம ஸ்வரூபத்தைக் குறிக்காதே? (4)

(இங்கு பரப்பிரம்மமான ஸ்ரீகுருவாயூரப்பனைக் கடலோடு ஒப்பிடுவதைப் பின்வருமாறு காண்க:

கலக்க முடியாததும், கம்பீரமானதும், வற்றாததும், எப்பொழுதும் நிரம்பியிருப்பதும், அளவற்ற ஆனந்தத்தை அளிக்கும் அம்ருதத்தின் உற்பத்திக்கு நிலைகளமாவதும், தன்னிடத்திலே அடித்தளத்தில் மறைந்து கிடக்கும் முத்துக்குவியல்களால் அழகாக விளங்கும் சமுத்திரத்தைப் போன்றவரல்லவா, சுத்த ஸத்வகுண ஸ்வரூபனான நிஷ்கல பிரம்மமாகிற ஸ்ரீகுருவாயூரப்பன்.

பகவானுடைய நிஷ்கல ஸ்வரூபத்தைக் கூறிய பட்டதிரி, இனி அவர் ஸகல ஸ்வரூபத்தை மேற்கொள்ளுதலை விளக்குகிறார்.)

நிர்வ்யாபாரோऽபி நிஷ்காரணமஜ பஜ்ஜஸே யத்க்ரியா–மீக்ஷணாக்2யாம்
தேநைவோத்தே3தி லீநா ப்ரக்ருதிரஸதிகல்பாऽபி கல்பாத்தி3காலே ।
தஸ்யாஸ்–ஸம்ஶுத்34மம்ஶம் கமபி தமதிரோதா4யகம் ஸத்த்வரூபம்
ஸ த்வம் த்3ருத்வா த34ஸி ஸ்வ–மஹிம–விப4வாகுண்ட2–வைகுண்ட2 ரூபம் ॥ 5 ॥

ஹே பிறப்பற்றவரே, குருவாயூரப்பா! தாங்களோ எவ்விதச் செயலுமற்றவர். ஆனால் ஒரு காரணமுமின்றி 'மாயையை ஏவுவது' என்கிற பெயர் கொண்ட 'பார்வை' என்ற செயலைச் செய்கிறீர்கள். (அதாவது தங்கள் கடைக்கண்ணோக்கிற்குட்பட்டு மாயை தன் செயலை ஆற்றுகிறது). அந்தப் பார்வையைக் கொண்டே த்விபரார்த்த முடிவில் தங்களிடம் லயமடைந்திருந்து. இல்லாதது போல் காணப்பட்ட பிரக்ருதியாகிற மாயை பிரம்மாவின் பிரளய முடிவு காலத்தில் (அதாவது சிருஷ்டி காலத்தில்) மீண்டும் வெளிப்படுகிறது. தனது யோக மகிமையின் பிரபாவத்தால் தடங்கலற்ற 'சித்' சக்தியை உடைய வைகுண்ட நிலையனான ஹே குருவாயூரப்பா! தாங்கள் அந்த மாயையினுடைய, ரஜஸ், தமோ குணங்களின் கலப்பின்மையால் மிக்கத் தூய்மையானதும், எதனாலும் மறைக்கப்படாததும் (அதாவது மறைதலற்றதும்) ஆன சுத்த ஸத்வமான ஓர் அம்சத்தை ஏற்றுக் கொண்டு அவதாரங்களான லீலா சரீரத்தை மேற்கொள்கிறீர்கள். (5)

(அதாவது பகவான் தன் பிரக்ருதியான மாயையின் சுத்த ஸத்வமான ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு ஸகலராக இம்மண்ணுலகில் பற்பல திருவிளையாடல்கள் புரிவதற்காக அவதாரங்களை மேற்கொள்கிறார்.

ஸ்ரீகுருவாயூரப்பனின் அழகை நேரிலே கண்டு உள்ளம் பூரித்த ஸ்ரீநாராயண பட்டதிரி தான் கண்ட கோலத்தை இனி வரும் இரண்டு சுலோகங்களில் வர்ணிக்கிறார்.)

தத்தே ப்ரத்யக்3ரதா4ராத4ர லலிதகலாவாவலீ கேளிகாரம்
லாவண்யஸ்யைகஸாரம் ஸுக்ருதிஜநத்3ருஶாம் பூர்ணபுண்யாவதாரம் ।
லக்ஷ்மீ நிஶ்ஶங்கலீலா நிலயநமம்ருத ஸ்யந்த3ஸந்தே3ஹமந்த:
ஸிஞ்சத் ஸஞ்சிந்தகாநாம் வபுரநுகலயே மாருதாக3ாரநாத2 ॥ 6 ॥

ஹே குருவாயூரப்பா! தங்கள் அழகிய திருமேனி நீருண்ட மேகம் போல் அழகாயும்; காயாம்பூக்கொத்து போல் மகிழ்ச்சியளிப்பதாயும்; அழகே உருவெடுத்தது போன்றும்; பக்தியோகத்தினால் பகவானை உபாஸிக்கும் புண்ணியவான்களுடைய கண்களுக்கு அவர்களுடைய புண்ணியமே உருவெடுத்துக் கண்ணெதிரில் வந்து நிற்பது போன்றும்; ஸ்ரீமஹாலக்ஷ்மி வீற்றிருத்தற்குத் தடையற்ற இருப்பிடமாகவும் (அதாவது ஸ்ரீலக்ஷ்மியின் அருள், அழகு, மாட்சிமை ஆகியன குறைவற நிரம்பியுள்ள இடமாகவும்); தன்னைத் தியானம் செய்கிறவர்களின் இதய கமலத்தில் பிரும்மானந்தமான அம்ருதத்தைப் பெய்து, அவர்களது ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்கிற முத்தாபங்களைப் போக்குவித்து அமைதியை அளிப்பதாகவும் விளங்குகிறது. அப்படிப்பட்ட தங்கள் திவ்விய மங்கள விக்கிரஹமான திருமேனியை இடைவிடாது தியானிக்கிறேன். (6)

பிறவி பெற்ற பயன்

கஷ்டா தே ஸ்ருஷ்டிசேஷ்டா பஹுதர–ப4வகே2த3ாவஹா ஜீவப4ாஜா
மித்யேவம் பூர்வமாலோசிதமஜித! மயா நைவமத்3யாபி4ஜாநே ।
நோ சேஜ்ஜீவா: கத34ம் வா மது4ரதரமித3ம் த்வத்3வபுஶ்–சித்3ரஸார்த்3ரம்
நேத்ரை: ஶ்ரோத்ரைஶ்ச–பீத்வா பரமரஸ–ஸுதா4ம்போ4தி4பூரே ரமேரந் ॥ 7 ॥

மாயைக்கு ஆட்படாத (அதாவது மாயையை வெற்றி கொண்ட) ஹே குருவாயூரப்பா! உடல் பெற்ற அனைத்து ஜீவன்களுக்கும் பிறப்பு-இறப்பு என்கிற துன்பத்தை மீண்டும் மீண்டும் அளிப்பதாகிற தங்கள் படைத்தல் தொழில் மிகவும் கொடுமையானது என்று அறிவற்ற நான் முன்பு எண்ணினேன். ஆனால் தங்கள் திவ்விய மங்கள ஸ்வரூபத்தைக் கண்டதும்தான் தங்கள் படைத்தல் தொழில் கொடுமையானது அன்று; மிகவும் உபகாரமே செய்துள்ளது என்று உணர்கின்றேன். ஏனெனில் தாங்கள் அவ்விதம் ஜீவர்களையும், அவர்கள் அனுபவிப்பதற்காக இவ்வுலகையும் படைக்காவிட்டால், அந்த ஜீவர்கள் சிதானந்த அம்ருத ரஸமயமான பரம ரமணீயமான தங்களுடைய இந்தத் திவ்விய மங்கள விக்கிரஹத்தைக் கண்களால் ஆவலுடன் கண்டும், காதுகளால் கேட்டும் (காண்பதாலும், கேட்பதாலும் மனதிலிருத்தித் தியானித்து) பரம ஆனந்தமே உருவாக விளங்கும் அமுதக் கடலில் எவ்வாறு திளைத்திருக்க முடியும்? (7)

அனைத்தும் அளிப்பவர் அவரே

நம்ராணாம் ஸந்நிதத்தே ஸததமபி புரஸ்தைரநப்யர்தி₂தா–
நப்யர்த₂ந்தே காமாநஜஸ்ரம் விதரதி பரமாநந்த₃–ஸாந்த்₃ராம் கீ₃தி₃ம் ச ।
இத்த₂ம் நிஷ்ப்ரேஷலப்ரயோ நிரவதி₄கபூ₂ல: பாரிஜாதோ ஹரே! த்வம்
க்ஷுத்₃ரம் தம் ப்ரகரவாமத்₃ரும–மபி₄லஷதி வ்யர்த₂மர்தி₂வ்ரஜோ(அ)யம் ॥ 8 ॥

ஹே குருவாயூரப்பா! தாங்கள் எல்லோராலும் (எளிதில்) அடையப்படக் கூடியவர்; அனைத்துப் பயன்களையும் அளிக்கவல்ல அமரலோகத்துப் பாரிஜாத விருக்ஷம்; வணங்கி வழிபடுவோரின் முன்னே எப்பொழுதும் காட்சியளிப்பவர்; அவர்களாக வேண்டாவிடினும், தாங்களாகவே அவர்களுக்கேற்ப பொருள்களையும், போகங்களையும், பேரானந்தமான மோக்ஷத்தையும் அளிப்பவர். இவ்வாறு தாங்கள் இருப்பினும் இந்த உலகியல் விருப்பம் கொண்ட மக்கள் ஒன்றிற்கும் உதவாத அழியும் பயன்களையே கொடுக்கும் இந்திரனுடைய நந்தவனத்திலிருக்கும் கற்பகத்தருவை வீணில் விரும்புகின்றனரே! (8)

இங்கு ஸ்ரீபட்டதிரி பகவானையும், பாரிஜாத கற்பக மரத்தையும் ஒப்புநோக்குதல் காண்க:

பாரிஜாத கற்பகத்தரு	ஸ்ரீபகவான்
1. யாகம் முதலியன செய்து தேவருலகு அடைந்து பெறத்தக்கது.	1. மனமொருமித்து ஒரு முறை வணங்குவதாலேயே பெறக் கூடியவர்.
2. அதுவாகவே நம்மெதிரில் வந்து தோன்றாது. முயன்று நாமே சென்று அடைய வேண்டும்.	2. தானாகவே நம்மெதிரில் வந்து காட்சியருளுபவர், நம் முயற்சித் தேவையில்லை, பாவனை ஒன்றே போதுமானது.
3. ஏதோ ஒருபொழுது தோன்றும்.	3. எப்பொழுதுமே தோன்றுவார்.
4. வேண்டினால்தான் அளிக்கும்.	4. வேண்டாவிடினும் அருளுவார்.
5. எல்லா விருப்பங்களையும் அளிக்க வல்லதன்று. சில விருப்பங்களையே அளிக்கவல்லது.	5. அனைத்து விருப்பங்களையும் அளிப்பார்.
6. எப்போது தருமோ தெரியாது.	6. வேண்டிய போதெல்லாம் தருவார்.
7. மோக்ஷமளிக்காது.	7. அழியாத மோக்ஷமும் அளிப்பார்.

அனைத்து தேவர்களினும் மேம்பட்டவர் ஸ்ரீகுருவாயூரப்பனே

காருண்யாத்காமமந்யம் த³தா³தி கூ²லு பரே ஸ்வாத்மத³ஸ்த்வம் விமோஷாத்
ஐஸ்வர்யாதீ³ஸ்தேऽந்யே ஜகு³தி பரஜநே ஸ்வாத்மநோऽபீஶ்வரஸ்த்வம் ।
த்வய்யுச்சைராரமந்தி ப்ரதிபத³மது³ரே சேதநா: ஸ்பீ²தபா²க்³யா–
ஸ்த்வம் சாத்மாராம ஏவேத்யதுல குணகணாதா³ர ஹௌரே நமஸ்தே ॥ 9 ॥

பிரம்மா முதலிய மற்ற தேவர்கள் கருணைக்காட்டப்பட்டு மோக்ஷம் தவிர மற்ற விருப்பமான அனைத்து வரங்களையும் அளிக்கின்றனர். ஆனால் தாங்களோ எல்லையற்ற கருணையால் தங்கள் ஸ்வரூபமான மோக்ஷத்தையே அருளுகின்றீர். பிரம்மா முதலிய வேறு தெய்வங்கள் தங்கள் தங்கள் ஆளுமை கொண்டு உலகில் தங்களைத் தவிர வேறு சராசரங்களான பிராணிகள் அனைத்தையும் அடக்கியாள்கிறார்கள். ஆனால் தாங்களோ பிரம்மாவையும் அடக்கியாள்பவர்; (அதாவது தங்கள் ஸ்வரூபமாகிய ஜீவர்களை சம்சாரக் கடலில் தள்ளி தண்டித்தும், அதே நேரத்தில் தனது அமிர்தமயமான அனுபவத்தில் அவர்களை மூழ்கடித்து இன்புறச் செய்து அருளவும் திறம் படைத்தவர் தாங்கள்.) பல பிறவிகளில் செய்த புண்ணிய வினைப்பயனால் பெற்ற பக்தி, ஞானமார்க்கத்தில் உள்ள ஜீவர்கள் ஆனந்தமே வடிவெடுத்த பரப்பிரம்மமான தங்களிடமே திளைக்கின்றனர். ஆனால் தாங்களோ தனக்குத்தானே திளைப்பவர். ஆகவே உலகியலுக்கு அப்பாற்பட்ட உவமையற்ற அளவு கடந்த குணக்கடலான ஹே ஸ்ரீகிருஷ்ணா! தங்களுக்கு நமஸ்காரம். (9)

('அதுலகுணகணாதார', 'ஹௌரே' என்ற இரண்டு விளிகளினால் குணக்கடலாயிருக்கும் நீர்மையினால் வஸுதேவருக்கு மகனாகப் பிறந்தமையும், பகவானின் பக்தவத்ஸல நீர்மையும் விளங்குகிறது.

ஆறு குணங்கள் படைத்திருப்பினும் அனைத்தையும் கடந்து நிற்கும் 'பகவான்' என்ற சொல்லிற்கு ஸ்ரீகுருவாயூரப்பனே உரியவர் என்கிறார், ஸ்ரீபட்டதிரி.)

ஐஸ்வர்யம் ஶங்கராதீ³ஶ்வரவிநியமநம் விஶ்வதேஜோஹராணாம்
தேஜஸ் ஸம்ஹாரி வீர்யம் விமலமபி யஶோ நிஸ்ப்ருஹஶ்–சோபகீ³தம் ।
அங்கீ³ஸங்கீ³ ஸதா³ ஸ்ரீரகி²லவிதா³ஸி ந க்வாபி தே ஸங்க³வார்தா
தத்³வாதாக³ாரவாஸிந் முரஹர! ப⁴க³வச்ச²ப்³த³–முக்²யாஶ்ரயோऽஸி ॥ 10 ॥

முரன் என்ற அஸுரனைக் கொன்றவரே! ஸ்ரீகுருவாயூரில் விளங்கும் ஹே குருவாயூரப்பா! தங்களுடைய ஆளுமை (ஐசுவர்யம்) ஸ்ரீசங்கரர் முதலிய தெய்வங்களையும் அவரவர்களது செயலில் ஏவுவது ஆகும். தங்களுடைய வீர்யமோ எல்லோருடைய பராக்கிரமத்தையும் வெற்றி கொண்ட ஸ்ரீபரமேசுவரனுடைய வீரத்தையும் அடக்கும் திறம் படைத்தது. தங்களுடைய புகழோ தூய்மையானது. முற்றும் துறந்த ஸ்ரீசுகர் போன்றோராலும் பாடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமஹாலக்ஷ்மியோ தங்கள் திருமார்பிலேயே குடி கொண்டிருக்கிறாள். தாங்களோ அனைத்தும் அறிந்தவர். எங்கும் எதிலும் பற்றற்றவராக இருக்கிறீர்கள். ஆகையால் தாங்களே 'பகவான்' என்ற சொல்லிற்கு இலக்கணமாகத் திகழ்கிறீர்கள். (10)

ஒப்புநோக்குக:– ஐஸ்வர்யஸ்ய ஸமக்³ரஸ்ய த⁴ர்மஸ்ய யஶஸ: ஶ்ரிய:
ஜ்ஞாந வைராக்³யயோஸ்சைவ ஷண்ணாம் ப⁴க³ இதீரிணா
(விஷ்ணு புராணம் 6-5,74)

ஆளுமை, அறம், புகழ், செல்வம், அறிவு, வைராக்யம் என்ற இவ்வாறையும் 'பக' என்ற சொல் குறிக்கும்; இவ்வாறும் உடையவரே 'பகவான்' என்ற சொல்லால் குறிக்கப்படுவார், இக்குணங்கள் அனைத்தும் ஸ்ரீகுருவாயூரப்பனிடமே குடிகொண்டிருப்பதாகவும், மற்ற தெய்வங்களிடம் இவ்வாறும் முழுமையாக ஒருங்கே இல்லாமையால் அவர்கள் 'பகவான்' என்ற சொல்லிற்கு ஏற்றவரல்லர் என்பதும் ஸ்ரீபட்டதிரியின் முடிவு.

❁❁❁

இரண்டாவது தசகம்

பகவானின் திருமேனி வர்ணனை

ஸஶ்யஸ்பர்தி₄கிரீட–மூர்த்₄வதிலக–ப்ரோத்₃பா₄ஸி–பா₃லாந்தரம்
காருண்யாகுல–நேத்ர–மார்த்₃ரஹஸிதோல்லாஸம் ஸுநாஸாபுடம் ।
க₃ண்டோ₃த்₃யந்–மகராப₄குண்ட₃லயுக₃ம் கண்டோ₂ஜ்ஜ்வலத்–கௌஸ்துப₄ம்
த்வத்₃ரூபம் வநமால்யஹாரபடல–ஸ்ரீவத்ஸதீ₃ப்ரம் ப₄ஜே ॥ 1 ॥

ஹே குருவாயூரப்பா! தங்களுடைய கீரிடம் சூரியனையும் விஞ்சக் கூடிய காந்தியுடையது; தங்கள் நெற்றியோ ஊர்த்வ திலகத்தால் மிகவும் அழகாகப் பிரகாசிக்கிறது; கண்களோ சுருணையே நிறைந்து விளங்குகிறது; பக்தர்களிடம் கொண்ட பிரேமையினால் கனிந்த புன்னகை; அழகான மூக்கு; மகர குண்டலங்களின் பிரகாசம் இரு கன்னங்களிலும் பிரதிபலிக்கிறது; சுழுத்திலே கௌஸ்துப மணி ஒளி வீசுகிறது. மற்றும் வனமாலை, முத்து மாலைகள், ஸ்ரீவத்ஸம் என்கிற மரு ஆகியவற்றால் தங்கள் திருமேனி மேலும் அழகாக விளங்குகிறது. அத்தகைய தங்களுடைய ஒளி மிகுந்த ஸ்வரூபத்தைத் தியானம் செய்கிறேன். (1)

மனக்கவலையை போக்கும் ஸ்ரீபகவானின் தியானம்

கேயூராங்க₃த₃–கங்கணோத்தம–மஹாரத்நாங்கு₃லீயாங்கித–
ஸ்ரீமத்₃பா₃ஹுசதுஷ்க–ஸங்க₃த–க₃தா₃ஸங்க₃ரி–பங்கேருஹாம் ।
காஞ்சித் காஞ்சந–காஞ்சிலாஞ்சித–லஸத்பீதாம்ப₃ராலம்பி₃நீம்
ஆலம்பே₃ விமலாம்பு₃ஜ–த்₃யுதிபத₃ாம் மூர்த்திம் தவார்திச்சி₂த₃ம் ॥ 2 ॥

ஹே குருவாயூரப்பா! தங்கள் திருமேனி வர்ணனைக்கு எட்டாதது. தங்கள் திருக்கரங்களில் தோள்வளைகள், அங்கதங்கள், வளையல்கள், உயர்ந்த ரத்தினங்கள் இழைத்த மோதிரங்கள் முதலிய ஆபரணங்களும், சங்கம், சக்கரம், கதை, தாமரைப்பூ ஆகியனவும் பிரகாசிக்கின்றன. தங்கள் திருப்பாதங்கள் நிர்மலமான தாமரைமலர் போன்று மிளிர்கின்றன. இத்தகைய தங்கள் திருமேனி பக்தர்களின் துன்பங்களனைத்தையும் அழித்துக் காக்கின்றது. இவ்வாறான பெருமைமிக்க தங்கள் திருமேனியை நான் சரணடைகிறேன். (2)

பகவானின் ஸ்வரூபம் வியப்பிலும் வியப்பாகும்

யத்–த்ரைலோக்யமஹநீயஸோऽபி மஹிதம் ஸம்மோஹநம் மோஹநாத்
காந்தம் காந்திநிதி₄நதோऽபி மது₄ரம் மாது₄ர்யது₄ர்யாத₃பி ।
ஸௌந்த₃ர்யோத்தரதோऽபி ஸுந்த₃ரதரம் த்வத்₃ரூபமாஶ்சர்யதோ–
ऽப்யாஶ்சர்யம் பு₄வநே ந கஸ்ய குதுகம் புஷ்ணாதி விஷ்ணோ விபோ₄ ॥ 3 ॥

(சம்சாரக் கடலிலிருந்து கரையேற்றும்) ஹே பிரபுவான குருவாயூரப்பா! மூவுலகிலும் ஒவ்வொரு வகையில் ஒவ்வொன்று கொண்டாடத்தக்கதாக அமைகின்றது. தங்கள் ரூபமோ அவையனைத்திலும் மேன்மை பெற்றுக் கொண்டாடத்தக்கதாக உள்ளது. மனதைக் கவரக் கூடிய எவ்வளவோ பொருள்கள் இருப்பினும் அவை எல்லாவற்றினும் மேலும் மகிழ்ச்சியளிப்பது; கவரக் கூடியது. தங்கள் திருமேனி எழில் ஒளிக்கு நிலைகளமாகி விளங்கும் அனைத்தினும் காந்திமிக்கது. புலன்கள் எல்லாவற்றையும் தன்பால் ஈர்ப்பது; இன்பமளிக்கும் இனிமை வாய்ந்த பல பொருள்களிலும் மேலும் மேலும் இன்பமளிக்கும் இனிமையானது தங்கள் திருவுருவம். (தாபத்ரயங்களை நீக்கி மனதிற்கு அமைதியளிப்பது). அழகு என்பனவெல்லாவற்றினும் அழகானது. வியப்பூட்டும் பொருளனைத்திற்கும் பெருவியப்பானது. எங்கும் நிறைந்திருக்கும் ஹே குருவாயூரப்பா! இப்படிப்பட்ட தங்கள் திருமேனி மூவுலகிலும் எவருக்குத்தான் மகிழ்ச்சியை உண்டு பண்ணாது? அதாவது பக்தர்கள் (உலகியலுக்குட்பட்டவர்கள்), முக்தர்கள் (மோக்ஷம் பெற்றவர்), முமுக்ஷுக்கள் (மோக்ஷம் பெற விரும்புபவர்கள்) ஆகியவர்களுக்கும் கூட கேட்க வேண்டும், நினைக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டக்கூடியது ஸ்ரீகுருவாயூரப்பனின் திருவுருவம் என்பது கருத்து. இச்சுலோகத்தைப் படிப்பவர்களுக்கு அழகு முதலிய அனைத்துப் பயன்களும் கிட்டும். (3)

ஸ்ரீமஹாலக்ஷ்மி குடியிருக்கும் கோயில் ஸ்ரீகுருவாயூரப்பனே

தத்தாத்₃ருங்மது₄ராத்மகம் தவ வபுஸ்ஸம்ப்ராப்ய ஸம்பந்மயீ
ஸா தே₃வி பரமோத்ஸுகா சிரதரம் நாஸ்தே ஸ்வப₄க்தேஷ்வபி ।
தேநாஸ்யா ப₃த கஷ்டமச்யுத விபே₄! த்வத்₃ரூப–மாநோஜ்ஞக–
ப்ரேமஸ்தை₂ர்ய–மயாத₃ாபலப₃லாச்–சாபல்யவார்தோ₃ஹ்₂யத் ॥ 4 ॥

சரணடைந்த பக்தர்களைக் கைவிடாத ஹே பிரபுவே குருவாயூரப்பா! தனதான்யங்களுக்கும், வெற்றிக்கும் இருப்பிடமான தங்கள் துணைவியான ஸ்ரீமஹாலக்ஷ்மி உவமையற்ற மனோகரமான தங்கள் திருமேனியை அடைந்த பெருமகிழ்ச்சியினால் தன் பக்தர்களிடத்தில்கூட வெகுவாகத் தங்குவதில்லை. தங்கள் திருமேனியழகில் ஈடுபாடு கொண்ட பிரேமையின் உறுதியினால் அவள் வேறு எங்கும் நிலையாகத் தங்குவதில்லை. அதனாலேயே அவளுக்கு 'நிலையற்றவள்', 'சபலா' என்கிற அவச்சொல் ஏற்பட்டது. 'அந்த அவச்சொல் தங்களையுமல்லவா தன்னோடு சேர்த்துக் கொண்டுவிட்டது!' என்று வருந்துகிறார் ஸ்ரீபட்டதிரி. (4)

பக்தர்களிடம் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் பரிவு

லக்ஷ்மீஸ்தாவக–ராமணீயகஹ்ருதைவேயம் பரேஷ்வஸ்தி₂ரே–
த்யஸ்மிந்நந்யத₃ாபி ப்ரமாணமது₄நா வக்ஷ்யாமி லக்ஷ்மீபதே ।
யே த்வத்₃–த்₄யாநகு₃ணாநுகீர்தநரஸாஸக்தா ஹி ப₄க்தா ஜநா–
ஸ்தேஷ்வேஷா வஸதி ஸ்தி₂ரைவ த₃யித–ப்ரஸ்தாவதத்₃தா₃ரா ॥ 5 ॥

ஹே லக்ஷ்மீபதே! குருவாயூரப்பா! உலகியலுக்கு அப்பாற்பட்ட தங்களுடைய அழகில் ஈடுபாடு கொண்டதாலேயே ஸ்ரீமஹாலக்ஷ்மி வேறு எங்கும் நிலையாகத் தங்குவதில்லை. இதற்கு வேறொரு அனுமான பிரமாணம் இப்பொழுது நான் கூறப் போகிறேன். (அது என்னவெனில்) தங்களைப் பற்றிய தியானத்திலும், நாமசங்கீர்த்தனத்திலும் உண்டாகும் ஆனந்தத்தில் மூழ்கித் திளைக்கும் பக்தர்கள் கூறும் தன் கணவரான தங்களைப் பற்றிய குணானுபவத்தில் பேராதரவு

காட்டி, அதை அனுபவிப்பதிலேயே ஈடுபாடு கொண்டு, அந்த பக்தர்களிடமே நித்தியவாஸம் செய்கிறாள். (5)

(முன் சுலோகத்தில் ஸ்ரீதேவி தன் கணவருடைய அழகிலே ஈடுபட்டு அங்கேயே குடியிருக்கிறாள் என்றார் ஆசிரியர். இங்கு பகவத் குணங்களில் மூழ்கித் திளைக்கும் பக்தர்களிடம் மிக்க ஆதரவு கொண்டு அங்கேயே வசிக்கிறாள் என்கிறார். இதனால் ஸ்ரீமஹாலக்ஷ்மி தன் கணவனையும், பக்தர்களையும் விடுத்துப் பிறரிடம் நிலையாகத் தங்குவதில்லை என்பது தெளிவு. மற்றும் செல்வங்கள் அனைத்தும் பெற வேண்டுமென விரும்புகிறவர்கள் பக்தியுடனும், அன்புடனும் ஸ்ரீபகவானுடைய ஸ்வரூபத்தைத் தியானம் செய்வது, நாம குண கீர்த்தனங்கள் செய்வது ஆகியவற்றைக் கடமையாகச் செய்ய வேண்டும் என்று கவி நமக்கு உபதேசிக்கிறார்.)

பகவத் ஸ்வரூபமே பக்தியைத் தோற்றுவிக்கும்

ஏவம் பூ₃தமநோஜ்ஞதா–நவஸுதா–நிஷ்யந்த₃ஸந்தோ₃ஹநம்
த்வத்₃ரூபம் பரசித்₃ரஸாயநமயம் சேதோஹரம் ஶ்ருண்வதாம் ।
ஸத்₃ய: ப்ரேரயதே மதிம் மத₃யதே ரோமாஞ்சயத்யங்க₃கம்
வ்யாஸிஞ்சத்யபி ஸீதபா₃ஷ்பவிஸரை–ராநந்த₃–மூர்ச்சோ₂பா₃வை: ॥ 6 ॥

ஹே குருவாயூரப்பா! முன்பே கூறப்பட்டவாறு தங்கள் திருவுருவம் அழகாகிற அமுதத்தைப் பெருக்குவதாகவும்; பரமானந்த ரஸத்தின் களஞ்சியமாகவும் (பரப்பிரம்ம ஸ்வரூபமாகவும்); கேட்போரின் மனதைக் கவருவதாகவும் உள்ளது. அதாவது ஏதேச்சையாக பக்தன் ஒருவன் பகவானுடைய திருவிளையாடல்களைக் கேட்க நேரிடின் உடனே அது அவனது காது வழியாக இதயத்தில் புகுந்து அனைத்துப் பாவங்களையும் போக்குகிறது. அப்படி ஒரு முறை கேட்பவனை மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகிறது. ஆனந்த பரவசமாக்குகிறது. உடலை மயிர்க்கூச்செரியச் செய்கிறது. ஆனந்தத்தால் உண்டாகும் குளிர்ந்த ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி இவ்வுடலையே நனைத்து விடுகிறது. (6)

(காரணமொன்றின்றியே எல்லையற்ற அன்பினால் மனதும், புலன்கள் அனைத்தும் பகவானிடம் ஈடுபாடு கொள்வதே 'பக்தி' எனப்படும். அந்த பக்தியோ பகவானுடைய திருவிளையாடல்களைக் கேட்பதனாலும், நாம குண கீர்த்தனைகளைப் பாடுவதனாலும், ஸாதனையினாலுமே கிடைக்கக் கூடியது என்பது கருத்து.)

பக்தியே எளிது

ஏவம் பூ₃ததயா ஹி ப₄க்த்யபி₄ஹிதோ யோக₃: ஸ யோக₃த்₃வயாத்
கர்மஜ்ஞாநமயாத்₃ ப்₄ருஶோத்தமதரோ யோகீ₃ஶ்வரைர்கீ₃யதே ।
ஸௌந்த₃ர்யைக ரஸாத்மகே த்வயி கூ₃லு ப்ரேம ப்ரகர்ஷாத்மிகா
ப₄க்திர் நிஶ்ரமமேவ விஶ்வபுருஷைர் லப்₄யா ரமாவல்லப₄! ॥ 7 ॥

ஹே லக்ஷ்மீகாந்தா! குருவாயூரப்பா! இவ்வாறு பக்தியோகம் மிக்க பெருமை வாய்ந்ததாக இருப்பதாலல்லவா வியாஸர் முதலிய யோகீசுவரர்கள் அதை கர்மயோக, ஞானயோகங்களைக் காட்டிலும் மிகச் சிறந்ததென்று புகழ்கிறார்கள். இத்தகைய அன்பின் எல்லை நிலமான பக்தியோகம் அழகே வடிவெடுத்த தங்களிடத்தில் எவ்வித முயற்சியுமின்றியே அனைவராலும் எளிதில் பெறக்கூடியதாக அல்லவா இருக்கிறது. (7)

(பக்தியின் சிறப்பிற்கு இதனினும் வேறு சான்று சொல்ல இயலுமா?)

பக்தியோகமே சிறந்தது

நிஷ்காமம் நியத–ஸ்வதர்மசரணம் யத் கர்மயோகாபிதம்
தத்தூரேத்யபலம் யதௌபநிஷத–ஜ்ஞாநோபலப்யம் புந: ।
தத்வ–வ்யக்ததயா ஸுதுர்கமதரம் சித்தஸ்ய தஸ்மாத்விபோ!
த்வத்ப்ரேமாத்மக–பக்திரேவ ஸததம் ஸ்வாதீயஸீ ஸ்ரேயஸீ ॥ 8 ॥

ஹே பிரபுவான குருவாயூரப்பா! கர்மங்கள் நித்யம் (தினந்தோறும் செய்யப்பட வேண்டிய ஸந்த்யாவந்தனம், தேவ பூஜை முதலியன), நைமித்திகம் (எப்பொழுதோ செய்யப்பட வேண்டிய வேள்வி முதலியன) என்று பலவகையாகவுள்ளன. அவற்றைப் பயனில் கருத்தின்றிச் செய்வதால் மனம் தூய்மை பெற்று வைராக்கியமுண்டாகிப் பின் ஞானமுண்டாகும். ஆகவே இவை உடனே பலனளிக்க வல்லனவல்ல, நாளடைவிலேயே பயனளிப்பவை. உபநிஷத்துக்களின் வாயிலாகக் கேட்டறிந்த ஞானமும் மோக்ஷத்தையளிக்கவல்லதே. ஆனால் அது மனம், புலன்களுக்குப் புலப்படாததாகையால் அதன் மூலம் பெறப்படும் ஞானம் எளிதில் அடைய முடியாததாக இருக்கிறது. ஆகையால் தங்களிடம் வைக்கப்படும் பிரேமையே வடிவான பக்தியொன்றே எப்பொழுதும் இன்பத்தையளிப்பதாகவும், பிரம்மா முதலியவர்களாலும் புகழத்தக்கதாகவும் இருக்கிறது. (8)

கர்மயோகமோ, ஞானயோகமோ எளிதல்ல

அத்யாயாஸகராணி கர்மபடலாந்யாசர்ய நிர்யந்மலா
பேதே பக்திபதேऽதவாப்யுசிததா–மாயாந்தி கிம் தாவதா ।
க்லிஷ்ட்வா தர்கபதே பரம் தவ வபுர் ப்ரஹ்மாக்யமந்யே புந:
சித்தார்த்ரத்வம்ருதே விசிந்த்ய பஹுபி: ஸித்யந்தி ஜந்மாந்தரை: ॥ 9 ॥

ஹே குருவாயூரப்பா! மிக்க முயற்சியும், ஈடுபாடும் கொண்டு ஆற்றக் கூடிய கர்மாக்களை அனுஷ்டித்து, அதன் மூலம் மனதில் உள்ள மாசு நீங்கியவர்களாக ஞானயோகத்திற்கோ, பக்தியோகத்திற்கோ தகுதியைப் பெறுபவர் சிலர். அதனால் ஆவது என்ன? (பயன் ஒன்றுமில்லையே). மற்றும் சிலரோவெனில் காதலாகிக் கசிந்து உள்ளம் நெகிழாது, தர்க்க மார்க்கத்தில் (வேதாந்த வழியில்) பெரிதும் வருந்தி 'பிரம்மம்' என்ற சிறப்புப் பெயர் கொண்ட தங்கள் திருமேனியைத் தியானித்து (அதாவது அறிவிற்கெட்டாத பிரம்மரூபமாகத் தியானித்து), பல பிறவிகளெடுத்து அதன் பிறகு பேரானந்தத்தை (மோக்ஷத்தை) அடைகின்றனர். (9)

(அதாவது பிரம்ம ஸ்வரூபமான தங்களை வந்தடைகின்றனர் என்பது கருத்து.)

பக்தியைத் தர

த்வத்பக்திஸ்து கதா ரஸாம்ருதஜுஷீ நிர்மஜ்ஜநேந ஸ்வயம்
ஸித்யத்யந்தீ விமலப்ரபோதபதவீ மக்லேஶதஸ்தந்வதீ ।
ஸத்ய: ஸித்திகரீ ஜயத்யயி விபோ! ஸைவாஸ்து மே த்வத்பத–
ப்ரேமப்ரௌடிபதா ரஸார்த்ரதா த்ருததரம் வாதாலயாதீஶ்வர! ॥ 10 ॥

ஹே விபுவான குருவாயூரப்பா! தங்களுடைய கதையாகிற அமுத வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதனால் தங்களிடம் பக்தி தானாகவே உண்டாகிறது. அதன் மூலம் தூய்மையான

பிரம்மஞானத்தின் வித்தி உடனே எளிதிலேயே கிடைக்கின்றது. பிறவிப் பயனை அளித்து வெற்றியுடன் விளங்குகின்றது. உங்களுடைய திருவடிகளில் முதிர்ந்த அன்புச் சுவையினால் கனிந்து விளங்கும் அத்தகைய பக்தியே எனக்கு விரைவில் உண்டாக வேண்டும். (10)

❀❀❀

மூன்றாவது தசகம்

பக்தலக்ஷணம்

படந்தோ நாமாநி ப்ரமத3ப4ரஸிந்தெ4ள நிபதிதா:
ஸ்மரந்தோ ரூபம் தே வரத3! கத2யந்தோ கு3ணகத2ா: ।
சரந்தோ யே ப4க்தாஸ்த்வயி கலு ரமந்தே பரமமு–
நஹம் தந்யாந்மந்யே ஸமதி4கதஸர்வாபி4லஷிதாந் ॥ 1 ॥

பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அள்ளி வழங்கும் ஹே குருவாயூரப்பா! உங்களுடைய திருநாமங்களைப் பாடிக் கொண்டும், ஆனந்தக் கடலில் மூழ்கி உங்கள் திருமேனியைத் தியானித்தும், உங்கள் குணங்களையும், கதைகளையும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டும், உங்களிடமே இன்புற்று நடமாடும் பக்தர்களையே, விரும்பிய பேறு பெற்றவர்களாக நான் கருதுகிறேன். (1)

ஒரு விண்ணப்பம்

கதி3க்லிஷ்டம் கஷ்டம் தவ சரணஸேவாரஸப4ரே–
ऽப்யநாஸக்தம் சித்தம் ப4வதி பத விஷ்ணோ! குரு தா3யாம் ।
ப4வத்பாதா3ம்பே4ஜ–ஸ்மரணரஸிகோ நாமநிவஹா–
நஹம் கா3யம் கா3யம் குஹசந விவத்ஸ்யாமி விஜநே ॥ 2 ॥

ஹே விஷ்ணுவே! உள்ளும் புறமும் உண்டாகக் கூடிய நோய்களால் துன்புற்ற என் மனம் தங்கள் திருவடிகளை வணங்குவதால் உண்டாகின்ற ஆனந்தப் பெருக்கிலும்கூடப் பற்றற்று இருக்கின்றதே. ஐயோ! இஃது பெருந்துன்பமே ஆகும். நான் தங்கள் பாதகமலங்களைத் தியானம் செய்வதிலேயே ஆசை மிக்கவனாக, தங்கள் திருநாமங்களைத் திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டு, எங்கேயாவது தனித்த ஓரிடத்தில் வாழ்வதற்குத் தாங்களே அருள் புரிய வேண்டும். (2)

நின்னருள் இருந்தால்

கரூபா தே ஜாதா சேத் கிமிவ நஹி லப்4யம் தநுப்4ருதாம்
மதீ3யக்லேஶௌகை4ப்ரஶமநத3ஶா நாம கியதீ ।
ந கே கே லோகேऽஸ்மிந்நநிஶமயி ஶோகாபி4ஹிதா
ப4வத்பத்தா முக்தா: ஸுகை2கதிமஸக்தா விதத3தே ॥ 3 ॥

ஹே குருவாயூரப்பா! தங்கள் அருள் இருப்பின் மானிட உடல் பெற்றவர்களால் அடைய முடியாததுதான் என்ன உள்ளது? என் துன்பக்குவியல்களைக் களைவது தங்களுக்கு அரிதன்றே! இவ்வுலகில் உன் பக்தர்களில் எத்தனை எத்தனை பேர்கள் எப்பொழுதும் துன்பமற்று

முக்தர்களாகவும், பற்றற்றவர்களாகவும், இன்பமாகவும் வாழவில்லை? (எல்லோரும் நலமாக வாழ்கிறார்கள் என்பது கருத்து) (3)

முநிப்ரௌட₄ா ரூட₄ா ஜக₃தி க₂லு கூ₃ட₄ாத்மக₃தயோ
ப₄வத்பாத₃ாம்பே₄ாஜ–ஸ்மரணவிருஜோ நாரத₃முக₂ா: ।
சரந்தீஸ ஸ்வைரம் ஸத்த–பரிநிர்ப₄ாதபரசித்–
ஸத₃ாநந்த₃ாத்வைத–ப்ரஸரபரிமக₃நா: கிமபரம் ॥ 4 ॥

ஈசனே, குருவாயூரப்பா! உலகில் புகழ் பெற்றவர்கள், அறிய முடியாத ஆன்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்கள், தங்கள் திருவடித் தாமரைத் தியானத்தினால் துன்பத்தை ஒழித்தவர்கள், (மற்றும்) எப்பொழுதும் எங்கும் விளங்குகின்ற ஸத் சித் ஆனந்த வடிவமான அத்வைத வெள்ளத்தில் மூழ்கி உள்ளவர்களான தேவரிஷி நாரதர் முதலிய முனிவர்கள் தங்கள் விருப்பம் போல் எங்கும் சென்று வருகிறார்களே! இதற்கு மேல் என்ன(தான்) வேண்டும்? (4)

ப₄வத்₃ப₄க்தி: ஸ்பீ₃தா ப₄வது மம ஸைவ ப்ரஸமயே–
த₃ஸோஷக்லேஸௌக₄ம் ந க₂லு ஹ்ருதி₃ ஸந்தே₃ஹகணிகா ।
ந சேத்₃வ்யாஸஸ்யோக்திஸ்–தவ ச வசநம் நைக₃மவசோ
ப₄வேந்மித்₂யா ரத்₂யா–புருஷவசநப்ராய–மகி₂லம் ॥ 5 ॥

ஹே குருவாயூரப்பா! தங்களிடத்தில் எனக்குக் குறைவற்ற பக்தி பரிபூர்ணமாக இருக்க வேண்டும். அதுவே எல்லாத் துன்பக்குவியல்களையும் அழித்துவிடும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அங்ஙனம் இல்லையெனில், வியாஸரின் சொல்லும் (புராணங்கள், மஹாபாரதம் முதலியன), தங்கள் மொழியும் (தாங்கள் அர்ஜுனனுக்கும், உத்தவருக்கும் செய்த உபதேசங்கள்) வேதங்களின் சொல் தொடரும் நாடோடியின் (வழிப்போக்கன்) பேச்சினைப்போல் பொய்யாகவன்றோ ஆகும்? (5)

ப₄வத்₃–ப₄க்திஸ்தாவத்–ப்ரமுக₂மது₄ரா த்வத்₃குணரஸாத்
கிமப்யாரூட₄ா சேத₃கி₂லபரிதாபப்ரஸமநீ ।
புநஸ்சாந்தே ஸ்வாந்தே விமல–பரிபே₄ாதே₄த₃யமிளந்–
மஹாநந்த₃ாத்₃வைதம் தி₃ஸதி கிமத: ப்ரார்த்₂யமபரம் ॥ 6 ॥

ஹே குருவாயூரப்பா! தங்களிடம் செலுத்தப்படுகின்ற பக்தியோ தங்கள் குணங்களைக் கேட்பதில் உள்ள சுவையினால் தொடக்கத்திலேயே இன்பம் பயப்பதாகவுள்ளது. சிறிது வளர்ந்ததும் தாபங்களனைத்தையும் அழிக்கின்றது. மேலும் முடிவில் உள்ளத்தில் நிர்மலமான ஞானத்தைத் தோற்றுவித்து பிரும்மானந்த அத்வைதானுபவத்தை (தங்களோடு இரண்டறக்கலத்தலான ஆனந்தத்தை) அளிக்கின்றது. இதற்கு மேலும் வேண்டத்தக்கது வேறு என்ன இருக்கின்றது? (6)

யான் வேண்டுவதோ...

விதூ₄ய க்லேஸாந் மே குரு சரணயுக்₃மம் த்₄ருதரஸம்
ப₄வத்க்ஷேத்ரப்ராப்தௌ கரமபி ச தே பூஜநவிதௌ₄ள ।
ப₄வந்மூர்த்யாலோகே நயநமத₂ தே பாத₃துளஸீ–
பரிக்₄ராணே க்₄ராணம் ஸ்ரவணமபி தே சாருசரிதே ॥ 7 ॥

ஹே குருவாயூரப்பா! என்னுடைய துன்பங்களை விலக்கி, எனது அவயங்களைத் தங்கள் விஷயமாகவே ஈடுபடும்படிச் செய்ய வேண்டுகிறேன். எங்ஙனமெனில் என் கால்கள் தங்கள் திருக்கோயிலை வலம் வருதல் வேண்டும்; கைகள் தங்களை அர்ச்சனை செய்ய வேண்டும்; கண்கள் தங்களுடைய அழகிய திருமேனியைக் கண்டு களிக்க வேண்டும்; மூக்கு தங்கள் திருவடிகளில் உள்ள துளஸியின் நறுமணத்தை முகர்தல் வேண்டும்; காதுகள் தங்கள் அழகிய திருவிளையாடல்களைக் கேட்க வேண்டும். (7)

ப்ரபூதாதி³வ்யாதி⁴–ப்ரஸப⁴சலிதே மாமகஹ்ருதி³
த்வதீ³யம் தத்³ரூபம் பரமஸுக²–சித்³ரூபமுதி³யாத் ।
உத³ஞ்சத்³ரோமாஞ்சோ க³ளித–ப³ஹுஹர்ஷாஸ்ரு–நிவஹோ
யதா³ விஸ்மர்யாஸம் து³ருபஸமபீட³ா–பரிப⁴வாந் ॥ 8 ॥

அளவிறந்த கவலைகளாலும், நோய்களாலும் மிகவும் நலிவுற்ற சஞ்சலமான என்னுள்ளத்தில் தங்களது சிதானந்த ஞான ஸ்வரூபம் தோன்ற வேண்டும். அங்ஙனம் தோன்றுமேயானால் அவ்வானந்தத்தால் என் மேனி மயிர்க்கூச்செறிந்து கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கும். அதனால் தீராத எனது துன்பங்களை யான் மறப்பேன். ஹே குருவாயூரப்பா! அவ்வாறு அருள்புரிய வேண்டுகிறேன். (8)

பழிச்சொல் வேண்டாம்

மருத்³கே³ஹாதீ⁴ஶ த்வயி க²லு பராஞ்சோऽபி ஸுகி²நோ
ப⁴வத்ஸ்நேஹீ ஸோऽஹம் ஸுப³ஹு பரிதப்யே ச கிமித³ம் ।
அகீர்திஸ்தே மா பூ⁴த்³வரத³ கு³ப்தா³ரம் ப்ரஶமயந்
ப⁴வத்³ப⁴க்தோத்தம்ஸம் ஜடிதி குரு மாம் கம்ஸத³மந ॥ 9 ॥

ஹே குருவாயூரப்பா! தங்களிடம் பக்தி பண்ணாதவர்கள்கூட இன்பத்தைத் துய்த்து வாழ்கின்றனரே! (ஆனால்) தங்களிடம் பக்தி செய்யும் நானோ பெரிதும் வருந்துகின்றேனே! இது ஏன்? ஹே வரதா! (பக்தர்களைக் காப்பாற்றவில்லை என்ற) பழிச்சொல் தங்களுக்கு வேண்டாம். (ஆகையால்) கம்ஸனை ஒழித்தவரே! என் நோய்களைப் போக்கி விரைவில் என்னைத் தங்கள் பக்தர்களில் சிறந்தவனாகச் செய்தருள வேண்டுகிறேன். (9)

கிமுக்தை²பூ⁴யோபி⁴ஸ்–தவ ஹி கருணா யாவது³தி³யா–
த³ஹம் தாவத்³தே³வ ப்ரஹிதவிவிதா⁴ர்தப்ரலபித: ।
புர: க்ல்ருப்தே பாதே³ வரத³ தவ நேஷ்யாமி தி³வஸாந்
யதா³ஸக்தி வ்யக்தம் நதிநுதிநிஷேவா விரசயந் ॥ 10 ॥

தேவா குருவாயூரப்பா! மேலும் மேலும் சொல்லுவதால் யாது பயன்? வரதனே! தங்களுக்கு என்னிடம் கருணை எப்பொழுது உண்டாகுமோ அதுவரை நான் பலவாறு புலம்புவதை விடுத்து, என் முன் விளங்கும் தங்களது திருவடிகளில் என்னால் முடிந்த வரை நமஸ்காரம், தோத்திரம், பூஜை முதலியன ஆற்றிக் கொண்டு நாட்களைக் கழிக்கப் போகிறேன். (10)

❁❁❁❁❁

இரண்டாவது ஸ்கந்தம்

நான்காவது தசகம்

அஷ்டாங்க யோகம்

கல்யதாம் மம குருஷ்வ தாவதீம் கல்யதே ப₄வது₃பாஸநம் யயா ।
ஸ்பஷ்டமஷ்டவித₄யோக₃சர்யயா புஷ்டயாऽऽஸு தவ துஷ்டிமாப்நுயாம் ॥ 1 ॥

தங்களை வழிபடுவதற்குத் தக்கபடி எனது உடலுக்கும், உள்ளத்திற்கும் நலத்தையருள வேண்டுகிறேன். அவ்வாறு ஆரோக்கியம் கிடைக்குமானால் அஷ்டாங்க யோகத்தைச் செய்து விரைவிலேயே தங்களுடைய அருளைப் பெறுவேன். இது நிச்சயம். (1)

ப்₃ரஹ்மசர்யத்₃ருட₃தாதி₃பி₃ர்யமைராப்லவாதி₃நியமைஶ்ச பாவிதா: ।
குர்மஹே த்₃ருட₄மமீ ஸு₂காஸநம் பங்கஜாத்₃யமபி வா ப₄வத்பரா: ॥ 2 ॥

தங்களையே நம்பி பக்தி செய்யும் நாங்கள் பிரம்மசர்யம், அஹிம்சை முதலிய யமங்களாலும், ஸ்நானம் முதலிய நியமங்களாலும் தூய்மையடைந்து, பத்மாஸனம் முதலியவற்றையோ, சுகாஸனத்தையோ உறுதியாகச் செய்கிறோம். (யமம், நியமம், ஆஸனம் ஆகியவற்றைக் கூறுகிறார், இங்கு.) (2)

தாரமந்த₃–ரநுசிந்த்ய ஸந்ததம் ப்ராணவாயுமபி₄யம்ய நிர்மலா: ।
இந்த்₃ரியாணி விஷயா–த₃பா₄ஹ்ருத்–யாஸ்மஹே ப₄வது₃பாஸநோந்முகா₂: ॥ 3 ॥

'ஓம்' என்னும் எழுத்தாகிய பிரணவத்தை இடைவிடாது எப்பொழுதும் நினைத்துக் கொண்டு, மூச்சுக்காற்றையடக்கி பிராணாயாமம் செய்து பரிசுத்தர்களாகி, புலன்களை அவற்றிற்குரிய பொருட்களினின்றும் திருப்பித் தங்கள் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்களாக ஆவோம் (இங்கு பிராணாயாமம், பிரத்யாஹாரம் - இரண்டையும் விளக்கினார்). (3)

அஸ்பு₂டே வபுஷி தே ப்ரயத்நதோ த₄ாரயேம தி₄ஷணாம் முஹுர்முஹு: ।
தேந ப₄க்திரஸ–மந்தரார்த்₃ரதா–முத்₃வஹேம ப₄வத₃ங்க்₄ரிஸிந்தகா: ॥ 4 ॥

வேதங்களாலும் நன்கு விளக்க முடியாத தங்களுடைய திவ்யத் திருமேனி மனதில் நன்கு விளங்காதபோது பெரிதும் முயற்சி செய்து எங்கள் அறிவை அத்திருமேனியில் நிலைநிறுத்துவோம். அப்படித் தங்கள் திருவடிகளைத் தியானிக்கும் நாங்கள் பக்தி ரஸத்தையும், அதனால் மனதில் கனிவையும் பெறுவோம் (இங்கு தாரணையையும், தியானத்தையும் கூறுகிறார்). (4)

விஸ்பு₂டாவயவ–பே₂த₃ஸுந்த₃ரம் த்வத்₃வபுஸ்–ஸுசிரலீலநாவஸாத் ।
அப்₄ரமம் மநஸி சிந்தயாமஹே த்₄யாநயோக₃நிரதாஸ்–த்வத₃ாஸ்ரயா: ॥ 5 ॥

தங்களையே நம்பியிருக்கும் நாங்கள் தியான யோகத்தை இடையறாது நீண்ட காலம் பயின்றிருக்கின்றோம். ஆகவே மிகவும் தெளிவாக விளங்கும் அவயங்களோடு கூடிய அழகிய தங்கள் திருமேனியை எளிதாகவே (சுலபமாக) மனதில் தியானித்துக் கொண்டே இருப்போம். (5)

த்யாயதாம் ஸகலமூர்திமீத்3ருஶீ–முந்மிஷந்மது3ரதா–ஹ்ருதாத்மநாம் ।
ஸாந்த்3ரமோத3–ரஸரூபமாந்தரம் ப்3ரஹ்மரூபமயி தே3வப4ாஸதே ॥ 6 ॥

ஹே குருவாயூரப்பா! இவ்வாறு ஸகலகலாமயமான தங்களுடைய ஸ்வரூபத்தைத் தியானிப்பவர்களுக்கும், அதன் இனிமையால் கவரப்பட்ட உள்ளம் உடையவர்களுக்கும் பரிபூரணமான ஆனந்தமே வடிவெடுத்ததும், தங்கள் ஸ்வரூபமாகவும் விளங்குகின்ற பரப்பிரம்மம் மனதினால் மட்டும் அறியத்தக்கதாய் விளங்குகிறது. (இங்கு சமாதி நிலை கூறப்படுகிறது.) (6)

தத்ஸமாஸ்வத3ரூபிணீம் ஸ்தி2திம் த்வத்ஸமாதி4மயி விஶ்வநாயக ।
ஆஶ்ரிதா: புநரத: பரிச்யுதா–வாரபே4மஹி ச த3ாரணாதி3கம் ॥ 7 ॥

அகில லோகநாயகனான ஹே குருவாயூரப்பா! அந்த பிரம்மத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற நிலையே தங்களைத் தியானிப்பதாகிய ஸமாதி ஆகும். அந்த நிலையை அடைந்த நாங்கள் அதனின்றும் நழுவ நேரிடில், மறுபடியும் மனதை ஒருமுகப்படுத்தும் தாரணை முதலியவற்றைத் தொடங்குவோம். (7)

இத்த2மப்4யஸந–நிர்ப4ரோல்லஸத்–த்வத்பராத்ம–ஸுக2ல்பிதோத்ஸவா: ।
முக்தப4க்தகுலமௌலிதாம் க3தா: ஸஞ்சரேம ஸுகநாரத3ாதி3வத் ॥ 8 ॥

இவ்விதம் தாரணை, தியானம், ஸமாதி ஆகியவற்றை அடிக்கடி பயில்வதால் தங்கள் ஸ்வரூபம் விளக்கமாகத் தெரியத் தொடங்குகிறது. அந்த பிரம்மானுபவத்தால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, ஜீவன் முக்தர்களான பக்தர்களுள் முதன்மையான இடத்தைப் பெற்று ஸ்ரீசுகர், நாரதர் முதலியோரைப்போல் சஞ்சரிப்போம். (8)

த்வத்ஸமாதி4விஜயே து ய: புநர்மங்க்ஷு மோக்ஷரஸிக: க்ரமேண வா ।
யோக3வஶ்யமநிலம் ஷடாஶ்ரயை–ருந்நயத்யஜ ஸுஷும்நயா ஸநை: ॥ 9 ॥

பிறப்பற்ற குருவாயூரப்பா! தங்களைத் தியானிப்பதாகிய நிர்விகல்ப சமாதியில் வெற்றியடைந்த யோகி ஸத்யோ முக்தியையோ, கிரம முக்தியையோ விரும்பினால் பிராணாயாமம் செய்து பிராண வாயுவைத் தன் வயப்படுத்தி ஸுஷும்னா நாடி வழியாக ஆறு ஆதாரங்களைக் கடக்கச் செய்து அந்த பிராண வாயுவை மெதுவாக மேலெழச் செய்கிறான். (9)

ஸத்யோ முக்தி — இப்பிறவியிலேயே இப்பொழுதே உடனே முக்தி.

கிரம முக்தி — பூவுலகிற்கு மேலான தெய்வீக உலகங்களில் தெய்வீகமான பல பிறவிகள் பெற்று பிறகு முக்தியடைவது.

ஆறு ஆதாரங்கள் — நமது முதுகெலும்பினுள் நடுவில் தாமரை நூல் போல் மெல்லியதாக ஒரு நாடி செல்கிறது. அதுவே ஸுஷும்னா நாடி. அந்த ஸுஷும்னா நாடியின் அடியிலிருந்து வரிசையாக மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு சக்கரங்கள் உள்ளன. பதஞ்சலி யோக சாஸ்த்ரத்தில் இவற்றின் விளக்கம் காணலாம்.

லிங்க3தே3ஹமபி ஸந்த்யஜந்நதே3ா லீயதே த்வயி பரே நிராக்3ரஹ: ।
ஊர்த்4வலோககுதுகீ து மூர்த4தஸ்–ஸார்த4மேவ கரணைர்நிரீயதே ॥ 10 ॥

பிராணனைப் புருவ மத்தியில் கொண்டு நிறுத்திய பிறகு இதர காமங்களை விட்டு ஸத்யோ முக்தியை விரும்புபவன், ஆறு ஆதாரங்களைக் கடந்தபின் லிங்க சரீரத்தையும் விட்டு பரமாத்மாவான தங்களிடம் லயித்துவிடுகிறான் (ஸாயுஜ்ய முக்தியை அடைகிறான்). (ஆனால்)

பிரம்மலோகம் முதலியவற்றை அடைய வேண்டும் என்ற விருப்பம் கொண்டவன் (அதாவது கிரம முக்தியை அடைய விரும்புபவன்) ஐந்து பிராணன்கள், மனது, புத்தி, பத்து இந்திரியங்கள், சித்தம், அஹங்காரம் என்ற இத்தத்துவங்கள் அடங்கிய லிங்க சரீரத்துடனேயே தலை வழியாக (பிரம்மரந்திரத்தின் வழியாக) வெளிக் கிளம்புகிறான். (10)

அக்₇நிவாஸர–வளர்க்ஷபக்ஷகை₃–ருத்தராயணஜுஷா ச தை₃வதை: ।
ப்ராபிதோ ரவிபத₃ம் ப₄வத்பரோ மோத₃வாந் த்₄ருவபத₃ாந்தமீயதே ॥ 11 ॥

ஹே குருவாயூரப்பா! தங்கள் பக்தன் அக்னி, பகல், சுக்லபக்ஷம் ஆகியவற்றிற்குரிய தேவதைகளாலும், உத்தராயணத்திற்கு அபிமானியான தேவதையாலும், சூரிய லோகத்தை அடைவிக்கப்படுகிறான். பின் மிக்க மகிழ்ச்சியுடன் துருவனின் உலகம் வரையில் செல்கிறான். (11)

குறிப்பு:– துருவலோகம் செல்லும் வழி பின்வருமாறு :

தன் விருப்பப்படி உடலை விட்டு சூரிய கிரணங்கள் வழியாக வெளியேறும் ஜீவனை அக்னி தேவதை தன் லோகத்தின் வழியே அழைத்துச் சென்று பகலுக்கு அபிமானியான தேவதையிடம் ஒப்படைக்கிறது. அந்த பகல் அபிமானி தேவதை அந்த ஜீவனை சுக்லபக்ஷ அபிமான தேவதையிடமும், சுக்லபக்ஷ தேவதை உத்தராயண அபிமானி தேவதையிடமும், பின் ஸம்வத்ஸராபிமானி தேவதையிடமும், அந்த தேவதை தேவலோக மார்க்கமாக அழைத்துச் சென்று வாயு தேவதையிடமும் ஒப்படைக்கிறது. அத்தேவதை வாயுலோக மார்க்கமாக ஆதித்ய தேவதையிடமும், அத்தேவதை சந்திர தேவதையிடமும், அத்தேவதை தன் லோக மார்க்கமாக வித்யுல் லோகத்தையும் அடைவிக்கிறது. பின் அந்த ஜீவன் துருவலோகம் வரை செல்கிறான்.

ஆஸ்தி₂தோऽத₂ மஹராலயே யதா₃ ஸோஷ்ணவக்த்ர–தஹுநோஷ்மணார்த்₃யதே ।
ஈயதே ப₄வது₃பாஸ்ரயஸ்–ததா₃ வேத₄ஸ: பத₃மத: புரைவ வா ॥ 12 ॥

துருவலோகத்தையடைந்த பிறகு அங்கிருந்து மஹர்லோகத்தை அடைந்த தங்கள் பக்தன் ஆதிசேஷனின் முகங்களிலிருந்து வெளிவரும் விஷாக்னியின் வெம்மையினால் வருந்தும்பொழுதோ, அதற்கு முன்போ பிரம்மலோகத்தை அதாவது சத்தியலோகத்தை அடைகிறான். (12)

தத்ர வா தவ பதே₃ऽத₂வா வஸந் ப்ராக்ருதப்ரளய ஏதி முக்ததாம் ।
ஸ்வேச்ச₂யா கலு புராऽபி முச்யதே ஸம்விபித்₃ய ஜகதா₃ண்ட₃மோஜஸா ॥ 13 ॥

ஹே குருவாயூரப்பா! சத்தியலோகத்தையடைந்த தங்கள் பக்தன் பிரம்மலோகத்திலாவது அல்லது தங்கள் விஷ்ணுலோகத்திலாவது வாழ்ந்து கொண்டு மஹாப்பிரளயத்தில் மோக்ஷத்தை அடைகிறான். அல்லது, தன் விருப்பப்படி பிரளயத்திற்கு முன்பே தனது யோகபலத்தால் பிரம்மாண்டத்தைப் பிளந்து கொண்டு முக்தனாகிறான். (13)

(மஹாப்பிரளயம் என்பது பிரக்ருதி காரியங்களான மஹத், அஹங்காரம், ஐந்து தன்மாத்திரைகள் – இவைகள் அதனதன் காரணங்களில் ஒன்றுபடுவதேயாகும்.)

தஸ்ய ச க்ஷிதியோ–மஹோऽநிலத்₃–யோமஹுத்ப்ரக்ருதி–ஸப்தகாவ்ருதீ: ।
தத்–ததத்₃யத்மகதயா விஸந் ஸுகீ₂ யாதி தே பத₃மநாவ்ருதம் விபோ₄ ॥ 14 ॥

ஹே பிரபுவே, குருவாயூரப்பா! அந்தப் பிரம்மாண்டத்தின் ஆவரணங்களான (மறைப்புகளான) பிருத்வி (நிலம்), அப்பு (நீர்), தேயு (நெருப்பு), வாயு (காற்று), ஆகாயம்

(வானம்), மஹத்தத்துவம், மாயை என்கிற ஏழு மறைப்புகளையும், அந்தந்த வடிவாகிக் கடந்து சுகமாக மறைக்கப்படாத தங்களது ஸ்தானத்தை அதாவது ஸாயுஜ்ய முக்தியை அடைகிறான். (14)

அர்சிராதி³கதிமீத்³ருஸீம் வ்ரஜந் விச்யுதிம் ந பா³ஜதே ஜகத்பதே ।
ஸச்சித³ாத்மக பூ⁴வத்³கு³ணோத்³யா–நுச்சரந்தமநிலேஸ² பாஹி மாம் ॥ 15 ॥

ஹே உலகநாயகா! இவ்வாறு அர்ச்சிராதி மார்க்கத்தை, ஒளி வடிவான கதியையடைபவன் மீண்டும் திரும்பி வருவதில்லை. (தன்னிஷ்டப்படி சரீரத்தை விட்டு அக்னி முதலிய தேவதைகளின் மூலம் பகவானின் பாதத்தை அடைவதே அர்ச்சிராதி மார்க்கமெனப்படும்.) ஸத்சித்ஆனந்த வடிவான குருவாயூரப்பா! தங்களுடைய குணங்களின் சிறப்பை எண்ணி எண்ணிப் பாடுகின்ற என்னைக் காத்தருள வேண்டுகிறேன். (15)

❀❀❀❀❀

ஐந்தாவது தசகம்

விராட்புருஷ உற்பத்தி (தோற்றம்)

வ்யக்தாவ்யக்தமிதம்³ ந கிஞ்சித³பூ⁴வத்–ப்ராக்ப்ராக்ருத–ப்ரக்ஷயே
மாயாயாம் கு³ணஸாம்யருத்³த⁴விக்ருதௌ த்வய்யாக³தாயாம் லயம் ।
நோ ம்ருத்யுஶ்ச ததா³ம்ருதம் ச ஸமபூ⁴தந்நாஹ்நோ ந ராத்ரே: ஸ்தி²திஸ்
தத்ரைகஸ்த்வ–மஸி²ஷ்யதா³: கில பராநந்த³ப்ரகாஶாத்மநா ॥ 1 ॥

முதலில் மஹாப்பிரளயத்தில் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களுடைய ஏற்றத்தாழ்வு இன்மையால் அதாவது மூக்குணங்களின் சமநிலையால் தடுக்கப்பட்ட செயல்களை உடைய மாயை தங்களிடம் லயமடைந்திருந்தது. அச்சமயம் ஸ்தூல, ஸூக்ஷ்ம ரூபமான (மிகப் பெரியதும், நுண்ணியதுமான) இந்தப் பிரபஞ்சமே (உலகமே) இல்லை. (அதாவது மாயை இல்லாததால் அதன் காரியமானப் பிரபஞ்சமும் இல்லை.) (1)

குறிப்பு:– அப்பொழுது பிறப்பு-இறப்பு கொண்ட சம்சாரமும், மோக்ஷமும் இருக்கவில்லை. பகலும், இரவும் இல்லை. அப்பொழுது தாங்கள் ஒருவரே பேரானந்த ஒளிவடிவாக (ஸத்சித் ஆனந்த ரூபியாக) தனித்திருந்தீர்கள் அல்லவா? (சொல் வடிவான வேதச் சிகரங்களின் மெய்ப்பொருளாக விளங்கினீர்கள் அல்லவா?)

கால: கர்மகு³ணாஶ்ச ஜீவநிவஹா விஶ்வம் ச கார்யம் விபோ⁴
சில்லீலாரதிமேயுஷி த்வயி ததா³ நிர்லீநதாமாயயு: ।
தே³ஷாம் நைவ வதந்த்யஸத்வமயி போ⁴: ஶக்த்யாத்மநா திஷ்ட²தாம்
நோ சேத் கிம் கா³ந–ப்ரஸூந–ஸ்த்ருʼணாம் பூ⁴யோ ப³ீஜஸம்ப⁴வ: ॥ 2 ॥

ஹே பிரபுவே, குருவாயூரப்பா! அப்பொழுது தாங்கள் சித்தாகிற ஸ்வரூபத்தை அனுஸந்தானம் செய்வதான சிதானந்த லீலையில் லயித்திருந்தீர்கள். அச்சமயம் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூக்குணங்களும், காலமும், அந்தந்த ஜீவர்களின் கருமமும், உயிர்களின் கூட்டமும், எல்லா மாயா காரியங்களும் (மாயையின் எல்லாச் செயல்களும்) அனைத்தும் மறைந்துவிட்டன. ஹே பகவானே, குருவாயூரப்பா! காரணரூபமாக இருக்கின்ற அவைகளை

வேதங்கள் இதற்கு முன் 'இவைகள் இருக்கவில்லை' என்றும் கூறவில்லை. அவ்வாறு இல்லாவிடில் ஆகாச புஷ்பத்திற்கு ஒப்பான அவைகளுக்கு மீண்டும் தோற்றம் பிரளய முடிவில் எவ்வாறு உண்டாகும்? (2)

குறிப்பு:– இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறுவதற்கு 'ஆகாச புஷ்பம்' என்ற உவமையைக் கையாள்வது புலவர் மரபு. 'முயற்கொம்பு' என்பது போல.

ஏவம் ச த்³விபரார்த்³கால–விக்³தாவீக்ஷாம் லிஸ்ருக்ஷாத்மிகாம்
பி³ப்⁴ராணே த்வயி சுக்ஷுபே⁴ த்ரிபு⁴வநீப⁴ாவாய மாயா ஸ்வயம் ।
மாயாத: கு²லு காலஶக்திரகி²லா–த்³ருஷ்டம் ஸ்வப⁴ாவோऽபி ச
ப்ராது³ர்பூ⁴ய கு³ணாந் விகாஸ்ய வித்³து⁴ஸ்–தஸ்யாஸ்–ஸஹாயக்ரியாம் ॥ 3 ॥

இவ்வாறு இரண்டு பரார்த்த காலம் முடிவுற்றபோது தாங்கள் படைக்க விரும்பிப் பார்வையைச் செலுத்தினீர்கள். அப்பொழுது மூவுலகங்களின் தோற்றத்திற்காக மாயை தானாகவே அசைந்தது, கலக்கமுற்றது. அம்மாயையிலிருந்து மஹாகாலம் என்ற சக்தியும், அனைத்து ஜீவர்களுடைய புண்ணிய பாவங்களான கர்மங்களும், அதனதன் ஸ்வபாவமும் தோன்றின. அவை ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களை மலரச் செய்து மாயைக்கு உதவி செய்தன. (இரண்டு பரார்த்தம் – பிரம்மாவின் ஆயுட்காலம்.) (3)

மாயாஸந்நிஹிதோऽப்ரவிஷ்ட–வுஷா ஸாக்ஷீதி கீ³தோ ப⁴வாந்
பே⁴தை³ஸ்தாம் ப்ரதிபி³ம்ப³தோ விவிமிவாந் ஜீவோऽபி நைவாபர: ।
காலாதி³–ப்ரதிபே⁴தி³தாத³² ப⁴வதா ஸஞ்சோதி³தா ச ஸ்வயம்
மாயா ஸா கு²லு புத்³தி⁴தத்வமஸ்ருஜத்³–யோऽஸௌ மஹாநுச்யதே ॥ 4 ॥

ஹே குருவாயூரப்பா! தாங்கள் மாயையின் அருகில் இருப்பினும் அத்துடன் கலவாத ஸ்வரூபத்துடன் இருப்பதால் ஸாக்ஷி என்று (வேதாந்திகளால்) கூறப்படுகிறீர்கள். அந்த மாயையில் பற்பல வேறுபாடுகளுடன் பிரதிபிம்ப ரூபமாகப் புகுந்த ஜீவனும் வேறானவன் அல்ல, தாங்களே. பிறகு காலம், கர்மம், ஸ்வபாவம் இவற்றால் உணர்த்தப்பட்டும், தங்களால் தூண்டப்பட்டும் அந்த மாயை தானாகவே புத்தி தத்துவத்தைத் தோற்றுவித்தது. அந்த புத்தி தத்துவம்தான் மஹத்தத்துவம் என்று கூறப்படுகிறது. (4)

தத்ராஸௌ த்ரிகு³ணாத்மகோऽபி ச மஹாந் ஸத்வப்ரதா⁴ந: ஸ்வயம்
ஜீவேஸ்மிந் கலு நிர்விகல்பமஹமித்–யுத்³பே⁴தநிஷ்பாத³க: ।
சக்ரேऽஸ்மிந் ஸவிகல்பபே⁴தா³கமஹந்–தத்வம் மஹாந் கல்வஸௌ
ஸம்புஷ்டம் த்ரிகு³ணைஸ்–தமோதிபூ⁴லம் விஷ்ணோ ப⁴வத்பாரேணாத் ॥ 5 ॥

அந்த மாயா கார்யங்களுக்கிடையில் இந்த 'மஹத்' தத்துவம், தானே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் உருவமாக இருப்பினும், சிறப்பாக ஸத்வ குணத்தின் உருவமாக இருக்கையில், இந்த ஸமஷ்டி ஜீவனில் மனிதன் முதலிய வேற்றுமையற்ற 'நான்' என்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது. எங்கும் நிறைந்த குருவாயூரப்பா! இந்த 'மஹத்' தத்துவம் முக்குணங்களால் நிறைந்திருந்த போதிலும் தங்கள் தூண்டுதலால், தமோ குணம் நிறைந்த நிலையில் இந்த ஜீவனிடத்தில் (நான் மனிதன், நான் விலங்கு என்பது போன்ற) வேறுபாடு கொண்ட உணர்வைத் தோற்றுவிக்கிறது. அதாவது அஹங்காரத்தைத் தோற்றுவிக்கிறது. (5)

ஸோ(அ)ஹம் ச த்ரிகு³ணக்ரமாத் த்ரிவித⁴தா–மாஸாத்³ய வைகாரிகோ
பூ⁴யஸ்தைஜஸ–தாமஸாவிதி பு⁴வந்நாத்³யேந ஸத்வாத்மநா ।
தே³வா–நிந்த்³ரியமாநிநோ(அ)க்ருத தி³ஶா–வாதார்கபாஶ்–யஶ்விநோ
வஹ்நீந்த்³ராச்யுத–மித்ரகாந் விது⁴விதி⁴–ஸ்ரீருத்³ரஶரீரகாந் ॥ 6 ॥

அந்த அஹங்காரம் தோன்றிய உடனே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் வரிசையில் வைகாரிகம் (ஸாத்விக அஹங்காரம்), தைஜஸம் (ராஜஸ அஹங்காரம்), தாமஸம் (தாமஸ அஹங்காரம்) ஆகிய மூவகையாயிருத்தலை அடைந்தது. பின் ஸத்வ குணத்தையே பிரதானமாக(முதன்மையாக)க் கொண்ட வைகாரிகம் என்னும் முதற்பகுதியைக் கொண்டு புலன்களின் அதிஷ்டான தேவதைகளான திசைகள், வாயு, சூரியன், வருணன், அஶ்விநீ தேவர்கள், அக்னி, இந்திரன், விஷ்ணு, மித்ரன், பிரஜாபதி, சந்திரன், பிரம்மதேவன், ஸ்ரீருத்ரன், க்ஷேத்ரக்ஞன் முதலியோர்களைப் படைத்தது. (6)

ஞானேந்திரிய தேவதைகள் : திசைகள், வாயு, சூரியன், வருணன், அஶ்விநீ தேவர்கள் ஆக ஐவர்.

கர்மேந்திரிய தேவதைகள் : அக்னி, இந்திரன், விஷ்ணு, மித்ரன், பிரஜாபதி ஆக ஐவர்.

மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் ஆகியவற்றின் அபிமானி தேவதைகள் : சந்திரன், பிரம்மதேவர், ஸ்ரீருத்ரன், க்ஷேத்ரக்ஞன் ஆக நால்வர்.

பூ⁴மந்–மாநஸபு³த்³த்⁴யஹங்க்ருதிமிளச்–சித்தாக்²ய–வ்ருத்யந்விதம்
தச்சாந்த:கரணம் விபே⁴ா தவ ப³லாத் ஸத்வாம்ஶ ஏவாஸ்ருஜத் ।
ஜாதஸ்தைஜஸதோ த³ஶேந்த்³ரியக³ணஸ்–தத்தாமஸாம்ஶாத்புநஸ்
தந்மாத்ரம் நப⁴ஸோ மருத்புரபதே ஶப்³தே³(அ)ஜநி த்வத்ப³லாத் ॥ 7 ॥

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஹே குருவாயூரப்பா! தங்கள் தூண்டுதலினால் ஸாத்விக அஹங்காரமான வைகாரிகமே மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவற்றுடன் கூடின சித்தம் என்ற விருத்தியுடன் (பொருளை உணர்த்தும் சக்தியோடு) ஸத்வ பிரதானமான அந்தக்கரணத்தைத் தோற்றுவித்தது. ராஜஸ அஹங்காரமான தைஜஸத்திலிருந்து பத்து புலன்களுடைய திரள் தோன்றியது. மறுபடியும் தாமஸ அஹங்காரத்திலிருந்து, குருவாயூரப்பா! தங்களுடைய தூண்டுதலால் ஆகாயத்தின் தன்மாத்திரையான ஸூக்ஷ்ம சப்தம் (ஒலி) தோன்றியது. (7)

ஶப்³தா³த்³வ்யோம ததஸ் ஸஸர்ஜித² விபே⁴ா ஸ்பர்ஶம் ததோ மாருதம்
தஸ்மாத்³–ரூபமதோ மஹோ(அ)த² ச ரஸம் தோயம் ச கு³ந்த⁴ம் மஹீம் ।
ஏவம் மாத்³வ பூர்வபூர்வகலாநா–தா³த்³யாத்³யத³ர்மாந்விதம்
பூ⁴தக்³ராமமிமம் த்வமேவ பு⁴க்³வந் ப்ராகாஶயஸ்தாமஸாத் ॥ 8 ॥

ஹே பிரபுவே! ஒலி தன்மாத்திரையிலிருந்து ஆகாயத்தையும், அதிலிருந்து வாயு தன்மாத்திரையான ஸ்பர்ச(தொடுதல்)த்தையும், அதனின்றும் வாயுவையும், அந்த வாயுவிலிருந்து தேஜோ குணமான ரூபத்தையும், அதனின்றும் அக்னியையும் (ஒளியையும்), பிறகு அதனின்றும் ஜலத்தின் குணமான ரஸத்தையும் (சுவையையும்), அதனின்றும் நீரையும், நீரினின்றும் (கந்தம்) மணத்தையும், மணத்தினின்றும் பூமியையும் படைத்தீர்கள். திருமகள் கேள்வனே! இவ்வாறு வரிசையாக முதலில் தோன்றின ஒலி முதலியவற்றின் சேர்க்கையினால், அவ்வவற்றின் தன்மையோடு அதாவது குணங்களோடு கூடிய ஐம்பெரும் பூதத்தொகுதியை தாமஸ அஹங்காரத்தினின்றும் தாங்களே தோற்றுவித்தீர்கள். (8)

ஏதே பூதகணாஸ்–ததேந்த்ரியகணா தேவாஸ்ச ஜாதா ப்ருதக்–
நோ மேகுர்–புவநாண்டநிர்மிதிவிதௌ தேவைரமீபிஸ்–ததா ।
த்வம் நாநாவித–ஸ்ருக்திபிர்நுதகுணஸ்–தத்வாந்யமூந்யாவிஸம்ஸ்–
சேஷ்டா ஸக்திமுதீர்ய தாநி கடயந் ஹைரண்யமண்டம் வ்யதா: ॥ 9 ॥

இந்த ஐம்பெரும் பூதங்களின் தொகுதியும், அவற்றின் அபிமானி தேவதைகளும் தோன்றியிருப்பினும், தனித்தனியாக இருந்தமையால் இந்தப் பிரம்மாண்டத்தைப் படைப்பதில் திறன் பெற்றிருக்கவில்லை. அப்பொழுது தேவர்கள் தங்கள் குணங்களைப் பலவிதத் தோத்திரங்களால் புகழ்ந்தார்கள். உடனே தாங்கள் இந்த 'மஹத்' முதலிய தத்துவங்களில் புகுந்து கொண்டு அவற்றிற்கு செயலாற்றலை (கிரியா சக்தியை)க் கொடுத்து அவற்றை ஒன்றோடொன்று கூடும்படிச் செய்து சுவர்ணமயமான பிரம்மாண்டத்தைத் தோற்றுவித்தீர்கள். (9)

அண்டம் தத்கலு பூர்வஸ்ருஷ்டஸலிலேதிஷ்டத் ஸஹஸ்ரம் ஸமா:
நிர்பிந்தந்–நக்ருதாஸ்–சதுர்தபூஜகத்ரூபம் விராடாஹ்வயம் ।
ஸாஹஸ்ரை: கரபாதமூர்தநிவஹைர்–நிஸ்ஸேஷஜீவாத்மகோ
நிர்பாதோஸி மருத்புராதிப ஸ மாம் த்ராயஸ்வ ஸர்வாமயாத் ॥ 10 ॥

ஹே குருவாயூரப்பா! (தங்களால்) முன்பே படைக்கப்பட்ட நீரில் அந்தப் பிரம்மாண்டம் ஆயிரம் ஆண்டுகள் இருந்தது. தாங்கள் அதனுள் புகுந்து அதனைப் பிளந்து பதிநான்கு உலகங்களின் உருவமான 'விராட்' ஸ்வரூபத்தைப் படைத்தீர்கள். ஆயிரக்கணக்கான கை, கால், தலை ஆகியவற்றின் தொகுதியோடு எல்லா ஜீவராசிகளின் வடிவமாகத் தோன்றினீர்கள். குருவாயூரப்பா! அப்படிப்பட்ட தாங்கள் என்னை எல்லா நோய்களினின்றும் காத்தருள வேண்டும். (10)



ஆறாவது தசகம்

விராட்புருஷனே உலக வடிவம்

ஏவம் சதுர்தபூஜகந்மயதாம் கதஸ்ய
பாதாளமீஸ தவ பாததலம் வதந்தி ।
பாதேர்த்வதேஸமபி தேவ ரஸாதலம் தே
குல்பத்வயம் கலு மஹாதலமத்புதாத்மந் ॥ 1 ॥

ஹே ஈசா! இவ்வாறு பதிநான்கு புவன வடிவம் கொண்ட தங்களுடைய திருவடிகளை பாதாள லோகமென்றும், தேவனே! திருவடிகளின் மேல் பாகத்தை ரஸாதலமென்றும், அற்புதமான வடிவுடைய குருவாயூரப்பா! தங்களுடைய கணுக்கால்களை மஹாதலமென்றும் கூறுகிறார்கள். (1)

ஜங்கே தலாதலமதோ ஸுதலம் ச ஜாநூ
கிஞ்சோருபாகயுகளம் விதலாதலே த்வே ।
க்ஷோணீதலம் ஜகநமம்பரமங்க நாபிர்–
வக்ஷஸ்ச ஸக்ரநிலயஸ்தவ சக்ரபாணே ॥ 2 ॥

ஹே பிரபோ! சக்கரம் தரித்தவரே! தங்களுடைய முழந்தாள்கள் இரண்டும் தலாதலம்; முழந்தாள் மூட்டுகள் சுதலம்; துடையின் கீழ்மேல் பாகங்கள் முறையே விதலமும், அதலமும்; இடுப்பு நிலவுலகம்; தொப்புள் (நாபி) ஆகாயம்; மார்பு இந்திர உலகான சுவர்க்கம். (2)

க்₃ரீவா மஹஸ்தவ முக₂ம் ச ஜநஸ்தபஸ்து
ப₂ாலம் ஶிரஸ்தவ ஸமஸ்தமயஸ்ய ஸத்யம் ।
ஏவம் ஜக₂ந்மயதநோ ஜக₃தா₄ஶ்ரிதைரப்–
யங்யைர்நிப₃த்₃த₄வபுஷே ப₄க₃வந்நமஸ்தே ॥ 3 ॥

தங்களுடைய கழுத்து மஹர் லோகம்; திருமுகமோ ஜனோ லோகம்; நெற்றி தபோ லோகம்; எல்லாமாகவும் விளங்கும் தங்களுடைய தலை சத்தியலோகம் (பிரம்மாவினுடைய உலகம்). இவ்விதம் பதிநான்கு உலகங்களையும் தமது உடலாகக் கொண்டு விளங்கும் பகவானே! உலகத்தை அண்டி நிற்கும் மற்ற பொருட்களையும் தமது உடலிலேயே கொண்டவரே! தங்களுக்கு வணக்கம். (3)

த்வத்₃ப்₃ரஹ்மரந்த்₃ரபத₃மீஶ்வர விஶ்வகந்த₃
ச₂ந்தா₃ம்ஸி கேஶவ க₄நாஸ்தவ கேஶபாஶா: ।
உல்லாஸிசில்லியுக₃ளம் த்₃ருஹிணஸ்ய கே₃ஹம்
பக்ஷ்மாணி ராத்ரி தி₂வஸௌ ஸவிதா ச நேத்ரே ॥ 4 ॥

உலகிற்கு மூல காரணமாய் உள்ளவரே! ஈசா! வேதங்களே தங்கள் உச்சி (பிரம்மரந்திரம்); கேசவா! தங்களுடைய தலைமுடிக்கற்றைகள் மேகங்கள்; அழகிய இரு புருவங்களும் பிரம்மதேவருடைய மாளிகை; கண்ணிமைகள் இரவும் பகலும்; இரு கண்களும் சூரியன். (4)

நிஶ்ஶேஷ–விஶ்வ–ரஸநா ச கடாக்ஷமோக்ஷ:
கர்ணௌ தி₃ஶோऽஶ்வியுக₃ளம் தவ நாஸிகே த்₃வே ।
லோப₂த்₃ரபே ச ப₄க₃வந்நத₄ரோத்தரோஷ்டே₂ள
தாராக₃ணாஶ்ச த₃ஶநாஶ்ஶமநஶ்ச த₃ம்ஷ்ட்ரா ॥ 5 ॥

பகவானே! தங்கள் கடைக்கண் பார்வையே அனைத்துலகங்களின் படைப்பு; காதுகள் திசைகள்; மூக்கின் இரு துவாரங்களும் அஶ்வினீ குமாரர்கள்; கீழுதடு பேராசை; மேலுதடு வெட்கம்; பற்கள் நக்ஷத்திரக் கூட்டங்கள்; தெற்றிப்பல் யமன். (5)

மாயா விலாஸஹஸிதம் ஶ்வஸிதம் ஸமீரோ
ஜிஹ்வா ஜலம் வசநமீஶ ஶகுந்தபங்க்தி: ।
ஸித்₃தா₄த₃ய: ஸ்வரக₃ணா முக₂ரந்த்₄ரமக்₃நிர்–
தே₃வா பு₄ஜா: ஸ்தநயுக₃ம் தவ த₄ர்மதே₃வ: ॥ 6 ॥

ஈசனே! தங்களுடைய புன்சிரிப்பு மாயை; உச்வாஸ நிச்வாஸமான மூச்சு வாயு; நாக்கு நீர்; வாக்கு பறவைக் கூட்டம்; ஷட்ஜம் முதலிய ஸ்வரக் கூட்டங்கள் ஸித்தர் முதலியோர்; வாய் நெருப்பு; கைகள் தேவர்கள்; மார்பகங்கள் இரண்டும் தர்மதேவன். (6)

ப்ருஷ்டம் த்வதா3ர்ம இஹ தே3வ மநஸ்ஸுதா3ம்ஸு–
ரவ்யக்தமேவ ஹ்ருதயாம்பு3ஜமம்பு3ஜாக்ஷ ।
குக்ஷி: ஸமுத்3ரநிவஹா வஸநம் து ஸந்த்4யே
மேப2: ப்ரஜாபதிரஸௌ வ்ருஷணௌ ச மித்ர: ॥ 7 ॥

ஹே தேவனே! தங்களுடைய இந்த உருவத்தின் பின்புறமோ (ப்ருஷ்டம்) அதர்மம்; மனம் சந்திரன்; செந்தாமரைக் கண்ணனே! இதயமாகிற தாமரை முக்குணங்களின் சமநிலையாகிற மூலப்பிரக்ருதி; வயிறு ஏழு சமுத்திரங்கள்; ஆடை காலை மாலை ஸந்திகள்; ஆண் குறி பிரஜாபதியான பிரம்மா; அண்டங்கள் மித்திரன் என்னும் தேவதை. (7)

ஸ்ரோணிஸ்த2லம் ம்ருகா3ணா: பதா3யோர்நகா2ஸ்தே
ஹஸ்த்யுஷ்ட்ரஸைந்த4வமுகா2 கா3நம் து கால: ।
விப்ராதி3வர்ணப4வநம் வதா3நாப்3ஜபா3ஹு–
சாரூருயுக்3மசரணம் கருணாம்பு3தே4 தே ॥ 8 ॥

கருணைக் கடலே! தங்கள் இடுப்புப் பகுதி விலங்குகளின் கூட்டம்; திருவடிகளில் உள்ள நகங்கள் யானை, ஒட்டகம், குதிரை முதலியன. காலமே உனது நடை; தாமரை போன்ற தங்கள் முகமும், கைகளும், அழகிய துடைகளும், திருவடிகளும் முறையே, அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் ஆகிய நான்கு வர்ணங்களின் பிறப்பிடம். (8)

ஸம்ஸாரசக்ரமயி சக்ரத4ர க்ரியாஸ்தே
வீர்யம் மஹாஸுரகு3ணோऽஸ்தி3குலாநி ஶைலா: ।
நாட்3யஸ்–ஸரித்ஸமுத்3யஸ்தரவஶ்ச ரோம
ஜ்யோதி3ர்க3ணம் வபுரநிர்வசநீயமீஶ ॥ 9 ॥

சக்கரக்கையனே! உமது செயல்கள் சம்சாரச் சக்கரத்தின் சுழற்சி (சக்கரம் போல் சுழன்று வரும் பிறப்பு–இறப்புகள்); பராக்கிரமம், பெரும் அஸுரர்களின் கூட்டம்; எலும்புத் தொகுதிகள், மலைகள்; நாடிகள், நதிகளின் கூட்டம்; ரோமங்கள், மரங்கள். ஈசனே! இவ்வாறென விளக்க முடியாத (உங்கள்) இந்த விராட் ஸ்வரூபம் வெற்றியுடன் விளங்கட்டும். (9)

ஈத்3ருக்3ஜக3ந்மயவபுஸ்தவ கர்மப3ாஜாம்
கர்மாவஸாநஸமயே ஸ்மரணீயமாஹு: ।
தஸ்யாந்தராத்மவபுஷே விமலாத்மநே தே
வாதாலயாதி4ப நமோஸ்து நிருந்தி4 ரோகா3ந் ॥ 10 ॥

ஹே குருவாயூரப்பா! தங்களுடைய உலக வடிவான இந்த சரீரம் கர்ம மார்க்கத்தில் உள்ளவர்களுக்கு (ஸாதன பக்தி செய்பவும் ஸாதகர்களுக்கு) பதினாறு வகை உபசாரங்களோடு கூடிய பூஜை முதலிய நற்கர்மங்களின் முடிவில் தியானிக்கத்தக்கது என்று (பெரியோர்கள்) கூறுகிறார்கள். அந்த விராட் ஸ்வரூபத்தின் அந்தராத்ம ஸ்வரூபியாய் உள்ள சுத்த ஸத்வ மூர்த்தியான தங்களுக்கு நமஸ்காரம். எனது பிணிகளைக் களைய வேண்டுமே. (10)

❖❖❖❖❖

ஏழாவது தசகம்

பிரம்மதேவனின் தோற்றமும், வைகுண்ட தரிசனமும்

ஏவம் தே³வ சதுர்தா³த்மக-ஜக³த்³ரூபேண ஜாத: புநஸ்-
தஸ்யோர்த்⁴வம் க³லு ஸத்யலோகநிலயே ஜாதோ(அ)ஸி தா⁴தா ஸ்வயம் ।
யம் ப்ரம்ஸந்தி ஹிரண்யக³ர்ப⁴மகி²ல-த்ரைலோக்யஜீவாத்மகம்
யோ(அ)ப்⁴யுத் ஸ்பீ²த-ரஜோவிகாரவிகஸந்-நாநாஸிஸ்ருக்ஷாரஸ: ॥ 1 ॥

தேவா, குருவாயூரப்பா! இவ்வாறு முதலில் பதிநான்கு உலகங்களின் வடிவமாகத் தோன்றிய தாங்கள் அதன்பின் மறுபடியும் அப்பதிநான்கு உலகங்களுக்கும் மேலே உள்ள சத்தியலோகம் என்னுமிடத்தில் பிரம்மதேவனாகத் தோன்றினீர்கள். ரஜோ குணத்தின் விகாரத்தால் பலவித சிருஷ்டியைச் செய்வதில் விருப்பம் கொண்ட பிரம்மதேவனை பூமி, சுவர்க்கம், பாதாளம் என்ற மூவுலகங்களுக்கும் ஜீவஸ்வரூபமாக (உயிராய்) விளங்கும் ஹிரண்யகர்ப்பன் என்று சொல்கிறார்கள். (1)

ஸோ(அ)யம் விஸ்²வவிஸர்க்³-த⁴த்தஹ்ருத³ய: ஸம்பஸ்²யமாந: ஸ்வயம்
பே⁴தா³த³ம் க³ல்²வநவாப்ய விஸ்²வவிஷயம் சிந்தாகுலஸ்தஸ்தி²வாந் ।
தாவத்த்வம் ஜக³தாம்பதே தப தபேத்யேவம் ஹி வைஹாயஸீம்
வாணீமேநமமோ²ச்ரவ: ப்ரருதிஸு²காம் கு²ர்வம்ஸ்தப:ப்ரேரணாம் ॥ 2 ॥

ஹே லோகநாதா! அந்த பிரம்மதேவன் உலகை சிருஷ்டி செய்வதில் மனதைச் செலுத்தி, அதைப் பற்றி நன்கு ஆராய்ந்து பார்த்தும் உலகத்தைப் பற்றிய அறிவைப் பெறாமல் மனம் கலங்கி இருந்தார். அப்பொழுது தாங்கள் அவரைத் தவம் செய்யும்படி உபதேசம் செய்ய, 'தவம் செய், தவம் செய்' என்று காதிற்கின்பம் பயக்கும் ஆகாயவாணியை அவர் கேட்கும்படிச் செய்தீர்கள். (2)

கோ(அ)ஸௌ மாமவதா³த் புமாநிதி ஜலாபூர்ணே ஜக³ந்மண்ட³லே
தி³க்ஷ்வீத்³வீக்ஷ்ய கிமப்யநீக்ஷிதவதா வாக்யார்த²முத்பஸ்யதா ।
தி³வ்யம் வர்ஷஸஹஸ்ர-மாத்ததபஸா தேந த்வமாராதி⁴த:-
தஸ்மை த³ர்ஸிதவாநஸி ஸ்வநிலயம் வைகுண்ட²மேகாத்³பு⁴தம் ॥ 3 ॥

உலகமெல்லாம் தண்ணீர் நிறைந்துள்ளபோது என்னை நோக்கி இவ்வாறு (தவம் செய் என்று) கூறிய 'அந்த புருஷன் யார்?' என்று எல்லா திசைகளிலும் உற்றுநோக்கி ஒருவரையும் காணாமல் தான் கேட்ட, 'தவம் செய், தவம் செய்' என்ற சொல்லின் பொருள் ஆராய்ந்து தேவர்களுக்குரிய ஓராயிரம் ஆண்டுகள் தவம் புரிந்து தங்களை வழிபட்டார். அவ்வாறு வழிபட்ட அவருக்குத் தாங்கள் ஒப்பற்ற, வியக்கத்தக்க தங்களது வைகுண்ட உலகைக் காண்பித்தீர்கள். (3)

மாயா யத்ர கதா³பி நோ விகுருதே பா⁴தே ஜக³த்³பா⁴ஸ யா³ஹி:
மோகக்ரோதா⁴-விமோஹஸாத்⁴வஸமுகா² பா⁴வாஸ்து தூ³ரம் கு³தா: ।
ஸாந்த்³ராநந்த³ஜுஷீ ச யத்ர பரம-ஜ்யோதி:ப்ரகாஸாத்மகே
தத்தே தா⁴ம விபா⁴விதம் விஜயதே வைகுண்ட²ரூபம் விபோ⁴ ॥ 4 ॥

ஹே பிரபோ! தாங்கள் பிரம்மதேவனுக்குக் காட்டிய ஸ்ரீவைகுண்டம் பதிநான்கு உலகங்களுக்கும் அப்பால் உள்ளது. அங்கு துன்பம், சினம், அறியாமை, அச்சம் முதலியன விலகி இருக்கின்றன. மேலும் மாயை ஒருபோதும் தலைகாட்டுவதில்லை. அங்கு எங்கும் இடைவிடாமல் ஆனந்தம் பெருகி ஓடுகிறது. அத்தகைய வைகுண்டம் என்கிற தங்களுடைய இருப்பிடம் சிறந்து விளங்குகிறது. (4)

யஸ்மிந்நாம சதுர்பு4ஜா ஹரிமணி–ஶ்யாமாவத3ாதத்விஷோ
நாநாபூ4ஷண–ரத்நதீ3பித–தி3ஶோ ராஜத்3விமாநாலயா: ।
பு4க்திப்ராப்த–தத3ாவிதே4ாந்நதபதா3 தீ3வ்யந்தி தி3வ்யா ஜநாஸ்–
தத்தே த3ாம நிரஸ்த–ஸர்வமமலம் வைகுண்ட3ரூபம் ஜயேத் ॥ 5 ॥

பாவங்கள் அனைத்தையும் நீக்குகின்ற ஸ்ரீவைகுண்டம் எனப்படும் தங்கள் இருப்பிடத்தில் உள்ள தெய்வீக ஜீவர்கள் நான்கு கைகளுடன் இந்திரநீலமணி போன்று தெளிவான அழகிய ஒளியை உடையவர்களாய், பற்பலவிதமான ஆபரணங்களின் ரத்தினங்களால் திக்குகளை ஒளிமிக்கவைகளாய்ச் செய்கின்றனர். ஒளிரும் விமானங்களில் வாழ்கிறார்கள். சுத்த ஸத்வ ஸ்வரூபர்களாக பயனில் கருத்தின்றி பக்தி செய்கின்ற ஜனங்கள் அந்த வைகுண்டத்தை அடைகின்றனர். அப்படிப்பட்ட மாசற்ற ஸ்ரீவைகுண்ட வடிவான தங்களுடைய ஸ்தானம் சிறந்து விளங்கட்டும். (5)

நாநாதி4வ்ய–வதூ4ஜநைரபி4வ்ருதா வித்3யுல்லதாதுல்யயா
விஶ்வோந்மாத3ந–ஹ்ருத்3யகா3த்ரலதயா வித்3யோதிதாஶாந்தரா ।
த்வத்பாத3ாம்பு3ஜ–ஸௌரபை4கதுகால்–லக்ஷ்மீ: ஸ்வயம் லக்ஷ்யதே
யஸ்மிந் விஶ்மயநீய–தி3வ்யவிப4வா தத்தே பத3ம் தே3ஹி மே ॥ 6 ॥

தங்கள் இருப்பிடமாகிய வைகுண்டத்தில் பலப்பல தெய்வப் பெண்களால் சூழப் பெற்று, அனைத்து உலகங்களையும் மயக்கும் மின்னற்கொடிக்கு ஒப்பான தனது இனிய கொடி போன்ற திருமேனியால் ஸ்ரீமஹாலக்ஷ்மி அனைத்து திசைகளையும் ஒளிரச் செய்கிறாள். வியக்கத்தக்க அழகிய சிறப்புடைய ஸ்ரீமஹாலக்ஷ்மி தங்கள் திருவடித் தாமரையின் நறுமணத்தை முகர்வதிலுள்ள ஆர்வம் ஒன்றினாலேயே அங்கு விளங்குகிறாள். அப்படிப்பட்ட தங்களுடைய இருப்பிடமான ஸ்ரீவைகுண்டத்தை எளியேனுக்குத் தந்தருள வேண்டுகிறேன். (6)

தத்ரைவம் ப்ரதித3ர்ஶிதே நிஜபதே3 ரத்நாஸநாத்4யாஸிதம்
பு4ஸ்வத்–கோடிலஸத்–கிரீடகடகாத்3யாகல்ப–தீ3ப்ராக்ருதி ।
ஸ்ரீவத்ஸாங்கித–மாத்தகௌஸ்துப4மணிச்–ச்சாயாருணம் காரணம்
விஶ்வேஷாம் தவ ரூபமைக்ஷத விதி4ஸ்–தத்தே விபோ4 பூ4து மே ॥ 7 ॥

எங்கும் நிறைந்த குருவாயூரப்பா! இங்ஙனம் தங்களால் காண்பிக்கப்பட்ட தங்களது இருப்பிடமாகிய ஸ்ரீவைகுண்டத்தில் பிரம்மதேவன் ரத்தினமிழைத்த இருக்கையில் ஆயிரங்கோடி சூரியன் உதித்தாற்போன்ற ஒளியுள்ள கிரீடம், தோள் வளைகள் முதலிய ஆபரணங்களால் ஒளிரும் தங்களது திருவுருவத்தை ஸ்ரீவத்ஸம் என்ற மருவுடனும், கௌஸ்துபம் என்ற ரத்தினத்தால் சிவந்து விளங்குவதாகவும் தரிசனம் செய்தார். உலகனைத்திற்கும் காரணமான அந்த தங்களுடைய திருமேனி எனக்குக் கண்ணெதிரே விளங்க வேண்டும். (7)

காலாம்பே₄தா₃–கலாயகோமளருசீ–சக்ரேண சக்ரம் தி₃ஶா–
மாவ்ருண்வாந–முதா₃ரமந்த₃ஹஸித–ஸ்யந்த₃ப்ரஸந்நாநநம் ।
ராஜத்–கம்பு₃கு₃தா₃ரிபங்கஜத₃ர–ஶ்ரீமத்பு₃ஜாமண்ட₃லம்
ஸ்ரஷ்டுஸ்–துஷ்டிகரம் வபுஸ்தவ விபே₄ மத்₃ரோக₃–முத்₃வாஸயேத் ॥ 8 ॥

ஹே பிரபோ! கார்மேகம், காயாம்பூ போன்ற அழகிய ஒளியால் எண் திசைகளையும் மறைக்கின்ற, அழகான புன்னகையினால் ஒளிரும் திருமுக மண்டலத்தை உடைய, சங்கு, கதை, சக்கரம், தாமரைப்பூ ஆகியவற்றைத் தாங்கும் அழகான நான்கு புஜங்களை உடைய, பிரம்மதேவனுக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் தங்களது திருமேனி என் நோயைப் போக்கட்டும். (8)

த்₃ருஷ்ட்வா ஸம்ப்₄ருதஸம்ப்₄ரம: கமலபூ₄ஸ்–த்வத்பாத₃பாத்₃ஹாருஹே
ஹர்ஷாவேஶவஶம்வதே₃ா நிபதித: ப்ரீத்யா க்ருதார்தீ₃பூ₄வந் ।
ஜ்ஞாநாஸ்யேவ மதீ₃ஷிதம் மம விபே₄ ஜ்ஞாநம் தத₃ாபாத₃ய
த்₃வைதாத்₃வைத–பூ₄வத்ஸ்வரூபபர–மித்யாசஷ்ட தம் த்வாம் பூ₄ஜே ॥ 9 ॥

பிரம்மதேவன் தங்களது திருமேனியைக் கண்டு பரபரப்படைந்து மகிழ்ச்சியில் திளைத்துத் தங்கள் திருவடித் தாமரையில் விழுந்து வணங்கி அன்பினால் எண்ணம் நிறைவேறியவராக, 'பிரபோ! எனது விருப்பத்தைத் தாங்கள் அறிவீர்கள். இரண்டாகவும், ஒன்றாகவும் தோன்றுகின்ற பர, அபரமென்கிற தங்களது இயல்பினைப் பற்றிய உண்மை ஞானத்தைத் தந்தருள வேண்டும்' என்று வேண்டினார். அப்படிப்பட்ட தங்களை நான் வணங்குகிறேன். (9)

ஆதாம்ரே சரணே விநம்ரமத₂ தம் ஹஸ்தேந ஹஸ்தே ஸ்ப்ருஶந்
பே₄தா₄ஸ்தே பூ₄விதா ந ஸர்க்₃விதி₄பி₃ர்பந்தே₄ாபி ஸஞ்ஜாயதே ।
இத்யாபூ₄ாஷ்ய கி₃ரம் ப்ரதோஷ்ய நிதராம் தச்சித்தகூ₃ட₄: ஸ்வயம்
ஸ்ருஷ்டெள தம் ஸமுதை₃ரய: ஸ பூ₄₃வந்–நுல்லாஸயோல்லாக₃தாம் ॥ 10 ॥

தங்களுடைய சிவந்த திருவடிகளில் வணங்கிய அந்த பிரம்மதேவனது கைகளைத் தங்கள் கையால் பிடித்துக் கொண்டு 'உனக்கு ஞானம் உண்டாகும். படைப்புத் தொழிலினால் பந்தம் (தளை) ஒன்றும் உண்டாகாது' என்று கூறி, அவரை மிகவும் ஊக்குவித்துத் தாங்களும் அவருடைய உள்ளத்தில் மறைந்திருந்து படைப்புத் தொழிலைச் செய்யும்படித் தூண்டினீர்கள். அத்தகைய பகவானே! என்னுடைய ஆரோக்கியத்தை வளர்த்து அருள்புரிய வேண்டும். (10)

❖❀❖❀❖

மூன்றாவது ஸ்கந்தம்

எட்டாவது தசகம்

மஹாப்பிரளயமும், உலகின் தோற்றமும்

ஏவம் தாவத் ப்ராக்ருதப்ரக்ஷயாந்தே
ப்₃ராஹ்மே கல்பே ஹ்யாதி₃மே லப்₃த₄ஜந்மா ।
ப்₃ரஹ்மா பூ₄யஸ்தத்வத்த ஏவாப்ய வேதா₃ந்
ஸ்ருஷ்டிம் சக்ரே பூர்வகல்போபமாநாம் ॥ 1 ॥

இவ்வாறு பிராக்ருத பிரளயமான மஹாப்பிரளயம் முடிந்தபின் முதலாவதான பிரம்ம கல்பத்தில் தோன்றிய பிரம்மதேவன் மறுபடியும் தங்களிடமிருந்தே வேதங்களைப் பெற்று முந்தைய கல்பத்தில் இருந்தது போலவே படைப்பினைச் செய்தார். (1)

ஸோऽயம் சதுர்யுக³ஸஹஸ்ரமிதாந்யஹாநி
தாவந்மிதாஸ்ச ரஜநீர்ப³ஹுஸ்ஸோ நிநாய ।
நித்³ராத்யஸௌ த்வயி நிலீய ஸமம் ஸ்வஸ்ருஷ்டைர்–
நைமித்திகப்ரளயமாஹு–ரதோऽஸ்ய ராத்ரிம் ॥ 2 ॥

அந்த பிரம்மதேவர் ஆயிரம் சதுர்யுகம் நீண்ட பகல்களையும், அதே அளவான இரவுகளையும் பன்முறை கழித்துவிட்டு, தான் படைத்த பிரபஞ்சங்களுடன் தங்களிடமே ஒன்றி இருந்து உறங்குகிறார். ஆகையால் அவருடைய இரவை நைமித்திகப் பிரளயம் என்று கூறுகிறார்கள். (2)

குறிப்பு:– ஆயிரம் சதுர்யுகம் கொண்டது பிரம்மதேவருக்கு ஒரு பகல். அதேபோல் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஓர் இரவு. இந்த இரவில் ஏற்படும் பிரளயமே நைமித்திகப் பிரளயம் எனப்படும். இவ்விதமாக முன்னூற்று அறுபது தினங்கள் கொண்டது ஒரு வருஷமாகும். இவ்வாறு நூறு வருஷங்கள் கொண்டது பிரம்மதேவரது பூர்ண ஆயுள். யாவரும் பகவானிடம் லயிப்பதே (ஒன்றி இருப்பதே) உறக்கமாகும்.

அஸ்மாத்³ருஶாம் புநரஹர்முக²க்ருத்யதுல்யாம்
ஸ்ருஷ்டிம் கரோத்யநுதி³நம் ஸ ப⁴வத்ப்ரஸாதா³த் ।
ப்ராக்³ப்³ரஹ்மகல்ப–ஜநுஷாம் ச பராயுஷாம் து
ஸுப்தப்ரபே³தா⁴ந–ஸமாஸ்தி ததா³ விஸ்ருஷ்டி: ॥ 3 ॥

நம் போன்றவர்கள் தினந்தோறும் காலைக் கடன்களைச் செய்வதுபோல பிரம்மதேவர் தினந்தோறும் தங்கள் அருளினால் படைப்புத் தொழிலைச் செய்கிறார். பிரம்ம கல்பத்திற்கு முன் தோன்றியவர்களும் இரண்டு பரார்த்தங்கள் கால அளவுள்ள ஆயுள் பெற்றவர்களுமான சிரஞ்சீவிகளின் படைப்போ தூங்கி விழிப்பதற்கு ஒப்பாக உள்ளது. (3)

குறிப்பு:– இரண்டு பரார்த்தங்கள் என்பது மானிட வருஷத்தில் மூன்று கோடியே பதினோரு லக்ஷத்து நாலாயிரம் கோடி வருஷங்கள்.

பஞ்சாஶத்³ப்³தை⁴மது⁴நா ஸ்வவயோரார்த⁴ரூப–
மேகம் பரார்த⁴மதிவ்ருத்ய ஹி வர்ததேऽஸௌ ।
தத்ராந்த்ய–ராத்ரிஜநிதாந் கத²யாமி பூ⁴மந்
பஶ்சாத்³ தி³நாவதரணே ச ப⁴வத்³விலாஸாந் ॥ 4 ॥

எங்கும் நிறைந்து விளங்கும் குருவாயூரப்பா! இப்பொழுது அந்த பிரம்மதேவர் தமது ஆயுளில் பாதியாகிய ஐம்பது வருஷங்களடங்கிய ஒரு பரார்த்தத்தைக் கடந்து இருக்கிறார் என்பது வெளிப்படை. அந்த பிரம்மதேவருடைய ஆயுளில் கடந்த இரவிலும், மறுநாள் பகலின் தொடக்கத்திலும் நிகழ்ந்ததான தங்கள் திருவிளையாடல்களை இனிக் கூறுகிறேன். (4)

தி³நாவஸாநேऽத² ஸரோஜயோநி: ஸுஷுப்தி–காமஸ்த்வயி ஸந்நிலில்யே ।
ஜக³ந்தி ச த்வஜ்ஜடரம் ஸமீயுஸ்–ததே³த³மேகார்ணவமாஸ விஶ்வம் ॥ 5 ॥

தாமரை மலரில் தோன்றிய பிரம்மதேவன் பகலின் முடிவில் உறங்க விரும்பித் தங்களிடத்தே ஒடுங்கினார். மூவுலகங்களும் தங்கள் திருவுதரத்தில் ஒடுங்கின. அப்பொழுது இந்த உலகம் ஒரே ஜலமயமான கடலாகவே ஆயிற்று. (5)

தவைவ வேஷே பு²ணிராஜபோ²ஷே ஜலைகபோ²ஷே பு²வநே ஸ்ம போ²ஷே ।
ஆநந்த³ஸாந்த்³ராநுப⁴வ ஸ்வரூப: ஸ்வயோக³நித்³ரா பரிமுத்³ரிதாத்மா ॥ 6 ॥

உலகமெங்கும் ஜலமயமானபொழுது தங்களுடைய மற்றொரு வடிவாகிய ஸர்ப்பராஜனான ஆதிசேஷன் மேல், ஸத்சித் ஆனந்த வடிவினனான தாங்கள் யோக நித்திரையில் பள்ளி கொண்டிருந்தீர்கள். (6)

காலாக்²யஶக்திம் ப்ரளயாவஸாநே ப்ரபே²த³யேத்யாதி³ஶதா கிலாதெ²ள ।
த்வயா ப்ரஸுப்தம் பரிஸுப்தஶக்தி–வ்ரஜேந தத்ராகி²ல ஜீவதா⁴ம்நா ॥ 7 ॥

மூலப்பிரக்ருதி முதலிய சகல சக்திகளும் தங்களிடமே லயித்திருக்கின்றன. அகில ஜீவகோடிகளும் தங்களிடமே இளைப்பாறுகின்றன. அப்படிப்பட்ட தாங்கள் 'காலம்' என்ற தங்களுடைய சக்தியைப் பார்த்துப் 'பிரளயத்தின் முடிவில் என்னை எழுப்புக' என்று கட்டளையிட்டு விட்டுப் பிரளயத்தின் தொடக்கத்தில் அந்த ஆதிசேஷன் மீது உறங்கத் தொடங்கினீர்கள் அல்லவா! (7)

சதுர்யுகா³ணாம் ச ஸஹஸ்ரமேவம் த்வயி ப்ரஸுப்தே புநரத்³விதீயே ।
காலாக்²யஶக்தி: ப்ரதி²தப்ரபா⁴வத்தா³ ப்ராபே²த³யத் த்வாம் கில விஶ்வநாத² ॥ 8 ॥

உலகநாதனான குருவாயூரப்பா! ஒத்தாரும் மிக்காரும் இல்லாத மாமாயனான தாங்கள் இவ்வாறு ஆயிரம் சதுர் யுகங்கள் உறங்கினீர்கள். அதன்பின் முதலில் விழித்த காலமென்ற பெயருடைய தங்கள் சக்தி தங்களை எழுப்பியதன்றோ? (8)

விபு⁴ம்ய ச த்வம் ஜலக³ர்ப⁴ஸாயிந் விலோக்ய லோகாநகி²லாந் ப்ரலீநாந் ।
தேஷ்வேவ ஸிக்ஷ்மாத்மதயா நிஜாந்த: ஸ்தி²தேஷு விஶ்வேஷு தபோ⁴த²꞉ த்ருஷ்டிம் ॥ 9 ॥

பிரளய காலத்தில் நீரின் நடுவே பள்ளி கொண்டிருந்த பரமனே! விழித்தெழுந்த தாங்கள் அகில உலகங்களும் தங்களிடமே நுண்ணிய வடிவில் ஒடுங்கி இருப்பது கண்டு அவ்வுலகங்களின் மேல் தங்கள் அருட்பார்வையைச் செலுத்தினீர்கள் அல்லவா! (9)

ததஸ்த்வதீ³யாத³யி நாபி⁴ரந்த்⁴ரா–துத்³ஞ்சிதம் கிஞ்சந தி³வ்யபத்³மம் ।
நிலீந–நிஶ்ஶேஷ–பதா³ர்த²மாலா–ஸம்க்ஷேபரூபம் முகுளாயமாநம் ॥ 10 ॥

இறைவனே! அதன்பிறகு தங்களுடைய தொப்புட்குழியிலிருந்து தங்களிடம் மறைந்திருந்த அனைத்து ஜீவராசிகள், அவற்றின் நுகர் பொருட்கள் ஆகியவற்றின் நுண்வடிவினதான மொட்டு தோன்றி. அதனின்றும் தெய்வீகமானதொரு தாமரை மலர்ந்தெழுந்தது. (10)

ததே²ததா³ம்பே²ருஹகுட்³மளம் தே களேப³ராத்தோயபதே² ப்ரரூட⁴ம் ।
பு³ஹிர்நிரீதம் பரித: ஸ்புரத்³பி⁴꞉ ஸ்வதா⁴மபி⁴ர்–த்³வாந்தமலம் ந்யகருந்தத் ॥ 11 ॥

அந்தத் தாமரை மொட்டு தங்கள் திருமேனியினின்றும் நீரின் மேல் வளர்ந்து வெளிவந்து, நாற்றிசைகளிலும் பரவிய தனது ஒளியால் இருள் முழுவதையும் அழித்தது. (11)

ஸம்புல்லபத்ரே நிதராம் விசித்ரே தஸ்மிந் ப₄வத்₃வீர்யத்₄ருதே ஸரோஜே ।
ஸ பத்₃மஜந்மா விதி₄ராவிராஸீத் ஸ்வயம்ப்ரபு₄த்₃த₄காி₂ல–வேத₃ராஸி: ॥ 12 ॥

தங்களது யோக சக்தியால் உண்டான அந்தத் தாமரை மொட்டு வியக்கத்தக்க முறையில் இதழ்கள் நன்கு விரிய மலர்ந்தது. அதனின்றும் 'பத்மஜன்' என்ற பிரம்மதேவர் தோன்றினார். அவருக்குத் தங்களுடைய அருளினால் வேதங்கள் அனைத்தும் தாமாகவே நினைவிற்கு வந்தன. (12)

அஸ்மிந் பராத்மந் நநு பாத்₃மகல்பே த்வ–மித்த₂முத்த₂பித–பத்₃மயோநி: ।
அநந்தபூ₄மா மம ரோக₃ராஸிம் நிருந்தி₄ வாதாலயவாஸ விஷ்ணோ ॥ 13 ॥

குருவாயூரில் வாழும் பரமாத்மாவான ஹே விஷ்ணுவே! இந்த பாத்ம கல்பத்தில் பிரம்மதேவரை இங்ஙனம் தோற்றுவித்த அளவற்ற பெருமைகளையுடைய தாங்கள் என்னுடைய நோய்க் கூட்டங்களை அழித்தருள வேண்டும். (13)

❋❋❋❋❋

ஒன்பதாவது தசகம்

உலகத்தின் தோற்றம்

ஸ்தி₂த: ஸ கமலோத்₃ப₄வஸ்தவ ஹி நாபி₄பங்கேருஹே
குதஸ்விதி₃த₃–மம்பு₃தா₄வுதி₃த–மித்யநாலோகயந் ।
ததீ₃க்ஷணகுதூஹலாத் ப்ரதிதி₃ஶம் விவ்ருத்தாநந:
சதுர்வத₃நதாமகா₃த்₃ விகஸதா₃ஷ்ட–த்₃ருஷ்ட்யம்பு₃ஜாம் ॥ 1 ॥

அந்த பிரம்மதேவர் தங்களுடைய தொப்புளினின்றும் உண்டான தாமரை மலரில் இருந்து கொண்டு 'கடலில் இந்தத் தாமரை எங்கிருந்து தோன்றியது?' என்று சிந்தித்தும் அறியாதவராய் அதைக் கண்டறிய ஆவல் கொண்டு திசைதோறும் தன் முகத்தைத் திருப்புகையில், மலர்ந்த தாமரை போன்ற எட்டு கண்களையுடைய நான்கு முகங்களை அடைந்தார். (1)

மஹார்ணவ–விகூ₄ர்ணிதம் கமலமேவ தத்கேவலம்
விலோக்ய தது₃பாஶ்ரயம் தவ தநும் து நாலோகயந் ।
க ஏஷ கமலோத்₃ரே மஹதி நிஸ்ஸஹாயோ ஹ்யஹம்
குதஸ்–ஸ்விதி₃த₃–மம்பு₃ஜம் ஸமஜநீதி சிந்தாமகா₃த் ॥ 2 ॥

பெருங்கடலில் அசைகின்ற அந்த ஒரே ஒரு தாமரைப் பூவை மட்டும் கண்டு அதற்கு இருப்பிடமான தங்களது திருமேனியைக் காணாமல் இந்தப் பெரிய தாமரை மலரின் நடுவில் துணைவனில்லாது தனித்திருக்கும் 'நான்தான் யார்? இந்தத் தாமரை மலர்தான் எங்கிருந்து தோன்றியது?' என்று சிந்திக்கலானார். (2)

அமுஷ்ய ஹி ஸரோருஹ: கிமபி காரணம் ஸம்ப₄வே–
தி₃தி ஸ்ம க்ருதநிஶ்சய: ஸ கி₂லு நாளரந்த்₄ராத்₄வநா ।
ஸ்வயோக₃ப₃லவித்₃யயா ஸமவரூட₄வாந் ப்ரௌட₄தீ₃ஸ்–
த்வதீ₃யமதிமோஹநம் ந து களேப₃ரம் த்₃ருஷ்டவாந் ॥ 3 ॥

'சிறந்த புத்திமானான அந்த பிரம்மதேவர் இந்தத் தாமரை மலருக்கு எங்கோ ஒரு உற்பத்தி ஸ்தானம் இருந்தே தீர வேண்டும்' என்று தீர்மானம் செய்து, தமது யோக பலத்தாலும், ஞானத்தாலும் தாமரைத் தண்டின் வழியே கீழே இறங்கினார். எனினும் உள்ளத்தைப் பெரிதும் கவர்வதான தங்கள் திருமேனியைக் காணவில்லை. (3)

தத: ஸகலநாளிகா–விவரமார்க³கே³ா மார்க³யந்
ப்ரயஸ்ய ஶதவத்ஸரம் கிமபி நைவ ஸந்த்³ருஷ்டவாந் ।
நிவ்ருத்ய கமலோத³ரே ஸுக²நிஷண்ண ஏகாக்³ரதீ⁴:
ஸமாதி⁴பு³லமாத³தே⁴ பு⁴வத³நுக்³ரஹைகாக்³ரஹீ ॥ 4 ॥

பிறகு தாமரைத் தண்டின் எல்லாத் துளைகளின் வழிகளிலும் புகுந்து நூறு வருஷங்கள் முயன்று தேடியும் ஒன்றையும் காணவே இல்லை. (ஆகவே) திரும்பி வந்து தாமரை மலரின் நடுவில் சுகமாக அமர்ந்து மனதை ஒருநிலையில் நிறுத்தித் தங்கள் அருள் ஒன்றையே நாடி சமாதி நிலையைக் கைக்கொண்டார். (4)

ஶதேந பரிவத்ஸரை–ர்த்³ருட⁴ஸமாதி⁴பு³ந்தே⁴ால்லஸத்
ப்ரபோ³த⁴விஶதீ³க்ருத: ஸ கு²லு பத்³மிநீஸம்பு⁴வ: ।
அத்³ருஷ்டசர–மத்³பு⁴தம் தவ ஹி ரூப–மந்தர்த்³ருஶா
வ்யவஷ்ட பரிதுஷ்டதீ⁴ர்–பு⁴ஜகு³போ⁴கு³–பா⁴கு³ாஶ்ரயம் ॥ 5 ॥

தாமரைப் பூவினின்றும் தோன்றிய அந்த பிரம்மதேவர் நூறு தேவ வருஷங்கள் திடமான சமாதியிலிருந்து அதனால் தோன்றிய ஞானத்தால் தெளிவடைந்தார். இதற்கு முன் காணாத வியக்கத்தக்க தங்களது திருமேனியை ஆதிசேஷனின் மேல் இருக்க உட்கண்ணால் கண்டார். அதனால் மிக்க மகிழ்ச்சி கொண்டார். (5)

ஒப்புநோக்குக:–

'அந்தர்முக ஸமாராத்யா பஹிர்முக சுதுர்லபா' (லலிதா ஸஹஸ்ரநாமம்)

பஹிர்முகமாகப் பல வழிகளிலே தேடினாலும் காண்டற்கரியவனான பகவான், இருந்த இடத்திலேயே இருந்து அந்தர்முகமாகத் தியானம் செய்வதால் எளிதில் காணக் கிடைப்பார்.

அந்தர் த்ருசா (உட்கண்ணால்) என்பதற்கு 'பகவதாநுக்ருஹீதேந திவ்யேந சக்ஷுஷா' – 'பகவானால் அருளப்பட்ட தெய்வீகக் கண்களால்' என்கிற பக்தப்பிரிய வியாக்கியானம் துய்த்து மகிழத்தக்கது.

'திவ்யம் ததாமி தே சக்ஷு:' என்ற ஸ்ரீமத்பகவத்கீதை ஸ்லோகத்தை நோக்குக.

பிரம்மதேவர் கண்ட பகவத் ஸ்வரூபம்

கிரீடமகுடோல்லஸத் கடகஹாரகேயூரயுங்–
மணிஸ்பு²ரிதமேகலம் ஸுபரிவீதபீதாம்ப³ரம் ।
கலாயகுஸும்ப⁴ரபு⁴ம் கு³ளதலோல்லஸத்–கௌஸ்துபு⁴ம்
வபுஸ்ததா³யி பா⁴வயே கமலஜந்மநே தா³ர்ஶிதம் ॥ 6 ॥

ஹே ஈசா! குருவாயூரப்பா! தலையின் முன்புறம் அணியும் கிரீடத்தாலும், தலையின் பின்புறம் அணியும் மகுடத்தாலும் விளங்குகின்றதும், வளைகள், முத்துமாலைகள், தோள்வளைகள் இவற்றால் அலங்கரிக்கப்பட்டதும், ரத்தினங்கள் பதித்த மேகலையணிந்ததும் அழகாக உடுத்தப்பட்ட பீதாம்பரத்துடன் கூடியதும், காயாம்பூ வண்ணமுடையதும், கழுத்திலே

ஒளிரும் கௌஸ்துபம் என்ற மணியை உடையதும், பிரம்மதேவருக்குக் காட்டியருளியதுமான தங்களுடைய அந்தத் திருமேனியை நான் தியானிக்கிறேன். (6)

ஶ்ருதிப்ரகர தர்ஶித ப்ரசுரவைபவ ஸ்ரீபதே
ஹரே ஜய ஜய ப்ரபோ பதமுபைஷி தி3ஷ்ட்யா த்3ருஶோ: ।
குருஷ்வ தி4யமஸு மே பவநநிர்மிதௌ கர்மட2–
மிதி த்3ருஹிணவர்ணித–ஸ்வகுணபூ4ம்ஹிமா பாஹி மாம் ॥ 7 ॥

ஸ்ரீபதியான ஸ்ரீகுருவாயூரப்பா! தங்களுடைய அளவற்ற பெருமைகளை எல்லா வேதங்களும் வர்ணிக்கின்றன. சம்சார துக்கங்களைக் களைகின்ற ஹே ஹரே! தாங்கள் மேன்மை பெற்று விளங்க வேண்டும். நான் செய்த பாக்கியமே தங்களைக் கண்களால் காணப் பெற்றேன். உலகங்களைப் படைக்கும் திறமையை எனக்கு விரைவில் அருள வேண்டுகிறேன். இவ்வாறு பிரம்மாவினால் வேண்டிக் கொள்ளப்பட்ட அனைத்து கல்யாண குணங்களையும் உடைய தாங்கள் என்னைக் காத்தருள வேண்டும். (7)

லப4ஸ்வ பு4வநத்ரய–ரசந–தா3க்ஷதாமக்ஷதாம்
க்3ருஹாண மதா3நுக்3ரஹம் குரு தபஶ்ச பூ4யோ விதே4 ।
ப4வத்வகி2லஸாத4நீ மயி ச ப4க்திரத்யுத்கடேத்–
யுதீ3ர்ய கி3ரமாத3தா4 முதி3தஸேதஸம் வேத4ஸம் ॥ 8 ॥

"பிரம்மதேவரே! மூவுலகங்களையும் படைப்பதில் குறைவற்ற திறமையை அடைவாயாக! எனது அருளையும் பெற்றுக் கொள். மறுபடியும் தவம் புரிவாயாக! அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுத்தற்குரிய தீவிரமான பக்தி உனக்கு உண்டாகட்டும்" என்று கூறி, பிரம்மதேவரை மகிழ்ச்சியடையச் செய்தீர்கள். (8)

ஶதம் க்ருததபாஸ்–தத: ஸ கலு தி3வ்யஸம்வத்ஸரா–
நவாப்ய ச தபோப3லம் மதிப3லம் ச பூர்வாதி4கம் ।
உதீ3க்ஷ்ய கில கம்பிதம் பயஸி பங்கஜம் வாயுநா
ப4வத்3ப3லவிஜ்ரும்பி4த: பவநபாத3ஸீ பீதவாந் ॥ 9 ॥

பிறகு, அந்த பிரம்மதேவர் தேவர்களுக்குரிய நூறு ஆண்டுகள் தவம் புரிந்தார். முன்பு இருந்ததைக் காட்டிலும் மிகுந்த தவவலிமையையும், அறிவாற்றலையும் பெற்று, பிரளய காலத்து நீரில் தாமரை மலர் காற்றில் அசையக் கண்டு தங்கள் வலிமையின் மிகுதியினால் அந்தக் காற்றையும், நீரையும் பருகினார். (9)

தவைவ க்ருபயா புந: ஸரஸிஜேந தேநைவ ஸ:
ப்ரகல்ப்ய பு4வநத்ரயீம் ப்ரவவ்ருதே ப்ரஜாநிர்மிதௌ ।
தத3வித4–க்ருபாப4ரோ கு3ருமருத்புராதீ4ஶ்வர
த்வமஸு பரிபாஹி மாம் கு3ருத3யோக்ஷிதீக்ஷிதை: ॥ 10 ॥

ஹே குருவாயூரப்பா! பிரம்மதேவர் தங்கள் அருளினால் அந்தத் தாமரைப் பூவைக் கொண்டே மூவுலகங்களையும் படைத்துப் பின் அதில் உயிர்களையும் படைக்கத் தொடங்கினார். அத்தகைய அருளோடு கூடிய தாங்கள், கருணை மிகுந்த தங்கள் கடைக்கண்களால் என்னை விரைவில் காத்தருள வேண்டும். (10)

❖❀❖❀❖

பத்தாவது தசகம்

படைப்பின் பல வகைகள்

வைகுண்ட$_{2}$ வர்தி$_{4}$தப$_{3}$லோ(அ)த$_{2}$ ப$_{4}$வத்ப்ரஸாத$_{3}$ா–
த$_{3}$ம்பே$_{4}$ாஜயோநிரஸ்ருஜத் கில ஜீவதே$_{4}$ஹாந் ।
ஸ்த$_{2}$ாஸ்நூநி பூ$_{4}$ருஹமயாநி தத$_{2}$ா திரஸ்சாம்
ஜாதிம் மநுஷ்யநிவஹாநபி தே$_{3}$வபே$_{4}$த$_{3}$ாந் ॥ 1 ॥

வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகுருவாயூரப்பா! தங்கள் அருளினால் மிக்க வலிமை பெற்ற பிரம்மதேவன் அதன்பின் நிலத்தினின்றும் தோன்றும் மரம், செடி, கொடி முதலிய தாவரங்களையும், அதேபோல் குறுக்கே வளரும் பசு, பறவை முதலிய விலங்குகளையும், மனிதர்களையும், பல்வகை தேவர்களையும், உயிர்களுக்குரிய உடல்களையும் படைத்தான். (1)

மித்$_{2}$யாக்$_{3}$ரஹா ஸ்மிமதி ராக$_{3}$விகோபபீ$_{4}$தி–
ரஜ்ஞாநவ்ருத்திமிதி பஞ்சவித$_{4}$ாம் ஸ ஸ்ருஷ்ட்வா ।
உத்$_{3}$தா$_{3}$ம–தாமஸபத$_{3}$ார்த$_{2}$வித$_{4}$ாந–தூ$_{3}$நஸ்–
தேநே த்வதீ$_{3}$யசரணஸ்மரணம் விஸ்ருத்$_{3}$த்$_{4}$யை ॥ 2 ॥

அந்த பிரம்மதேவர் அறிவு மயக்கம், 'யான்', 'எனது' என்கிற அஹங்கார மமகாரங்கள், ஆசை, கோபம், பயம் என்ற ஐந்து வகையான அஞ்ஞானச் செயல்களைத் தோற்றுவித்தார். பின் தமோ குணம் நிறைந்த பொருட்களைப் படைத்ததனால் பெரிதும் வருந்தி அந்த அறியாமையை விலக்கத் தங்கள் திருவடிகளைத் தியானித்தார். (2)

குறிப்பு:– ஆத்மாவைக் காட்டிலும் உலகை வேறாக நினைத்தல் 'மித்யாகிரகம்' (அறிவு மயக்கம்) எனப்படும். உடலையே 'நான்' – ஆத்மா என நினைத்தல் 'அஸ்மி மதி' (அஹங்காரம்) ஆகும். உலகியல் பொருட்களில் கொள்ளும் ஆசை 'ராகம்' (பற்று) ஆகும். தனது பொருள் முதலியவற்றை அபகரிப்பவனிடத்தில் வரும் பகைமை 'கோபம்' எனப்படும். தனது பொருட்கள் அழிந்துவிடுமே என எண்ணி வரும் துயரம் 'பயம்' எனப்படும். இவ்வைந்துமே ஜீவராசிகளிடத்தில் காணும் குறைபாடுகள்.

தாவத் ஸஸர்ஜ மநஸா ஸநகம் ஸநந்த$_{3}$ம்
பூ$_{4}$ய: ஸநாதநமுநிம் ச ஸநத்குமாரம் ।
தே ஸ்ருஷ்டிகர்மணி து தேந நியுஜ்யமாநாஸ்–
த்வத்பாத$_{3}$ப$_{4}$க்திரஸிகா ஜக்$_{3}$ருஹு$^{ர்}$ந வாணீம் ॥ 3 ॥

(தங்கள் திருவடிகளை எண்ணி மனம் தூய்மை அடைந்தபொழுது) பிரம்மதேவர் ஸநகர், ஸநந்தனர், ஸநாதனர், ஸநத்குமாரர் ஆகிய முனிவர்களை மனதால் தோற்றுவித்தார். அந்த பிரம்மதேவரால் படைப்புத் தொழிலில் ஏவப்பட்ட அவர்கள், தங்கள் திருவடிகளை அடைவதிலேயே மிகுந்த விருப்பம் உடையவர்களாக பிரம்மதேவர் கூறிய சொல்லை ஏற்கவில்லை. (3)

தாவத் ப்ரகோபமுதி$_{3}$தம் ப்ரதிருந்த$_{4}$தோ(அ)ஸ்ய
ப்$_{4}$ரூமத்$_{4}$யதோ(அ)ஜநி ம்ருடே$_{3}$ா ப$_{4}$வதே$_{3}$கதே$_{3}$ஷ: ।
நமாநி மே குரு பத$_{3}$ாநி ச ஹா விரிஞ்சேத்–
யாதெ$_{3}$ள ருரோத$_{3}$ கில தேந ஸ ருத்$_{3}$ரநாமா ॥ 4 ॥

அவ்விதம் ஸநகாதிகள் மறுத்தபொழுது அந்த பிரம்மதேவர் தனக்கு உண்டான கடுஞ்சினத்தை மனதிலேயே அடக்கிக் கொண்டார். அப்பொழுது அவர் புருவங்களின் நடுவினின்றும் தங்களுடைய ஓர் அம்சமான 'மிருடர்' என்கிற சங்கரர் தோன்றினார். அவர், 'பிரம்மதேவரே! எனக்குப் பெயர்களையும், இடங்களையும் செய்ய வேண்டும்' என்று முதலில் வேண்டி அழுதார். அதனால் அவர் 'ருத்ரர்' என்ற பெயர் அடைந்தார் அல்லவா? (4)

ஏகாத³ஶாஹ்வயதயா ச விபி⁴ந்நரூபம்
ருத்³ரம் வித⁴ாய த³யிதா வநிதாஸ்ச த³த்வா ।
தாவந்த்யத³த்த ச பத³ாநி ப⁴வத்ப்ரணுந்ந:
ப்ராஹ ப்ரஜாவிரசநாய ச ஸாத³ரம் தம் ॥ 5 ॥

தங்களால் ஏவப்பட்ட பிரம்மதேவர் அந்த ருத்ரருக்குப் பதினொரு பெயர்களையும், அதற்குரிய வெவ்வேறு உருவங்களையும் கொடுத்து விருப்பமான மனைவியர்களையும், உரிய இடங்களையும் கொடுத்தார். பிறகு உயிர்களைப் படைக்குமாறு அன்புடன் கூறினார். (5)

ருத்³ராபி⁴ஸ்ருஷ்ட–ப⁴யத³ாக்ருதி–ருத்³ரஸங்க⁴–
ஸம்பூர்யமாண–பு⁴வநத்ரய–பீ⁴தஸேதா: ।
மா மா ப்ரஜா: ஸ்ருஜ தபஶ்சர மங்க³லாயேத்–
யாசஷ்ட தம் கமலபூ⁴ர்ப⁴வதீ³ரிதாத்மா ॥ 6 ॥

ருத்ரரால் படைக்கப்பட்ட ருத்ர கணங்கள், அச்சத்தைத் தரும் வடிவோடு மூவுலகங்களிலும் நிறைந்து நின்றன. இதைக் கண்ட பிரம்மதேவர் மிகவும் அஞ்சியவராகத் தங்களால் ஏவப்பட்டு 'வேண்டாம், உயிர்களைப் படைக்க வேண்டாம், உலக நன்மைக்காகத் தவத்தைச் செய்' என்று அந்த ருத்ரரிடம் கூறினார். (6)

தஸ்யாத² ஸர்க்³ரஸிகஸ்ய மரீசிரத்ரிஸ்–
தத்ராங்கி³ரா: க்ரதுமுநி: புலஹ: புலஸ்த்ய: ।
அங்க³ாத³ஜாயத ப்⁴ருகு³ஶ்ச வஸிஷ்ட²த³க்ஷௌ
ஶ்ரீநாரத³ஶ்ச ப⁴க³வந் ப⁴வதா³ங்க்ரிதா³ஸ: ॥ 7 ॥

ருத்ரன் தவம்புரியச் சென்ற பிறகு பிரம்மதேவர் படைப்புத் தொழிலில் ஈடுபட்டார். அவர் உடலிலிருந்து மரீசி, அத்ரி, அங்கிரஸ், க்ரது, புலஹர், புலஸ்தியர், ப்ருகு, வஸிஷ்டர், தக்ஷர் மற்றும் தங்கள் திருவடிகளுக்கே அடிமை கொண்ட பகவான் ஸ்ரீநாரதர் ஆகியோர் பிறந்தார்கள். (7)

த³ர்மாதி³காநபி⁴ஸ்ருஜந்நத² கர்த³மம் ச
வாணீம் வித⁴ாய விதி⁴ரங்க³ஜ–ஸங்குலோऽபூ⁴த் ।
த்வத்³பே⁴தி³தை: ஸநகத³க்ஷமுகை²ஸ்தநூஜை–
ருத்³பே⁴தி³தப்ரத²ம விராம தமோ விமுஞ்சந் ॥ 8 ॥

(அதன்பின்) பிரம்மதேவர், தர்மதேவன் முதலியவர்களையும், கர்தமரையும் படைத்துவிட்டு வாணியைப் படைத்தபோது, அவளிடம் காமவிகாரம் அடைந்தார். தங்களால் தூண்டப்பட்ட ஸநகர், தக்ஷன் முதலிய புத்திரர்களால் அறிவுறுத்தப்பட்டு (அந்த பிரம்மதேவர்) அஞ்ஞானம் விலகி காமத்திலிருந்து ஒழிவடைந்தார். (8)

வேத₃ாந் புராணநிவஹாநபி ஸர்வவித்₃யா:
குர்வந் நிஜாநநக₃ணாச்சதுராநநோऽஸௌ ।
புத்ரேஷு தேஷு விநித₄ாய ஸ ஸர்க₃வ்ருத்₃தி₄–
மப்ராப்நுவம்ஸ்தவ பத₃ாம்பு₃ஜ மாஸ்ரிதோऽபூ₄த் ॥ 9 ॥

(பிறகு) அந்த நான்முகனான பிரம்மா தனது நான்கு முகங்களிலிருந்து வேதங்களையும், புராணங்களையும் மற்றும் எல்லா வித்யைகளையும் தோற்றுவித்து, அவற்றைத் தன் புத்திரர்களிடம் ஒப்புவித்தார். மேலும் படைப்பு வளர்ச்சியை அடையாததால் தங்கள் திருவடித் தாமரை மலர்களில் அடைக்கலம் புகுந்தார். (9)

ஜ்ஞாநந்நுபாயமத₂ தே₂ஹமஜோ விப₃ஜ்ய
ஸ்த்ரீபும்ஸப₄ாவ–மப₃ஜந்–மநுதத்₃–வதூ₄ப்₄யாம் ।
தாப்₄யாம் ச மாநுஷகுலாநி விவர்த₄யம்ஸ்–த்வம்
கே₃விந்த₃ *மாருதபுரேऽ நிருந்தி₄ ரோகா₃ந் ॥ 10 ॥

அதன்பின் உயிர்களின் வளர்ச்சிக்குரிய வழியை அறிந்த பிரம்மதேவர் தன் உடலை இரண்டாகப் பிரித்து மனு, சதரூபை என்ற ஆண், பெண் உருவங்களை அடைந்தார். ஹே குருவாயூரப்பா! கோவிந்தா! அந்த மனு, சதரூபை இவர்களைக் கொண்டு மனித வர்க்கங்களைப் பெருக்கி வரும் தாங்கள் எனது நோய்களைப் போக்கியருள வேண்டும். (10)

பதினோராவது தசகம்

ஸநகாதிகள் வைகுண்டம் செல்லுதல்

க்ரமேண ஸர்கே₃ பரிவர்த₄மாநே கத₃ாபி தி₃வ்யா: ஸநகாத₃யஸ்தே ।
ப₄வத்₃விலோகாய விகுண்ட₂லோகம் ப்ரபேதி₃ரே மாருதமந்தி₃ரேऽ ॥ 1 ॥

ஹே குருவாயூரப்பா! உயிர்களின் படைப்பு படிப்படியாக வளர்ந்து வருகையில் ஒரு சமயம் தெய்வசக்தி வாய்ந்த ஸநகர் முதலிய முனிவர்கள் தங்களை தரிசிக்க வைகுண்ட லோகத்திற்குச் சென்றார்கள். (1)

மநோஜ்ஞ நைஸ்ரேயஸ காநநாத்₃யை ரநேகவாபீ மணிமந்தி₃ரைஸ்ச ।
அநோபமம் தம் ப₄வதோ நிகேதம் முநீஸ்வரா: ப்ராபுரதீதகக்ஷ்யா: ॥ 2 ॥

அந்த முனிவர்கள் ஆறு கோட்டை வாயில்களைக் கடந்து மனதிற்குப் பேரின்பத்தை அளிக்கும் நைச்ரேயஸமென்ற நந்தவனம், பல குளங்கள், மணிமயமான மாளிகைகள் முதலியவற்றுடன் ஒப்புயர்வற்றதாய் விளங்கும் தங்களது இருப்பிடத்தை அடைந்தார்கள். (2)

ப₄வத்₃–தி₃த்₃ருக்ஷூந் ப₄வநம் விவிக்ஷூந்
த்₃வா:ஸ்தௌ₂ ஜயஸ்தாந் விஜயோऽப்யருந்த₄ாம் ।
தேஷாம் ச சித்தே பத₃ாப கோப:
ஸர்வம் ப₄வத்ப்ரேரணயைவ பூ₄மந் ॥ 3 ॥

---

* பாடபேதம் மாருதபுராதி₄ப ருந்தி₄

தங்களை தரிசிக்கும் விருப்பத்தால் தங்கள் மாளிகையில் புக முயன்ற அம்முனிவர்களை, வாயிற்காப்பாளர்களான ஜயனும், விஜயனும் தடுத்தனர். (அதனால்) அம்முனிவர்களின் மனதில் சினம் எழுந்தது. ஹே குருவாயூரப்பா! எங்கும் நிறைந்த பரம்பொருளே! (இவை) எல்லாம் தங்கள் திருவுள்ளப்படிதானே நிகழ்ந்தன. (3)

வைகுண்ட₂லோகாநுசிதப்ரசேஷ்டெள
கஷ்டெள யுவாம் தை₃த்யக₃திம் ப₄ஜேதம் ।
இதி ப்ரஸ்ப்தெள ப₄வத₃ஸ்ரயெள தெள
ஹரிஸ்ம்ருதிர்நோ:ஸ்த்விதி நேமதுஸ்தாந் ॥ 4 ॥

'வைகுண்டலோகத்திற்குப் பொருந்தாத வகையில் செயல்புரியும் தீயவர்களான நீங்கள் அஸுரப் பிறவியை அடையக் கடவீர்கள்' என்று (அம்முனிவர்கள்) சபித்தனர். (உடனே) தங்களையே அடைக்கலம் புகுந்த கிங்கரர்களான அவ்விருவரும் 'எங்களுக்கு ஸ்ரீமந் நாராயணனின் நினைவே இருக்க அருள்புரிய வேண்டும்' என்று அம்முனிவர்களை வேண்டி வணங்கினார்கள். (4)

தத்தே₂தத்₃ஞ்ஞாய ப₄வாநவாப்த: ஸஹைவ லக்ஷ்ம்யா ப₃ஹிரம்பு₃ஜாக்ஷ ।
க₂கே₃ஸ்வராம்ஸார்பித–சாருப₃ாஹு–ராநந்த்₃யம்ஸ்–தாநபி₄ராமமூர்த்யா ॥ 5 ॥

செந்தாமரைக் கண்ணனே! தாங்கள் இச்செய்தியை அறிந்து லக்ஷ்மி சமேதராகப் பெரிய திருவடியான கருடனின் அழகிய தோளில் கைகளை வைத்துக் கொண்டு மனதைக் கவரும் அழகிய வடிவினராய் அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்துக் கொண்டு வெளிப்போந்தீர்கள் அல்லவா! (5

ப்ரஸாத்₃ய கீர்பி₄: ஸ்துவதோ முநீந்த்₃ரா–நநந்ய–நாதா₂வத₂ பார்ஷதெ₃ள தெள ।
ஸம்ரம்ப₄யோகே₃ந ப₄வைஸ்த்ரிபி₄ர்மா–முபேதமித்யாத்த–க்ருபம் ந்யகா₃தீ₃: ॥ 6 ॥

அப்பொழுது தாங்கள், தங்களைத் துதிக்கின்ற முனிசிரேஷ்டர்களை அன்பான வார்த்தைகளால் அமைதியுறச் செய்து வேறு எவரையும் தம் தலைவனாக ஏற்காத தொண்டர்களான அந்த பார்ஷதர்களை நோக்கி, ''நீங்கள் இருவரும் ஸம்ரம்பயோகம் என்கிற 'பகைத்தல்' யோகத்தைச் செய்து மூன்று பிறவிகள் எடுத்துக் கழிந்த பிறகு மீண்டும் என்னை வந்து அடையுங்கள்'' என்று கருணையுடன் கூறினீர்கள் அல்லவா! (6

குறிப்பு:– ஸம்ரம்ப₄யோக₃: = க்ரோத₃ாவேஸேந ஸம்வ்ருத்₃தே₄ா ய:
ஸமாதி₄ரேகாக்₃ரதா தேநாநுப₃த்₃தே₄ா த்₃ருடே₄ க்ருதோ யோக₃:

'அளவு கடந்த சினத்தினால் பெருகிய பகைமை என்கிற நிலை இறுகி உண்டாகும் நிலையே ஒரு யோகம்.' காமத்தால் கோபியரும், அச்சத்தால் கம்சனும், பகைமையால் சிசுபாலன் முதலியோர்களும் உறவின் முறையால் விருஷ்ணிகளும், நட்பின் முறையில் பாண்டவர்களும், பக்தி செலுத்துவதால் நாரத முதலிய முனிவர்களும் பகவானை அடைந்தனர். ஆகவே எவ்வகையிலாவது பகவானிடம் மன ஈடுபடுவதே போதும் என்பது நமது வைதீக மதத்தின் பரந்த நோக்கம். இங்கு பகைமையே யோகமாவ காண்க. ஜய–விஜயர்கள் ஆத்மாவிற்கு அழிவை விளைவிக்கும் சினத்திற்கு ஆட்பட்டு ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபு என்று அஸுரப் பிறவியையும், காமத்திற்கு ஆட்பட்டு இராவணன், கும்பகர்ணன் என அரக்கப் பிறவியையும், லோபத்திற்கு ஆட்பட்டு சிசுபாலன், தந்தவக்த்ரன் என்று மனிதப் பிறவியையு அடைந்தனர் (ஸ்ரீமத்பாகவதம் 3–16–26).

யுத்₃த₄ கௌதுகம் ஸம்பாத₃நீயமிதி ப₄க₃வதைவ வ்யவஸிதம் ।

அத₂: ஸர்வம் ஸங்க₃ச்சதே ॥ ததி₃த₃முக்தம் ஸாபோ மயைவ நிமித இதி ॥

பகவான் தமது பார்ஷதர்களையே தமக்குப் பகைவர்களாகக் கொண்டு உலகில் ஒரு நாடகம் நடிக்க விரும்பினார் போலும். வேறு எவ்விதத்திலும் லைகுண்டவாசிகளான ஜய–விஜயர்களின் வீழ்ச்சி பொருந்தாது – என்று ஸ்ரீதரர் எழுதிய விளக்கம் காண்க.

த்வதீ₃யப்₄ருத்யாவத₃ꣳ காஸ்யபாத்தௌ ஸுராரிவீரா–வுதி₃தௌ தி₃தௌ த்₃வௌ ।
ஸந்த்₄யாஸமுத்பாத₃ந–கஷ்டசேஷ்டௌ யமௌ ச லோகஸ்ய யமாவிவாந்யௌ ॥ 7 ॥

பிறகு தங்களது தொண்டர்களான அவர்கள் இருவரும் காசியப மஹரிஷிக்கு திதி தேவியிடம் புத்திரர்களாக அஸுர வீரர்களாக உதித்தார்கள். மாலை காலத்தில் பண்ணப்பட்ட தவறுதலால் தீய செயல்களைப் புரிபவர்களாக இரட்டையர்களான அவர்கள் உலகிற்கு வேறு இரண்டு யமன்களைப்போல் இருந்தனர். (7)

ஹிரண்யபூர்வ: கமபி: கிலைக: பரோ ஹிரண்யாக்ஷ இதி ப்ரதீத: ।
உபெ₄ள ப₄வந்நாத₂–மஸோஷலோகம் ருஷா ந்யருந்த₄ாம் நிஜவாஸநாந்தெ₃ள ॥ 8 ॥

அவர்களில் ஒருவன் ஹிரண்யகசிபு என்றும், மற்றவன் ஹிரண்யாக்ஷன் என்றும் பிரஸித்தி அடைந்தார்கள். அவர்கள் இருவரும் தங்கள் அஸுரத் தன்மையினால் அறிவிழந்து தங்களையே இறைவனாகக் கொண்ட அனைத்துலகங்களையும் சினங்கொண்டு துன்புறுத்தினார்கள். (8)

தயோர்–ஹிரண்யாக்ஷ–மஹாஸுரேந்த்₃ரோ ரணாய தா₄வந்–நநவாப்தவைரீ ।
ப₄வத்ப்ரியாம் க்ஷ்மாம் ஸலிலே நிமஜ்ய சசார கா₃ர்வாத்₃விநதா₃ந் கா₃தா₃வாந் ॥ 9 ॥

அவ்விருவர்களிலும் ஹிரண்யாக்ஷன் என்கிற பேரரக்கன் போர்புரிய பல இடங்களிலும் தேடி ஓடித் திரிந்தும், தனக்கு சமமான பகைவன் ஒருவனையும் காணாமல் உங்கள் மனைவியான பூமிதேவியைக் கவர்ந்தெடுத்து நீரில் மூழ்க்கிவிட்டு, கதாயுதத்தைக் கையில் ஏந்தி செருக்கினால் சத்தம் செய்து கொண்டு சுற்றித் திரிந்தான். (9)

ததோ ஜலேஶாத் ஸத்₃ருஶம் ப₄வந்தம் நிஶம்ய ப₃ப்₄ராம க₃வேஷயம்ஸ்த்வாம் ।
ப₄க்தைகத₃₃ருʼஶ்ய: ஸ க்ருபாநிதே₄ த்வம் நிருந்தி₄ ரோக₃ாந் மருத₃₃லயேஶ ॥ 10 ॥

அப்பொழுது வருணதேவன் வாயிலாகத் தாங்கள்தான் அவனுடைய பலத்திற்கு நிகரானவர் என்று கேட்டறிந்து தங்களைத் தேடிச் சுற்றித் திரிந்தான். கருணைக்கடலான குருவாயூரப்பா! பக்தனால் மட்டும் காண்பதற்குரிய தாங்கள் என் நோய்களைத் தீர்த்தருள வேண்டும். (10)

❀❀❀❀❀

பன்னிரண்டாவது தசகம்

ஸ்ரீவராஹாவதாரம்

ஸ்வாயம்பு₄வோ மநுரதே₄ா ஜநஸர்க₃ஶீலோ
த்₃ருஷ்ட்வா மஹீமஸமயே ஸலிலே நிமக்₃நாம் ।
ஸ்ரஷ்டாரமாப ஶரணம் ப₄வத₃ங்க₄ரிஸேவா–
துஷ்டாஶயம் முநிஜநை: ஸஹ ஸத்யலோகே ॥ 1 ॥

பிரம்மதேவரின் கட்டளைப்படிப் பிரஜைகளைப் படைக்க முற்பட்ட ஸ்வாயம்புவ மனு அகாவத்தில் பூமி ஜலத்தில் மூழ்கியது கண்டு முனிவர்களுடன் சத்தியலோகம் சென்று, தங்கள் திருவடித் தியானத்தில் மகிழும் மனம் கொண்ட பிரம்மதேவரைச் சரணடைந்தார். (1)

கஷ்டம் ப்ரஜா: ஸ்ருஜதி மய்யவதீ நிமக்₃நா
ஸ்த₂ானம் ஸரோஜப₄வ கல்பய தத் ப்ரஜானாம் ।
இத்யேவமேஷ கதி₂தோ மநுநா ஸ்வயம்பூ₄–
ரம்பே₄ருஹாக்ஷ தவ பாத₃யுக₃ம் வ்யசிந்தீத் ॥ 2 ॥

'பிரம்மதேவரே! நான் மக்களைப் படைக்கத் தொடங்கியபொழுது பூமி ஜலத்தில் மூழ்கிவிட்டதே! அந்தோ! மக்கள் தங்குவதற்கு ஓரிடத்தை அருளவேண்டும்' என்று மனுவால் வேண்டிக் கொள்ளப்பட்ட பிரம்மதேவர், 'தாமரைக் கண்ணா! தங்கள் திருவடித் தாமரைகளையே தியானித்தாரல்லவா!' (2)

ஹா ஹா விபே₄ா ஜலமஹம் ந்யபிப₄ம் புரஸ்தா–
தத்₃யாபி மஜ்ஜதி மஹீ கிமஹம் கரோமி ।
இத்த₂ம் த்வத₃ங்க்₄ரியுக₃ளம் ஶரணம் யதோ₃ஸ்ய
நாஸாபுடாத் ஸமப₄வ: ஶிஶுகோலரூபீ ॥ 3 ॥

''எங்கும் நிறைந்திருக்கும் ஹே பிரபுவே! இது வியத்தற்கும், வருந்தற்கும் ஆன செயலாகவல்லவா உள்ளது. நான் முன்பே பிரளய ஜலத்தைப் பருகிவிட்டேனே! ஆயினும் இப்பொழுது பூமி நீரிலே மூழ்கிப் போகிறதே! நான் என்ன செய்வேன்?'' என்று கூறித் தங்களுடைய இரு திருவடிகளிலும் சரணம் அடைந்த அந்த பிரம்மதேவருடைய மூக்குத் துவாரத்திலிருந்து தாங்கள் பன்றிக்குட்டியின் உருக்கொண்டு தோன்றினீர்கள் அல்லவா! (3)

குறிப்பு:– பிரம்மதேவரின் பகலான இந்த கல்பத்தில் பகவானுடைய அவதாரம் வெள்ளைப் பன்றி உருவில் தோன்றியதால் இக் கல்பத்திற்கு ஸ்வேத வராஹ கல்பம் என்ற பெயர் ஏற்பட்டது.

அங்கு₃ஷ்ட₂மாத்ரவபு–ருத்பதித: புரஸ்தாத்₃
பூ₄யோ₃த₂ கும்பி₄ஸத்₃ருஶ: ஸமஜ்ஜம்ப₄தா₂ஸ்–த்வம் ।
அப்₄ரே ததா₂வித₄முதீ₃க்ஷ்ய ப₄வந்தமுச்சை–
விஸ்மேரதாம் விதி₄ரகா₃த் ஸஹ ஸஶுபி₃: ஸ்வை: ॥ 4 ॥

முதலில் தாங்கள் கட்டைவிரல் அளவுள்ள சரீரமுடையவராகத் தோன்றினீர்கள். பிறகு மேலும் யானைக்கு ஒப்பாக வளர்ந்தீர்கள். அப்படி வானில் ஓங்கி உயர்ந்து இருக்கின்ற தங்களைப் பார்த்த பிரம்மதேவர் தன் மக்களோடு மிக்க ஆச்சரியமடைந்தார். (4)

கோ₃ஸாவசிந்த்யமஹிமா கிடிருத்தி₂தோ மே
நாஸாபுடாத் கிமு ப₄வேத₃ஜிதஸ்ய மாயா ।
இத்த₂ம் விசிந்தயதி த₄ாதரி ஶைலமாத்ர:
ஸ்த₃ூயோ ப₄வந் கில ஜக₃ர்ஜ்ஜித₂ கே₂ாரகே₂ாரம் ॥ 5 ॥

'என்னுடைய மூக்குத் துவாரத்திலிருந்து தோன்றிய, மனத்திற்கெட்டாத பெருமையுடைய, இந்தப் பன்றி யாராக இருக்க முடியும்? எவராலும் வெல்வதற்கு இயலாத மஹாவிஷ்ணுவின்

மாயையாக இருக்குமோ?' என்று பிரம்மதேவர் யோசித்துக் கொண்டிருக்கையில் தாங்கள் மலைபோல் வளர்ந்து மிகவும் அச்சம் உண்டாகும்படி கர்ஜித்தீர்கள் அல்லவா? (5)

தம் தே நிநாத³முபகர்ண்ய ஜநஸ்தபஸ்த²ா:
ஸத்யஸ்தி³தாஸ்ச முநயோ நுநுவுர்ப⁴வந்தம் ।
தத்ஸ்தோத்ர–ஹர்ஷுலமநா: பரிணத்³ய பூ⁴ய–
ஸ்தோயாஸயம் விபுலமூர்திரவாதரஸ்–த்வம் ॥ 6 ॥

தங்களுடைய அந்த கர்ஜனை ஒலியைக் கேட்டு ஜனோலோகத்திலும், தபோலோகத்திலும், சத்தியலோகத்திலும் இருக்கக்கூடிய முனிவர்கள் தங்களைத் துதித்தார்கள். அவர்களுடைய தோத்திரத்தால் மனம் மகிழ்ந்த தாங்கள் மேலும் வளர்ந்த திருமேனியோடு உறுமிக் கொண்டு கடலுக்குள் இறங்கினீர்கள் அல்லவா! (6)

ஊர்த்⁴வப்ரஸாரி–பரிதூ⁴ம்ர–விதூ⁴தரோமா
ப்ரோத்க்ஷிப்தவாலதி⁴–ரவாங்முக²–கே²ரகே²ண: ।
தூர்ணப்ரதீ³ர்ணஜலத³: பரிகூ²ர்ணத³ஷ்ணா
ஸ்தோத்ரூந் முநீஞ்–ஜிஜிரியந்–நவதோரித³த்வம் ॥ 7 ॥

அப்பொழுது தங்கள் உடலின் புகைநிறம் கொண்ட உரோமங்கள் குத்திட்டு நின்றன. வால் மேலே உயர்ந்து நின்றது. அச்சத்தை விளைவிக்கும் மூக்கு கீழ் நோக்கி இருந்தது. (தங்கள் உருவம்) மேகங்களைச் சிதறடித்தது. கண்கள் இங்குமங்கும் சுழன்றன. அத்தகைய தாங்கள் தங்களைத் துதிக்கும் முனிவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்துகொண்டு நீரினுள் இறங்கினீர்கள். (7)

அந்தர்ஜலம் த³தநுஸங்குலநக்ரசக்ரம்
ப்⁴ராம்யத்–திமிங்கி³லகுலம் கலுஷோர்மிமாலம் ।
ஆவிச்ய பீ⁴ஷணரவேண ரஸாதலஸ்த²ா–
நாகம்பயந் வஸுமதீமக³வேஷயஸ்த்வம் ॥ 8 ॥

முதலைக் கூட்டங்கள் பயந்து ஓடவும், திமிங்கிலங்களின் கூட்டம் சுற்றிச் சுழன்று திரிந்து வரவும், அலைகள் மோதவும் கொந்தளித்த ஜலத்தில் மூழ்கி பயங்கரமான இரைச்சலால் (கர்ஜனையால்) ரஸாதலத்தில் இருப்பவர்களை நடுங்கச் செய்து கொண்டு தாங்கள் பூமிதேவியைத் தேடினீர்கள் அல்லவா! (8)

த்³ருஷ்ட்வாத² தை³த்யஹ்ருதகேந ரஸாதலாந்தே
ஸம்வேஶிதாம் ஜ்ஞடிதி கூடகிடிர்விபே⁴ா த்வம் ।
ஆபாதுகாநவிக³ணய்ய ஸுராரிகே²டாந்
த³ம்ஷ்ட்ராங்குரேண வஸுத³ாமத³த்³ா: ஸலீலம் ॥ 9 ॥

ஹே பிரபுவே! கொடிய அஸுரனான ஹிரண்யாக்ஷனால் பாதாளத்தில் வைக்கப்பட்டிருந்த பூமிதேவியைக் கண்டு, மாயா வராஹ வடிவினைக் கொண்ட தாங்கள் எதிர்த்து வந்த அஸுரப்பதர்களைப் பொருட்படுத்தாமல் விரைவிலேயே கோரபற்களின் நுனியில் விளையாட்டாகவே பூமி பிராட்டியைத் தூக்கிக் கொண்டீர்கள் அல்லவா! (9)

அப்யுத்தரந்நதர தராம் தமஸாக்ரலக்ந–
முஸ்தாங்குராங்கித இவாதிகபீவராத்மா ।
உத்தூத–கோரஸலிலாஜ்–ஜலதேருதஞ்சந்
க்ரீடாவராஹவபுரீஸ்வர பாஹி ரோகாத் ॥ 10 ॥

விளையாட்டாகப் பன்றி உருவெடுத்த இறைவனே! அதன்பிறகு கோரப் பற்களின் நுனியில் ஒட்டிக் கொண்ட கோரைப்புல் போன்ற பூமியை எடுத்துக் கொண்டு மிகவும் பெருத்த உடலுடன் கொந்தளிக்கின்ற பயங்கரமான சமுத்திர ஜலத்திலிருந்து வெளிப்போந்த தாங்கள், என்னை நோயினின்றும் காத்தருள வேண்டும். (10)



பதின்மூன்றாவது தசகம்

ஹிரண்யாக்ஷன் வதம்

ஹிரண்யாக்ஷம் தாவத்வரத பவதந்வேஷணபரம்
சரந்தம் ஸாம்வர்தே பயஸி நிஜஜங்காபரிமிதே ।
பவத்பக்தோ கத்வா கபடபடுதீர்–நாரதமுநி:
ஸநைரூசே நந்தந் தநுஜமபி நிந்தம்ஸ்தவ பலம் ॥ 1 ॥

வேண்டிய வரங்களைக் கொடுக்கும் ஹே குருவாயூரப்பா! அப்பொழுது தனது முழங்கால் அளவுள்ள பிரளய ஜலத்தில் தங்களைத் தேடித் திரிந்து கொண்டிருந்த ஹிரண்யாக்ஷனிடம் தங்கள் பக்தரும், வஞ்சனையாக நடிப்பதில் திறமைமிக்கவருமான நாரத முனிவர் சென்று உங்களுடைய பலத்தை இகழ்ந்து அவ்வஸுரனைப் போற்றிப் புகழ்ந்து மெதுவாக (அவனிடம் பின்வருமாறு) கூறினார். (1)

ஸ மாயாவீ விஷ்ணுர்ஹரதி பவதீயாம் வஸுமதீம்
ப்ரபோ கஷ்டம் கஷ்டம் கிமிதமிதி தேநாபிகதித: ।
நதந் க்வாஸௌ க்வாஸாவிதி ஸ முநிநா தர்ஶிதபதோ
பவந்தம் ஸம்ப்ராபத்–தாரணிதரமுத்யந்த–முதகாத் ॥ 2 ॥

(திறங்கொண்ட அரக்கர் தலைவனே!) 'மாயாவியான அந்த மஹாவிஷ்ணு உம்முடைய பூமியைக் கவர்ந்து கொண்டு செல்கிறார். இது என்ன கொடுமை?' என்று நாரதரால் கூறப்பெற்ற அந்த ஹிரண்யாக்ஷன், 'எங்கே அந்த விஷ்ணு? எங்கே அந்த விஷ்ணு?' என்று கத்திக் கொண்டு அந்த முனிவரால் வழிகாட்டப்பட்டு, நீரினின்றும் பூமிதேவியை எடுத்துக் கொண்டு வெளிக்கிளம்பும் தங்களை வந்தடைந்தான். (2)

அஹோ ஆரண்யோऽயம் ம்ருக இதி ஹஸந்தம் பஹுதரை–
ருருக்தைர்–வித்யந்தம் திதிஸுத–மவஜ்ஞாய பக்வந் ।
மஹீம் த்ருஷ்ட்வா தம்ஷ்ட்ராஸிரஸி சகிதாம் ஸ்வேந மஹஸா
பயோதாவாதாய ப்ரஸப–முதயுந்தா ம்ருதவிதௌள ॥ 3 ॥

பகவானே! குருவாயூரப்பா! 'இது ஒரு காட்டுவிலங்கல்லவா?' என்று கூறி, எள்ளி நகையாடி, பற்பல கொடிய சொற்களால் குத்துகின்ற அவ்வஸுரனைப் பொருட்படுத்தாமல்

தாங்கள் தங்கள் கோரைப் பல்லின் நுனியில் பூதேவி நடுங்கி நிற்பதைக் கண்டு தங்களது யோக சக்தியால் அவளை சமுத்திரத்தில் நிலையாக நிற்கச் செய்து (பின்) கடுமையாகப் போர் புரிவதில் ஈடுபட்டீர்கள் அல்லவா! (3)

**கதா³பாணௌ தை³த்யே த்வமபி ஹி சக்ரு²ஹீதோந்நதக³தே³
நியுத்³தே⁴ந சக்ரீ³ந் க⁴டக⁴ட ரவோத்³கு⁴ஷ்டவியதா ।
ரணாலோகௌத்ஸுக்யாந்–மிலதி ஸுரஸங்கே² த்³ருதமமும்
நிருந்த்⁴யா: ஸந்த்⁴யாத: ப்ரத²மமிதி தா²த்ரா ஜகத்³தி³ஷே ॥ 4 ॥**

அவ்வஸுரன் கதாபாணியாக இருந்ததால் தாங்களும் கதையைக் கையில் ஏந்திப் போர் செய்து விளையாடுகையில் 'கடகட' என்ற சத்தம் ஆகாயத்தில் எழுந்தது. (அப்பொழுது) போரைப் பார்க்க விரும்பி தேவர்கள் ஒன்று சேர்ந்து வந்தனர். அதுசமயம் பிரம்மதேவர் 'சந்தியா காலத்திற்கு முன்பே விரைவில் இவனைக் கொல்ல வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார் அல்லவா! (4)

**க³தே³ஷ்வமர்தே³ தஸ்மிம்ஸ்தவ கி²லு கதா³யாம் தி³திபு⁴வோ
கதா³கா⁴தாத்³பூ⁴மௌ ஜடிதி பதிதாயாமஹஹ பே⁴: ।
ம்ருது³ஸ்மேராஸ்யஸ்–த்வம் த³நுஜகுல–நிர்மூலநசணம்
மஹாசக்ரம் ஸ்ம்ருத்வா கரபு⁴வி தத³தா⁴நோ ருருசிஷே ॥ 5 ॥**

அந்த கதா யுத்தத்தில் அவ்வஸுரனுடைய கதையால் தாக்கப்பட்ட தங்கள் கதை சட்டென்று பூமியில் விழவே ஈசுவரா! தாங்கள் புன்முறுவல் பூத்த முகத்துடன் அஸுர குலத்தை வேரறுக்கும் சுதர்சன சக்கரத்தை நினைத்து (அதைக்) கையிலேந்தி விளங்கினீர்கள் அல்லவா! ஆச்சரியம்! ஆச்சரியம்!! (5)

**தத: ஸுஶ்லம் காலப்ரதிமருஷி தை³த்யே விஸ்ருஜதி
த்வயி சி²ந்த³த்யேநத் கரகலித–சக்ரப்ரஹரணாத் ।
ஸமாருஷ்டோ முஷ்ட்யா ஸ கி²லு விதுத³ம்ஸ்த்வாம் ஸமதநோத்
கு³லந்மாயே மாயாஸ்த்வயி கில ஜகா³ந்மோஹநகரீ: ॥ 6 ॥**

அதன் பிறகு பிரளய கால ருத்திரனுக்கொப்பாகக் கோபம் கொண்ட அந்த அஸுரன் சூலாயுதத்தை எறியவே, தாங்கள் தங்கள் கையில் ஏந்தியிருந்த சக்கராயுதத்தினால் தாக்கி, அந்தச் சூலாயுதத்தை முறித்தீர்கள். (அப்பொழுது) அந்த அஸுரனும் பெருஞ்சினம் கொண்டு கைமுட்டியால் தங்களைத் தாக்கித் துன்புறுத்தினான். (மேலும்) மாயையைக் கடந்த தங்களிடத்தில் உலகை மயக்கும் மாயைகளை ஏவினான் அல்லவா! (6)

**ப⁴வச்சக்ர–ஜ்யோதிஷ்கணலவ–நிபாதேந விது⁴தே
ததோ மாயாசக்ரே விதத–க⁴நரோஷாந்த⁴மநஸம் ।
கி³ரிஷ்டாபி²ர்–முஷ்டிப்ரஹ்ருதிபி⁴–ரபி⁴க்⁴நந்தமஸுரம்
கராக்ரே²ண ஸ்வேந ஶ்ரவணபத²மூலே நிரவதீ⁴: ॥ 7 ॥**

பிறகு, தங்களுடைய சுதர்சன சக்கரத்தினின்றும் எழுந்த தீயின் சிறு பொறியால் அஸுரனுடைய மாயைக் கூட்டம் அழிந்தபோது, அவ்வஸுரன் கடுஞ்சினத்தால் செய்வதறியாத மனதுடையவனாய் கைமுட்டிகளால் தங்களை மிகக் கடுமையாகத் தாக்கினான். அப்படித்

தாக்குகின்ற ஹிரண்யாக்ஷனைத் தங்கள் கைநுனியால் காதடியில் (கன்னத்தில்) தாக்கிக் கொன்றீர்கள் அல்லவா! (7)

குறிப்பு:– இங்கு 'ஸ்வபாதாங்குஷ்டேந ஶ்ரவணபதமூலே' என்று ஒரு பாடம் காண்கிறது. இந்த பாடத்தை பாலபோதினீ வியாக்கியான ஆசிரியர் ஸ்ரீகிருஷ்ணவாரியர் அவர்கள் கொண்டுள்ளார். ஆனால் ஸ்ரீமத்பாகவதம் 3–19–25ல்,

தம் முஷ்டிபி₁ர்விநிக்₂நந்தம் வஜ்ரஸாரைரதே₃ரக்ஷஜ: ।
கரேண கர்ணமூலேऽஹந் யத₃ா த்வாஷ்ட்ரம் மருத்பதி: ॥

என்று கையினாலேயே அறைந்து கொன்றதாக உள்ளது காண்க.

மஹாகாய: ஸோऽயம் தவ கரஸரோஜ–ப்ரமதி₂தோ
க₃ளத்₃ரக்தோ வக்த்ராத₃பதத்₃ருஷிபி₄: ஶ்லாகி₄தஹதி: ।
தத₃ா த்வாமுத்₃தா₄ம–ப்ரமத₃ப₂ர–வித்₃யோதிஹ்ருத₃யா:
முநீந்த்₃ரா: ஸாந்த்₃ராபி₄: ஸ்துதிபி₄ரநுவந்–நத்₄வரதநும் ॥ 8 ॥

மிகவும் பருத்த உடலையுடைய அந்த ஹிரண்யாக்ஷன் தங்களது தாமரை மலர் போன்ற கையால் அடிக்கப்பட்டு வாயிலிருந்து ரத்தம் பெருகக் கீழே சாய்ந்து முனிவர்களால் போற்றப்பட்டவனாக இறந்தான். அப்பொழுது அளவற்ற ஆனந்தப்பெருக்கால் மனம் மகிழ்வுற்ற முனிவர்கள் எங்கும் முழங்குகின்ற உயர்ந்த தோத்திரங்களால் யக்ஞவராஹ மூர்த்தியான தங்களைத் துதித்தார்கள். (8)

த்வசி ச₃ந்தே₃ா ரோமஸ்வபி குஶக₃ணஶ்சக்ஷுஷி க்₄ருதம்
சதுர்ஹோதாரோऽங்க்₄ரௌ ஸ்ருக்₃பி வத₃நே சோத₃ர இடா₃ ।
க்₃ரஹா ஜிஹ்வாயாம் தே பரபுருஷ கர்ணே ச சமஸா:
விபே₂ா ஸோமோ வீர்யம் வரத₃ க₃ளதே₃ஶேऽப்யுபஸத₃: ॥ 9 ॥

ஹே புருஷோத்தமா! தங்களுடைய தோலில் 'காயத்ரி' முதலிய சந்தஸ்ஸுகள், ரோமங்களில் தர்பைகள், கண்களில் நெய், நான்கு திருவடிகளிலும் பிரம்மா, ஹோதா, அத்வர்யு, உத்காதா என்கிற நான்கு ரித்விக்குகள், முகத்தில் 'ஸ்ருக்' என்ற ஹோமபாத்திரம், திருவயிற்றில் 'இடா' என்னும் பாத்திரம், நாக்கில் ஸோமலதையின் ரஸத்தை எடுத்து வைப்பதற்கான உரல் போன்ற உருவுள்ள 'க்ரஹம்' என்கிற பாத்திரங்கள், காதுகளில் ஸோமபானம் செய்வதற்குரிய 'சமஸம்' என்னும் மரப்பாத்திரங்கள், (மற்றும்) பிரபோ! தங்களது வீரியமே ஸோமரஸம், பக்தர்களுக்கு வேண்டும் வரமளிக்கும் ஹே குருவாயூரப்பா! தங்கள் கழுத்தில் ப்ரவர்க்யத்திற்குப் பிறகு மந்திரங்களை மெதுவாகச் சொல்லிச் செய்யப்படும் 'உபஸத்துக்கள்' என்னும் இஷ்டிகளும் (இருக்கின்றன). (9)

முநீந்த்₃ரைரித்யாதி₃–ஸ்தவநமுக₂ரை–ர்மோதி₃தமநா:
மஹீயஸ்யா மூர்த்யா விமலதரகீர்த்யா ச விலஸந் ।
ஸ்வதி₃ஷ்ண்யம் ஸம்ப்ராப்த: ஸுக₂ரஸவிஹாரீ மது₄ரிபோ
நிருந்த்₄யா ரோக₃ம் மே ஸகலமபி வாதாலயபதே ॥ 10 ॥

மதுவென்னும் அஸுரனுக்குப் பகைவனான குருவாயூரப்பா! இதுபோன்ற துதிகளால் போற்றுகின்ற முனிவர்களால் மகிழ்விக்கப்பட்ட மனமுடையவராக, மிகப்பெரிய உருவத்துடனும்,

மாசற்ற கீர்த்தியுடனும் விளங்கி, தங்கள் இருப்பிடமான ஸ்ரீவைகுண்ட லோகத்தை அடைந்து பரமானந்த ரஸத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் தாங்கள் எனது நோய்களனைத்தையும் தீர்த்தருள வேண்டும். (10)

❖❖❖❖❖

பதிநான்காவது தசகம்

ஸ்ரீகபிலர் அவதாரம்

ஸமநுஸ்ம்ருத–தாவகாங்க்₄ரியுக்₃ம: ஸ மநு: பங்கஜஸம்ப₄வாங்க₃ஜந்மா ।
நிஜமந்தர–மந்தராயஹீநம் சரிதம் தே கத₂யந் ஸுக₂ம் நிநாய ॥ 1 ॥

பிரம்மதேவரின் மகனான ஸ்வாயம்புவ மனு தங்கள் இரு திருவடிகளையும் இடையறாது தியானித்துக் கொண்டும், தங்கள் வரலாற்றையே ஓதிக் கொண்டும் தனது மன்வந்தர காலத்தை இடையூறின்றி இனிதே கழித்தார். (1)

ஸமயே கலு தத்ர கர்த்₃மாக்₂யோ த்₃ருஹிணச்சா₂யப₄வஸ்–ததீ₃யவாசா ।
த்₃ருதஸர்க₃ரஸோ நிஸர்க₃ரம்யம் ப₄க₃வம்ஸ்–த்வாமயுதம் ஸமா: ஸிஷேவே ॥ 2 ॥

பகவானே! அக்காலத்தில் பிரம்மதேவருடைய நிழலிலிருந்து தோன்றிய கர்த்தமர் என்ற பெயர் கொண்ட பிரஜாபதி பிரம்மதேவரின் ஆணைப்படி படைப்புத் தொழிலைச் செய்ய விரும்பினார். (ஆகவே) இயற்கையிலேயே அழகுமிக்க தங்களைப் பதினாயிரம் ஆண்டுகள் பூஜித்துத் தவம் புரிந்தார். (2)

க₃ருடோ₃பரி காலமேக₄கம்ரம் விலஸத்–கேலி–ஸரோஜபாணிபத்₃மம் ।
ஹஸிதோல்லஸிதாநநம் விபோ₄ த்வம் வபுராவிஷ்குருஷே ஸ்ம கர்த்₃மாய ॥ 3 ॥

பிரபுவே! தங்கள் திருமேனி கார்மேகம் போல் மனோகரமானது. தாமரைப்பூ போன்ற திருக்கரத்தில் விளையாட்டாகத் தாமரை மலரை ஏந்தியவண்ணம் புன்முறுவலால் மலர்ந்த முகத்துடன் கருடன் மீது அமர்ந்து கர்த்தமருக்குத் தங்கள் திருமேனிக் காட்சியை அளித்தீர்கள் அல்லவா! (3)

ஸ்துவதே புளகாவ்ருதாய தஸ்மை மநுபுத்ரீம் த₃யிதாம் நவாபி புத்ரீ: ।
கபிலம் ச ஸுதம் ஸ்வமேவ பஶ்சாத் ஸ்வக₃தீம் சாப்யநுக்₃ருஹ்ய நிர்க₃தோऽபூ₄: ॥ 4 ॥

மெய்சிலிர்த்துத் தங்களை துதித்த அந்த கர்த்தமருக்குப் பத்தினியாக மனுவின் மகளைக் குறிப்பிட்டு, (அவளிடம்) ஒன்பது பெண்களும், தங்கள் அம்சமாக கபிலர் என்ற புத்திரனும் பிறக்கப் போவதாகவும் குறிப்பிட்டுக் கடைசியில் தங்களிடம் அவர் லயிக்கப் போவதையும் வரமாக அருளி மறைந்தீர்களல்லவா! (4)

ஸ மநு: ஶதரூபயா மஹிஷ்யா கு₃ணவத்யா ஸுதயா ச தே₃வஹூத்யா ।
ப₄வதீ₃ரித–நாரதே₃ரிதாத்மா ஸமக₃ாத் கர்த்₃ம–மாக₃திப்ரதீக்ஷம் ॥ 5 ॥

தங்களால் ஏவப்பட்ட நாரத முனிவரால் உபதேசிக்கப் பெற்ற ஸ்வாயம்புவமனு தமது மனைவியான சதரூபையுடனும், நற்குணம் படைத்த மகளான தேவஹூதியுடனும் தன் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் கர்த்தமரிடம் வந்து சேர்ந்தார். (5)

மநுநோபஹ்ருதாம் ச தே³வஹூதிம் தருணீரத்நமவாப்ய கர்த்³மோऽஸௌ ।
ப்³வதா³ர்சந–நிர்வ்ருதோऽபி தஸ்யாம் த்³ருட³ஶுஶ்ரூஷணயா த³தே³ள ப்ரஸாத³ம் ॥ 6 ॥

அந்த கர்த்தமரும் மனுவினால் கன்னிகாதானம் செய்யப்பட்ட நாரீமணியான தேவஹூதியை மனைவியாக அடைந்து, தங்களைப் பூஜிப்பதிலேயே (மனம்) நிலைபெற்றிருப்பினும், மனைவியின் நிலைத்த உறுதியான பணிவிடையினால் கவரப்பட்டு அவளிடம் அன்பினைச் செலுத்தினார். (6)

ஸ புநஸ்–த்வது³பாஸநப்ரப⁴வாத்³ த³யிதாகாமக்ருதே க்ருதே விமாநே ।
வநிதாகுல–ஸங்குலோ நவாத்மா வ்யஹரத்³ தே³வபதே²ஷு தே³வஹூத்யா ॥ 7 ॥

மேலும், அவர் தங்களை வழிபட்டதன் பெருமையால் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டி (யோகபலத்தால்) தேவ விமானத்தை உண்டு பண்ணி புதியதொரு அழகிய சரீரத்துடன் வானவெளிகளில் தேவஹூதியுடன் வலம் வந்தார். (7)

குறிப்பு:– இங்கு 'நவாத்மா' என்பதற்கு ஒன்பதுவித வடிவு கொண்டு தன் மனைவியிடம் மகிழ்ந்தார் என்கிறது பக்தப்பிரியம் என்னும் வியாக்கியானம்.

ஸதவர்ஷமத² வ்யதீத்ய ஸோऽயம் நவ கந்யா: ஸமவாப்ய த³ந்யரூபா: ।
வநயாநஸமுத்³யதோऽபி காந்தா–ஹிதக்ருத்–த்வஜ்ஜநோத்ஸுகோ ந்யவாத்ஸீத் ॥ 8 ॥

இவ்வாறு அந்த கர்த்தமர் நூறாண்டுகளைக் கழித்து, மிகவும் அழகிய ஒன்பது பெண்களைப் பெற்றெடுத்தார். (பின்) துறவியாக வனம் செல்ல முயன்றாராயினும், தன் மனையாளுக்கு நன்மையைச் செய்ய விரும்பித் தங்கள் அவதாரத்தை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார். (8)

நிஜபூ⁴ர்த்ருகி³ரா ப⁴வந்நிஷேவா–நிரதாயாமத² தே³வ தே³வஹூத்யாம் ।
கபிலஸ்த்வமஜாயதா²ஸா ஜநாநாம் ப்ரத²யிஷ்யந் பரமாத்மதத்த்வவித்³யாம் ॥ 9 ॥

ஹே தேவதேவா! அதன் பிறகு தன் கணவனுடைய சொல்லிற்கிணங்கத் தங்கள் சேவையிலேயே ஈடுபட்டிருந்த தேவஹூதியிடம் உலக மக்களுக்குப் பரம்பொருளின் இருபத்துநான்கு தத்துவங்களுடைய அறிவைப் புலப்படுத்த வேண்டித் தாங்கள் கபிலவாஸுதேவராக அவதரித்தீர்கள் அல்லவா! (9)

வநமேயுஷி கர்த்³மே ப்ரஸந்நே மதஸர்வஸ்வ–முபாதி³ஶஞ்–ஜநந்யை ।
கபிலாத்மக வாயுமந்தி³ரேஶ த்வரிதம் த்வம் பரிபாஹி மாம் க³தெ³ளக³த் ॥ 10 ॥

(தங்கள் திருவவதாரத்தால்) மகிழ்வுற்ற கர்த்தமர் வனமேகியபின், (தாயாரால் பிரார்த்திக்கப்பட்டு) தனது மதத்தின் முடிந்த முடிவான பொருள்கள் அனைத்தையும் தன் தாய்க்கு உபதேசித்த கபிலவாஸுதேவ மூர்த்தியாகத் தோன்றிய குருவாயூரப்பா! என்னை இந்நோய்க் கூட்டத்தினின்றும் விரைவில் காத்தருள வேண்டும். (10)

பதினைந்தாவது தசகம்

கபில உபதேசம்

மதிரிஹ கு³ணஸக்தா ப³ந்த⁴க்ருத்தேஷ்–வஸக்தா–
த்வம்ருதக்ருது³பருந்தே, ப⁴க்தியோக³ஸ்து ஸக்திம் ।
மஹத³நுக³மலப்⁴யா ப⁴க்திரேவாத்ர ஸாத்⁴யா
கபிலதநுரிதி த்வம் தே³வஹூத்யை ந்யக³தீ³: ॥ 1 ॥

''இவ்வுலகில் முக்குணங்களின் பொருட்களில் பற்றுள்ள புத்தியானது சம்சார பந்தம் என்கிற உலகியல் தளையை உண்டு பண்ணுகிறது. அதாவது பிறப்பைக் கொடுக்கிறது. சிற்றின்பங்களில் பற்றுதலற்ற புத்தியோ மோக்ஷத்தை அளிக்கின்றது. பக்தியோகமோவெனில் விஷய சுகமான சிற்றின்பப் பற்றினைத் தடுக்கிறது. (ஆகையால்) இவ்வுலகில் மஹான்களைப் பின்பற்றியே அடையக் கூடிய அந்த பக்தி ஒன்றே தேடியடையக் கூடியது'' என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசித்தீர்கள் அல்லவா! (1)

ப்ரக்ருதி மஹத³ஹங்காராஸ்ச மாத்ராஸ்ச பூ⁴தாந்–
யபி ஹ்ருத³பி த³ஶாக்ஷீ பூருஷ: பஞ்சவிம்ஶ: ।
இதி விதி³தவிபா⁴கே³ முச்யதேঽஸௌ ப்ரக்ருத்யா
கபிலதநுரிதி த்வம் தே³வஹூத்யை ந்யக³தீ³: ॥ 2 ॥

''மூலப்பிரக்ருதி, மஹத்தத்துவம், அஹங்காரம், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து மஹாபூதங்கள், மனது, பத்து இந்திரியங்கள் (ஐந்து ஞானேந்திரியங்கள் + ஐந்து கர்மேந்திரியங்கள்) என இருபத்து நான்கு தத்துவங்கள், தவிர இருபத்தைந்தாவது தத்துவம் 'புருஷன்' என்று பிரித்து அறிகிற இந்த ஜீவன் மாயையான பிரக்ருதியின் தளையிலிருந்து விடுபடுகிறான்'' என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசித்தீர்கள் அல்லவா! (2)

குறிப்பு:– பிரக்ருதியும், புருஷனும் வேறுவேறு என்று பகுத்து அறியப்படுவதே ஸாங்கியம் எனப்படும். ஸாங்கியதரிசன ஆசார்யர் பகவான் கபிலர்.

ப்ரக்ருதிக்ருத கு³ணைளகை³ர் நாஜ்யதே பூருஷோঽயம்
யதி³ து ஸஜ்ஜதி தஸ்யாம் தத்³கு³ணாஸ்தம் ப³ஜ்நேரந் ।
மத³நுப⁴ஜ்ந தத்வாலோசநை: ஸாঽப்யபேயாத்
கபிலதநுரிதி த்வம் தே³வஹூத்யை ந்யக³தீ³: ॥ 3 ॥

''பிரக்ருதியிலுள்ள (நான் செய்கிறேன் என்கிற கர்த்ருத்வம் முதலான) குணங்களால் இந்த புருஷன் கவரப்படுவதில்லை. ஆனால் அந்த பிரக்ருதியில் பற்றுதல் கொள்வானேயாகில் அந்த பிரக்ருதியின் குணங்கள் அவனைப் பற்றிக் கொள்ளும். அந்த பிரக்ருதியும், என்னை வழிபடுவதாலும், வேதாந்த சிந்தனையாலும் (உண்மையை ஆராய்ந்து அறிவதனாலும்) புருஷனைவிட்டு அகன்று போகும்'' என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசித்தீர்கள் அல்லவா! (3)

ஒப்புநோக்குக:– தை³வீ ஹ்யேஷா கு³ணமயீ மம மாயா து³ரத்யயா ।
மாமேவ யே ப்ரபத்³யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥

(ஸ்ரீமத்³ ப⁴க³வத்³கீ³தா 7/14)

இந்த உலகியலுக்கு அப்பாற்பட்ட தெய்விகமான, மிகவும் அற்புதமான, முக்குணமயமான என்னுடைய மாயை கடப்பதற்கு அரிதானது. ஆனால், எவர்கள் என்னையே எப்பொழுதும் புகலாகக் கொள்கிறார்களோ, அவர்கள் இந்த மாயையைக் கடந்து விடுகிறார்கள் – உலகியலிலிருந்து கரையேறுகிறார்கள்.

விமலமதிருபாத்தை–ராஸநாத்3யைர்–மத3ங்க3ம்
க3ருட3ஸமதி4ரூட4ம் தி3வ்ய–பூ4ஷாயுத4ாங்கம் ।
ருசிருலிததமாலம் ஶீலயேதாநுவேலம்
கபிலதநுரிதி த்வம் தே3வஹூத்யை ந்யக3ாதீ3: ॥ 4 ॥

''(யமம், நியமம் முதலியவைகளால்) மாசு நீங்கிய மனதையுடையவன், ஆஸனம் (பிராணாயாமம், பிரத்யாஹாரம், தியானம், தாரணை) முதலிய யோக ஸாதனங்களால், கருடன் மேல் எழுந்தருளிய என்னுடைய மூர்த்தியை திவ்வியமான ஆபரணங்களாலும், ஆயுதங்களாலும் அலங்கரிக்கப்பட்டு தமாலம் போல நீலவர்ணத்துடன் விளங்குவதாக எப்பொழுதும் தியானிக்க வேண்டும்'' என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசம் செய்தீர்கள் அல்லவா! (4)

மம கு3ணக3ணலீலா–கர்ணனை: கீர்தநாத்3யைர்–
மயி ஸுரஸரிதே3ாக4–ப்ரக்2யசித்தாநுவ்ருத்தி: ।
ப4வதி பரமப4க்தி: ஸா ஹி ம்ருத்யோர்விஜேத்ரீ
கபிலதநுரிதி த்வம் தே3வஹூத்யை ந்யக3ாதீ3: ॥ 5 ॥

''என்னுடைய குணங்களையும், திருவிளையாடல்களையும் இடையறாது கேட்பதாலும், கீர்த்தனம் முதலியவைகளைச் செய்வதாலும் என்னிடத்தில் கங்கா நதியின் பிரவாஹம் போன்ற மனநிலையுடைய மேலான பக்தி உண்டாகிறது. அந்த பக்தியே பிறப்பு, இறப்பான சம்சாரமாகிய மிருத்யுவை (யமனை) வெல்வதாகும்'' என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசம் செய்தீர்கள் அல்லவா! (5)

குறிப்பு:– கங்கா நதியின் பிரவாஹம் எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் அவையனைத்தையும் தாண்டி சமுத்திரத்தை நோக்கிப் போய்க் கொண்டே இருப்பதுபோல் பகவானிடம் நாம் செய்யும் தியானம் நிகழவேண்டும்.

ஸர்வதா3 ஸர்வப4ாவேந நிஸ்சிந்தைர் ப4க3வாநேவ ப4ஜநீய: ।
ஸ கீர்த்யமாந ஶீக்4ரமேவ ஆவிர் ப4வதி । அநுப4ாவயதி ப4க்தாந் ॥
(நாரத பக்தி ஸூத்ரம்

கீர்த்தனம் முதலியவை:–

ஶ்ரவணம் கீர்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாத3ஸேவநம் ।
அர்சநம் வந்த3நம் தா3ஸ்யம் ஸக்2யமாத்மநிவேத3நம் ॥
(ஸ்ரீமத்3 ப4க3வதம் 7–5–23

அஹஹ பஹுலஹிம்ஸா–ஸஞ்சிதார்தை2: குடும்ப3ம்
ப்ரதிதி3நமநுபுஷ்ணந் ஸ்த்ரீஜிதோ ப3ாலலாலீ ।
விஶதி ஹி க்ருஹஸக்தோ யாதநாம் மய்யப4க்த:
கபிலதநுரிதி த்வம் தே3வஹூத்யை ந்யக3ாதீ3: ॥ 6 ॥

''பற்பல இன்னல்களைப் பிறருக்கிழைத்துத் தானும் அவற்றை அனுபவித்து, அங்ஙனே ஈட்டிய பொருளைக் கொண்டு நாள்தோறும் குடும்பத்தைக் காப்பவனாகவும், பெண்ணிற்கு வசப்பட்டவனாகவும், குழந்தைகளைச் சீராட்டிக் கொஞ்சுகிறவனாகவும், (மனைவி, மக்கள் என்று) வீட்டிலேயே பற்றுமிக்கவனாகவும் (வாழ்ந்து) என்னிடம் பக்தியில்லாத ஜீவன் நரகத்திலே இடர்ப்படுகிறான். ஐயோ! என்ன கஷ்டம்?'' என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசம் செய்தீர்கள் அல்லவா! (6)

குறிப்பு:– இங்கு ஸ்ரீபகவான் பாவிகளின் தீய செயல்களைக் கூறி, முடிவில் 'என்னிடம் பக்தி இல்லாதவன்' என்று கூறுவதனால் இவ்வளவு தீய செயல்கள் செய்திருப்பினும், அவன் ஏதோ ஒரு புண்ணிய கர்மத்தால் ஸாது ஸங்கத்தைப் பெற்றுச் சிறிது நேரமாவது பகவானை பூஜிப்பானேயாகில், அவன் நரக யாதனையை அடையான் என்று தெரிகிறது.

அபி சேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோ ஹி ஸ: ॥
க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஸஶ்வச்சாந்திம் நிகச்சதி ।
கௌந்தேய ப்ரதிஜாநீஹி நமே பக்த: ப்ரணஶ்யதி ॥

(ஸ்ரீமத் பகவத்கீதா 9/30,31)

மிகவும் தீயநடத்தையுள்ளவனானாலும், வேறு எதிலும் நாட்டமின்றி என் பக்தனாகி என்னை வழிபடுவானேயானால், அவன் சாது (நல்லவன்) என்றே கருதப்படத்தக்கவன். ஏனெனில், அவன் பகவானை பஜிப்பதைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை என்ற நல்ல தீர்மானத்திற்கு வந்தவன். அவன் விரைவிலேயே தர்மாத்மாவாக ஆகிறான்; நிலையான அமைதியை அடைகிறான். அர்ஜுனா! என்னுடைய பக்தன் அழிவதில்லை என்ற சத்தியத்தை உறுதியாக அறிந்துகொள்.

ஜீவன் பாவகர்ம பலனாக நரகமடைவதைப் பற்றி கருடபுராணம் கூறுவதை இங்கு காணலாம்—

''யமதூதைர் யாதநா ஶரீரம் நீத்வா, பாஶைர் களேபத்வாக்ருஷ்ய, த்ரிபிர் முகூர்த்தைர் நவநவதி ஸஹஸ்ர யோஜநதூரே யமஸதநம் ப்ராபிதோ அஷ்டாவிம்ஶதி கோடி நரக பேதநாந் பாப தாரதம்யேந அநுபூய, அநந்தரம் த்ருணாதிஷு விம்சதி லக்ஷம் ஜந்மாநி அவாப்ய, ஜலஜந்துஷு நவலக்ஷம் க்ருமி ஜாதிஷ்வேகாதஶலக்ஷம், பக்ஷி ஜாதிஷு தஶலக்ஷம், சதுர்லக்ஷம், பஶு ஜாதிஷு ஸப்த கோடி ஜந்மாநி ச அவாப்ய, அநந்தரம் மநுஷ்ய ஜாதிஷு சதுர்லக்ஷம், ப்ராஹ்மண ஜாதிஷு ஹீநமத்யோத்தமதயா ஶதம் ச ஜந்மாந்யவாப்ய தத்ர பநரபி பாபக்ருச்சேந் நரககேஷு பததி.''

யுவதிஜடரகிந்நோ ஜாதபேதேரப்யகாண்டே
ப்ரஸவகலிதபேத: பீடயோல்லங்க்ய பால்யம் ।
புநரபி பத முஹ்யத்யேவ தாருண்யகாலே
கபிலதநுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ: ॥ 7 ॥

''யுவதியான தாயின் வயிற்றில் வசிக்கும்பொழுது துன்பமடைந்து, அத்துன்பத்தை நீக்க இயலாதபோழ்து, ஞானமிருந்தும்கூட பிரசவ காலத்திலே அதை இழந்து, பல இன்னல்களுடன் பால்யத்தை (குழந்தைப் பருவத்தை)க் கடந்து, யௌவனப் பருவத்தில் (இளமைப் பருவம்) மறுபடியும் மதி மயக்கத்தை அடைகிறான். ஐயோ! கஷ்டம்!'' என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசம் செய்தீர்கள் அல்லவா! (7)

பித்ருஸுரக்ருணயாஜீ த்ரார்மிகோ யோ க்ருஹஸ்த2:
ஸ ச நிபததி காலே த3க்ஷிணாத்4வோபக3ாமீ ।
மயி நிஹிதமகாமம் கர்ம தூ4த்4பத2ார்த்2தம்
கபிலதனுரிதி த்வம் தே3வஹூத்யை ந்யக3ாதீ3: ॥ 8 ॥

"பித்ரு கணங்களையும், தேவ கணங்களையும் பூஜித்துக் கொண்டு, இல்லற தர்மத்தில் (சிறிதும் நழுவாது) இருப்பவனும்கூட இறந்தபிறகு தக்ஷிணாயன மார்க்கத்தில் சென்று, செய்த புண்ணியம் குறைந்ததும் (பூமியில் வந்து) விழுகிறான். அதாவது பூமியில் வந்து பிறக்கிறான். என்னிடம் அர்ப்பணம் செய்யப்பட்ட, பயனில் கருத்தில்லாத கர்மம் (நிஷ்காம கர்மம்) உத்தராயண மார்க்கத்தில் செல்வதற்குக் காரணமாகிறது" என்று கபிலாவதாரம் செய்த தாங்கள் தங்கள் தாயான தேவஹூதிக்கு உபதேசம் செய்தீர்கள். (8)

குறிப்பு:– மரணத்திற்குப் பிறகு ஜீவன் அடையும் கதி :

ஞானிகளும், உத்தம பக்தர்களும் இறந்ததுமே 'ஸத்யோ முக்தியை' அடைகின்றனர். வேறு உலகங்களுக்குச் செல்லாது பகவானிடமே இரண்டறக் கலந்து விடுகிறார்கள். நடுத்தரமான ஸாதகர்களிலும் சிறந்தவர்கள் உத்தராயண மார்க்கத்தில் சென்று படிப்படியாக பிரம்மலோகம் வரை சென்று கல்பத்தின் முடிவில் முக்தியடைகிறார்கள். அடுத்த நிலையில் உள்ளவர்கள் தக்ஷிணாயன மார்க்கத்தில் சென்று மேலுலகங்களில் உள்ள இன்பத்தை நுகர்ந்து புண்ணியம் கழிந்ததும் பூவுலகிற்குத் திரும்புகிறார்கள். பக்தியும், தூய்மையும் அற்றவர்களான பாவி மனிதர்கள் நரகுலகு சென்று பாவத்தின் சம்பளமான பலவித தண்டனைகளைப் பெற்று அனுபவித்துத் தமது வாழ்க்கையைத் திருத்திக் கொள்ள மீண்டும் இவ்வுலகிற்கு அனுப்பப்படுகிறார்கள். விலங்கின் வாழ்க்கை வாழ்பவர்கள் மானிடப் பிறவியை இழந்து விலங்குகளாகவோ, அதனினும் கீழ்ப்பட்ட தாவரங்களாகவோ பிறவியை அடைகின்றனர்.

ஸ்ரீமத்பாகவதம், ஸ்ரீபகவானால் உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத்பகவத்கீதையின் விளக்கமேயாகும். ஸ்ரீமந்நாராயணீயமோ ஸ்ரீமத்பாகவதத்தின் ஸாரம். ஸ்ரீமத்பகவத்கீதை அத். 8ல் 24 முதல் 26 வரை உள்ள சுலோகங்கள் இந்த சுலோகத்தின் கருத்தினையே உணர்த்துவது ஒப்புநோக்குக.

அறிவிலிகள் என்னை அடையாமலேயே ஒவ்வொரு பிறவியிலும் அஸுர இயல்புள்ள பிறவியை அடைகிறார்கள். அதைக்காட்டிலும் மிகத் தாழ்ந்த நிலையை எய்துகிறார்கள். அதாவது கோரமான நரகங்களை அடைகிறார்கள். (ஸ்ரீமத்பகவத்கீதை 16/20)

மேலும் ஒரு மஹனீயர் இதே கருத்தைக் கூறும் பான்மையும் நோக்கத்தக்கது.

இஹைவ நரகவ்யாதே4ச் சிகித்ஸாம் ந கரோதி ய: ।
க்ருத்வா நிரௌஷத4ம் ஸ்தா2நம் ஸ நர:கிம் கரிஷ்யதி ॥

இதி ஸுவிதி3த வேத்3யாம் தே3வ ஹே தே3வஹூதிம்
க்ருதநுதி–மநுக்3ருஹ்ய த்வம் க3தோ யோகி3ஸங்கை4: ।
விமலமதிரதா2ஸௌ பு4க்தியோகே3ந முக்தா
த்வமபி ஜநஹிதார்த்2தம் வர்தஸே ப்ராகு3தீ3ச்யாம் ॥ 9 ॥

தேவ தேவனான ஸ்ரீகுருவாயூரப்பா! இவ்வாறு அறிய வேண்டுவதை நன்கு அறிந்து கொண்டு தங்களைத் துதித்த தாய் தேவஹூதிக்கு அனுக்கிரஹம் செய்துவிட்டுத் தாங்கள் ஸாது ஜனங்களின் கூட்டங்களுடன் புறப்பட்டுச் சென்று மக்களின் நலன் கருதி (இப்பொழுதும் பாரத நாட்டின்) வடகிழக்கில் இருக்கிறீர்கள் அல்லவா! அதன்பின், ஞானஒளி பெற்றதால் (அஞ்ஞான இருளகன்று) தெளிவடைந்த சித்தத்தையுடைய தேவஹூதி பக்தி மார்க்கத்தினால் முக்தி எய்தினாள். (9)

குறிப்பு:– தேவஹூதி முக்தி அடைந்த இடம் ஸித்திபதம். ஸித்தாஸ்ரமம் என்ற பெயருடன் விளங்குகிறது. அங்குதான் ஸ்ரீலாமனமூர்த்தி அவதாரம் செய்தருளினார். விசுவாமித்திரரும் அந்த ஸித்தாஸ்ரமத்தில்தான் யாகம் செய்தார். ஸ்ரீகபில வாஸுதேவர் வடகிழக்கில் இருக்குமிடம் சங்காஸாகரம் எனப்படுகிறது.

பரம கிமு ப்ருஹூக்த்யா த்வத்பத்³மாம்போ⁴ஜபு⁴க்திம்
ஸகலப்⁴யவிநேத்ரீம் ஸர்வகாமோபநேத்ரீம் ।
வத்³ஸி கு²லு–த்³ருடம் த்வம் தத்³விதூ⁴யாமயாந் மே
கு³ருபவநபுரேஶ த்வய்–யுபாத்தஸ்ய பு⁴க்திம் ॥ 10 ॥

அனைத்திற்கும் மேலானவனே! அதிகம் பேசுவதால் ஆவதென்ன? தங்களுடைய திருவடித் தாமரைகளில் பக்தி ஒன்றே எல்லா பயங்களையும் போக்கும். விருப்பங்கள் அனைத்தையும் கொடுக்கும் – என்று நீங்களே திடமாகக் கூறுகிறீர்கள் அல்லவா? ஆகையால் ஹே குருவாயூரப்பா! எனது ரோகங்களை நீக்கி, உங்களிடத்தில் பக்தியை உண்டுபண்ணியருள வேண்டும். (10)

❋❋❋

நான்காவது ஸ்கந்தம்

பதினாறாவது தசகம்

நர நாராயணாவதாரம் – தக்ஷ யாகம்

தா³க்ஷ்யோ விரிஞ்சதநயோऽத² மநோஸ்தநூஜாம்
லப்³த்⁴வா ப்ரஸூதிமிஹ ஷோட³ஶ சாபகந்யா: ।
தா⁴ர்மே த்ரயோத³ஶ தா³தெ³ள பித்ருஷு ஸ்வதா⁴ம் ச
ஸ்வாஹாம் ஹவிர்பு⁴ஜி ஸதீம் கி³ரிஶே த்வதா³ம்ஶே ॥ 1 ॥

பிரம்மாவின் புதல்வரான தக்ஷப்பிரஜாபதி ஸ்வாயம்புவ மனுவின் புதல்வியான பிரஸூதியை மனைவியாக அடைந்து அவளிடம் பதினாறு பெண்களைப் பெற்றார். (அவர்களில்) பதின்மூன்று பெண்களைத் தர்மதேவருக்கும், ஸ்வதா என்பவளை பித்ரு தேவதைகளுக்கும், ஸ்வாஹா என்பவளை அக்னி தேவனுக்கும், ஸதீ என்ற பெயருள்ள தாக்ஷாயணியைத் தங்கள் அம்சமான கைலாஸவாஸியான பரமசிவனுக்கும் கொடுத்தார். (1)

மூர்திர்ஹி தா⁴ர்மக்³ருஹிணீ ஸுஷுவே பு⁴வந்தம்
நாராயணம் நரஸகா²ம் மஹிதாநுபா⁴வம் ।
யஜ்ஜ்ந்மநி ப்ரமுதி³தா: க்ருததூர்யகோ⁴ஷா:
புஷ்போத்கராந் ப்ரவவ்ருஷுர்–நுநுவு:ஸுரௌகா⁴: ॥ 2 ॥

தர்ம தேவதையின் மனைவியான மூர்த்தி என்பவள் நரனைத் தோழனாகக் கொண்ட பெரும்புகழ் படைத்த நாராயணனாகிய தங்களைப் பெற்றெடுத்தாள். (நரநாராயணர்கள் இரட்டைக் குழந்தைகள்). அந்த நரநாராயணாவதாரத்தினால் மகிழ்ச்சி பொங்கிய தேவ கணங்கள் முரசுகளை முழக்கிப் பூமாரி பொழிந்து வணங்கித் தொழுதனர். (2)

தை3த்யம் ஸஹஸ்ரகவசம் கவசை: பரீதம்
ஸாஹஸ்ரவத்ஸரதபஸ்–ஸமராபி4லவ்யை: ।
பர்யாயநிர்மித–தபஸ்ஸமரௌ ப4வந்தௌ
ஸ்ரிஷ்டைகங்கடமமும் ந்யஹதாம் ஸலீலம் ॥ 3 ॥

நரநாராயணர்களான நீங்களிருவரும் ஒருவர் மாற்றி ஒருவர் முறையே தவத்தையும் யுத்தத்தையும் செய்து கொண்டு ஆயிரம் ஆண்டுகள் செய்த தவத்தின் பலத்தினாலும் யுத்தத்தினாலும் மட்டுமே வெல்லக் கூடிய கவசங்களால் காக்கப்பட்டுள்ள "ஸஹஸ்ர கவசன் என்ற அஸுரனின் எல்லா கவசங்களையும் உடைத்து, அவனை ஒரே ஒரு கவசத்தை மட்டும் மீதமாக உடையவனாக்கி விளையாட்டாகவே (அவனைக்) கொன்றீர்கள். (3

அந்வாசரந்–நுபதி3ஸந்நபி மோக்ஷத4ர்மம்
த்வம் ப்4ராத்ருமாந் ப3த3ரிகாஸ்ரமமத்4யவாத்ஸீ: ।
ஸக்ரோத3 தே ஸமதபோப3ல–நிஸ்ஸஹாத்மா
தி3வ்யாங்க3நாபரிவ்ருதம் ப்ரஜிக4ாய மாரம் ॥ 4 ॥

சகோதரனான நரனுடன் தாங்கள் கர்ம பந்தத்திலிருந்து (கர்மத்தளைகளிலிருந்து விடுதலையளிக்கும் மோக்ஷ தர்மத்தை அனுஷ்டித்துக் கொண்டும், (நாரதர் முதலானோர்க்கு உபதேசித்துக் கொண்டும், பதரிகாசிரமத்தில் வசித்து வருகையில், தேவேந்திரன் தங்களுடைய புலனடக்கத்திலும், தவத்திலும் பொறாமை கொண்டு (தங்கள் தவத்தைக் கலைக்க) மன்மதனை தேவமாதர்களால் சூழப்பட்டவனாக (தேவதாஸிகளுடன்) அனுப்பி வைத்தான். (4

காமோ வஸந்தமலயாநிலப3ந்து4ஸாலீ
காந்தாகடாக்ஷவிபவிகை2ர்–விகஸத்3விலாஸை: ।
வித்4யந்முஹுர்–முஹுரகம்ப–முதீ3க்ஷ்ய ச த்வாம்
பீ4தஸ்த்வயாத3 ஜக3தே3 ம்ருது3ஹாஸப4ாஜா ॥ 5 ॥

வஸந்த ருது, மலயமாருதம் (தென்றல்) என்கிற உறவினர்களுடன் மன்மதன் தேவமாதர்களின் லீலாவிலாஸங்களையும், கடைக்கண் பார்வைகளையும் அம்புகளாக கொண்டு தங்களைப் பன்முறை (மேன்மேலும்) தாக்கியும், தாங்கள் அசைக்க முடியாதவராக இருப்பது கண்டு பயமடைந்தான். அப்பொழுது புன்முறுவல் பூத்த தாங்கள் (பின்வருமாறு கூறினீர்களாமே! (5

பீ4த்யாலமங்க3ஜ வஸந்த ஸுராங்க3நா வோ
மந்மாநஸம்த்விஹ ஜுஷத்4வமிதி ப்3ருவாண: ।
த்வம் விஸ்மயேந பரித: ஸ்துவதாமதை2ஷாம்
ப்ராது3ர்ப4ய: ஸ்வபரிசாரக காதராக்ஷீ: ॥ 6 ॥

"மன்மதனே! வஸந்தனே! தேவமாதர்களே! நீங்கள் பயப்பட வேண்டாம். இங்கு என் மனதிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட பெண்மணியை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறிய தாங்கள், வியப்பில் ஆழ்ந்து தங்களைச் சுற்றி நின்று துதிக்கும் இவர்களுக்கும் தங்களுக்குப் பணிவிடை செய்யக் காத்து நிற்கும் அழகிய கண்களையுடைய கட்டழகிகளை காட்டினீர்கள். (6

குறிப்பு:– இங்கு 'பக்தப்பிரியம்' என்கிற வியாக்கியானகாரர் 'மந்மாநஸம்' என்கிற பதத்திற்கு மூவகையான விளக்கமளிப்பது காண்க.

(1) **மந்மாநஸம் து ஜுஷ்தத்வம் = மச்சித்தமநுவர்த்தத்வம்**
என் எண்ணப்படி நடக்கக் கடவீர்.

(2) **மந்மாநஸம் ஜுஷ்தத்வம் = மம மநஸா ஸங்கல்பிதம் ஸத்காரம் பரிக்ருஹ்ணீத்வம்**
என் மனதால் நினைக்கப்பட்டவாறு செய்யும் பூஜையை ஏற்கக் கடவீர்.

(3) **மம மநஸா ஸ்ருஜ்யமாநம் வ: ஸ்வர்க துர்லபம் கிஞ்சித்வஸ்து**
ஸ்த்ரீ ரத்நாக்யம் மயா தீயமாநம் ஆதுதீத்வம்
என் மனதால் தோற்றுவிக்கப்பட்ட, தேவருலகிலும் கிடைத்தற்கரிய, என்னால் கொடுக்கப்படுகின்ற பெண்மணியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஸம்மோஹநாய மிலிதா மதந்நாத்யஸ்தே
த்வத்த்ராஸிகாபரிமலை: கில மோஹமாபு: ।
தத்தாம் த்வயா ச ஜக்ருஹுஸ்–த்ரபயைவ ஸர்வ–
ஸ்வர்வாஸிகர்வமஹநீம் புநருர்வஶீம் தாம் ॥ 7 ॥

தங்களை மயக்கும் எண்ணத்துடன் ஒன்று சேர வந்த மன்மதன் முதலானோர் தங்களுக்குப் பணிபுரியும் பெண்மணிகளின் பரிமளத்தால் மயக்கத்தை அடைந்தார்கள் அல்லவா? மற்றும், தேவருலக வாஸிகள் அனைவருடைய கர்வத்தையும் அடக்கக் கூடிய (தங்களால் துடையிலிருந்து தோற்றுவிக்கப்பட்டவளை) அழகுவாய்ந்த அந்த ஊர்வசி என்கிற பெண்ணைத் தாங்கள் அளிக்க வெட்கத்துடன் பெற்றுக் கொண்டனர். (7)

த்ருஷ்ட்வோர்வஶீம் தவ கதாம் ச நிஶம்ய ஶக்ர:
பர்யாகுலோऽஜநி பவந்மஹிமாவமர்ஶாத் ।
ஏவம் ப்ரஶாந்த–ரமணீயதராவதாராத்–
த்வத்தோऽதிகோ வரத க்ருஷ்ணதநுஸ்த்வமேவ ॥ 8 ॥

ஊர்வசியின் அழகைக் கண்டும், தங்கள் லீலையைக் கேட்டும், இந்திரன் தங்கள் பெருமையை உய்த்தறிந்து (தன் அற்பச்செயலை எண்ணி) மனக்கலக்கமுற்றான். எண்ணிய எண்ணியாங்கு அளிப்பவனே! அமைதியும், அழகும் மிக்க இந்த நரநாராயண அவதாரத்தைக் காட்டிலும் தங்களுடைய ஸ்ரீகிருஷ்ணாவதாரம்தான் மேலும் சிறப்பாக விளங்குகிறது. (அந்த ஸ்ரீகிருஷ்ணாவதாரம் செய்தவரும் தாங்கள் தானே!) (8)

தக்ஷஸ்து தாதுரதிலாலநயா ரஜோऽந்தே
நாத்யாத்ருதஸ்த்வயி ச கஷ்டமஶாந்திராஸீத் ।
யேந வ்யருந்தத பவத்தநுமேவ ஶர்வம்
யஜ்ஞே ச வைரபிஶுநே ஸ்வஸுதாம் வ்யமாநீத் ॥ 9 ॥

(ஸ்வாயம்புவ மனுவின் புதல்வியான பிரஸூதியை மணந்த பிரம்மாவின் புதல்வரான) தக்ஷப்பிரஜாபதி பிரம்மதேவரின் அளவு கடந்த அன்பினால் (செல்வத்தால்) ரஜோ குணத்தின் செயல்களான காமம், கோபம் முதலியவற்றால் அறிவிழந்து தங்களிடம் பக்தி இல்லாமலும், அமைதியற்றவனாகவும் இருந்தான். அதனால் தங்கள் ஸ்வரூபமேயான பரமசிவனை வெறுத்தான். அந்தோ பரிதாபம்! அந்த வெறுப்பைத் தான் செய்த வேள்வியில்

வெளிக்காட்டித் தன் புதல்வியான (ஸ்ரீபரமசிவனின் பத்தினியான) ஸதீதேவியை அவமதிக்கவும் செய்தான். (9)

க்ருத்₃தே₄ஷமர்தி₃தமக₂: ஸ து க்ருத்₃தஶீர்ஷோ
தே₃வப்ரஸாதி₃த–ஹராத₃₂ லப்₃த₄ஜீவ: ।
த்வத்பூரிதக்ரதுவர: புநராப ஶாந்திம்
ஸ த்வம் ப்ரஶாந்திகர பாஹி மருத்புரேஶ ॥ 10 ॥

(அங்ஙனம் அவமதிக்கப்பட்ட ஸதீதேவி யாக சாலையில் தன் உடலை நீத்தபொழுது) பரமசிவன் மிக்க கோபம் கொண்டு அந்த யாகத்தை அழித்தார். தக்ஷனுடைய தலையையும் வெட்டினார். பிறகு தேவர்களால் துதிக்கப் பெற்ற பரமசிவனுடைய அருளால் தக்ஷன் மீண்டும் உயிர் பெற்றான். தங்களால் யாகம் நிறைவேற்றப்பட்டு மறுபடியும் சாந்தியடைந்தான். அனைவருக்கும் சாந்தியை அளிக்கும் பெருமை கொண்ட ஹே குருவாயூரப்பா! என்னைக் காப்பாற்றுங்கள். (10)

பதினேழாவது தசகம்

ஸ்ரீதுருவ சரிதம்

உத்தாநபாத₃ந்ருபதேர்–மநுநந்த₃நஸ்ய
ஜாயா ப₃பூ₄வ ஸுருசிர்நிதராமபீ₄ஷ்டா ।
அந்யா ஸுநீதிரிதி ப₄ர்த்துரநாத₃்ருதா ஸா
த்வாமேவ நித்யமக₃தி: ஶரணம் க₃தாபூ₄த் ॥ 1 ॥

ஸ்வயம்புவ மனுவின் புதல்வரான உத்தானபாத மன்னனுக்கு 'ஸுருசி' என்ற இளைய மனைவி மிகவும் அன்புடையவளாக இருந்தாள். 'ஸுநீதி' என்ற மற்றொரு மனைவி (மூத்தவள்) கணவனால் ஆதரிக்கப்படாமல் இருந்தாள். வேறு கதியற்ற அவள் எப்பொழுதும் தங்களையே சரணம் அடைந்தாள். (1)

அங்கே பிது: ஸுருசிபுத்ரகமுத்தமம் தம்
த்₃ருஷ்ட்வா த்₃ருவ: கில ஸுநீதிஸுதோঽதி₃ரோக்ஷ்யந் ।
ஆசிக்ஷிபே கில ஶிஶு: ஸுதராம் ஸுருச்யா
து₃ஸ்ஸந்த்யஜா க₂லு ப₄வத்₃விமுகை₂ரஸேயா ॥ 2 ॥

(தன்) தந்தையின் மடியில் ஸுருசியின் புதல்வனான உத்தமன் வீற்றிருப்பதைப் பார்த்து ஸுநீதியின் மகனான துருவனும் அவர் மடியில் ஏற முயற்சித்தபொழுது ஸுருசியால் மிகவும் கடுமையாக அதட்டித் தடுக்கப்பட்டான் அல்லவா! பொறாமையானது, தங்களிடம் பக்தியற்றவர்களால் மிகவும் சிரமப்பட்ட போதிலும் விட முடியாததல்லவா? (2)

த்வந்மோஹிதே பிதரி பஶ்யதி து₃ரவஶ்யே
தூ₃ரம் து₃ருக்திநிஹத: ஸ க₃தோ நிஜாம்ப₃ாம் ।
ஸாঽபி ஸ்வகர்மக₃திஸந்தரணாய பும்ஸாம்
த்வத்பாத₃மேவ ஶரணம் ஶிஶவே ஶஶம்ஸ ॥ 3 ॥

தங்களது மாயையால் மதிமயங்கி மனைவிக்கு வசப்பட்ட தந்தை உத்தானபாதன் பார்த்துக் கொண்டிருக்கையில் (தன் சிற்றன்னையின்) கடுஞ்சொற்களால் மிகவும் புண்படுத்தப்பட்ட துருவன் தன் தாயிடம் சென்றான். ஸுநீதியும், 'மனிதர்களுக்கு அவரவர் கர்மவினையைப் போக்கிக் கொள்வதற்குத் தங்களுடைய திருவடித் தாமரைகளே புகலிடம்' என்று தன் குழந்தைக்கு உபதேசித்தாள். (3)

ஆகர்ண்ய ஸோऽபி ப₄வத₃ர்சந–நிஶ்சிதாத்மா
மாநீ நிரேத்ய நக₃ராத் கில பஞ்சவர்ஷ: ।
ஸந்த்₃ருஷ்ட–நாரத₃நிவேதி₃த–மந்த்₃ரமார்க₃ஸ்–
த்வாமாரராத₄ தபஸா மது₄காநநாந்தே ॥ 4 ॥

தாய் கூறியதைக் கேட்டு ஐந்து வயது பாலகனாக இருப்பினும் (சிற்றன்னை கூறிய கொடுஞ்சொற்களைச் செவிமடுத்து) அவமானம் பொறாத அந்த துருவன் தங்களை ஆராதனை செய்யவேண்டுமென்ற மனஉறுதியுண்டு நகரத்திலிருந்து வெளியேறி வழியில் நாரதரைச் சந்தித்து, (அவரால்) மந்த்ரம், அதன் உபாஸனை முதலியன உபதேசிக்கப் பெற்று மதுவனத்திலேயே தங்களைத் தவத்தினால் ஆராதனை செய்தான். (4)

தாதே விஷண்ணஹ்ருத₃யே நக₃ரீம் க₃தேந
ஸ்ரீநாரதே₃ந பரிஸாந்த்வித–சித்தவ்ருத்தெள ।
பா₃லஸ்த்வத₃ர்பிதமநா: க்ரமவர்த்₃தி₄தேந
நிந்யே கடே₂ாரதபஸா கில பஞ்சமாஸாந் ॥ 5 ॥

(தன்னால்தானே குழந்தை துருவன் காட்டிற்குச் சென்று தவம் மேற்கொள்ள நேரிட்டது என்று) கவலை கொண்டிருந்த தந்தையை, நகரத்திற்குச் சென்ற ஸ்ரீநாரதர் சமாதானம் செய்தார். பாலகனான துருவன் தங்களிடம் மனதை அர்ப்பணம் செய்து படிப்படியாக வளர்ந்த கடுமையான தவத்தில் ஐந்து மாதங்களைக் கழித்தானல்லவா? (5)

தாவத்–தபோப₃ல நிருச்ச்₂வஸிதே தி₃க₃ந்தே
தே₃வார்தி₂தஸ்–த்வமுத₃யத்–கருணார்த்₃ரசேதா: ।
த்வத்₃ரூப சித்₃ரஸநிலீநமதே: புரஸ்தா–
த்₃ராவிர்ப₃பூ₄வித₂ விபோ₄ க₃ருட₃ாதி₄ரூட₄: ॥ 6 ॥

பிரபுவான ஹே குருவாயூரப்பா! அப்பொழுது (துருவன் மூச்சை அடக்கிச் செய்த) தவத்தின் வலிமையால் அனைத்து திக்கு திசைகளிலும் உள்ளவர்கள் எல்லோரும் மூச்சுவிட முடியாமல் திணறுகின்றபோது தேவர்களால் வேண்டிக் கொள்ளப்பட்டு பொங்கிய கருணையினால் களிந்த மனதுடைய தாங்கள் தங்களுடைய ஞானானந்த ஸ்வரூபத்தில் லயித்திருந்த துருவனுடைய முன்னிலையில் கருடாரூடனாகக் காட்சியளித்தீர்கள் அல்லவா? (6)

த்வத்₃தர்ஶந–ப்ரமத₃பா₄ரதரங்கி₃தம் தம்
த்₃ருக்₃ப்₄யாம் நிமக்₃நமிவ ரூபரஸாயநே தே ।
துஷ்டூஷமாணமவக₃ம்ய கபோலதே₃ஶே
ஸம்ஸ்ப்ருஷ்டவாநஸி த₃ரேண தத₃ாऽऽத₃ரேண ॥ 7 ॥

தங்களுடைய தரிசனத்தால் உண்டான ஆனந்த அலைகள் உள்ளத்தில் பொங்கி எழவே உங்களுடைய திருமேனியாகிற அமிர்தத்தில் கண் வழியே பாய்ந்து மூழ்கிவிட்டவன் போன்றிருந்த அந்த துருவன் (தங்களைத்) துதிக்க விரும்புவது அறிந்த தாங்கள் அவனுடைய கன்னத்தில் அன்புடனும், ஆதரவுடனும் (நாதமயமான பாஞ்சஜன்யம் என்கிற) சங்கால் தொட்டருளினீர்கள் அல்லவா! (7)

தாவத்விபேந்த்ரவிமலம் ப்ரணுவந்தமேந–
மாபப்ரஷ்டதாஸ்–த்வமவகம்ய ததீயபாவம் ।
ராஜ்யம் சிரம் ஸமநுபூய பஜஸ்வ பூய:
ஸ்ரோத்தரம் த்ருவபதம் விநிவ்ருத்திஹீநம் ॥ 8 ॥

அப்பொழுது அஞ்ஞானம் விலகி ஞானோதயம் உண்டாகித் தங்களைத் துதிக்கின்ற துருவனை அவனுடைய எண்ணத்தை அறிந்த தாங்கள், 'நீண்ட காலம் அரசுரிமையை நன்கு அனுபவித்து மறுபடியும் திரும்பி வருதல் இல்லாத அனைத்திற்கும் மேலான துருவ பதத்தை அடைவாயாக' என்று ஆசி கூறினீர்கள். (8)

இத்யூசிஷி த்வயி கதே நிருபநந்தநோऽஸௌ
ஆநந்திதாகிலஜநோ நகரீமுபேத: ।
ரேமே சிரம் பவதநுக்ரஹபூர்ணகாம–
ஸ்தாதே கதே ச வநமாத்ருதராஜ்யபார: ॥ 9 ॥

இவ்வாறு கூறித் தாங்கள் சென்றபிறகு அந்த அரச குமாரன் மக்கள் அனைவரையும் மகிழ்விப்பவனாக நகரத்திற்குத் திரும்பி வந்து தங்கள் அருளால் ஆசைகள் அனைத்தையும் பெற்று அனுபவித்து (நாளடைவில்) தன் தந்தை (தவத்திற்கு வேண்டி) வனம் சென்றபின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று வெகுகாலம் இன்புற்று வாழ்ந்தான். (9)

யக்ஷேண தேவ! நிஹதே புநருத்தமேऽஸ்மிந்
யக்ஷை: ஸ யுத்தநிரதோ விரதோ மநூக்த்யா ।
ஶாந்த்யா ப்ரஸந்நஹ்ருதயாத்–தநதாது:பேதாத்–
த்வத்பக்திமேவ ஸுத்ருடாம–வ்ருணோந்மஹாத்மா ॥ 10 ॥

ஹே தேவதேவா! பிறகு (ஒரு சமயம்) யக்ஷன் ஒருவனால் (தன் சகோதரனான) உத்தமன் கொல்லப்படவே, துருவன் யக்ஷர்களை எதிர்த்துப் போரிடலானான். (துருவனின் தாத்தா) ஸ்வாயம்புவ மனு (நேரிலே காட்சியளித்துப் போரைக் கைவிடும்படிக்) கூறியதால் போரை நிறுத்தினான். சமாதானத்தால் உள்ளம் மகிழ்ந்த (யக்ஷர்களின் மன்னனான) குபேரனிடம் தங்களிடம் திடமான பக்தி ஒன்றையே மஹாத்மாவான அந்த துருவன் வரமாக வேண்டிக் கொண்டான். (10)

அந்தே பவத்புருஷநீத–விமாநயாதோ
மாத்ரா ஸமம் த்ருவபதே முதிதோயமாஸ்தே ।
ஏவம் ஸ்வப்ருத்யஜநபாலந–லோலதீஸ்த்வம்
வாதாலயாதிப நிருந்தி மமாமயௌகாந் ॥ 11 ॥

முடிவில் அந்த துருவன் தங்களுடைய பார்ஷதர்களால் கொண்டு வரப்பட்ட விமானத்தில் ஏறிச் சென்று தன் தாயான ஸுநீதியுடன் துருவபதத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறான். ஹே குருவாயூரப்பா! இவ்வாறு தன் அடியார்களைக் காப்பதில் ஆவலோடு கூடிய மனதுடைய தாங்கள் என்னுடைய அடுக்கடுக்கான நோய்களை போக்கியருளுங்கள். (11)



பதினெட்டாவது தசகம்

ப்ருது சரிதம்

ஜாதஸ்ய த்ருவகுல ஏவ துங்ககீர்தே–
ரங்கஸ்ய வ்யஜநி ஸுத:ஸ வேநநாமா ।
தத்தேஷ்வ்யதி2தமதி:ஸ ராஜவர்ய–
ஸ்த்வத்பாதே3 நிஹிதமநா வநம் கதோ3ப்3த் ॥ 1 ॥

துருவனுடைய வம்சத்தில் (ஏழாவது தலைமுறையில்) தோன்றிய பெரும்புகழ் படைத்த அங்க மஹாராஜனுக்கு வேனன் என்று பெயர் கொண்ட மகன் தோன்றினான். அந்த வேனனுடைய தீய நடத்தையால் மனம் நொந்த மாமன்னனான அங்கன் தங்களுடைய திருவடிகளில் மனதைச் செலுத்தி வனம் அடைந்தான். (1)

பாபோ3பி க்ஷிதிதலபாலநாய வேந:
பௌராத்3யைருபநிஹித: கடோ3ரவீர்ய: ।
ஸர்வேப்4யோ நிஜபு3லமேவ ஸம்ப்ரமம்ஸந்
பூ4சக்ரே தவ யஜநார்ந்யயம் ந்யரௌத்ஸீத் ॥ 2 ॥

கொடூரமான வீரம் படைத்த வேனன் தீயவனாக இருப்பினும் (அவன் தந்தை வனமேகிய பின் வேறு வழியின்றி) நகர மக்கள் முதலியோரால் இப்புவியைக் காக்கும் பொருட்டு ஆட்சி பீடம் ஏற்றப்பட்டான். இந்த வேனன் எல்லோரிடமும் தன்னுடைய வலிமையையே வெகுவாகப் புகழ்ந்து கொண்டு இப்புவியில் தங்களுடைய பூஜைகளைத் தடுத்தான். (2)

ஸம்ப்ராப்தே ஹிதகத3நாய தாபஸௌகே4
மத்தோ3ந்யோ பு4வநபதிர் ந கஸ்சநேதி ।
த்வந்நிந்தா3வசநபரோ முநீஶ்வரைஸ்தை:
ஶாபாக்3நௌ ஶலப4தா3ஶாமநாயி வேந: ॥ 3 ॥

நன்மையைக் கூறவேண்டி தபோதனர்களின் கூட்டம் வந்தபோது, 'என்னிலும் உலகிற்கு மாமன்னன் வேறொருவன் இல்லையே' என்று கூறித் தங்களை இகழ்வதற்கு முனைந்த வேனனை அம்முனிவர்கள் சபிக்கவே தீயில் விழுந்த விட்டில் பூச்சிபோல் அழிந்தான். (3)

தந்நாஶாத் கூ2லஜநபீ4ருகை:–முநீந்த்3ரை–
ஸ்தந்மாத்ரா சிரபரிரக்ஷிதே தத3ங்கே3 ।
த்யக்தாகே3 பரிமதி2தா–த3தே2ருதண்ட3–
த்3தோ3ர்தண்டே3 பரிமதி2தே த்வமாவிராஸீ: ॥ 4 ॥

அவ்வாறு வேனன் அழிந்த பிறகு அவ்வேனனின் தாயான ஸுநீதையால் (அவளது தவ வலிமையால்) வெகுகாலம் காப்பாற்றி வைக்கப்பட்டிருந்த அவனுடைய உடலில், தண்டாயுதம் போன்ற துடை, தீயோர்களுக்குப் பயந்த முனிபுங்கவர்களால் (மந்திர வலிமையால்) கடையப்பட்டு அதிலிருந்து பாபம் விலகியதும், தண்டம் போன்ற கை கடையப்பட்டபொழுது தாங்கள் (அதனின்றும்) தோன்றினீர்கள். (4)

விக்²யாத: ப்ருது²ரிதி தாபஸோபதி³ஷ்டை:
ஸ²தாத்⁴வர: பரிணுதப⁴வி–பூ⁴ரிவீர்ய: ।
வேநார்த்யா கப³லிதஸம்பத³ம் த³ரித்ரீ–
மாக்ராந்தாம் நிஜது³க்³ஷா ஸமாமகார்ஷீ: ॥ 5 ॥

'ப்ருது' என்று புகழப்பட்ட தாங்கள் தபோதனர்களால் ஏவப்பட்ட துதி பாடகர்களால் எதிர்காலத்தில் செய்யவிருக்கும் பல வீரச் செயல்களைப் பற்றித் துதிக்கப் பெற்றீர்கள். வேனனின் தீய செயல்களால் மூலிகைகளான அனைத்துச் செல்வங்களையும் தன்னுள் மறைத்துக் கொண்டவளும், (அதனால் கோபமடைந்த) தங்களால் ஆக்ரமிக்கப்பட்டு மேடு பள்ளமாகவும் ஆன பூமியைத் (தாங்கள்) தங்களுடைய வில்லினால் சமமாகச் செய்தீர்கள். (5)

பூ⁴யஸ்தாம் நிஜகுலமுக்²ய–வத்ஸயுக்தை:–
தே³வாத்³யை: ஸமுசிதசாரு–பா⁴ஜநேஷு ।
அந்நாதீ³ந்யபி⁴லஷிதாநி யாநி தாநி
ஸ்வச்ச²ந்த³ம் ஸுரபி⁴துநாமதூ⁴து³ஹஸ்–த்வம் ॥ 6 ॥

மேலும் (வேண்டியதை வேண்டியபடி அளிக்கவல்ல) காமதேனுவைப் போன்ற அந்த பூமியிடமிருந்து, தேவர், மனிதன் முதலியவர்களைக் கொண்டு அவரவர் குலத்துத் தனித் தலைவர்களாகிய கன்றுகளோடு அவரவர்க்கேற்ற அழகிய பாத்திரங்களில் அன்னம் முதலிய வேண்டிய பொருட்கள் எவையோ அவற்றை வேண்டியபடி கறந்தீர்கள். (6)

ஆத்மாநம் யஜதி மகை²ஸ்த்வயி த்ரிதா⁴ம–
ந்நாரப்³தே⁴ ஸததமவாஜிமேத⁴யாகே³ ।
ஸ்பர்தா⁴லு: ஸுதமக² ஏத்ய நீசவேஷோ
ஹ்ருத்வாஸ்²வம் தவ தநயாத் பராஜிதோঽபூ⁴த் ॥ 7 ॥

ஹே விஷ்ணுவே! தாங்கள் அசுவமேத யாகங்களால் அனைத்து தேவதாஸ்வரூபமான தங்களையே ஆராதிக்கையில், நூறாவதான அசுவமேத யாகம் தொடங்கும்பொழுது பொறாமை கொண்ட (நூறு அசுவமேத யாகம் செய்த) இந்திரன் நாத்திகன் வேஷம் தாங்கி வந்து யாகக் குதிரையை அபகரித்துக் கொள்ளவே தங்கள் புதல்வனால் தோற்கடிக்கப்பட்டான். (7)

தே³வேந்த்³ரம் முஹுரிதி வாஜிநம் ஹரந்தம்
வந்ஹௌ தம் முநிவரமண்ட³லே ஜுஹ்வ²தி ।
ருந்த⁴நே கமலப⁴வே க்ரதோ: ஸமாப்தௌ
ஸாக்ஷாத்த்வம் மது⁴ரிபுமாக்ஷுத³: ஸ்வயம் ஸ்வம் ॥ 8 ॥

இவ்வாறு அடிக்கடி யாகக் குதிரையை அபகரித்த அந்த தேவேந்திரனை முனிவர்கள் ஸமூஹம் அக்னியில் ஹோமம் செய்ய முனைகையில், பிரம்மதேவர் அதைத் தடுக்க யாகத்தின்

முடிவில் தாங்கள் தங்கள் அம்சமான ஸ்ரீமஹாவிஷ்ணுவை பிரத்யக்ஷமாக நேருக்கு நேராகத் தரிசித்தீர்கள் அல்லவா? (8)

தத்³தத்தம் வரமுபலப்⁴ய ப⁴க்திமேகாம்
க³ங்கா³ந்தே விஹிதபத³: கதா³பி தே³வ ।
ஸத்ரஸ்தா²ம் முநிநிவஹம் ஹிதாநி ஶம்ஸந்
ஜக்ஷிஷ்டா: ஸநகமுகா²ந் முநீந் புரஸ்தாத் ॥ 9 ॥

ஹே தேவதேவா! அவரால் கொடுக்கப்பட்ட பக்தி ஒன்றையே வரமாகப் பெற்றுத் தாங்கள் கங்கை யமுனை சங்கமத்தில் வசிக்கையில் ஒரு சமயம் ஸத்ர யாகம் செய்து கொண்டிருக்கிற முனிவர்களுக்குத் தர்மங்களை உபதேசித்தீர்கள். அப்போது ஸநகாதி முனிவர்களை நேரில் எழுந்தருளக் கண்டீர்கள். (9)

விஜ்ஞாநம் ஸநகமுகே²தி³தம் த³தா³ந:
ஸ்வாத்மாநம் ஸ்வயமக³மோ வநாந்தஸேவீ ।
தத்தாத்³ருக் ப்ருது²வபுரீஶ ஸத்வரம் மே
ரோகே³ளகா³ம் ப்ரஶமய வாதகே³ஹவாஸிந் ॥ 10 ॥

ஸநகாதிகளில் ஒருவரான ஸநத்குமாரரால் உபதேசிக்கப்பட்ட பிரம்ம ஞானத்தை நன்கு மனதில் ஏற்று வனம் சென்று பரமாத்ம ஸ்வரூப ஞானத்தைத் தானாக அனுபவத்தீர்கள். அப்படிப் புகழ் பெற்ற பிருது சக்கரவர்த்தி வடிவில் அவதரித்த ஹே குருவாயூரப்பா! எனது பற்பல நோய்களை விரைவில் போக்குவீராக. (10)

பத்தொன்பதாவது தசகம்

தக்ஷின் தோற்றம்

ப்ருதோ³ஸ்து நப்தா ப்ருது²தீ³ர்மகா³த்ர: ப்ராசீநப³ர்ஹிர்–யுவதௌ ஶதத்³ருதௌ ।
ப்ரசேதஸோ நாம ஸுசேதஸ: ஸுதா–நஜீஜநத் த்வத்கருணாங்குராநிவ ॥ 1 ॥

பிருது மஹாராஜனின் பேரனின் பிள்ளையும் (கொள்ளுப் பேரனும்), பிருதுவைப்போல் தர்மசீலனும், வைதீக கர்மங்களில் ஈடுபாடு கொண்டவருமான 'ப்ராசீனபர்ஹிஸ்' என்பவர் 'ஶதத்ருதி' என்கிற மனைவியிடம், தங்களுடைய கருணையின் முளைகள் போன்றவர்களும், நல்ல புத்தி படைத்தவர்களுமான 'பிரசேதஸ்' என்கிற (பத்து) புத்திரர்களைப் பெற்றெடுத்தார். (1)

(ப்ருது → விஜிதாஸ்வன் → ஹவிர்தானன் → ப்ராசீனபர்ஹிஸ் → பர்ஹிஷ்மதர் என்கிற பிரசேதஸர்கள் பத்து பேர்.)

பிது: ஸிஸ்ருக்ஷாநிரதஸ்ய ஶாஸநாத்³ ப⁴வத்தபஸ்யாநிரதா த³ஶாபி தே ।
பயோநிதி⁴ம் பஶ்சிமமேத்ய தத்தடே ஸரோவரம் ஸந்த³த்³ருஶுர்–மநோஹரம் ॥ 2 ॥

உலகின் படைப்பில் பற்று கொண்ட தந்தையின் கட்டளையால் தங்களைத் தியானம் செய்து தவம் புரிய விரும்பிய அந்த பிரசேதஸர் பதின்மரும், மேற்குக் கடலின் கரையில் உள்ள மனதிற்கினிய சிறந்ததோர் தடாகத்தைக் கண்டனர். (2)

ததா₃ ப₄வத்தீர்த₂மித₃ம் ஸமாக₃தோ ப₄வோ ப₄வத்–ஸேவகத₃ர்ஶநாத்₃ருத: ।
ப்ரகாஶமாஸாத்₃ய புர: ப்ரசேதஸாமுபாதி₄ஶத்₃ ப₄க்ததமஸ் தவ ஸ்தவம் ॥ 3 ॥

அப்பொழுது தங்களது புண்ணியமான அந்தத் தடாகத்திற்குத் தங்கள் பக்தர்களில் சிறந்தவரான ஸ்ரீருத்ரன் எழுந்தருளினார். அவர் தங்களது பக்தர்களைக் காண விரும்பி மிக்க ஆவலுடன் பிரசேதஸர்களின் முன் தோன்றி, அவர்களுக்குத் தங்களைப் பற்றிய ருத்ரகீதை என்கிற தோத்திரத்தை உபதேசித்தருளினார். (3)

குறிப்பு:– 'தங்களது புண்ணியமான தடாகம்' (பவத்தீர்த்தம்) என்று பட்டத்திரி கூறுவதால், மக்கள் இத்தடாகத்தையே 'நாராயணஸரஸ்' என்றும், கங்கையை ஒக்கும் புனிதத் தன்மையுடையது என்றும் இன்றும் கூறி வருவது காண்க.

ஸ்தவம் ஜுபந்தஸ்–தமமீ ஜலாந்தரே
ப₄வந்தமாஸேவிஷதாயுதம் ஸமா: ।
ப₄வத்ஸுகா₂ஸ்வாத₃–ரஸாத₃மீஷ்வியாந்
ப₃பூ₄வ காலோ த்₃ருவவந்–ந ஶீக்₄ரதா ॥ 4 ॥

அந்த பிரசேதஸர்கள் தடாகத்தின் மத்தியில் இருந்து கொண்டு ருத்ரகீதையை பதினாயிரம் வருஷங்கள் ஜபித்துத் தங்களை வழிபட்டார்கள். தங்களிடமே ஒன்றுபட்டு பிரும்மானந்த ரசச்சுவையில் மூழ்கி இருந்ததால் இவர்களுக்கு தவத்தில் இத்துணை காலம் சென்றது. துருவனைப் போன்று தவம் குறுகிய காலத்தில் பூர்த்தி ஆகவில்லை. (4)

தபோபி₄ரேஷா–மதிமாத்₃ரவார்தி₃பி₄: ஸ யஜ்ஞ–ஹிம்ஸாநிரதோऽபி பாவித: ।
பிதாऽபி தேஷாம் க்₃ருஹயாதநாரத₃–ப்ரத₃ர்ஶிதாத்மா ப₄வதா₃த்மதாம் யயௌ ॥ 5 ॥

இந்தப் பிரசேதஸர்களினால் மிகவும் அதிகமான ஈடுபாட்டுடன் செய்யப்பட்ட தவங்களினால், வேள்விகளை அழிப்பதிலேயே கருத்துடையவனாக இருந்த (இவர்களுடைய முன்னோரான) வேனனும்கூட தூயவன் ஆனான். இவர்களுடைய தந்தையான ப்ராசீனபர்ஹிஸும் தன் இல்லத்திற்கு எழுந்தருளிய ஸ்ரீநாரத மஹரிஷியால் ஆத்மஜ்ஞானம் உபதேசிக்கப் பெற்றுத் தங்களிடம் லயம் அடைந்தார். (5)

க்ருபாப₃லேநைவ புர: ப்ரசேதஸாம் ப்ரகாஶமாகா₃: பதகே₃ந்த்₃ரவாஹந: ।
விராஜி சக்ராதி₃வராயுதா₃ம்ஶுபி₄:–பு₄ஜாபி₄ரஷ்டாபி₄ருதₘ்ஜ்ஞ்சித–த்₃யுதி: ॥ 6 ॥

கருடவாஹனராகிய தாங்கள் தங்கள் எட்டுத் திருக்கரங்களிலும் சுதர்சன சக்கரம் முதலிய சிறந்த ஒளிவீசும் ஆயுதங்களுடன் அனைத்துப் புறங்களிலும் பரவி நிற்கும் காந்தியுடன் கருணை பொங்க பிரசேதஸர்களின் முன் வந்து தோன்றினீர்கள். (6)

ப்ரசேதஸாம் தாவத₃யாசதாமபி
த்வமேவ காருண்யப₄ராத்₃ வராநத₃ா: ।
ப₄வத்₃விசிந்தாऽபி ஶிவாய தே₃ஹிநாம்
ப₄வத்₃வஸௌ ருத்₃ராநுதிஶ்ச காமத₃ா ॥ 7 ॥

அப்பொழுது தங்களிடம் எந்த ஒரு வரத்தையும் யாசிக்காத பிரசேதஸர்களின் மேல் கருணை மீதூற, 'பரம பக்தர்களான உங்களை நினைப்பதே உடல் படைத்த அனைத்து மக்களுக்கும் நன்மை பயப்பதாக ஆகட்டும். இந்த ருத்ரகீதையும் வேண்டுவார் வேண்டுவதைக் கொடுப்பதாக விளங்கட்டும்" என்ற வரங்களை அளித்தீர்கள். (7)

அவாப்ய காந்தாம் தநயாம் மஹீருஹாம்
தயா ரமத்4வம் த3ஶலக்ஷவத்ஸரீம் ।
ஸுதோ(ஸ்து த3க்ஷோ நநு தத்க்ஷணாச்ச மாம்
ப்ரயாஸ்யதே2தி ந்யக3தோ3 முதை3வ தாந் ॥ 8 ॥

'பிரசேதஸர்களே! நீங்கள் வனதேவதையாகிய மரங்களின் பெண்ணான வார்க்ஷியை மனைவியாக அடைந்து பத்து லக்ஷம் ஆண்டுகள் இன்புற்று இருங்கள். அவளிடத்தில் தக்ஷன் என்ற புத்திரன் பிறக்கட்டும். அதே நொடியில் நீங்கள் என்னை வந்தடைவீர்கள்'' என்று மகிழ்வுடன் அவர்களுக்கு வரமளித்தீர்கள் அல்லவா! (8)

ஒப்புநோக்குக:–

தே ச ப்3ரஹ்மண ஆதே3ஶாந்மாரிஷாமுபயேமிரே ।
யஸ்யாம் மஹத3வஜ்ஞாநாத3ஜந்யஜநயோநிஜ: ॥

(ஶ்ரீமத் பா4க3வதம் 4-30-48)

மகாதேவனான பரமேசுவரனை அவமதித்த குற்றத்தினால் முற்பிறவியில் பிரம்மதேவரின் மகனான தக்ஷன் மீண்டும் இங்கு வந்து பிறந்தான்.

ததஶ்ச தே பூ4தலரோதி4நஸ்–தரூந்
க்ருத4 தா3ஹந்தோ த்3ருஹிணேந வாரிதா: ।
த்3ருமைஶ்ச த3த்தாம் தநயாமவாப்ய தாம்
த்வது3க்தகாலம் ஸுகி2நோ(பி4ரேமிரே ॥ 9 ॥

பிறகு அந்த பிரசேதஸர்கள் பூமியை அடர்ந்து மறைத்துக் கொண்டிருந்த மரங்களைக் கடுஞ்சினங்கொண்டு எரிக்கத் தொடங்கியபோது பிரம்மதேவர் அவர்களைத் தடுத்தார். (பின்) தங்களுடைய வரத்தின்படி வனதேவதையால் அளிக்கப்பட்ட 'வார்க்ஷி' என்ற பெண்ணை மணந்து, தாங்கள் குறிப்பிட்ட காலம் முடியும் வரை இன்புற்று வாழ்ந்தார்கள். (9)

அவாப்ய த3க்ஷம் ச ஸுதம் க்ருதாத்4வரா:
ப்ரசேதஸோ நாரத3லப்3த4யா தி4யா ।
அவாபுராநந்த3பத3ம் தத3ர்வித4ஸ்
த்வமீஶ வாதாலயநாத2 பாஹி மாம் ॥ 10 ॥

பிரசேதஸர்கள் தக்ஷனை மகனாகப் பெற்று, பல யாகங்களைச் செய்து, நாரத மஹரிஷியிடமிருந்து பெற்ற ஞானத்தினால் பிரம்மானந்த பதவியை அடைந்தனர். ஹே குருவாயூரப்பா! அத்தகைய பெருமை பெற்ற தாங்கள் என்னைக் காக்கக் கடவீர். (10)

(உத்தானபாத மன்னனின் வம்ச சரித்திரம் இத்துடன் முடிவடைந்தது.)

ஐந்தாவது ஸ்கந்தம்

இருபதாவது தசகம்

ரிஷபதேவர் சரித்திரம்

ப்ரியவ்ரதஸ்ய ப்ரியபுத்ரஸ்ய தஸ்ய நாபி:
தஸ்மாத்ஸுதோ ராஜா மேருதேவ்யாம் ஹி நாபி: ।
த்வாம் த்ருஷ்ட்வா நிஷ்டதஸ்மிஷ்டிமத்யே
தவைவ துஷ்ட்யை க்ருதயஜ்ஞகர்மா ॥ 1 ॥

(உத்தானபாத மஹாராஜாவின் தம்பியான) பிரியவிரதனுடைய அன்பு மகனான ஆக்னீத்ரன் என்ற அரசனின் மகன் நாபி. அவர் தங்களின் உகப்புக்காகவே யாகத்தைச் செய்தார். அந்த வேள்வியின் நடுவில் வேண்டியன வேண்டுமாறு அளிக்கும் தங்களைத் தரிசித்தார். (1)

அபிஷ்டுதஸ்தத்ர முநீஸ்வரைஸ்த்வம்
ராஜ்ஞ: ஸ்வதுல்யம் ஸுதமர்த்யமாந:
ஸ்வயம் ஜநிஷ்யேஹமிதி ப்ருவாணஸ்
திரோததா பர்ஹிஷி விஸ்வமூர்தே ॥ 2 ॥

எங்கும் நிறைந்தவரே (குருவாயூரப்பா)! அந்த வேள்வியின் நடுவில் முனிவர்கள் தங்களைத் துதித்து மன்னன் நாபிக்குத் தங்களைப் போன்ற ஒரு மகன் பிறக்க வேண்டுமென்று வரம் வேண்டினார்கள். (ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயனான பகவான் என்னைப் போன்றவன் நான் மட்டும்தான். ஆகவே) 'நானே மகனாகப் பிறக்கிறேன்' என்று கூறிவிட்டு வேள்வித் தீயில் மறைந்தீர்கள் அல்லவா? (2)

நாபிப்ரியாயாமத மேருதேவ்யாம் த்வமம்ஸதோ(அ)பூ:ருஷபாபிதாந:
அலோகஸாமாந்ய குணப்ரபாவ ப்ரபாவிதாஸேஷ ஜநப்ரமோத: ॥ 3 ॥

அதன்பின் நாபியின் அன்பு மனைவியான மேருதேவியிடம் தாங்கள் உலகில் எவரிடமும் காணப்படாத உயரிய குணங்களும், பெருமைகளும் கொண்டு அனைத்து மக்களுக்கும் பேரின்பத்தை ஊட்டுபவராக 'ரிஷபதேவர்' என்ற பெயருடன் திருவவதாரம் செய்து விளங்கினீர்கள் அல்லவா? (3)

த்வயி த்ரிலோகீப்ருதி ராஜ்யபாரம்
நிதாய நாபி: ஸஹ மேருதேவ்யா
தபோவநம் ப்ராப்ய பவந்நிஷேவீ
க்ருத: கிலாநந்தபதம் பதம் தே ॥ 4 ॥

அரசன் நாபி மூவுலகங்களையும் தாங்குகின்ற உங்களிடத்தில் அரசுச் சுமையை ஒப்புவித்துத் தன் மனைவியான மேருதேவியுடன் தவம் செய்ய கானகம் சென்றான். அங்கு தங்களை வழிபட்டு பரமானந்த ஸ்தானமான தங்களது ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தான் அல்லவா? (4)

இந்த்₃ரஸ்த்வது₃த்கர்ஷ–க்ருதாத₃மர்ஷாத்₃–
வவர்ஷ நாஸ்மிந்நஜநாப₄வர்ஷே ।
யதா₃ ததா₃ த்வம் நிஜயோக₃ஶக்த்யா
ஸ்வவர்ஷமேநத்₃ வ்யத₃தா₄: ஸுவர்ஷம் ॥ 5 ॥

தேவேந்திரன் ரிஷபதேவராக அவதரித்த தங்களுடைய பெருமையைக் கண்டு பொறாமையுற்று அஜனாபம் என்ற தங்களுடைய நாட்டில் மழை பெய்யாதபடிச் செய்தான். அப்பொழுது தாங்கள் தங்களது யோக சக்தியால் தங்கள் நாட்டில் நன்கு மழை பெய்யச் செய்தீர்கள். (5)

ஜிதேந்த்₃ரதத்தாம் கமநீம் ஜயந்தீ–மதே₂ந்த்₃வஹந்–நாத்மரதாஶயோऽபி ।
அஜீஜநத்–தத்ர ஶதம் தநூஜாந்–யேஷாம் கவிீயோ ப₄ரதோऽக்₃ரஜந்மா ॥ 6 ॥

தாங்கள் ஆத்மானந்தத்திலேயே ஈடுபாடுடையவராக இருந்தபோதிலும், தங்களால் ஜயிக்கப் பெற்ற இந்திரன் அளித்த ஜயந்தி என்கிற அழகிய கன்னிகையைத் திருமணம் செய்து கொண்டு, அவளிடம் நூறு புத்திரர்களைத் தோற்றுவித்தீர்கள். அவர்களுள் மூத்தவரான பரதன் இப்பூமிக்கு அரசன் ஆனார். (6)

ஒப்புநோக்குக:–

'யேஷா கலு மஹாயோகே₃ ப₄ரதோ ஜ்யேஷ்ட₂: ஶ்ரேஷ்ட₂குண ஆஸீத்₃யேநேத₃ம் பர்ஷம் ப₄ாரதமிதி வ்யபதி₃ஶந்தி ।' (ஸ்ரீமத்₃ ப₄ாக₃வதம் 5-4-9) – அந்த பரதரால்தான் நம் நாடு 'பாரதம்' எனப் பெயர் பெற்றது.

நவாப₄வந் யோகி₃வரா நவாந்யே த்வபாலயந் ப₄ாரதவர்ஷக₂ண்டா₃ந் ।
ஸைகா த்வபரீதிஸ்தவ ஶேஷபுத்ராஸ்–தபோப₃லாத்₃ பூ₄ஸுரபூ₄யமீயு: ॥ 7 ॥

அவர்களில் ஒன்பது புத்திரர்கள் உலகப் பற்றற்ற யோகிகள் ஆனார்கள். மற்றும் ஒன்பது பேர்கள் பாரத வர்ஷத்தின் ஒன்பது பகுதிகளை ஆட்சி செய்யலானார்கள். ரிஷபதேவராகத் திருவவதாரம் செய்த தங்களுடைய மற்ற எண்பத்தோரு பிள்ளைகளும் தவ வலிமையால் நில உலக தேவர்களான பிராம்மண பதவியை அடைந்தார்கள். (7)

உக்த்வா ஸுதே₃பூ₄யோऽத₃ முநீந்த்₃ரமத்₃யே விரக்திப₄க்த்யாந்வித–முக்திமார்க₃ம் ।
ஸ்வயம் க₃த: பாரமஹம்ஸ்யவ்ருத்தி–மதா₃ ஜடே₃நாந்மத்தபிஶாசசர்யாம் ॥ 8 ॥

பிறகு தாங்கள் மாமுனிவர்கள் மத்தியில் தங்கள் புத்திரர்களுக்குப் பற்றின்மையும், பக்தியும் கொண்ட முக்தி மார்க்கத்தை உபதேசித்து, சிறந்த துறவியரின் மார்க்கத்தைக் கைக்கொண்டு மூடன், பித்தன், பேயன் ஆகியோரைப்போல் சஞ்சரித்தீர்கள் அல்லவா? (8)

பராத்மபூ₄தோऽபி பரோபதே₃ஶம் குர்வந் ப₄வாந் ஸர்வநிரஸ்யமாந: ।
விகாரஹீநோ விசசார க்ருத்ஸ்நாம் மஹீமஹீநாத்மரஸாபி₄லீந: ॥ 9 ॥

தாங்களே பரமானந்த ஸ்வரூபியாக இருந்தபோதிலும் மற்றோருக்கு ஞானோபதேசம் செய்வதன் பொருட்டு அனைவராலும் தூற்றவும், இகழவும் பட்டீர்கள். இருந்தும் 'யான்', 'எனது' என்ற பற்றின்றி மூவகை விகாரமற்ற அவதூதராகப் பரிபூரண பிரும்மானந்த ரசத்தில் திளைத்தவராக இவ்வுலகம் முழுவதும் சுற்றித் திரிந்தீர்கள். (9)

ஸயுவ்ரதம் கே3ரம்ருக3காகசர்யாம் சிரம் சரந்நாப்ய பரம் ஸ்வரூபம் ।
த3வாஹ்ருதாங்க3: குடகாசலே த்வம் தாபாந் மமாபாகுரு வாதநாத2 ॥ 10 ॥

மலைப்பாம்பு போலவும், பசு, மான், காக்கை ஆகியவற்றைப் போலவும் தனது வாழ்க்கை முறையை வெகுகாலம் கைக்கொண்டு அனைத்துயிர்களிலும் உறையும் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைந்து குடகு மலையில் காட்டுத்தீயால் விழுங்கப்பட்ட சரீரம் உடையவராக மறைந்தீர்கள் அல்லவா? அப்படிப்பட்ட குருவாயூரப்பா! தாங்கள் என்னுடைய துன்பங்களைப் போக்கியருள வேண்டும். (10)

இருபத்தோராவது தசகம்

வெவ்வேறு துவீபங்களில் பகவானது ஆராதனை

மத்4யோத்3ப4வே பு4வ இலாவ்ருதநாம்நி வர்ஷே
கெ3ளரீப்ரத4ாந–வநிதாஜந–மாத்ரப4ாஜி ।
ஸர்வேண மந்த்ரநுதிபி4: ஸமுபாஸ்யமாநம்
ஸங்கர்ஷணாத்மகமதீ3ச்வர ஸம்ச்ரயே த்வாம் ॥ 1 ॥

அனைத்திற்கும் ஆதாரமான பகவானே குருவாயூரப்பா! பூமியின் மத்தியில் இலாவிருதம் என்ற பெயர் கொண்ட பூகண்டத்தில், பார்வதி முதலிய பெண்கள் மட்டுமே வசிக்கும் இடத்தில், ஸ்ரீசிவபெருமான் ஸங்கர்ஷணன் வடிவமாகிய தங்களை மந்திரங்களாலும், துதிகளாலும் வழிபடுகிறார். அப்படிப்பட்ட ஸங்கர்ஷண ரூபியான தங்களை நான் சரணடைகிறேன். (1)

ப4த்3ராஸ்வநாமக இளாவ்ருதபூர்வவர்ஷே
ப4த்3ரச்ரவோபி4ர் ருஷிபி4: பரிணூயமாநம் ।
கல்பாந்தகூட–நிக3மோத்3த4ரணப்ரவீணம்
த்4யாயாமி தே3வ ஹயசீர்ஷதநும் ப4வந்தம் ॥ 2 ॥

தேவதேவனே! இலாவிருத த்வீபத்தின் கிழக்கில் உள்ள பத்ராஸ்வம் என்ற பூகண்டத்தில் பத்ரசிரவஸர்கள் என்ற மஹரிஷிகளால் துதித்துப் போற்றப்படுகின்ற, பிரளய காலத்தில் மறைந்து போன வேதங்களை வெளிக்கொணர்ந்த பெருமை பெற்ற ஸ்ரீஹயக்ரீவ அவதாரம் செய்த தங்களைத் தியானம் செய்கிறேன். (2)

த்4யாயயாமி த3க்ஷிணக3தே ஹரிவர்ஷவர்ஷே
ப்ரஹ்லாத3–முக2யபுருஷை: பரிஷேவ்யமாணம் ।
உத்துங்க3 ஸாந்த த3ளராக்ருதிமேகஸூத்3த4–
ஜ்ஞாநப்ரத3ம் நரஹரிம் ப4க3வந் ப4வந்தம் ॥ 3 ॥

பகவானே குருவாயூரப்பா! இலாவிருதத்திற்குத் தெற்கில் உள்ள ஹரிவர்ஷம் என்ற கண்டத்தில் பிரஹலாதன் முதலியவர்களால் நன்கு வழிபடப்படுகின்ற ஒப்பற்ற தூய அத்துவைத ஞானத்தை உபதேசிக்கின்ற உயர்ந்த சாந்தமான, வெண்மையான திருவுருவோடு விளங்கும் ஸ்ரீநரஸிம்ம வடிவினரான தங்களைத் தியானிக்கிறேன். (3)

வர்ஷே ப்ரதீசி லலிதாத்மநி கேதுமாலே
லீலாவிஶேஷ–லளிதஸ்மித–ஶோப₂நாங்க₃ம் ।
லக்ஷ்ம்யா ப்ரஜாபதிஸு²தை₂ஶ்ச நிஷேவ்யமாணம்
தஸ்யா: ப்ரியாய த்₄ருதகாமதநும் ப₄ஜே த்வாம் ॥ 4 ॥

இலாவிருதத்திற்கு மேற்கு திசையில் உள்ள அழகுமிக்க கேதுமாலம் என்னும் கண்டத்தில் அழகிய திருவிளையாடல்களாலும், புன்முறுவலாலும் சிறந்து விளங்குகின்ற அவயவங்கள் உடையவரும் ஸ்ரீமஹாலக்ஷ்மியாலும், பிரம்மதேவரின் புத்திரர்களாலும் வணங்கப்படுபவரும், அந்த ஸ்ரீமஹாலக்ஷ்மியின் மகிழ்ச்சிக்காக மன்மதன் உருவம் தாங்கியவரும் ஆன தங்களை வழிபடுகிறேன். (4)

ரம்யேऽப்யுதீ₃சி க₃லு ரம்யகநாம்நி வர்ஷே
தத்₃வர்ஷநாத₂–மநுவர்ய–ஸபர்யமாணம் ।
ப₄க்தைகவத்ஸல–மமத்ஸர–ஹ்ருத்ஸு² ப₄ாந்தம்
மத்ஸ்யாக்ருதிம் பு₄வநநாத₂ ப₄ஜே ப₄வந்தம் ॥ 5 ॥

உலகநாதனான குருவாயூரப்பா! இலாவிருதத்திற்கு வடக்கிலிருக்கும் ரம்யகம் என்ற பெயருடைய அழகிய நாட்டில் அதன் தலைவனான வைவஸ்த மனுவினால் போற்றப்படுகின்றவரும், பக்தர்களிடம் மிக்க அன்பு கொண்டவரும், பொறாமையற்ற யோகிகளின் உள்ளத்தில் விளங்குபவரும், மத்ஸ்யாவதாரம் எடுத்தவருமான தங்களை வணங்குகிறேன். (5)

வர்ஷம் ஹிரண்மய–ஸமாஹ்வய–மௌத்தராஹ–
மாஸீநமத்₃ரி–த்₄ருதிகர்மட₂–காமட₂ாங்க₃ம் ।
ஸம்ஸேவதே பித்ருக₃ணப்ரவரோऽர்யமாயம்
தம் த்வாம் ப₄ஜாமி ப₄க₃வந் பரசிந்மயாத்மந் ॥ 6 ॥

ஞானமே வடிவெடுத்த பகவானான குருவாயூரப்பா! ரம்யக வர்ஷத்திற்கு வடக்கில் உள்ள ஹிரண்மயம் என்ற பெயருடைய வர்ஷத்தில் விளங்குபவரும், மந்திர மலையைத் தாங்கும் திறன் படைத்த ஆமை வடிவில் அவதரித்தவரும் ஆன தங்களை பித்ருகணங்களின் தலைவனான ஆர்யமா நன்கு சேவிக்கிறார். அப்படிப்பட்ட தங்களை நான் வணங்குகிறேன். (6)

கிஞ் சோத்தரேஷு² குருஷு² ப்ரியயா த₄ரண்யா
ஸம்ஸேவிதோ மஹிதமந்த்ர–நுதி:ப்ரபே₄தை₃: ।
த₃ம்ஷ்ட்ராக்₃ர–க்₄ருஷ்ட–க₄நப்ருஷ்ட–க₃ரிஷ்டவர்ஷ்மா
த்வம் பாஹி விஜ்ஞுநுத யஜ்ஞவராஹமூர்தே ॥ 7 ॥

மேலும், ஞானிகளால் துதிக்கப்படுகின்ற யக்ஞ வராஹ மூர்த்தியான ஸ்ரீகுருவாயூரப்பா! 'உத்தர குரு' என்கிற கண்டத்தில் உனது அன்பு மனைவியான பூமி பிராட்டியால் பலவாறான மஹா மந்திரங்களாலும், துதிகளாலும் போற்றி வழிபாடு செய்யப் பெற்றவரும், மேகங்களின் தாழ்வரையைத் தெற்றிப் பற்களின் நுனியால் தொடும்படியான அளவிற்கு மிகவுயர்ந்த திருமேனி படைத்தவருமான தாங்கள் என்னைக் காத்தருள் புரிய வேண்டும். (7)

யாம்யாம் தி³ஶம் ப்ரஜதி கிம்புருஷாக்²யவர்ஷே
ஸம்ஸேவிதோ ஹநுமதா த்³ருட³ப⁴க்திபா⁴ஜா ।
ஸீதாபி⁴ராம–பரமாத்மபத³–ரூபஶாலீ
ராமாத்மக: பரிலஸந் பரிபாஹி விஷ்ணோ ॥ 8 ॥

ஸ்ரீவிஷ்ணுவான குருவாயூரப்பா! இலாவிருதத்திற்குத் தெற்கிலுள்ள கிம்புருஷம் என்ற த்வீபத்தில் உறுதியான பக்தியுண்ட ஸ்ரீஆஞ்சநேயரால் நன்கு சேவிக்கப்படுகிறீர்கள். ஸ்ரீசீதாதேவிக்குப் பிரியமான வியக்கத்தக்க வடிவினைக் கொண்ட ஸ்ரீராமனாக விளங்குகிறீர்கள். அத்தகைய தாங்கள் என்னைக் காத்தருள் புரிய வேண்டும். (8)

ஸ்ரீநாரதே³ந ஸஹ ப⁴ாரதக²ண்ட³முக்²யை–
ஸ்த்வம் ஸாங்க்²யயோக³நுதிபி⁴: ஸமுபாஸ்யமாந: ।
ஆகல்பகாலமிஹ ஸாது⁴ஜநாபி⁴ரக்ஷீ
நாராயணோ நரஸக²: பரிபாஹி பூ⁴மந் ॥ 9 ॥

எங்கும் நிறைந்த பரம்பொருளே! இங்கு இப்பாரத கண்டத்தில் முக்கியமான சிறந்த பக்தர்களோடு ஸ்ரீநாரத மஹரிஷியால் பிரக்ருதி புருஷ விவேக ஞானத்தினாலும், அஷ்டாங்க யோகத்தினாலும், துதி பாடல்களாலும் நன்கு உபாஸிக்கப்படுகின்றீர்கள். ஸ்ரீநரனைத் தனது தோழனாகக் கொண்டு கல்ப காலம் முடியும் வரை நல்லோர்களைக் காக்கும் ஸ்ரீநாராயண மூர்த்தியாகிய தாங்கள் என்னைக் காத்தருள வேண்டும். (9)

ப்லாக்ஷே–ர்கரூபமயி ஶால்மல இந்து³ரூபம்
த்³வீபே ப⁴ஜந்தி குஶநாமநி வந்ஹிரூபம் ।
க்ரௌஞ்சேऽம்பு³ரூப–மத² வாயுமயம் ச ஶாகே
த்வாம் ப்³ரஹ்மரூபமயி புஷ்கரநாம்நி லோகா: ॥ 10 ॥

பகவானே குருவாயூரப்பா! உலக மக்கள் தங்களை ப்லக்ஷ த்வீபத்தில் சூரியனாகவும், சால்மல த்வீபத்தில் சந்திரனாகவும், குச த்வீபத்தில் அக்னியாகவும், க்ரௌஞ்ச த்வீபத்தில் ஜலமாகவும், சாக த்வீபத்தில் வாயுவாகவும், புஷ்கர த்வீபத்தில் பிரம்மமாகவும் வழிபடுகிறார்கள். (10)

ஸர்வை–த்³ருவாதி³பி⁴ருடு³–ப்ரகரை–ர்க்³ரஹைஶ்ச
புச்ச²ாதி³கேஷ்வவயவேஷ்–வபி⁴கல்ப்யமாநை: ।
த்வம் ஶிம்ஶுமாரவபுஷா மஹதாமுபாஸ்ய:
ஸந்த்⁴யாஸு ருந்தி⁴ நரகம் மம ஸிந்து⁴ஶாயிந் ॥ 11 ॥

திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமானே! சந்தியா காலங்களில் வானில் சிம்சுமார வடிவாக மகான்களால் வணங்கப்படுகின்ற தாங்கள் வால் முதலிய உறுப்புகளில் துருவ நக்ஷத்திரம் முதலிய அனைத்து நக்ஷத்திரங்களுடனும், கிரஹங்களுடனும் கூடியவராகக் கற்பனை செய்யப்படுகிறீர்கள். அத்தகைய தாங்கள் நோயாகிய நரகத்திலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். (11)

(சிம்சுமாரம் என்பது முதலை போன்ற நீர்வாழ் பிராணி.)

பாதாளமூலபு₄வி ஶேஷதநும் ப₄வந்தம்
லோகைககுண்ட₃ல–விராஜிஸஹஸ்ரஶீர்ஷம் ।
நீலாம்ப₃ரம் த்₄ருதஹலம் பு₄ஜகா₃ங்க₃நாபி₃ர்–
ஜுஷ்டம் ப₄ஜே ஹர கு₃ரூந் கு₃ருகே₃ஹநாத₂ ॥ 12 ॥

குருவாயூரப்பா! பாதாளத்தின் அடியில் இங்குமங்கும் அசைகின்ற ஒற்றைக் குண்டலத்தோடு விளங்கும் ஆயிரம் தலைகள் உடைய, நீல ஆடை அணிந்த, கலப்பை ஆயுதம் ஏந்திய, நாக கன்னிகைகளால் சுற்றும் சூழப்பட்ட ஆதிஷேஷ வடிவம் கொண்ட தங்களை வணங்குகிறேன். என் நோய்களைப் போக்கியருள வேண்டும். (12)

குறிப்பு:– ஜம்பூத்வீபம் (ஆசியா கண்டம்). அதில், 1. இலாவிருதம் (இமயமும், திபெத்தும்), 2. பத்ராஸ்வம் (சைனா), 3. ஹரிவர்ஷம் (அரேபியா), 4. கேதுமாலம் (ஈரான், துருக்கி), 5. ரம்யகம் (ரஷ்யா, சைபீரியா), 6. ஹிரண்மயம் (மஞ்சூரியா), 7. குருவர்ஷம் (மங்கோலியா), 8. கிம்புருஷம் (இமயத்தாழ்வரை), 9. பாரத வர்ஷம் (இந்தியா) என்ற ஒன்பது பகுதிகளும் தற்போதுள்ள பெயர்களில் அடைப்பு குறியில் காட்டப்பட்டுள்ளன.

❖⁎❖⁎❖

ஆறாவது ஸ்கந்தம்

இருபத்திரண்டாவது தசகம்

அஜாமிளோபாக்கியானம்

அஜாமிளோ நாம மஹீஸுர: புரா
சரந் விபே₄ தூ₄ர்மப₃ஹூந் க்₃ருஹாஶ்ரமீ ।
கு₃ரோர்கி₃ரா காநநமேத்ய த்₃ருஷ்டவாந்
ஸுத்₄ருஷ்டஶீலாம் குலடாம் மதூ₄குலாம் ॥ 1 ॥

பிரபுவான ஹே குருவாயூரப்பா! முன்னொரு காலத்தில் அஜாமிளன் என்றொரு அந்தணன் இருந்தான். அவன் இல்லறத்தை ஏற்று அறவழியில் நின்றான். (ஒரு நாள்) தன் தந்தையின் சொற்படி (சமித்து, தர்பம் முதலியன சேகரிக்க) காட்டிற்குச் சென்று, திரும்புகையில் வெட்கமற்றவளும், குடி போதையில் மயங்கியவளுமான கற்பில்லாத பெண் ஒருத்தியைக் கண்டான். (1)

ஸ்வத: ப்ரஶாந்தோऽபி தத₃ஹ்ரூதாஶய:
ஸ்வத₄ர்ம–முத்ஸ்ருஜ்ய தயா ஸமாரமந் ।
அத₄ர்மகாரீ த₃ஶமீ ப₄வந் புநர்–
த₃தெ₄ள ப₄வந்நாமயுதே ஸுதே ரதிம் ॥ 2 ॥

இயல்பாகவே மன அமைதி படைத்திருந்தும் அம்மங்கையால் உள்ளங்கவரப்பட்டு, தனது குல தருமத்தை விடுத்து, அவளோடு கூடி காமசுகம் அனுபவித்தான். வயது முதிர்ந்து, அறநெறிக்குப் புறம்பான செயல்களையே செய்து வந்தான். 'நாராயணன்' என்ற தங்களுடைய பெயரைக் கொண்ட (கடைசி) பிள்ளையிடம் மிகவும் ஆசை வைத்திருந்தான். (2)

ஸ ம்ருத்யுகாலே யமராஜகிங்கராந் ப₄யங்கராம்ஸ்–த்ரீந–பி₄லக்ஷ்யந் பி₄யா ।
புரா மநாக்–த்வத்ஸ்ம்ருதிவாஸநாப₄லா–ஜ்ஜுஹாவ நாராயணநாமகம் ஸுதம் ॥ 3 ॥

மரணகாலம் நெருங்கி வந்தபோது அவன் மிக்க பயங்கரமான மூன்று எமபடர்களை எதிரில் கண்டு மிகவும் பயந்து, முற்பிறவியில் செய்த தங்களைப் பற்றிய ஏதோ ஒரு சிறிதளவு ஸ்மரணையின் வாஸனாபலத்தினால், நாராயணன் என்கிற பெயருடைய தன் மகனை அழைத்தான். (3)

து₃ராஶயஸ்யாபி தத₃ர்த்வநிர்கூ₃த–த்வதீ₃யநாமாக்ஷர–மாத்ரவைப₄வாத் ।
புரோபி₄பேதுர்–ப₄வதீ₃யபார்ஷத₃ா–ஸ்சதுர்பு₄ஜா: பீதபடா மநோஹரா: ॥ 4 ॥

தீய உள்ளம் படைத்தவனாயினும் மரண காலத்தில் உச்சரிக்கப்பட்ட தங்களுடைய பெயரில் உள்ள எழுத்துக்களின் பெருமையால் நான்கு திருக்கரங்களுடைய, மஞ்சள் பட்டுடுத்திய, மனத்திற்கினியவரான தங்களுடைய தூதர்கள் அவனெதிரில் தோன்றினர். (4)

அமும் ச ஸம்பாஸ்ய விகர்ஷதோ ப₄டாந் விமுஞ்சதேத்யா–ருருது₃ர்ப₄லாத₃மீ ।
நிவாரிதாஸ்தே ச ப₄வஜ்ஜநைஸ்தத₃ா ததீ₃யபாபம் நிகி₂லம் ந்யவேத₃யந் ॥ 5 ॥

அந்த விஷ்ணு தூதர்கள், அஜாமிளனைப் பாசக் கயிற்றினால் கட்டி இழுக்கும் யமபடர்களைக் கண்டு 'இவனை விட்டுவிடுங்கள்' என்று வலியச் சென்று தடுத்தனர். அப்பொழுது தங்கள் பார்ஷதர்களால் தடுக்கப்பட்ட யமதூதர்கள் அஜாமிளன் செய்த பாவங்களனைத்தையும் கூறினார்கள். (5)

ப₄வந்து பாபாநி கத₃ம் து நிஷ்க்ருதே
க்ருதேऽபி பே₄ தண்ட₃நமஸ்தி பண்டி₃தா: ।
ந நிஷ்க்ருதி: கிம் விதி₃தா ப₄வாத்₃ருஶா–
மிதி ப்ரபே₄ த்வத்புருஷா ப₃பா₄ஷிரே ॥ 6 ॥

பிரபுவே, ஸ்ரீகுருவாயூரப்பா! தங்களுடைய பார்ஷதர்கள் (யமபடர்களிடம்) ''அறநெறி கற்றறிந்த பண்டிதர்களே! பாவங்கள் (ஒருபுறம்) இருக்கட்டும். (பாவங்களுக்குப்) பிராயச்சித்தம் (கழுவாய்) செய்த பின்பும் தண்டனை எப்படி இருக்க முடியும்? உங்களைப் போன்றவர்களுக்குப் பிராயச்சித்த முறை தெரியாமலிருக்குமா என்ன?'' என்று கேட்டார்கள். (6)

ஸ்ருதிஸ்ம்ருதிப்₄யாம் விஹிதா வ்ரதாத₃ய: புநந்தி பாபம் ந லுநந்தி வாஸநாம் ।
அநந்தஸேவா து நிக்ருந்ததி த்₃வயீ–மிதி ப்ரபே₄ த்வத்புருஷா ப₃பா₄ஷிரே ॥ 7 ॥

''வேதங்கள், ஸ்ம்ருதிகள் – இவைகளில் கூறப்பட்ட விரதம் முதலியன பாவத்தைத்தான் போக்குகின்றன. ஆனால் அவை மனதில் உண்டான வாஸனைகளைப் போக்குவதில்லை. பகவானது வழிபாடோ பாவங்களையும், அதற்குக் காரணமான வாஸனைகளையும் அழித்துவிடுகின்றது'' என்று, பிரபுவே! உங்களது பார்ஷதர்கள் கூறினார்கள். (7)

அநேந பே₄ ஜந்மஸஹஸ்ரகோடிபி₄:
க்ருதேஷு பாபேஷ்வபி நிஷ்க்ருதி: க்ருதா ।
யத₃க்₃ரஹீந்நாம ப₄யாகுலோ ஹரே–
ரிதி ப்ரபே₄ த்வத்புருஷா ப₃பா₄ஷிரே ॥ 8 ॥

''ஹே யமதூதர்களே! பயத்தினால் கலங்கிய மனத்தினனான அஜாமிளன் பகவான் ஸ்ரீஹரியின் நாமத்தை உச்சரித்தான் என்ற ஒன்றே ஆயிரங்கோடி பிறவியில் செய்த பாவங்களனைத்திற்கும் பிராயச்சித்தம் செய்யப்பட்டதாக ஆகிவிட்டது'' என்று பிரபுவே குருவாயூரப்பா! உங்களது பார்ஷதர்கள் கூறினார்கள். (8)

நிருணாமபுத்₃தயாऽபி முகுந்த₃கீர்தநம்
த₃ஹத்யகே₂ளக₄நந் மஹிமாஸ்ய தாத்₃ருஶ: ।
யத₂ாऽக்நிரேத₄ாம்ஸி யதே₂ளஷித₄ம் க₃ா–
நிதி ப்ரபே₂ா த்வத்புருஷா ப₃பா₄ஷிரே ॥ 9 ॥

நெருப்பு விறகுகளை எரித்தல் போலவும், மருந்து நோய்களைப் போக்குதல் போலவும் அறியாது கூறப்படினும் பகவானான முகுந்தனுடைய திருப்பெயரோதுதல் மனிதர்களுடைய பாவக் குவியல்களை எரித்துச் சாம்பலாக்கிவிடுகிறது. அதனுடைய பெருமை அத்தகையது'' என்று பிரபுவே, குருவாயூரப்பா! உங்களது பார்ஷதர்கள் கூறினார்கள். (9)

இதீரிதைர்–யாம்யப₄டைரபாஸ்ருதே ப₄வத்₃ப₄டாநாம் ச க₃ணே திரோஹிதே ।
ப₄வத்ஸ்ம்ருதிம் கஞ்சந காலமாசரந் ப₄வத்பத₃ம் ப்ராபி ப₄வத்₃ப₄டைரஸௌ ॥ 10 ॥

இவ்விதம் கூறக் கேட்ட யமதூதர்கள் விலகிச் சென்றதும் தங்களுடைய தூதர்களும் மறைந்தார்கள். இந்த அஜாமிளன் சிறிது காலம் தங்களுடைய நாமஜபத்தை நன்கு செய்து கொண்டிருந்து பிறகு தங்களுடைய பார்ஷதர்களால் தங்கள் பதமான ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான். (10)

ஸ்வகிங்கராவேத₃ந–ஸங்கிதோ யமஸ்–த்வத₃ங்க்₄ரிப₄க்தேஷ்வ நு க₃ம்யதாமிதி ।
ஸ்வகீயப்₄ருத்யாந–ஸிஸிக்ஷுதுச்சகை: ஸ தே₃வ வாதாலயநாத₂ பாஹி மாம் ॥ 11 ॥

தனது பணியாட்கள் திரும்பி வந்து கூறியதைக் கேட்ட யமன் மிகவும் அஞ்சித் தங்களுடைய திருவடித்தாமரைக்கு அன்புபூண்டுள்ளோர் பக்கம் செல்லாதீர்கள் எனத் தனது பணியாளர்களைக் கடுமையாக எச்சரித்தார். அப்படிப்பட்ட குருவாயூரப்பா! தேவா! என்னைக் காத்தருள வேண்டும். (11)

ஒப்புநோக்குக:– ஸ்ரீமத்பாகவதம் ஆறாவது ஸ்கந்தத்தில் போஷணம் என்னும் பக்தரக்ஷணமாகிய நான்காவது லக்ஷணம் விளக்கப்படுகிறது. 1. ஸர்க்கம், 2. விஸர்க்கம், 3. ஸ்தானம், 4. போஷணம்.

'அதிலங்கித மர்யாத பக்த ரக்ஷண லக்ஷணம்' என்கிறார் ஸ்ரீதரர்.

நம்பி பிம்பியென்று நாட்டு மானிடப் பேரிட்டால்
நம்பும் பிம்புமெல்லாம் நாலுநாளில் மழுங்கிப் போம்
செம்பெருந்தாமரைக் கண்ணன் பேரிட்டழைத்தக்கால்
நம்பிகாள் நாரணன் தம் அன்னை நரகம் புகாள். **(பெரியாழ்வார் 4–6–8)**

ஸ்ரீமத்பகவத்கீதை (3/36,37)

அர்ஜுனன் : கிருஷ்ணா! பின் இந்த மனிதன் தான் விரும்பாவிட்டாலும் பலவந்தமாகத் தூண்டப்பட்டவன் போல எதனால் ஏவப்பட்டுப் பாவத்தைச் செய்கிறான்?

ஸ்ரீபகவான் : ரஜோகுணத்தினின்றும் உண்டாகிய இந்த காமம்தான் கோபமாகும். இது பெருந்தீனிக்காரன். போகங்களில் 'போதும்' என்ற எண்ணமில்லாதவன். மேலும் பெரிய பாவி. இவ்வுலகில் இதையே பகைவனாக அறிந்துகொள்.

துஞ்சும் போதழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா என்னும் நாமம். (ஐயங்கார் பாகவதம்)

❖⁎⁎⁎❖

இருபத்து மூன்றாவது தசகம்

சித்ரகேது உபாக்கியானம்

ப்ராசேதஸஸ்து ப₄க₃வந்நபரோ ஹி த₃க்ஷஸ்–
த்வத்ஸேவநம் வ்யதி₄த ஸ்க₃விவ்ருத்₃தி₄காம: ।
ஆவிர்ப₄பூ₄வித₂ தத₃ா லஸத₃ஷ்டபா₃ஹுஸ்–
தஸ்மை வரம் த₃தி₃த₂ தாம் ச வதூ₄மஸிக்நீம் ॥ 1 ॥

பகவானான ஸ்ரீகுருவாயூரப்பா! (பிரம்மபுத்திரனான) தக்ஷப்பிரஜாபதியைக் காட்டிலும் வேறான பிரசேதஸர்களிடம் தோன்றிய தக்ஷன் என்பான் தனது வம்சத்தைப் பெருக்க விரும்பித் தங்களை வழிபட்டான். அப்பொழுது தாங்கள் எண்தோள்களுடன் அவன் முன் தோன்றி அவன் (விரும்பிய) வரத்தையும், (பஞ்சஜனன் என்பவன் மகளான) அஸிக்னீ என்பவளை மனைவியாகவும் அளித்தீர்களல்லவா! (1)

தஸ்யாத்மஜாஸ்த்வயுத–மீஶ புந:ஸஹஸ்ரம்
ஸ்ரீநாரத₃ஸ்ய வசஸா தவ மார்க₃மாபு: ।
நைகத்ரவாஸம்–ருஷயே ஸ முமோச ஶாபம்
ப₄க்தோத்தமஸ்த்வ்ருஷி–ரநுக்₃ரஹமேவ மேநே ॥ 2 ॥

ஈசனே! அந்த தக்ஷனின் பிள்ளைகளான 'ஹர்யச்வர்கள்' என்ற பதினாயிரவர்களும், 'சபலாச்வர்' என்ற ஆயிரம் பேர்களும் – எல்லோருமே நாரதருடைய உபதேசத்தால் தங்களை நாடும் மோக்ஷமார்க்கத்தைத் தழுவினார்கள். (அதனால் கோபமடைந்த) தக்ஷன், மஹரிஷி நாரதருக்கு 'எங்கும் நிலையான வாஸம் இல்லாமற்போகட்டும்' என்று சாபமிட்டான். (ஆனால்) பக்தர்களில் உத்தமரான ஸ்ரீநாரத மஹரிஷி அந்த சாபத்தையும் அனுக்கிரஹமாகவே கருதினார். (குணாதீத நிலையில் உள்ள ஸ்ரீநாரதருக்கு விருப்பு–வெறுப்பென்பதே இல்லையே). (2)

ஷஷ்ட்யா ததோ து₃ஹித்ருபி₄: ஸ்ருஜத: குலைக₄ந்
தெ₃ளஹித்ர–ஸூநுரத₂ தஸ்ய ஸ விஶ்வரூப: ।
த்வத்ஸ்தோத்ர–வர்மித–மஜாபய–தி₃ந்த்₃ரமாஜௌ
தே₃வ த்வதீ₃யமஹிமா கூ₃லு ஸர்வஜைத்ர: ॥ 3 ॥

பிறகு அதிதி, திதி முதலிய அறுபது பெண்களைப் பெற்றெடுத்து வம்ச பரம்பரைகளை வளர்த்தான். அவனுடைய பெண் வயிற்றுப் பேரனுடைய மகனான விசுவரூபன் என்பவன் இந்திரனுக்கு நாராயணகவசம் என்கிற தங்களது துதியால் ரக்ஷை அளித்து தேவர்களுக்கும், அஸுரர்களுக்கும் இடையே நடந்த போரில் வெற்றி பெறச் செய்தான். தேவனே குருவாயூரப்பா! தங்களது மகிமை அனைத்தையும் வெல்லக் கூடியது அல்லவா? (3)

ப்ராக் ஶூரஸேநவிஷயே கில சித்ரகேது:
புத்ராக்₃ரஹீ ந்ருபதிரங்கி₃ரஸ: ப்ரப₄ாவாத் ।
லப்₃த்₄வைகபுத்ரமத₂ தத்ர ஹதே ஸபத்நீ–
ஸங்கை₄–ரமுஹ்யத₃வஶ்ஸ–தவ மாயயாஸௌ ॥ 4 ॥

முன்னொரு காலத்தே சூரஸேன தேசத்தில் சித்ரகேது என்ற அரசன், ஒரு மகனைப் பெற விரும்பி அங்கீரஸ மஹரிஷியை நாடினார். அவரது மகிமையால் ஒரு மகனை அடைந்து, அக்குழந்தை சக்களத்திகளின் கூட்டத்தினால் கொல்லப்பட்டபொழுது, அந்த சித்ரகேது தன்வயமிழந்து தங்களது மாயையால் மிகவும் வருந்தி மயங்கினான். (4)

தம் நாரத₃ஸ்து ஸமமங்கி₃ரஸா த₃யாலு:
ஸம்ப்ராப்ய தாவது₃பத₃ர்ஶ்ய ஸுதஸ்ய ஜீவம் ।
கஸ்யாஸ்மி புத்ர இதி தஸ்ய கி₃ரா விமோஹம்
த்யக்த்வா த்வத₃ர்சநவிதெ₄ள ந்ருபதிம் ந்யயுங்க்த ॥ 5 ॥

அப்பொழுது கருணை உள்ளம் கொண்ட நாரதர், அங்கீரஸ முனிவரோடு அவ்வரசனிடம் வந்து, அவனுடைய குழந்தையின் ஜீவாத்மாவைத் தனது யோகத் திறத்தினால் அவனுக்குக் காண்பித்தபொழுது, அக்குழந்தை, 'நான் யாருடைய மகன்?' என்று வினவவே, அந்த அரசன் மோகம் தெளிந்து, தங்களை ஆராதிக்கத் தொடங்கினான். (5)

ஸ்தோத்ரம் ச மந்த்ரமபி நாரத₃தோ₃த₃ லப்₃த்₄வா
தோஷாய பும்ஷவபுஷோ நநு தே தபஸ்யந் ।
வித்₃யாத₄ரா–தி₄பதிதாம் ஸ ஹி ஸப்தராத்ரே
லப்₃த்₄வா–ऽப்யகுண்ட₂மதி–ரந்வப₄ுங்க்₃த–ப₄வந்தம் ॥ 6 ॥

பிறகு அவ்வரசன் ஸ்ரீநாரதரிடமிருந்து ஆதிசேஷரூபியான தங்களை ப்ரீதி செய்யத் தோத்திரத்தையும், மந்திரத்தையும் பெற்றுத் தவம் புரிந்து ஏழே நாட்களில் வித்யாதரர்களுக்குத் தலைமைப் பதவியைப் பெற்றுக் குறைவற்ற புத்தியோடு தங்களைத் தொடர்ந்து சேவித்து வந்தான். (6)

தஸ்மை ம்ருணாள–த₃வளேந ஸஹஸ்ரமூர்ஷ்ணா
ரூபேண ப₃த்₃த₄நுதி–ஸித்₃த₄க₃ணாவ்ருதேந ।
ப்ராது₃ர்ப₄வந்–நசிரதோ நுதிபி₄: ப்ரஸந்நோ
த₃த்வாऽத்மதத்வ–மநுக்₃ருஹ்ய திரோத₃த்₄த₂ ॥ 7 ॥

அவனுடைய துதிகளுக்கு மகிழ்ந்து, தாமரைத் தண்டுபோல் வெண்மையான திருவுருவோடு ஆயிரம் தலைகளுடன் ஸித்தகணங்களால் சூழப் பெற்று வெகுவிரைவில் அவன் முன் தோன்றி அவ்வரசனுக்கு ஆத்ம தத்துவத்தை விளங்கச் செய்து மறைந்தருளினீர்கள் அல்லவா? (7)

த்வத்₃ப₄க்தமௌலிரத₂ ஸோऽபி ச லக்ஷ்மலக்ஷ்மம்
வர்ஷாணி ஹர்ஷுலமநா பு₄வநேஷு காமம் ।
ஸங்கா₃பயந் கு₃ணக₃ணம் தவ ஸுந்த₃ரீபி₄:
ஸங்கா₃தீரேகரஹிதோ லலிதம் சசார ॥ 8 ॥

பிறகு தங்கள் பக்தர்களில் சிறந்தவனான அந்த சித்ரகேதுவும் தங்களுடைய திருக்கல்யாண குணங்களை வித்யாதரப் பெண்மணிகளுடன் இனிமையாகப் பாடிக் கொண்டு உலக இன்பங்களில் பற்றற்றவனாகவும், மனநிறைவு கொண்டவனாகவும் லக்ஷக்கணக்கான ஆண்டுகள் தன் விருப்பம்போல் உலகங்களில் சஞ்சரித்து வந்தான். (8)

அத்யந்தஸங்க3விலயாய ப4வத்ப்ராணுந்நோ
நூநம் ஸ ரூப்யகி3ரிமாப்ய மஹத்ஸமாஜே ।
நிர்ப்4ங்க–மங்கக்ருதவல்லப4–மங்க3ஜாரிம்
தம் ப்4ங்கரம் பரிஹஸந்–நுமயாऽபிஶபே ॥ 9 ॥

அந்த சித்ரகேது உலகியல்பற்று அறவே ஒழிய வேண்டித் தங்களால் ஏவப்பட்டு வெள்ளியங்கிரியாகிய கயிலைமலை சென்றான். அங்கு பெரியோர்கள் கூடி இருக்கும் அவையில் மன்மதனை எரித்த ஸ்ரீபரமசிவன் தன் மனையாளை வெட்கமின்றி மடியில் வைத்து கொண்டு இருப்பது கண்டு ஏளனம் செய்தான். (இதைக் கண்ட) உமாதேவி அவ்வரசனைச் சபித்தாள். (9)

நிஸ்ஸம்ப்4ரமஸ்–த்வமயாசித–ஶாபமோக்ஷோ
வ்ருத்ராஸுரத்வ–முபக3ம்ய ஸுரேந்த்3ரயோதீ4 ।
ப4க்த்யாऽத்மதத்வகத2நை: ஸமரே விசித்ரம்
ஶத்ரோரபி ப்ரமமபாஸ்ய கத: பத3ம் தே ॥ 10 ॥

இதைக் கேட்ட சித்ரகேது சிறிதும் அஞ்சாது சாபத்திற்கு விடுதலையும் வேண்டாது வ்ருத்திரன் என்னும் அஸுரப் பிறவியடைந்து தேவர்களோடு போர் புரிந்து பக்தியாலும், ஆத்ம தத்துவத் தெளிவாலும் போரில் பகைவரின் மதிமயக்கத்தைப் போக்கித் தங்களுடைய இருப்பிடமான ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தான். இது மிக்க வியப்பல்லவா? (10)

த்வத்ஸேவநேந தி3திரிந்த்3ர–வதே4ரத்3யதாऽபி
தாந் ப்ரத்யுதேந்த்3ர–ஸுஹ்ருதோ3 மருதோऽபி4லேபே4 ।
து3ஷ்டாஶயேऽபி ஶுப4தை3வ ப4வந்நிஷேவா
தத்தாத்3ருஶஸ்–த்வமவ மாம் பவநாலயேஶ ॥ 11 ॥

(அஸுரர்களின் தாயான) திதி தேவி இந்திரனை வதம் செய்ய முயற்சி மேற்கொண்டபோதிலும், தங்களை வழிபட்டதனால் அதற்கு மாறாக இந்திரன் நண்பர்களான மருத்துக்களைப் பெற்றாள். தீய எண்ணம் கொண்டோரிடத்தும் தங்களுடைய சேவை நன்மை அளிப்பதாகவே ஆகிறது. குருவாயூரப்பா! அத்தகைய பெருமையுற்ற தாங்கள் என்னைக் காத்தருள வேண்டும். (11)

❋✳❋✳❋

ஏழாவது ஸ்கந்தம்

இருபத்து நான்காவது தசகம்

ஸ்ரீபிரஹ்லாத சரித்திரம்

ஹிரண்யாக்ஷே போத்ரி–ப்ரவரவபுஷா தே³வ ப⁴வதா
ஹதே ஸோக–க்ரோத⁴–க்³லபித–த்³ருதிரேதஸ்ய ஸஹஜ: ।
ஹிரண்யப்ராரம்ப⁴: கபிபு–ரமராராதி–ஸத்³ஸி
ப்ரதிஜ்ஞாமாதேநே தவ கில வத⁴ார்த³ம் மது⁴ரிபோ ॥ 1 ॥

மது என்ற அஸுரனின் பகைவனே! தேவதேவா! சிறந்த பன்றியின் உருவத்தை எடுத்துத் தாங்கள் ஹிரண்யாக்ஷனைக் கொன்றபொழுது, அவனுடைய சகோதரனான ஹிரண்யகசிபு சோகத்தாலும், கோபத்தாலும் மனவுறுதியை இழந்து தேவர்களின் பகைவராகிய அஸுரர்களின் அவையில் தங்களைக் கொல்வதாக சூளுரைத்தானாமே! அப்படித்தானே! (1)

விதி⁴தாரம் கே²ரம் ஸ கி²லு தபஸித்வா நிரத:
புர: ஸாக்ஷாத்கு³ர்வந் ஸுநர–ம்ருகை³ராத்³யை–ரநித⁴நம் ।
வரம் லப்³த்⁴வா த்³ருப்தோ ஜக³தி³ஹ ப⁴வந்நாயகமித³ம்
பரிக்ஷுந்த³ந்–நிந்த்³ராத⁴ரத தி³வம் த்வாமக³ணயந் ॥ 2 ॥

(அந்தச் சூளுரையை நிறைவேற்ற) அந்த ஹிரண்யகசிபு பிரம்மதேவரைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான். அவரும் நேரில் தோன்ற தேவர், மனிதர், விலங்குகள் முதலியவற்றால் இறவாமையை அவரிடமிருந்து வரமாகப் பெற்று, அதனால் செருக்குற்றுத் தங்களைப் பொருட்படுத்தாமல் தங்களையே தலைவனாகக் கொண்ட இவ்வுலகத்தைத் துன்புறுத்தி, இந்திரனிடமிருந்து தேவருலகையும் கைப்பற்றிக் கொண்டான். (2)

நிஹந்தும் த்வாம் பூ⁴யஸ்தவ பத³மவாப்தஸ்ய ச ரிபோ:
ப⁴ஹிர்த்³ருஷ்டே–ரந்தர்த³தி⁴த³ ஹ்ருதை³ ஸஶிஷ்மவபுஷா ।
நதந்நுச்சைஸ்–தத்ராப்யகி²ல–பு⁴வநாந்தே ச ம்ருகை³ந்
பி⁴யா யாதம் மத்வா ஸ கி²லு ஜிதகாஶீ நிவவ்ருதே ॥ 3 ॥

மேலும் தங்களைக் கொல்ல நினைத்து, தங்களுடைய ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து உலகியல் பார்வை மட்டுமே கொண்டு புறத்தே தங்களைத் தேட, தாங்கள் பகைவனான ஹிரண்யகசிபுவின் உள்ளத்தில் நுண்ணிய திருமேனியோடு மறைந்தீர்கள் அல்லவா? அதை அறியாத அவன் உரக்க கர்ஜனை செய்து கொண்டு வைகுண்டத்திலும் மற்றும் உள்ள எல்லா புவனங்களிலும் தங்களைத் தேடிக் காணாது, நீங்கள் அஞ்சி ஓடிவிட்டதாகக் கருதி, (அதனால்) தானே வென்றதாக நினைத்துத் திரும்பிச் சென்றான். (3)

ததோ:ஸ்ய ப்ரஹ்லாத³: ஸமஜநி ஸுதோ கு³ர்ப⁴வஸதௌ
முநேர்வீணாபாணே–ரதி⁴கு³தப⁴வத்³–ப⁴க்திமஹிமா ।
ஸ வை ஜாத்யா தை³த்ய: ஸிஸ்ருபி ஸமேத்ய த்வயி ரதிம்
கு³தஸ்த்வத்³ப⁴க்தாநாம் வரத³ பரமோதா³ஹரணதாம் ॥ 4 ॥

வேண்டுவார் வேண்டுவதை அளிக்கும் குருவாயூரப்பா! இந்த ஹிரண்யகசிபுவிற்கு பிரஹலாதன் என்ற ஒரு குழந்தை பிறந்தான். அவன் தாயின் கருவில் இருந்தபோதே (மஹதி என்ற) வீணையைக் கையில் ஏந்திய ஸ்ரீநாரத முனிவரிடமிருந்து தங்களுடைய பக்தியின் மகிமையை உணர்ந்தான். பிறப்பால் அவன் அஸுரனாக இருந்தபோதிலும் குழந்தைப் பருவத்தில் இருந்தே தங்களிடம் பக்தி கொண்ட (அதனால்) தங்களுடைய பக்தர்களுள் ஓர் உயர்ந்த எடுத்துக்காட்டாக விளங்கினான். (4)

ஸுராரீணாம் ஹாஸ்யம் தவ சரணதா3ஸ்யம் நிஜஸுதே
ஸ த்3ருஷ்ட்வா து3ஷ்டாத்மா கு3ருபி4–ரஸிஸிக்ஷச்–சிரமமும் ।
கு3ருப்ரோக்தம் சாஸா–வித்3மித3–மப3த்3ராய த்3ருட3மித்–
யபாகுர்வந் ஸர்வம் தவ சரணபக்த்யைவ வவ்ருதே2 ॥ 5 ॥

கொடியவனான ஹிரண்யகசிபு அஸுரர்கள் எள்ளி நகையாடும் உமது திருவடிகளிலே பக்தி கொண்டிருக்கும் தன் மகனைக் கண்டு (சண்டாமர்க்கள் முதலிய) ஆசிரியர்களைக் கொண்டு நெடுங்காலம் நல்லுபதேசம் செய்து அவனுடைய உள்ளத்தை மாற்ற ஏற்பாடு செய்தான். இந்த பிரஹலாதனும் ஆசிரியர்கள் அறிவுறுத்தியவை (அரச நெறி முதலியன) உண்மையிலேயே நன்மை பயவாதன (பிறப்பு–இறப்பு என்ற துன்பத்தைப் போக்கி இறவா பெருநிலை தருவன அல்ல) என்று அனைத்தையும் தள்ளிவிட்டுத் தங்கள் திருவடிகளிலேயே பக்தி கொண்டு வளர்ந்தான். (5)

அதீ2தேஷு ஸ்ரேஷ்ட2ம் கிமிதி பரிப்ருஷ்டோ3த2 தநயே
ப4வத்3ப4க்திம் வர்யாமபி4த3தி3தி பர்யாகுலத்3ருதி: ।
கு3ருப்4யோ ரோஷித்வா ஸஹஜமதிரஸ்யேத்யபி4வித3ந்
வதோ3பாயாநஸ்மிந் வ்யதநுத ப4வத்பாத3ஸரணே ॥ 6 ॥

பின்னொரு நாள் ஹிரண்யகசிபு 'நீ படித்தவற்றுள் சிறந்தது எது?' என்று தம் மகனைக் கேட்க, அவனும் 'இறைவனான தங்கள் பக்தியே சிறந்தது' என்று கூறினான். அதைக் கேட்ட ஹிரண்ய்கசிபு மனங்கலங்கி குருமார்களிடம் கோபமுற்றான். அவர்களும் (அது தங்கள் குற்றமன்று) பிரஹலாதனுக்கு இது இயற்கையிலேயே அமைந்தது என்று சொல்லக் கேட்டுத் தங்கள் திருவடிகளையே அடைக்கலமாகக் கொண்ட பிரஹலாதனைக் கொன்றொழிக்கப் பலப்பல வழிமுறைகளைச் செய்தான். (6)

ஸ ஶைலைராவித்த்3த4: ஸுப்3ஹு மதி3தோ தி3க்3கு3ஜகு3ணைர்–
மஹாஸர்பை–த்3ருஷ்டோபயஸுந–கு3ராஹார–விது3த: ।
கி3ரீந்த்3ராவக்ஷிப்தோ–ऽப்யஹஹ! பரமாத்மந்நயி விபே4
த்வயி ந்யஸ்தாத்மத்வாத் கிமபி ந நிபீட3ாமப4ஜத ॥ 7 ॥

எங்கும் நிறைந்த பரமாத்மாவான குருவாயூரப்பா! அந்த பிரஹலாதன் சூலங்களால் குத்தப்பட்டான். எண்டிசை யானைகளையும் கொண்டு மிதிக்கப்பட்டான். பெரும் பாம்புகளால் கடிக்கப்பட்டான். பட்டினி போடப்பட்டான். நஞ்சு கலந்த உணவைச் சாப்பிடும்படித் துன்புறுத்தப்பட்டான். பெரிய உயர்ந்த மலைச் சிகரத்தினின்றும் உருட்டித் தள்ளப்பட்டான். (இருப்பினும்) தன்னைத் தங்களிடமே ஒப்படைத்திருந்ததனால் அவன் சிறிதளவு துன்பத்தையும் அடையவில்லை. இதுவன்றோ வியப்பு! (7)

தத: சங்காவிஷ்ட: ஸ புநரதித்₃ருஷ்டோऽஸ்ய ஜநகோ
குரூக்த்யா தத்₃கே₃ஹே கில வருணபாஶஸ்–தமருணத் ।
கு₃ரோஸ்சாஸாந்நித்₄யே ஸ புநரநுக்₃ராந் தை₃த்யதநயாந்
ப₄வத்₃ப₄க்தேஸ்தத்வம் பரமமபி விஜ்ஞாநமஶிஷத் ॥ 8 ॥

(இதைக் கண்ட) பிரஹலாதனின் தந்தையும், கொடியோனுமான ஹிரண்யகசிபு செய்வதறியாது ஆசிரியர்கள் சொற்படி அவர்களின் இல்லத்திலேயே வருணனுடைய பாசக்கயிறுகளினால் அவனைக் கட்டுவித்தான் அல்லவா! (ஆனால்) அந்த பிரஹலாதனோ ஆசிரியர்கள் இல்லாதபொழுது தன்னுடன் படிக்கும் அஸுரச் சிறுவர்களுக்குத் தங்களுடைய பக்தி தத்துவத்தையும், சிறந்த ஆத்ம ஞானத்தையும் உபதேசித்து வந்தான். (8)

பிதா ஶ்ருண்வந் ப₃ாலப்ரகரமகி₂லம் த்வத்ஸ்துதிபரம்
ருஷாऽந்த₄: ப்ராஹைநம் குலஹத கஸ்தே ப₃லமிதி ।
ப₃லம் மே வைகுண்ட₂ஸ்தவ ச ஜக₃தாம் சாபி ஸ ப₃லம்
ஸ ஏவ த்ரைலோக்யம் ஸகலமிதி தீ₄ரோऽயமக₃தீ₃த் ॥ 9 ॥

தந்தையான ஹிரண்யகசிபு அஸுரச் சிறார்கள் அனைவரும் தங்களைத் துதிப்பதிலேயே ஈடுபட்டிருப்பதைச் செவியுற்று சினத்தினால் புத்தி இழந்து (அகக்கண் குருடாகி) 'குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! உனக்கு உறுதுணையாக நிற்பவன் யார்?' என்று பிரஹலாதனை அதட்டினான். (உடனே) துணிவுடைய பிரஹலாதன் (அப்பா), ''எனக்கு உறுதுணையாக நிற்பவன் ஸ்ரீவைகுண்ட நாதனான ஸ்ரீமந் நாராயணனே! (எனக்கு மட்டுமல்ல.) உங்களுக்கும் அனைத்துலகங்கட்கும் அவரே பலம் (அதாவது உறுதுணையாக நிற்பவன்). மூவுலகும் அவரே! அனைத்துமாக இருப்பவரும் அவரே!'' என்று தெளிவாகக் கூறினான். (9)

அரே க்வாஸௌ க்வாஸௌ ஸகலஜக₃த்₃மாத்மா ஹரிரிதி
ப்ரபி₂ந்தே ஸ்ம ஸ்தம்ப₄ம் சலிதகரவாளோ தி₃திஸு:த: ।
அத: பஶ்சாத்₃விஷ்ணோ ந ஹி வதி₃துமீஶோऽஸ்மி ஸஹஸா
க்ருபாத்மந் விஶ்வாத்மந் பவநபுரவாஸிந் ம்ருட₃ய மாம் ॥ 10 ॥

'(அப்பொழுது) அடே பிரஹலாதா! அனைத்துலகங்களின் ஆத்மாவாக விளங்கும் அந்த ஹரி நாராயணன் எங்கே? அவன் எங்கே?' என்று கூவிக் கொண்டு திதியின் மகனான ஹிரண்யகசிபு (எதிரிலிருந்த) தூணைக் கையில் இருந்த வாளால் பிளந்தான். உலகெங்கும் பரவி நிற்கும் நாராயணா! அதன்பின் நிகழ்ந்ததை எடுத்துக் கூற இயலாதவனாய் இருக்கிறேன். கருணாமூர்த்தியே! அகில உலக உருவானவரே! குருவாயூரப்பா! நீயே என்னை இன்புறச் செய்தருள வேண்டும். (10)

❖ ❖❖❖ ❖

இருபத்தைந்தாவது தசகம்

ஸ்ரீநரஸிம்ம அவதாரம்

ஸ்தம்பே₄ கட்டயதோ ஹிரண்யகஸிபோ: கர்ணௌ ஸமாகூர்ணயந்–
நாகூ₄ர்ணஜ்–ஜக₃த₃ண்ட₃குண்ட₃–குஹரோ கே₂ரஸ்தவாபூ₂த்₃ரவ: ।
ஸ்ருத்வா யம் கில தை₃த்யராஜஹ்ருத₃யே பூர்வம் கத₃ாப்யஸ்ருதம்
கம்ப: கம்சந ஸம்பபாத சலிதோऽப்யம்பே₄ஜபூ₄ர்–விஷ்டராத் ॥ 1 ॥

ஹிரண்யகசிபு தூணை ஓங்கி அடித்ததும் அதனுள் இருந்து கிளம்பிய தங்களுடைய சிம்மநாதம் அவனது காதுகளைப் பிளப்பது போன்றும், பேரண்டத்தில் இருக்கும் சராசரங்கள் அனைத்தையும் கலங்கச் செய்வதாகவும், மிகுந்த அச்சத்தைக் கொடுப்பதாகவும் இருந்தது. இதற்கு முன் கேட்டிராத அந்தச் சத்தத்தைக் கேட்டு அஸுர மன்னனது உள்ளத்தில் இன்னது என்று கூற முடியாத ஒரு நடுக்கம் உண்டாயிற்று. பிரம்மதேவரும் தமது இருக்கையிலிருந்து நழுவினார். ஆஹா! என்னே வியப்பு! (1)

தை₃த்யே தி₃க்ஷு விஸ்ருஷ்டசக்ஷுஷி மஹாஸம்ரம்பி₄ணி ஸ்தம்ப₄த:
ஸம்பூ₂தம் ந ம்ருகா₃த்மகம் ந மநுஜாகாரம் வபுஸ்தே விபே₄ ।
கிம் கிம் பீ₄ஷணமேத–த்₃பு₄தமிதி வ்யுத்₃ப்₄ராந்த–சித்தேஸுரே
விஸ்பூ₂ர்ஜ்ஜத்₃–த₄வளோக்₃ர–ரோமவிகஸத்₃–வர்ஷ்மா ஸமாஜ்ரும்ப₄தா₂: ॥ 2 ॥

ஹே பிரபோ! குருவாபுரப்பா! கடுஞ்சினம் கொண்ட அஸுரன் அனைத்து திசைகளிலும் சுற்றிப் பார்க்கையில் அத்தூணினின்றும் தங்கள் திருமேனி வெளிப்பட்டது. அது விலங்கின் உருவமும் அன்று; மனிதன் உருவமும் அன்று. அச்சமும், வியப்பும் அளிக்கும் வகையில் உள்ள 'இது என்ன? இது என்ன?' என்று அவ்வஸுரன் கலங்கிய மனத்தினனாய் நிற்கையில் பரந்து வெளுத்து பயங்கரமான பிடரி மயிர்களுடன் ஒளிமிகுந்த உருவத்துடன் தாங்கள் வளர்ந்து நின்றீர்கள் அல்லவா? (2)

தப்தஸ்வர்ண–ஸவர்ணகூ₂ர்ண–த₃்ருக்ஷாக்ஷம் ஸடாகேஸர–
ப்ரோத்கம்ப–ப்ரநிகும்பி₃தாம்ப₃ரமஹோ ஜீயாத்–தவேத₃ம் வப:: ।
வ்யாத்தவ்யாப்த–மஹாத₃ீஸகூ₂முகூ₂ம் கூ₂ட்கே₃ர்க்₃ரவல்கூ₃ங்மஹா–
ஜிஹ்வாநிர்க₃ம–த்ருஷ்யமாந–ஸுமஹாதா₃ஷ்ட்ரா–யுகே₃ாட்₃டா₃மரம் ॥ 3 ॥

உருக்கிய பொன் போன்ற ஒளியுடன் சுழலும் அச்சம் ஊட்டும் கண்கள், இங்குமங்கும் அசைவதால் ஆகாயத்தையே மறைப்பவை போன்ற பிடரி மயிர்கள், விரிந்து அகன்று பெரிய குகை போன்று விளங்கும் வாய், கத்தியைப் போன்று சுழலும் பயங்கரமான நீண்ட நாக்கு, அந்த நாக்கு வெளிவரும்போது காணப்படும் அச்சம் விளைவிக்கும் மிகப்பெரிய இரண்டு தெற்றிப் பற்கள், இப்படி விளங்கும் தங்கள் திருவுருவம் மிக்க வியப்புக்குரியதே, அது மேன்மையுற்று வெற்றியோடு விளங்கட்டும். (3)

உத்ஸர்பத்₃–வலிப₄ங்க₃பீ₄ஷணஹநும் ஹ்ரஸ்வஸ்த₂வீயஸ்தர–
க்₃ரீவம் பீவரதே₃ாஸ்–ஸுதோத்₃க₃தநக₂–க்ரூராம்ஸுதூ₃ரோல்ப₃ணம் ।
வ்யோமோல்லங்கி₄ க₄நாக₄நோபமக₄ந–ப்ரத்₃வாந–நிர்த₃ாவித–
ஸ்பர்த்₃த₄ாலுப்ரகரம் நமாமி ப₄வதஸ்–தந்நாரஸிம்ஹம் வப:: ॥ 4 ॥

(தாங்கள்) கர்ஜனை செய்கையில் மேலெழும் மடிப்புக் கோடுகளால் பயங்கரமாக விளங்கும் கன்னங்கள், பருத்தும் குறுகியும் உள்ள கழுத்து, எங்கும் பரவிய நகங்களின் ஒளியால் பயங்கரமான பல பருத்த கைகள். வானளாவி பகைவரை விரட்டுவதும், மேகங்களின் இடி போன்றதுமான கர்ஜனை. இத்தகைய தங்களுடைய இந்த நரஸிம்ம ஸ்வரூபத்தை வணங்குகிறேன். (4)

நூநம் விஷ்ணுரயம் நிஹந்மயமிதி ப்₃ராம்யத்₃க₃தா₃பீ₄ஷணம்
தை₃த்யேந்த்₃ரம் ஸமுபாத்₃ரவந்த–மத்₄ருதா₄ தே₃ர்ப்₄யாம் ப்ருது₂ப்₄யாமமும் ।
வீரோ நிர்க₃ளிதோऽத₂ க₂ட்₃க₃ப₂லகே க்₃ருஹ்ணந்–விசித்ரஸ்ஸரமாந்
வ்யாவ்ருண்வந் புநராபபாத புநவக்₃ராஸோத்₃யதம் த்வாமஹோ ॥ 5 ॥

'நிச்சயமாக இவன் விஷ்ணுதான். இவனைக் கொல்வேன்' என்று கூறிக் கொண்டு பயங்கரமாகத் தனது கதாயுதத்தைச் சுழற்றிக் கொண்டு பாய்ந்து வரும் அந்த அஸுரனைத் தங்களுடைய பருத்த பெரிய கைகளால் பிடித்துக் கொண்டீர்கள். அந்த வீரன் தங்கள் பிடியினின்றும் நழுவி வாளையும், கேடயத்தையும் எடுத்துக் கொண்டு வியக்கத்தக்க முறையில் தனது மற்போர் திறனை நன்கு வெளிப்படுத்தி உலகையே விழுங்குவது போன்று இருக்கும் தங்களை நோக்கி மறுபடியும் ஓடி வந்தான். இது பெருத்த வியப்பல்லவா? (5)

ப்₃ராம்யந்தம் தி₃தி₃ஜாத₃மம் புநரபி ப்ரோத்க்₃ருஹ்ய தே₃ர்ப்₄யாம் ஜவாத்₃
த்₃வாரேऽதே₂ருயுகே₃ நிபாத்ய நக₂ராந் வ்யுத்க₂ாய வக்ஷோபு₄வி ।
நிர்பி₄ந்தந்₂–நதி₃க₃ர்ப₄நிர்ப₄ரக₃ளத்₃–ரக்தாம்பு₃ பா₃த்₃தே₄ாத்ஸவம்
பாயம் பாயமுதை₃ரயோ பா₃ஹூஜக₃த் ஸம்ஹாரி–ஸிம்ஹாரவாந் ॥ 6 ॥

பிறகு, சுற்றிச் சுற்றி வருகின்ற அஸுரப்பதரான ஹிரண்யகசிபுவை மறுபடியும் தனது கைகளால் வேகமாகத் தூக்கி எடுத்துக் கொண்டு அரச மண்டபத்தின் வாயிற்படியில் அமர்ந்து தனது தொடைகளின் மேல் படுக்க வைத்து, அவனுடைய மார்பில் தங்களது நகங்களைப் பாய்ச்சி உடலைக் கிழித்து அவன் வயிற்றிலிருந்து வேகமாகப் பெருகி வரும் இரத்தத்தை மிகவும் உற்சாகத்துடன் திரும்பத் திரும்பப் பருகி அனைத்துலகங்களையும் அழிப்பதுபோல ஸிம்ம கர்ஜனைகள் முழக்கினீர்கள் அல்லவா? (6)

த்யக்த்வா தம் ஹதமாஸு ரக்தலஹரீ–ஸிக்தோந்நமத்₃வர்ஷ்மணி
ப்ரத்யுத்பத்ய ஸமஸ்ததை₃த்யபடலீம் சாக்₃ராத்₃யமாநே த்வயி ।
ப்₃ராம்யத்₃பூ₄மி விகம்பிதாம்பு₃தி₄குலம் வ்யாலோல–ஸைலோத்கரம்
ப்ரோத்ஸர்பத்கசரம் சராசரமஹோ து₃:ஸ்தா₂மவஸ்தா₃ம் த₃தெ₄ள ॥ 7 ॥

இரத்த பெருக்கினால் நனைந்த உயர்ந்த திருமேனியை உடைய தாங்கள் உயிரிழந்த அவ்வஸுரனின் உடலை விட்டெறிந்து பின் விரைவாகத் தாவி எல்லா அஸுரக் கூட்டங்களையும் கடித்துச் சாப்பிடத் தொடங்கினீர்கள். அப்பொழுது பூமி சுழன்றது. கடல்கள் கலங்கின. மலைகள் நிலைகுலைந்தன. நக்ஷத்திரங்கள் சிதறின. சராசர பிரபஞ்சம் அனைத்தும் நிலை தடுமாறின. என்னே வியப்பு! (7)

தாவந்மாம்ஸ–வபாகராளவபுஷம் கே₂ாரான்த்ரமாலாத₃ரம்
த்வாம் மத்₄யேஸப₄–மித்₃த₄ரோஷமுஷிதம் து₃ர்வாரகு₂ர்வாரவம் ।
அப்₄யேதும் ந ஶஶாக கோऽபி பு₄வநே தூ₃ரே ஸ்தி₂தா பீ₄ரவ:
ஸர்வே ஶர்வ–விரிஞ்சவாஸவமுகா₂: ப்ரத்யேகமஸ்தோஷத ॥ 8 ॥

அப்பொழுது மாமிசத்தாலும், கொழுப்பாலும் பூசப்பெற்ற தங்களுடைய திருமேனி மிகவும் அச்சத்தைக் கொடுத்தது. பயங்கரமான குடல்களை மாலையாக அணிந்திருந்தீர்கள். அரச மண்டபத்தின் மத்தியில் மிக்க கோபாவேசத்துடன் எவராலும் விலக்க முடியாதவாறு தங்களது அட்டகாசம் இருந்தது. இந்நிலையில் தங்களை நெருங்குவதற்கு உலகில் எவரும் ஆற்றல் உடையராக இல்லை. பரமசிவன், பிரம்மதேவர், இந்திரன் முதலிய எல்லோரும் மிக்க பயத்துடன் வெகுதொலைவில் நின்றுகொண்டு தனித்தனியே தங்களைத் துதித்தனர். (8)

பூ4யோऽப்யக்ஷத–ரோஷத4ாம்நி ப4வதி ப்3ரஹ்மாஜ்ஞயா ப3ாலகே
ப்ரஹ்லாதே3 பத3யோர்நமத்–யபப4யே காருண்யப4ராகுல: ।
சாந்தஸ்த்வம் கரமஸ்ய மூர்த்4நி ஸமத4ா: ஸ்தோத்ரைரதே2ாத்3க்3ாயதஸ்
தஸ்யாகாமதி4யோऽபி தேநித2 வரம் லோகாய சாநுக்3ரஹம் ॥ 9 ॥

அப்பொழுதும் சினந்தணியாமல் இருந்ததால் பிரம்மதேவரின் கட்டளையை மேற்கொண்டு பாலகன் பிரஹலாதன் அச்சமின்றித் தங்கள் திருவடிகளில் வணங்கினான். உடனே, கருணை ததும்பத் தாங்கள் அவன் தலைமேல் கையமர்த்தி அருள் புரிந்தீர்கள் அல்லவா? அவன் பல தோத்திரங்களால் தங்களைத் துதித்தான். (பக்தியைத் தவிர) வேறு எதையும் விரும்பாதவனாக இருப்பினும் அவனுக்கு வரத்தை அருளினீர்கள். உலகத்திற்கும் அருள்புரிந்தீர்கள். (9)

ஏவம் நாடித–ரௌத்3ரசேஷ்டித விபே4ா ஸ்ரீதாபநீயாபி4தி4–
ஶ்ருத்யந்தஸ்பு2டகீ3த–ஸர்வமஹிமந்–நத்யந்தமஶாந்தாத்மநாக்ருதே ।
தத்தாத்3ருங்–நிகி2லோத்தரம் புநரஹோ கஸ்த்வாம் பரோ லங்க4யேத்
ப்ரஹ்லாத3ப்ரிய ஹே மருத்புரபதே ஸர்வாமயாத்–பாஹி மாம் ॥ 10 ॥

இங்ஙனே அச்சத்தை அளிக்கக்கூடிய திருவிளையாடல்களைப் புரிந்த குருவாயூரப்பா! 'ந்ருஸிம்மதாபினீ' என்ற உபநிஷத்தில் நன்கு தெளிவாக கானம் செய்யப்பட்ட அனைத்துப் பெருமைகளையும் படைத்த பிரபுவே! ஒத்தாரும், மிக்காரும் இல்லாத தூய்மையின் எல்லை நிலமாகியவரே! அனைத்திற்கும் அப்பாலாக விளங்கும் உங்களைத் தங்கள் பக்தர்கள் அல்லாது வேறு யார்தான் மீறக்கூடும்? பிரஹலாதனிடம் மிக்க அன்பு கொண்டவரே! என்னை எல்லா நோய்களிலிருந்தும் காத்தருள வேண்டும். (10)

எட்டாவது ஸ்கந்தம்

இருபத்தாறாவது தசகம்

கஜேந்திர மோக்ஷம்

இந்த்3ரத்3யும்ந: பாண்ட்3யகே2ண்டே3ாதி4ராஜஸ்–
த்வத்3ப4க்தாத்மா சந்த3நாத்3ரௌ கத3ாசித் ।
த்வத்ஸேவாயாம் மக்3நதீ4ராலுலோகே
நைவாக3ஸ்த்யம் ப்ராப்தமாதி2த்3யகாமம் ॥ 1 ॥

தங்களிடம் மிக்க பக்தி கொண்ட இந்த்ரத்யும்னன் என்ற பாண்டிய நாட்டு அரசன் ஒரு சமயம் மலய பர்வதத்தில் (பொதிய மலையில்) தங்களுடைய பூஜையில் ஆழ்ந்த மனமுடையவராக இருக்கையில் அதிதியாக (விருந்தாளியாக) அங்கு வந்த அகஸ்திய முனிவரைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. (1)

கும்பே₄த்₃பூ₄தி: ஸம்ப்₄ருதக்ரோத₂ப₂ர:
ஸ்தப்₃தா₄த்மா த்வம் ஹஸ்திபூ₄யம் ப₄ஜேதி ।
ஶப்த்வாஸை₂நம் ப்ரத்யகா₃த்–ஸோபி லேபே₄
ஹஸ்தீந்த்₃ரத்வம் த்வத்ஸ்ம்ருதி–வ்யக்திதா₄ந்யம் ॥ 2 ॥

(இதைக் கண்டு) கடுஞ்சினம் கொண்ட குடமுனிவரான அகஸ்தியர் 'செருக்கினால் அசையாமல் இருந்த நீ யானையாகக் கடவாய்' என்று சபித்துவிட்டுத் திரும்பிச் சென்றார். அம்மன்னவனும் தங்களுடைய நினைவே என்றும் இருக்கும் பேறுபெற்ற கஜேந்திரனின் பிறவியை அடைந்தான். (2)

து₃க்₃த₄ாம்பே₄தே₂ர்–மத்₄யப₂ாஜி த்ரிகூடே
க்ரீட₃ஞ்ஜை₂லே யூத₂போஸயம் வஸாபி₄: ।
ஸர்வாந் ஜந்தூ–நத்யவர்திஷ்ட ஶக்த்யா
த்வத்₃ப₄க்தாநாம் குத்ர நோத்கர்ஷலாப₄: ॥ 3 ॥

பாற்கடலின் நடுவிலே விளங்கும் திரிகூட மலையில் பெண் யானைகளோடு விளையாடிக் கொண்டிருக்கும் இந்த கஜேந்திரன் வலிமையில் அனைத்துப் பிராணிகளையும் மீறி இருந்தது. தங்களது பக்தர்களுக்கு எங்குதான் மேன்மை கிடைப்பதில்லை? (3)

ஸ்வேந ஸ்தே₂ம்நா தி₃வ்யதே₃ஶத்வஶக்த்யா
ஸோஸயம் கே₂தா₃நப்ரஜாநந் கதா₃சித் ।
ஶைலப்ராந்தே கா₃ர்மதாந்த: ஸரஸ்யாம்
பூ₄தை₂: ஸார்த₄ம் த்வத்ப்ரணுந்நோபி₄ரேமே ॥ 4 ॥

அந்த கஜேந்திரன் தனது இயல்பான வலிமையினாலும், தான் வாழும் தெய்வத்தன்மை பொருந்திய இடத்தின் பெருமையாலும் துன்பம் என்பதையே அறியாது இருந்தது. ஆயினும் ஒருக்கால் வெய்யிலின் கடுமையால் சோர்ந்து களைத்துத் திரிகூட மலையின் அருகில் இருந்த ஒரு குளத்தில் தனது யானைக் கூட்டங்களுடன் தங்களால் தூண்டப்பட்டு (விதியின் வலிமையால் தூண்டப்பட்டு) திளைத்துக் கொண்டிருந்தது. (4)

ஹூஹூஸ்–தாவத்₃–தே₃வலஸ்யாபி ஶாபாத்
க்₃ராஹீபூ₄தஸ்–தஜ்ஜலே வர்தமாந: ।
ஜக்₃ராஹைநம் ஹஸ்திநம் பாத₃தே₃ஶே
ஶாந்த்யர்த₂ம் ஹி ஶ்ராந்திதே₂ஸஸி ஸ்வகாநாம் ॥ 5 ॥

அப்பொழுது 'தேவலர்' என்ற மஹரிஷியின் சாபத்தால் 'ஹூஹூ' என்ற கந்தர்வன் முதலையாகி அக்குளத்தில் வசித்து வந்தான். அவன் கஜேந்திரனின் காலைக் கவ்விப் பிடித்துக் கொண்டான். தாங்கள் தங்களுடைய பக்தர்களுக்கு அமைதி என்ற ஞானம் ஏற்படவேண்டி துன்பத்தை அளிப்பவராகவும் இருக்கிறீர்கள் அல்லவா? (5)

த்வத்ஸேவாயா வைப₂வாத்₃–து₃ர்நிரோத₄ம்
யுத்₄யந்தம் தம் வத்ஸராணாம் ஸஹஸ்ரம் ।
ப்ராப்தே காலே த்வத்பதை₃காக்₃ர்ய–ஸித்₃த்₄யை
நக்ராக்ராந்தம் ஹஸ்திவர்யம் வ்யத₄ாஸ்த்வம் ॥ 6 ॥

தங்களை ஆராதித்த பெருமையால் சிறந்த அந்த யானை ஆயிரம் ஆண்டுகள் இடையறாது போராடிக் கொண்டு இருந்தது. தங்களுடைய ஸ்தானமாகிய வைகுண்டத்தை அடைதற்குரிய காலம் வந்தபொழுது, அந்த யானையை முதலையினால் பீடிக்கப்பட்டதாகச் செய்தீர்கள் அல்லவா? (அதாவது பகவானது திருவடியில் இடையறாத பக்தி சித்திப்பதற்காக அந்த ஜீவனிடம் கொஞ்ச நஞ்சம் உள்ள 'யான், எனது' என்ற பற்று அற்றுப் போகவே பகவான் இம்மாதிரியான சோதனைகளை அளிக்கிறார்.) (6)

ஆர்திவ்யக்த–ப்ராக்தந–ஜ்ஞாநப₄க்தி:
ஸுண்டே₃ாத்க்ஷிப்தை: புண்ட₃ரீகை: ஸமர்சந் ।
பூர்வாப்₄யஸ்தம் நிர்விஸேஷாத்மநிஷ்ட₂ம்
ஸ்தோத்ரஸ்ரேஷ்ட₂ம் ஸோऽந்வக₃ாதீத் பராத்மந் ॥ 7 ॥

எங்கும் உறையும் பரமாத்மாவே! அந்த கஜேந்திரன் துன்பம் தாளாது முற்பிறப்பின் ஞானமும், பக்தியும் விளங்கப் பெற்று உயரத் தூக்கப் பெற்ற துதிக்கையில் தாமரைப்பூக்களை எடுத்துத் தங்களை அர்ச்சித்தது. முற்பிறப்பில் பயின்ற குணமற்ற பரப்பிரம்மத்தைப் போற்றும் சிறந்ததொரு தோத்திரத்தையும் பாடியது. (7)

ஸ்ருத்வா ஸ்தோத்ரம் நிர்கு₃ணஸ்த₂ம் ஸமஸ்தம்
ப்₃ரஹ்மேஸாத்₃யைர் நாஹமித்யப்ரயாதே ।
ஸர்வாத்மா த்வம் பூ₄காருண்ய–வேக₃ாத்
தார்க்ஷ்யாரூட₄: ப்ரேக்ஷிதோऽபூ₄: புரஸ்தாத் ॥ 8 ॥

நிர்குண பிரம்மத்தைப் பற்றிய துதி முழுவதையும் செவியுற்ற பிரம்மா, சிவன் முதலியவர்கள் நானல்ல, நானல்ல என்று (கஜேந்திரனைக் காக்க) வராமல் இருந்தபொழுது அனைத்திற்கும் அந்தர்யாமியாக விளங்கும் தாங்கள் அளவற்ற கருணையின் வேகத்தால் கருடன் மேலேறி வந்து அந்த யானையின் முன் தோன்றினீர்கள். (8)

ஹஸ்தீந்த்₃ரம் தம் ஹஸ்தபத்₃மேந த்₄ருத்வா
சக்ரேண த்வம் நக்ரவர்யம் வ்யத₃ாரீ: ।
க₃ந்த₄ர்வேऽஸ்மிந் முக்தஸாபே ஸ ஹஸ்தீ
த்வத்ஸாரூப்யம் ப்ராப்ய தே₃தீ₃ப்யதே ஸ்ம ॥ 9 ॥

அந்த கஜேந்திரனை நீங்கள் உங்களது தாமரைத் தடக்கையால் பிடித்துக் கொண்டு சுதர்சன சக்கரத்தால் அந்தப் பெரிய முதலையைக் கிழித்தீர்கள். அப்பொழுது அந்த முதலை சாபத்திலிருந்து விடுபட்டு கந்தர்வன் ஆகிவிடவே, அந்த யானை தங்களது சாரூப்ய முக்தி அடைந்து விளங்கியது. (9)

ஏதத்³ வ்ருத்தம் த்வாம் ச மாம் ச ப்ரகே³ யோ
கா³யேத்–ஸோऽயம் பூ⁴யஸே ஶ்ரேயஸே ஸ்யாத் ।
இத்யுக்த்வைநம் தேந ஸார்த்³தம் கு³தஸ்த்வம்
தி³ஷ்ண்யம் விஷ்ணோ பாஹி வாதாலயேஶ ॥ 10 ॥

'உன்னையும், என்னையும் நினைத்து எவன் இச்சரித்திரத்தை விடியற்காலையில் கூறுவானோ, அவன் மிக உயர்ந்த நன்மையை அடைவான்' என்று கூறி, அந்த கஜேந்திரனையும் அழைத்துக் கொண்டு வைகுண்டத்தினை அடைந்தீர்கள் அல்லவா? எங்கும் நிறைந்த குருவாயூரப்பா! என்னைக் காத்தருள வேண்டும். (10)

இருபத்தேழாவது தசகம்

அம்ருத மதனம்

துர்வாஸா: ஸுரவநிதாப்த தி³வ்யமால்யம்
ஶக்ராய ஸ்வயமுபதா³ய தத்ர பூ⁴ய: ।
நாகே³ந்த்³ர–ப்ரதிம்ருதி³தே ஶஶாப ஶக்ரம்
கா க்ஷாந்திஸ்–த்வதி³தர–தே³வதாம்ஶ–ஜாநாம் ॥ 1 ॥

துர்வாஸ மஹரிஷி, தெய்வப் பெண்மணியான அப்ஸரஸ்ஸிடமிருந்து தான் பெற்ற தெய்வீக மாலையைத் தானாகவே இந்திரனுக்குக் கொடுத்தார். அவன் அதை ஐராவதத்தின் தலையில் அணிவித்தான். அந்த ஐராவதம் புஷ்ப மாலையை(க் கீழே தள்ளி) மிதித்துப் பாழ்படுத்தியது. (அதைக் கண்ட) துர்வாஸர் இந்திரனைச் சபித்தார். தங்களைத் தவிர மற்ற தேவதைகளின் அம்சத்தில் தோன்றியவர்களுக்குப் பொறுமை என்பது ஏது? (1)

ஶாபேந ப்ரதி³த–ஜரேத³ நிர்ஜரேந்த்³ரே
தே³வேஷ்வப்யஸுர–ஜிதேஷு நிஷ்ப்ரபே⁴ஷு ।
ஶர்வாத்³யா: கமலஜமேத்ய ஸர்வதே³வா:
நிர்வாணப்ரப⁴வ ஸமம் ப⁴வந்தமாபு: ॥ 2 ॥

மோக்ஷத்தை அளிக்கும் குருவாயூரப்பா! சாபத்தினால் (வலிமை குன்றி) மூப்பினை அடைந்த தேவர்கோன் மற்றும் தேவர்கள், அஸுரர்களால் வெற்றி கொள்ளப்பட்டு ஒளியிழந்தவர்களாக பரமசிவன் முதலான எல்லா தேவர்களுடன் பிரம்மாவிடம் சென்று அவரையும் அழைத்துக் கொண்டுத் தங்களை வந்தடைந்தார்கள். (2)

ப்ரஹ்மாத்மய: ஸ்துதமஹிமா சிரம் தத்ராநீம்
ப்ராது³ஷ்யந் வரத³ புர: பரேண தா⁴ம்நா ।
ஹே தே³வா தி³திஜகுலைர்வித்ராய ஸந்தி³ம்
பீயூஷம் பரிமத²தேதி பர்யஶாஸ்த்வம் ॥ 3 ॥

வேண்டுவார் வேண்டுவதை அளிக்கும் ஹே குருவாயூரப்பா! பிரம்மா முதலிய தேவர்கள் வெகுகாலம் தங்களது பெருமைகளைப் புகழ்ந்து துதித்தார்கள். அப்பொழுது

தாங்கள் மிகுந்த ஒளியோடு அவர்கள் முன் தோன்றி, 'தேவர்களே! அஸுரர்களுடன் உடன்பாடு செய்து கொண்டு அமுதத்தைப் பெற பாற்கடலைக் கடையுங்கள்' என்று கட்டளையிட்டீர்கள். (3)

ஸந்த4ாநம் க்ருதவதி த3ாநவை: ஸுரைகே3
மந்த3ாநம் நயதி மதே3ந மந்த3ராத்3ரிம் ।
ப்4ரஷ்டேऽஸ்மிந் ப3த3ரமிவோத்3வஹந் க3ருத்மாந்
ஸத்3யஸ்த்வம் விநிஹிதவாந் பய:பயோதெ4ள ॥ 4 ॥

தேவர்கள் அனைவரும் அஸுரர்களுடன் சமாதானம் செய்து கொண்டு மிகுந்த செருக்கோடு மந்தர மலையை மத்தாக எடுத்து வரும் வேளையில், அம்மலை வழியிலேயே நழுவிக் கீழே விழவே, தாங்கள் அம்மலையைப் புள்ளரசனான கருடன் மேல் ஓர் இலந்தைப் பழத்தைப்போல் எளிதாக எடுத்து வைத்துப் பாற்கடலில் கொண்டு போய் வைத்தீர்கள் அல்லவா? (4)

ஆத4ாய த்3ருதமத2 வாஸுகிம் வரத்ராம்
பாதே3ாதெ4ள விநிஹித–ஸர்வபீ4ஜாலே ।
ப்ரார‌ப்3தே4 மத2நவிதெ4ள ஸுராஸுரைஸ்தை:–
வ்யாஜாத் த்வம் பு4ஜக3முகே2ऽகரோ: ஸுராரீந் ॥ 5 ॥

பிறகு தேவர்களும், அஸுரர்களும் 'வாஸுகி' என்னும் நாகராஜனைக் கடைவதற்குக் கயிறாகக் கொண்டு சகலவிதமான மூலிகைகளையும் பாற்கடலில் இட்டுக் கடையத் தொடங்கினர். அப்பொழுது தாங்கள் சூழ்ச்சி செய்து அஸுரர்களைப் பாம்பின் வாய்ப்பக்கம் இருக்கும்படிச் செய்தீர்கள். (5)

க்ஷுப்3தா4த்3ரௌ க்ஷுபி4தஜலோத்3ரே தத3ாநீம்
து3க்3தா4ப்3தெ4ள கு3ருதரப4ாரதோ நிமக்3நே ।
தே3வேஷு வ்யதி4ததமேஷு தத்ப்ரியைஷீ
ப்ராணைஷீ: கமடதநும் கடே3ாரப்ருஷ்ட2ாம் ॥ 6 ॥

இவ்வாறு திருப்பாற்கடல் கடையப்பட்ட பொழுது, அந்தப் பாற்கடலில் சுழலுகின்ற மலை பெரும் பாரத்தினால் மூழ்கியது. (இதைக் கண்டு) தேவர்கள் மிகவும் வருந்துகையில், அவர்களுக்கு நன்மையைச் செய்ய விரும்பிய தாங்கள், உறுதியான முதுகு ஓடு உடைய ஆமையின் திருவுருவை எடுத்துக் கொண்டீர்கள். (6)

வஜ்ராதிஸ்தி2ரதர–கர்பரேண விஷ்ணோ
விஸ்தாராத் பரிக3த–லக்ஷயோஜநேந ।
அம்பே4ாதே4: குஹரக3தேந வர்ஷ்மணா த்வம்
நிர்மக்3நம் க்ஷிதித4ரநாத2–முந்நிநேத2 ॥ 7 ॥

(எங்கும் பரவி நிற்கும்) விஷ்ணுவே! வஜ்ராயுதத்தைக் காட்டிலும் மிக உறுதியான முதுகு ஓட்டுடன், லக்ஷம் யோஜனை பரந்ததுமான அந்த உடலுடன் பாற்கடலுக்கு அடியில் மூழ்கி ஆழ்ந்து போயிருந்த பெருமலையை மேலே தூக்கினீர்களல்லவா? (7)

உந்மக்3நே ஜடிதி தத3 த்3ராத்3ரேந்த்3ரே
நிர்மேது3ர்–த்3ருட3மிஹ ஸம்மதே2ந ஸர்வே ।
ஆவிர்ப்ய த்3விதயக3ணேऽபி ஸர்பராஜே
வைவர்ப்யம் பரிஸமயந்–நவீவ்ருத3ஸ்தாந் ॥ 8 ॥

இந்த மந்தரமலை மேலே கிளம்பியதும் அங்கிருந்த எல்லோரும் மிக்க மகிழ்ச்சி கொண்டு வேகமாகக் கடையத் தொடங்கினார்கள். தாங்கள் தேவர்களிடத்தும், அஸுரர்களிடத்தும், வாஸுகியிடத்தும் உட்புகுந்து, அவர்களுடைய சோர்வைத் தணித்து வலிமையை வளர்த்தீர்களன்றோ? (8)

உத்3தா3ம–ப்4ரமண–ஜவோந்நமத்3–கி3ரீந்த்3ர–
ந்யஸ்ததைக–ஸ்தி2ரதர–ஹஸ்ததபங்கஜம் த்வாம் ।
அப்4ராந்தே விதி4கி3ரிஸாத3ய: ப்ரமோதா3–
துத்3ப்4ராந்தா நுநுவுருபாத்த–புஷ்பவர்ஷா: ॥ 9 ॥

மிக்க வேகமாகச் சுழன்றதால் உயரக் கிளம்பிய அந்த மலை மேல் தங்களது தாமரை மலர் போன்ற கையை வைத்து அழுத்தியதும், ஆகாயத்திலிருந்து பிரம்மா, சிவன் முதலியோர் மகிழ்ச்சியால் மெய்மறந்து மலர்மாரி பொழிந்து, தங்களைத் துதித்தார்கள். (9)

தை3த்யைகே2 பு4ஜக3முகா2நிலேந தப்தே
தே2நைவ த்ரித3ஶகுலேऽபி கிஞ்சிதா3ர்தே ।
காருண்யாத் தவ கில தே3வ வாரிவாஹா:
ப்ராவர்ஷந்–நமரக3ணாந் ந தை3த்யஸங்கா3ந் ॥ 10 ॥

தேவதேவா! அஸுரர்களின் கூட்டம் பாம்பின் வாயினின்றும் வெளிவந்த நச்சுக்காற்றினால் துன்புற்றது. (வால்பக்கம் இருந்த) தேவர்களும் அக்காற்றினால் சிறிதே வருந்தினர். அதுபோது தங்களுடைய கருணையால் தேவர்கள் மீது மழை பொழிந்தது. (ஆனால்) அஸுரர்கள் மீது பொழியவில்லை. (10)

உத்3ப்4ராம்யத்3–பு4ஹுதிமி–நக்ரசக்ரவாளே
தத்ராப்3தெ4ள சிரமதி3தேऽபி நிர்விகாரே ।
ஏகஸ்த்வம் கரயுகு3க்ருஷ்டஸர்பராஜ:
ஸம்ராஜந் பவநபுரேஶ பாஹி ரோகா3த் ॥ 11 ॥

அஞ்சி ஓடும் திமிங்கலங்களும், முதலைகளும் செறிந்த கடல் நெடுங்காலம் கடையப்பட்டும் எவ்வித மாறுதலும் இன்றி இருந்தது. அப்பொழுது தாங்கள் ஒருவராகவே இரு கைகளாலும் பாம்பரசனான வாஸுகியை இழுத்துக் கடையத் தொடங்கினீர்கள். அங்ஙனம் விளங்குகின்ற குருவாயூரப்பா! பிணிகளினின்றும் என்னைக் காத்தருள வேண்டும். (11)

இருபத்தெட்டாவது தசகம்

ஸ்ரீமஹாலக்ஷ்மி திருவவதாரம்

க்₃ரஸம் தரளாநலம் புரஸ்தா–ஜ்ஜலதே₂ருத்₃விஜக்₃மால காளகூடம் ।
அமரஸ்துதிவாத்₃₃–மோத₃நிக்₄நோ கி₃ரிஸஸ்–தந்நிபபௌ ப₄வத்ப்ரியார்த₂ம் ॥ 1 ॥

தீக்கொழுந்து பறக்க ஆலகால விஷம் பாற்கடலினின்றும் முதலில் கிளம்பியது. தேவர்கள் பாடிய துதியால் மகிழ்ச்சி கொண்ட சிவபெருமான் தங்களுடைய பிரீதிக்காக அந்த நஞ்சினைப் பருகினார். (1)

விமத₂த்ஸு ஸுராஸுரேஷு ஜாதா ஸுரபி₄ஸ்தாம்–ருஷிஷு ந்யத₃₄ஸ்–த்ரித₃₄மந் ।
ஹயரத்நமபூ₄த₃–தே₂ப₄ரத்நம் த்₃யுதரு–ஸ்சாப்ஸரஸ: ஸுரேஷு தாநி ॥ 2 ॥

மூவுலகங்களிலும் விளங்குபவரே! தேவர்களும், அஸுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது காமதேனு தோன்றிற்று. தாங்கள் அதை முனிவர்களுக்கு அளித்தீர்கள். பின்தோன்றிய உச்சைச்ரவஸ் என்ற சிறந்த குதிரையையும், ஐராவதம் என்ற யானையையும், கற்பகத்தரு, அப்ஸரஸ் ஸ்திரீகள் ஆகியவற்றையும் தேவர்களுக்குக் கொடுத்தீர்கள். (2)

ஜக₃தீ₃ஶ ப₄வத்பரா தத₃₄நீம் கமநீயா கமலா ப₃பூ₄வ தே₃வீ ।
அமலாமவலோக்ய யாம் விலோல: ஸகலோऽபி ஸ்ப்ருஹயாம்ப₃பூ₄வ லோக: ॥ 3 ॥

அகில உலகத்திற்கும் தலைவனான குருவாயூரப்பா! அதன்பின் தங்களைத் தவிர வேறு எதையும் உயர்வாகக் கருதாத, மனதைக் கொள்ளை கொள்ளக் கூடிய அழகு படைத்த ஸ்ரீமஹாலக்ஷ்மி தோன்றினாள். குற்றமற்ற தூயவளான ஸ்ரீமஹாலக்ஷ்மியைக் கண்டு அகில உலகமும் மனங்கவரப் பெற்று அவளை அடைய விரும்பியது. (3)

த்வயி த₃த்தஹ்ருதே₃ ததை₃வ தே₃வ்யை
த்ரித₃ஶேந்த்₃ரோ மணிபீடி₂காம் வ்யதாரீத் ।
ஸகலோ–பஹ்ருதாபி₄ஷேசநீயை–
ருஷயஸ்தாம் ஶ்ருதிகீ₃ர்பி₄–ரப்₄யஷிஞ்சந் ॥ 4 ॥

தங்களிடமே மனதைச் செலுத்திய அந்த ஸ்ரீலக்ஷ்மிதேவிக்கு தேவர்கோன் இந்திரன் மணிமயமான பீடத்தை அளித்தான். எல்லோராலும் கொண்டு வந்து கொடுக்கப்பட்ட திருமஞ்சனத்திற்குரிய பொருட்களைக் கொண்டு முனிவர்கள் வேதமந்திரங்களை ஓதி அபிஷேகம் செய்தார்கள். (4)

அபி₄ஷேகஜலாநுபாதி–முக்₃த₄–த்வத₃பாங்கை₃–ரவபூ₄ஷிதாங்க₃–வல்லீம் ।
மணிகுண்ட₃ல–பீதஸேலஹார–ப்ரமுகை₂ஸ்–தாமமராத₃₃யோऽந்வபூ₄ஷந் ॥ 5 ॥

தங்களுடைய அழகிய கடைக்கண் பார்வை அபிஷேக நீரோடு சேர்ந்து விழுந்து, அந்தத் திருமகளின் கொடிகள் போன்ற அவயவங்களை அழகுபடுத்தியது. தேவர் முதலானோர் அவளை இரத்தின குண்டலங்களாலும், மஞ்சள் பட்டாடைகளாலும், முத்து மாலைகளாலும் அலங்கரித்தார்கள். (5)

வரணஸ்ரஜமாத்த–ப்₄ருங்க₃நாத₃ராம் த₃த₃தீ ஸா குசகும்ப₄மந்த₃யாநா ।
பத₃ஸிஞ்ஜித–மஞ்ஜுநூபுரா த்வாம் கலிதவ்ரீள–விலாஸமாஸஸாத₃ ॥ 6 ॥

அந்த ஸ்ரீமஹாலக்ஷ்மி வண்டுகள் மொய்க்கும் சுயம்வர மாலையைக் கையில் எடுத்துக் கொண்டு சிறுகுடம் போன்ற நகில்களின் பாரத்தால் மெல்ல நடந்தாள். அப்பொழுது அவளது திருவடிகளில் உள்ள சிலம்புகள் அழகாக ஒலித்தன. நாணத்தால் அழகுமிக அவள் தங்களை வந்தடைந்தாள். (6)

கி₃ரீஶ த்₃ருஹிணாதி₃–ஸர்வதே₃வாந் கு₃ணப₄ாஜோऽப்யவிமுக்த–தே₃ாஷலேஶாந் ।
அவம்ருʼச்ய ஸதை₃வ ஸர்வரம்யே நிஹிதா த்வய்யநயாऽபி தி₃வ்யமாலா ॥ 7 ॥

'பரமசிவன், பிரம்மா முதலிய தேவர்கள் அனைவரும் எல்லா நற்குணங்களையும் பெற்றவர்களே. ஆனாலும் காமம், கோபம் முதலிய குற்றங்கள் முற்றிலும் நீங்கப் பெற்றவர்கள் அல்லர்' என்று ஆலோசித்து எப்பொழுதும் எவ்வகையிலும் எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமானவரும், மனத்துக்கினியவருமான தங்களிடம் ஸ்ரீமஹாலக்ஷ்மி அந்த தெய்வீக மாலையை சமர்ப்பித்தாள் அல்லவா? (7)

உரஸா தரஸா மமாநிதை₂நாம் பு₄வநாநாம் ஜநநீமநந்யப₄ாவாம் ।
த்வது₃ரோவிலஸத்–ததீ₃க்ஷணஶ்ரீபரிவ்ருʼஷ்ட்யா பரிபுʼஷ்டமாஸ விஶ்வம் ॥ 8 ॥

அகில உலகிற்கும் தாயாக விளங்குபவளும், தங்களைத் தவிர வேறெதிலும் பற்றற்றவளுமாகிய அந்த ஸ்ரீமஹாலக்ஷ்மியை உடனே தங்களது மார்பில் தாங்கிப் பெருமைப்படுத்தினீர்கள். தங்கள் திருமார்பில் விளங்குகின்ற ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அருட்பார்வையாகிற இன்ப மழையால் உலகனைத்தும் செழிப்புடையதாயிற்று. (8)

அதிமோஹநவிப்₄ரமா தத₃ாநீம் மத₃யந்தீ கலு வாருணீ நிராக₃ாத் ।
தமஸ: பத₃வீமத₃ாஸ்த்வமேநா–மதிஸம்மாநநயா மஹாஸுரேப்₄ய: ॥ 9 ॥

அப்பொழுது அனைவரையும் மயங்கச் செய்யும் அழகினை உடைய வாருணீதேவி தோன்றினாள். அவள் 'ஆசையை (செருக்கை) உண்டாக்குபவள்' என்ற புகழ் படைத்தவள். அறியாமையாகிற தமோ குணத்தின் இருப்பிடம். தாங்கள் அவளை உயர்ந்த பரிசாக அஸுரர்களுக்குக் கொடுத்தீர்கள். (9)

தருணாம்பு₃த₃–ஸுந்த₃ரஸ் தத₃ா த்வம் நநு த₃ந்வந்தரி–ருத்தி₂தோऽம்பு₃ராஶே: ।
அம்ருʼதம் கலஶே வஹந் கராப்₄யா–மகி₂லார்திம் ஹர மாருதாலயேஶ ॥ 10 ॥

குருவாயூரப்பா! அப்பொழுது தாங்கள் நீருண்ட மேகம்போல் அழகிய திருவுருவுடன் இருகைகளாலும் அமுத கலசத்தை ஏந்திக் கொண்டு கடலினின்றும் தன்வந்தரி பகவானாகத் தோன்றினீர்கள். அத்தகைய தாங்கள் என்னுடைய அனைத்துத் துன்பங்களையும் போக்கியருள வேண்டும். (10)

இருபத்தொன்பதாவது தசகம்

மோஹினி திருவவதாரம்

உத்₃க₃ச்ச₂தஸ்தவ கராத₃ம்ருʼதம் ஹரத்ஸு
தை₃த்யேஷு தாநஸுரணாநநுநீய தே₃வாந் ।
ஸத்₃யஸ்திரோத₃தி₄த₂ தே₃வ ப₄வத்ப்ரப₄ாவா–
துத்₃யத்ஸ்வயூத்₂ய கலஹா தி₃திஜா ப₃பூ₄வு: ॥ 1 ॥

ஹே தேவதேவா! (தன்வந்தரி வடிவில்) வெளியே தோன்றிய உங்களுடைய திருக்கரங்களிலிருந்து அமுத கலசத்தை அஸுரர்கள் பிடுங்கிச் செல்லுகையில் தங்களையன்றி வேறு புகலிடமற்ற தேவர்களைத் தாங்கள் அமைதியுறச் செய்து (சமாதானம் செய்துவிட்டு) உடனே மறைந்து விட்டீர்கள் அல்லவா? தங்களுடைய மாயையின் சிறப்பினால் அஸுரர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளத் தொடங்கினார்கள். (1)

ஶ்யாமாம் ருசாऽபி வயஸாऽபி தநும் தத³ாநீம்
ப்ராப்தோऽஸி துங்க³குசமண்ட³லபு⁴ங்கு³ராம் த்வம் ।
பீயூஷகும்ப⁴கலஹம் பரிமுச்ய ஸர்வே
த்ருஷ்ணாகுலா: ப்ரதியயுஸ் த்வது³ரோஜகும்பே⁴ ॥ 2 ॥

அப்பொழுது தாங்கள் ஓர் அழகிய பெண்ணுருவம் கொண்டீர்கள். அத்திருமேனி சியாமள வர்ணமாகவும், பூத்துக் குலுங்கும் இளமையுடனும் உயர்ந்து பருத்துருண்ட நகில்களால் சற்றே வணங்கியதாயுமிருந்தது. அதைக் கண்ட அஸுரர்கள் அமுத கலசத்தின் பொருட்டு உண்டான கலகத்தை விடுத்துத் தங்களது திருமார்புத் தடமான கலசங்களில் ஆசையுற்றவர்களாகத் தங்களை நோக்கி வந்தார்கள். (2)

கா த்வம் ம்ருக³ாக்ஷி விப⁴ஜஸ்வ ஸுதா⁴மிமாமி–
த்யாரூட⁴ராக³–விவஶாந–பி⁴யாசதோऽமூந் ।
விஶ்வஸ்யதே மயி கத²ம் குலடாஸ்மி தை³த்யா:
இத்யாலபந்நபி ஸுவிஶ்வஸிதாநதாநீ: ॥ 3 ॥

'மான்விழியாளே! நீ யார்? இந்த அமுதத்தை எங்களுக்குப் பகிர்ந்து கொடு' என்று காமத்தால் மதியிழந்த அஸுரர்கள் வேண்ட அவர்களிடம், 'அஸுரர்களே! நானோ நன்னடத்தையற்றவள். என்னை எப்படி நம்புகிறீர்கள்?' என்று கூறி, அவர்களை மேலும் நம்பிக்கைக் கொள்ளும்படியாகச் செய்தீர்கள். (3)

மோஹாத் ஸுதா⁴கலஶமேஷு ததஸ்தத்ஸு ஸா த்வம்
து³ஶ்சேஷ்டிதம் மம ஸஹத்⁴வமிதி ப்³ருவாணா ।
பங்க்திப்ரபே⁴த³–விநிவேஸித–தே³வதை³த்யா
லீலாவிலாஸகு³திபி⁴: ஸமத³ா: ஸுதா⁴ம் தாம் ॥ 4 ॥

அவ்வஸுரர்கள் மிக்க மகிழ்ச்சியோடு அமுத கலசத்தைத் தங்களிடம் கொடுத்தபோது மோஹினி திருவுருவம் தரித்த தாங்கள், 'எனது செயல் தவறாக இருப்பினும் நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்' என்று கூறி, தேவர்களையும், அஸுரர்களையும் தனித்தனி வரிசையில் அமரச் செய்து விளையாட்டுகளினாலும், மயக்கும் நடைகளினாலும் (அனைவரையும் மயங்கச் செய்து) அமுதத்தைப் பரிமாறத் தொடங்கினீர்கள். (4)

அஸ்மாஸ்வியம் ப்ரணயிநீத்யஸுரேஷு தேஷு
ஜோஷம் ஸ்தி²தேஷ்வத² ஸமாப்ய ஸுதா⁴ம் ஸுரேஷு ।
த்வம் பு⁴க்தலோகவஶகே³ா நிஜரூபமேத்ய
ஸ்வர்பு⁴நுமர்த்⁴யபரிபீதஸுதா⁴ம் வ்யலாவீ: ॥ 5 ॥

அப்பொழுது, 'இவள் நம்மிடம் மிகவும் அன்புடையவள்' என்று அவ்வஸுரர்கள் அமைதியாக இருக்கையில் பக்தர்களுக்கே ஆட்பட்டவராகிய தாங்கள் அமுதத்தைத் தேவர்களுக்குள்ளேயே கொடுத்து முடித்து, தங்களுடைய உண்மை உருவை மேற்கொண்டு (தேவர்கள் வரிசையில் அமர்ந்து அமுதத்தைப் பாதி பருகிக் கொண்டிருந்த) ஸ்வர்பானு என்ற அஸுரனான ராகுவின் தலையை வெட்டினீர்கள் அல்லவா! (5)

த்வத்த: ஸுதா₄ஹரணயோக்₃யப₂லம் பரேஷா
த₃த்வா க₃தே த்வயி ஸுரை: க₂லு தே வ்யக்₃ருஹ்ணந் ।
கே₂ரேऽத₂ மூர்ச்ச₂தி ரணே ப₃லிதை₃த்யமாயா–
வ்யாமோஹிதே ஸுரக₃ணே த்வமிஹாவிராஸீ: ॥ 6 ॥

தங்களிடமிருந்து அமுத கலசத்தைக் கைப்பற்றியதற்குத் தக்க பயனை எதிரிகளான அஸுரர்களுக்கு அளித்துவிட்டுத் தாங்கள் மறைந்து போகவே, அந்த அஸுரர்கள் தேவர்களுடன் போர்புரியத் தலைப்பட்டனர். போர் கடுமையாக வலுத்தபோது அஸுரனான பலியின் அஸுர மாயையால் தேவர்கள் அனைவரும் மயக்கத்தையடைந்தபொழுது தாங்கள் அங்கு போர்க்களத்தில் தோன்றினீர்களாமே! (6)

த்வம் காலநேமிமத₂ மாலிமுக₂ாஞ்ஜக₄ந்த₂
ஶக்ரோ ஜக₄ாந ப₃லிஜம்ப₄வலாந் ஸபாகாந் ।
ஶுஷ்கார்த்₃ர–து₃ஷ்கரவதே₄ நமுசௌ ச லூநே
பே₂நேந நாரத₃கி₃ரா ந்யருணோ ரணம் த்வம் ॥ 7 ॥

அதன்பின் தாங்கள் காலநேமி, மாலி முதலியோர்களைக் கொன்றீர்கள். பாகாஸுரன், பலி, ஜம்பன், வலன் ஆகியவர்களை இந்திரன் கொன்றான். உலர்ந்த பொருளாலோ, நனைந்த பொருளாலோ கொல்லப்பட முடியாத நமுசி, நுரையினால் கொல்லப்பட்டான். (பிறகு) நாரதர் சொல்ல போரை நிறுத்தினீர்கள். (7)

யோஷாவபுர்–த₃நுஜமோஹநமாஹிதம் தே
ஶ்ருத்வா விலோகந–குதூஹலவாந் மஹேஶ: ।
பூ₄தைஸ்ஸமம் கி₃ரிஜயா ச க₃த: பத₃ம் தே
ஸ்துத்வாऽப்₃ரவீத்₃பி₄மதம் த்வமதோ₂ திரோத₄ா: ॥ 8 ॥

அஸுரர்களை மயக்கத் தாங்கள் எடுத்துக் கொண்ட பெண்ணுருவைப் பற்றிக் கேட்ட ஸ்ரீசிவபெருமான், அதைக் காண மிக்க ஆவலுடனே பார்வதியுடன் பூத கணங்கள் சூழ தங்கள் ஸ்ரீவைகுண்டத்திற்கு வந்து தங்களைத் துதித்துத் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். அப்பொழுது தாங்கள் மறைந்தீர்கள் அல்லவா? (8)

ஆராமஸீமநி ச கந்து₃க–க்₃ாதலீலா–
லோலாயமாந–நயநாம் கமநீம் மநோஜ்ஞாம் ।
த்வாமேஷ வீக்ஷ்ய விக₂ளத்₃வஸநாம் மநோபூ₄–
வேக₃ாத₃நுங்க₃ரிபுரங்க₃ ஸமாலிலிங்க₃ ॥ 9 ॥

அசைகின்ற திருக்கண்களுடன் மனங்கவரும் பெண்ணுருத் தாங்கி ஒரு பூஞ்சோலையின் அருகில் பந்து அடித்து விளையாடும்பொழுது, மேலாடை நழுவ இருந்த நிலையில் தங்களைக்

கண்ட பரமசிவன் காமனைக் கண்ணால் எரித்தவராயினும் காமவேகத்தால் தங்களை ஆரத்தழுவிக் கொண்டார் அல்லவா? (9)

பூ4யோऽபி வித்3ருதவதீமுபத3ாவ்ய தே3வோ
வீர்யப்ரமோக்ஷவிகஸத்–பரமார்த2போ3த4: ।
த்வந்மாநிதஸ்தவ மஹத்வமுவாச தே3வ்யை
தத்தாத்3ருஸ்–த்வமவ வாதநிகேதநாத2 ॥ 10 ॥

தாங்களோ அவர் பிடியினின்றும் நழுவி ஓடியபோது அந்த சிவபெருமான் தங்களை விடாமல் தொடர்ந்து சென்று தன் வீரியம் நழுவ உண்மை விளக்கம் பெற்றுத் தங்களால் வெகுமதிக்கப் பெற்றுத் தங்களுடைய பெருமையைத் தன் மனைவியான பார்வதிக்கு எடுத்துரைத்தார். அத்தகைய பெருமை உடைய குருவாயூரப்பா! என்னைக் காத்தருள வேண்டும். (10)

❁ᘐ❁ᘐ❁

முப்பதாவது தசகம்

ஸ்ரீவாமனாவதாரம்

ஸக்ரேண ஸம்யதி ஹதோऽபி ப3லிர்மஹாத்மா
ஸுக்ரேண ஜீவிததநு: க்ரதுவர்தி3தோஷ்மா ।
விக்ராந்திமாந் ப4யநிலீநஸுராம் த்ரிலோகீம்
சக்ரே வஸே ஸ தவ சக்ரமுகா2த்3பீ4த: ॥ 1 ॥

இந்திரனால் போரில் கொல்லப்பட்ட போதிலும் சுக்ராசாரியருடைய சஞ்சீவினி வித்தையால் மீண்டும் உயிர்பெற்ற பெருமனது படைத்த பெருமைமிக்க பலிச் சக்கரவர்த்தி, விஸ்வஜித் என்னும் வேள்வியைச் செய்து, அதனால் மிக்க ஆற்றல் பெறவே, தேவர்கள் அஞ்சி ஓடி ஒளிந்தபின், தங்களுடைய சுதர்சன சக்கரத்திற்கும் அஞ்சாது மூவுலகங்களையும் தன்வசம் ஆக்கிக் கொண்டான். (1)

புத்ரார்தி2–த3ர்ஸநவஸாத3தி3தீ4ர்–விஷண்ணா
தம் காஸ்யபம் நிஜபதிம் ஸரணம் ப்ரபந்நா ।
த்வத்பூஜநம் தது3தி3தம் ஹி பயோவ்ரதாக்2யம்
ஸா த்3வாத3ஸாஹமகரத்–த்வயி ப4க்திபூர்ணா ॥ 2 ॥

தன் மக்களான தேவர்கள் துன்பப்படுவதைக் கண்டு வருந்திய அதிதிதேவி தன் கணவரான காசியபரைச் சரணடைந்தாள். அவர் அறிவுரைப்படி 'பயோவ்ரதம்' என்ற தங்களது வழிபாட்டினை மிக்க பக்திகொண்ட மனதோடு பன்னிரண்டு நாட்கள் (இடைவிடாது) செய்தாள். (2)

தஸ்யாவதை3ள த்வயி நிலீநமதே2ரமுஷ்யா:
ஸ்யாமஸ்சதுர்பு4ஜவபு: ஸ்வயமாவிராஸீ: ।
நம்ராம் ச தாமிஹ ப4வத்தநயோ ப4வேயம்
கே3ாப்யம் மதீ3க்ஷணமிதி ப்ரலபந்நயாஸீ: ॥ 3 ॥

அந்த விரதத்தின் முடிவில் தங்களிடமே ஒன்றிய உள்ளங்கொண்ட அதிதிக்கு முன் தாங்கள் கொண்டல்வண்ணனாய் நான்கு திருக்கரங்களுடன் காட்சியளித்தீர்கள். (அப்பொழுது) தங்களை வணங்கிய அதிதியிடம் 'உங்களுக்கு மகனாகப் பிறக்கிறேன். என்னை நீங்கள் தரிசனம் செய்தது பிறர் அறியாவண்ணம் ரகசியமாக இருக்க வேண்டும்' என்று கூறி மறைந்தீர்கள். (3)

த்வம் காஶ்யபே தபஸி ஸந்நிதஸ்தத்–ததஸ்தாநீம்
ப்ராப்தோஸி கர்ப4மதி3தே: ப்ரணுதோ விதா4த்ரா ।
ப்ராஸூத ச ப்ரகடவைஷ்ணவதி3வ்யரூபம்
ஸா த்வாத3ஶீஶ்ரவண–புண்யதி3நே ப4வந்தம் ॥ 4 ॥

பின்பு தாங்கள் காசியபரின் தவத்தால் வளர்ந்த அவரது வீரியத்தில் எழுந்தருளி அதிதியின் கர்ப்பத்தை அடைந்தீர்கள். பிரம்மதேவர் தங்களைத் துதித்தார். திருநாராயணர்க்குரிய சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்களோடு விளங்கும் தெய்வத்தன்மை பொருந்திய திருவுருவோடு கூடிய தங்களை, அந்த அதிதிதேவி (வளர்பிறை) துவாதசியும், திருவோணமும் கூடிய நன்னாளில் பெற்றெடுத்தாள். (4)

புண்யாஶ்ரமம் தமபி4வர்ஷதி புஷ்பவர்ஷை–
ர்ஹர்ஷாகுலே ஸுரக3ணே க்ருததூர்யகோ4ஷே ।
பத்3மத்4வாஞ்ஜலிம் ஜய ஜயேதி நுத: பிதுர்பு4யாம்
த்வம் தத்க்ஷணே படுதமம் வடுரூபமாத4: ॥ 5 ॥

தேவகணங்கள் ஆனந்தம் பொங்க முரசினை முழக்கிக் கொண்டு புண்ணியம் மிக்க அந்த ஆசிரமத்தில் மலர்மாரி பொழிந்தனர். தாய்–தந்தையர் இருவரும் கைகூப்பி 'ஜய ஜய' என்று துதிக்க, தாங்கள் அதே நொடியில் அழகிய பிரம்மச்சாரியின் ஸ்வரூபத்தை எடுத்துக் கொண்டீர்கள். (5)

தாவத்–ப்ரஜாபதிமுகை2–ருபநீய மௌஞ்ஜீ–
த3ண்டா3ஜிநாக்ஷவலயாதி3பி4–ரர்ச்யமாந: ।
தே3தீ3ப்யமாந–வபுஷா க்ருதாக்3நிகார்யஸ்–
த்வம் ப்ராஸ்தி2தா3 ப3லிக்3ருஹம் ப்ரக்ருதாஸ்வமேத4ம் ॥ 6 ॥

ஈசனே! அப்பொழுது தங்கள் தந்தையான காசியபப் பிரஜாபதி முதலியவர்களால் தங்களுக்கு உபநயனம் செய்விக்கப் பெற்றது. முஞ்சிப் புல்லால் செய்யப்பட்ட மேகலை, பலாஸதண்டம், கிருஷ்ணாஜினம் என்ற மான்தோல், ருத்ராட்ச மாலை, கங்கணம் முதலியவற்றை அணிந்து கொண்டு மிக்க காந்தி படைத்தத் திருமேனியுடன் சமிதாதானம் முதலிய அக்னி காரியத்தைச் செய்து முடித்துத் தாங்கள் பலிச் சக்கரவர்த்தி அசுவமேத யாகம் செய்கின்ற இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றீர்கள். (6)

க3த்ரேண ப4வி–மஹிமோசித–கெ3ளரவம் ப்ராக்3–
வ்யாவ்ருண்வதேவ த3ரணீம் சலயந்நயாஸீ: ।
ச2த்ரம் பரோஷ்ம–திரணார்த்3மிவா–த3த4ஸோ
த3ண்டம் ச தா3நவஜநேஷ்விவ ஸந்நிதா4தும் ॥ 7 ॥

பின்பு நிகழவிருக்கும் விஸ்வரூபத்திற்கு இயைந்தவாறு தனது (பேருருவின்) பாரத்தை முன்பே தெரிவிப்பதுபோல தனது திருமேனியால் இப்புவியை அசையச் செய்தவண்ணம், பகைவர்களின் கொடுமையாகிய வெம்மையை மறைக்குமாபோல் கையில் குடையுடன், அஸுரர்களை தண்டிப்பதற்கு அடையாளமாகப் பலாச தண்டத்தைக் கையிலேந்தி பலியின் அசுவமேத யாகசாலைக்குச் சென்றீர்கள். (7)

தாம் நர்மதே³த்தரதடே ஹயமேத⁴ஶாலா–
மாஸேது³ஷி த்வயி ருசா தவ ருத்³த⁴நேத்ரை: ।
ப⁴ாஸ்வாந் கிமேஷ த³ஹநோ நு ஸநத்குமாரோ
யோகீ³ நு கோऽயமிதி ஸஂக்ரமுகை²: ஸஸம்ப்⁴ரமங்கே ॥ 8 ॥

நர்மதை நதியின் வடகரையிலிருந்த அசுவமேத யாகசாலையைத் தாங்கள் அடைந்தபோது தங்களுடைய பேரொளியைக் கண்டு கூசும் கண்களுடைய சுக்ராசாரியார் முதலியவர்கள், 'இவர் சூரியனா? அக்னி பகவானா? யோகியான ஸநத்குமாரரா? இவர் யாராகத்தான் இருப்பார்?' என்று ஐயமுற்றனர். (8)

ஆநீதமாஸு ப்⁴ருகு³பி⁴ர்–மஹஸாபி⁴பூ⁴தைஸ்–
த்வாம் ரம்யரூபமஸு²ர: புளகாவ்ருதாங்க³: ।
ப³க்த்யா ஸமேத்ய ஸுக்ருதீ பரிணிஜ்ய பாதௌ³
தத்தோய–மந்வத்⁴ருத மூர்த்⁴நி தீர்த²தீர்த²ம் ॥ 9 ॥

தங்களுடைய பேரொளியால் ஒளி குன்றிய பார்க்கவரான சுக்ராசாரியார் முதலியோர் மனதைக் கவரும் வடிவுடைய தங்களை வேகமாக எதிர்கொண்டு வரவேற்பது கண்டு அஸுரகுல மன்னான மஹாபலி பக்தியால் மயிர்சிலிர்க்கும் உடலுடன் தங்களையணுகித் திருவடிகளைக் கழுவித் தூய்மையானவற்றையும் தூய்மைப்படுத்தும் அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தன் தலையில் தெளித்துக் கொண்டான். (9)

ப்ரஹ்லாத³வம்ஶஜதயா க்ரதுபி⁴ர்–த்³விஜேஷு
விஶ்வாஸதோ நு ததி³த³ம் தி³தி³ஜோऽபி லேபே⁴ ।
யத்தே பத³ாம்பு³ கி³ரிஶஸ்ய ஶிரோऽபி⁴லால்யம்
ஸ த்வம் விபோ⁴ குரு³புராலய பாலயேதா³: ॥ 10 ॥

அஸுரனாக இருந்தும் பலிச்சக்கரவர்த்தி சிவபெருமானே தலையில் வைத்துக் கொண்டாடத்தக்க அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பெற்றான் என்றால் அதற்குக் காரணம் பிரஹலாதன் குலத்தில் பிறந்ததுதானோ? வேள்விகளைச் செய்ததுதானோ? அந்தணர்களிடத்தே கொண்ட பக்தியினாலோ? (நான் அறியேன்) பிரபுவான ஸ்ரீகுருவாயூரப்பா! என்னைக் காத்தருள வேண்டும். (10)

முப்பத்தோராவது தசகம்

ஸ்ரீவாமன சரிதம் – பலியின் செருக்கழித்தல்

ப்ரீத்யா தை₃த்யஸ்தவ தநுமஹ: ப்ரேக்ஷணாத் ஸர்வத₂ாऽபி
த்வாமாராத்₄யந்நஜித ரசயந்நஞ்ஜலிம் ஸஞ்ஜக₃ாத₃ ।
மத்த: கிம் தே ஸமபி₄லஷிதம் விப்ரஸஶிநோ வத₃ த்வம்
வ்யக்தம் ப₄க்தம் ப₄வநமவநீம் வாऽபி ஸர்வம் ப்ரத₃ாஸ்யே ॥ 1 ॥

எவராலும் வெல்லப்பட முடியாத குருவாயூரப்பா! தங்களுடைய திருமேனியின் ஒளியைக் கண்டு மிகவும் பக்தி கொண்ட மஹாபலி அனைத்துவிதங்களிலும் தங்களை வழிபட எண்ணி இருகைகளையும் கூப்பிக் கொண்டு, 'அந்தணச் சிறுவனே! என்னிடமிருந்து நீ வேண்டுவது யாதோ? விளக்கமாகச் சொல். அன்னமா? வீடா? இந்த பூமியா? (அல்லது) இவையனைத்துமா? எதுவானாலும் கேள் கொடுக்கிறேன்' என்று கூறினான். (1)

தாமக்ஷீணாம் ப₄லிகி₃ரமுபாகர்ண்ய காருண்யபூர்ணோ–
ऽப்யஸ்யோத்ஸேகம் ஶமயிதுமநா தை₃த்யவம்ஶம் ப்ரஶம்ஸந் ।
பூ₄மிம் பாத₃த்ரயபரிமிதாம் ப்ரார்த₂யாமாஸித₂ த்வம்
ஸர்வம் தே₃ஹீதி து நிக₃தி₃தே கஸ்ய ஹாஸ்யம் ந வா ஸ்யாத் ॥ 2 ॥

மஹாபலியின் குற்றமற்ற 'உலகிற்கரசன்' என்ற எண்ணத்தைக் காட்டித் தருகிற சொல்லைக் கேட்டுக் கருணை நிரம்பிய தாங்கள், அவனுடைய செருக்கை அடக்க வேண்டி, அஸுர குலத்தைப் புகழ்ந்து பேசித் தன் காலடியால் மூன்றடி மண் வேண்டினீர்களாமே! 'எல்லாவற்றையும் கொடு' என்று கேட்டிருப்பின், யாருக்குத்தான் நகைப்புக்கு இடமாக இருக்காது? (2)

விஶ்வேஶம் மாம் த்ரிபத₃மிஹ கிம் யாசஸே ப₄லிஶஸ்த்வம்
ஸர்வாம் பூ₄மிம் வ்ருணு கிமமுநேத்–யாலபத்–த்வாம் ஸ த்₃ருப்யந் ।
யஸ்மாத்₃து₄ர்பாத் த்ரிபத₃பரிபூர்த்யக்ஷம: க்ஷேபவாத₃ாந்
ப₃ந்த₄ம் சாஸாவக₄மத₃–தது₃ர்ஹோऽபி க₃ாடே₄பஶாந்த்யை ॥ 3 ॥

'குழந்தாய்! உலகிற்கெல்லாம் தலைவனான என்னிடம் வந்து மூன்றடி மண்ணை மட்டும் ஏன் வேண்டுகிறாய்? இதனால் என்ன பயன்? பூமி முழுவதையும் கேள்' என்று அந்த மஹாபலி செருக்கோடு தங்களிடம் கூறினான். அந்தச் செருக்கின் காரணமாகவே மூன்றடி மண்ணும் தர இயலாது, இழி சொற்களையும், வருண பாசத்தினால் தளையையும் அடைந்தான். அவற்றைப் பெறுவதற்குத் தகுதியற்றவனாக இருப்பினும் உலகியல் போகங்களிலுள்ள அவனது பற்றைக் களையவும் (செருக்கையடக்கவும்), தன்னிடமே அவனது மனம் பதியும்படிச் செய்யவுமே தாங்கள் இப்படிச் செய்தீர்களாமே! (3)

பாத₃த்ரய்யா யதி₃ ந முதி₃தோ விஷ்டபைர்நாபி துஷ்யே–
தி₃த்யுக்தேऽஸ்மிந் வரத₃ ப₄வதே த₃ாதுகாமேத₃ தோயம் ।
தை₃த்யாசார்யஸ்தவ கலு பரீக்ஷார்தி₂ந: ப்ரேரணாத்தம்
மா மா தே₃யம் ஹரிரயமிதி வ்யக்தமேவாப₃ூ₃ஷே ॥ 4 ॥

வேண்டுவார் வேண்டுவன அளிக்கும் ஸ்ரீகுருவாயூரப்பா! 'மூன்றடி மண்ணால் (திருப்தி) மகிழ்ச்சி பெறாதவன் மூவுலகங்களினாலும் திருப்தியடையான்' என்று தாங்கள் கூறியபோது, அந்த பலி நீர்வார்த்துத் தங்களுக்குத் தானம் தர விரும்பினான். அப்போது மஹாபலியை சோதிக்கவெண்ணிய அஸுர குருவான சுக்ராசாரியார் தங்கள் தூண்டுதலினால், 'இவர் ஸ்ரீஹரி (அனைத்தையும் கவர்பவன்). ஆகவே தராதே! தானம் தராதே!' என்று மஹாபலியிடம் தெளிவாகக் கூறினார். (4)

யாசத்யேவம் யதி³ ஸ ப⁴க³வாந் பூர்ணகாமோऽஸ்மி ஸோऽஹம்
த³ாஸ்யாம்யேவ ஸ்தி²ரமிதி வத³ந் காவ்யஶப்தோऽபி தை³த்ய: ।
விந்த்⁴யாவல்யா நிஜத³யிதயா த³த்தபாத்³யாய துர்ய²ம்
சித்ரம் சித்ரம் ஸகலமபி ஸ ப்ரார்ப்பயத்தோயபூர்வம் ॥ 5 ॥

'அந்த பகவானே இம்மாதிரி அந்தணச் சிறுவனாக வந்து என்னிடம் இரப்பானேயாகில் நான் எனது அனைத்து விருப்பங்களையும் பெற்றவனாவேன். நிச்சயமாகத் தரத்தான் போகிறேன்' என்று உறுதியாகக் கூறினான் அந்த மஹாபலி. குருவான சுக்ராசாரியார் சாபமிட்டபோதிலும், தன் மனைவியான விந்த்யாவளியால் திருவடியலம்பிக் கொள்ள ஸ்ரீபாத தீர்த்தம் அளிக்கப்பட்ட தங்களுக்கு அனைத்தையுமே நீர்வார்த்துத் தானமாகத் தந்தானாமே! இது மிகமிக வியப்பல்லவா! ('பூர்ணகாம:' என்பது இங்கு இடைக்கழி விளக்கு என்கிற ரீதியில் பலிக்கும், பகவானுக்கும் ஒக்கும்.) (5)

நிஸ்ஸந்தே³ஹம் தி³திகுலபதௌ த்வய்யஶேஷார்பணம் தத்³–
வ்யாதந்வாநே முமுசுர்ருஷய: ஸாமரா: புஷ்பவர்ஷம் ।
தி³வ்யம் ரூபம் தவ ச ததி³த்த²ம் பர்யதாம் விஶ்வப்³ரஹ்மா–
முச்சைருச்சைரவ்ருத⁴த்³வதீ³க்ருத்ய விஶ்வாண்ட³ப்³ரஹ்மாண்ட³ம் ॥ 6 ॥

அஸுர குலபதியான மஹாபலி தங்களிடம் சிறிதும் ஐயமின்றித் தனது உடைமைகள் அனைத்தையும் அர்ப்பணம் செய்தபோது தேவர்களும், முனிவர்களும் மலர்மாரி பெய்தனர். உலகினோர் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தங்களுடைய தெய்வீக வாமன உருவம் பிரம்மாண்டத்தின் எல்லை வரையில் மேன்மேலும் வளர்ந்தது. (6)

த்வத்பாதா³க்ரம் நிஜபத³க³தம் புண்ட³ரீகோத்³ப⁴வோऽஸௌ
குண்டி³தோயை–ரஸிசத³ுபநாத்³–யஜ்ஜலம் விஶ்வலோகாந் ।
ஹர்ஷோத்கர்ஷாத் ஸுப்³ரஹ்ம நந்ருதே கே²சரைருத்ஸவேऽஸ்மிந்
பே²ரீம் நிக்⁴நந் பு⁴வநமசரஜ்–ஜாம்ப³வாந் ப⁴க்திமாலீ ॥ 7 ॥

பதுமத்தில் தோன்றிய பிரம்மதேவர் தனது இருப்பிடமான சத்தியலோகத்தை அடைந்த தங்களது திருவடியைக் கமண்டலத்தில் இருந்த நீரால் அபிஷேகம் செய்தார். அந்த நீர் (ஆகாசகங்கை எனப் பெயர் பெற்று) அனைத்துலகங்களையும் புனிதமாக்கியது. விண்ணவர்கள் மகிழ்ச்சியோடு பலபடியாக நடனம் ஆடினார்கள். இப்பெருவிழாவில் பக்திமானான ஜாம்பவான் பேரியை முழக்கிக் கொண்டு உலகைச் சுற்றி வந்தார். (ஜாம்பவான் ஸ்ரீவாமனாவதாரம், ஸ்ரீராமாவதாரம், ஸ்ரீகிருஷ்ணாவதாரம் – மூன்றையும் கண்டவர் எனத் தெரிகிறது). (7)

தாவத்₃தை₃த்யாஸ்த்–வன்₃மதிம்ரு₂தே ப₃ர்தூ₃ராரப்₃த₄யுத்₃த₄ா:
தே₃வோபேதை₃ர்–ப₃வத₃நுசரை–ஸ்ஸங்க₃தா ப₃ங்க₃மாபந் ।
காலாத்மாயம் வஸதி புரதோ யத்₃வஸாத் ப்ராக்₃ஜிதா: ஸ்ம:
கிம் வோ யுத்₃தை₄ரிதி ப₃லிகி₃ரா தே₃த₃₂ பாதாளமாபு: ॥ 8 ॥

தேவதேவா! அப்பொழுது அஸுரர்கள் தங்களது அரசனான மஹாபலியின் ஆணை பெறாமலேயே போர் செய்யத் தொடங்கி, அங்கு வந்திருந்த தங்களது பணியாட்களை எதிர்த்துத் தோல்வியுற்றனர். (இதைக் கண்ட பலி) 'எந்த பகவானுடைய அருளால் நாம் முன்பு வெற்றி பெற்றோமோ, அதே காலரூபியான பகவான் இப்பொழுது நம் முன்னே (எதிர்தரப்பில்) நிற்கிறார். நாம் போரிடுவதால் என்ன பயன்?' என்றான். (இதைச் செவியுற்ற) அந்த அஸுரர்கள் பாதாளம் சென்றனர். (8)

பாஸுர்ப₃த்₃த₄ம் பதக₃பதிநா தை₃த்யமுச்சைரவாதீ₃:
தார்த்தீயீகம் தி₃ச மம பத₃ம் கிம் ந விஶ்வேஶ்வரோஸி ।
பாத₃ம் மூர்த்₄நி ப்ரணய ப₄க₃வந்நித்யகம்பம் வத₃ந்தம்
ப்ரஹ்லாத₃ஸ்தம் ஸ்வயமுபக₃தோ மாநயந்நஸ்தவீத்–த்வாம் ॥ 9 ॥

(அப்பொழுது) புள்ளரசனான கருட பகவான் வருணபாசத்தினால் பலியைக் கட்டினான். தாங்கள் மஹாபலியைப் பார்த்து, 'எனக்கு மூன்றாவது அடி வைக்க இடம் காட்டு (கொடு). நீயா உலக நாயகன்? (நீ உலகநாயகனல்லவா?)' என்று உரத்த குரலில் கேட்டீர்கள். (இதைக் கேட்ட மஹாபலி) சிறிதும் நடுக்கமின்றி, 'பரமனே! என் தலைமேல் உமது திருவடியை வைத்தருள்க' என்று கூறியபோது மஹாபலியைக் கொண்டாடிக் கொண்டே அங்கு வந்த பிரஹலாதன் தங்களைத் துதித்தான். (அனைத்துலகங்களும் எம்பெருமான் திருவடிக்குப் போதாதென்றாலும் பக்தனின் தலை சிறிதானாலும் அதுபோதும் என்பதே இங்கு கருத்து. இதுவே பக்தியின் பெருமை. **'பக்தி: கிம் ந கரோதி'** (சிவானந்தலஹரி) பக்தி எதைத்தான் செய்யாது?) (9)

த்₃ர்போச்சித்தயை விஹிதமகி₂லம் தை₃த்ய ஸித்₃தே₄ஸி புண்யை–
லோகஸ்தே₃ஸ்து த்ரிதி₃வவிஜயீ வாஸவத்வம் ச பஶ்சாத் ।
மத்ஸாயுஜ்யம் ப₄ஜ ச புநரித்யந்வக்₃ருஹ்ணா ப₃லிம் தம்
விப்ரை: ஸந்தாநிதமக₃வர: பாஹி வாதாலயேஶ ॥ 10 ॥

'அஸுரனே! உனது செருக்கினை அழிக்கவே இவையனைத்தும் நம்மால் செய்யப்பட்டது. (உனது) நற்செயல்களால் ஸித்தனாகிவிட்டாய். சுவர்க்கத்திற்கும் மேலான (ஸுதலம் என்ற புண்ணிய) உலகம் உனக்குக் கிட்டட்டும். பிறகு இந்திர பதவியும், அதன்பின் என்னிடம் ஸாயுஜ்ய முக்தியையும் அடைவாய்' என்று அந்த மஹாபலிக்கு அனுக்கிரஹம் செய்தீர்கள். அதன்பின் முன்பு (பலியினால்) தொடரப்பட்டு பாதியில் நின்றிருந்த வேள்வியையும் அந்தணர்களைக் கொண்டு பூர்த்தி செய்வித்தருளினீர்களே. குருவாயூரப்பா! என்னைக் காத்தருள வேண்டும். (10)

முப்பத்திரண்டாவது தசகம்

ஸ்ரீமத்ஸ்யாவதாரம்

புரா ஹயக்₃ரீவமஹாஸு²ரேண
ஷஷ்டாந்தராந்தோத்₃யத₃–காண்ட₃கல்பே ।
நித்₃ரோந்முக₂–ப்₃ரஹ்மமுக₂ாத்₃து₃ருதேஷு²
வேதே₃ஷ்வதி₂₃ஸ: கில மத்ஸ்யரூபம் ॥ 1 ॥

முன்பொருகால் ஆறாவது மன்வந்தரத்தின் முடிவில் திடீரென்று ஒரு பிரளயம் (அவாந்தர பிரளயம்) உண்டாயிற்று. அதுசமயம் பிரம்மதேவர் நித்திரையில் ஆழ்ந்திருந்தார். அவரது முகத்திலிருந்து ஹயக்ரீவன் என்ற பேரசுரன் வேதங்களைக் கவர்ந்தான். அதுசமயம் தாங்கள் மீன்வடிவில் தோன்ற விரும்பினீர்கள் அல்லவா? (1)

ஸத்யவ்ரதஸ்ய த்₃ரமிலாதி₄பர்துர்–நதீ₃ஜலே தர்பயதஸ்–தத₃ாநீம் ।
கராஞ்ஜலெள ஸஞ்ஜ்வலிதாக்ருதிஸ்த்வம–த்₃ருஶ்யத₂ா: கஶ்சந பா₃லமீந: ॥ 2 ॥

தமிழக மன்னனான ஸத்யவிரதன் ஆற்றின் நீரில் தர்ப்பணம் செய்து கொண்டிருக்கையில் அவனுடைய கூப்பிய கைகளில் தாங்கள் பளபளப்பான வடிவுடன் ஒரு மீன் குஞ்சாகத் தோன்றினீர்கள். (2)

க்ஷிப்தம் ஜலே த்வாம் ஸகிதம் விலோக்ய
நிந்யேऽம்பு₃பாத்ரேண முநி: ஸ்வகே₃ஹம் ।
ஸ்வல்பைரஹோபி₄: கலஶீம் ச கூபம்
வாபீம் ஸரஶ்சாநஶிஷே விபே₄ா த்வம் ॥ 3 ॥

ராஜரிஷியான அவர் (மீன் குஞ்சு வடிவில் உள்ள தங்களை) நீரில் விட்டபொழுது மிக்க பயந்த தங்களைத் தனது நீர் நிரம்பிய பாத்திரத்தில் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றார். பிரபோ! தாங்கள் சில நாட்களிலேயே அந்த தீர்த்த பாத்திரத்தின் அளவினும் பெரிதாகவே, ஒரு கிணற்றிற்கும், பின் குளத்திற்கும், பின் ஏரிக்கும் மாறிச் சென்று அனைத்தையும் பரவி வளர்ந்தீர்கள். (3)

யோக₃ப்ரபா₄வாத்₃–ப₄வதா₃ஜ்ஞயைவ நீதஸ்–ததஸ்த்வம் முநிநா பயோதி₄ம் ।
ப்ருஷ்டோऽமுநா கல்பதி₃த்₃ருக்ஷுமேநம் ஸப்தாஹமாஸ்வேதி வத₃ந்நயாஸீ: ॥ 4 ॥

பிறகு தங்களது கட்டளைப்படி அந்த ராஜரிஷி தனது யோக வலிமையால் கடலுக்குக் கொண்டு சேர்க்கத் தாங்கள் பிரளயத்தைக் காண விரும்பிய அவரிடம், 'ஏழு நாட்கள் பொறுத்துக் கொண்டிரு' என்று சொல்லி மறைந்தீர்கள். (4)

ப்ரரப்தே த்வது₃க்தேऽஹநி வாரித₄ாரா–பரிப்லுதே பூ₄மிதலே முநீந்த்₃ர: ।
ஸப்தர்ஷிபி₄: ஸார்த₄மபாரவாரிண்–யுத்₃கூ₄ர்ணமாந: ஶரணம் யயௌ த்வாம் ॥ 5 ॥

தாங்கள் குறித்த நாள் வந்தபொழுது பெய்த மழையால் பூமி நிரம்பி மூழ்கி மறையவே, அந்த ராஜரிஷி சப்தரிஷிகளுடன் பிரளய நீரில் சுழன்று தவித்துத் தங்களையே சரணமடைந்தார். (5)

தூராம் த்வதூாதேூஸகரீமவாப்தாம் நௌரூபிணீமாருருஹுஸ்–ததூா தே ।
தத்கம்பகம்ப்ரேஷு ச தேஷு பூூயஸ்–த்வமம்பூதே–ராவிரபூூர்–மஹீயாந் ॥ 6 ॥

அப்பொழுது தங்கள் கட்டளைப்படி பூமாதேவி தோணி உருவில் வரவே, அதில் அவர்கள் ஏறிக் கொண்டார்கள். அந்தத் தோணி ஆடுவது கண்டு அவர்கள் நடுங்கவே, தாங்கள் அந்தப் பிரளய ஜலத்தில் பெரிய மீனுருக்கொண்டு மீண்டும் தோன்றினீர்கள். (6)

ஜஷாக்ருதிம் யோஜநலக்ஷதீர்கூாம்
தூதூாநமுச்சைஸ்தர–தேஜஸம் த்வாம் ।
நிரீக்ஷ்ய துஷ்டா முநயஸ்த்வதுூக்த்யா
த்வத்துங்கூஶ்ருங்கேூ தரணிம் பூபூந்துூ: ॥ 7 ॥

லக்ஷயோஜனை நீட்சி கொண்ட, மிக்கப் பேரொளி படைத்த பெருத்த மீனுருவில் தோன்றிய தங்களைக் கண்ட முனிவர்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டு தங்கள் சொற்படி (பூமி வடிவான) தோணியைத் தங்கள் பெருத்த கொம்பில் கட்டினார்கள். (7)

ஆக்ருஷ்டநௌகோ முநிமண்டூலாய ப்ரதூர்ஶயந் விஶ்வஜகூத்ூவிபூாகூாந் ।
ஸம்ஸ்தூயமாநோ நிருவரேண தேந ஜ்ஞாநம் பரம் சோபதிூசந்நசாரீ: ॥ 8 ॥

அந்தத் தோணியை இழுத்துக் கொண்டு தாங்கள் முனிவர் குழாத்திற்கு உலகின் பற்பல பிரிவுகளைக் காண்பித்துக் கொண்டும், அந்த அரசனான ஸத்யவிரதனால் நன்கு துதிக்கப்பட்டு, அவனுக்கு மேலான ஆத்மஞானத்தை உபதேசித்துக் கொண்டும் (நீரில்) உலாவி வந்தீர்கள். (8)

கல்பாவதெூள ஸப்தமுநீந் புரோவத் ப்ரஸ்தூாப்ய ஸத்யவ்ரதபூூமிபம் தம் ।
வைவஸ்வதாக்ூயம் மநுமாதூதூாந: க்ரோதூாத் ஹயக்ூரீவமபிூத்ூருதோ‌உபூூ: ॥ 9 ॥

கல்பத்தின் முடிவில் அந்த ஏழு முனிவர்களையும் முன்போலவே அவர்களது இடத்தில் அமர்த்தி, அந்த மன்னனான ஸத்யவிரதனை வைவஸ்வத மனுவாகச் செய்துவிட்டு மிக்க கோபங்கொண்டு ஹயக்ரீவன் என்ற அஸுரனைத் தாக்கினீர்கள். (9)

ஸ்வதுங்கூஶ்ருங்கூக்ஷதவக்ஷஸம் தம்
நிபாத்ய தைூத்யம் நிகூமாந் க்ருஹீத்வா ।
விரிஞ்சயே ப்ரீதஹ்ருதேூ தூதூாந:
ப்ரபூஞ்ஜநாகூாரபதே ப்ரபாயா: ॥ 10 ॥

ஹே குருவாயூரப்பா! தங்களுடைய உயர்ந்த கொம்பினால் அந்த அஸுரனின் மார்பைப் பிளந்து, அவனைக் கீழே தள்ளிவிட்டு வேதங்களை (அவனிடமிருந்து) கைப்பற்றி மனம் மகிழ்வுற்ற பிரம்மதேவனிடம் அளித்தீர்கள். (அத்தகைய) தாங்கள் என்னைக் காத்தருள வேண்டும். (10)

ஒன்பதாவது ஸ்கந்தம்

முப்பத்து மூன்றாவது தசகம்

அம்பரீஷி சரிதம்

வைவஸ்வதாக்₂ய–மநுபுத்ர–நப₄காத்₃ஜாத–
நாப₄காத்₃நாமக–நரேந்த்₃ரஸ்தோ(அ)ம்ப₃ரீஷ: ।
ஸப்தார்ணவாவ்ருதமஹீ–த₃யிதோ(அ)பி ரேமே
த்வத்ஸங்கி₃ஷு த்வயி ச மக்₃நமநா: ஸதை₃வ ॥ 1 ॥

வைவஸ்வத மனுவின் மகனான நபாகனின் மகன் நாபாகன். அந்த அரசனுடைய மகன் அம்பரீஷன். அவன் ஏழு கடல்களால் சூழப்பட்ட இந்த பூமிக்கு அரசனாகவிருந்த போதிலும் தங்கள் பக்தர்களிடமும், தங்களிடமும் எப்போதுமே ஆழ்ந்த அன்பு கொண்டவனாக மகிழ்ந்திருந்தான். (1)

த்வத்பரீதயே ஸகலமேவ விதந்வதோ(அ)ஸ்ய
ப₄க்த்யைவ தே₃வ நசிராத்₃ப₄ருதா₂: ப்ரஸாத₃ம் ।
யேநாஸ்ய யாசநம்ருதே–(அ)ப்யபி₄ரக்ஷணார்த₂ம்
சக்ரம் ப₄வாந் ப்ரவிததார ஸஹஸ்ரதா₄ரம் ॥ 2 ॥

தேவதேவனே குருவாயூரப்பா! செயல்களனைத்தையும் தங்களுடைய அர்ப்பணமாகவே செய்துவந்த அவனது பக்தியை மெச்சி, அவன் வேண்டாமலேயே, அவனைக் காக்கும் பொருட்டு ஆயிரம் முனைகளோடு கூடிய ஸ்ரீசுதர்சன சக்கரத்தைக் கொடுத்தீர்கள். (இவ்விதம்) அவனது பக்தியொன்றையே நினைத்து மிக விரைவில் அவனுக்கு அருள்புரிந்தீர்கள். (2)

ஸ த்₃வாத₃ஶீவ்ரதமதே₂ா ப₄வதா₃ர்சநார்த₃ம்
வர்ஷம் த₃தே₄ள மது₄வநே யமுநோபகண்டே₂ ।
பத்ந்யா ஸமம் ஸுமநஸா மஹதீம் விதந்வந்
பூஜாம் த்₃விஜேஷு விஸ்ருஜந் பஶுஷஷ்டிகோடிம் ॥ 3 ॥

அந்த அம்பரீஷன் யமுனை நதிக்கு அருகிலுள்ள மதுவனத்தில் நன்மனம் படைத்த தனது மனைவியோடு சிறந்த வழிபாட்டினைச் செய்து கொண்டும், வேதம் கற்றறிந்த அந்தணர்கட்கு அறுபது கோடி பசுக்களைத் தானமளித்துக் கொண்டும் தங்களை வழிபடுவதற்காக ஓராண்டு காலம் துவாதசி விரதத்தை மேற்கொண்டிருந்தான். (3)

தத்ராத₂ பாரணதி₃நே ப₄வதா₃ர்சநாந்தே
து₃ர்வாஸஸாஅஸ்ய முநிநா ப₄வநம் ப்ரபேதே₃ ।
பே₄க்தும் வ்ருதஶ்ச ஸ நரூபேண பரார்திஶீலோ
மந்த₃ம் ஜகா₃ம யமுநாம் நியமாந் விதா₃ஸ்யந் ॥ 4 ॥

அந்த மதுவனத்தில் தங்கள் வழிபாடு முடித்து பாரணை (போஜனம்) செய்ய வேண்டிய தினத்தன்று துர்வாஸ முனிவர் அந்த அரசனின் அரண்மனைக்கு வந்தார். (அவரைக் கண்ட) அரசன் அவரைப் பாரணை செய்ய வேண்டவே, பிறரைத் துன்புறுத்திச் சோதிக்கும்

இயல்புடைய அந்த முனிவரும் தனது அனுஷ்டானங்களைச் செய்துவர யமுனைக்கு மிக மெதுவாகச் சென்றார். (4)

ராஜ்ஞாऽத² பாரணமுஹூர்தஸமாப்திகே²த்³தா³த்³
வாரைவ பாரணமகாரி ப³வத்பரேண ।
ப்ராப்தோ முநிஸ்தத³த² தி³வ்யத³்ருஶா விஜ்ஞாந³
க்ஷிப்யந் க்ருதே³த்³த³்ருதஜ்டோ விததாந க்ருத்யாம் ॥ 5 ॥

அதன்பின் தங்களையே நம்பியுள்ள அரசன் (துர்வாஸரது வருகைக்குத் தாமதமாவது கண்டு) பாரணை செய்ய வேண்டிய காலம் கடந்து விடுகின்றதே என வருந்தி (பகவானது அபிஷேக) தீர்த்தத்தை மட்டும் பருகி பாரணையைச் செய்தான். பிறகு அங்கு திரும்பிவந்த முனிவர், அதைத் தனது தெய்வீகப் பார்வையால் அறிந்து, அரசனைக் கடிந்து கொண்டு, சினத்தோடு தனது கடையைப் பிய்த்து 'கிருத்தி' என்ற ஒரு துர்தேவதையைத் தோற்றுவித்தார். (5)

குறிப்பு:– 'அபோऽஶ்நாதி தந்நேவாஸ்மிதம் நேவாநஶ்மிதம்' (நீர் அருந்துவது சாப்பிட்டது போலுமாகும், சாப்பிடாதது போலவுமாகும்) என்கிறது வேதம்.

க்ருத்யாம் ச தாமஸித³்ராம் பு³வநம் த³ஹந்தீ–
மக்³ரேऽபி³வீக்ஷ்ய ந்ருபதிர்ந பத³்ராச்சகம்பே ।
த்வத்³ப³க்த–ப³ாத³மபி³வீக்ஷ்ய ஸுத³ர்ஶநம் தே
க்ருத்யாநலம் ஶலப³யந் முநிமந்வதா³வீத் ॥ 6 ॥

அந்த கிருத்தி கையில் வாளேந்தி உலகை எரித்துக் கொண்டு வருவது கண்டும் அவ்வரசன் தனது இடத்திலிருந்து சிறிதும் அசைந்தானில்லை. தங்களது சுதர்சனம் என்ற சக்கராயுதம் தங்களது பக்தனான அவ்வரசனை அந்த கிருத்தியாகிய தீ துன்புறுத்துவது கண்டு அதை ஒரு விட்டில் பூச்சியைப் போல் விழுங்கியது. பின் துர்வாஸ முனிவரைப் பின்தொடர்ந்து சென்றது. (6)

தா³வந்நஶ்ஷுபு³வநேஷு பி³யா ஸ பஶ்யந்
விஶ்வத்ர சக்ரமபி தே கு³தவாந் விரிஞ்சம் ।
க: காலசக்ரமதிலங்க⁴யதீ–த்யபாஸ்த:
ஶர்வம் யயௌ ஸ ச பு³வந்த–மவந்த³தைவ ॥ 7 ॥

அந்த துர்வாஸ முனிவர் பயத்தால் எல்லா உலகங்களுக்கும் ஓடினார். எல்லாவிடத்திலும் தங்களுடைய சக்கரமும் பின்தொடர்ந்து வருவதைக் கண்டு நான்முகனிடம் சென்றார். 'கால சக்கரத்தை யார்தான் மீற முடியும்?' என்று கூறி, அவர் கைவிடவே பரமசிவனிடம் சென்றார். அவரும் தங்களையே வணங்கினாராமே! (7)

பூ⁴யோ பு³வந்நிலயமேத்ய முநிம் நமந்தம்
ப்ரோசே பு³வாநஹம்ருஷே நநு பு³க்தத³ாஸ: ।
ஜ்ஞாநம் தபஶ்ச விநயாந்விதமேவ மாந்யம்
யாஹ்யம்ப³ரீஷபத³மேவ பு³ஜேதி பூ³மந் ॥ 8 ॥

எங்கும் நீக்கமற நிறைந்த குருவாயூரப்பா! பிறகு தங்களுடைய நிலயமாகிற ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து (தங்களை) வணங்கிய முனிவரைக் கண்டு தாங்கள், "முனிவரே!

நானோ அடியவர்கட்கு அடியவன். ஞானமும், தவமும் (அஹங்காரமற்று) செருக்கற்றுப் பணிவுடன் கூடியிருந்தால்தான் போற்றுதற்குரியனவாகும். நீங்கள் அம்பரீஷனையே சரணடையுங்கள்'' என்று கூறினீர்களாமே! (8)

தாவத் ஸமேத்ய முநிநா ஸ க்ருஹீதபாதே₃
ராஜாऽபஸ்ருத்ய ப₄வத₃ஸ்த்ர–மஸாவநௌஷீத் ।
சக்ரே கு₃தே முநிரதா₃த₃–கி₂லாபிஷோऽஸ்மை
த்வத்₃ப₄க்திமாகா₃ஸி க்ருதேऽபி க்ருபாம் ச ஶம்ஸந் ॥ 9 ॥

(இதைக் கேட்டு) உடனே திரும்பி வந்த முனிவர் அரசனுடைய பாதங்களிலே விழவே, அந்த மஹாராஜன் (சற்று) விலகிச் சென்று, தங்களது சக்கராயுதத்தைத் துதித்தார். சக்கரம் திரும்பிச் சென்றதும், முனிவர் தங்களிடம் அரசனுக்கு உள்ள பக்தியையும், தீங்கிழைத்தபோதிலும் (தன்னிடம்) காட்டிய கருணையையும் வியந்து பாராட்டி, அவ்வரசனுக்கு அனைத்துவிதமான ஆசிகளையும் வழங்கினார். (9)

ராஜா ப்ரதீக்ஷ்ய முநிமேகஸமாமநாஸ்வாந்
ஸம்பே₄ஜ்ய ஸாது₄ தம்ருஷிம் விஸ்ருஜந் ப்ரஸந்நம் ।
பு₄க்த்வா ஸ்வயம் த்வயி ததோऽபி த்₃ருட₄ம் ரதோऽபூ₄த்
ஸாயுஜ்யமாப ச ஸ மாம் பவநேஶ பாயா: ॥ 10 ॥

முனிவர் வருகையை எதிர்நோக்கி ஓராண்டு காலம் உணவு உட்கொள்ளாமலிருந்த அரசன் திரும்பி வந்த முனிவரை மனம் மகிழும்படி உண்பித்து வழியனுப்பி வைத்தார். அதன்பின் தான் பாரணை செய்து தங்களிடம் முன்னிலும் திடமான பக்தியைச் செய்யலானார். கடைசியில் தங்களுடைய ஸாயுஜ்யத்தையும் (தங்களுடன் ஒன்றிய நிலையையும்) அடைந்தார். குருவாயூரப்பா! அத்தகைய பெருமை படைத்த தாங்கள் என்னைக் காத்தருள வேண்டும். (10)

❀ஸ்ரீ❀ஸ்ரீ❀

முப்பத்து நான்காவது தசகம்

ஸ்ரீராம சரிதம்

கீ₃ர்வாணைரர்த்₂யமாநோ த₃ஶமுக₂நித₄நம் கோஸலேऽஷ்வ்ருʼயஶ்ருங்கே₃
புத்ரீயாமிஷ்டிமிஷ்ட்வா த₃து₃ஷி த₃ஶரத₂–ஷ்மாப்₄ருதே பாயஸார்க்₃ர்யம் ।
தத்₃பு₄க்த்யா தத்புரந்த்₄ரீஷ்வபி திஸ்ருஷு ஸமம் ஜாதகை₃ர்பா₃ஸு ஜாதோ
ராமஸ்த்வம் லக்ஷ்மணேந ஸ்வயமத₂ ப₄ரதேநாபி ஶத்ருக்₄நநாம்நா ॥ 1 ॥

குருவாயூரப்பா! தேவர்கள் ராவணனை வதைக்க வேண்டித் தங்களை வேண்டிக் கொண்டனர். கோசல தேசத்தில் (அயோத்தியில்) ருச்யசிருங்க முனிவர் (தசரதனுக்குப் பிள்ளைப்பேறு வேண்டி) புத்திரனை அளிக்கும் வேள்வியைச் செய்தார். (அதில் கிடைத்த) உயர்ந்த பாயசத்தை தசரதனுக்கு அளித்தார். அதை உண்ட தசரதரின் பட்டமஹிஷிகள் மூவரும் ஒரே சமயத்தில் கருவுற்றனர். அம்மூவரிடமும் தாங்களே பரதனோடும், லக்ஷ்மணனோடும், சத்ருக்னனோடும் ஸ்ரீராமனாகத் திருவவதாரம் செய்தருளினீர்கள். (1)

கோதண்டீ கௌஸிகஸ்ய க்ரதுவரமவிதும் லக்ஷ்மணேநாநுயாதோ
யாதோபூ4ஸ்தாதவாசா முநிகதி3தமநுத்3வந்த்3வ–ஸாந்தாத்3வகே3த்3த: ।
நிஸ்ரூணாம் த்ராணாய பா3ணைர்–முநிவநபா3லாத்–தாடகாம் பாடயித்வா
லப்3த்4வாஸ்மாத்3ஸ்தாதரஜாலம் முநிவநமக3மோ தே3வ ஸித்3தா4ஸ்ரமாக்2யம் ॥ 2 ॥

ஸ்ரீராமாவதாரம் செய்த தேவனே! தந்தையின் கட்டளைப்படி விசுவாமித்திரருடைய வேள்வியைக் காக்க வில்லேந்தி லக்ஷ்மணன் பின்தொடரச் சென்றீர்கள். முனிவரான விசுவாமித்திரர் உபதேசித்த (பலை, அதிபலை என்ற இரண்டு) மந்திரங்களால் வழி நடந்த களைப்பைப் போக்கிக் கொண்டீர்கள். மக்களைக் காக்கும் பொருட்டு முனிவரின் சொல்லாற்றலால் அம்பு கொண்டு தாடகையை வதம் செய்து, அவரிடமிருந்து பல அஸ்திரங்களை உபதேசமாகப் பெற்று 'ஸித்தாசிரமம்' என்ற பெயர் கொண்ட முனிவர்களின் தபோவனத்தை அடைந்தீர்கள். (2)

மாரீசம் த்3ராவயித்வா மக2ஸிரஸி ஸரைரந்யரக்ஷாம்ஸி நிக்4நந்
கல்யாம் குர்வந்நஹல்யாம் பதி3 பத்3ரஜஸா ப்ராப்ய வைதே3ஹகே3ஹம் ।
பி4ந்த்3நஶ்சாந்த்3ரகூடம் த4நுரவநிஸுதாமிந்தி3ராமேவ லப்3த்4வா
ராஜ்யம் ப்ராதிஷ்ட2த2ஸ்த்வம் த்ரிபி4ரபி ச ஸமம் ப்3ராத்ருவீரை: ஸத்3தா3ரை: ॥ 3 ॥

வேள்வியின் தொடக்கத்தில் பாணங்களால் மாரீசனைத் துரத்தி, மற்ற அரக்கர்களைக் கொன்றுவிட்டு (ஜனகரின் தனுர்யாகத்திற்குச் செல்லும்) வழியில் (தனது) பாததூளியால் அகல்யையைத் தூய்மையாக்கி, விதேக மன்னனான ஜனகரின் அரண்மனையை அடைந்தீர்கள். (அங்கு) சிவபெருமானின் வில்லை முறித்து, நிலமகளின் பெண்ணாகத் திருவவதரித்த ஸ்ரீமஹாலக்ஷ்மியான சீதாபிராட்டியை மணந்து, வீரர்களான (தனது) மூன்று சகோதரர்களுடனும், அவர்களது மனைவிமார்களுடனும் அயோத்திக்குத் திரும்பினீர்கள். (3)

ஆருந்த4நே ருஷாந்தே2 ப்4ருகு3 குலதிலகே ஸங்க்ரமய்ய ஸ்வதேஜோ
யாதே யாதோஸ்யயோத்4யாம் ஸுக2மிஹ நிவஸந் காந்தயா காந்தமூர்தே ।
ஶத்ருக்4நேநைகத3ாஸீத்தே3ா கதவதி பரதே மாதுலஸ்யாதி4வாஸம்
தாதாரப்3தே4ாபி4ஷேகஸ்–தவ கில விஹத: கேகயாதீ4ஶ–புத்ர்யா ॥ 4 ॥

பிருகுகுல திலகரான பரசுராமர் சினத்தாலறிவிழந்து (தங்களை) வழிமறித்துத் தனது (வைஷ்ணவ) தேஜஸை (தவவலிமையை)த் தங்களிடம் அர்ப்பணம் செய்து சென்றபிறகு அயோத்தியை அடைந்தீர்கள். அழகே உருவெடுத்த அண்ணலே குருவாயூரப்பா! அங்கு மனையாளான சீதையோடு இனிதே வாழ்ந்தீர்கள். பின் ஒருக்கால் பரதன் சத்ருக்னனோடு தனது அம்மான் வீட்டிற்குச் சென்றிருந்தபோது தங்களது தந்தையார் தங்களுக்கு முடிசூட்டத் தொடங்கவே, அது கேகய மன்னன் புதல்வியான கைகேயியால் தடுக்கப்பட்டதல்லவா? (4)

தாதோக்த்யா யாதுகாமோ வநமநுஜவதூ4ஸம்யுதஶ்சாபதா4ர:
பௌராநாருத்4ய மார்கே3 கு3ஹநிலயக3தஸ்–த்வம் ஜடாசீரதா4ரீ ।
நாவா ஸந்தீர்ய க3ங்கா3மதி4பத3வி புநஸ்தம் ப4ரத்3வாஜமாராந்–
நத்வா தத்3வாக்யஹேதோ–ரதிஸுக2மவஸஶ்–சித்ரகூடே கி3ரீந்த்3ரே ॥ 5 ॥

தந்தை சொற்படி வில்லைக் கையிலேந்தித் தம்பியுடனும், மனையாளொடும் வனமேபுக விரும்பிய தாங்கள் (உடன்வந்த) நகர மக்களைத் திருப்பியனுப்பிவிட்டு, குஹன் இருக்குமிடம்

அடைந்து சடையும், மரவுரியும் தரித்து கங்கையைத் தோணி கொண்டு கடந்தீர்கள். வழியில் அருகிலிருந்த பரத்வாஜ முனிவரைக் கண்டு வணங்கி, அன்னாரது சொற்கேட்டு திருச்சித்திரகூட மலை சென்று அங்கு மிகவும் இன்பமாக வசிக்கலானீர்கள். (5)

ஶ்ருத்வா புத்ரார்தி–கி²ந்நம் கலு ப²ரதமுகா²த் ஸ்வர்க³யாதம் ஸ்வதாதம்
தப்தோ த³த்வாऽம்பு³ தஸ்மை நித³தி⁴த³ ப²ரதே பாது³காம் மேதி³நீம் ச ।
அத்ரிம் நத்வாத³ கத்வா வநமதிவிபுலம் த³ண்ட³கம் சண்ட³காயம்
ஹத்வா தை³த்யம் விராத⁴ம் ஸுக²யிதமகலயஶ்சாரு பே⁴: ஶரப⁴ங்கீ³ம் ॥ 6 ॥

ஸ்ரீராமனாகத் திருவவதரித்த குருவாயூரப்பா! தங்களது தந்தை, மகனான தங்களின் பிரிவாற்றாமையால் (உயிர்துறந்து) விண்ணுலகு அடைந்ததை பரதன் வாயிலாகக் கேட்டு மிக்க வருந்தி, அவருக்குத் தர்ப்பணம் செய்தீர்கள். பரத நம்பிக்குப் பாதுகையும், அரசும் தந்து, (பிறகு) அத்ரி முனிவரை வணங்கிவிட்டுப் பெருத்த தண்டகவனம் புகுந்தீர்கள். அங்கு மிக்க பயங்கரமான உரு படைத்த விராதன் என்னும் அரக்கனை வதைத்து, சரபங்க முனிவருக்கு நற்கதியை அதாவது மோக்ஷத்தை அளித்தீர்கள். (6)

நத்வாக³ஸ்த்யம் ஸமஸ்தாஶரநிகர–ஸபத்ராக்ருதிம் தாபஸேப்⁴ய:
ப்ரத்யஶ்ரௌஷீ: ப்ரியைஷீ தத³நு ச முநிநா வைஷ்ணவே தி⁴ஷ்ண்யஸாபே ।
ப்⁴ரஹ்மாஸ்த்ரே சாபி த³த்தே பதி² பித்ருஸுஹ்ருத³ம் வீக்ஷ்ய பூ⁴யோ ஜடாயும்
மோதா³த்³ கோ³தா³தடாந்தே பரிரமஸி புரா பஞ்சவட்யாம் வதூ⁴ட்யா ॥ 7 ॥

முனிவர்கள் அனைவருக்கும் நன்மையே செய்ய விரும்பிய தாங்கள் எல்லா அரக்கர் கூட்டத்தையும் வதைப்பதாகச் சூளுரைத்தீர்கள். அகஸ்திய முனிவரை வணங்கி அவரிடமிருந்து வைஷ்ணவ தனுசையும், பிரம்மாஸ்திரத்தையும் பெற்றுக் கொண்டு (செல்லும்) வழியில் தந்தையின் நண்பனான ஜடாயுவைக் கண்டு மகிழ்ந்து, கோதாவரிக் கரையில் உள்ள பஞ்சவடியில் மனையாளோடு இன்பமாக வசித்தீர்கள் அல்லவா? (7)

ப்ராப்தாயா: ஶூர்பணக்²யா மத³நலத⁴ருதேரர்த³நை:–நிஸ்ஸஹாத்மா
தாம் ஸௌமித்ரௌ விஸ்ருஜ்ய ப்ரப³லதமருஷா தேந நிர்லூநநாஸாம் ।
த்³ருஷ்ட்வைநாம் ருஷ்டசித்தம் கரமபி¹பதிதம் தூ³ஷணம் ச த்ரிமூர்த⁴ம்
வ்யாஹிம்ஸீ–ராஶராநப்யயுதஸமதி¹காம்ஸ்–தத்க்ஷணாத்³க்ஷதோஷ்மா ॥ 8 ॥

குறைவற்ற வலிமை படைத்த குருவாயூரப்பா! காம விகாரத்தால் அறிவிழந்து தங்களிடம் வந்த சூர்ப்பணகையின் வேண்டுதல்களைப் பொறுக்க மாட்டாது, தாங்கள் அவளை லக்ஷ்மணனிடம் அனுப்ப அவன் மிக்க சினம் கொண்டு அவளது மூக்கையறுத்தான். இவளைக் கண்டு கோபத்துடன் தங்களை எதிர்த்துப் போரிட வந்த கரனையும், தூஷணனையும், திரிசிரஸையும் மற்றும் பதினாயிரத்திற்கும் மேற்பட்ட அரக்கர்களையும் அதே நொடியில் கொன்றொழித்தீர்கள். (8)

ஸோத³ர்யா ப்ரோக்தவார்தாவிவஶ–த³ஶமுகா²தி³ஷ்ட–மாரீசமாயா–
ஸாரங்க³ம் ஸாரஸாக்ஷ்யா ஸ்ப்ருஹிதமநுக³த: ப்ராவதீ³ர்–ப³ாணகா⁴தம் ।
தந்மாயாக்ரந்த³–நிர்யாபித–ப²வத³நுஜாம் ராவணஸ்–தாமஹார்ஷீத்–
தேநார்த்தோऽபி த்வமந்த: கிமபி முத³மதா⁴ஸ்–தத்³வதே⁴ாபாயலாப⁴ாத் ॥ 9 ॥

தனது தங்கை கூறிய செய்தியைக் கேட்ட இராவணன் கோபத்தால் பரவசனானான். அவனுடைய கட்டளையால் மாரீசன் மாய மானாக வர, (அதைக் கண்ட) செந்தாமரை போன்ற திருக்கண்களுடன் கூடிய சீதாதேவி அதை(ப் பிடிக்க) விரும்பினாள். ஆகவே தாங்கள் அதைப் பின்தொடர்ந்து சென்று பாணத்தால் கொன்றீர்கள். அந்த மாரீசனின் வஞ்சகமான கூக்குரலைக் கேட்ட சீதை தங்கள் தம்பியான லக்ஷ்மணனை அனுப்பவே, இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். அதனால் (வெளிப்படையாகத்) துன்புற்ற தாங்கள் இராவணனை வதம் செய்ய ஓர் உபாயம் கிடைத்தது பற்றி உள்ளூற மகிழ்ச்சி கொண்டீர்கள். (9)

பூ4யஸ்தந்வீம் விசிந்வந்நஹ்ருத த2ஶமுக2ஸ்த்வத்3வதூ4ம் மத்3வதே2நேத்–
யுக்த்வா யாதே ஜடாயெள தி3வமத2 ஸுஹ்ருத3: ப்ராதநோ: ப்ரேதகார்யம் ।
க்3ருஹ்ணாநம் தம் கப3ந்த4ம் ஜகநிந்த2 ஶப3ரீம் ப்ரேக்ஷ்ய பம்பாதடே த்வம்
ஸம்ப்ராப்தோ வாதஸூநும் ப்4ருஶமுதி3தமநா: பாஹி வாதாலயேஶ ॥ 10 ॥

பின் மனையாளான சீதையைத் தேடிப்போகையிலே வழியில் ஜடாயு(வைக் காண அவர்), 'இராவணன் என்னைக் கொன்றுவிட்டு உன் மனைவியைக் கவர்ந்து சென்றான்' எனக் கூறி விண்ணுலகை அடைந்தார். (தாங்கள்) நண்பனான ஜடாயுவிற்கு ஈமச் சடங்குகளைச் செய்தீர்கள். (பிறகு வழியில்) தங்களைப் பிடித்துக் கொண்ட கபந்தனைக் கொன்றீர்கள். பம்பை நதிக்கரையில் சபரியைக் கண்டீர்கள். பின் அனுமனையடைந்து பெரிதும் மகிழ்வெய்தினீர்கள். அத்தகைய குருவாயூரப்பா! என்னைக் காத்தருள்க! (10)

❖〜❖〜❖

முப்பத்தைந்தாவது தசகம்

ஸ்ரீராம சரிதம் (தொடர்ச்சி)

நீதஸ்ஸுக்3ரீவமைத்ரீம் தத3நு ஹநுமதா துந்துபே4: காயமுச்சை:
க்ஷிப்த்வாங்கு3ஷ்டே2ந பூ4யோ லுலவித2 யுக3பத் பத்ரிணா ஸப்த ஸாலாந் ।
ஹத்வா ஸுக்3ரீவ–கா3தோத்3யதமதுலப3லம் வாலிநம் வ்யாஜவ்ருத்த்யா
வர்ஷாவேலாமநைஷீர்–விரஹதரளிதஸ்–த்வம் மதங்கா3ஶ்ரமாந்தே ॥ 1 ॥

அதன்பின் அனுமன் மூலம் சுக்ரீவனை நண்பனாக அடைந்து, (அவனுக்கு உங்கள் வலிமையில் நம்பிக்கையைத் தோற்றுவிக்க) துந்துபி என்ற அரக்கனின் உடலை (எலும்புக்கூட்டை)க் கால் கட்டைவிரலால் உந்தி எறிந்து, ஏழு மராமரங்களையும் ஒரே சமயத்தில் அம்பினால் துளைத்தீர்கள். சுக்ரீவனைக் கொல்ல முனைந்த, அளவற்ற திறனுடைய வாலியைக் கபடமாகக் கொன்று தீர்த்த தாங்கள் மதங்க முனிவரின் ஆசிரமத்தின் அருகில் சீதையைப் பிரிந்த துன்பத்தோடு மழைக்காலத்தைக் கழித்தீர்கள். (1)

ஸுக்3ரீவேணாநுஜோக்த்யா ஸப4யமபி4யதாம் வ்யூஹிதாம் வாஹிநீம் தாம்
ருக்ஷாணாம் வீக்ஷ்ய தி3க்ஷு த்3ருதமத2 த3யிதாமார்க்3ணாயாவநம்ராம் ।
ஸந்தே3ஶம் சாங்கு3லீயம் பவநஸுதகரே ப்ராதி3ஶோ மோத3ஸாலீ
மார்கே3 மார்கே3 மமார்கே3 கபிபி4ரபி ததா3 த்வத்ப்ரியா ஸப்ரயாஸை: ॥ 2 ॥

(மழைக்காலம் கழிந்த) பிறகு தங்கள் தம்பியான லக்ஷ்மணனின் கூற்றைக் கேட்டு அஞ்சிய சுக்ரீவன் தங்களிடம் வந்தான். எல்லா திசைகளிலும் தங்கள் மனைவியான சீதையை

விரைந்து தேடுவதற்காக அணிவகுத்து நின்ற வானர சேனையைக் கண்டு மகிழ்ந்த தாங்கள் வாயு குமாரனான அனுமனிடம் சீதையிடம் கூறவேண்டிய செய்தியைச் சொல்லி கணையாழியையும் அளித்தீர்கள். வானரர்கள் அனைவரும் மிகுந்த முயற்சியுடன் தங்கள் மனைவியை எல்லா வழிகளிலும் தேடினார்கள். (2)

த்வத்3வார்தா–கர்ணநோத்3யத்3க்3ருது3ருஜ்வ–ஸம்பாதிஸம்பாதிவாக்ய–
ப்ரோத்தீர்ணார்ணோதி4–ரந்தர்நக3ரி ஜநகஜாம் வீக்ஷ்ய த3த்வாங்கு3லீயம் ।
ப்ரக்ஷுத்3யோத்3யாந–மக்ஷக்ஷபணசணரண: ஸோட4பந்தே3ா த3ஸ்யம்
த்3ருஷ்ட்வா ப்லுஷ்ட்வா ச லங்காம் ஜ்வடிதி ஸ ஹநுமாந் மௌளிரத்நம் த3தெ3ள தே ॥ 3 ॥

தங்களது வரலாற்றைக் கேட்ட ஸம்பாதி (என்ற கழுகரசன் எரிந்துபோன) தனது இறக்கைகள் முளைக்கப் பெற்று, வெகுவேகமாக மேலே பறந்து சென்று (அங்கிருந்து சீதை அசோகவனத்திலே இருப்பது கண்டு) கூற, அதைச் செவியுற்ற அனுமன் கடலைத் தாண்டி, கடலின் நடுவில் உள்ள இலங்கையில் ஜனகரின் திருமகள் சீதாதேவி இருக்கக்கண்டு அவளிடம் கணையாழியை அளித்தார். அசோகவனத்தை அழித்து திறமையோடு போர் செய்த அக்ஷ குமாரனைக் கொன்றார். (இந்திரஜித் ஏவிய) பிரம்மாஸ்திரத்தின் கட்டைப் பொறுத்துக் கொண்டு இராவணனைக் கண்டு (பேசி) இலங்கைக்கு எரியூட்டி சீக்கிரமே தங்களிடம் வந்து சூடாமணியைக் கொடுத்தார். (3)

த்வம் ஸுக்3ரீவாங்க3த்3ாதி3–ப்ரப3லகபிசமூ–சக்ரவிக்ராந்தபூ4மீ–
சக்ரோடபி4க்ரம்ய பாரேஜலதி4 நிஶிசரேந்த்3ராநுஜாஶ்ரீயமாண: ।
தத்ப்ரோக்தாம் ஶத்ருவார்தாம் ரஹஸி நிஶமயந் ப்ரார்த2நா–பார்த்2யரோஷ–
ப்ராஸ்தாக்3நேயாஸ்த்ர–தேஜஸ்த்3ரஸது3த்3தி4கி3ரா லப்3த4வாந் மத்4யமார்க3ம் ॥ 4 ॥

சுக்ரீவன், அங்கதன் முதலியோருடன் கூடிய வலிமை வாய்ந்த வானரப்படை (பாரத) பூமண்டலத்தைத் தாண்டிக் கடற்கரை வந்தடையவே, அரக்க மன்னனான இராவணனின் தம்பி விபீஷணன் தங்களைச் சரணடைந்தான். அவன் தனிமையில் பகைவனான இராவணனைப் பற்றிக் கூறக் கேட்டபின், கடலரசனைச் சரணடைய அது பயனற்றுப் போகவே, அவன் மேல் ஆக்னேயாஸ்திரத்தை விடுத்தீர்கள். அதன் வலிமை கண்டு பயந்த கடலரசன் சொல்லைக் கேட்டு கடலின் நடுவில் (பாலம் கட்ட) வழியைப் பெற்றீர்கள். (4)

கீஸை–ராஶாந்தரோபாஹ்ருத–கி3ரிநிகரை: ஸேதுமாத4ாய யாதோ
யாதூந்–யாமர்த்3ய த3ம்ஷ்ட்–ராநக2–ஶிகி2ரிஶிலாஸால–ஶஸ்த்ரை: ஸ்வஸைந்யை: ।
வ்யாகுர்வந் ஸாநுஜஸ்த்வம் ஸமரபு4வி பரம் விக்ரமம் ஶக்ரஜேத்ரா
வேகா3ந்நாகா3ஸ்த்ரபா3த்4த: பதக3பதிக3ருந்–மாருதோ்மோசிதோ1ஸி: ॥ 5 ॥

வானரர்களால் பல திசைகளிலிருந்தும் எடுத்து வரப்பட்ட மலைக்குவியல்களால் (சேதுவை) அணையைக் கட்டி இலங்கை சென்றீர்கள். பற்களும், நகங்களும், குன்றுகளும், பாறைகளும், மரங்களுமே ஆயுதங்களாகக் கொண்ட வானரப் படைகளைக் கொண்டு அரக்கர்களைக் கொன்றீர்கள். போர்க்களத்தில் மிக்க வலிமையைக் காட்டிய தாங்களும், லக்ஷ்மணனும் இந்திரஜித்தின் நாகாஸ்திரத்தால் கட்டப்படவே, புள்ளரசனான கருடனின் இறக்கைக் காற்றினால் விடுதலையடைந்தீர்கள். (5)

ஸௌமித்ரிஸ்த்வத்ர ஶக்திப்ரஹ்ருதிக்₃ளத₃ஸு:ர்–வாதஜாநீதஶைல–

க்₄ராணாத் ப்ராணாநுபேதோ வ்யக்ருணுத குஸ்ருதிஶ்லாகி₂நம் மேக₄நாத₃ம் ।

மாயாஷ்டோபே₄ஷ வைபீ₄ஷணவசந–ஹ்ருதஸ்தம்ப₄ந: கும்ப₄கர்ணம்

ஸம்ப்ராப்தம் கம்பிதோர்வீதல–மகி₂லசமூப₄க்ஷிணம் வ்யக்ஷிணோஸ்த்வம் ॥ 6 ॥

போரில் லக்ஷ்மணன், சக்தி ஆயுதத்தால் அடிபட்டு உயிரிழக்கும் நிலையில், வாயு குமாரனான அனுமன் கொண்டு வந்த சஞ்சீவி மலையின் மூலிகையை முகர்ந்ததால் (திரும்பவும்) உயிர்பெற்ற பிறகு, அரக்கர்களுடைய மாயையால் கலங்கி நின்ற லக்ஷ்மணன் (இந்திரஜித் வதம் செய்தது உண்மையான சீதை அல்ல. மாயா சீதை. இது அவனது மாயைத் திறன் என்ற) விபீஷணனது கூற்றைக் கேட்டுத் தெளிந்து, தன் மாயாபலத்தில் கர்வம் கொண்ட இந்திரஜித்தைக் கொன்றான். நிலம் நடுங்க நடந்து வந்து சேனைகள் அனைத்தையும் விழுங்கும் கும்பகர்ணனைத் தாங்கள் கொன்றீர்கள். (6)

க்₃ருஹ்ணந் ஜம்ப₄ாரிஸம்ப்ரேஷித–ரத₂கவசௌ ராவணேநாபி₄யுத்₄யந்

ப்₃ரஹ்மாஸ்த்ரேணாஸ்ய பி₃ந்த₃ந் கூ₃ளததிமப₄லா–மக்₃நிஶுத்₃தா₄ம் ப்ரக்₃ருஹ்ணந் ।

தே₃வஸ்ரேணீவரோஜ்ஜீவித–ஸமரம்ருதைரக்ஷதை:–ருக்ஷஸங்கை₄:–

லங்காப₄ர்த்ரா ச ஸாகம் நிஜநக₃ரமக₃ா: ஸப்ரிய: புஷ்பகேண ॥ 7 ॥

ஸ்ரீராமாவதாரம் செய்த ஸ்ரீகுருவாயூரப்பனான தாங்கள் தேவேந்திரனால் அனுப்பப்பட்ட தேரையும், கவசத்தையும் ஏற்று, பிரம்மாஸ்திரத்தினால் இராவணனது கழுத்துக்களை வெட்டி வீழ்த்தினீர்கள். தீயினுள் புகுந்து தாய்மையற்ற மெல்லியலாள் சீதையை ஏற்றுக் கொண்டீர்கள். போரில் உயிர் துறந்து, தேவர்களின் வர பலத்தால் மீண்டும் உயிர்பெற்றெழுந்த வானரக் கூட்டங்களுடனும், இலங்கை வேந்தனான விபீஷணனுடனும், சீதா, லக்ஷ்மண சமேதராகப் புஷ்பக விமானத்திலேறி தங்களது அயோத்திக்கு எழுந்தருளினீர்கள். (7)

ப்ரீதோ தி₃வ்யாபி₄ஷேகை–ரயுதஸமதி₄காந் வத்ஸராந் பர்யரம்ஸீர்–

மைதி₂ல்யாம் பாபவாசா ஶிவ ஶிவ கில தாம் க₃ர்பி₄ணீமப்₄யஹாஸீ: ।

ஸத்ருக்₄நேநார்த்₃யித்வா லவணநிஶிசரம் ப்ரார்த்₃ய: ஸுரத்₃ராஸம்

தாவத்₃வால்மீகிகே₃ஹே க்ருதவஸதிருபாஸுத ஸீதா ஸுதௌ தே ॥ 8 ॥

குருவாயூரப்பனான தாங்கள் திவ்வியமான (கங்கை, யமுனை முதலிய புனிதமான நதிகளின்) தீர்த்தத்தினால் பட்டாபிஷேகம் செய்விக்கப் பெற்று மிக்க மகிழ்ச்சியோடு பதினாயிரத்திற்கும் அதிகமான ஆண்டுகள் சுகமாக (அயோத்தியில்) வாழ்ந்தீர்கள். சீதாதேவியைப் பற்றிய (படிப்பற்ற பாமரனின்) பழிச் சொல்லைக் கேட்டு கருவுற்றிருந்த தேவியைத் துறந்தீர்கள். கஷ்டம்! அது சொல்லொணாத் துயரமன்றோ! லவணாஸுரனை சத்ருக்னனைக் கொண்டு அழித்தீர்கள். (தமது வர்ணத்திற்குத் தகாது தவமியற்றிய) நான்காம் வர்ணத்தவனாகிய சம்புகன் என்பவனைக் கொன்றீர்கள். அப்பொழுது வால்மீகி மஹரிஷியின் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்த சீதாதேவி (லவன், குசன் என்கிற) இரு புத்திரர்களைப் பெற்றெடுத்தாள். (8)

வால்மீகேஸ்–த்வத்ஸுதோத்₃க₄ாபித–மது₄ரக்ருதோராஜ்ஞயா யஜ்ஞவாடே

ஸீதாம் த்வய்யாப்துகாமே க்ஷிதிமவிஶத₃ஸௌ த்வம் ச காலாத்தி₃தோऽபூ₄: ।

ஹேதோஸ்ஸௌமித்ரிக₃ாதீ ஸ்வயமத₂ ஸரயூமக்₃ந–நிஶ்ஶேஷப்₄ருத்யை:

ஸாகம் நாகம் ப்ரயாதோ நிஜபத₃மக₃மோ தே₃வ வைகுண்ட₂மாத்₃யம் ॥ 9 ॥

தேவதேவா! தங்களது அசுவமேத மஹா மண்டபத்தில் தங்களுடைய புத்திரர்களான குசலவர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தை இனிமையாகப் பாடவே, அந்த ராமாயணத்தை இயற்றிய வால்மீகி மஹரிஷியின் கட்டளைக்கிணங்க தாங்கள் ஸ்ரீசீதாபிராட்டியாரை அடைய விரும்பியபோது அவள் பூமியிலே புகுந்தாள். காலதேவனான யமதர்மராஜன் தங்களை (ஸ்ரீவைகுண்டம் திரும்பி வருமாறு) வேண்டினான். தாங்கள் (தனது லோகமான ஸ்ரீவைகுண்டம் செல்ல வேண்டும் என்ற) ஒரு காரணத்தைக் கொண்டு லக்ஷ்மணனைத் தியாகம் செய்து ஸரயூ நதியில் மூழ்கிய தனது அடியார்கள் அனைவருடனும் விண்ணுலகமடைந்து, பிரம்மாண்டங்கள் தோன்றுவதற்கு முன்பிருந்தே விளங்கும் தங்களது வாஸஸ்தலமான ஸ்ரீவைகுண்டத்திற்கு எழுந்தருளினீர்கள். (9)

ஸோ(அ)யம் மர்த்யாவதாரஸ்தவ கலு நியதம் மர்த்யஶிக்ஷார்த²மேவம்
விஶ்லேஷார்தி–நிராகர²ஸ்த்யஜநமபி ப₄வேத் காமத₄ர்மாதிஸக்த்யா ।
நோ சேத் ஸ்வாத்மாநூபூ₄தே: க்வநு தவ மநஸோ விக்ரியா சக்ரபாணே
ஸ த்வம் ஸத்வைகமூர்தே பவநபுரபதே வ்யாது₄நு வ்யாதி₄தாபாந் ॥ 10 ॥

சுதர்சன சக்கரத்தைக் கையிலேந்திய குருவாயூரப்பா! இவ்வாறு, காமத்தில் பற்று வைக்கவே அன்புடையாரைப் பிரிவதால் துன்பம் நேரும் என்றும், தர்மத்தில் பற்று வைக்கவே குற்றமற்றவர்களையும் தியாகம் செய்ய நேரும் என்ற உண்மையையையும் உலகினருக்கு விளக்கவே, தாங்கள் இந்த மானிடப்பிறவியான அவதாரத்தை ஏற்றீர்கள் அல்லவா? அங்ஙனமில்லையேல், ஆத்மா ராமனான தங்களுடைய மனதிற்கு விகாரம் எங்ஙனம் ஏற்படும்? சுத்தமான (அப்பழுக்கற்ற) ஸத்வ குணமே உருவெடுத்து வந்த ஸ்ரீகுருவாயூரப்பா! அப்படிப்பட்ட தாங்களே நோயினால் விளைந்த என் துன்பங்களைப் போக்கியருள வேண்டும். (10)

முப்பத்தாறாவது தசகம்

ஸ்ரீபரசுராமர் வரலாறு

அத்ரே: புத்ரதயா புரா த்வமநஸூயாயாம் ஹி த³த்தாபி₄தே₄ா
ஜாத: ப்ரிஷ்யநிபூ₄த₃தந்த்₃ரிதமநா: ஸ்வஸ்த₃ஶ்சரந் காந்தயா ।
த்₃ருஷ்டோ ப₄க்ததமேந ஹேஹயமஹீபாலேந தஸ்மை வரா–
நஷ்டைஶ்வர்யமுகா₂ந் ப்ரத₃ாய த₃தி₃த₂ ஸ்வேநைவ சாந்தே வத₃ம் ॥ 1 ॥

குருவாயூரப்பா! முன்பொரு காலத்தில் அத்ரி முனிவருக்கு மகனாக அநஸூயாதேவியின் திருவயிற்றில் பிறந்த தாங்கள் 'தத்தர்' என்ற பெயர் கொண்டு விளங்கினீர்கள் அல்லவா? (தங்கள் யோக மஹிமையைக் கண்டு தங்களிடம் வந்து சேர்ந்த) சீடர்களின் சேர்க்கை (தியானத்திற்கு) இடையூறு எனக் கருதிய தாங்கள், (முக்தி கன்னிகையாகிய) மனைவியுடன் தன்னிச்சைப்படி சஞ்சரித்தீர்கள். சிறந்த பக்தனான ஹேஹய நாட்டு மன்னன் கார்த்தவீர்யார்ஜுனன் தங்களைக் கண்டு (வணங்கி) அஷ்டைசுவர்யம் முதலியவற்றையும், முடிவில் தங்களாலேயே மரணம் என்பதையும் வரங்களாகப் பெற்றான். (1)

ஸத்யம் கர்துமது₂ர்ஜுநஸ்ய ச வரம் தச்ச₂க்திமாத்ராநதம்
ப்₃ரஹ்மத்₃வேஷி ததா₃கி₂லம் நிருபகுலம் ஹந்தும் ச பூ₄மேர்ப₄ரம் ।
ஸஞ்ஜாதோ ஜமத₃க்₃நிதோ ப்₃ருகு₃குலே த்வம் ரேணுகாயாம் ஹரே
ராமோ நாம ததா₃த்மஜேஷ்வவரஜ: பித்ரோரதா₂:ஸம்மத₃ம் ॥ 2 ॥

ஸ்ரீஹரியான குருவாயூரப்பா! கார்த்தவீர்யார்ஜுனனுக்குத் தாங்கள் கொடுத்த வரத்தை மெய்ப்பிக்கவும், அக்காலத்தில் அவனது ஆற்றலுக்கஞ்சி அடங்கியிருந்தாலும், அந்தணர்களைப் பகைத்து நின்றதால் இக்குவலயத்திற்கு பாரமாக இருக்கும் அரச குலத்தையழித்திடவும், பிருகு மஹரிஷியின் மரபில் ஜமதக்னி முனிவருக்கு (அவரது மனையாளான) ரேணுகாதேவியிடம் இளைய மகனாகத் திருவவதாரம் செய்து 'இராமன்' எனப் பெயர் பூண்டு மகிழ்ச்சியை அளித்தீர்கள். (2)

லப்₃த்₄வாம்நாயக₃ணஸ்–சதுர்த₃ஶவயா க₃ந்த₄ர்வராஜே மநா–
க₃ாஸக்தாம் கில மாதரம் ப்ரதி பிது: க்ரோத₂ாகுலஸ்யாஜ்ஞயா ।
தாதாஜ்ஞாதிக₃ஸோத₃ரை: ஸமமிமாம் சி₂த்வாऽத₂ ஶாந்தாத் பிதுஸ்–
தேஷாம் ஜீவநயோக₃மாபித₂ வரம் மாதா ச தேऽதா₃த்₃வராந்: ॥ 3 ॥

பதிநான்கு வயதில் சகல வேதங்களையும் கற்றறிந்தீர்கள். அப்பொழுது (ஒரு நாள் சித்ரரதன் என்ற) ஒரு கந்தர்வராஜனிடம் (அவனுடைய நீர் விளையாட்டைக் கண்டு) சிறிதே மயங்கிய தங்களது தாயாரைக் கொலை செய்யும்படி மிக்க சினம் கொண்டு தந்தை கூறியும், உங்கள் சகோதரர்கள் மறுக்கவே, தாங்கள் அவர்களையும், தாயாரையும் கொன்று தந்தையை அமைதிப்படுத்தினீர்கள். சினம் தணிந்த தந்தையிடமிருந்து அவர்கள் உயிர்த்தெழுவதையே வரமாகப் பெற்றீர்கள். தாயும் தங்களுக்கு வரங்களையளித்தாள். (3)

பித்ரா மாத்ருமுதே₃ ஸ்தவாஹ்ருத–வியத்₃தே₃நோ:–நிஜாத₃ாஸ்ரமாத்
ப்ரஸ்தா₂யாத₂ ப்₃ருகே₃ர்கி₃ரா ஹிமகி₃ராவாரார்த்₄ய கை₃ளீபதிம் ।
லப்₃த்₄வா தத்பரஶும் தது₃க்த–தி₃ங்முஜ்சே₂தீ₃ மஹாஸ்த்ராதி₃கம்
ப்ரபதோ மித்ரமதா₃க்ருதவ்ரணமுநிம் ப்ராப்யாக₃ம: ஸ்வாஶ்ரமம் ॥ 4 ॥

தங்கள் தந்தை தங்கள் தாயின் விருப்பத்தினற்கிணங்க, தெய்வப்பசுவான காமதேனுவைத் துதித்து, அதை தேவலோகத்தினின்றும் தமது ஆசிரமத்திற்கு அழைத்து வந்தார். பிருகு வம்சத்தோன்றலான பாட்டனார் ரிசீகரது சொற்படி தன் ஆசிரமத்திலிருந்து இமயமலை சென்று பரமசிவனை வழிபட்டு, அவரிடமிருந்து 'பரசு' என்ற ஆயுதத்தைப் பெற்றீர்கள். அவர் கூறிய அரக்கனைக் கொன்று உயர்ந்த பல அஸ்திரங்களைப் பெற்று 'அக்ருதவ்ரணன்' என்ற முனிவரை நண்பனாகப் பெற்றுத் தங்களது ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தீர்கள். (4)

ஆகே₂டோபக₃தோர்ஜுந: ஸுரக₃வீஸம்ப்ராப்த–ஸம்பத்₃க₃ணைஸ்–
த்வத்பித்ரா பரிபூஜித: புரக₃தோ து₃ர்மந்த்ரிவாசா புந: ।
க₃ாம் க்ரேதும் ஸசிவம் ந்யயுங்க்த குதி₃யா தேநாபி ருந்த₃ந்முநி–
ப்ராணக்ஷேபஸரோஷகே₃–ஹதசமூசக்ரேண வத்ஸோ ஹ்ருத: ॥ 5 ॥

(ஒரு சமயம்) கார்த்தவீர்யார்ஜுனன் வேட்டையாடி விட்டு(த் தங்கள் ஆசிரமத்திற்கு) வர தங்கள் தகப்பனாரான ஜமதக்னி முனிவர் தெய்வப் பசுவான காமதேனுவிடமிருந்து பெற்ற உயர்ந்த பொருட்களால் அவ்வரசனை நன்கு உபசரித்தார். தனது நகரடைந்த அவ்வரசன் தீய

அமைச்சர்களின் சொற்கேட்டு அப்பசுவை விலை கொடுத்து வாங்கிவர ஓர் அமைச்சரை மறுபடியும் அனுப்பினான். பசுவைக் கொடுக்க மறுத்த முனிவரைத் தீயபுத்தி கொண்ட அமைச்சன் கொன்றான். அதனால் சினம் கொண்ட காமதேனு அவனது படைகளைக் கொன்று குவித்தது. (இருப்பினும்) அவன் காமதேனுவின் கன்றினைக் கவர்ந்து சென்றான். (5)

ஸுக்ரோஜ்ஜீவித–தாதவாக்யசலித–க்ரோதே₄ாத₃ ஸக்₂யா ஸமம்
பி₃ப்₄ரத்₃யாத–மஹோத₃ரோபநிஹிதம் சாபம் குட₃ாரம் ஸராந் ।
ஆரூட₄: ஸஹவாஹயந்த்ருகரத₃ம் மாஹிஷ்மதீமாவிஸன்
வாக்₃பி₄ர்–வத்ஸமதா₃ஸுஷி க்ஷிதிபதௌ ஸம்ப்ராஸ்துதா₃: ஸங்கரம் ॥ 6 ॥

பிறகு சுக்ராச்சாரியாரால் தங்களது தந்தை உயிர்த்தெழுந்தார். அவர் கூறியதைக் கேட்டு சினம் கொண்ட தாங்கள் சிவபார்ஷதனான மஹோதரனை நினைக்க, அவன் கொணர்ந்த சாரதியுடன் கூடிய ரதத்தில் ஏறிக் கொண்டு, அவனளித்த வில், பாணங்கள், பரசு என்ற கோடரி இவற்றை ஏந்தித் தனது நண்பனான அக்ருதவ்ரணனுடன் (கார்த்தவீர்யனது நகரமான) மாஹிஷ்மதியை அடைந்தீர்கள். கன்றுக்குட்டியைத் திருப்பியளிக்குமாறு கேட்டும், கொடாததால் அவனுடன் போர் தொடங்கினீர்கள். (6)

புத்ராணாமயுதேந ஸப்ததத₃ஸோ₄ர்ம்–சாக்ஷௌஹிணீபி₄ர்மஹா–
ஸேநாநீபி₄ரநேக–மித்ரநிவஹைர்–வ்யாஜ்ரும்பி₄தாயோத₄ந: ।
ஸத்₃யஸ்த்₂வக்₃–குட₃ார–பா₃ண–வித₃ளந்–நிர்மோக்ஷ–ஸைந்யோத்கரோ
பீ₄தி–ப்ரத்₃ருத–நஷ்டமிஷ்டதநயஸ்–த்வாமாபதத்₃ஹேஹய: ॥ 7 ॥

பதினாயிரம் பிள்ளைகளோடும், பதினேழு அக்குரோணி படைகளோடும், பெரும் சேனைத் தலைவர்களோடும், நண்பர் குழாங்களோடும் கார்த்தவீர்யன் தங்களை எதிர்த்தான். ஒரு நொடியில் தங்களது பரசுவாலும், பாணங்களாலும் அவனது படைகள் சிதறின. பயந்தோடியவர்களும், இறந்தவர்களும் நீங்கலாக எஞ்சிய பிள்ளைகளுடன் ஹேஹயனான கார்த்தவீர்யன் தங்களை எதிர்த்தான். (7)

லீலாவாரித–நர்மத₃ாஜலவலல்–லங்கேஶ–க₃ர்வாபஹ–
ஸ்ரீமத்₃பா₃ஹுஸஹஸ்ர–முக்த–ப₃ஹு–ஶஸ்த்ராஸ்த்ரம் நிருந்த₃ந்நமும் ।
சக்ரே த்வய்யத₃ வைஷ்ணவேऽபி விப₃லே பூத்₃த்₄வா ஹரிம் த்வாம் முதா₃
த்₄யாயந்தம் சி₃தஸர்வதே₃ாஷமவதீ₃: ஸோऽகா₃த் பரம் தே பத₃ம் ॥ 8 ॥

ஒரு சமயம் நீர் விளையாட்டிற்காகத் தனது ஆயிரம் கைகளால் நர்மதையாற்றின் நீர்ப்போக்கைத் தடுத்து நிறுத்தவே (நதிக்கரையில் சிவவழிபாடு செய்து கொண்டிருந்த) இராவணன் அதில் மூழ்கித் துன்புற்றுத் தன் கர்வம் தொலைந்தான். அவ்வாறு பெருமை கொண்ட அந்த ஆயிரம் கைகளினாலும் எய்த படைக்கலன்களையும், அம்புகளையும் நீங்கள் எதிர்த்து நின்றீர்கள். அவன் ஏவிய ஸ்ரீசுதர்சனமான வைஷ்ணவ சக்கரமும் பயனற்றுப்போனது கண்டு, 'தாங்கள் ஸ்ரீஹரியே' என்றுணர்ந்து மகிழ்ச்சியுடன் தியானித்தான். அதனால் அவன் பாவம் நீங்கி புனிதனானான். அப்பொழுது தாங்கள் அவனைக் கொல்லவே, அவன் தங்களது உயர்ந்த இடமான ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தான். (8)

பூ4யோऽமர்ஷித–ஹேஹயாத்மஜ்ஜ3ணைஸ்–தாதே ஹதே ரேணுகா–
மாக்3நாநாம் ஹ்ருத3யம் நிரீக்ஷ்ய பஹு3ஶோ கே3ராம் ப்ரதிஜ்ஞாம் வஹந் ।
த்3யாநாநீத–ரத2ாயுத4ஸ்–த்வமக்ருத2ா விப்ரத்3ருஹ: க்ஷத்ரியாந்
தி3க்சக்ரேஷு குட2ாரயந் விமிக3யந் நி:க்ஷத்ரியாம் மேதி3நீம் ॥ 9 ॥

தந்தை கொல்லப்பட்டதால் பெரும் சினம்கொண்ட கார்த்தவீர்யனின் மைந்தர்கள் தங்களது தந்தையைக் கொன்றனர். (இதைக் கண்ட தங்கள் தாயான) ரேணுகா பலப்படியாக மார்பில் அடித்துக் கொண்டு புலம்பினாள். அதைக் கண்டு (பொறுக்காத) தாங்கள் மிகவும் கோரமான உறுதிமொழியைக் கைக்கொண்டு, தியானத்தினால் தேரையும், ஆயுதங்களையும் பெற்று அந்தணர்களைப் பகைத்த க்ஷத்திரியர்களை மழுவினால் சிதைத்தும், பாணங்களால் கொன்றும் இப்பூவுலகை க்ஷத்திரியர்களே இல்லாதவாறு செய்தீர்கள். (9)

தாதோஜ்ஜீவந–க்ருந்–ந்ருபாலகுலம் த்ரிஸ்ஸப்தக்ருத்வோ ஜயந்
ஸந்தர்ப்யாத2 ஸமந்தபஞ்சக–மஹாரக்தஹ்ரதெ3ளகே4 பித்ரூந் ।
யஜ்ஞே க்ஷ்மாமபி காஶ்யபாதி3ஷு தி3ஶந் ஸால்வேந யுத்4யந் புந:
க்ருஷ்ணோऽயம் நிஹநிஷ்யதீதி ஶமிதோ யுத்3தா4த் குமாரைர் ப4வாந் ॥ 10 ॥

பிறகு தாங்கள் தந்தையைப் பிழைக்கச் செய்து மூவேழு முறை க்ஷத்திரியக் கூட்டத்தை ஜயித்து, (அவர்கள் உதிரத்தால் நிரம்பிய) ஸமந்தபஞ்சகம் என்ற பெரிய ரத்தமடுவில் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தீர்கள். (பின் செய்த) வேள்வியில் காசியபர் முதலிய மஹரிஷிகளுக்குப் பூமியைத் தானமாக வழங்கினீர்கள். பின் ஸால்வ மன்னனுடன் போர் புரிகையில் 'ஸ்ரீகிருஷ்ணன் இவனைக் கொல்லப் போகிறார்' என்று ஸநகாதி முனிவர்கள் கூறக் கேட்டு போரிலிருந்து விலகி அமைதியடைந்தீர்கள். (10)

ந்யஸ்யாஸ்த்ராணி மஹேந்த்3ரபூ4ப்4ருதி தபஸ்தந்வந் புநர்மஜ்ஜிதாம்
கே3ாகர்ணாவதி4 ஸாக3ரேண த3ரணீம் த்3ருஷ்ட்வார்தி2தஸ்–தாபஸை: ।
த்4யாதேஷ்வாஸ–த்3ருதாநலாஸ்த்ரசகிதம் ஸிந்து4ம் ஸ்ருவக்ஷேபணா–
த்3ஸார்யோத்3த்3ருதகேரளோ ப்4ருகு3பதே வாதேஶ ஸம்ரக்ஷ மாம் ॥ 11 ॥

பிருகு குல திலகமே! அஸ்திரங்கள் அனைத்தையும் துறந்து மஹேந்திர மலையில் தாங்கள் தவம் செய்து கொண்டிருக்கையில், கோகர்ணம் வரை உள்ள நிலம் கடல் நீரிலே மூழ்குவது கண்ட முனிவர்கள் தங்களை வந்து வேண்டினர். (அதற்கிணங்கி) தியானத்தில் வில்லை வரவழைத்து அதில் ஆக்னேயாஸ்திரத்தைத் தொடுத்தது கண்டு பயந்த சமுத்திரத்தை, வேள்வியில் பயன்படும் ஸ்ருவம் என்கிற ஒரு கரண்டியை எறிந்து அந்த எல்லை வரை கடலை விலகச் செய்து கேரள தேசத்தை மேலே தூக்கி நிலைபெறச் செய்தீர்கள். அத்தகைய குருவாயூரப்பா! என்னைக் காத்தருள வேண்டும். (11)

பத்தாவது ஸ்கந்தம்

முப்பத்தேழாவது தசகம்

ஸ்ரீகண்ணன் திருவவதாரம் – முன்னுரை

ஸாந்த்³ராநந்த³தநோ ஹரே நநு புரா தை³வாஸுரே ஸங்க்³ரே
த்வத்க்ருத்தா அபி கர்மஸேஷவஸதோ யே தே ந யாதா க³திம் ।
தேஷாம் பூ⁴தலஜந்மாநம் தி³திபு⁴வாம் பா⁴ரேண தூ³ரார்தி³தா
பூ⁴மி: ப்ராப விரிஞ்சமாஸ்ரிதபத³ம் தே³வை: புரைவாக³தை: ॥ 1 ॥

ஸத் சித் ஆனந்தமே வடிவெடுத்த ஹரியான ஸ்ரீகுருவாயூரப்பா! முன்பு தேவர்கட்கும், அஸுரர்கட்கும் நடந்த போரில் (தேவர்கட்கு உதவி புரிய வேண்டி) அஸுரர்களைத் தாங்கள் கொன்றீர்கள். எனினும் (காலநேமி முதலிய) பலர் எஞ்சிய புண்ணிய பாவங்களுக்கு ஆட்பட்டு உத்தமகதியான மோக்ஷத்தை அடையவில்லை. ஆகவே அவர்கள் மண்ணுலகில் (கம்ஸன் முதலிய) அஸுரர்களாகப் பிறக்கவே, அவர்கள் சுமை தாங்க இயலாது பெரிதும் வருந்திய நிலமகள் முன்பே அங்கு வந்து கூடியிருந்த தேவர்களோடு சத்தியலோகத்தில் உள்ள பிரம்மதேவரிடம் சென்றாள். (1)

ஹா ஹா து³ர்ஜநபூ⁴ரிபா⁴ரமதி³தாம் பாதே³நிதெ³ள பாதுகாம்
ஏதாம் பாலய ஹந்த மே விவஸதாம் ஸம்ப்ருச்ச² தே³வாநிமாந் ।
இத்யாதி³ ப்ரசுரப்ரலாப–விவஸாமாலோக்ய த⁴ாதா மஹீம்
தே³வாநாம் வத³நாநி வீக்ஷ்ய பரிதோ தத்த்⁴யௌ ப⁴வந்தம் ஹரே ॥ 2 ॥

"பிரம்மதேவரே! கஷ்டம்! கஷ்டம்!! தீயோரின் பெருஞ்சுமை தாங்க இயலாது மிக்க வருந்தி ஆவரண ஜலத்தில் மூழ்க இருக்கும் என்னைக் காப்பாற்றுங்கள். ஐயோ! என் இழிந்த நிலையை இந்த தேவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றெல்லாம் புலம்பி மெய்மறந்த நிலையில் நிற்கும் நிலமகளைக் கண்ட பிரம்மதேவர் சுற்றிலும் கூடி நிற்கும் தேவர்களின் முகங்களையும் பார்த்துவிட்டு, ஹரியான ஸ்ரீகுருவாயூரப்பா! தங்களையே தியானம் செய்தாரல்லவா! (2)

ஊசே சாம்பு³ஜபூ⁴ரமூநயி ஸுரா: ஸத்யம் த⁴ரித்ர்யா வசோ
நந்வஸ்யா ப⁴வதாம் ச ரக்ஷணவிதெ⁴ள தூ³க்ஷோ ஹி லக்ஷ்மீபதி: ।
ஸர்வே ஸர்வபுரஸ்ஸரா வயமிதோ க³த்வா பயோவாரிதி⁴ம்
நத்வா தம் ஸ்துமஹே ஜுவாதி⁴தி யயு: ஸாகம் தவாகேதநம் ॥ 3 ॥

(தியானத்திலே அனைத்தையும் நேரிலே கண்ட) பிரம்மதேவர் வானவர்களை நோக்கி, 'தேவர்களே! பூமிதேவி கூறியது அனைத்தும் உண்மையே. பூமிதேவியையும், உங்களையும் காப்பாற்ற வல்லவர் ஸ்ரீலக்ஷ்மிபதியான ஸ்ரீஹரியே. (ஆகவே) நாம் அனைவரும் ஸ்ரீபரமசிவனை முன்னிட்டுக் கொண்டு திருப்பாற்கடல் சென்று ஸ்ரீமந் நாராயணனைத் துதிப்போம்' என்று கூறியதும் அனைவரும் வேகமாகத் தங்கள் இருப்பிடமான ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தார்கள். (3)

தே முக்த⁴நிலஸாலி து³க்த⁴ஜலதே⁴ஸ்தீரம் க³தா: ஸங்க³தா
யாவத்–த்வத்பத³சிந்தநைகமநஸஸ்–தாவத் ஸ பாதே³ஜபூ⁴: ।
த்வத்³வாசம் ஹ்ருத³யே நிஸம்ய ஸகலாநாநந்த³யந்–நூசிவா–
நாக்³யாத: பரமாத்மநா ஸ்வயமஹம் வாக்யம் தத³ாகர்ண்யதாம் ॥ 4 ॥

தென்றல் காற்று வீசுவதால் இனிமையாக விளங்கும் திருப்பாற்கடலின் கரையையடைந்த பிரம்மா முதலிய தேவர்கள் தங்களது திருவடித்தாமரைகளையே மனதில் தியானித்தார்கள். அப்பொழுது பிரம்மதேவர் தங்கள் திருவாக்கை உள்ளத்தில் உணர்ந்து, 'பகவான் என்னிடம் எதைக் கூறினாரோ அதையே கூறுகிறேன். கேளுங்கள்' என்று கூறி அனைவரையும் மகிழ்வித்தார். (4)

ஜாநே தீ³நத்³ராமஹம் தி³விஷத்³காம் பூ⁴மேஸ்ச பீ⁴மர்ந்ருபைஸ்–
தத்க்ஷேபாய ப்⁴வாமி யாத³வகுலே ஸோঽஹம் ஸமக்³ராத்மநா ।
தே³வா வ்ருஷ்ணிகுலே ப⁴வந்து கலயா தே³வாங்க³நாஸ்–சாவநௌ
மத்ஸேவார்த்³தி²தி த்வதீ³யவசநம் பாதே²ஜபூ⁴ரூசிவாந் ॥ 5 ॥

'தேவர்களுக்கும், பூமிபிராட்டிக்கும் (கம்ஸன் முதலிய) கொடிய அரசர்களால் ஏற்பட்டுள்ள துன்பத்தை நான் அறிவேன். அதைப் போக்குவிப்பதற்காக எனது சம்பூர்ண கலைகளுடன் யாதவ குலத்தில் அவதரிக்கப் போகிறேன். தேவர்கள் தத்தம் அம்சங்களுடன் விருஷ்ணி குலத்தில் பிறக்கட்டும். தேவமாதர்களும் எனக்குப் பணிவிடை செய்வதற்காக பூமியில் பிறக்கட்டும்' என்ற தங்களது கட்டளையை பிரம்மதேவர் கூறினார். (5)

ஶ்ருத்வா கர்ணரஸாயநம் தவ வச: ஸர்வேஷ் நிர்வாபித–
ஸ்வாந்தேஷ்வீஶ கு³தேஷ் தாவகக்ருபாபீயுஷ–த்ருப்தாத்மஸ் ।
விக்³யாதே மது³ராபுரே கில ப⁴வத்ஸாந்நித்⁴ய–புண்யோத்தரே
த³ந்யாம் தே³வகநந்த³நாமுத³வஹத்³–ராஜா ஸ ஶூராத்மஜ: ॥ 6 ॥

ஈசனே! செவிக்கு இன்னமுதம் போன்ற தங்களது திருவாய்மொழியைக் கேட்டுத் தங்களது அருளால் மனநிறைவடைந்த தேவர்கள் அனைவரும் உள்ளத்தில் கவலை நீங்கித் திரும்பிச் சென்றனர். குருவாயூரப்பா! தங்களது ஸாந்நித்தியத்தால் மிக்கப் புனிதமடைந்ததும், புகழ் பெற்றதுமான மதுராபுரியில் அரசனாக விளங்கிய சூரஸேனரது புதல்வரான வஸுதேவர், தேவகனது புதல்வியான சௌபாக்யவதி தேவகியைத் திருமணம் செய்து கொண்டார். (6)

உத்³வாஹாவஸிதௌ ததீ³யஸஹஜ: கம்ஸோঽ² ஸம்மாநயந்–
நேதௌ ஸ்ததயா கு³த: பதி² ரதே² வ்யோமோத்த³யா த்வத்³கி³ரா ।
அஸ்யாஸ்த்வாம–திதி³ஷ்டமஷ்டமஸுதோ ஹந்தேதி ஹந்தேரித:
ஸந்த்ராஸாத் ஸ து ஹந்துமந்திகக³தாம் தந்வீம் க்ருபாணீமதா³த் ॥ 7 ॥

திருமணம் முடிந்தபின் தேவகியின் உடன்பிறந்தோனான கம்ஸன் மணமக்கள் இருவரையும் பெருமைப்படுத்த எண்ணி, அவர்களைத் தேரில் ஏற்றிக் கொண்டு தானே தேரோட்டியாகத் தேரைச் செலுத்தினான். அப்பொழுது வழியில், 'மிக்கக் கொடியவனான உன்னை இவளது எட்டாவது குழந்தை கொல்லப் போகிறான். அந்தோ பரிதாபம்!' என்று விண்ணில் தங்களது வானொலி எழுந்தது. அதைக் கேட்டு மிகவும் பயந்த கம்ஸன் அருகிலிருந்த தேவகியைக் கொல்லக் கத்தியை எடுத்தான். (7)

க்ருஹ்ணாநஸ்சிகுரேஷ் தாம் கு²லமதி: பௌரேஸ்சிரம் ஸாந்த்வநைர்–
நோ முஞ்சந் புநராத்மஜார்பணகி³ரா ப்ரீதோঽ² யாதோ க்ருஹாந் ।
ஆத்³யம் த்வத்ஸஹஜம் தத³ர்பிதமபி ஸ்நேஹேந நாஹந்நஸௌ
து³ஷ்டாநாமபி தே³வ புஷ்டகருணா த்³ருஷ்டா ஹி தீ³ரேகதா³ ॥ 8 ॥

தீயபுத்தி கம்ஸன் அவளது கூந்தலைப் பற்றிக் கொள்ளவே வஸுதேவர் நெடுநேரம் இனிய சொற்களால் அமைதியுறச் செய்தும் அவன் கூந்தலை விடுத்தானில்லை. அப்போது வஸுதேவர் (அவளுக்குப்) பிறக்கும் குழந்தைகளை அவனிடம் ஒப்படைப்பதாகக் கூறவே, அவன் தேவகியை விடுத்து மகிழ்ச்சியுடன் தன் அரண்மனை சென்றான். முதலில் பிறந்த தங்கள் சகோதரனைத் தான் கூறியபடியே கம்ஸனிடம் வஸுதேவர் ஒப்படைத்தபொழுது அவன் அன்பு கொண்டு அதைக் கொல்லவில்லை. தேவனே! கொடியவரது மனமும் சில சமயம் அருள் நிறைந்ததாகக் காணப்படுகிறது அல்லவா? (8)

தாவத்–த்வந்மநஸைவ நாரத³முநி: ப்ரோசே ஸ போ⁴ஜேஶ்வரம்
யூயம் நந்வஸுரா: ஸுராஶ்ச யது³வோ ஜ்ஞாநாஸி கிம் ந ப்ரபோ⁴ ।
மாயாவீ ஸ ஹரிர்–ப⁴வத்³வத⁴க்ருதே ப⁴வீ ஸுரப்ரார்த²நா–
தி³த்யாகர்ண்ய யது³–நது³ர்து³ந–த³ஸௌ மௌரேஶ்ச ஸஶ்நூநஹந் ॥ 9 ॥

அப்பொழுது தங்கள் திருவுள்ளப்படி நாரத முனிவர் போஜ மன்னனாகிய கம்ஸனிடம் சென்று, 'பிரபுவே! நீங்களோ அஸுரர்கள். யாதவர்களோ தேவர்கள். இதை நீர் அறியவில்லையா? மாயாவியான ஸ்ரீஹரி தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி உன்னைக் கொல்ல அவதரிக்கப் போகிறார்' என்று கூறினார். இதைக் கேட்டு கம்ஸன் யாதவர்களை அவர்களுடைய இருப்பிடங்களிலிருந்து விரட்டினான். வஸுதேவரது மக்களையும் கொன்றான். (9)

ப்ராப்தே ஸப்தமக³ர்ப⁴தாமஹிபதௌ த்வத்ப்ரேரணாந்மாயயா
நீதே மாத⁴வ ரோஹிணீம் த்வமபி பே⁴: ஸச்சித்ஸுகை²காத்மக: ।
தே³வக்யா ஜடரம் விவேஶிதி² விபோ⁴ ஸம்ஸ்தூயமாந: ஸுரை:
ஸ த்வம் க்ருஷ்ண விதூ⁴ய ரோக³படலீம் பக்திம் பராம் தே³ஹி மே ॥ 10 ॥

மாதவா! ஏழாவது கர்ப்பமாக ஆதிசேஷன் வந்தபின், தங்களது கட்டளைக்கிணங்க யோகமாயை அந்த ஏழாவது கர்ப்பத்தை (வஸுதேவரது மூத்த மனைவியான) ரோஹிணியின் வயிற்றில் கொண்டு போய்ச் சேர்த்தாள். பிறகு ஸத் சித் ஆனந்த வடிவினரான தாங்கள், தேவர்கள் துதிக்க தேவகியின் திருவயிற்றில் புகுந்தீர்கள். அப்படிப்பட்ட எங்கும் நிறைந்த ஸ்ரீகிருஷ்ணனான தாங்கள் எனது நோய்களை நீக்கியருளி சிறந்த பக்தியைத் தந்தருள வேண்டும். (10)



முப்பத்தெட்டாவது தசகம்

ஸ்ரீகண்ணன் திருவவதாரம்

ஆநந்த³ரூப ப⁴க³வந்நயி தே³வதாரே
ப்ராப்தே ப்ரதீ³ப்த–ப⁴வத³ங்க³–நிரீயமாணை: ।
காந்திவ்ரஜைரிவ க⁴நாக⁴நமண்ட³லைர்த்³யா–
மாவ்ருண்வதீ விருருசே கில வர்ஷவேலா ॥ 1 ॥

ஆனந்தமே வடிவெடுத்த குருவாயூரப்பா! தாங்கள் திருவவதாரம் செய்வதற்குரிய காலம் நெருங்கியதும், தங்கள் திருமேனியினின்றும் வெளிப்போந்த நீல ஒளிக்கதிர்களின் படலங்களைப் போன்ற கரிய மேகக் கூட்டங்களினால் மறைக்கப்பட்ட ஆகாயம் போல மழைக்காலம் விளங்கியது. (1)

ஆஸாஸு ஸீதளதராஸு பயோத³தோயை–
ராஸாஸிதாப்தி–விவஸேஷு ச ஸஜ்ஜநேஷு ।
நைஸாகரோத³யவிதௌ³ள நிஸி மத்⁴யமாயாம்
க்லேஸாபஹஸ்–த்ரிஜக³தாம் த்வமிஹாவிராஸீ: ॥ 2 ॥

மழைநீரால் திசைகள் அனைத்தும் நன்கு குளிர்ந்திருந்தன. எண்ணியபடி எண்ணம் கைகூடுதலால் நல்லோர்கள் பெருமகிழ்ச்சி கொண்டு மெய்மறந்து நின்றனர். அப்பொழுது நள்ளிரவில் சந்திரன் தோன்றும் வேளையில் மூவுலகங்களின் துன்பங்களைக் களையும் தாங்கள் இந்நிலவுலகில் திருவவதாரம் செய்தருளினீர்கள். (2)

பா³ல்யஸ்ப்ருஸாபி வபுஷா த³து⁴ஷா விபூ⁴தீ–
ருத்³யத்கிரீட–கடகாங்க³த³–ஹாரபா⁴ஸா ।
ஸங்க²ாரி–வாரிஜக³தா³–பரிபா⁴ஸிதேந
மேகா⁴ஸிதேந பரிலேஸித² ஸூதிகே³ஹே ॥ 3 ॥

தோற்றத்தில் சிறு குழந்தையாக இருப்பினும் பரம்பொருள் என்பதை விளக்கிக் காட்டும் திருச்சின்னங்களோடு விளங்கினீர்கள். ஒளி வீசும் கிரீடம், கங்கணம், தோள்வளை, (வைஜயந்தி) ஹாரம் ஆகியவற்றின் ஒளியுடனும், சங்கு, சக்கரம், தாமரை மலர், கதை ஆகியவற்றுடன் விளங்கும் நீலமேக வண்ணத் திருமேனியுடன் பிரசவ அறையில் விளங்கினீர்கள். (3)

வக்ஷ:ஸ்த²லீ–ஸுகு³நிலீந–விலாஸி–லக்ஷ்மீ–
மந்த³ாக்ஷ–லக்ஷித–கடாக்ஷ–விமோக்ஷபே⁴தை³: ।
தந்மந்தி³ரஸ்ய கு²ல–கம்ஸக்ருதா–மலக்ஷ்மீ–
முந்மார்ஜயந்நிவ விரேஜித² வாஸுதே³வ ॥ 4 ॥

வாஸுதேவா! அந்தப் பிரசவ அறை கொடியோனான கம்ஸனால் (குழந்தைகளைக் கொன்ற பாவத்தால்) அலக்ஷ்மீகரமாக, சோபையற்றதாக (ஒளியற்றதாக, அழகற்றதாக) இருந்தது. தங்களது திருமார்பில் மகிழ்ச்சியோடு உறைந்து வரும் அலர்மேல் மங்கையின் வெட்கத்தோடு கூடிய கடைக்கண் பார்வையினால் அந்த சோபையின்மையைப் போக்குபவர் போலத் தாங்கள் விளங்கினீர்கள். (4)

ஸௌரிஸ்து தீ⁴ரமுநிமண்ட³ல–சேதஸோபி
தூ³ரஸ்தி²தம் வபுருதீ³க்ஷ்ய நிஜேக்ஷணாப்⁴யாம் ।
ஆநந்த³பா³ஷ்ப–புளகோத்³க³ம–கு³த்³க³த³ார்த்³ரஸ்–
துஷ்டாவ த்³ருஷ்டி–மகரந்த³ரஸம் ப⁴வந்தம் ॥ 5 ॥

அப்பொழுது (ஸாதன சதுஷ்டயம் கைவரப்பெற்ற, 'ச்ரத்தா பக்தி த்யான யோகாதவேஹி' என்ற கைவல்யோபநிஷத் வாக்கியத்தில் கூறப்பட்டுள்ள சிரத்தை, பக்தி, தியானம், யோகம் என்ற நான்கும் கைவரப் பெற்ற) முனிவர் குழாங்களின் மனதிற்கும் எட்டாத தங்களுடைய அழகிய திருமேனியைத் தனது ஊனக் கண்களால் கண்ட வஸுதேவர் ஆனந்தக் கண்ணீர் பெருக மயிர்க்கூச்செறிந்து தொண்டை தழுதழுக்க உளம் கனிந்து கண்களுக்குப் பூந்தேன் போன்ற இனிய தங்களைத் துதித்தார். (5)

தே₃வ ப்ரஸீத₃ பரபூருஷ தாபவல்லீ–
நிர்லூநித₃ாத்ர ஸமநேத்ர கலாவிலாஸிந் ।
கே₂தா₃நபாகுரு க்ருபாகு₃ருபி₄: கடாக்ஷை–
ரித்யாதி₃ தேந முதி₃தேந சிரம் நுதோ(அ)பூ₄: ॥ 6 ॥

"தேவதேவனே! புருஷோத்தமனே! அருள்புரியுங்கள். பிறவித்தளைகளைக் களைவதில் திறன் வாய்ந்த ஆயுதம் போன்று கூர்மையாக ஒளிரும் திருக்கடாக்ஷத்துடன் கூடியவரே! கருணை பெருகும் கடாக்ஷத்தால் (எனது) துன்பங்களை நீக்கி அருள்புரியுங்கள்" என்றெல்லாம் மிகவும் மகிழ்ந்த வஸுதேவர் நீண்ட நேரம் தங்களைத் துதித்தார். (6)

அல்லது

"தேவதேவனே! பரமபுருஷனே! பிறவித்தளைகளைப் போக்குபவனே! அனைவரையும் அடக்கியாள்பவரே! தனது அம்சமான மாயையால் ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில் செய்து விளையாடுபவரே! கருணையே நிறைந்த தங்கள் திருக்கண் பார்வையால் எனது துக்கங்களைக் களைவாய்" என்று பலவாறாக வஸுதேவரால் வெகுநேரம் துதிக்கப் பெற்றீர்கள்.

மாத்ரா ச நேத்ரஸலிலாஸ்த்ருத–கா₃த்ரவல்யா
ஸ்தோத்ரை–ரபி₄ஷ்டுதகு₃ண: கருணாலயஸ்த்வம் ।
ப்ராசீநஜந்மயுக₃ளம் ப்ரதிபே₃த்₄ய தாப்₄யாம்
மாதுர்கி₃ரா து₃தி₃த₃ மாநுஷபா₃லவேஷம் ॥ 7 ॥

ஆனந்தக் கண்ணீரால் நனைந்த கொடி போன்ற மெலிந்த மேனியுடைய தாயான தேவகி தங்களுடைய குணநலன்களைத் துதித்தாள். கருணைக்கடலான தாங்கள் அவர்களிடம் முன்பு தான் எடுத்த இரு பிறவிகளைப் பற்றியும் கூறி, தாயின் சொற்படி மானுடக் குழந்தையின் வடிவத்தை எடுத்துக் கொண்டீர்கள். (ப்ருச்னி–ஸுதபஸ் என்ற தம்பதியர்க்கு ப்ருச்னிகர்ப்பன் என்ற பெயருடனும், பின் அதிதி–காசியபர் என்ற தம்பதியர்க்கு வாமனராகவும் திருவவதாரம் செய்த இரு பிறவிகள்.) (7)

த்வத்ப்ரேரிதஸ்–தத₃நு நந்த₃தநூஜயா தே
வ்யத்யாஸமாரசயிதும் ஸ ஹி ஸூரஸூநு: ।
த்வாம் ஹஸ்தயோரதி₄த சித்தவித₃ார்யமார்யை–
ரம்பே₄ருஹஸ்த₂–கலஹம்ஸகிசோர–ரம்யம் ॥ 8 ॥

பிறகு தாங்கள் வஸுதேவரிடம் நந்தகோபர் மனையில் தங்களை விட்டுவிட்டு, அவரது மனையில் பிறந்துள்ள யோகமாயையாகிய பெண்ணை எடுத்து வருமாறு கூறவே, சூரஸேன மன்னன் திருப்புதல்வராகிய வஸுதேவர், யோகிகள் மனதில் தியானிக்கும் பொருளாயும், தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னப்பறவையின் குஞ்சுபோல் அழகாயும் உள்ள தங்களை இரு கைகளாலும் எடுத்துக் கொண்டார். (8)

ஜாதா தத₃ா பஸுபஸத்₃மநி யோக₃நித்₃ரா
நித்₃ராவிமுத்₃ரிதமத₃ாக்ருத பௌரலோகம் ।
த்வத்ப்ரேரணாத் கிமிவ சித்ரமசேதநைர்–யத்₃
த்₃வாரை: ஸ்வயம் வ்யக₄டி ஸங்க₄டிதை: ஸுக₃ாட₄ம் ॥ 9 ॥

அப்பொழுது தங்களது கட்டளையை ஏற்ற யோகமாயை நந்தகோபர் வீட்டில் (யசோதை வயிற்றில்) பெண் குழந்தையாகத் திருவவதாரம் செய்து நகரமக்களை ஆழ்ந்த உறக்கத்தில் கண்ணுறங்கும்படிச் செய்தாள். நன்றாக இறுகப் பூட்டப்பட்டிருந்த உயிரற்ற வாயிற்கதவுகளும் கூட தாமாகவே திறந்து கொண்டனவே. என்னே வியப்பு! (9)

ஸேஷேண பூ4ரிப2ணவாரித–வாரிணாத்த
ஸ்வைரம் ப்ரத3ர்ஶிதபதே2ா மணிதீ3பிதேந ।
த்வாம் த4ாரயந் ஸ கூ2லு த3ந்யதம: ப்ரதஸ்தே2
ஸோ(யம் த்வமீஶ மம நாஶய ரோக3வேக3ாந் ॥ 10 ॥

பிறகு ஆதிசேஷன் தனது (ஆயிரம்) பணா முடிகளால் குடைபோல் மழை விழாது தடுத்து, தனது தலைமுடிகளில் விளங்கும் நாகரத்தினங்களாகிற மணி விளக்குகளால் இருளிலே வழிகாட்ட, நல்வினையே செய்து பாக்கியம் பெற்ற வஸுதேவர் தங்களை எடுத்துக் கொண்டு தனி ஒருவராகக் கோகுலம் புறப்பட்டார். அத்தகைய பெருமை படைத்த தேவரீர் எனது நோய்களை நீக்கியருள வேண்டும். (10)

ஒப்புநோக்குக:– ஆதிசேஷனது தொண்டு :

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள் கடலுள் என்றும்
புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கரவு.

(பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 53)

முப்பத்தொன்பதாவது தசகம்

யோகமாயையை எடுத்து வருதல்

ப4வந்த–மயமுத்3வஹந் யது3குலோத்3வஹோ நிஸ்ஸரந்
த3த்3ர்ஶ கூ3நோச்சலஜ்ஜலப4ராம் கலிந்த3ாத்மஜாம் ।
அஹோ ஸலிலஸஞ்சய: ஸ புநரைந்த்3ர–ஜாலோதி3தோ
ஜலெளக4 இவ தத்க்ஷணாத் ப்ரபத3மேயதா–மாயயௌ ॥ 1 ॥

யதுகுலத் தோன்றலான வஸுதேவர் தங்களை எடுத்துச் செல்லுகையில் (வழியில்) வானளாவி உயர எழும் நீர் அலைகளுடைய யமுனையாற்றைக் கண்டார். ஆனால் (அருகில் அவர் சென்றதும்) அந்த வெள்ளம் இந்திரஜாலத்தில் தோன்றினாற்போல் ஒரு நொடியில் கணுக்கால் அளவாக ஆயிற்று. என்னே விந்தை? (1)

ப்ரஸுப்த–பஶுபாலிகாம் நிப்4ருத–மாருதா3த்3–பா3லிகா–
மபாவ்ருதகவாடிகாம் பஶுபவாடிகாமாவிஶந் ।
ப4வந்தமய–மர்பயந் ப்ரஸவதல்பகே தத்பதா3த்3–
வஹந் கபடகந்யகாம் ஸ்வபுரமாக3தோ வேகா3த: ॥ 2 ॥

இந்த வஸுதேவர் கோகுலம் செல்கையில் கோப–கோபியர் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். பெண் குழந்தையோ கொஞ்சம் மெதுவாக அழுது கொண்டிருந்தது. கதவுகள் திறந்திருந்தன. வஸுதேவர் நந்தகோபருடைய வீட்டில் புகுந்து தங்களைப் பிரசவ அறையில் உள்ள படுக்கையில் கிடத்திவிட்டு, அங்கிருந்த மாயையாகிய பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு தன் நகரத்திற்கு விரைந்து வந்தார். (2)

ததஸ்த்வத3நுஜ்ஞா–ரவக்ஷுபித–நித்3ரவேக3–த்3ரவத்3–
ப4டோத்கர–நிவேதி3த–ப்ரஸவ–வார்தயை–வார்திமாந் ।
விமுக்த–சிகுரோத்கர–ஸ்த்வரித–மாபதந் பே2ஜ்ரா–
ட3துஷ்ட இவ த்3ருஷ்டவாந் ப4கி3நிகாகரே கந்யகாம் ॥ 3 ॥

அப்பொழுது தங்களது தங்கையின் அழுகுரலைக் கேட்டு உறக்கம் கலைந்து எழுந்த காவற்காரர்கள் பரபரப்புடன் அரசனான கம்ஸனிடம் சென்று குழந்தை பிறந்த செய்தியைக் கூறவே, அவன் மிகவும் கவலை கொண்டான். தலைவிரி கோலத்துடன் வேகமாக ஓடி வந்த போஜ மன்னனான கம்ஸன் தனது தங்கையின் கையில் பெண் குழந்தையைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளவில்லை. (3)

த்3ருவம் கபடஸாலிநோ மது4ஹரஸ்ய மாயா ப4வே–
த3ஸாவிதி கிமோரிகாம் ப4கி3நிகா–கராலிங்கி3தாம் ।
த்3விபோ நளிநிகாந்தராதி3வ ம்ருணாளிகாமாக்ஷிபந்–
நயம் த்வத3நுஜாமஜா–முபலபட்டகே பிஷ்டவாந் ॥ 4 ॥

'இது நிச்சயமாக மது என்ற அஸுரனைக் கொன்ற கபடசாலியான நாராயணனின் மாயையாகத்தான் இருக்கும்' என்று கருதிய கம்ஸன், தங்கையின் கைகளில் தவழும் குழந்தையை, யானை தாமரைத் தடாகத்தினின்றும் தாமரைக் கொடியைப் பிடுங்குவது போல் பிடுங்கிக் கொண்டு, பிறப்பற்ற உங்களது தங்கையைப் பாறையின் மேல் ஓங்கியடித்தான். (4)

ததோ ப4வது3பாஸகோ ஜடிதி ம்ருத்யுபாஸாதி3வ
ப்ரமுச்ய தரஸைவ ஸா ஸமதி4ருட4ருபாந்தரா ।
அத4ஸ்தல–மஜ4ங்முஷீ விகஸ–த்3ஷ்ட3ஹாஸ–ஸ்பு2ரந்–
மஹாயுத4மஹோ கு3தா கில விஹாயஸா தி3த்3யுதே ॥ 5 ॥

தங்களை வழிபடும் பக்தன் யமனுடைய பாசத்தினின்றும் விரைவில் விடுதலை பெறுவதுபோல் அப்பொழுது அந்த யோகமாயை கம்ஸனுடைய கையினின்றும் விடுபட்டு வேறு உருவம் கொண்டு தனது எட்டு கைகளிலும் ஆயுதங்களைத் தாங்கி விண்வெளியில் பிரகாசித்தாள். (5)

நிர்ஸம்ஸதர கம்ஸ தே கிமு மயா விநிஷ்பிஷ்டயா
ப3பூ4வ ப4வதா3ந்தக: க்வசந சிந்த்யதாம் தே ஹிதம் ।
இதி த்வத3நுஜா விபே4 கு3லமுதீ3ர்ய தம் ஜ்ஞ்முஷீ
மருத்3கு3ணபணாயிதா பு4வி ச மந்தி3ராண்யேயுஷீ ॥ 6 ॥

'கொடுமையே செய்யும் கம்ஸனே! என்னைக் கொல்வதால் உனக்கு என்ன நன்மை? உன்னைக் கொல்பவன் எங்கேயோ பிறந்திருக்கிறான். உன் நன்மையைத்

தேடிக் கொள்' என்று உன் உடன்பிறந்தாள் கொடியவனான கம்ஸனிடம் கூறிவிட்டு, மருத்கணங்களாகிய தேவர்களால் துதிக்கப் பெற்று, இந்நிலவுலகில் பல ஆலயங்களிலும் கோயில் கொண்டெழுந்தருளினாள். (6)

ப்ரகே³ புநரகா³த்மஜா–வசநமீரிதா பூ⁴பு⁴ஜா
ப்ரலம்ப³–ப³க–பூதநா–ப்ரமுக²–தை³நவா மாநிந: ।
ப⁴வந்நித⁴ந–காம்யயா ஜக³தி ப³ப்⁴ரமுர்–நிர்ப⁴யா:
குமாரக–விமாரகா: கிமிவ து³ஷ்கரம் நிஷ்க்ருபை: ॥ 7 ॥

மறுநாள் காலையில் மலையரசன் திருமகளான யோகமாயை கூறியதைக் கம்ஸன் கர்வம் கொண்ட அஸுரர்களான பிரலம்பன், பகன், பூதனை முதலியோரிடம் கூற, அவர்களும் தங்களைக் கொல்லும் எண்ணத்தில் புதிதாகப் பிறந்த மற்ற குழந்தைகளைக் கொன்று பயமின்றி உலகில் திரிந்தனர். கருணையற்றவர்களுக்குக் கொடுஞ்செயல் புரிவது ஒரு கடினமான செயலா, என்ன? (7)

தத: பஸூபமந்தி³ரே த்வயி முகுந்த³–நந்த³ப்ரியா–
ப்ரஸூதி–ஸமயே–ஸயே ருதி³தி கிஞ்சி–த³ஞ்சத்பதே³ ।
விபு³த்⁴ய வநிதாஜநைஸ்–தநயஸம்ப⁴வே கே²ஷிதே
முதா³ கிமு வதா³ம்யஹோ ஸகலமாகுலம் கோ³குலம் ॥ 8 ॥

முகுந்தனே! நந்தகோபன் திருமாளிகையில் அவரது மனைவியான யசோதையின் பிரசவப் படுக்கையில் தாங்கள் கிடந்து கால்களைச் சிறிதே அசைத்து அழுதபொழுது தூக்கம் கலைந்தெழுந்த பெண்கள், குழந்தை பிறந்த செய்தியை எல்லோருக்கும் கூறினார்கள். என்னே வியப்பு? அந்த ஆச்சரியத்தை எங்ஙனே கூறுவேன்? கோகுலம் முழுவதும் மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தது. (8)

அஹோ கூ²லு யஸோதா³யா நவகலாய–சேதோஹரம்
ப⁴வந்தமலமந்திகே ப்ரத²ம–மாபிபூ³ந்த்யா த்ருஸா ।
புந: ஸ்தநப⁴ரம் நிஜம் ஸபதி³ பாயயந்த்யா முதா³
மநோஹர–தநுஸ்ப்ருஸா ஜக³தி புண்யவந்தோ ஜிதா: ॥ 9 ॥

புதிதாக மலர்ந்த காயாம்பூ போல உள்ளம் கவரும் திருமேனியுடைய தங்களை முதன்முதல் அருகில் கண்ட யசோதை தன்னிரு கண்களால் தங்களது அழகைப் பருகினாள். தனது இரு திருமுலைத்தடங்களினின்றும் பெருகும் பாலமுதத்தைப் பருகச் செய்தாள். உள்ளம் நெகிழத் தங்கள் உடலைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து ஆனந்தமடைந்தாள். இவ்வாறான பெறற்கரிய பெரும்பேறு எவர்தான் பெற்றார்கள்? புண்ணியவான்கள் அனைவரையுமல்லவா மீறிவிட்டாள். இது என்னே வியப்பு? (9)

ஒப்புநோக்குக:– திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம்
தெய்வநங்கை யசோதை பெற்றாளே. (குலசேகர ஆழ்வார் 7–5)

ப⁴வத்குஸூலகாம்யயா ஸ கூ²லு நந்த³கோ³பஸ்–ததா³
ப்ரமோத³பரஸங்குலோ த்³விஜகுலாய கிந்நாத³தா³த் ।
ததை²வ பஸூபாலகா: கிமு ந மங்க³லம் தேநிரே
ஜக³த்–த்ரிதயமங்க³ல த்வமிஹ பாஹி மாமாமயாத் ॥ 10 ॥

அப்பொழுது ஆனந்தத்திலே மூழ்கி மெய்மறந்த நந்தகோபன் தங்களுடைய நலனைக் கருதி, அந்தணர்களுக்கு எதைத்தான் தானமாகத் தரவில்லை? அவ்வாறே மற்ற யாதவர்களும் மங்களமளிக்கும் எந்தச் செயலைத்தான் செய்யவில்லை? மூவுலகங்களுக்கும் மங்களத்தையளிக்கும் தாங்கள் எனது இந்த நோய்களைப் போக்கியருள வேண்டும். (10)



நாற்பதாவது தசகம்

பூதனை வதம்

தத₃நு நந்த₃–மமந்த₃–ஸுபு₄ஸ்பத₃ம் ந்ருபபுரீம் கரத₃ந–க்ருதே கத₃ம் ।
ஸமவலோக்ய ஜகா₃த₃ பு₄வத்பிதா விதி₃த–கம்ஸ–ஸஹாய–ஜநோத்₃யம: ॥ 1 ॥

அதன்பின் அனைத்துச் செல்வங்களும் நிரம்பப் பெற்ற நந்தகோபன் அரசனுக்குக் கப்பம் கட்ட வேண்டி மதுரையம்பதி செல்ல, கம்ஸனுக்கு உதவி புரியும் மந்திரிகளின் தீய முயற்சியை நன்கு அறிந்த தங்கள் தந்தையான வஸுதேவர் அவரிடம் (பின்வருமாறு) கூறினார். (1)

அயி ஸகே₂ தவ பா₃லகஜந்ம மாம் ஸுகி₂யதேத்₃ய நிஜாத்மஜ–ஜந்மவத் ।
இதி பு₄வத்பிருதாம் வ்ரஜநாயகே ஸமதி₃ரோப்ய ஸமம்ஸ தமாத்₃ராத் ॥ 2 ॥

'நண்பனே! உனக்குப் பிள்ளைப்பேறு கிடைத்தது எனக்கே பேறு கிடைத்தது போல் என் மனம் மகிழ்கிறது' என்று யதுகுலத் தலைவரான நந்தனின் மேல் 'தங்களுக்குத் தந்தை' என்கிற புகழை ஏற்றி வைத்து மிக்க அன்புடன் அவரைப் புகழ்ந்தார். (2)

இஹ ச ஸந்த்ய–நிமித்தஸாதநி தே கடகஸீம்நி ததோ லகு₄ கம்யதாம்
இதி ச தத்₃வசஸா வ்ரஜநாயகோ பு₄வத₃பாய–பி₄யா த்₃ருத–மாயயௌ ॥ 3 ॥

'நண்பனே! இப்பொழுது தங்களுடைய கோகுலத்தில் நூற்றுக்கணக்கான தீய சகுனங்கள் காணப்படுகின்றன. ஆகவே விரைவில் திரும்பிச் செல்லுங்கள்' என்று வஸுதேவர் சொல்லக் கேட்ட நந்தன், தங்களுக்குத் தீங்கு நேரிடுமோ என்ற அச்சத்தால் விரைவில் (கோகுலம்) திரும்பி வந்தார். (3)

அவஸரே கு₂லு தத்ர ச காசந வ்ரஜபதே₃ மது₄ராக்ருதி–ரங்₃நா ।
தரளஷட்பத₃–லாலிதகுந்தலா கபடபோதக தே நிகடம் க₃தா ॥ 4 ॥

மாயக்குழந்தை வேடம் பூண்ட குருவாயூரப்பா! அப்பொழுது இங்குமங்கும் அசையும் வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய அழகிய வடிவுடைய ஒரு பெண் கோகுலத்தில் தங்கள் அருகில் வந்தாள். (4)

ஸபதி₃ ஸா ஹ்ருதபா₃லக–சேதநா நிஶிசராந்வயஜா கில பூதநா ।
வ்ரஜவது₄ஷ்விஹ கேயமிதி க்ஷணம் விம்ருஶதீஷு பு₄வந்தமுபாத₃தே₃ ॥ 5 ॥

குழந்தைகளின் உயிரைப் பறிப்பவளும், அரக்கர் குலத்தில் பிறந்தவளும், பூதனை என்ற பெயர் கொண்டவளுமான அப்பெண்ணைக் கண்ட இடைச்சியர்கள் 'இவள் யார்?' என்று ஆராய்ந்திருக்கையில், அவள் தங்களைக் கையில் எடுத்துக் கொண்டாள். (5)

லலித–பா₄வ–விலாஸ–ஹ்ருதாத்மபி₄ர்–யுவதிபி₄: ப்ரதிரோத்₃து₄மபாரிதா ।
ஸ்தநமஸௌ பா₄வநாந்த–நிஷேத்₄து₄ஷீ ப்ரத₃து₄ஷீ பா₄வதே கபடாத்மநே ॥ 6 ॥

தனது அழகிய நடையுடை பாவனைகளால் ஆய்ச்சியர் மனதைக் கவர்ந்த பூதனை, எவராலும் தடுக்கப்படாமல் வீட்டினுள் புகுந்து (ஓரிடத்தில்) அமர்ந்து கொண்டு கபட உரு தாங்கி வந்த தங்களுக்கு நகில்களால் பால் கொடுத்தாள். (6)

ஸமதி₄ருஹ்ய ததா₄ங்க–மமங்கிதஸ்–த்வமத₂ பா₃லகலோபந–ரோஷித: ।
மஹதி₃வாம்ரப₂லம் குசமண்டா₃லம் ப்ரதிசுகூஷித₂ து₃ர்விஷதூ₃ஷிதம் ॥ 7 ॥

இவள் குழந்தைகளைக் கொல்வது அறிந்து மிக்க சினங்கொண்ட தாங்கள் சிறிதும் அச்சமின்றி அவளது மடியில் ஏறியமர்ந்து கொடிய நஞ்சு நிரம்பிய அவளுடைய மார்பகத்தைப் பெரிய மாம்பழத்தை உறிஞ்சிச் சாப்பிடுவதுபோல உறிஞ்சிக் குடித்தீர்கள். (7)

அஸூபி₄ரேவ ஸமம் த₄யதி த்வயி ஸ்தநமஸௌ ஸ்தநிதோபம–நிஸ்வநா ।
நிரபதத்₃–பா₄யதூ₃யி நிஜம் வபு: ப்ரதிகா₃தா ப்ரவிஸார்ய பூ₃ஜாவுபே₄ள ॥ 8 ॥

தாங்கள் முலையுண்ணுகையில் அவளது உயிரையும் சேர்த்துப் பருகினதால் அப்பூதனை இடி போன்ற பேரொலியுடன் அச்சம் தரும் தனது உண்மையான அரக்க வடிவம் கொண்டு தனது இருகைகளையும் விரித்தவாறு மல்லாந்து விழுந்து இறந்தாள். (8)

பா₄யதா₃கே₂ஷண–பீ₄ஷணவிக்₃ரஹ–ஶ்ரவணதா₃ர்ஸந–மோஹிதவல்லவே ।
வ்ரஜபதே₃ ததூ₃ர:ஸ்த₂ல–கே₂லநம் நநு பா₃லந்த–மக்₃ருஹ்ணத கே₂பிகா: ॥ 9 ॥

இடைச்சேரியில் அச்சம் தரும் குரலைக் கேட்டும், பயங்கரமான அஸுர உடலைப் பார்த்தும் கோபியர்கள் மயங்கியபொழுது தாங்கள் அப்பூதனையின் மார்பகத்தில் விளையாடிக் கொண்டிருந்தீர்கள். உடனே ஆய்ச்சியர் ஓடி வந்து தங்களை எடுத்துக் கொண்டார்கள் அல்லவா? (9)

பு₄வநமங்க₃ல நாமபி₄ரேவ தே யுவதிபி₄ர்–பூ₃ஹுதா₄ க்ருதரக்ஷண: ।
த்வமயி வாதநிகேதநநாத₂ மாமக₃தா₃யந் குரு தாவக–ஸேவகம் ॥ 10 ॥

அனைத்துலகங்களுக்கும் எல்லா நலன்களும் அருளும் குருவாயூரப்பா! தங்களுடைய மங்களமான திருநாமங்களை ஓதியே பெண்மணிகள் அனைவரும் தங்களுக்குப் பல வகையிலும் காப்பு செய்தார்கள். அத்தகைய தாங்கள் தங்கள் அடிமையாகிய என்னை நோயற்றவனாகச் செய்தருள வேண்டும். (10)

நாற்பத்தோராவது தசகம்

பூதனை மோக்ஷம்

வ்ரஜேஶ்வர: ஶௌரிவசோ நிஶம்ய
ஸமாவ்ரஜந்–நத்₃வநி பீ₃தசேதா: ।
நிஷ்பிஷ்ட–நிஶ்ஶேஷ–தரும் நிரீக்ஷ்ய
கஞ்சித்பதா₃ர்த்₃தம் ஶரணம் க₃தஸ்த்வாம் ॥ 1 ॥

வஸுதேவர் சொல்லைக் கேட்டு வழி முழுவதும் அச்சம் கொண்டு கோகுலம் திரும்பிய நந்தகோபர் கோகுலம் அடைந்ததும் அருகில் இருந்த பெரிய பெரிய மரங்களை எல்லாம் ஒடித்துப் பொடித்திருந்த ஏதோ ஒரு பெரிய உருவம் வீழ்ந்து கிடப்பது கண்டு அச்சம் கொண்டு தங்களைச் சரணமடைந்தார். (1)

நிஶம்ய கோ₄பீவசநா–து₃த்₃ருத்தம் ஸர்வேऽபி கோ₄பா ப₄யவிஸ்மயாந்த₄: ।
த்வத்பாதிதம் கோ₄ரபிஶாசதே₃ஹம் தே₃ஹுர் விதூ₃ரேऽத₃ குடாரக்ருத்தம் ॥ 2 ॥

கோபியர்கள் கூற நிகழ்ந்ததை அறிந்த கோபர்கள் அனைவரும் பயமும், வியப்பும் கொண்டு சிறிது காலம் அறிவிழந்து செய்வதறியாது திகைத்து நின்றனர். பின் தங்களால் வீழ்த்தப்பட்ட அந்த பயங்கரமான அரக்கியின் உடலைக் கோடாரியால் துண்டு துண்டாக்கி வெகுதூரத்தில் எரித்தனர். (2)

த்வத்பீத–பூதஸ்தந–தச்ச₂ரீராத் ஸமுச்சலந்–நுச்சதரோ ஹி தூ₄ம: ।
ஶங்கா–மத₄ –தூ₄ரவ: கிமேஷ: கிம் சாந்த₄நோ கெ₃ளக்₃குலவோऽத₃வேதி ॥ 3 ॥

தாங்கள் திருமுலைப்பால் உண்டதால் புனிதமாக்கப்பட்ட அந்த பூதனையின் உடலினின்றும் உயரக் கிளம்பிய புகை 'இது என்ன அகிலின் வாஸனையா? சந்தன வாஸனையா? அல்லது குங்கிலிய நறுமணமா?' என்று ஐயுற்று வியக்கும்படியிருந்தல்லவா? (3)

மத₃ங்க₃ஸங்க₃ஸ்ய ப₂லம் ந தூ₃ரே க்ஷணேந தாவத்₃ ப₄வதாமபி ஸ்யாத் ।
இத்யுல்லபந் வல்லவதல்லஜே₂ ₄யஸ்–த்வம் பூதநா–மாதநுதா₂ஸ்–ஸுக₃ந்தி₄ம் ॥ 4 ॥

என்னுடைய திருமேனியைத் தீண்டுபவர்களுக்குப் பயன் வெகுதொலைவில் இல்லை. உடனேயே கிட்டிவிடும் (மறுபிறப்பில் இல்லை, இப்பிறவியிலேயே பெறலாகும்) என்று ஆயர்களுக்குக் கூறுவது போலத் தாங்கள் பூதனையின் உடலை நறுமணம் கமழும்படிச் செய்தீர்கள். (4)

சித்ரம் பிஶாச்யா ந ஹத: குமாரஸ்–
சித்ரம் புரைவாகதி₂ ஸௌரிணேத₃ம் ।
இதி ப்ரஶம்ஸந் கில கோ₄பலோகோ
ப₄வந்–முக₂லோக–ரஸே ந்யமாங்க்ஷீத் ॥ 5 ॥

'நல்லவேளை! பேயான பூதனையினால் குழந்தை கொல்லப்படாமல் தப்பியதே! இதுவே பெருத்த ஆச்சரியம்! (தீங்கு விளையும் என்று) வஸுதேவரால் முதலிலேயே தெரிந்து கூறப்பட்டது வியப்பிற்குரியதே!' என்று இடையர்கள் பேசிக் கொண்டார்கள். இவ்வாறு பேசிய அவர்கள் தங்கள் திருமுகத்தைக் கண்டு பேரானந்தத்திலே மூழ்கினார்கள். (5)

தி₃நே தி₃நேऽத₃ ப்ரதிவ்ருத்₃த₄லக்ஷ்மீ–ரக்ஷீண–மாங்க₃ல்ய–ஶதோ வ்ரஜோऽயம் ।
ப₄வந்–நிவாஸாத₃யி வாஸுதே₃வ ப்ரமோத₃ஸாந்த்₃ர: பரிதோ விரேஜே ॥ 6 ॥

வாஸுதேவனான குருவாயூரப்பா! தாங்கள் கோகுலத்தில் இருப்பதால் இந்த கோகுலம் முழுவதும் நாளுக்கு நாள் ஓங்கிப் பெருகும் லக்ஷ்மீகடாக்ஷமுடையதாகவும், குறைவற்ற நலம் நல்கும் நற்செயல்கள் தூற்றுக்கணக்காகத் தடையின்றி நடப்பதாகவும், நாற்புறமும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்குவதாகவும் இருந்தது. (6)

க்ருஹேஷு தே கோமலரூபஹாஸ–மித₂:–கத₂ா–ஸங்குலிதா: கமந்ய: ।
வ்ருத்தேஷு க்ருத்யேஷு ப₄வந்நிரீக்ஷா–ஸமாகு₃தா: ப்ரத்யஹ–மத்யநந்த₃ந் ॥ 7 ॥

நாள்தோறும் ஆய்ச்சியர் தங்கள் தங்கள் இல்லங்கள்தோறும் உங்களுடைய அழகிய திருமேனியையும், புன்சிரிப்பையும் பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு வீட்டு வேலைகள் முடிந்ததும் தங்களைக் காண வந்து கூடி மிகவும் இன்பமடைந்தனர். (7)

அஹோ குமாரோ மயி த₃த்தத்₃ருஷ்டி:
ஸ்மிதம் க்ருதம் மாம் ப்ரதி வத்ஸகேந ।
ஏஹ்யேஹி மாமித்யுபஸார்ய பாணிம்
த்வயீஶ கிம் கிம் ந க்ருதம் வதூ₄பி₃: ॥ 8 ॥

இடைச்சி ஒருத்தி, 'அதோ! குழந்தை என்னையே உற்றுப் பார்க்கிறான் பார்!' என்றாள். மற்றொருத்தி, '(இல்லை) என்னையல்லவா கண்டு சிரிக்கிறான்' என்கிறாள். வேறொருத்தியோ தன் இரு கைகளையும் நீட்டி, 'குழந்தாய்! ஓடி வா! ஓடி வா!' என்று அழைக்கிறாள். ஈசனே, குருவாயூரப்பா! (இவ்வாறு) கோபியர்கள் தங்களிடம் எப்படித்தான் நடந்து கொள்ளவில்லை? (அதாவது அவர்கள் பகவானை மடியில் தூக்கி வைத்துக் கொள்ளுதல், அணைத்து மகிழ்தல், முத்த மழை பொழிதல் போன்று பலவிதங்களில் தங்கள் தங்கள் அன்பைப் பொழிந்தார்கள் என்பது கருத்து.) (8)

ப₄வத்₃வபு:–ஸ்பர்ஶந–கௌதுகேந கராத்கரம் கே₂ாபவதூ₄ஜநேந ।
நீதஸ்த்வ–மாதாம்ர–ஸரோஜமாலா–வ்யாலம்பி₃–லோலம்ப₃–துலாமலாஸீ: ॥ 9 ॥

இடைச்சியர்கள், தங்களது அழகிய திருமேனியைத் தீண்டுவதில் கொண்ட ஆர்வத்தினால் ஒருவர் மாற்றி ஒருவர் உங்களைக் கையிலேந்தினர். அப்பொழுது தாங்கள் ஒரு சிவந்த தாமரை மலர் மாலையில் (ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்குத் தாவிச் செல்லும்) பொறிவரி வண்டுபோல் காட்சியளித்தீர்கள். (9)

நிபாயயந்தீ ஸ்தநமங்கக₃ம் த்வாம்
விலோகயந்தீ வத₃நம் ஹஸந்தீ ।
த₃ஶாம் யஶோதா₃ கதமாம் ந பே₄ஜே
ஸ தாத்₃ருஶ: பாஹி ஹரே கு₃தா₃ந்மாம் ॥ 10 ॥

ஹரியே, குருவாயூரப்பா! தங்களைத் தனது மடியிலிருத்தி திருமுலைப் பாலூட்டித் தங்கள் திருமுகத்தைக் கண்டு நெகிழ்ந்த யசோதை பெற்ற ஆனந்த நிலையை எங்ஙனே கூறுவது? (அதாவது பூதனையின் இறந்த உடலிலிருந்து நறுமணம் வெளியேறும்படியான செயல்கண்டு வியப்பும், திருமேனியழகு கண்டு ஆர்வமும், பூதனை போன்றவர்களால் தீங்கு நேருமோ என்ற அச்சமும், கலக்கமும், அதனால் தெய்வத்திடம் வேண்டுதலும் – இதுபோன்ற பற்பல நிலைகளை அடைந்தாள்.) அப்படிப்பட்ட தாங்கள் நோயிலிருந்து என்னைக் காத்தருள வேண்டும். (10)

ஒப்புநோக்குக:– அழுகையும் அஞ்சிநோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும், இவை கண்ட அசோதை
தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே. (குலசேகராழ்வார் 7–8)

*****

நாற்பத்திரண்டாவது தசகம்

சகடாஸுர வதம்

கதா3ஸபி ஜந்மர்க்ஷதி3நே தவ ப்ரபே4
நிமந்த்ரித–ஜ்ஞாதி–வதூ4–மஹீஸுரா ।
மஹாநஸஸ்–த்வாம் ஸவிதே4 நித4ாய ஸா
மஹாநஸாதே3ள வவ்ருதே வ்ரஜேஶ்வரீ ॥ 1 ॥

பிரபுவே, குருவாயூரப்பா! ஒரு சமயம் தங்களது பிறந்த திருநக்ஷத்திரத்தைக் கொண்டாடுவதற்காக கோகுலத்தின் தலைவியான யசோதை உறவினர்களையும், பெண்களையும், அந்தணர்களையும் தன் வீட்டிற்கு அழைத்திருந்தாள். தங்களை ஒரு கட்டை வண்டிக்கருகில் படுக்க வைத்துவிட்டுச் சமையலறையில் உள்ள வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். (1)

குறிப்பு:– வீட்டிலே குழந்தையைத் தூங்க வைக்க எவ்வளவோ இடங்களிருப்பினும் ஒரு கட்டை வண்டிக்குக் கீழே தன் உயிருக்குயிரான குழந்தையைப் படுக்க வைத்தாளே எனில், வண்டி உருவில் வந்துள்ள சகடாஸுரனைக் கொல்ல நினைத்த பகவானது எல்லையற்ற கருணையே, யசோதையை வண்டியருகில் படுக்க வைக்கச் செய்தது என்றறிய வேண்டும். இதை விளக்கவே 'பிரபுவே' என்ற சொல்லைக் கையாள்கிறார்.

ததோ ப4வத்த்ராண–நியுக்தபா3லக–ப்ரதீதி–ஸங்க்ரந்த3ந–ஸங்குலாரவை: ।
விமிஶ்ரமஶ்ராவி ப4வத்ஸமீபத: பரிஸ்புடத்3தா4ரு–சடச்சடாரவ: ॥ 2 ॥

குழந்தையான தங்களைக் கவனித்துக் கொள்ள சில சிறுவர்களையும் அமர்த்தியிருந்தாள். அப்பொழுது தங்கள் அருகில் இருந்த அந்த கட்டை வண்டியின் பாகங்கள் முறிந்து விழும் 'சடச' என்ற பேரொலியும், அது கேட்டு பயந்த சிறுவர்களின் கூக்குரலொலியும் ஒன்று சேரக் கேட்டது. (2)

ததஸ்–ததா3கர்ணந–ஸம்ப்4ரமஶ்ரம–ப்ரகம்பி–வக்ஷோஜப4ரா வ்ரஜாங்க3நா: ।
ப4வந்தமந்தர்த3த்3ருஶு: ஸமந்ததோ விநிஷ்பதத்3தா3ருணதா3ருமத்4யக3ம் ॥ 3 ॥

அந்தப் பேரொலியைக் கேட்டு மிக்க பரபரப்புடன் உடல் குலுங்கக் குலுங்க ஓடிவந்த இடைச்சிமார்கள், நான்குபுறங்களிலும் முறிந்து விழுந்துள்ள கட்டை வண்டியின் பாகங்களின் நடுவே தங்களைக் கண்டார்கள். (3)

ஶிஶோரஹோ கிம் கிமபூ4தி3தி த்3ருதம்
ப்ரத4ாவ்ய நந்த3: பஶுபாஶ்ச பூ4ஸுரா: ।
ப4வந்தமாலோக்ய யஶோத3யா த்3ருதம்
ஸமாஶ்வஸந்–நஶ்ருஜலார்த்3ர–லோசநா: ॥ 4 ॥

'ஐயோ! குழந்தைக்கு என்ன நேர்ந்தது? என்ன நேர்ந்தது?' என்று அலறிப் புடைத்துக் கொண்டு நந்தகோபரும், மற்ற இடையர்களும், அந்தணர்களும் கண்ணும் கண்ணீருமாக ஓடிவந்து பார்க்கவே, யசோதையின் கையில் தாங்கள் (சுகமாக) இருக்கக் கண்டு சற்றே மனம் ஆறுதல் அடைந்தனர். (4)

கஸ்கோ நு கௌதஸ்குத ஏஷ விஸ்மயோ
விஶங்கடம் யச்ச²கடம் விபாடிதம் ।
ந காரணம் கிஞ்சிதி³ஹேதி தே ஸ்தி²தா:
ஸ்வநாஸிகா–தூ³த்தகரா–ஸ்த்வதீ³க்ஷகா: ॥ 5 ॥

'இதென்ன? இதென்ன? இது எப்படி நடந்தது? இந்தப் பெரிய வண்டி எப்படி உடைந்தது? யார் உடைத்தது? இங்கே (இது உடைவதற்கு) எவ்வித காரணமும் தெரியவில்லையே?' என்று அவர்கள் வியப்பால் தங்கள் மூக்கிலே கையை வைத்துக் கொண்டுத் தங்களையே உற்று நோக்கிக் கொண்டு நின்றிருந்தனர். (5)

குமாரகஸ்யாஸ்ய பயோதா⁴ரார்தி³ந: ப்ரரோதா³நே லோல–பதா³ம்பு³ஜாஹதம் ।
மயா மயா த்³ருஷ்டமநோ விபர்யகா³–தி³தீ³ஶ தே பாலகபா³லகா ஜகு³: ॥ 6 ॥

ஈசனே! 'பால் குடிப்பதற்காக அழுத இக்குழந்தை தாமரை மலர் போன்று மென்மையாக உள்ள தனது கால்களை ஆட்டி உதைத்ததால் வண்டி குடை சாய்ந்து விழுந்து முறிந்தது. இதை நான் பார்த்தேன், நான் பார்த்தேன்' என்று தங்களுக்குக் காவலாக இருந்த சிறுவர்கள் கூறினார்கள். (6)

பி⁴யா ததா³ கிஞ்சித³ஜாநதாமிதா³ம் குமாரகாணா–மதி²ர்க²டம் வச: ।
ப³வத்ப்ரபா³வாவிது³ரை–ரிதீரிதம் மநாகி³வாஶங்க்யத த்³ருஷ்டபூ⁴தநை: ॥ 7 ॥

அப்பொழுது தங்கள் பெருமையறியாத சிலர், 'பயத்தால் இக்குழந்தைகள் ஏதோ கூறுகின்றனர். இது பொருத்தமற்றது' என்றனர். பூதனையின் நிகழ்ச்சியைக் கண்ட நந்தன் முதலியவர்களோ (தங்களது மகிமையால்தான் வண்டி முறிந்திருக்கும் என்று) சிறிது ஐயமுற்றனர். (7)

ப்ரவாளதாம்ரம் கிமித³ம் பத³ம் க்ஷதம்
ஸரோஜரம்யௌ நு கரௌ விரோஜிதௌ ।
இதி ப்ரஸர்பத்–கருணாதரங்கி³தா–
ஸ்த்வத³ங்க³மாபஸ்ப்ருஶ–ரங்க³நாஜந: ॥ 8 ॥

'தளிர் போன்று சிவந்த இந்தப் பாதம் அடிபட்டதா என்ன? தாமரை மலர் போன்ற அழகிய கைகள் புண்பட்டதோ?' என்று அங்கலாய்த்துக் கருணை வெள்ளம் பொங்கி எழும் இடைச்சிமார்கள் தங்களது திருமேனியைத் தொட்டுத் தொட்டுத் தடவித் தந்தார்கள். (8)

அயே ஸுதம் தே³ஹி ஜக³த்பதே: க்ருபா–
தரங்க³பாதாத் பரிபாதமத்³ய மே ।
இதி ஸ்ம ஸத்³க்ருஹ்ய பிதா த்வத³ங்க³கம்
முஹுர்முஹு: ஶ்லிஷ்யதி ஜாதகண்டக: ॥ 9 ॥

'அடியே யசோதை! பகவானுடைய கருணையால் காப்பாற்றப்பட்ட எனது பிள்ளையை இப்போது என்னிடம் கொடு' என்று தங்கள் தந்தையான நந்தகோபன் தங்களைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டு, தங்கள் சிறிய திருமேனியைத் தழுவித் தழுவி மயிர்க்கூச்செறிந்தார். (9)

அநோநிலீந: கில ஹந்துமாகத:
ஸுராரிரேவம் பவதா விஹிம்ஸித: ।
ரஜோऽபி நோ த்ருஷ்டமமுஷ்ய தத் கதம்
ஸ ஸுத்வஸ்த்வே த்வயி லீநவாந் த்ருவம் ॥ 10 ॥

வண்டியில் மறைந்திருந்து தங்களைக் கொல்ல வந்த அஸுரனைத் தாங்கள் கொன்றுவிட்டீர்கள் அல்லவா? அந்த அஸுரனது சாம்பற்பொடிக்கூடக் காணப்படவில்லையே? அது எப்படி? அவன் சுத்த ஸத்வரூபியான தங்களோடு இரண்டறக் கலந்துவிட்டான் என்பதாலோ? (நிச்சயம் அப்படித்தான் இருக்க வேண்டும்!) (10)

ப்ரபூஜிதைஸ்தத்ர ததோ த்விஜாதிபிர்–
விமோஷதோ லம்பிதமங்களாசிஷ: ।
வ்ரஜம் நிஜைர்பாலயரஸைர்–விமோஹயந்
மருத்புராதீச மருஜாம் ஜஹீஹி மே ॥ 11 ॥

அதன்பின் நந்தகோபனால் சிறப்புச் செய்யப்பட்ட அந்தணர்கள் தங்களுக்கு (இன்னல்கள் நீங்குமாறு) சிறந்த மங்கல வாழ்த்துக்களை நல்கினார்கள். தாங்களோ தங்களது சிறுபிள்ளை விளையாட்டினால் கோகுலத்தையே மகிழ்ச்சியடையச் செய்தீர்கள். குருவாயூரப்பா! தாங்கள்தான் எனது நோய்களை நீக்கியருள வேண்டும். (11)

❁

நாற்பத்து மூன்றாவது தசகம்

திருணாவர்த்தன் வதம்

த்வாமேகதா குருமருத்புரநாத வோடும்
கடாதிரூட–கரிமாண–மபாரயந்தீ ।
மாதா நிதராய யயநே கிமிதம் பதேதி
த்யாயந்த்யசேஷ்டத க்ருஹேஷு நிவிஷ்டமங்கா ॥ 1 ॥

குருவாயூரப்பா! ஒரு சமயம் தங்களது தாய் யசோதை (தங்களை மடியில் வைத்துக் கொண்டிருக்கையில்) கனம் தாங்க இயலாது தங்களைப் படுக்கையில் கிடத்திவிட்டு, 'இன்று குழந்தை ஏன் இத்துணை கனமாக இருக்கிறான்? வியப்பாக இருக்கிறதே?' என்ற கவலையோடு வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். (1)

தாவத் விதூரமுபகர்ணித–கோரகோஷ–
வ்யாஜ்ரும்பி–பாம்ஸுபடலீ–பரிபூரிதாஸ:
வாத்யாவபு: ஸ கில தைத்யவரஸ்–த்ருணாவர்–
தாக்யோ ஜஹார ஜநமாநஸஹாரிணம் த்வாம் ॥ 2 ॥

அப்பொழுது 'திருணாவர்த்தன்' என்ற அஸுரன் சுழற்காற்றின் வடிவம் கொண்டு அச்சமூட்டும் வகையில் பேரொலியுடன் புழுதிப் படலத்தால் திசைகள் அனைத்தையும் நிறைத்துக் கொண்டு மக்கள் மனம் கவர்பவனான தங்களைக் கவர்ந்து சென்றான். (2)

உத்3தா3மபாம்ஸு–திமிராஹத–த்3ருஷ்டிபாதே
த்3ரஷ்டும் கிமப்யகுஶலே பஶுபாலலோகே ।
ஹா பா3லகஸ்ய கிமிதி த்வது3பாந்தமாப்தா
மாதா ப4வந்தமவிலோக்ய ப்4ருஶம் ருரோத3 ॥ 3 ॥

அளவற்ற புழுதிப்படலத்தால் எங்கும் இருள் சூழவே இடையர்கள் எதையும் காண முடியாது தவித்தனர். தங்கள் தாய் குழந்தைக்கு என்ன நேர்ந்ததோ? என்று அஞ்சிக் கலங்கி தங்களைக் கிடத்திய இடத்திற்கு ஓடி வந்து தேட, அங்கு தங்களைக் காணாது மிகவும் கதறினாள். (3)

தாவத்ஸ தை3நவவரோऽபி ச தீ3நமூர்தி–
ர்ப4வத்கப4ர–பரித3ாரண–லூநவேக3: ।
ஸங்கோசமாப தத3நு க்ஷதபாம்ஸுகே3ஷே
கே3ஷே வ்யதாயத ப4வஜ்ஜநநீ–நிநாத3: ॥ 4 ॥

அப்பொழுது பெருத்த அவ்வஸுரன் தங்களுடைய பாரம் தாங்க முடியாது வேகம் குன்றி உடல் சோர்ந்து அசைவற்றவனானான். பிறகு புழுதியும், இரைச்சலும் அடங்கவே தங்களது தாயின் அழுகுரல் இடைச்சேரி முழுவதும் கேட்டது. (4)

ரோதே3நாபகர்ணநவஶா–து3பக3ம்ய கே3ஹம்
க்ரந்த3த்ஸு நந்த3முக2–கே3நபகுலேஷு தீ3ந: ।
த்வாம் தை3நவஸ்–த்வகி2லமுக்திகரம் முமுக்ஷுஸ்–
த்வய்யப்ரமுஞ்சதி பபாத வியத்ப்ரதே3ஶாத் ॥ 5 ॥

(யசோதையின்) அழுகைக்குரலைக் கேட்டு நந்தகோபரும், மற்ற கோகுலவாசிகளும் வீட்டிற்கு வந்து கதறுகையில் வலுவிழந்து தீனனாகிய அஸுரன் அனைவருக்கும் முக்தியான விடுதலையை அளிக்கும் தங்களை விட்டுவிட விரும்பியும், தாங்கள் அவனை விடாததால் (தங்களுடைய பாரத்தால் தங்களையும் சேர்த்துக் கொண்டு) ஆகாயத்தினின்றும் கீழே விழுந்தான். (5)

ரோத3ாகுலாஸ்–தத3நு கே3பக3ணா பு3ஹிஷ்ட2–
பாஷாணப்ருஷ்ட2பு4வி தே3ஹமதிஸ்த2விஷ்ட2ம் ।
ப்ரைக்ஷந்த ஹந்த நிபதந்தமமுஷ்ய வக்ஷ–
ஸ்யக்ஷ்ணமேவ ச ப4வந்தமலம் ஹஸந்தம் ॥ 6 ॥

அழுது கொண்டிருந்த கோபர்கள் வீட்டிற்கு வெளியில் பாறை மேல் விழுந்த அவ்வஸுரனின் உடலைக் கண்டனர். அவனது மார்பின் மேல் சிறிதும் காயமின்றி நன்கு சிரித்து விளையாடும் தங்களையும் கண்டனர். (6)

க்3ராவப்ரபாத–பரிபிஷ்ட–க3ரிஷ்டதே3ஹ–
ப்ரஷ்டாஸு–து3ஷ்டத3நுஜோபரி த்4ருஷ்டஹாஸம் ।
ஆக்4நாநமம்பு3ஜகரேண ப4வந்தமேத்ய
கே3பா த3து3ர்–கி3ரிவராதி3வ நீலரத்நம் ॥ 7 ॥

பாறை மேல் விழுந்ததால் சிதைந்துபோன கொடியோனான அஸுரனின் உயிரற்ற உடலின் மேல் தாமரை போன்ற கைகளால் அடித்துச் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும் தங்களை ஒரு பெரிய மலைப்பாறையிலிருந்து நீலநிற மணியை எடுப்பதுபோல் இடையர்கள் தூக்கி எடுத்துக் கொண்டார்கள். (7)

ஏகைகமாஸு பரிக்ருஹ்ய நிகாமநந்தந்–
நந்தாதி–கோபபரிரப்தா–விசும்பிதாங்கம் ।
ஆதாதுகாம–பரிஷங்கித–கோபநாரீ–
ஹஸ்தாம்புஜப்ரதிதம் ப்ரணுமோ பவந்தம் ॥ 8 ॥

நந்தகோபர் முதலிய இடையர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக விரைந்து வந்து தங்களை எடுத்துத் தழுவிக் கொண்டு உடல் முழுவதும் முத்தமிட்டுப் பெரிதும் மகிழ்ந்தனர். அப்பொழுது தங்களை எடுத்து வைத்துக் கொள்ள விரும்பும் கோபியர்களின் எண்ணத்தை உணர்ந்த தாங்கள், அவர்களின் தாமரை மலர் போன்ற கைகளில் தாவிப் பாய்ந்தீர்கள். அத்தகைய தங்களை நமஸ்காரம் செய்கிறோம். (8)

பூயோபி கிந்நு க்ருணும: ப்ரணதார்திஹாரீ
கோவிந்த ஏவ பரிபாலயதாத் ஸுதம் நः ।
இத்யாதி மாதரபித்ருப்ரமுகைஸ்–ததீநீம்
ஸம்ப்ரார்திதஸ்–த்வதவனாய விபோ த்வமேவ ॥ 9 ॥

பிரபுவான குருவாயூரப்பா! 'தம்மை வந்தடைந்தவர்களின் துன்பத்தைப் போக்கியருளும் கோவிந்தன்தான் நம்முடைய குழந்தையைத் துன்பங்களினின்றும் காப்பாற்ற வேண்டும். நாம் வேறு என்ன செய்ய முடியும்?' என்றிவ்வாறு குழந்தையான தங்களைக் காப்பாற்றும்படி தாய்-தந்தையர் முதலியோர் தங்களையே வேண்டினார்கள். (9

வாதாத்மகம் தநுஜமேவமயி ப்ரதூநவந்
வாதோத்பவாந் மம கதாந் கிமு நோ துநோஷி ।
கிம் வா கரோமி புநரப்யநிலாலயேஸ
நிஸ்ஸேஷரோகமமநம் முஹுரர்தயே த்வாம் ॥ 10 ॥

பகவானான குருவாயூரப்பா! வாத(காற்றின்) வடிவில் வந்த அஸுரனை இவ்வாறு கொன்றொழிந்த தாங்கள் வாதத்தினால் உண்டான எனது நோய்களை ஏன் அழிக்காமல் இருக்கிறீர்கள்? நான் என்னதான் செய்வேன்? குருவாயூரப்பா! எனது நோய்கள் முற்றிலும் தீருமாறு அருள்புரிய மீண்டும் மீண்டும் வேண்டுகிறேன். (10

நாற்பத்து நான்காவது தசகம்

திருப்பெயர் சூட்டுதல்

கூடம் வஸுதேவ கிரா கர்தும் தே நிஷ்க்ரியஸ்ய ஸம்ஸ்காராந் ।
ஹ்ருத்கத–ஹோரா–தத்வோ கர்கமுநிஸ்–த்வத்க்ருஹம் விபோ கதவாந் ॥ 1 ॥

பிரபுவே! வஸுதேவர் சொற்படி ஜோதிட நூல் வல்லுநரான கர்க்க முனிவர் எவ்வித கர்மாவுமற்ற தங்களுக்குப் பெயர் சூட்டுதல் (நாமகரணம்) முதலிய சடங்குகளை ஒருவருமறியாதவாறு செய்வதற்காகத் தங்கள் வீட்டிற்கு வந்தார். (1)

நந்தே3ாத3ஹ நந்தி3தாத்மா ப்3ருந்தி3ஷ்டம் மாநயந்நமும் யமிநாம் ।
மந்த3ஸ்மிதார்த்3ரமுசே த்வத் ஸம்ஸ்காராந் விதா4துமுத்ஸுகீ4: ॥ 2 ॥

அப்பொழுது மனம் மகிழ்ந்த நந்தகோபன் (குழந்தைக்குப் பெயரிடல் முதலிய மங்களச் சடங்குகளைச் செய்ய) ஆவல் கொண்டு புன்முறுவல் பூத்து நிற்கும் முனிவர்களில் சிறந்த கர்க்க முனிவரை உரிய முறையில் உபசரித்து, குழந்தையான தங்களுக்குச் செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்களைச் செய்யுமாறு வேண்டிக் கொண்டார். (2)

யது3வம்ஸாசார்யத்வாத் ஸுநிப்3ருத–மித3மார்ய கார்யமிதி கத2யந் ।
கு3ர்கே3ா நிர்கு3தபுளகஸ்–சக்ரே தவ ஸாக்3ரஜஸ்ய நாமாநி ॥ 3 ॥

அப்பொழுது தளிர் போன்ற தங்களது திருமேனியைத் தீண்டியதால் மயிர்க்கூச்செறிந்து நிற்கும் கர்க்க முனிவர் (நந்தகோபரிடம்), 'ஐயா! யதுகுலத்திற்கு ஆசிரியனாக இருப்பதால் நான் இதை (குழந்தைக்குப் பெயரிடுதலை) மிகவும் *ரகசியமாகச் செய்ய வேண்டும்' என்று கூறி, தமையனோடு கூடிய தங்களுக்கு நாமகரணம் (பெயர் சூட்டுதலைச்) செய்தார். (3)

* ரகசியமாக – வஸுதேவர், நந்தகோபர் இவ்விருவருடைய நட்பை நினைத்தும், யோகமாயை கூறியதால் தேவகியின் எட்டாவது குழந்தை பெண்ணாக இருக்க முடியாது என்பதை நினைத்தும், கம்ஸன் ஐயம் கொண்டு இக்குழந்தையைக் கொல்ல முயற்சி செய்யலாமல்லவா என்று எண்ணியும் ரகசியமாகப் பெயர் சூட்டினார்.

கத2மஸ்ய நாம கு3ர்வே ஸஹஸ்ரநாம்நோ ஹ்யநந்தநாம்நோ வா ।
இதி நூநம் கு3ர்கு3முநிஸ்சக்ரே தவ நாம நாம ரஹஸி விபே4ா ॥ 4 ॥

பிரபுவே, குருவாயூரப்பா! 'ஆயிரம் திருநாமங்களையும், அளவிலா திருநாமங்களையும் கொண்ட இவனுக்கு நான் எப்படிப் பெயர் சூட்டுவேன்? எந்தப் பெயரைச் சூட்டுவேன்?' என்று வியந்த கர்க்க முனிவர் ரகசியமாகத் தங்களுக்குப் பெயர் சூட்டினார் (என்று கருதுகிறேன்). (4)

க்ருஷி–தா3துணகாராப்3யாம் ஸத்தாநந்த3ாத்மதாம் கிலாபி4லபத் ।
ஜகத்3த்3க்–கர்ஷித்வம் வா கத2யத்3ருஷி: க்ருஷ்ணநாம தே வ்யதநோத் ॥ 5 ॥

'க்ருஷி' என்ற வினையடிச் சொல்லையும், 'ண' என்ற எழுத்தையும் கூட்டவே 'கிருஷ்ணன்' என்ற சொல் உண்டாகிறது. 'க்ருஷி' என்ற வினையடிச் சொல் 'ஸத்' என்பதையும், 'ண' என்ற எழுத்து 'ஆனந்தம்' என்பதையும் குறிக்கின்றன. ஆக 'க்ருஷி', 'ண' என்ற இரண்டும் புணர ஸத் சித் ஆனந்தம் ஆகிய பரமாத்மாவான பரமனே 'கிருஷ்ணன்' என்றாகிறது. இக்கருத்தை மனதில் கொண்டோ அல்லது அகில உலகின் பாவங்களையும் களைபவர் என்ற தன்மையை நினைத்தோ, தங்களுக்கு 'கிருஷ்ணன்' என்ற பெயரைச் சூட்டினார். (5)

அந்யாம்ஸ்ச நாமபே4த3ாந் வ்யாகு3ர்வந்நக்3ரஜே ச ராமாதீ3ந் ।
அதிமாநுஷாநுபா4வம் ந்யகா3த3த் த்வாமப்ரகாஸயந் பித்ரே ॥ 6 ॥

தங்களுக்குள்ள வேறு பல பெயர்களையும், தங்கள் தமையனுக்கு 'ராமன்' முதலிய வேறு பல பெயர்கள் உள்ளதையும் நன்கு விளக்கிக் கூறி, (அந்த கர்க்க முனிவர்) தாங்கள்

ஸ்ரீபகவானே என்பதை வெளிப்படுத்தாது, 'மனித இயற்கையை மீறிய பெருமையுடையவர்கள் இக்குழந்தைகள்' என்பதை மட்டும் கூறிச் சென்றார். (6)

ஸ்நிஹ்யதி யஸ்தவ புத்ரே முஹ்யதி ஸ ந மாயிகை: புந: ஸோகை: ।
த்ருஹ்யதி ய: ஸ து நஶ்யேத்யத்தவதத்தே மஹத்வம்–ருஷிவர்ய: ॥ 7 ॥

அந்த முனிபுங்கவர் தங்கள் பெருமையைப் பற்றி (நந்தகோபரிடம்) பின்வருமாறு உரைத்தார். 'எந்த ஒருவன் தங்கள் மகனிடம் அன்பு செலுத்துகிறானோ (பக்தி செய்கிறானோ), அவன் (உலகில்) மாயையினாலும், (அதனால் உண்டாகும்) துன்பங்களினாலும் கலக்கமுறுவதில்லை. எவன் பகைமை கொள்கிறானோ, அவன் அழிவது உறுதி.' (7)

ஜேஷ்யதி பஹ்வதர–தைத்யாந் நேஷ்யதி நிஜபந்து4லோக–மமலபத3ம் ।
ஶ்ரோஷ்யதி ஸுவிமலகீர்தீரஸ்யேதி ப4வத்3விபூ4திம்–ருஷிரூசே ॥ 8 ॥

'இக்குழந்தை பலபல அஸுரர்களை வெல்வான். உற்றார்–உறவினர்களைக் களங்கமற்ற பரமபதத்திற்கு அழைத்துச் செல்வான். இவனது மாசற்ற புகழை உலகமெல்லாம் கேட்கும்' என்றும் தங்களது பெருமைகளையெல்லாம் கர்க்க முனிவர் கூறினார். (8)

அமுநைவ ஸர்வது3ர்க3ம் தரிதாஸ்த3 க்ருதாஸ்த3மத்ர திஷ்டத்3வம் ।
ஹரிரேவேத்யநபி4லபந்நித்யாதி3 த்வாமவாணயத் ஸ முநி: ॥ 9 ॥

இக்குழந்தை பகவான் ஸ்ரீஹரியேதான் என்று வெளிப்படையாகச் சொல்லாமல் சொல்லி, 'இக்குழந்தையால் நீங்கள் துன்பங்கள் அனைத்தையும் கடப்பீர்கள். இக்குழந்தையை நம்பியிருங்கள்' என்று தங்களை கர்க்க முனிவர் மிகவும் புகழ்ந்தார். (9)

க3ர்கே3ऽத3 நிர்க3தேऽஸ்மிந் நந்தி3த–நந்த3ாதி3–நந்த்3யமாநஸ்த்வம் ।
மத்3க3த3–முத்3க3த–கருணோ நிர்க3மய ஸ்ரீமருத்புராதீ4ஶ ॥ 10 ॥

குருவாயூரப்பா! கர்க்க முனிவர் இவ்வாறு கூறிவிட்டு, (அங்கிருந்து) சென்றபின் நந்தகோபன் முதலியவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்து தங்களைச் சீராட்டிப் பாராட்டினார்கள். அப்படிப்பட்ட தாங்கள் கருணைகூர்ந்து எனது நோய்களைப் போக்கியருள வேண்டுகிறேன். (10)



நாற்பத்தைந்தாவது தசகம்

தீராத விளையாட்டுப் பிள்ளை

அயி ஸபு4ல முராரே பாணிஜாநு–ப்ரசாரை:
கிமபி ப4வநபு4காந்ந் பூ4ஷயந்தௌ ப4வந்தௌ ।
சலித–சரணகஞ்ஜௌ மஞ்ஜுமஞ்ஜீரமிஞ்ஜா–
ஶ்ரவண–குதுக–பா4ஜௌ சேரதுஶ்–சாரு வேகா3த் ॥ 1 ॥

பலராமனுடன் கூடிய ஸ்ரீகிருஷ்ணா! முரன் என்ற அரக்கனின் பகைவனே! தாங்களும், பலராமனும் கைகளையும், முழந்தாள்களையும் ஊன்றித் தவழ்ந்து வீட்டின் எல்லா இடங்களையும் அழகுறச் செய்தீர்கள். அவ்வாறு தவழும்போது அசைகின்ற தாமரைகள் போன்ற திருவடிகளில்

இருந்த சலங்கைகளின் இனிய நாதத்தைக் கேட்க விரும்பி மேலும் விரைவாகத் தவழ்ந்து சென்றீர்கள். (1)

ம்ருது³ ம்ருது³ விகஸந்தா–வந்மிஷத்³தந்தவந்தௌ
வத³ந–பதிதகேஸௌ த்³ருஶ்–யபாத³ாப்³ஜ–தே³ஸௌ ।
பு⁴ஜ–கு³ளித–கராந்த–வ்யாலகு³த் கங்கணாங்கௌ
மதிமஹரத–முச்சை: பஶ்யதாம் விஶ்வ–ந்ரூணாம் ॥ 2 ॥

நீங்கள் இருவரும் கொஞ்சிக் கொஞ்சிச் சிரிக்கும்போது சிறிதே முளைத்தெழுந்த முத்துப்பற்கள் வெளியே தெரிகின்றன. முன்னெற்றி மயிர்கள் திருமுகத்தை மறைக்கின்றன. தவழும்போது (வஜ்ரம், அங்குசம், சங்கு, சக்கரம் முதலிய இலச்சினைகளால்) அழகு மிளிரும் தங்களுடைய உள்ளங்கால்கள் அழகாகத் தெரிகின்றன. மேற்கையினின்றும் நழுவி மணிக்கட்டுகளில் வந்து தடையுற்று நிற்கும் வளைகளின் தழும்புகள் அழகுற விளங்குகின்றன. இத்தகைய சிறப்பினையுடைய நீங்களிருவரும் உங்களைக் காணும் மக்களின் மனதைக் கவர்ந்தீர்கள். (2)

ஒப்புநோக்குக:– ஒரு காலிற்சங்கு ஒரு காலிற்சக்கரம் உள்ளடி பொறித்தமைந்த
இரு காலுங் கொண்டங் கங்கெழுதினாற் போல் இலச்சினைப் பட நடந்து
(பெரியாழ்வார் திருமொழி 1–8–6)

அநுஸரதி ஜநௌகே³ கௌதுக–வ்யாகுலாக்ஷே
கிமபி க்ரு²தநிநாத³ம் வ்யாஹஸந்தௌ த்³ரவந்தௌ ।
வலித–வத³நபத்³மம் ப்ரு²ஷ்ட³தோ த³த்த–த்³ருஷ்டீ–
கிமிவ ந வித³தா⁴தே³² கௌதுகம் வாஸுதே³வ ॥ 3 ॥

வாஸுதேவனே! மிக்க வியப்பினால் மலர்ந்தசைகின்ற கண்களோடு மக்கள் திரள் தங்களைப் பின் தொடர்ந்து வருகையில் இனிய ஒலி உண்டாகுமாறு சிரித்துக் கொண்டு, (பின் தொடர்ந்து வருகிறார்களா? எனத்) தாமரை போன்ற முகத்தைத் திருப்பிப் பார்த்துக் கொண்டே ஓடினீர்கள். மக்களுக்குத் தாங்கள் எத்தகைய மகிழ்ச்சியைத்தான் அளிக்கவில்லை? (3)

த்³ருத–கு³திஷு² பதந்தா–வுத்தி²தௌ லிப்தபங்கௌ
தி³வி முநிபி⁴ரபங்கை: ஸஸ்மிதம் வந்த்³யமாநௌ ।
த்³ருதமத³² ஜநீப்⁴யாம் ஸாநுகம்பம் க்³ருஹீதௌ
முஹுரபி பரிரப்⁴தௌ த்³ராக்³யுவாம் சும்பி³தௌ ச ॥ 4 ॥

நீங்களிருவரும் வேகமாக நடக்க முயன்று கீழே விழ, அதனால் அங்குள்ள சேறுபடிந்த திருமேனியோடு எழுவே, அதைக் கண்டு வானவெளியில் (செல்லும்) குற்றமற்ற முனிவர்கள் புன்முறுவலோடு தங்களை வணங்கினார்கள். அப்பொழுது தாய்மார்கள் கருணையோடு தங்களிருவரையும் வேகமாக எடுத்துச் சென்று ஆவலுடன் ஆரத்தழுவி முத்தமிட்டார்கள். (4)

ஸ்நுத–குசப⁴ர–மங்கே த⁴ாரயந்தீ ப⁴வந்தம்
தரளமதி யஶோதா³ ஸ்தந்யத³ா த³ந்யத³ந்யா ।
கபடபஶுப மத்⁴யே முக்³த⁴ஹாஸாங்குரம் தே
த³ஶந–முகுள–ஹ்ருத்³யம் வீக்ஷ்ய வக்த்ரம் ஜஹர்ஷ ॥ 5 ॥

(தங்களுக்குப் பாலூட்டுவதற்காக) மடிமேல் தங்களை வைத்துக் கொண்டு அன்பினால் கசிந்த உள்ளத்துடன் பால் சுரந்து நிற்கும் பெரிய திருமுலைத் தடங்களால் தங்களுக்குப் பாலூட்டிய யசோதையன்றோ பெரும்பேறு பெற்றவள்! இடையர் வேஷம் பூண்ட மாயோனே! பால் குடித்துக் கொண்டிருக்கும்போது இடையிடையே புன்முறுவலாலும், பூ மொட்டுபோல் மிளிரும் பற்களாலும் அழகாக விளங்கும் தங்கள் திருமுகத்தைக் கண்டு அந்த யசோதை மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். (5)

தத₃னு சரணசாரீ த₃ாரகை: ஸாகமாராந்–
நிலயததிஷு கே₂லந் ப₃ாலசாபல்யஶாலீ ।
ப₄வந–ஸுகபிடாலாந் வத்ஸகாம்ஶ்சாநுத₄ாவந்
கத₂மபி க்ருதஹாஸை:–கே₃ாபகை:–வாரிதோ:பூ₄: ॥ 6 ॥

பிறகு (சில நாட்களில்) தாங்கள் கால் கொண்டு நடக்கத் தொடங்கவே, கோகுலச் சிறார்களுடன் அக்கம்பக்கமுள்ள வீடுகளில் சென்று விளையாடி சிறுவர்களுக்கே உரிய துடுக்கான செயல்களைச் செய்தீர்கள். (மேலும்) அங்கு வளரும் கிளிகள், பூனைகள், கன்றுகள் இவற்றைப் பின்தொடர்ந்து ஓடிய தங்களைக் கண்ட கோபர்கள் சிரித்துக் கொண்டே பெரிதும் முயன்று உங்களைத் தடுத்தார்கள். (6)

ஹலத₄ர–ஸஹிதஸ்–த்வம் யத்ர யத்ரோபயாதோ
விவஶ–பதிதநேத்ராஸ்–தத்ர தத்ரைவ கே₃ாப்ய: ।
விக₃லித–க்₃ருஹக்ருத்யா விஸ்ம்ருதாபத்ய–ப்₄ருத்யா
முரஹர முஹுரத்யந்தாகுலா நித்யமாஸந் ॥ 7 ॥

முரன் என்ற அரக்கனை வதம் செய்த ஸ்ரீகுருவாயூரப்பா! பலராமனோடு நீங்கள் எங்கெங்கெல்லாம் சென்றீர்களோ, அங்கங்கெல்லாம் கோபியர்கள் மெய்மறந்து கண் இமையாது தங்களையே கண்டவண்ணம் வீட்டு வேலைகளையும் விடுத்துக் குழந்தைகளையும், பணியாட்களையும்கூட மறந்து தினமும் பரவசமடைந்து நின்றார்களாமே! (7)

ப்ரதிநவ–நவநீதம் கே₃ாபிகா–த₃த்தமிச்ச₂ந்
கலபத₃முபக₃ாயந் கோமளம் க்வாபி ந்ருத்யந் ।
ஸத₃ய–யுவதி–லோகைரர்பிதம் ஸர்பிரஶ்நந்
க்வசந நவ–விபக்வம் து₃க்த₄மப்யாபிப₃ஸ்த்வம் ॥ 8 ॥

கோபியர்கள் அளிக்கும் புத்தம்புதிய வெண்ணெயைப் பெற ஆசை கொண்டு சில இடங்களில் மழலை மொழியில் பாடிக் கொண்டும், வேறு சில இடங்களில் அழகாக நடனம் ஆடிக் கொண்டும் அன்புமிக்க இளம் பெண்கள் கொடுக்கும் வெண்ணெயைத் தின்று கொண்டும், மற்றும் சில இடங்களில் புதிதாக நன்கு காய்ச்சிய பாலை பருகிக் கொண்டும் விளையாடினீர்கள். (8)

மம கு₃லு ப₃லிகே₃ஹே யாசநம் ஜாதமாஸ்தா–
மிஹ புநரப₃லாநாமக்₃ரதோ நைவ கு₄ர்வே ।
இதி விஹிதமதி: கிம் தே₃வ ஸந்த்யஜ்ய யாஞ்சாம்
த₃தி₄–க்₄ருத–மஹரஸ்–த்வம் சாருணா சோரணேந ॥ 9 ॥

'முன்பொருகால் மஹாபலியின் இல்லத்தில் யாசிக்க நேர்ந்தது அல்லவா? அதுவே போதுமப்பா! இங்கு மறுபடியும் மெல்லியலாரிடம் அதைச் செய்யவே மாட்டேன்' என்று ஒருவேளை முடிவு செய்து கொண்டு, தாங்கள் யாசித்தலை விட்டுவிட்டு விந்தையான திருட்டு வழியில் தயிரையும், நெய்யையும் கவர நினைத்தீர்களோ? தேவதேவனே! உண்மையை யாரே அறிவர்? (9)

தவ தத்³தி³க்ருதமோஷே கே³ஷ்யோஷாஜநாநா–
மப³ஜ்ஜத ஹ்ருதி³ ரோஷோ நாவகாஶம் ந ஶோக: ।
ஹ்ருத³யமபி முஷித்வா ஹர்ஷஸிந்தெ³ள நயத³ஸ்த்வம்
ஸ மம ஶமய ரோகா³ந் வாதகே³ஹாதி⁴நாத² ॥ 10 ॥

ஸ்ரீகுருவாயூரப்பா! தாங்கள் தயிரையும், வெண்ணெயையும், நெய்யையும் திருடியபோதிலும் இடைச்சேரியில் வாழும் பெண்களின் உள்ளத்தில் சிறிதேனும் சினமோ, வருத்தமோ தோன்றவில்லை. ஏனெனில் நீங்கள் அவர்களது உள்ளத்தையும் அல்லவா கவர்ந்து கொண்டு, அவர்களை ஆனந்தக் கடலில் மூழ்கடித்து விட்டீர்கள்! இவ்வாறு திருவிளையாடல் புரிந்த தாங்கள் எனது நோய்களைப் போக்கியருள வேண்டுகிறேன். (10)

❖*❖*❖

நாற்பத்தாறாவது தசகம்

மண் தின்ற மாயோன்

அயி தே³வ புரா கில த்வயி ஸ்வயமுத்தாநஶயே ஸ்தநந்த⁴யே ।
பரிஜ்ரும்ப⁴ணதோ வ்யபாவ்ருதே வத³நே விஶ்வமசஷ்ட வல்லவீ ॥ 1 ॥

தேவதேவனே! முன்பொரு சமயம் தாங்கள் யசோதையின் மடியில் மல்லாந்து படுத்துப் பால் அருந்திக் கொண்டிருந்தபோது கொட்டாவி வரவே வாயைத் திறந்தீர்கள். அப்போது தங்களது திறந்த வாயில் உலகமனைத்தையும் யசோதை கண்டாளல்லவா? (1)

புநரப்யத² ப³ாலகை: ஸமம் த்வயி லீலாநிரதே ஜக³த்பதே ।
ப³லஜ்ஞய–வஞ்சநக்ருத்³ய தவ ம்ருத்³பே⁴ாஜந–மூசுரர்ப⁴கா: ॥ 2 ॥

உலக நாயகனே! வேறொரு சமயம் தாங்கள் மற்ற இடைச்சிறுவர்களுடன் பழங்களைப் பறித்து விளையாடுகையில், அவர்கள் சேர்த்து வைத்திருந்த பழங்களை நீங்கள் ஏமாற்றி எடுத்துக் கொண்டதால் சினம் கொண்ட அக்குழந்தைகள் நீங்கள் மண் தின்றதாக உங்கள் தாயிடம் கோள் சொன்னார்களாமே! (2)

அயி தே ப்ரளயாவதெ³ள விபே⁴ா க்ஷிதிதோயாதி³–ஸமஸ்த–ப⁴க்ஷிண: ।
ம்ருது³பாஶநதோ ருஜா ப⁴வேதி³தி பீ⁴தா ஜநீ ஸுகோப ஸா ॥ 3 ॥

நிலம், நீர் முதலிய ஐம்பெரும் பூதங்களை முற்றுமாக பிரளய காலத்தில் விழுங்குகின்ற பிரபுவே! மண்ணைத் தின்றதால் தங்களுக்கு நோய் வருமே என்று பயந்த தங்கள் தாய் யசோதை கோபம் கொண்டாள். (இவ்வாறு கேட்கலானாள்.) (3)

ஒப்புநோக்குக:– மண்ணும் மலையும் கடலும் உலகு ஏழும்
உண்ணும் திறத்து மகிழ்ந்து உண்ணும் பிள்ளைக்கு

(பெரியாழ்வார் திருமொழி 1–2–18)

அயி துர்விநயாத்மக த்வயா கிமு ம்ருத்ஸா ப₃த வத்ஸ ப₄க்ஷிதா ।
இதி மாத்ருகி₃ரம் சிரம் விபே₄ா விதத₃ாம் த்வம் ப்ரதிஜ்ஞ்ஞிஷே ஹஸந் ॥ 4 ॥

'அடே! அடங்காத பயலே! குழந்தாய்! நீ மண் தின்றாயா என்ன? சொல்!' என்று (உன்) தாயார் மிரட்டிக் கேட்டபோது, பிரபுவே! நீங்கள் வெகுநேரம் சிரித்துவிட்டு (அவர்கள் கூறியது) 'பொய்' என்று சத்தியம் செய்தீர்களாமே! (4)

அயி தே ஸகலைர்விநிம்ஸிதே விமதிம்ஸேத்₃–வத₃நம் வித₃ார்யதாம் ।
இதி மாத்ருவிப₃ர்த்ஸிதோ முக₂ம் விகஸத்பத்₃மநிப₄ம் வ்யத₃ாரய: ॥ 5 ॥

அப்போது உங்கள் தாய், 'அடே! எல்லோரும் நீ மண் தின்றதாக உறுதியாகக் கூறுகின்றார்களே! நீ அதை ஒப்பவில்லை எனில் உன் வாயைத் திறந்து காட்டு' என்று அதட்டினாள். அப்போது நீங்கள் மலர்ந்த தாமரை போன்ற திருவாயைத் திறந்து காட்டினீர்கள். (5)

அபி ம்ருல்லவ த₃ர்ஸநோத்ஸுகாம் ஜநநீம் தாம் ப₃ஹு தர்பயந்நிவ ।
ப்ருதி₂வீம் நிகி₂லாம் ந கேவலம் பு₄வநாந்யப்யக₂ி₂லாந்–யதீ₃த்₃ருஸ: ॥ 6 ॥

தங்கள் திருவாயில் சிறிதளவாவது மண் இருக்கும் என்று எதிர்பார்த்திருந்த அந்தத் தாயை மிகவும் மனநிறைவு கொள்ளச் செய்பவர் போல், இம்மண்ணுலகு மட்டுமின்றி அனைத்து உலகங்களையும் (தங்கள் திருவாயில்) காண்பித்தீர்கள். (6)

ஒப்புநோக்குக:–

விண் கண்டாள் விண்வளைக்கும் வெண்கதிரும் தண்சுடரும் விளங்கக் கண்டாள்
மண் கண்டாள் மண்வளைத்த மாகடலும் பேருயர் மால்வரையும் கண்டாள்
தண் கொண்ட வெண்டோட்டுத்தவள நெடுவரை கண்டாள் தனையுங் கண்டாள்
பண் கொண்ட வண்டரற்றும் பசுந்துளவோன் இவனெனவே பரவினாளால்

(ஆரியப்பப் புலவர் பாகவதம், சகடமுதைத்த அத்தியாயம் – 20)

குஹஸித்₃வநமம்பு₄தி₄: க்வசித் க்வசித₃ப்₄ரம் குஹஸித்₃ரஸாதலம் ।
மநுஜா த₃நுஜா: க்வசித் ஸுரா தத்₃ருஸே கிம் ந தத₃ா த்வத₃ாநநே ॥ 7 ॥

அப்பொழுது தங்கள் திருவாயில் ஓரிடத்தில் காடுகளையும், ஓரிடத்தில் கடல்களையும், வேறொரு இடத்தில் ஆகாயத்தையும், மற்றுமோரிடத்தில் பாதாள உலகையும், சில இடங்களில் மனிதர்கள், அரக்கர்கள், தேவர்கள் என்றிவ்வாறு (தங்கள் தாய்) எதைத்தான் காணவில்லை? (அதாவது அனைத்துப் பிரம்மாண்டங்களையும் கண்டாள் என்றபடி.) (7)

ஒப்புநோக்குக:–

வாயுள் வையகங் கண்ட மடநல்லார் ஆயர் புத்திரனல்லன் அருந்தெய்வம்
பாயசீருடைப் பண்புடை பாலகன் மாயனென்று மகிழ்ந்தனர் மாதரே.

(பெரியாழ்வார் திருமொழி 1–7–7)

கலஸாம்பு₃தி₄–ஸாயிநம் புந: பரவைகுண்ட₂–பத₃ாதி₄வாஸிநம் ।
ஸ்வபுரஸ்ச நிஜார்ப₄காத்மகம் கதித₃ா த்வாம் ந து₃த்₃ருஸு: ஸா முகே₂ ॥ 8 ॥

குருவாயூரப்பா! தங்கள் தாயார் தங்கள் திருவாயில் தங்களைத் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட பிரானாகவும், பரமபதத்தில் வீற்றிருக்கும் வைகுண்டநாதனாகவும், தனக்கு முன்

தன் பிள்ளையாக நிற்பதையும் கண்டாள். இப்படி எத்தனை எத்தனை விதமாகத்தான் தங்களைக் கண்டாளோ! (அதாவது தங்களது பல வடிவுகளையும் கண்டாள்.) (8)

விகஸத்$_3$–பு$_4$வநே முகே$_2$ரத$_3$ரே நநு பூ$_4$யோঽபி தத$_2$ாவித$_4$ாநந: ।
அநயா ஸ்பு$_2$டமீக்ஷிதோ ப$_4$வாநநவஸ்த$_2$ாம் ஜகதாம் ப$_3$தாதநோத் ॥ 9 ॥

தங்கள் திருவாயினுள்ளே புவனங்களெல்லாம் காண்கையில் அதில் மேலும் இன்னொரு முகம், வாய் மற்றும் புவனங்கள், மறுபடியும் அதனுள் இன்னொரு முகம், வாய், புவனங்கள் என்றிப்படி (ஒன்றுக்கு மேல் மற்றொன்று என்று கண்ணாடிக்குள் கண்ணாடி காண்பதுபோல்) வரிசை வரிசையாக யசோதை கண்டாள். இவ்வாறு உலகின் எல்லையற்ற தன்மையை காட்டியருளினீர்கள். (9)

த்$_4$ருத–தத்வதி$_4$யம் தத$_3$ா க்ஷணம் ஜநநீம் தாம் ப்ரணயேந மோஹயந் ।
ஸ்தநமம்ப$_3$ தி$_3$ஶேத்யுபாஸஜந் ப$_4$க$_3$வந்–நத்$_3$பு$_4$தப$_3$ால பாஹி மாம் ॥ 10 ॥

விந்தையான குழந்தை வடிவிலே தோன்றிய குருவாயூரப்பா! (இவ்வாறான காட்சியைக் கண்ட) யசோதை 'ஸத் சித் ஆனந்த உருவனான பரப்பிரம்மமே தனக்குக் குழந்தையாகப் பிறந்துள்ளான்' என்ற உண்மையை அறிந்தாள். ஆனால் சிறிது நேரத்திலேயே தாங்கள் அவளைப் புத்திர வாத்ஸல்யத்தினால் மோகமடைய (மயங்க)ச் செய்து 'அம்மா! பால் தாருங்கள்' என்று அவள் மடியில் ஏறி அமர்ந்தீர்கள். அத்தகைய தாங்கள் என்னைக் காத்தருள வேண்டுகிறேன். (10)



நாற்பத்தேழாவது தசகம்

உரலில் கட்டுண்ட கண்ணன்

ஏகதா$_3$ த$_3$தி$_4$விமாத$_2$–காரிணீம் மாதரம் ஸமுபஸேதி$_3$வாந் ப$_4$வாந் ।
ஸ்தந்ய–லோலுபதயா நிவாரயந்–நங்கமேத்ய பபிவாந் பயோத$_4$ரௌ ॥ 1 ॥

ஒரு சமயம் தயிர் கடைந்து கொண்டிருக்கும் தாயாரிடம் பால் குடிக்க விருப்பமுற்று அவள் மடியில் ஏறியமர்ந்து தயிர் கடைவதைத் தடுத்து நிறுத்திப் பால் குடித்தீர்கள். (1)

அர்த$_4$பீத–குசகுட்$_3$மலே த்வயி ஸ்நிக்$_3$த$_2$ஹாஸ–மது$_4$ராநநாம்பு$_3$ஜே ।
து$_3$க்த$_3$மீஶ த$_3$ஹநே பரிஸ்ருதம் த$_3$ர்துமாஸ்ய ஜநநீ ஜக$_3$ாம தே ॥ 2 ॥

ஈசனே! தாமரை மலர் போன்ற திருமுகத்தில் அழகிய புன்முறுவலுடன் தாங்கள், தாமரை மொட்டுகள் போன்ற நகில்களில் பால் பாதி அருந்தி இருக்கையில், தீயில் பொங்கி வழியும் பாலை எடுத்து வைப்பதற்காகத் தங்கள் தாய் (தங்களை மடியிலிருந்து கீழே இறக்கி வைத்துவிட்டு) விரைவாகச் சென்றாள். (2)

ஸாமிபீத–ரஸப$_4$ங்க$_3$–ஸங்க$_3$த–க்ரோத$_4$ப$_4$ார–பரிப்லு$_3$தசேதஸா ।
மந்த$_2$–த$_3$ண்ட$_3$–முபக்ருஹ்ய பாடிதம் ஹந்த தே$_3$வ த$_3$தி$_4$ப$_4$ாஜநம் த்வயா ॥ 3 ॥

தேவனே! பால் பாதி அருந்தி இருக்கையில் (அதாவது மனமார முழுமையாகப் பாலை அருந்தி முடியாத நிலையில்) ஏற்பட்ட தடங்கலினால் சினம் கொண்ட தாங்கள் செய்வதறியாது (அங்கிருந்த) மத்தை எடுத்துத் தயிர்ச்சட்டியை உடைத்தீர்கள். (3)

உச்சலத்₃ த்₄வநிதமுச்சகைஸ் ததா₃ ஸந்நிஶம்ய ஜநநீ ஸமாத்₃ருதா ।
த்வத்₃யஶோ–விஸரவத்₃ த₃தி₃ர்ஸ ஸா ஸத்₃ய ஏவ த₃தி₄ விஸ்ருதம் க்ஷிதௌ ॥ 4 ॥

சட்டியுடைந்த சத்தத்தைக் கேட்டு விரைவாக ஓடி வந்த தங்கள் தாய் தங்கள் புகழ் பரவியிருப்பதுபோல் தரையில் எங்கும் பரவிச் சிதறிக் கிடந்த தயிரை மட்டுமே கண்டாள் (தங்களைக் காணவில்லை என்பது கருத்து). (4)

வேத₃மார்க₃–பரிமார்கி₃தம் ருஷா த்வாமவீக்ஷ்ய பரிமார்க₃யந்த்யஸௌ ।
ஸந்த₃த₃ர்ஶ ஸுக்ருதிந்யுலூக₃லே தீ₃யமாந–நவநீத–மோதவே ॥ 5 ॥

பகவானையே என்றும் நினைந்துருகும் முனிவர்களும், கர்ம காண்டம், உபாஸனா காண்டம், ஞான காண்டம் என்கிற முக்காண்டங்களையும் தன்னுள் அடக்கிய வேதநெறிகளால் தேடிக் காண இயலாத தங்களைப் பெரும் புண்ணியம் செய்த யசோதை (தான் கீழே இறக்கிவிட்ட இடத்தில் காணாது) மிகுந்த சினத்துடன் தேடிப் போக(ப் புறக்கடையில்) உரல் மேல் அமர்ந்து கொண்டு பூனைக்கு வெண்ணெய் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கக் கண்டாள். (5)

த்வாம் ப்ரக்ருஹ்ய பு₄த பீ₄தி–பா₄வநா–பா₄ஸுராநந–ஸரோஜ–மாஸு ஸா ।
ரோஷ–ரூஷிதமுகீ₂ ஸகீ₂புரோ பந்த₄நாய ரஸநா–முபாத₃தே₄ ॥ 6 ॥

தாய் அடிப்பாளோ என்ற பயத்தினால் மேலும் அழகாக விளங்கும் தாமரை போன்ற முகத்தை உடைய தங்களை, கோபத்தால் சிவந்த முகத்தையுடைய யசோதை (தன்) தோழிகளின் முன்னிலையில் வெகுவேகமாகப் பற்றிக் கொண்டு (உரலில் சேர்த்துக்) கட்டுவதற்காகக் கயிற்றை எடுத்துக் கொண்டாள். இது வியப்பல்லவா? (6)

ஒப்புநோக்குக:– கண்ணன் பயந்ததைத் தியானிக்க நமது பயம் போகும். அவள் கட்டுண்டதைத் தியானிக்க நமது பந்தம் (கட்டும்) விலகும். ஆகவே எப்படி நினைக்கிறோமோ அப்படியே ஆவோம் என்கிற 'தத்க்ரது நியாயம்' (கண்ணன் விஷயத்தில் நேர் எதிர்மாறாக நடந்ததால்) உபநிஷத்தாகிய அரணியத்தில் போய் ஒளிந்து கொண்டுவிட்டது என்று வர்ணிக்கிறார் ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகர்.

பத்₃தம் ததா₃ பு₄வயதாம் முகுந்த₃–மயத்ந விச்சே₂திநி கர்மபந்தே₂!
தபஸ்வநீ தத்க்ரது நீதிராத்₄யா ஸவ்ரீ₃ மாரண்ய கதா₂ஸு தஸ்தெ₂ள

(யாதவாப்யுதயம் 4/35)

பந்து₄மிச்ச₂தி யமேவ ஸஜ்ஜநஸ்–தம் பு₄வந்தமயி பந்து₄மிச்ச₂தீ ।
ஸா நியுஜ்ய ரஸநாகு₃ணாந் பஹூந்ச் த்₃வயங்கு₃லோநமகி₃லம் கிலைக்ஷத ॥ 7 ॥

சாது பக்த ஜனங்கள் (மோக்ஷத்தில் விருப்பங்கொண்டு) தங்களையே நெருங்கிய உறவினனாகப் பிணிக்க விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட தங்களை அந்த யசோதை கயிற்றினால் கட்ட விரும்பிப் பல கயிறுகளை ஒன்று சேர்த்து இணைத்ததோறும், ஒவ்வொரு தடவையும் அவை இரண்டங்குலம் குறைவாய் இருக்கவே கண்டாள். (இங்கு 'பந்தும்' என்ற சொல் உறவினன், கட்டுதல், அடைக்கலம் என்ற மூப்பொருள் தோன்றும்படி சிலேடையாக அமைந்துள்ளது காண்க. பகவானை அளப்பதற்கு எந்த ஸாதனங்களும் குறைபாடு உடையனவே என்று அறிக.) (7)

குறிப்பு:– இக்கருத்து பின்வரும் ஸ்ரீமத்பகவத்கீதை 11/53–ல் காணலாம்.

நாஹம் வேதை₃ர்ந தபஸா ந தா₃நேந ந சேஜ்யயா ।
ஶக்ய ஏவம் விதே₄ த்₃ரஷ்டும் த்₃ருஷ்டவாநஸி மாம் யதா₂ ॥

எவ்வாறு நீ என்னைப் பார்த்தாயோ இவ்விதமான சதுர்புஜம் கொண்ட நான் வேதங்களைக் கறபதால் காணப்பட முடியாதவன்; தவத்தினாலும் காணப்பட முடியாதவன்; தானத்தினாலும் காணப்பட முடியாதவன்; யாகம் செய்வதாலும் காணப்பட முடியாதவன்.

விஸ்மிதோத்ஸ்மித–ஸகீ₂–ஜநேக்ஷிதாம் ஸ்விந்ந–ஸந்ந–வபுஷம் நிரீக்ஷ்ய தாம் ।
நித்யமுக்தவபுரப்யஹோ ஹரே ப₃ந்த₄மேவ க்ருபயாऽந்வமந்யத₂: ॥ 8 ॥

சகல பாவங்களையும் போக்குபவரே! ஹரியே! உடம்பெல்லாம் வியர்த்து சோர்ந்து போன யசோதையைக் கண்ட தோழிகள் வியப்பில் ஆழ்ந்து சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, எதிலும் கட்டுப்படாத நித்திய முக்த புருஷனான தாங்கள் கருணையினால் இரக்கம் கொண்டு அவளுக்குக் கட்டுப்பட்டீர்கள். இதுவன்றோ வியப்பு! (8)

ஸ்தீ₂யதாம் சிரமுலூக₂லே க₂லே–த்யாக₃தா ப₃வநமேவ ஸா யதா₃ ।
ப்ராகு₃லூக₂ல–பி₃லாந்தரே ததா₃ ஸ்பிரர்பித–மத₃ந்நவாஸ்தி₂த₂: ॥ 9 ॥

இவ்வாறு தங்களைக் கட்டிய யசோதை, 'அடே போக்கிரிப் பையா! இந்த உரலிலேயே வெகுநேரம் இப்படியே கட்டுண்டு இரு' என்று சொல்லி வீட்டினுள் திரும்பிச் சென்றாள். அவ்வாறு அவள் சென்றதும், முன்பே வெண்ணெய் திருடும்போது உரல் குழியில் வைத்திருந்த வெண்ணெயைத் தின்று கொண்டு அங்கேயே இருந்தீர்களல்லவா? (9)

யத்₃யபாஶ–ஸ்க₃மோ விபே₄ா ப₃வாந் ஸம்யத: கிமு ஸபாஶயாऽநயா ।
ஏவமாதி₃ தி₃விஜை–ரபி₄ஷ்டுதோ வாதநாத₂ பரிபாஹி மாம் க₃த₃த்ᐪ ॥ 10 ॥

'பிரபுவே, குருவாயூரப்பா! பாசமில்லாதவர்களால் (பற்றற்றவர்களால்) மட்டுமே எளிதாக அடையக்கூடிய தாங்கள் பாசத்தை (கயிற்றை)க் கையில் கொண்ட இந்த யசோதையால் எப்படிக் கட்டப்பட்டீர்கள்?' என்றிவ்வாறு தேவர்களால் துதிக்கப் பெற்ற தாங்கள் என்னை நோயிலிருந்து காப்பாற்றுங்கள். (இங்கு 'பாசம்' என்னும் சொல் கயிறு, பற்று என்ற இரு பொருள்படுமாறு கையாளப்பட்டது காண்க.) (10)

நாற்பத்தெட்டாவது தசகம்

யமளார்ஜுனர்களுக்கு மோக்ஷம் அளித்தல்

முதா₃ ஸுரௌகை₃ஸ்–த்வமுதா₃ர–ஸம்மதை₃–
ருதீ₃ர்ய த₃ாமோத₃ர இத்யபி₄ஷ்டுத: ।
ம்ருதூ₃தர: ஸ்வைர–முலூக₂லே லக₃ந்–
நதூ₃ரதோ த்₃வௌ ஸகுப₄வுதை₃க்ஷத₂: ॥ 1 ॥

மிகவும் மகிழ்ச்சி கொண்ட விண்ணவர்கள் பொங்கியெழும் ஆர்வத்தால் தங்களை 'தாமோதரன்' என்றழைத்துத் துதித்துச் சென்றனர். மிகவும் மிருதுவான வயிற்றையுடைய தாங்கள் தங்கள் விருப்பப்படியன்றோ உரலில் கட்டுண்டீர்கள். (அப்படிப்பட்ட) தாங்கள் அருகிலிருந்த இரண்டு மருத மரங்களைக் கண்டீர்கள். (1)

(தாமம் – கயிறு; உதரம் – வயிறு; தாமோதரன் – கயிறால் கட்டப்பட்ட வயிறு படைத்தவன்.)

ஒப்புநோக்குக:–

'தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன்' (ஆண்டாள் 5)

'பதரப்படாமே பழந்தாம்பால் ஆர்த்த உதரம் இருந்தவாகணீரே' (பெரியாழ்வார் 1/2/9)

'சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்' (மதுரகவியாழ்வார் 1)

பகவானை யசோதை கட்டியது மட்டிலும்தானே பெரியோர்கள் கூறினார்கள். ஆனால், இதோ ஒரு கவி, பகவான் நால்வரால் கட்டப்பட்டான் என்கிறாரே!

வ்யாஸோ ப³ப³ந்த⁴ ஸ முநி: நிஜஸூத்ரஜாலை:
கே³ாத³ா ப³ப³ந்த⁴ மது⁴ரை: ஸ்துதிகுக்திஜாலை: ।
கே³ாபீ ப³ப³ந்த⁴ சுலப⁴ம் க்ருஹ ரஜ்ஜுஜாலை:
ஸஹதே³வோ ப³ப³ந்த⁴ பரமம் நநு ப⁴க்திஜாலை: ॥

குபே³ரஸூநு–நளகூப³ராபி⁴த⁴:
பரோ மணிக்³ரீவ இதி ப்ரத²ாம் க³த: ।
மஹேஶ–ஸேவாதி⁴க³த–ஶ்ரியோந்மதை³ள
சிரம் கில த்வத்³விமுக²ாவகே²லதாம் ॥ 2 ॥

குபேரனுடைய புத்திரர்களான நளகூபரன், மணிக்கிரீவன் இருவரும் சிவபெருமானை ஆராதித்துப் பெருஞ்செல்வம் பெற்றிருந்த கர்வத்தினால் தங்களிடம் பக்தியின்றி நீண்ட காலம் உலகியலில் ஈடுபட்டிருந்தார்கள். (2)

ஸ்ராபக³ாயாம் கில தௌள மதே³ாத்கடௌள
ஸ்ராபக³யத்³–ப³ஹுயௌவதாவ்ருதௌள ।
விவாஸஸௌள கேளிபரௌள ஸ நாரதே³ா
ப³வத்பதை³க–ப்ரவணோ நிரைக்ஷத ॥ 3 ॥

ஒரு சமயம் அவர்களிருவரும் திமிரினால் மெய்மறந்தவர்களாய் உடலில் துணியின்றி கள் குடித்த மயக்கத்தினால் ஆடிப் பாடுகின்ற பல இளம்பெண்களால் சூழப்பட்டு கங்கை ஆற்றில் விளையாடிக் கொண்டிருந்தனர். இதைத் தங்கள் திருவடியில் பக்திபூண்ட நாரத முனிவர் கண்டார். (3)

பி⁴யா ப்ரியாலோக–முபாத்தவாஸஸம்
புரோ நிரீக்ஷ்யாபி மத³ாந்த⁴ தே³தஸௌள ।
இமௌள ப⁴வத்³ப⁴க்த்யுபஶாந்தி–ஸித்³த⁴யே
முநிர்ஜகை³ள ஶாந்திம்ருதே குத: ஸுக²ம் ॥ 4 ॥

நாரதரைக் கண்ட பெண்கள் சபித்துவிடுவாரோ என்ற பயத்தினால் தங்கள் தங்கள் வஸ்திரங்களை எடுத்து உடுத்திக் கொண்டனர். ஆனால் மயக்கத்தால் மதியிழந்த இவர்கள் இருவரும் எதிரில் நிற்கும் முனிவரைக் கண்டும் தங்கள் வஸ்திரங்களை எடுத்துக் கட்டிக் கொள்ளவில்லை. அவ்விருவர்களுக்கும் தங்களிடம் பக்தியும், மன அமைதியும் கிட்டுவதற்காக அவர்களை நாரதர் சபித்தார். மன அமைதி இல்லையேல் சுகம் எவ்வாறு உண்டாகும்? (4)

யுவாமவாப்தெள ககுப$_4$த்மதாம் சிரம்
ஹரிம் நிரீக்ஷ்யாத$_2$ பத$_3$ம் ஸ்வமாப்நுதம் ।
இதீரிதெள தெள ப$_4$வதீ$_3$க்ஷணஸ்ப்ருஹாம்
க$_3$தெள வ்ரஜாந்தே ககுபெ$_4$ள ப$_3$பூ$_4$வது: ॥ 5 ॥

'நீங்களிருவரும் நீண்ட காலம் மருத மரமாக இருக்கக் கடவீர்கள். ஸ்ரீஹரியான பகவானை தரிசனம் செய்து, பின் உங்களுடைய பதவியை மீண்டும் அடைவீர்கள்' எனச் சபித்தார். இவ்வாறு சபிக்கப்பட்ட அவர்களிருவரும் (நாரதருடைய சாபமே தங்களுக்கு அருளாகப் போகிற பான்மையைக் கண்டு) தங்களை தரிசிக்கும் ஆவலுடன் (தாங்கள் அவதரிக்கப் போகும்) கோகுலத்தருகில் மருத மரங்களாகப் பிறவியடைந்தார்கள். (5)

அதந்த$_3$ர–மிந்த்$_3$ரத்$_3$ருயுக$_3$ம் ததா$_2$வித$_4$ம்
ஸமேயுஷா மந்த$_2$ரக$_3$மிநா த்வயா ।
திராயிதோலூக$_2$ல–ரோத$_4$நிர்த்து$_4$தெள
சிராய ஜீர்ணெள பரிபாதிதெள தரூ ॥ 6 ॥

அத்தகைய இரண்டு மருத மரங்களின் இடையில் தாங்கள் உற்சாகத்துடன் தங்களைக் கட்டியுள்ள உரலுடன் மெதுவாகத் தவழ்ந்து சென்றீர்கள். உரல் குறுக்காகத் தகைந்ததால் வெகுகாலமாகி உளுத்துப் போயிருந்த அவ்விரு மரங்களும் ஆடியசைந்து வீழ்த்தப்பட்டன. (6)

அப$_4$ாஜி ஸாகி$_2$த்$_3$விதயம் யதா$_3$ த்வயா
ததை$_3$வ தத்$_3$க$_3$ர்ப$_4$தலாந்நிரேயுஷா ।
மஹாத்விஷா யக்ஷயுகே$_3$ந தத்க்ஷணா–
த$_3$ப$_4$ாஜி கே$_3$விந்த$_3$ ப$_4$வாநபி ஸ்தவை: ॥ 7 ॥

கோவிந்தா! தங்களால் முறிக்கப்பட்ட அவ்விரு மரங்களும் கீழே விழுந்தவுடன், அவற்றின் நடுவிலிருந்து மிகவும் அழகு படைத்த இரண்டு யக்ஷர்கள் தோன்றித் தங்களைத் துதித்தனர். (7)

குறிப்பு:– இங்கு 'அபாஜி' என்ற சொல் முறித்தல், துதித்தல் என்ற இரு பொருளிலும் வருகிறது.

ஒப்புநோக்குக:– பெருமா உரலிற் பிணிப்புண்டு இருந்து அங்கு
இரு மாமருதம் இறுத்த இப்பிள்ளை
குரு மா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார்பு இருந்தவா காணீரே செயிழையீர்! வந்து காணீரே!
(பெரியாழ்வார் 1–3–10)

இஹாந்யப$_4$க்தோऽபி ஸமேஷ்யதி க்ரமாத்$_3$
ப$_3$வந்தமேதெள க$_2$லு ருத்$_3$ரஸேவகெள ।
முநிப்ரஸாதா$_3$த்$_3$ ப$_4$வத$_3$ங்க்$_4$ரிமாக$_3$தெள
க$_3$தெள வ்ருணாநெள க$_2$லு ப$_4$க்திமுத்தமாம் ॥ 8 ॥

சிவபக்தர்களான இவர்கள் நாரத முனிவரின் அருளால் தங்களது திருவடியை அடைந்து உயர்ந்த பக்தியையே வரமாகப் பெற்றுச் சென்றார்கள். இவ்வுலகில் வெவ்வேறு தெய்வங்களை

வணங்குபவரும் கூட படிப்படியாகத் தங்களையே அன்றோ வந்தடைகின்றனர்! (என்பது இதனால் தெரிகிறது.) (8)

குறிப்பு:– இதே கருத்தைப் பின்வரும் ஸ்ரீமத்பகவத்கீதை 9/23–லும் உணர்த்துவது காண்க.

யேऽப்யன்யதே³வதா ப⁴க்தா யஜந்தே ஶ்ரத்³தா⁴யான்விதா: ।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி⁴பூர்வகம் ॥

அர்ஜுனா! பயனை எதிர்பார்ப்பவர்களான எந்த பக்தர்கள் சிரத்தையோடு கூடியவர்களாக இருந்தபோதிலும் மற்ற தேவதைகளை வழிபடுகிறார்களோ, அவர்களும் என்னையே வழிபடுகிறார்கள். ஆனால், அவர்களுடைய வழிபாடு விதிமுறைப்படி உள்ளதன்று (அஞ்ஞானம் நிறைந்தது).

ததஸ்–தரூத்³தா⁴ரண–த்³ராருணாரவ–
ப்ரகம்பி–ஸம்பாதினி கே²பமண்ட³லே ।
விலஜ்ஜித–த்வஜ்ஜநநீ–முகே²க்ஷிணா
வ்யமோக்ஷி நந்தே³ந ப⁴வாந் விமோக்ஷத: ॥ 9 ॥

அதன் பிறகு மரங்களிரண்டும் முறிந்து விழுந்த பயங்கரமான சத்தத்தைக் கேட்டு இடையர் கூட்டம் நடுங்கிக் கொண்டே வந்தது. அப்பொழுது ('தங்களைக் கட்டிவிட்டோமே' என்ற) வெட்கத்தினால் தலை குனிந்து நின்ற தங்கள் தாயின் முகத்தை உற்றுநோக்கிய நந்தகோபர் (உலகியலிலிருந்து) அனைவரையும் விடுவிக்கும் அதாவது முக்தி அளிக்கும் தங்களை(க்கட்டிலிருந்து) விடுவித்தார். (9)

மஹீருஹோர்–மத்⁴யக³தோ ப⁴தார்ப⁴கோ
ஹரே: ப்ரப⁴வா–த³பரிக்ஷதோऽ³ந்தி⁴நா ।
இதி ப்³ருவாணைர்–க³மிதோ க்³ருஹம் ப⁴வாந்
மருத்புராதீ⁴ஶ்வர பாஹி மாம் க³தா³த் ॥ 10 ॥

'இரண்டு மரங்களின் நடுவில் சென்ற இக்குழந்தை ஒரு காயமும் படாமல் தப்பி இருப்பது பகவான் ஸ்ரீஹரியின் அருளால்தான். இதுவன்றோ வியப்பு' என்று சொல்லிக் கொண்டு நந்தன் முதலியவர்கள் தங்களை வீட்டிற்குள் அழைத்துச் சென்றனர். குருவாயூரப்பா! என்னை நோயிலிருந்து காப்பாற்றி அருளுங்கள். (10)

நாற்பத்தொன்பதாவது தசகம்

பிருந்தாவனமேகுதல்

ப⁴வத்ப்ரப⁴ாவாவிது³ரா ஹி கே²பாஸ்–தருப்ரபாதாதி³கமத்ர கே²ஷ்டே³ ।
அஹேதுமுத்பாதக³ணம் விஶங்க்ய ப்ரயாதுமந்யத்ர மநோ விதேநு: ॥ 1 ॥

ஹே குருவாயூரப்பா! தங்கள் மகிமையை அறியாத கோபர்கள், காரணமின்றி மரம் முறிந்து விழுந்தது முதலியவற்றைத் தீய நிமித்தங்கள் என்று ஐயம் கொண்டு கோகுலத்திலிருந்து வேறோரிடம் செல்ல நினைத்தார்கள். (1)

தத்ரோபநந்த்³ராபி³த⁴–கே²பவர்யோ ஜகே³ள ப⁴வத்ப்ரேரணயைவ நூநம் ।
இத: ப்ரதீச்யாம் விபிநம் மநோஜ்ஞம் ப்³ருந்தா³வநம் நாம விராஜதீதி ॥ 2 ॥

அப்பொழுது கோபர்களில் வயதான உபநந்தன் என்பவன், 'இங்கிருந்து மேற்கே பிருந்தாவனம் என்ற அழகான ஒரு வனம் உள்ளது' என்று கூறியது (உள்ளத்தில் ஒளிந்து நிற்கும்) தங்கள் தூண்டுதலினாலன்றோ? (2)

ப்ருஹத்₃வநம் தத் கி₂லு நந்த₃முக்₂யா விதா₃ய கெ₃ளஷ்டீ₂நமத₃₂ கூஷணேந ।
த்வத₃ந்வித–த்வஜ்ஜநநீ–நிவிஷ்ட–கி₃ரிஷ்ட–₂யாநாநுகூ₃தா விசேலு: ॥ 3 ॥

(எல்லோரும் அங்கு செல்ல மனங்கொண்டு) நந்தன் முதலியவர்கள் உடனே 'பிருஹத்வனம்' என்கின்ற பழைய கோகுலத்தைக் காலி செய்துவிட்டுப் பிருந்தாவனத்தை நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது தாங்கள், (தங்கள் தமையனார்) பலராமன், தாய் யசோதை, ரோஹிணி ஆகியவர்களோடு சிறந்த வண்டியில் ஏறிக்கொள்ள, அதைப் பின் தொடர்ந்து மற்ற எல்லோரும் சென்றனர். (3)

அநோமநோஜ்ஞ–த்₄வநி–தே₄நுபாலீ–கு₂ரப்ரணாதா₃ந்தரதோ வதூ₄பி₄: ।
ப₄வத்₃–விநோதா₃–லபிதாக்ஷராணி ப்ரபீய நாஜ்ஞாயத மார்க₃தை₃ர்க்₃யம் ॥ 4 ॥

(அப்படி வண்டியின்பின் தொடர்ந்த அவர்கள்) வண்டிகளினுடைய இனிமையான சத்தத்துடன் பசுக் கூட்டங்களின் குளம்பு சத்தத்தையும் கேட்டு இடையில் கோபிகைகளோடு தங்களது மழலைச் சொற்களின் இனிமையையும் பருகிக் கொண்டு வழிநடந்த களைப்பை அறியவில்லை. (4)

நிரீக்ஷ்ய ப்₃ருந்தா₃வநமீஶ நந்த₃த்–ப்ரஸூந–குந்த₃ப்ரமுக₂–த்₃ருமௌக₄ம் ।
அமோத₃₂: ஸாத்₃வல–ஸாந்த்₃ரலக்ஷ்ம்யா ஹரிந்மணீ–குட்மல–புஷ்ட–₂ஸோப₄ம் ॥ 5 ॥

ஹே ஈசா! அடர்ந்த மலர்களுடன் கூடிய குந்தம் முதலிய மரங்கள் செறிந்த தோப்புடனும், மரகதப் பச்சைக் கற்கள் பதித்தாற்போன்ற அடர்ந்த பசும்புல் தரையுடனும் கூடிய அழகு நிறைந்த பிருந்தாவனத்தைக் கண்டு தாங்கள் மகிழ்ந்தீர்கள். (5)

நவாக–நிர்வ்யூட–நிவாஸ–பே₄தே₃ஷ்–வஸோஷ–கே₃பேஷு ஸு₂காஸிதேஷு ।
வநஶ்ரியம் கே₃பகிஶோரபாலீ–விமிஶ்ரித: பர்யக₃–லோகத₂₂ஸ்த்வம் ॥ 6 ॥

கோபர்கள் அனைவரும் புதிதாகக் கட்டப்பட்ட தனித்தனி வீடுகளில் மகிழ்ச்சியோடு வசிக்கத் தொடங்கினர். (அவர்கள் அவ்விதமிருக்கத்) தாங்கள் இடைச்சிறுவர்களை அழைத்துக் கொண்டு பிருந்தாவனத்தின் அழகைச் சுற்றிப் பார்த்து மகிழ்ச்சியடைந்தீர்கள். (6)

அராலமார்க₃ாகூ₃த–நிர்மலாபாம் மராலகூஜாக்ருத–நர்மலாபாம் ।
நிரந்தரஸ்மேரஸரோஜவக்த்ராம் கலிந்த₃கந்யாம் ஸமலோகயஸ்த்வம் ॥ 7 ॥

அன்னப்பேடுகளின் இனிய கூவுதலையே சாதுர்யமான பேச்சாகவும், மலர்ந்த தாமரைகளையே அழகான புன்னகை பூத்த முகமாகவும், வளைந்து வளைந்து வருகின்ற தெளிந்த நீரோடும் கூடிய களிந்தனின் பெண்ணான காளிந்தி என்னும் யமுனையைத் தாங்கள் கண்டு மகிழ்ந்தீர்கள். (7)

மயூரகேகாஸ்வத–லோப₄நீயம் மயூக₂மாலா–ஸப₃லம் மணீநாம் ।
விரிஞ்ச–லோகஸ்ப்ருஶ–முச்சஶ்ருங்கை₃ர்–கி₃ரிம் ச கே₃வர்த₄ந–மைக்ஷத₂₂ஸ்–த்வம் ॥ 8 ॥

மயில்களின் அழகிய இனிமையான அகவுதலால் மனத்தை ஈர்ப்பதும், ரத்தினங்களுடைய ஒளிக் கிரணங்களால் பற்பல வர்ணங்களுடன் விளங்குவதும், பிரம்மலோகத்தையே தொடுவன போன்று உயர்ந்த கொடுமுடிகளுடன் கூடியதுமான கோவர்த்தன கிரியைத் தாங்கள் கண்டுகளித்தீர்கள். (8)

ஸமம் ததோ கோ3பகுமாரகைஸ்–த்வம் ஸமந்ததோ யத்ர வநாந்தமாக3ா: ।
ததஸ்–ததஸ்தாம் குடிலாமபஶ்ய: கலிந்த3ஜாம் ராக3வதீமிவைகாம் ॥ 9 ॥

பிறகு தாங்கள் இடைச்சிறுவர்களுடன் பிருந்தாவனத்தைச் சுற்றி எங்கெங்கு சென்றீர்களோ, அங்கங்கெல்லாம் தங்களிடம் மிக்க ஆசை கொண்டவள் போல தனித்துச் சுற்றி வரும் அந்த காளிந்தியாகிய யமுனையாற்றைக் கண்டீர்கள். (9)

தத3ாவிதே3ஸ்மிந் விபிநே பஶுவ்யே ஸமுத்ஸுகோ வத்ஸக3ணப்ரசாரே ।
சரந் ஸராமோ3த3 குமாரகைஸ்த்வம் ஸமீரகே3ஹாதி4ப பாஹி ரோக3ாத் ॥ 10 ॥

ஹே குருவாயூரப்பா! இவ்வாறு பல பெருமைகள் கொண்டதும், பசுக்களுக்கு இன்பமளிப்பதுமான அந்தப் பிருந்தாவனத்தில் கன்றுகள் மேய்ப்பதில் ஆசை கொண்டு பலராமனுடனும், மற்ற இடைச்சிறுவர்களுடனும் சேர்ந்து கொண்டு இங்குமங்கும் சஞ்சரிக்கின்ற தாங்கள் என்னை நோயிலிருந்து காப்பாற்ற வேண்டுகிறேன். (10)

ஒப்புநோக்குக:– **'கன்று மேய்த்து இனிதுகந்த காளாய்'** **(திருமங்கையாழ்வார்)**



ஐம்பதாவது தசகம்

வத்ஸாஸுரன் – பகாஸுரன் வதம்

தரல–மது4க்ருத்3–ப்3ருந்தே3 ப்3ருந்தா3வநேऽத2 மநோஹரே
பஶுபமிஶுபி4: ஸாகம் வத்ஸாநு–பாலநலோலுப: ।
ஹலத4ரஸகே2ா தே3வ ஶ்ரீமந் விசேரித2 த4ாரயந்
க3வலமுரளீவேத்ரம் நேத்ராபி4ராம–தநுத்3யுதி: ॥ 1 ॥

லக்ஷ்மிபதியான தேவதேவா! கண்ணைக் கவரும் ஒளிமிக்க திருமேனி படைத்த தாங்கள் இங்குமங்கும் சுற்றிப் பறக்கும் வண்டுகளுடன் கூடிய மனதிற்கினிய பிருந்தாவனத்தில் கன்றுகளை மேய்க்கத் திருவுள்ளம் கொண்டு கொம்பு, புல்லாங்குழல், பிரம்பு ஆகியவற்றைக் கையிலேந்தி பலராமனுடனும், மற்ற கோபச் சிறுவர்களுடனும் சஞ்சரித்தீர்கள். (1)

விஹித–ஜக3தீ–ரக்ஷம் லக்ஷ்மீகராம்பு3ஜ–லாலிதம்
த3த்3தி சரணத்3வந்த்3வம் ப்3ருந்தா3வநே த்வயி பாவநே ।
கிமிவ ந ப3பெ4ள ஸம்பத்ஸம்பூரிதம் தருவல்லரீ–
ஸலில–த4ரணீகோ3த்ர–க்ஷேத்ராதி3கம் கமலாபதே ॥ 2 ॥

திருமகள் கேள்வனே குருவாயூரப்பா! அனைத்துலகங்களையும் காப்பதும், திருமகள் தன் திருக்கரங்களால் வருடப் பெற்றதுமாகிய தங்களது இரு திருவடிகளையும் புண்ணியமான

பிருந்தாவனத்தில் வைத்து நடந்தபோது, அங்குள்ள மரங்கள், கொடிகள், நீர் நிலைகள், நிலம், மலை, வயல் முதலியன அனைத்தும் சீர்மை மிகுந்ததாக விளங்கின அல்லவா? (2)

விலஸத்₃ப₂லபே காந்தாராந்தே ஸமீரணஶீதலே
விபுல–யமுநாதீரே கே₂வர்த்₄நாசல–மூர்த்₄ஸு ।
லலிதமுரளீநாத₃: ஸஞ்சாரயந் க₂லு வாத்ஸகம்
க்வசந தி₃வஸே தை₄த்யம் வத்ஸாக்ருதிம் த்வமுதை₃க்ஷத₂: ॥ 3 ॥

பச்சைப் புற்களுடன் அழகாக விளங்கும் பிருந்தாவனத்தில் குளிர்ந்த காற்று வீசும் பரந்த யமுனைக் கரையில், கோவர்த்தன மலைமுகட்டில் இனிமையாகக் குழலூதிக் கொண்டு கன்றினங்களைத் தாங்கள் மேய்த்து வருகையில் ஒரு நாள் கன்றுக்குட்டியின் உருவந்தாங்கி வந்த ஓர் அஸுரனைக் கண்டீர்கள். (3)

ரப₄ஸ–விலஸத்புச்ச₂ம் விச்ச₂ாயதோऽஸ்ய விலோகயந்
கிமபி வலிதஸ்கந்த₄ம் ரந்த்₄ரப்ரதீக்ஷ–முதீ₃க்ஷிதம் ।
தமத₂ சரணே பி₃ப்₄ரத்₃ விப்₄ராமயந் முஹுருச்சகை:
குஹசந மஹாவ்ருக்ஷே சிக்ஷேபித₂ க்ஷதஜீவிதம் ॥ 4 ॥

அந்த வத்ஸாஸுரன் மிகுந்த கோபத்தோடு தனது வாலை இங்குமங்கும் ஆட்டிக் கொண்டு கழுத்தைச் சற்று திருப்பித் தங்களுக்குத் தீங்கு செய்ய சரியான நேரத்தை எதிர்பார்த்துச் சுற்றிச் சுற்றி வந்ததைக் கண்ட தாங்கள், அவனது பார்வையைக் கண்டு அவனது இரு கால்களையும் பிடித்து விரைவாகச் சுழற்றினீர்கள். அதனால் இறந்த அவனை ஒரு பெரிய மரத்தின் மீது எறிந்தீர்கள். (4)

நிபததி மஹாதை₃த்யே ஜாத்யா து₃ராத்மநி தத்க்ஷணம்
நிபதநஜவக்ஷுண்ண–க்ஷோணீருஹ–க்ஷத–கானநே ।
தி₃வி பரிமிலத்₃–ப்₃ருந்த₃ா: ப்₃ருந்த₃ாரகா: குஸுமோத்கரை:
ஶிரஸி ப₃வதோ ஹர்ஷாத்₃ வர்ஷந்தி நாம ததா₃ ஹரே ॥ 5 ॥

பாவங்களைப் போக்கும் ஹரியான ஸ்ரீகுருவாயூரப்பா! பிறவியிலேயே தீயோனான அவ்வஸுரன் (இறந்தபின் இயல்பான பெரிய உருவத்தில்) விழுந்த வேகத்தால் அங்குள்ள பல மரங்கள் ஒடிந்து விழுந்து பிருந்தாவனம் உருக்குலைந்து போயிற்று. அப்பொழுது வானவெளியில் விண்ணவர்கள் ஒருங்கு கூடி பெருமகிழ்ச்சி கொண்டு தங்கள் மேல் மலர்மாரி பொழிந்தார்கள். (5)

ஸுரபி₃லதமா மூர்த்₃த₄ந்யூர்த்₄வம் குத: குஸுமாவலீ
நிபததி தவேத்யுக்தோ ப₃ாலை: ஸஹேலமுதை₃ரய: ।
ஜடிதி த₄நுஜ க்ஷேபேணோர்த்₄வம் க₃தஸ்தருமண்ட₃லாத்
குஸுமநிகர: ஸோऽயம் நூநம் ஸமேதி ஶநைரிதி ॥ 6 ॥

இதைக் கண்ட இடைச்சிறுவர்கள், 'நறுமணம் கமழும் இம்மலர்மாரி உங்கள் தலைமேல் எங்கிருந்து விழுகிறது?' என்று வினவ, தாங்கள், 'அரக்கனை எறியும்பொழுது அது மரங்களில்பட அங்குள்ள மலர்கள் உயரப் பறந்து மெதுவாக இப்பொழுது கீழே விழுகிறது' என்று கேலியான பதிலளித்தது உண்மைதானே? (6)

க்வசந தி3வஸே பூ4யோ பூ4யஸ்தரே பருஷாதபே
தபநதநயாபாத2: பாதும் கதா பவ்ததா3த்3ய: ।
சலிதகருதம் ப்ரேக்ஷ்மாஸுர்–பகம் கலு விஸ்ம்ருதம்
க்ஷிதி4ர–கருச்சே2தே3 கைலாஸஶைல–மிவாபரம் ॥ 7 ॥

ஒரு நாள் கடுமையாக வெய்யில் காய்கையில் விடாய் (தாகம்) தீர்ப்பதற்குத் தாங்கள் மற்றவர்களுடன் யமுனைக்குச் சென்றீர்கள். அங்கு (முன்னொரு கால் மலைகளின் சிறகுகளை இந்திரன் வெட்டியபொழுது) சிறகுகள் வெட்டப்படாமல் மறந்துவிடப்பட்ட மற்றொரு கைலாய மலையோ எனும்படிச் சிறகுகளை அசைத்துக் கொண்டிருந்த (கொக்கு வடிவிலிருக்கும்) பகாஸுரனைக் கண்ணுற்றீர்கள். (7)

பிபது3தி ஸலிலம் கே3பவ்ராதே பவ்தமபி3த்3ருத:
ஸ கில நிகி3லந்–நக்3நிப்ரக2யம் புநர்த்3ருத–முத்3வமந் ।
த3லயிதுமகாத் த்ரோட்யா: கோட்யா ததா3 து பவ்ரிவ் விபே2
கலஜந–பி3தா3 சுஞ்சுஸ்சஞ்சு ப்ரக்ருஹ்ய தத3ர தம் ॥ 8 ॥

இடைச்சிறுவர்கள் நீர் அருந்துகையில் அந்த பகாஸுரன் விரைவாக வந்து தங்களை விழுங்கவே, தீ போன்று (எரித்த) தங்களை உடனே (கீழே) உமிழ்ந்துவிட்டுப் பிறகு அலகின் நுனியால் குத்திக் கிழிக்க வந்தான். ஆனால் தீயோர்களை அழிப்பதில் வல்லமை படைத்த தாங்கள் அவனுடைய அலகுகளைப் பிடித்துக் கிழித்து அவனை ஒழித்தீர்கள். (8)

ஸபதி3 ஸஹஜாம் ஸந்த்ரஷ்டும் வா ம்ருதாம் கலு பூதநா–
மநுஜ–மகமபய்க்ரே கத்வா ப்ரதீக்ஷிதுமேவ வா ।
ஶமநநிலயம் யாதே தஸ்மிந் பகே ஸுமநோக3ணே
கிரதி ஸுமநோப்ருந்தம் ப்ருந்தாவநாத்3 க்ருஹமையதா2: ॥ 9 ॥

இறந்த தன் சகோதரியான பூதனையை விரைவில் போய்ப் பார்ப்பதற்கோ, அல்லது (இறக்கப் போகும்) தன் தம்பியான அகாஸுரனைத் தான் முதலில் போய் வரவேற்பதற்கோ, அந்த பகாஸுரன் யமனுடைய உலகை அடைந்தான். அப்பொழுது தேவர்கள் தங்கள் மேல் மலர்மாரி பொழிகையில் தாங்கள் பிருந்தாவனத்திலிருந்து வீடு திரும்பினீர்கள். (9)

லலிதமுரளீநாத3ம் தூ3ராந்–நிஶம்ய வதூ4ஜநைஸ்–
த்வரித–முபக3ம்யாரா–த்3ரூட4–மோத3–முதீ3க்ஷித: ।
ஜநித–ஜநநீ நந்தா3நந்த3: ஸமீரண–மந்தி3ர–
ப்ரதி2தவஸதே ஶௌரே தூ3ரீகுருஷ்வ மமாமயாந் ॥ 10 ॥

குருவாயூரில் கோயில் கொண்டு விளங்கும் உலகம் புகழ் ஸ்ரீகிருஷ்ணா! வெகுதொலைவிலிருந்து வரும் தங்களது இனிய குழலோசையைக் கேட்டுத் தங்கள் அருகில் வந்த கோபிகைகள், தாய் யசோதை, தந்தை நந்தகோபன் ஆகிய அனைவரும் மிகவும் மகிழ்ச்சி கொண்டனர். அத்தகைய தாங்கள் எனது நோய்களைப் போக்கியருள வேண்டும். (10)

ஐம்பத்தோராவது தசகம்

அகாஸுர மோக்ஷம்

கதா3சந வ்ரஜஶிஶூபி4: ஸமம் ப4வாந்
வநாயநே விஹிதமதி: ப்ரகே3தராம் ।
ஸமாவ்ருதோ பா3ஹுத3–வத்ஸமண்ட3லை:
ஸதேமநைர்–நிரகா3மதீ3ஶ ஜேமநை: ॥ 1 ॥

இறைவனே! தாங்கள் ஒரு சமயம் கோகுலச் சிறுவர்களுடன் வனபோஜனம் செய்ய மனங்கொண்டு அதிகாலையில் கன்றுகள் சூழ கையில் கட்டுச்சாதமும், ஊறுகாயும் எடுத்துக் கொண்டு வனம் சென்றீர்கள். (1)

விநிர்யதஸ்தவ சரணாம்பு3ஜ–த்3வயா–
து3தஞ்சிதம் த்ரிபு4வந–பாவநம் ரஜ:
மஹர்ஷய: புலகத3ரை: கலேப3ரை–
ருதூஹிரே த்3ருத–ப3வதீ3க்ஷணோத்ஸவா: ॥ 2 ॥

தாங்கள் வெளியே புறப்படுகையில் தங்களது திருவடித் தாமரைகளிலிருந்து மேலே கிளம்பிய, உலகம் யாவையும் தூய்மையாக்கும் தூளிகளைத் தங்களைக் காண வந்த மஹரிஷிகள் தங்கள் உடலில் மெய்சிலிர்க்கத் தரித்துக் கொண்டனர். (2)

ப்ரசாரயத்–யவிரல–ஶாத்3வலே தலே
பஶூந் விபே4 ப4வதி ஸமம் குமாரகை: ।
அக4ஸுரோ ந்யருணத3க4ய வர்த்தநீம்
ப4யாநக: ஸபதி3 ஶயாநகாக்ருதி: ॥ 3 ॥

விபோ! தாங்கள் இடைச்சிறுவர்களுடன் பசும்புல் தரையில் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் அகாஸுரன் என்பான் தங்களுக்குத் தீங்கிழைப்பதற்காகவே மிக்க பயங்கரமான மலைப்பாம்பு உருக்கொண்டு திடீரென வழியை மறைத்துக் கிடந்தான். (3)

மஹாசல–ப்ரதிமதநோர்–கு2ஹாநிப4–
ப்ரஸாரித–ப்ரதி3த–முக2ஸ்ய காநநே ।
முகே2 அத3ரம் விஹரணகௌதுகாத்3 க3தா:
குமாரகா: கிமபி விதூ3ரகே3 த்வயி ॥ 4 ॥

தாங்கள் சற்று தூரத்திலிருக்கையில் காட்டினில் விளையாடுகின்ற இடைச்சிறுவர்கள் அந்த மலைப்பாம்பை ஒரு மலை என்றும், அதன் திறந்த வாயை குகை என்றும் எண்ணி அதன் வாயினுள் புகுந்தனர். (4)

ப்ரமாத3த: ப்ரவிஶதி பந்நகே3 அத3ரம்
க்வத3த்தநெள பஶுபகுலே ஸவாத்ஸகே ।
வித3ந்நிதம் த்வமபி விவேஶித2 ப்ரபே4
ஸுஹ்ருஜ்ஜநம் விஶரணமாஶு ரக்ஷிதும் ॥ 5 ॥

பிரபுவே! கோபச் சிறுவர்கள் அறிவின்றி கன்றுகளோடு அம்மலைப்பாம்பின் வாயினுள் புகும்பொழுதே உடல்கள் வெந்து துன்பமடைந்தனர். இதைக் கண்ணுற்ற தாங்கள் வேறு புகலறியாத தோழர்களைக் காக்க விரைந்து பாம்பின் வாயினுள் நுழைந்தீர்கள். (5)

க³லோத³ரே விபுலிதவர்ஷ்மணா த்வயா
மஹோரகே³ லுட³தி நிருத்³த⁴மாருதே ।
த்³ருதம் ப³வாந் வித³லித–கண்ட³–மண்ட³லோ
விமோசயந் பஶுபஶஶிந் விநிர்யயௌ ॥ 6 ॥

அப்படிச் சென்ற தாங்கள் அதன் கழுத்தின் நடுவில் தங்களது உருவத்தைப் பெரிதாக்கிக் கொள்ளவே மூச்சுவிட முடியாமல் அப்பாம்பு தினறித் தரையில் விழுந்து புரண்டு இறந்தது. உடனே தாங்கள் அதன் கழுத்தைக் கிழித்துக் கொண்டு இடைச்சிறுவர்களையும், கன்றுகளையும் துன்பத்திலிருந்து விடுவித்து வெளியே அழைத்து வந்தீர்கள். (6)

க்ஷணம் தி³வி த்வது³பக³மார்த்³–மாஸ்தி³தம்
மஹாஸுரப்ரப⁴வ–மஹோ மஹோ மஹத் ।
விநிர்க³தே த்வயி து நிலீநமஞ்ஜஸா
நப⁴:ஸ்த²லே நந்ருதுரதே²ா ஜகு³: ஸுரா: ॥ 7 ॥

இறந்த அக்கொடிய அஸுரனின் உடலிலிருந்து பெரியதொரு ஒளிப்பிழம்பு கிளம்பி தாங்கள் வெளிவருவதற்காக வானில் சிறிது நேரம் காத்திருந்து தாங்கள் வெளியே வந்ததும், தங்களிடம் கலந்து மறைந்தது. அப்பொழுது விண்ணில் விண்ணவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். (7)

ஸவிஸ்மயை: கமலப⁴வாதி³பி⁴: ஸுரை–
ரநுத்³ருதஸ்ததா³நு க³த: குமாரகை: ।
தி³நே புநஸ்–தருணத³ஶா–முபேயுஷி
ஸ்வகைர்–ப⁴வாந–தநுத பே⁴ஜநோத்ஸவம் ॥ 8 ॥

பிறகு தாங்கள் தோழர்களான இடைச்சிறுவர்களுடன் நடுப்பகலில் வனபோஜனத்தைக் கொண்டாடினீர்கள். இதை பிரம்மா முதலிய தேவர்கள் ஆகாயத்தில் மறைந்து நின்று கவனித்தார்கள். (8)

விஷாணிகாமபி முரளீம் நிதம்ப³கே
நிவேஶயந் கப³லத⁴ர: கராம்பு³ஜே ।
ப்ரஹாஸயந் கலவசநை: குமாரகாந்
பு³பே⁴ஜித² த்ரித³ஶக³ணைர்–முதா³ நுத: ॥ 9 ॥

கொம்பையும், குழலையும் இடுப்பில் செருகிக் கொண்டு தாமரை போன்ற கைகளில் அன்னக் கவளத்தை எடுத்துக் கொண்டு இடைச்சிறுவர்களைத் தங்களது வேடிக்கைப் பேச்சுக்களால் சிரிக்கச் செய்து கொண்டு மகிழ்ச்சியோடு உண்டு களித்தீர்கள். இதைக் கண்ட தேவர்கள் மகிழ்ச்சி பொங்கத் தங்களைத் துதித்தனர். (9)

ஸுகா₂ஸுநம் த்விஹ தவ கே₃பமண்ட₃லே
மகா₂ஸுநாத் ப்ரியமிவ தே₃வமண்ட₃லே ।
இதி ஸ்துதஸ்த்ரித₃ஶவரைர்–ஜகத்பதே
மருத்புரீநிலய கூ₃தா₄த் ப்ரபாஹி மாம் ॥ 10 ॥

உலகநாயகா, குருவாயூரப்பா! 'இந்நிலவுலகில் இடையர் கூட்டத்தில் இன்பமாய் புசிப்பது, யாகத்தில் அளிக்கப்படும் அவி உணவைத் தேவருலகில் புசிப்பதைவிட மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது போலும்!' என்று வானவர்களனைவரும் தங்களைப் போற்றித் துதித்தனர். அப்படிப்பட்ட தாங்கள் என்னை நோயிலிருந்து காப்பாற்றியருள வேண்டும். (10)

ஒப்புநோக்குக:– கறவைகள் பின்சென்றுகானஞ் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க் குலத்து உன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்தன்னோடு
உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது.

(திருப்பாவை 28)

ஐம்பத்திரண்டாவது தசகம்

நான்முகனே மயங்குதல்

அந்யாவதார–நிகரேஷ்வநிரீக்ஷிதம் தே
பூ₄மாதிரேக–மபி₄வீக்ஷ்ய ததா₃ऽக₄மோக்ஷே ।
ப்₃ரஹ்மா பரீக்ஷிதுமநா: ஸ பரோக்ஷபா₄வம்
நிந்யேऽத₂ வத்ஸகக₃ணாந் ப்ரவிதத்ய மாயாம் ॥ 1 ॥

ஹே குருவாயூரப்பா! தங்களது பல அவதாரங்களிலும் காணப்பெறாத சில வியக்கத்தக்க பெருமைகளை அகாஸுர மோக்ஷத்தில் கண்ணெதிரே கண்ட நான்முகன், தங்களை சோதிக்கக் கருதி, மாயையைக் கைக்கொண்டு தங்களது கன்றுகளை கண்ணுக்குப் புலப்படாதவாறு வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றார். (1)

வத்ஸாநவீக்ஷ்ய விவஶே பஶுபோத்கரே தா–
நாநேதுகாம இவ தா₃த்ருமதாநுவர்த்தீ ।
த்வம் ஸாமிபு₄க்த–கப₃லோ கூ₃தவாம்ஸ்ததா₃நீம்
பு₄க்தாம்ஸ்திரோத₄த ஸரோஜப₄வ: குமாராந் ॥ 2 ॥

கன்றுகளைக் காணாது இடையர்கள் மனங்கலங்கியபோது அக்கன்றுகளைத் திருப்பியழைத்துவர எண்ணங்கொண்டவர் போல் பிரம்மதேவருடைய விருப்பத்தையும் நிறைவேற்ற எண்ணிய தாங்கள், கையில் பாதியுண்ட கவளத்துடன் அங்கிருந்து சென்றீர்கள். அச்சமயம் பிரம்மதேவரும் (பாதி) சாப்பிட்டுக் கொண்டிருந்த இடைச்சிறுவர்களையும் மறைத்துவிட்டார். (2)

வத்ஸாயிதஸ்தத்₃நு கே₃பக₃ணாயிதஸ்த்வம்
ஸகீ₃யாதி₃ ப₄ண்ட₃ முரளீ க₃வலாதி₃ரூப: ।
ப்ராக்₃வத்₃ விஹ்ருத்ய விபிநேஷு சிராய ஸாயம்
த்வம் மாயயாऽத₂ ப₃ஹுத₄ா வ்ரஜமாயயாத₂ ॥ 3 ॥

(இதைக்கண்ட) தாங்கள் மாயையினால் கன்றுகளாகவும், இடைச்சிறுவர்களாகவும் ஆகி, உறி, பாத்திரங்கள், வேய்குழல்கள், கொம்புகள் முதலியவற்றின் உருவத்தையும் ஏற்று எப்பொழுதும் போலவே வனத்தில் வெகுநேரம் பலவாறாக விளையாடிய பிறகு மாலையில் கோகுலம் திரும்பி வந்தீர்கள். (3)

குறிப்பு:– விராட்புருஷனான பகவான் இவ்வுலகைத் தோற்றுவித்தது பற்றி உபநிடதத்தில் கூறப்படும் கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

'ஸோऽகாமயத! பஹூஸ்யாம் ப்ரஜாயேயேதி । இதம் ஸர்வமஸ்ருஜத! தத்ஸ்ருஷ்ட்வா! ததேவாநுப்ராவிசத்' (தை. உப. 2/6) – நான் அனைத்துமாக ஆக வேண்டும் என்று பகவான் விரும்பினார். இவை அனைத்தையும் சிருஷ்டித்தார். அவற்றுள் தானே நுழைந்தார்.

த்வாமேவ ஸகீ₃ய–க₃வலாதி₃மயம் த₃த₄ாநோ
பூ₄யஸ்த்வமேவ பஶுவத்ஸக–ப₃ாலரூப: ।
கே₃ாரூபிணீபி₄ரபி கே₃பவதூ₄மயீபி₄–
ராஸாதி₃தோऽஸி ஜநநீபி₄–ரதிப்ரஹர்ஷாத் ॥ 4 ॥

கன்றுகளாகவும், இடைச்சிறுவர்களாகவும் உறி, கொம்பு முதலியனவாகவும் உருவம் பெற்ற தாங்கள் தங்களையே கூட்டிக் கொண்டும், எடுத்துக் கொண்டும் பல்வேறு வடிவங்களில் சென்றபோது கோபிகைகளான தாய்மார்களும், கன்றுகளின் தாய்ப்பசுக்களும் (இதுவரை இல்லாத) மிக்க மகிழ்ச்சியுடன் தங்களை வரவேற்றனர். (4)

ஜீவம் ஹி கிஞ்சித₃பி₄மாநவஶாத் ஸ்வகீயம்
மத்வா தநூஜ இதி ராக₃பூ₄ரம் வஹந்த்ய: ।
ஆத்மாநமேவ து ப₄வந்த–மவாப்ய ஸகீ₃நும்
ப்ரீதிம் யயுர்–ந கியதீம் வநிதாஸ்ச க₃வ: ॥ 5 ॥

உலகினர் தங்களுக்குக் குழந்தையாகப் பிறந்த ஏதோ ஒரு ஜீவனை மிகுந்த பாசத்தினால், 'என் பிள்ளை, என்னைச் சேர்ந்தவன்' எனக் கருதி அளவு கடந்த அன்பை வைக்கிறார்கள். (அப்படியிருக்க) கோபிகைகள் (அகிலத்திற்கும்) ஆத்மாவாகிய தங்களையே பிள்ளையாகவும், பசுக்கள் தங்களையே கன்றுகளாகவும் அடைந்தபொழுது (தம்மை அறியாமலேயே) எவ்வளவுதான் மகிழ்ச்சியை அடைந்திருக்க மாட்டார்கள்? (5)

ஒப்புநோக்குக:– **'புத்ராத் ப்ரேய: வித்தாத் ப்ரேய: ஸர்வஸ்மாதபி ப்ரேய: யதயமாத்மா' (உபநிடதம்)** – ஆத்மாவானது மகனைக் காட்டிலும், செல்வத்தைக் காட்டிலும், ஏன்? அனைத்தினும் மிகவும் விரும்பத்தக்கது.

ஏவம் ப்ரதிக்ஷண–விஜ்ரும்பி₄த–ஹர்ஷப₄ார–
நிர்ப்ரேஷ–கே₂பக₃ணலாலித–பூ₄ரிமூர்தீம் ।
த்வா–மக்₃ராஜோऽபி பு₃பு₄க்ஷதே₂ கில வத்ஸராந்தே
ப்₃ரஹ்மாத்மநோரபி மஹாந் யுவயோர்விஶேஷ: ॥ 6 ॥

இங்ஙனம் ஒவ்வொரு வினாடியும் பொங்கும் மகிழ்ச்சியோடு கூடிய கோபர்கள் அனைவராலும் சீராட்டப் பெற்றுப் பற்பல வடிவங்களில் விளங்கும் தங்களைத் தங்களது அண்ணாவான பலராமன்கூட வருஷ முடிவில்தான் அறியலானார். நீங்கள் இருவரும் பிரம்ம ஸ்வரூபமாகவே இருப்பினும் உங்களிடையே மிகுந்த வேற்றுமை உண்டல்லவா? (6)

குறிப்பு:– பகவான் ஸ்ரீகண்ணனோ நிஷ்கல பிரம்ம ஸ்வரூபன் (குணமற்ற, உருவமற்ற பிரம்ம ஸ்வரூபன்), பலராமனோ சகல பிரம்ம ஸ்வரூபன் (குணமும், உருவமும் உள்ள பிரம்ம ஸ்வரூபன்).

வர்ஷாவதை₎ள நவ–புராதந–வத்ஸபாலாந்
த்₃ருஷ்ட்வா விவேகமஸ்ருணே த்₃ருஹிணே விமூடே₄ ।
ப்ராதீ₃த்₃ருஶ: ப்ரதிநவாந் மகுடாங்க₃₎தா₃தி₃–
பூ₄ஷாம்ஶ்சதுர்பு₄ஜ–யுஜ: ஸஜலாம்பு₃தா₃பா₄ந் ॥ 7 ॥

ஓர் ஆண்டு முடிவில் புதிய கோபச் சிறுவர்களையும், புதிய கன்றுகளையும் தான் ஒளித்து வைத்த பழைய கோபச் சிறுவர்கள், கன்றுகள் ஆகிய இரண்டுமே ஒரே மாதிரி இருக்கக் கண்டு (இவை இரண்டில் தாம் மறைத்து வைத்த உண்மையானவர்கள் யார் என்று அறியாது) பிரம்மதேவர் மயங்கியபொழுது தாங்கள் உருவெடுத்த ஒவ்வொரு இடைச்சிறுவர்களையும் கிரீடம், தோள்வளை முதலிய ஆபரணங்கள் அணிந்தவர்களாகவும், நான்கு திருக்கரங்களோடு கார்மேக வண்ணமுடையவர்களாகவும் தங்களுடைய வடிவமாகவே பிரம்மதேவருக்குத் தோன்றும்படிச் செய்தீர்கள். (7)

ஒப்புநோக்குக:– ஸ்ரீமத்பாகவதம் மங்கள சுலோகத்தில் பிரம்மா முதலிய அனைவரும் பகவானின் திருவிளையாடலைக் கண்டு மோகமடைந்தார்கள். ஸ்ரீநாராயண பட்டத்திரி முதல் சுலோகத்தில் இதே கருத்தை, 'அஸ்பஷ்டம்' – 'நன்கு விளக்கமாக அறிய முடியாதது' என்று கூறுகிறார்.

ப்ரத்யேகமேவ கமலாபரிலாலிதாங்க₃ாந்
பே₄கீ₃ந்த்₃ர–பே₄க₃ஶயநாந் நயநாபி₄₎ராமாந் ।
லீலா–நிமீலித–த்₃ருஶ: ஸநகாதி₃யோகி₃–
வ்யாஸேவிதாந் கமலபூ₄ர்–ப₄வதோ த₃த₃ர்ஶ ॥ 8 ॥

மாயையால் இடைச்சிறுவர்களாக உருவங்கொண்டிருந்த ஒவ்வொருவரையும் திருமகளால் சீராட்டப் பெற்று நாகராஜனான ஆதிசேஷன் மேல் விளையாட்டாகக் கண் மூடிக் கொண்டு படுத்திருப்பவர்களாகவும், ஸநகர் முதலிய யோகிகளால் வணங்கப்பட்டவர்களாகவும் கண்ணிற்கினிய தங்களது வடிவமாகவே பிரம்மதேவர் கண்டார். (8)

நாராயணாக்ருதி–மஸங்க₃யதமாம் நிரீக்ஷ்ய
ஸர்வத்ர ஸேவகமபி ஸ்வமவேக்ஷ்ய த₃₎தா ।
மாயா–நிமக்₃நஹ்ருத₃யோ விமுமோஹ யாவ–
தே₃கோ ப₃பூ₄விதி₃ ததா₃ கப₃லார்த்த₃பாணி: ॥ 9 ॥

பிரம்மதேவர் எங்கும் கணக்கற்ற ஸ்ரீமந்நாராயணனின் திருவுருவங்களையும், அங்கு தன்னைச் சேவகனாகவும் இருக்கக் கண்டு மாயையில் மூழ்கி மயங்கி நின்றபொழுது தாங்கள் ஒருவர் மட்டும் உண்டது போக பாக்கி அன்னக்கவளத்தைக் கையில் ஏந்தியவராய்த் தோன்றினீர்கள். (9)

நஸ்யந்மதே₃ ததா₃நு விஸ்வபதிம் முஹுஸ்த்வாம்
நத்வா ச நூதவதி தா₃தரி தா₃ம யாதே ।
போதை: ஸமம் ப்ரமுதி₃தை: ப்ரவிஸந்நிகேதம்
வாதாலயாதி₄ப விபே₄ா பரிபாஹி ரோகா₃த் ॥ 10 ॥

உலகின் நாயகனே, குருவாயூரப்பா! இதைக் கண்ட பிரம்மதேவர் தனது செருக்கழிந்து அகில உலகத்திற்கும் நாயகனான தங்களைப் பன்முறை வணங்கித் துதித்துத் தன் உலகிற்குச் சென்றார். இதைக் கண்ணுற்று மகிழ்ந்த சிறுவர்களுடனும், கன்றுகளுடனும் வீட்டிற்குத் திரும்பினீர்களே! தாங்கள் என்னை நோயிலிருந்து காப்பாற்றியருள வேண்டுகிறேன். (10)

ஐம்பத்து மூன்றாவது தசகம்

தேனுகாஸுர வதம்

அதீத்ய பா₃ல்யம் ஜகதா₃ம் பதே த்வமுபேத்ய பௌக₃ண்ட₃வயோ மநோஜ்ஞம் ।
உபேக்ஷ்ய வத்ஸாவந–முத்ஸவேந ப்ரார்வாத்தா₃ கோ₃கா₃ணபாலநாயாம் ॥ 1 ॥

உலகைக் காக்கும் குருவாயூரப்பா! தாங்கள் ஐந்து வயதான பால பருவத்தைத் தாண்டி (6–லிருந்து 10 வயது வரை உள்ள) மனதிற்கினிய பௌகண்டம் என்னும் பருவத்தை அடைந்தபொழுது கன்றுகள் மேய்ப்பதை விடுத்து மிகுந்த உற்சாகத்தோடு மாடுகளை மேய்க்கத் தொடங்கினீர்கள். (1)

உபக்ரமஸ்யாநுகு₃ணைவ ஸேயம் மருத்புராதீ₄ஸ தவ ப்ரவ்ருத்தி: ।
கோ₃த்ரா–பரித்ராணக்ருதேऽவதீர்ணஸ்–ததை₃வ தே₃வாऽரபா₃தா₃ஸ்–ததா₃ யத் ॥ 2 ॥

குருவாயூரப்பா! (கோ)பூமியைக் காப்பாற்றுவதற்காகவே திருவவதாரம் செய்த தாங்கள் அந்த பௌகண்ட பருவத்தில் அதையே (கோ–ரக்ஷணம் – பசு நிரைக் காத்தலையே) தொடங்கி வைத்தீர்கள் என்பது தங்கள் செயலுக்குப் பொருத்தமானதே. (2)

(இங்கு 'கோ' என்ற வடமொழிச் சொல் பசு, பூமி என்ற இருபொருளில் கையாளப்பட்டது காண்க.)

கதா₃பி ராமேண ஸமம் வநாந்தே வநஸ்ரியம் வீக்ஷ்ய சரந் ஸுகே₂ந ।
ஸ்ரீதா₃மநாம்ந: ஸ்வ–ஸகா₃ஸ்ய வாசா மோதா₃தா₃கா₃ தே₃நுக–காநநம் த்வம் ॥ 3 ॥

குருவாயூரப்பா! ஒருசமயம் பலராமனுடன் வனத்தின் உட்பகுதியில் அதன் வனப்பைப் பார்த்துக் கொண்டு மகிழ்ச்சியோடு சுற்றி வரும்போது ஸ்ரீதாமா என்னும் தங்களது தோழன் சொல்லைக் கேட்டு தேனுகாஸுரன் வசிக்கும் பனங்காட்டிற்கு மகிழ்ச்சியோடு சென்றீர்கள். (3)

உத்தால–தாலீ–நிவஹே த்வது₃க்த்யா பு₃லேந தூ₃தேऽத₃ பு₃லேந தே₃ர்ப்₄யாம் ।
ம்ருது₃: கரஸ்சாப்₄யபதத் புரஸ்தாத் பு₃லோத்கரோ தே₃நுக–தா₃நவோऽபி ॥ 4 ॥

அங்கு தங்களது சொற்கேட்டு பலராமன் பனந்தோப்பில் உள்ள உயர்ந்த பனைமரங்களைத் தனது இருகைகளாலும் பலமாகப் பிடித்துக் குலுக்கவே பழுத்தும், பழுக்காததுமான சுவைமிக்க பனம்பழங்கள் நிறைய விழுந்தன. அப்பொழுது அவை விழும் சத்தத்தைக் கேட்டு தேனுகன் என்னும் அஸுரனும் எதிரே ஓடி வந்தான். (4)

ஸமுத்³யதோ தே³நுக–பாலநேঽஹம் கத³ம் வத³ம் தை³நுக–மத்³ய கு³வே ।
இதீவ மத்வா த்³ருவ–மக்³ரஜேந ஸுரௌக³–யோத்³தா³ர–மஜீக³நஸ்–த்வம் ॥ 5 ॥

'தேனுக பரிபாலனம் செய்ய முயற்சி கொண்ட நான், தேனுகன் வதத்தை எப்படிச் செய்வேன்' என்று எண்ணியே, தேவர் குழாத்திற்குத் தீமை விளைவிக்கும் அவனை, தமையனான பலராமனைக் கொண்டு கொல்லச் செய்தீர்கள் அல்லவா? (5)

குறிப்பு:– இங்கு 'தேனுக' என்னும் சொல் பசுமந்தை என்றும், தேனுகன் என்னும் அஸுரன் என்றும் பொருள்படுகிறது. தேனுக வதம் கண்ணன் செய்தான் என்றால் பசுக்கூட்டத்தைக் கண்ணன் கொன்றான் என்றும் பொருள்படக் கூடுமே என்று நினைத்துத்தான் தன் அண்ணனைக் கொண்டு வதம் செய்யச் செய்தாரோ? என்று தோன்றுகிறது.

தத்³ய–ப்ருத்யாநபி ஜும்பு⁴கத்வே–நோபாக³தா–நக்³ரஜ–ஸம்யுதஸ்–த்வம் ।
ஜும்பூ⁴–பலாநீவ ததா³ நிராஸ்த³ஸ்–தாலேஷு கே²லந் பு⁴வந்நிராஸ்த:² ॥ 6 ॥

எம்பெருமானே! அப்பொழுது நரிவேஷம் பூண்டு (தங்களை வதம் செய்ய ஓடி) வந்த அவ்வஸுரனுடைய வேலையாட்களையும், அண்ணனான பலராமனுடன் சேர்ந்து கொண்டு (சிறிதும் பிரயாசையின்றி) விளையாட்டாகவே நாவல்பழங்களை எறிவதுபோல் பனைமரங்களின் மேல் வீசி எறிந்து கொன்றீர்கள். (6)

விநிக்⁴நதி த்வய்யத² ஜும்பு⁴கௌக⁴ம் ஸநாமகத்வாத்³–வருணஸ்–தத³ாநீம் ।
பு⁴யாகுலோ ஜும்பு⁴க–நாமதே⁴யம் ஸ்ருதி ப்ரஸித்³த⁴ம் வ்யதி⁴தேதி மந்யே ॥ 7 ॥

குருவாயூரப்பா! தாங்கள் (அரக்கர்களாகிய) ஜும்புகம் என்ற நரிக்கூட்டத்தைக் கொல்லத் தொடங்கியது கண்டு, வருணன் தனக்கும் ஜும்புகன் என்ற அதே பெயர் இருத்தலால் பயந்து கலங்கி, அப்பெயரை வேதத்தில் மட்டுமே விளங்குவதாக (வெளியே தெரியாததாக) செய்து கொண்டான் என்று எண்ணுகிறேன். (வேதத்தில் ஜும்புகன் என்றால் அது வருணனைக் குறிக்கும்.) (7)

தவாவதாரஸ்ய பலம் முராரே ஸஞ்ஜாத–மத்³யேதி ஸுரை:–நுதஸ்த்வம் ।
ஸத்யம் பலம் ஜாதமிஹேதி ஹாஸீ பா³லை: ஸமம் தாலப²லாந்யபு⁴ங்க்தா²: ॥ 8 ॥

முரனை வதம் செய்த குருவாயூரப்பா! தங்களுடைய திருவவதாரத்தின் பலன் இன்று கிடைத்தது என்று தேவர்கள் தங்களைத் துதிக்கும்பொழுது தாங்களும் கேலியாகச் சிரித்துக் கொண்டே, 'ஆம்! உண்மைதான். இங்கு பலம் கிடைத்துவிட்டதே' என்று கூறிக் கொண்டே சிறுவர்களுடன் கூடிப் பனம்பழங்களைத் தின்றீர்கள் அல்லவா? (8)

(இங்கு 'பலம்' என்னும் சொல் பயன், பழம் எனச் சிலேடையாக ஆளப்பட்டது நோக்குக.)

மது⁴த்³ரவ–ஸ்ருந்தி ப்ருஹந்தி தாநி
ப²லாநி மேதே³ப⁴ர–ப்ருந்தி பு⁴க்த்வா ।
த்ருப்தைஶ்ச த்³ருப்தை:–ப⁴வநம் ப²லைக⁴ம்
வஹத்³பி⁴ராகா³: கலு பா³லகைஸ்–த்வம் ॥ 9 ॥

தசைப்பற்றுள்ளனவாகவும், இனிப்பாகவுமிருந்த அந்தப் பெரும் பனம்பழங்களைத் தின்று மகிழ்ச்சியும், மதமும் கொண்டு நிறைய பழங்களைத் தூக்கிக் கொண்ட இடைச்சிறுவர்களோடு தாங்களும் வீடு திரும்பினீர்கள். (9)

ஹதோ ஹதோ தே₂னுக இத்யுபேத்ய ப₂லாந்யத₃ந்த்₃பி₄ர்–மது₄ராணி லோகை: ।
ஜயேதி ஜீவேதி நுதோ விபோ₄ த்வம் மருத்புராதீ₄ஸ்வர பாஹி ரோக₃ாத் ॥ 10 ॥

'தேனுகன் ஒழிந்தான்! ஒழிந்தான்!' என்று கூச்சலிட்டுக் கொண்டும், இனிமையான பழங்களைத் தின்று கொண்டும், தங்களிடம் நெருங்கி வந்த இடைச்சேரி மக்கள், 'பிரபுவே! நீ வாழ்க! நீ வாழ்க!' என்று வாழ்த்தினார்கள். அப்படிப்பட்ட விபோ, குருவாயூரப்பா! நீங்கள் என் நோயை நீக்கியருள வேண்டும். (10)

ஐம்பத்து நான்காவது தசகம்

காளியன் வரலாறு

த்வத்–ஸேவோத்க: ஸௌப₄ரிர்–நாம பூர்வம்
காளிந்த்₃யந்தர் த்₃வாத₃ஸாப்₃த₃ம் தபஸ்யந் ।
மீநவ்ராதே ஸ்நேஹவாந் பே₄க₃லோலே
தார்க்ஷ்யம் ஸாக்ஷாதை₃க்ஷதாக்₃ரே கத₃ாசித் ॥ 1 ॥

முன்பொரு காலத்தில் ஸௌபரி என்ற மஹரிஷி தங்களைச் சேவிக்க மனங்கொண்டு யமுனையாற்றில் மூழ்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்தார். அங்கு சிற்றின்ப விளையாட்டில் ஈடுபட்டிருந்த மீன்கூட்டங்களைக் கண்டு அவற்றின் மேல் அன்புகொண்டார். இப்படியிருக்கையில் ஒருசமயம் ஸ்ரீகருட பகவானைக் கண்ணெதிரில் கண்டார். (1)

த்வத்₃வாஹம் தம் ஸக்ஷுத₃ம் த்ருக்ஷஸூநும்
மீநம் கஞ்சிஜ்ஜக்ஷதம் லக்ஷயந் ஸ: ।
தப்தஶ்சித்தே ஶப்தவாநத்ர சேத் த்வம்
ஜந்தூந் பே₄க்தா ஜீவிதம் சாபி மோக்தா ॥ 2 ॥

த்ருக்ஷு குமாரனான, தங்கள் வாகனமாகிய அந்த கருடன் பசியால் காளிந்தி நதியில் உள்ள மீனைத் தின்பது கண்ட ஸௌபரி முனிவர் மனதில் வருத்தமடைந்து, 'இனி இங்கு நீ உயிர்களைத் தின்றால் உன்னுயிரை இழப்பாய்' என்று சபித்தார். (2)

தஸ்மிந் காலே காலிய: க்ஷ்வேலத₃ர்பாத்
ஸர்பாராதே: கல்பிதம் ப₄க₃மஸ்நந் ।
தேந க்ரோத₄ாத் த்வத்பத₃ாம்பே₄ஜப₄ாஜா
பக்ஷக்ஷிப்தஸ் தத்₃து₃ராபம் பயோக₃ாத் ॥ 3 ॥

அக்காலத்தில் காளியன் என்ற விஷநாகம் விஷத்தின் திமிரால் பாம்பின் பகைவனான கருடனுக்கு வைக்கப்பட்ட பலிபாகத்தை தான் உண்டுவிட்டான். தங்கள் பாதகமலங்களில் பக்தி பூண்ட கருடன் இதைக் கண்ணுற்று மிக்க சினம் கொண்டு காளியனைத் தன் இறக்கைகளால் அடித்து விரட்டினார். (ஸௌபரி ரிஷி கொடுத்த சாபத்திற்குப் பிறகு) கருடனால் வர முடியாத அந்த காளிந்தி மடுவிற்கு அவன் வந்துவிட்டான். (3)

கே₂ரே தஸ்மிந் ஸரிஜ்ஜாநீரவாஸே தீரே வ்ருக்ஷா: விக்ஷதா: க்ஷ்வேலவேக₃ாத் ।
பக்ஷிவ்ராதா: பேதுரப்₄ரே பதந்த: காருண்யார்த்₃ரம் த்வந்மநஸ்தேந ஜாதம் ॥ 4 ॥

அந்தக் கொடிய காளியன், அந்த யமுனை மடுவில் வசித்து வரும்போது (அவனது) விஷத்தின் கடுமையால் கரையிலிருந்த மரங்கள் நாசமடைந்தன. (அதன் வழியாக) ஆகாயத்தில் பறக்கும் பறவைகள் மடிந்து வீழ்ந்தன. இதைக் கண்ட தங்கள் மனம் கருணையால் உருகி நின்றது. (4)

காலே தஸ்மிந்நேகத³ா ஸீரபாணிம்
முக்த்வா யாதே யாமுநம் காநநாந்தம் ।
த்வய்யுத்³தா⁴ம–க்³ரீஷ்ம–பீ⁴ஷ்மோஷ்ம–தப்தா
கே³காகே³பாலா வ்யாபிப³ந் க்ஷ்வேலதோயம் ॥ 5 ॥

அவ்வாறிருக்க, ஒரு சமயம் தாங்கள் பலராமனின்றித் தனியாக யமுனைக் கரையில் உள்ள வனத்திற்குச் சென்றீர்கள். வெயிலின் கொடுமை தாங்காது தவித்த இடைச்சிறுவர்களும், பசுக்களும் நஞ்சு நிறைந்த அந்நீரைப் பருகினர். (5)

நஶ்யஜ்ஜீவாந் விச்யுதாந் க்ஷ்மாதலே தாந்
விஶ்வாந் பஶ்யந்–நச்யுத த்வம் த³யார்த்³ர: ।
ப்ராப்யோபாந்தம் ஜீவயாமாஸித² த்³ராக்
பீயூஷாம்பே⁴–வர்ஷிபி⁴: ஸ்ரீகடாக்ஷை: ॥ 6 ॥

அடியவர்களைக் கைவிடாத அச்சுதா! (அதனால்) உயிரிழந்து தரையில் வீழ்ந்த இடைச்சிறுவர்களையும், பசுக்களையும் கண்டு கருணை பெருகிய தாங்கள் அமுதம் பொழியும் கடைக்கண் பார்வையால் விரைவாக அவர்களைப் பிழைக்கச் செய்தீர்கள். (6)

கிம் கிம் ஜாதோ ஹர்ஷவர்ஷாதிரேக:
ஸர்வாங்கே³ஷ்–வித்யுத்தி³தா கோ³பஸங்க⁴: ।
த்³ருஷ்ட்வாக்³ரே த்வாம் த்வத்க்ருதம் தத்³–விதி³ந்தஸ்–
த்வாமாலிங்க³ந் த்³ருஷ்டநாநா–ப்ரப⁴ாவ: ॥ 7 ॥

பிழைத்தெழுந்த கோபர்கள் தங்கள் உடலின் ஒவ்வொரு அங்கங்களிலும் ஆனந்தம் பூரித்தெழுகிறது கண்டு, 'என்ன நிகழ்ந்தது? என்ன நிகழ்ந்தது?' என்று சொல்லிக் கொண்டு எதிரில் தங்களைக் கண்டதும் ஏற்கனவே பலமுறைத் தங்களது செயல் திறமைகளைக் கண்ணுற்றதால் இதுவும் தாங்களே செய்ததென்று உணர்ந்து தங்களை இறுகத் தழுவிக் கொண்டார்கள். (7)

க³வய்ஶைவம் லப்³த⁴ஜீவா: க்ஷணேந
ஸ்பீ²தாநந்த³ாஸ்–த்வாம் ச த்³ருஷ்ட்வா புரஸ்தாத் ।
த்³ராக³வவ்ரு: ஸர்வதோ ஹர்ஷப³ாஷ்பம்
வ்யாமுஞ்சந்த்யோ மந்த³முத்³யந்நிநாத³ா: ॥ 8 ॥

அவ்வாறே பசுக் கூட்டங்களும் ஒரு நொடியில் உயிர்பெற்றெழுந்து எதிரில் தங்களைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய மெதுவாகக் கனைத்துக் கொண்டே தங்களைச் சுற்றி நாற்புறமும் வந்து சூழ்ந்து கொண்டன. (8)

ரோமாஞ்சோ(அ)யம் ஸர்வதோ ந: ஶரீரே
பூ⁴யஸ்யந்த: காசித³ாநந்த³–மூர்ச்ச²ா ।
ஆஶ்சர்யோ(அ)யம் க்ஷ்வேலவேகே³ா முகுந்தே³த்–
யுக்தோ கே³பைர்–நந்தி³தோ வந்தி³தோ(அ)பூ⁴: ॥ 9 ॥

'முகுந்தா! எங்கள் உடலெங்கும் மயிர்சிலிர்க்கிறது. உள்ளத்தில் மெய்மறந்த ஆனந்த வெள்ளம் மேன்மேலும் பெருகுகிறது. இந்த விஷத்தின் கடுமை வியப்பாய் இருக்கிறதே!' என்று இடையர்கள் தங்களைக் கொண்டாடி வணங்கினார்கள். (9)

ஏவம் ப₄க்தாந் முக்தஜீவாநபி த்வம்
முக்₆தா₄பாங்கை₃–ரஸ்தரோ₄ர்ம்ஸ்–தநோஷி ।
தாத்₃ருக்₃பூ₄த–ஸ்பீ₂த–காருண்யபூ₄மா
ரோக₃ாத் பாயா வாயுகே₃ஹாதி₄நாத₂ ॥ 10 ॥

குருவாயூரப்பா! இவ்வாறு தங்களது அன்பர்கள் உயிரிழந்து போனாலும் அவர்களைப் பிழைப்பித்துத் தங்களது அழகிய கடைக்கண் பார்வையால் அவர்களது நோய்கள் அனைத்தையும் போக்கியருளுகிறீர்கள். அப்படிப்பட்ட எல்லையற்ற கருணைக்கடலான தாங்கள் என்னையும் நோயிலிருந்து காப்பாற்றியருள வேண்டுகிறேன். (10)



ஐம்பத்தைந்தாவது தசகம்

காளிய நர்த்தனம்

அத₂ வாரிணி கே₂ாரதரம் ப₂ணிநம் ப்ரதிவாரயிதும் க்ருததீ₄ர்–ப₄₃வந் ।
த்₃ருதமாரித₂ தீரக₃–நீபதரும் விஷமாருத–ஸோஷித–பர்ணசயம் ॥ 1 ॥

பகவானே குருவாயூரப்பா! பிறகு தாங்கள் யமுனை மடுவில் உள்ள கொடியோனான காளியன் என்கிற பாம்பை அங்கிருந்து விரட்டியடிக்கத் திருவுள்ளம் கொண்டு மடுவின் கரையில் விஷக்காற்றினால் வறண்டு வாடிய இலைகளோடு கூடிய ஒரு கதம்ப மரத்தின் மேல் விரைவாக ஏறினீர்கள். (1)

அதி₄ருஹ்ய பத₃ாம்பு₃ருஹேண ச தம் நவபல்லவ–துல்ய–மநோஜ்ஞ–ருசா ।
ஹ்ரத₃வாரிணி தூ₃ரதரம் ந்யபத: பரிகூ₂ர்ணித–கே₂ர–தரங்க₃க₃ணே ॥ 2 ॥

இளந்தளிர் போன்று மனதைக் கவரும் ஒளியுடன் கூடிய திருவடித் தாமரைகளால் அம்மரத்தின் மேலேறி பயங்கரமான அலைகளும், நீர்ச்சுழல்களும் நிறைந்த அம்மடுவின் தண்ணீரில் எட்டிக் குதித்தீர்கள். (2)

பு₄வநத்ரய–ப₄ாரப்₄ருதோ ப₄வதோ கு₃ருப₄ாரவிகம்பி–விஜ்ரும்பி₂ஜலா ।
பரிமஜ்ஜயதி ஸ்ம த₃ுஷ்டமதகம் தடிநீ ஜூடிதி ஸ்பு₂டகே₄ாஷவதீ ॥ 3 ॥

மூவுலகத்தின் சுமையையும் தாங்கும் தங்களுடைய கனத்தால் அம்மடுவின் தண்ணீர் கலங்கிப் பேரிரைச்சலுடன் உயரக் கிளம்பி நூறு வில்லிடையளவு கரையை நீரில் மூழ்கடித்தது. (3)

அத₂ தி₃க்ஷு விதி₃க்ஷு பரிக்ஷுபி₄த–ப்₄ரமிதோத₃ர–வாரி–நிநாத₃ப₄ரை: ।
உத₃கா–து₃த₃்₃ரு–து₃ரகா₃தி₄பதிஸ்–த்வது₃பாந்த–மஸாந்த–ருஷாந்த₄–மநா: ॥ 4 ॥

அப்பொழுது திக்கு திசைகளிலெல்லாம் சுழல்கள் எழும்படி கலக்கப்பட்ட மடுவின் தண்ணீரில் அதிகமான இரைச்சல் உண்டாயிற்று. அவ்வமயம் பாம்பரசனான காளியன் மிகுந்த

சினத்தினால் செய்வதறியாது திகைத்துத் தண்ணீரிலிருந்து வெளிக்கிளம்பித் தங்களை அணுகி வந்தான். (4)

பணஸ்ருங்க–ஸஹஸ்ர–விநி:ஸ்ருமர–ஜ்வலத்க்ருதி–கணோக்ர–விஷாம்புதரம் ।
புரத: பணிநம் ஸமலோகயதா ஹுங்ருங்கண–மஞ்ஜுந–ஸிலமிவ ॥ 5 ॥

ஆயிரம் பணாமுடிகளிலிருந்தும் தீப்பிழம்பு போன்ற கொடிய விஷத்தை வெளியே கக்குகின்ற காளியனைப் பல கொடுமுடிகளுடன் கூடிய ஒரு கரிய மை மலையோ? என்பது போல் எதிரில் கண்டீர்கள். (5)

ஜ்வலத்க்ஷி–பரிக்ஷர–துக்ரவிஷ–ஸ்வஸநோஷ்மபர: ஸ மஹாபுஜக: ।
பரிதஸ்ய பவந்த–மநந்தபலம் ஸமவேஷ்டயதஸ்புட–சேஷ்டமஹோ ॥ 6 ॥

தீப்பிழம்பொக்கும் கண்களும், கொடிய விஷத்தைப் பெருக்கும் மூச்சுக்காற்றின் வெம்மையுமுடைய அப்பெரிய பாம்பு, அளவற்ற பலம் படைத்தவரும் மனதிற்கெட்டாத செயல்புரிபவருமான தங்களை இறுகச் சுற்றிக் கொண்டு கடித்தானே! அதன்றோ வியப்பு? (6)

அவிலோக்ய பவந்த–மதாகுலிதே தடகாமிநி பாலக–தேநுகணே ।
வ்ரஜகேஹதலே–ऽப்யநிமித்தஶதம் ஸமுதீக்ஷ்ய கதா யமுநாம் பஶவ: ॥ 7 ॥

யமுனைக் கரையில் நின்று கொண்டிருந்த பசுக்களும், இடைச்சிறுவர்களும் தங்களைக் காணாது வருந்திக் கொண்டிருக்கையில் இடைச்சேரியில் உள்ள இடையர்கள் பற்பலவிதமான தீய சகுனங்களைக் கண்டு யமுனைக் கரைக்கு ஓடி வந்தார்கள். (7)

அகிலேஷ விபோ பவதீயதஶா–மவலோக்ய ஜிஹாஸுஷ ஜீவபரம் ।
பணிபந்தந–மாஶு விமுச்ய ஜவா–துதகம்பத ஹாஸஜுஷா பவதா ॥ 8 ॥

பிரபோ, குருவாயூரப்பா! தங்களுடைய நிலையைக் கண்ட எல்லோரும் துயரம் தாங்காது தத்தம் உயிரையே விடத் துணிந்தபொழுது பாம்பின் பிடியிலிருந்து விரைவாகத் தன்னைத்தானே விடுவித்துக் கொண்டு புன்சிரிப்போடு தாங்கள் வேகமாக வெளியே வந்தீர்கள். (8)

அதிருஹ்ய தத: பணிராஜபணாந்–நந்ருதே பவதா ம்ருதுபாதருசா ।
கலஶிஞ்ஜித–நூபுர–மஞ்ஜுமிலத்–கரகங்கண–ஸங்குல–ஸங்க்வணிதம் ॥ 9 ॥

பின்பு பாம்பரசனான காளியனின் படங்களின் மேல் ஏறி நின்று மிருதுவான அழகான பாதங்களின் சலங்கைகள் இனிது ஒலிக்கக் கைவளைகள் கிங்கிணி என்று ஒலிக்கத் தாங்கள் நடனமாடினீர்கள். (9)

ஹ்ருஷ்: பஶுபாஸ்–துதுஷுர்முநயோ
வவ்ருஷு: குஸுமாநி ஸுரேந்த்ரகணா: ।
த்வயி நிருத்யதி மாருதகேஹபதே
பரிபாஹி ஸ மாம் த்வமதாந்த–கதாத் ॥ 10 ॥

குருவாயூரப்பா! அவ்வாறு தாங்கள் நடனமாடுவதைக் கண்ட கோபர்கள் மிகவும் மகிழ்ந்தனர். முனிவர்கள் ஆனந்தமடைந்தார்கள். தேவர்கள் கூட்டங்கூட்டமாக வந்து தங்கள்

மேல் மலர்மாரி பொழிந்தார்கள். அப்படிப்பட்ட தாங்கள் என்னைத் தீராத நோயிலிருந்து காப்பாற்றியருள வேண்டும். (10)

ஐம்பத்தாறாவது தசகம்

காளியன் சரணாகதியும், காட்டுத் தீயும்

ருசிர–கம்பித–குண்ட³லமண்ட³ல: ஸ்ரீமரீஶ நநர்த்தித² பந்நகே³ ।
அமரதாடி³த–துந்து³பி⁴ஸ்²ரந்த³ரம் வியதி கா³யதி தை³வதயௌவதே ॥ 1 ॥

ஈசனே குருவாயூரப்பா! இவ்வாறு தாங்கள் காளியனின் தலைமேல் வெகுநேரம் நர்த்தனம் செய்தீர்கள். அப்பொழுது தங்களது குண்டலங்கள் மிக அழகாக அசைந்து ஆடின. விண்ணிலே வானவர்கள் துந்துபி முதலிய வாத்தியங்களை முழக்க தேவமாதர்கள் இனிமையாகப் பாடினர். (1)

நமதி யத்³யது³முஷ்ய ஶிரோ ஹரே பரிவிஹாய தது³ந்நத–முந்நதம் ।
பரிமது³ந் பத³பங்கருஹா சிரம் வ்யஹரது³: கரதாலமநோஹரம் ॥ 2 ॥

எல்லோருடைய பாவங்களையும் போக்கும் ஹரியே! இக்காளியனுடைய எந்தெந்த தலைகள் வணங்குகின்றனவோ அவற்றை விடுத்து மேலே உயர்த்திய தலைகளில் தங்களுடைய திருவடிக் கமலத்தை வைத்து மிதித்து, கையிலே அழகாகத் தாளம் போட்டுக் கொண்டு வெகுநேரம் விளையாடினீர்கள். அது (எல்லோருடைய) மனம் கவர்வதாக இருந்தது. (2)

த்வத்³வபு⁴க்ஷ்ண–விபு⁴க்ஷ்ண–பு²ணாக்ஷணே க்ஷ²லிதஶோணித–ஶோணிதபாது³ஸி ।
பு²ணிபதா–வவஸீத்³தி³ ஸந்நதாஸ்–தத்³பு⁴லாஸ்தவ மாத்³வ பாத்³யோ: ॥ 3 ॥

திருமகள் கேள்வனான குருவாயூரப்பா! தங்களால் தகைக்கப்பட்ட காளியனுடைய தலைகள் தொங்கிப் போயின. பெருகிய ரத்தம் மடுவின் நீரைச் சிவப்பாக்கியது. அவன் மிக்க சோர்வடைந்தபொழுது அவனது மனைவிகள் தங்கள் திருவடிகளில் சரணமடைந்தார்கள். (3)

அயி புரைவ சிராய பரிஶ்ருத–த்வத்³நுபு⁴வ–விலீநஹ்ருத்³தோ³ ஹி தா: ।
முநிபி⁴–ரப்யவநவாப்ய–பதை²: ஸ்தவைர்–நுநுவுரீஶ பு⁴வந்த–மயந்த்ரிதம் ॥ 4 ॥

ஈசனே! வெகுகாலம் முன்பே தங்களது பெருமைகளைக் கேட்டுணர்ந்து அதில் ஈடுபட்டிருந்த உள்ளம் படைத்த அவர்கள் முனிவர்களாலும் அறிய முடியாத பொருள் நிறைந்த துதிகளால் தங்கு தடையின்றித் தங்களைத் துதித்தார்கள். (4)

பு²ணிவது³க்³ண–பு⁴க்திவிலோகந–ப்ரவிகஸத்–கருணாகுலசேதஸா ।
பு²ணிபதிர்–பு⁴வதாஶ்யுத ஜீவிதஸ்–த்வயி ஸமர்பிதமூர்தி–ரவாநமத் ॥ 5 ॥

அச்சுதனே! காளியனுடைய மனைவிகளின் உளமார்ந்த பக்தியைக் கண்டு கருணை பொங்கியெழுந்த மனதோடு கூடிய தாங்கள் அந்த காளியனுக்கு உயிர்ப் பிச்சையளித்தீர்கள். அவனும் தங்களிடம் தன்னையே அர்ப்பணம் செய்து வீழ்ந்து வணங்கினான். (5)

ரமணகம் வ்ரஜ வாரிதி³–மத்³யக³ம் பு²ணிரிபுர்–ந கரோதி விரோதி³தாம் ।
இதி ப³வத்³வசநாந்–யதிமாநயந் பு²ணிபதிர்–நிரகா³–து³ரகை³: ஸமம் ॥ 6 ॥

(அப்பொழுது) தாங்கள் 'கடல் நடுவிலிருக்கும் ரமணகம் என்ற தீவிற்குச் சென்று விடு. கருடன் உனக்குத் தீங்கு (பகை) செய்யமாட்டான்' என்று கூற அதை மிகுந்த வணக்கத்துடன் ஏற்றுக் கொண்டு காளியன் மற்ற பாம்புகளுடன் (அங்கு) சென்றான். (6)

ப²ணிவதூ⁴ஜந–த³த்தமணிவ்ரஜ–ஜ்வலிதஹார–து³கூலவிபூ⁴ஷித: ।
தடகா³தை: ப்ரமதா³ஸ்ரு–விமிஶ்ரிதை: ஸமகா³த்³ர: ஸ்வஜநை:–தி³வஸாவதெ³ள ॥ 7 ॥

அதன்பிறகு நாகபத்தினிகளால் சமர்ப்பிக்கப்பட்ட பல ரத்தினங்களாலும், ஜொலிக்கும் மாலைகளாலும், பட்டாடைகளாலும் அலங்கரித்துக் கொண்ட தாங்கள் மாலையில் மடுவின் கரையில் ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் தங்களது உற்றார்–உறவினர்களை வந்தடைந்தீர்கள். (7)

நிஶி புநஸ்தமஸா வ்ரஜமந்தி³ரம் வ்ரஜிதுமக்ஷம ஏவ ஜநோத்கரே ।
ஸ்வபிதி தத்ர ப⁴வச்சரணாஶ்ரயே த³வக்ருஶாநுரருந்த⁴ ஸமந்தத: ॥ 8 ॥

(அன்று) இரவில் இருள் மிகுதியினால் கோகுலம் சென்று அடைய முடியாத கோபர்கள், தங்களது திருவடிகளையே அடைக்கலமாகப் பற்றி அம்மடுக்கரையிலேயே தூங்கினார்கள். அப்பொழுது நாற்புறமும் காட்டுத் தீ சூழ்ந்து கொண்டது. (8)

ப்ரபு⁴தி⁴தாநத² பாலய பாலயேத்–யுத³யதா³ர்த–ரவாந் பஶுபாலகாந் ।
அவிதுமாஶு பபாத² மஹாநலம் கிமிஹ சித்ரமயம் கலு தே முக²ம் ॥ 9 ॥

விழித்துக் கொண்ட கோபர்கள், '(கண்ணா) எங்களைக் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்' என்று துயரோடு கூக்குரலிட, அவர்களைக் காப்பாற்ற வேண்டி அப்பெரிய தீயை விரைந்து பருகினீர்கள். இதில் என்ன வியப்பு? இந்தத் தீயே தங்கள் திருமுகம்தானே! (தங்கள் திருவாயிலிருந்து உண்டானதுதானே.) (9)

ஶிகி²நி வர்ணித ஏவ ஹி பீததா
பரிலஸத்யது³நா க்ரியயாऽப்யஸௌ ।
இதி நுத: பஶுபை:–முதி³தை:–விபே⁴
ஹர ஹரே து³ரிதை: ஸஹ மே கு³தா³ந் ॥ 10 ॥

பிரபுவே! தீயில் முன்பு நிறத்தால் மட்டுமே பீதம் (மஞ்சள்) இருந்தது. ஆனால் இப்பொழுது செய்கையாலும் (பருகுதலான தன்மை) பீதத்துவம் விளங்குகிறது என்று கோபர்கள் மிக்க மகிழ்ச்சியோடு போற்றினார்கள். ஹரியே! எனது பாவங்களுடன், நோயையும் போக்கியருள வேண்டுகிறேன். (10)

குறிப்பு:– இங்கு 'பீத' என்னும் சொல் 'மஞ்சள் நிறம்' என்றும், 'பருகுதல்' என்றும் இருபொருள்படும்படி சிலேடையாகக் கையாளப்பட்டுள்ளது.

ஐம்பத்தேழாவது தசகம்

பிரலம்பாஸுர வதம்

ராமஸக2: க்வாபி தி3நே காமத3 ப4க3வந் க3தோ ப4வாந் விபிநம் ।
ஸுநுபி4ரபி கே3ாபாநாம் தே2நுபி4ரபி4ஸம்வ்ருதோ லஸத்3வேஷ: ॥ 1 ॥

வேண்டுவார் வேண்டுவதை அளிக்கும் பகவானே! ஒருநாள் தாங்கள் அணிகலன்களை அணிந்து கொண்டு பலராமனுடனும் இடைச்சிறுவர்களுடனும் பசுக்கள் சூழ வனத்திற்குச் சென்றீர்கள். (1)

ஸந்த3ர்ஶயந் ப3லாய ஸ்வைரம் ப்ருந்தா3வநஶ்ரியம் விமலாம் ।
காண்டீ3ரை: ஸஹ ப3லைர்–ப்3ராண்டீ3ரகமாக3மோ வடம் க்ரீட3ந் ॥ 2 ॥

பிருந்தாவனத்தின் மாசற்ற அழகை பலராமருக்குக் காட்டிக் கொண்டு கையில் கோலுடன் இடைச்சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டே 'பாண்டீரகம்' என்ற ஆலமரத்தை அடைந்தீர்கள். (2)

தாவத் தாவகநித்3ந–ஸ்ப்ருஹயாலூர்–கே3ாபமூர்திரத3யாளு: ।
தை3த்ய: ப்ரலம்பநாமா ப்ரலம்ப3ப3ாஹும் ப4வந்தமாபேதே3 ॥ 3 ॥

அதுபொழுது 'பிரலம்பன்' என்ற ஓர் அஸுரன் நெஞ்சில் இரக்கமின்றித் தங்களைக் கொல்ல விரும்பி இடைச்சிறுவன் வேடந்தாங்கி முழங்கால் வரை தொங்கும் நீண்ட திருக்கரங்கள் படைத்த தங்களை நாடி வந்தான். (3)

ஜாநந்–நப்யவிஜாநந்நிவ தேந ஸமம் நிப3த்3த4ஸௌஹார்த3: ।
வடநிகடே படுபஶுப–வ்யாப3த்3த4ம் த்3வந்த்3வ–யுத்3த4மாரப்3த4வாந் ॥ 4 ॥

அவன் அஸுரன் என்று தாங்கள் அறிந்திருந்தும் ஒன்றும் அறியாதவர் போல அவனுடன் நெருங்கி நட்புக் கொண்டு ஒருவருக்கொருவர் என்று விளையாடும் துவந்த்வ யுத்தத்தில் கைதேர்ந்தவர்களான இடைச்சிறுவர்களுடன் சேர்ந்து அந்த ஆலமரத்தடியில் விளையாடத் தொடங்கினீர்கள். (4)

கே3ாபாந் விப4ஜ்ய தந்வந் ஸங்க3ம் ப3லப3த்3ரகம் ப4வத்கமபி ।
த்வத்3ப3லபீ4ரும் தை3த்யம் த்வத்3ப3லக3த–மந்வமந்யத3ா ப4க3வந் ॥ 5 ॥

பகவானே குருவாயூரப்பா! இடையர்களை இரண்டு தொகுதிகளாகப் பிரித்து ஒன்று பலராமன் தலைமையிலும், மற்றொன்று தங்கள் தலைமையிலுமாகச் செய்து தங்களது வலிமையைக் கண்டு பயந்த அஸுரனைத் (தங்களை எதிர்த்து விளையாடாமல் இருக்கத்) தங்கள் தொகுதியிலேயே இருக்க அனுமதித்தீர்கள். (5)

கல்பித–விஜேத்ருவஹநே ஸமரே பராஜிதோ ப4க்ததா3ஸதாம் ப்ரத2யந் ॥ 6 ॥
ஸ்ரீத3ாமநமத4த்தா3: பராஜிதோ ப4க்ததா3ஸதாம் ப்ரத2யந் ॥ 6 ॥

தோற்றவர்கள் வென்றவர்களைத் தங்கள் தோளில் தூக்கிச் செல்ல வேண்டும் என்ற பந்தயத்தை வைத்துக் கொண்டு அதில் தோற்ற தாங்கள் எதிர்கட்சியில் இருந்த தங்களுக்கு

மிகவும் அன்பனான ஸ்ரீதாமா என்பவனைத் தோளிலிலே சுமந்து சென்றீர்கள். தாங்கள் அன்பர்களுக்கு அடிமை என்பதற்கு இதுவே ஓர் எடுத்துக்காட்டு. (6)

ஏவம் பூஹ்ஷு விஷ்ணுமந் பூலேஷு வஹத்ஸு வாஹ்யமானேஷு ।
ராமவிஜித: ப்ரலம்பேோ ஜஹார தம் தூரதோ பூவத்பீத்யா ॥ 7 ॥

எங்கும் நிறைந்த பரம்பொருளே! இவ்வாறு சிறுவர்கள் அனைவரும் சுமப்பவர்களாகவும், சுமக்கப்படுகிறவர்களாகவும் விளையாடினார்கள். பலராமனால் தோற்கடிக்கப்பட்ட பிரலம்பன் தங்களிடம் உள்ள பயத்தினால் பலராமரைத் தூக்கிக் கொண்டு தனியே வெகுதூரம் சென்றான். (7)

த்வத்தூரம் கமயந்தம் தம் த்ருஷ்ட்வா ஹலிநி விஹிதகரிமபரே ।
தைத்ய: ஸ்வரூபமாகாத்ய யத்ரூபாத் ஸ ஹி பூலோபி சகிதோபூத் ॥ 8 ॥

தங்களிடமிருந்து வெகுதூரம் தள்ளித் தூக்கிச் செல்வதைக் கண்ட பலராமன் தமது உடலை அதிக பளுவாக்கினார். உடனே அவ்வஸுரன் தன் சுயஉருவை எடுத்துக் கொண்டான். அதைக் கண்டு பலராமனும் சற்று பயந்தார். (8)

உச்சதயா தைத்யதநோஸ்–த்வந்முகமாலோக்ய தூரதோ ராம: ।
விகதபயோ த்ருடமுஷ்ட்யா ப்ருஷ்ட்வுஷ்டம் ஸபதி பிஷ்டவாநேநம் ॥ 9 ॥

அவ்வஸுரனுடைய உடல் மிகவும் பெரிதாக இருந்ததால் (அவன் தோளில் உட்கார்ந்திருக்கும்) பலராமன் வெகுதூரத்தில் இருப்பினும் தங்கள் திருமுகத்தைக் கண்டு பயத்தை விடுத்தார். மிகக் கொடியோனான அவ்வஸுரனைத் தன்னுடைய வலிமை மிகுந்த முஷ்டியினால் அடித்துப் பிசைந்து கொன்றார். (9)

ஹத்வா தாநவவீரம் ப்ராப்தம் பூலமாலிலிங்கிதே ப்ரேம்ணா ।
தாவந்–மிலதோர்யுவயோ: ஸிரஸி க்ருதா புஷ்பவ்ருஷ்டி–ரமரகணை: ॥ 10 ॥

அவ்வாறு அவ்வஸுரனைக் கொன்று திரும்பிய பலராமைத் தாங்கள் அன்புடன் தழுவிக் கொண்டீர்கள். இவ்வாறு நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்தபோது தங்கள் மேல் வானவர்கள் பூமாரி பொழிந்தார்கள். (10)

ஆலம்பேோ புவநாநாம் ப்ராலம்பம் நிதநமேவமாரசயந் ।
காலம் விஹாய ஸத்யோ லோலம்பருசே ஹரே ஹரே: க்லேஶாந் ॥ 11 ॥

வண்டுபோல் கரிய திருமேனி படைத்த ஹரியே குருவாயூரப்பா! அகில உலகங்கட்கும் புகலிடமான தாங்கள் இவ்வாறு பிரலம்பனை வதம் செய்தீர்கள். அப்படிப்பட்ட தாங்கள் காலம் கடத்தாது இப்பொழுதே என்னுடைய துயரங்களைப் போக்கியருள வேண்டுகிறேன். (11)

ஐம்பத்தெட்டாவது தசகம்

காட்டுத் தீயிலிருந்து காத்தல்

த்வயி விஹரணலோலே ப³ாலஜாலை: ப்ரலம்ப³–
ப்ரமத³ுஸவிலம்பே³ தே³நவ: ஸ்வைரசாரா: ।
த்ருணகுதுகநிவிஷ்டா தூ³ரதூ³ரம் சரந்த்ய:
கிமபி விபநமைஷீகாக்²ய–மீஷாம்ப³பூ⁴வு: ॥ 1 ॥

குருவாயூரப்பா! இடைச்சிறுவர்களோடு விளையாடுவதிலே ஈடுபட்டுப் பிரலம்பாஸுரனை வதைப்பதில் சற்று தாமதம் ஏற்படவே, பசுக்கள் மனம் போனபடி புல்லை விரும்பி மேய்ந்து கொண்டே வெகுதொலைவிலுள்ள 'ஐஷீகம்' (கோரைவனம்) என்கிற வனத்திற்குச் சென்றுவிட்டன. (1)

அநதி³கூ³த–நிதாக³–க்ரௌர்ய–ப்³ருந்த³ாவநாந்தாத்
ப³ஹிரித³ுபயாதா: காநநம் தே³நவஸ்தா: ।
தவ விரஹவிஷண்ணா ஊஷ்மலக்³ரீஷ்மதாப–
ப்ரஸர–விஸரத³ம்ப³ஸ்–யாகுலா: ஸ்தம்ப³மாபு: ॥ 2 ॥

வெய்யிலின் கொடுமை புகாத பிருந்தாவனத்தை விடுத்து (புல் தேடிவந்த) பசுக்கள் இவ்வனத்தையடைந்தன. தங்களை விட்டுப் பிரிந்ததாலும், வெய்யிலின் வெம்மையாலும், தாகத்தாலும் கலங்கிய அவை அசையவும் இயலாது போயின. (2)

ததா³நு ஸஹ ஸஹாயை–தூ³ரமந்விஷ்ய பௌரே
கூ³லிதஸரணி முஞ்ஜாரண்ய–ஸஞ்ஜாதகே²த³ம் ।
பஸூகுலமபி⁴வீக்ஷ்ய க்ஷிப்ரமாநேதுமாராத்
த்வயி கூ³தவதி ஹீ ஹீ ஸர்வதோऽக்³நிர்–ஜஜ்ரும்பே³ ॥ 3 ॥

சூரஸேனன் குலவிளக்கே, சௌரியே! அப்பொழுது தனது நண்பர்களுடன் பசுக்களைத் தேடி வெகுதூரம் வந்து முஞ்சிக் காட்டில் வழியறியாது துன்பமுற்று நிற்கும் பசுக்களைக் கண்டு அவற்றைத் திருப்பியழைத்துச் செல்ல விரைவாக அவைகளை நெருங்கும்போது அந்தோ! நாற்புறமும் காட்டுத் தீ சூழ்ந்து பரவியது. (3)

ஸகலஹரிதி தீ³ப்தே கே²ாரப³ாங்காரபீ⁴மே
ஸிகி²நி விஹதமார்கா³ அர்த⁴–த³க்³தா⁴ இவார்தா: ।
அஹஹ பு⁴வநபூ⁴தே²ா பாஹி பாஹீதி ஸர்வே
ஶரணமுபக³தாஸ்–த்வாம் தாபஹரதாரமேகம் ॥ 4 ॥

அந்தத் தீ கொடிய சத்தத்துடன் நாற்புறமும் பரவவே தப்பித்துச் செல்ல வழியறியாத இடையர்களும், பசுக்களும் பாதி உடல் வெந்து கருகினாற்போலத் துன்பமுற்று, 'உலகினுக்கு உற்ற உறவினனே! கண்ணா! எங்களைக் காப்பாற்று, எங்களைக் காப்பாற்று' என்று கதறி, எல்லோருடைய துயரங்களையும் துடைக்கும் தங்கள் ஒருவனையே அடைக்கலம் புகுந்தார்கள். (4)

அலமலமதி–பீ₂த்யா ஸர்வதோ மீலயத்₄வம்
த்₃ருஶமிதி தவ வாசா மீலிதாக்ஷேஷு தேஷு ।
க்வநு த₃வத₃ஹநோஸௌ குத்ர முஞ்ஜாடவீ ஸா
ஸபதி₃ வவ்ருதிரே தே ஹந்த பா₄ண்டீ₃ரதே₃ஶே ॥ 5 ॥

அப்பொழுது, 'பயப்படாதீர்கள்! பயந்தது போதும், கண்களை எல்லோரும் மூடிக் கொள்ளுங்கள்' என்று தாங்கள் கூறக் கேட்டு, அவர்கள் அனைவரும் கண்களை மூடிக் கொள்ளவே, 'காட்டுத் தீ எங்கே போயிற்று? கோரைப்புல் காடு எங்கு சென்றது?' என்று வியக்குமாறு எல்லோரும் பாண்டீர ஆலமரத்தடியில் இருந்தனர். (5)

ஜய ஜய தவ மாயா கேயமீஶேதி தேஷாம்
நுதிபி₄ருதி₃த–ஹாஸோ பத்₃ம₄நாநா–விலாஸ: ।
புநரபி விபிநாந்தே ப்ராசர: பாடலாதி₃–
ப்ரஸவநிகரமாத்ர–க்₃ராஹ்ய–க₃ர்மாநுபா₄வே ॥ 6 ॥

ஹே குருவாயூரப்பா! 'உமது வெற்றியே வெற்றி! இது என்ன மாயையோ?' என்று அவர்கள் போற்றியுரைப்பது கேட்டுப் புன்முறுவல் பூத்தவண்ணம் மேலும் பற்பல விளையாட்டுகளைச் செய்து கொண்டு வனத்தில் சஞ்சரித்தீர்கள். வெயிற்காலத்தில் பூக்கும் பாதிரி முதலிய பூக்கள் பூத்திருப்பதனாலேயே அது வேனிற்காலம் என்று அறிய முடிந்ததே தவிர, அவ்வனத்தின் அடர்த்தியால் எங்கும் குளிர்ந்து இருந்தது. (6)

த்வயி விமுக₂மிவோச்சைஸ்–தாபபா₄ரம் வஹந்தம்
தவ பா₂ஜநவத₃ந்த:பங்க–முச்சே₂ஷயந்தம் ।
தவ பு₄ஜவது₃த₃ஞ்சத் பூ₄ரிதேஜ:ப்ரவாஹம்
தப–ஸமயமநைஷீ:–யாமுநேஷு ஸ்த₂லேஷு ॥ 7 ॥

குருவாயூரப்பா! 'தாங்கள் யமுனைக் கரையில் உள்ள இடங்களிலே கழித்த வேனிற்காலம் (எப்படி இருந்தது தெரியுமா? இதோ) தங்களிடம் பக்தியற்றவர்கள் ஆத்யாத்மிகம் முதலிய துயரங்களை அனுபவிக்கையில் அவர்கள் மனதில் உள்ள துன்பத்தின் வெம்மை போலவும், தங்களைத் துதிப்பவர்களின் உள்ளத்தில் உள்ள பாவமான சேற்றை உலர்த்தும் துதியின் சூடு போலவும், தங்கள் கையில் உயர்ந்து விளங்கும் சக்கரத்தின் ஒளி போலவும் விளங்கியது. (7)

தத₃நு ஜலத₃ஜாலைஸ்–த்வத்₃வபுஸ்துல்ய–பா₄பி₄ர்–
விகஸத₃மலவித்₃யுத்–பீதவாஸோவிலாஸை: ।
ஸகலபு₄வநபா₄ஜாம் ஹர்ஷத₃ம் வர்ஷவேலாம்
க்ஷிதித₃ர–குஹரேஷு ஸ்வைரவாஸீ வ்யநைஷீ: ॥ 8 ॥

இவ்வேனிற்காலத்திற்குப் பின் வருகை புரிந்த மழைக்காலம் தங்கள் திருமேனி போன்று கறுத்த வண்ணமுடைய மேகங்களுடனும், தங்கள் இடையில் விளங்கும் மஞ்சள் பட்டாடையின் ஒளிபோன்ற மின்னல்களுடனும், உலகில் அனைவருக்கும் மகிழ்ச்சியளிப்பதாகவும் இருந்தது. அத்தகைய மழைக்காலத்தை மலைக்குகைகளில் விருப்பம்போல் விளையாடிக் கழித்தீர்கள். (8)

குஹரதலநிவிஷ்டம் த்வாம் கி³ரிஷ்ட²ம் கி³ரீந்த்³ர:
ஸிகி²குலநவகேகா–காகுபி⁴: ஸ்தோத்ரகாரீ ।
ஸ்பு²டகுடஜ–கத³ம்ப³ஸ்தோம–புஷ்பாஞ்ஜலிஞ்ச
ப்ரவித³தி⁴த்ஸு–ர்பபே⁴ஜே தே³வ கே³ஹாவர்த்த⁴நோऽஸௌ ॥ 9 ॥

தேவதேவனே! மலைகளில் சிறந்த கோவர்த்தனமலை தனது குகைகளில் புகுந்து விளையாடுகிற பெரும்புகழ் பெற்ற தங்களை (கொண்டல்களைக் கண்டு மகிழ்ந்த) மயில்களின் கே-கா-கா-கூ என்கிற புதிய புதிய ஒலிகளால் துதித்தும், மலர்ந்த மல்லிகை, கதம்பம் முதலிய பூக்குவியல்களால் புஷ்பாஞ்சலி செய்தும் சேவித்தது. (9)

அத² ஸ்ரத்³முபேதாம் தாம் ப⁴வத்³ப⁴க்தசேதோ–
விமலஸலிலபூராம் மாநயந் காநநேஷு ।
த்ருணமமலவநாந்தே சாரு ஸஞ்சாரயந் கா³:
பவநபுரபதே த்வம் தே³ஹி மே தே³ஹஸௌக்²யம் ॥ 10 ॥

இதன்பின் வந்த சரத்காலம், தங்களது பக்தர்களது உள்ளம்போலத் தெளிவான நீரோட்டமுடையதாக விளங்கிற்று. தூய்மையான அவ்வனத்தின் அழகை அனுபவித்துக் கொண்டுத் தாங்கள் புல் தரைகளில் பசுக்களை மேய்த்து விளையாடினீர்கள். ஹே குருவாயூரப்பா! தேவரீர் என் உடற்பிணியை நீக்கியருளி நல்ல உடல் நலத்தைத் தந்தருள வேண்டுகிறேன். (10)

ஐம்பத்தொன்பதாவது தசகம்

வேணுகானம்

த்வத்³வபுர்–நவகலாய–கோமலம் ப்ரேமதே³ாஹந–மஸோஷமோஹநம் ।
ப்³ரஹ்மதத்த்வ–பரசிந்முதா³த்மகம் வீக்ஷ்ய ஸம்முமுஹு²–ரந்வஹம் ஸ்த்ரிய: ॥ 1 ॥

குருவாயூரப்பா! புத்தம் புதிய காயாம்பூ போல மிக்க அழகு படைத்ததும், அன்பைப் பெருக்குவதும், அனைவரையும் மயக்குவதும், ஸத் சித் ஆனந்த மயமாகவும் உள்ள தங்களது திருமேனியில் பிரம்ம ஸ்வரூபத்தை நாள்தோறும் கண்டு இடைப்பெண்கள் தங்கள் மனதைப் பறிகொடுத்து தன்நிலை மறந்து நின்றனர். (1)

மந்மதே²ாந்மதி³த–மாநஸா: க்ரமாத்–த்வத்³விலோகந–ரதாஸ்ததஸ்தத: ।
கே³ாபிகாஸ்தவ ந ஸேஹிரே ஹரே காநநோபக³தி–மப்யஹர்முகே² ॥ 2 ॥

பாவங்களைப் போக்கும் ஸ்ரீஹரியே! நாளடைவில் அக்கோபியர்கள் தங்களிடத்தில் உண்டான அன்பினால் கலங்கிய மனதுடையவர்களாய் எப்பொழுதும், எவ்விடத்திலும் தங்களைப் பார்த்துக் கொண்டே இருக்க ஆசை மேலிட்டு, விடியற்காலையில் தாங்கள் மாடு மேய்க்கக் காட்டுக்குச் செல்வதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தவித்தார்கள். (2)

நிர்க³தே ப⁴வதி தத்த–த்³ருஷ்டயஸ்–த்வத்³க³தேந மநஸா ம்ருகே³க்ஷணா: ।
வேணுநாத³முபகர்ண்ய தூ³ரதஸ்–த்வத்³விலாஸ–கத²யாऽபி⁴ரேமிரே ॥ 3 ॥

தாங்கள் வனத்திற்குச் சென்றபின் மானைப் போன்ற மருண்ட விழிகள் கொண்ட அப்பெண்கள், தங்களிடம் வைத்த கண்களைத் திரும்பப் பெற முடியாமல் இருந்தனர். அவர்களுடைய மனமும் தங்களிடமே நிலைத்து இருந்தது. வெகுதொலைவிலிருந்து வரும் தங்களது குழலோசையை கேட்டுத் தங்களுடைய திருவிளையாடல்களைப் பற்றிப் பேசிக் கொண்டு இன்புற்றனர். (3)

காநநாந்த–மிதவாந் ப₄வாநபி ஸ்நிக்₃த₄–பாத₃பதலே மநோரமே ।
வ்யத்யயாகலித–பாத₃மாஸ்தி₂த: ப்ரத்யபூரயத வேணுநாலிகாம் ॥ 4 ॥

காட்டிற்குச் சென்ற தாங்கள் மனதிற்கினிய குளிர்ந்த நிழல் உள்ள மரத்தின் அடியில் திருவடிகளை முன்னும் பின்னுமாக மாற்றி வைத்து நின்று கொண்டு புல்லாங்குழலை வாசிக்கத் தொடங்கினீர்கள். (4)

ஒப்புநோக்குக:–

வ்யத்யஸ்தபாத₃மவதம்ஸித–பு₃ர்ஹிபு₃ர்ஹம்
ஸாசீக்ருதாநந நிவேசித வேணுரந்த்₃ரம் ।
தேஜ: பரம் பரமகாருணிகம் புரஸ்தாத்
ப்ராணப்ரயாண ஸமயே மம ஸந்நிதத்தாம் ॥

(ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருதம் 2–22)

அத₄ராஹித சாருவம்ஶ நாளா: மகுடாலம்பி மயூரா பிஞ்ச மாலா:
ஹரிநீல சிலா விபங்க நீலா: ப்ரதிபா₂ஸ்ஸந்து மமாந்திமப்ரயாணே

(ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகர் – கோபால விம்சதி 12)

மாரபா₃ண–து₄தகே₂சரீகுலம் நிர்விகார–பஶுபக்ஷி–மண்ட₃லம் ।
த்₃ராவணம் ச த்₃ருஷத₃மபி ப்ரபே₄ தாவகம் வ்யஜநி வேணுகூஜிதம் ॥ 5 ॥

பிரபுவே! தங்களது வேணுகானம் விண்ணுலக தேவமாதர்களையும் காம விகாரத்தால் மயங்கச் செய்தது. பசுக்களும், பறவைகளும் அசைவற்று நின்றன. கற்களையும் கரையச் செய்தது. (5)

ஒப்புநோக்குக:–

திரண்டு எழு தழை மழைமுகில் வண்ணன் செங்கமல மலர் சூழ் வண்டினம்போலே
சுருண்டு இருண்டகுழல் தாழ்ந்த முகத்தால் ஊதுகின்ற குழல் ஓசை வழியே
மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர
இரண்டுபாடும் துலுங்காப் புடைபெயரா எழுது சித்திரங்கள் போல நின்றனவே.

(பெரியாழ்வார் 3/6/9)

வேணுரந்த்₃ர–தரலாங்கு₃லீத₃லம் தாலஸஞ்சலித–பாத₃பல்லவம் ।
தத்ஸ்தி₂தம் தவ பரோக்ஷமப்யஹோ ஸம்விசிந்த்ய முமுஹுர்–வ்ரஜாங்க₃நா: ॥ 6 ॥

புல்லாங்குழலின் துளைகளில் அசைந்து விளையாடும் விரல் நுனிகளையும், தாளத்திற்கிசைய அசைகின்ற தளிர் போன்ற பாதங்களையும் உடைய தங்களது புல்லாங்குழல் இசைக்கும் அந்நிலையை கோபிகைகள் நேருக்கு நேர் கண்ணால் காணாமல் போனாலும், மனதால் நினைந்து நினைந்து மெய்மறந்தனர். (6)

ஒப்புநோக்குக:–

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண்கோடச் செய்யவாய் கொப்பளிப்ப
குறு வெயர்ப்புருவம் கூடலிப்பக் கோவிந்தன் குழல் கொடீதின போது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே.

(பெரியாழ்வார் 3/6/8)

நிர்விஸங்க–பு4வதா3ங்க3தா3ர்ஸினீ: கே2சீ: க3க்3ம்ருகா3ந் பஸூநபி ।
த்வத்பதா3ப்ரணயி காநநம் ச தா: தா3ந்ய–தா3ந்யமிதி நந்–வமாநயந் ॥ 7 ॥

எவ்விதத் தடையுமின்றித் தங்களது திருமேனியைத் தரிசித்த விண்ணுலக தேவமாதர்களையும், பறவைகளையும், விலங்குகளையும், பசுக்களையும் தங்களது திருவடிக் கமலங்களை அன்புடன் தாங்கிய அந்த பிருந்தாவனத்தையுமே அளவுகடந்த பேறுபெற்றவர்கள் என்று கோபிகைகள் போற்றினார்கள் அல்லவா? (7)

ஆபிபே3ய–மத3ராம்ருதம் கதா3 வேணுபு4க்த–ரஸஸோஷமேகதா3 ।
தூ3ரதோ பத க்ருதம் து3ராஸயேத்–யாகுலா முஹுரிமா: ஸமாமுஹந் ॥ 8 ॥

'புல்லாங்குழலால் எப்பொழுதும் பருகப்பட்டு எஞ்சிய அந்த அதராமிர்தத்தை எப்போதாவது ஒரு தடவையாவது நான் பானம் செய்வேனா? இவ்விச்சையோ கைக்கெட்டாதபடி வெகுதூரத்தில் உள்ளதே. கிட்டாதாயின் வெட்டன மறக்க வேண்டாமா? பேராசையால்தான் என்ன பயன்?' என்றிவ்வாறு இந்த கோபிகைகள் மனங்கலங்கி அடிக்கடி மயங்கினர். (8)

ஒப்புநோக்குக:– உண்பது சொல்லில் உலகு அளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல் வண்ணன் கைத்தலத்தே
பெண்படையார் உன் மேல் பெரும் பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே.

(நாச்சியார் திருமொழி 7/8)

ப்ரத்யஹம் ச புநரித்த2மங்க3நாஸ்–சித்தயோநி–ஜநிதாத்3நுக்3ரஹாத் ।
பூ4தி4ராக3விவஸாஸ்–த்வயி ப்ரபே4 நித்யமாபு–ரிஹ க்ருத்யமூட4தாம் ॥ 9 ॥

பிரபுவே, குருவாயூரப்பா! கோபிகைகள் இவ்வாறு ஒவ்வொரு நாளும் மன்மதனின் திருவருளால் தங்களிடமே அன்பு வைத்து அதனால் மெய்மறந்து நாள்தோறும் உலகியலில் செய்ய வேண்டிய செயல்களையும் அறியாது மயங்கினார்கள். (9)

ராக3ஸ்தாவஜ்–ஜாயதே ஹி ஸ்வபு4வாத்
மோக்ஷோபாயோ யத்நத: ஸ்யாந்ந வா ஸ்யாத் ।
தாஸாம் த்வேகம் தத்த்3வயம் லப்3தா4மாஸீத்
பா4க்3யம் பா4க்3யம் பாஹி மாம் மாருதேஸ ॥ 10 ॥

குருவாயூரப்பா! (காமம்) ஆசை என்பது உண்மையில் இயற்கையாகவே உண்டாவது. மோக்ஷத்தை அடைவதற்கு ஸாதனமான வைராக்கியம் முதலியனவோ பெரும் முயற்சி செய்தே அடையப்படுகிறது. அது முயற்சியினால் உண்டாகலாம், உண்டாகாமலும் இருக்கலாம். ஆனால்

இங்கு அந்த கோபியர்களுக்கு இரண்டும் ஒன்றாகவே ஆகிவிட்டது. அதாவது பகவானிடம் வைத்த காமமே மோக்ஷம் பெறுவதற்குக் காரணமாகவும் ஆயிற்று. அவர்கள் பெற்றதன்றோ பெரும்பேறு. குருவாயூரப்பா! என்னை நோயிலிருந்து காப்பாற்றி அருளுங்கள். (10)



அறுபதாவது தசகம்

கோபிகைகளின் துகில் கவருதல்

மதூநாதுர–சேதஸோந்வஹம் பூவதூங்க்ரித்வய–தூராஸ்யகாம்யயா ।
யமுநாதடஸீம்நி ஸைகதீம் தரலாக்ஷ்யோ கிரிஜாம் ஸமார்சிசந் ॥ 1 ॥

ஹே குருவாயூரப்பா! பகவானான தங்களிடம் காமலயப்பட்ட, மருண்டு அசையும் பார்வை உடைய கோபிகைகள், தங்கள் திருவடிகளுக்குச் சேவை செய்ய வேண்டும் என்கிற ஆசையால் யமுனைக் கரையில் மணலில் செய்த காத்யாயனீ பாவைக்குத் தினந்தோறும் பூஜை செய்தார்கள். (1)

தவ நாமகதூராதா: ஸமம் ஸுத்ருஹ: ப்ராதருபாகதா நதீம் ।
உபஹாரஸுதை–ரபூஜயந் தயிதோ நந்தஸுதோ பவேதிதி ॥ 2 ॥

கண்ணழகிகளாகிய அவர்கள் விடியற்காலையில் அனைவருமாக ஒன்றுகூடி தங்கள் திருநாமங்களையும், திருவிளையாடல்களையும் ஆசையோடு கூறிக்கொண்டு யமுனையாற்றுக்குச் சென்றனர். அங்கு 'நந்தன் மதலையாகிய கண்ணனே எங்களுக்குக் கணவனாக வரவேண்டும்' என்று வேண்டி நூற்றுக்கணக்கான பூஜா திரவியங்களால் காத்யாயனீதேவியை வழிபட்டனர். (2)

இதி மாஸமுபாஹிதவ்ரதாஸ்–தரலாக்ஷீரபிவீக்ஷ்ய தா பவாந் ।
கருணாம்ருதுலோ நதீதடம் ஸமயாஸீத் ததுநுக்ரஹேச்சயா ॥ 3 ॥

இவ்வாறு கோபிகைகள் ஒரு மாதம் விரதம் அனுஷ்டிக்கவே, அதைக் கண்ட தாங்கள் கருணையால் மனங்கனிந்து அவர்களுக்கு அருள்புரிவதற்காக யமுனைக் கரையை அடைந்தீர்கள். (3)

நியமாவஸிதௌ நிஜாம்பரம் தடஸீமந்யவமுச்ய தாஸ்ததா ।
யமுநாஜல–கேலநாகுலா: புரதஸ்த்வா–மவலோக்ய லஜ்ஜிதா: ॥ 4 ॥

விரதம் முடிந்ததும் அந்த கோபிகைகள் தங்கள் தங்கள் ஆடைகளை அவிழ்த்துக் கரையில் வைத்துவிட்டு, யமுனையில் விளையாடுவதில் ஈடுபட்டனர். அதுபோது தாங்கள் அங்கு வரக் கண்டு வெட்கமுற்றனர். (4)

த்ரபயா நமிதாநநாஸ்–வதேகா வநிதாஸ்வம்பரஜால–மந்திகே ।
நிஹிதம் பரிக்ருஹ்ய பூருஹோ விடபம் த்வம் தரஸாதிரூடவாந் ॥ 5 ॥

கோபிகைகள் அவ்வாறு வெட்கத்தினால் தலைகுனிந்து நிற்கையில் (அவர்களது) ஆடைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு அருகிலிருந்த ஒரு மரத்தின் கிளைமேல் வேகமாய் ஏறிக் கொண்டீர்கள். (5)

இஹ தாவது3பேத்ய நீயதாம் வஸநம் வ: ஸுத்3ருஶோ யதா3யத3ம் ।
இதி நர்ம–ம்ருது3ஸ்மிதே த்வயி ப்3ருவதி வ்யாமுமுஹே வதூ4ஜநை: ॥ 6 ॥

'பெண்களே! இங்கு வந்து ஆடைகளை எடுத்துச் செல்லுங்கள்' என்று தாங்கள் சிரித்துக் கொண்டே கூற, அதைக் கேட்டு அவர்கள் செய்வதறியாது மயங்கினார்கள். (6)

அயி ஜீவ சிரம் கிஶோர நஸ்–தவ தா3ஸீ–ரவஶீகரோஷி கிம் ।
ப்ரதி3ஶாம்பு3ர–மம்பு3ஜேக்ஷணேத்–யுதி3தஸ்த்வம் ஸ்மிதமேவ த3த்தவாந் ॥ 7 ॥

'அடே குழந்தாய்! நீ நீடூழி வாழ வேண்டும். உனது அடிமைகளான எங்களை ஏன் பாடாகப் படுத்துகிறாய்? தாமரைக் கண்ணா! எங்கள் ஆடைகளைக் கொடு' என்று அவர்கள் வேண்டியும் (ஆடைகளைத் தராமல்) புன்முறுவலை மட்டும் அளித்தீர்கள். (7)

அதி4ருஹ்ய தடம் க்ருதாஞ்ஜலீ: பரிஶுத்3தா4: ஸ்வகு3தீர்–நிரீக்ஷ்ய தா: ।
வஸநாந்–யகி2லாந்–யநுக்3ரஹம் புநரேவம் கி3ரமப்யதா3 முதா3 ॥ 8 ॥

அப்பொழுது அப்பெண்கள் கைகூப்பி வணங்கிக் கொண்டு கரையேறி வந்தார்கள். (ஆடையின்றி ஆற்றில் நீராடிய குற்றம், தங்களை வணங்கியதால் நற்றவமாக ஆகவே அதனால்) குற்றம் நீங்கியவர்களாகத் தங்களையே சரணமடைந்தனர். புகல் ஒன்று இல்லாத அவர்களுக்கு எல்லா ஆடைகளையும் கொடுத்து மகிழ்ச்சியோடு பின்வருமாறு அருள்மொழியும் கூறினீர்கள். (8)

விதி3தம் நநு வோ மநீஷிதம் வதி3தாரஸ்த்–விஹ யோக்3யமுத்தரம் ।
யமுநாபுலிநே ஸசந்த்3ரிகா: க்ஷணதா3 இத்யப3லாஸ்–த்வமூசிவாந் ॥ 9 ॥

'பெண்களே உங்களுடைய விருப்பம் நான் அறிவேன். இதற்குகந்த பதிலை யமுனைபின் மணல் திட்டில் நிலவுடன் கூடிய இரவுகள் கூறும்' என்று தாங்கள் அவர்களிடம் கூறினீர்கள். (9)

உபகர்ண்ய ப4வந்முக2ச்யுதம் மது4நிஷ்யந்தி3 வசோ ம்ருகீ3த்3ருஶ: ।
ப்ரணயாத்3யி வீக்ஷ்ய வீக்ஷ்ய தே வத3நாப்3ஜம் ஶநகைர்–க்3ருஹம் க3தா: ॥ 10 ॥

எம்பெருமானே! மான்விழி படைத்த அப்பெண்கள் தங்களது திருமுகத் தாமரையிலிருந்து வெளிவந்த தேனினும் இனிய சொல்லைக் கேட்டுப் பிரேமையினால் தங்கள் திருமுகத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே மெதுவாகத் (தங்கள்) வீடுகளுக்குத் திரும்பினார்கள். (10)

இதி நந்–வநுக்3ருஹ்ய வல்லவீர் விபிநாந்தேஷு புரேவ ஸஞ்சரந் ।
கருணாமிஶிரோ ஹரே ஹர த்வரயா மே ஸகலாமயாவலிம் ॥ 11 ॥

பாவங்களைப் போக்கும் ஹரியே! இவ்வாறு கோபிகைகளுக்கு அருள்புரிந்து எப்பொழுதும் போலவே வனங்களில் சஞ்சரித்த கருணைக் கொண்டலான தாங்கள் எனது நோய்க் கூட்டங்களை முழுமையாக விரைவில் போக்கியருள வேண்டும். (11)

❁〜❁〜❁

அறுபத்தோராவது தசகம்

அந்தணப் பெண்டிர்க்கு அருளுதல்

ததஸ்ச ப்₃ருந்த₃ாவநதோ²திதூ₃ரதோ
வநம் க₃தஸ்த்வம் க₂லு கோ₄பகோ₃குலை: ।
ஹ்ருத₃ந்தரே ப₄க்ததர–த்₃விஜாங்க₃நா–
கத₃ம்ப₃காநுக்₃ரஹணாக்₃ரஹம் வஹந் ॥ 1 ॥

குருவாயூரப்பா! அதன் பிறகு தாங்கள் (தங்களிடம்) மிகுந்த பக்தி கொண்ட அந்த அந்தணப் பெண்களை உய்விக்கத் திருவுள்ளம் கொண்டு ஒரு நாள் இடைச்சிறுவர்களுடனும், ஆநிரைகளுடனும் பிருந்தாவனத்திற்கு வெகுதூரத்தில் (அவர்கள் இருக்கும்) ஒரு வனத்திற்குச் சென்றீர்கள். (1)

ததோ நிரீக்ஷ்யாஸுரேண வநாந்தரே
கிஶோரலோகம் க்ஷுதி₃தம் த்₃ருஷாகுலம் ।
அதூ₃ரதோ யஜ்ஞபராந் த்₃விஜாந் ப்ரதி
வ்யஸர்ஜயோ தீ₃தி₃வி–யாசநாய தாந் ॥ 2 ॥

காப்பதற்கு மனிதர்களே இல்லாத அந்த வனத்தின் நடுவில் கோபச்சிறுவர்கள் பசியாலும், தாகத்தாலும் வருந்துவது கண்டு அங்கு அருகில் யாகம் செய்து கொண்டிருக்கும் அந்தணர்களிடம் (பசிக்கு) அன்னத்தைக் கேட்கும்படி அவர்களை அனுப்பி வைத்தீர்கள். (அன்னம் = உணவு) (2)

க₃தேஷ்வதே₂ தேஷ்வபி₄தா₄ய தே₃பி₄தா₄ம்
குமாரகேஷ்வோத₃நயாசிஷு ப்ரபோ₄ ।
ஶ்ருதிஸ்தி₂ரா அப்யபி₄நிந்யுரஶ்ருதிம்
ந கிஞ்சிதூ₃சுஶ்ச மஹீஸுரோத்தமா: ॥ 3 ॥

பிரபுவான குருவாயூரப்பா! பிறகு சிறுவர்கள் அங்கு சென்று (தாங்கள் அனுப்பியதாகத்) தங்கள் பெயரைச் சொல்லி உணவு யாசித்தபொழுது, (தங்களைத் தாங்களே சிறந்த அந்தணர்கள் என்று எண்ணிய) அந்த அந்தணோத்தமர்கள் நன்றாகக் காது கேட்டும் கேட்காதவர்கள் போல நடித்து, ஒரு பதிலும் கூறாது நின்றனர். (3)

குறிப்பு:– இங்கு 'ஶ்ருதிஸ்திரா' என்னும் சொல் வேதத்தின் கர்ம கண்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்றும், நன்கு காது கேட்கப் பெற்றவர்கள் என்றும் இரு பொருள்படுவது காண்க.

அநாத₃ராத் கி₂ந்நதி₄யோ ஹி ப₃ாலகா:
ஸமாயயுர்–யுக்தமிதா₃ம் ஹி யஜ்வஸு ।
சிராத₃ப₄க்தா: க₂லு தே மஹீஸுரா:
கத₃ம் ஹி ப₄க்தம் த்வயி தை: ஸமர்ப்யதே ॥ 4 ॥

அந்த அந்தணர்கள் (அவர்கள் அன்னம் கேட்பதைக்) கவனிக்காததால் இடைச்சிறுவர்கள் மனம் நொந்து திரும்பி வந்தனர். யாகம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு யாகத்தின் இடையில் வேறு ஒரு செயலில் மனம் செல்லாது, வேள்வியிலேயே ஊன்றி இருப்பது மிகப் பொருத்தம்தான். அந்த அந்தணர்கள், வெகுகாலமாகவே உங்களிடம் பக்தியற்றவர்கள்தானே!

(அதாவது தங்களை பகவான் என்றறியாதவர்கள்தானே!) அப்படியிருக்க அவர்கள் உங்களுக்கு எப்படி 'பக்தம்' (அன்னம்) தருவார்கள்? (4)

குறிப்பு:– 'பக்தம்' என்றால் சமைத்த அன்னம். இங்கு 'பக்தி' என்பது இரு பொருள் ஒரு சொல்லாக ஆளப்பட்டது. 'பக்தி' இல்லாதவன் எப்படி 'பக்தம்' கொடுப்பான் என்றால் அன்னம் இல்லாதவன் எப்படி அன்னம் கொடுப்பான் என்று பொருள்.

நிவேத³யத்₄வம் க்₃ருஹிணீஜநாய மாம்
தி³ஶேயுரந்நம் கருணாகுலா இமா: ।
இதி ஸ்மிதார்த்₃ரம் ப₄வதேரிதா க₃தாஸ்–
தே தா₃ரகா த₃ாரஜநம் யயாசிரே ॥ 5 ॥

'சரி நல்லது. (யாகம் செய்பவர்களின்) மனைவிமார்களிடம் (சென்று) நான் அன்னம் கேட்டு அனுப்பியதாகச் சொல்லுங்கள். கருணை நிறைந்த அவர்கள் (கட்டாயம்) அன்னம் தருவார்கள்' என்று புன்முறுவலுடன் தாங்கள் கூறவே அந்த இடைச்சிறுவர்களும் அந்தணப் பெண்களிடம் சென்று (அன்னம்) வேண்டினர். (5)

க்₃ருஹீதநாம்நி த்வயி ஸம்ப்₄ரமாகுலாஸ்–
சதுர்விதா₄ம் போ₄ஜ்யரஸம் ப்ரக்₃ருஹ்ய தா: ।
சிரம் த்₄ருத–த்வத்ப்ரவிலோகநாக்ஷிபி:
ஸ்வகைர்நிருத்₃தா₄ அபி தூர்ணமாயயு: ॥ 6 ॥

வெகுநாட்களாகவே தங்களைக் காண விருப்பம் கொண்டிருந்த அந்தப் பெண்மணிகள் தங்கள் திருப்பெயரைக் கேட்டதும் தங்கள் கணவன்மார்கள் தடுத்தும் (அதைக் கேட்காது) மிகுந்த பரபரப்போடு நான்குவிதமான பக்குவம் கொண்ட உணவை எடுத்துக் கொண்டு வெகுவேகமாகத் தங்களிடம் வந்தார்கள். (6)

குறிப்பு:– நால்வகை அன்னம்: 1. காத்யம் – கடித்து மென்று உண்பவை, 2. சோஷ்யம் – உறிஞ்சி உண்பவை, 3. லேஹ்யம் – நக்கி உண்பவை, 4. பேயம் – குடித்து உண்பவை.

விலோலபிஞ்ச²ம் சிகுரே கபோலயோ:
ஸமுல்லஸத்–குண்ட³லமார்த்₃ரமீக்ஷிதே ।
நித₄ாய ப₃ாஹூ ஸுஹ்ருத₃ம்ஸ–லீமநி
ஸ்தி²தம் ப₄வந்தம் ஸமலோகயந்த தா: ॥ 7 ॥

தங்களுடைய தலைக்கொண்டையில் மயிற்பீலி அசைந்து நெளிகிறது. குண்டலங்களின் ஒளி கன்னத்திலே பட்டு மின்னுகிறது. கண்களிலோ அன்பு பெருக்கெடுத்து வழிகிறது. நண்பனின் தோளிலே ஒரு கையைப் போட்டுக் கொண்டு (ஒய்யாரமாக) நிற்கிறீர்கள். இவ்வாறு விளங்கும் தங்களை அப்பெண்மணிகள் கண்டனர். (7)

ததா₄ ச காசித் த்வது³பாக₃மோத்₃யதா
க்₃ருஹீதஹஸ்தா த₃யிதேந யஜ்வநா ।
ததை₃வ ஸஞ்சிந்த்ய ப₄வந்தமஞ்ஜஸா
விவேஶ கைவல்யமஹோ க்ருதிந்–யஸௌ ॥ 8 ॥

அச்சமயம் தங்களிடம் வருவதற்கு முயன்ற ஒரு பெண்ணை அவளது கணவன் கைகளைப் பிடித்துத் தடுத்தான். அவள் அப்பொழுதே அவ்விடத்திலேயே தங்களையே தீவிரமாகத் தியானம் செய்து தங்கள் ஸ்வரூபத்தில் கலந்துவிட்டாள். அதாவது எளிதில் கைவல்ய பதவியை அடைந்துவிட்டாள். என்னே வியப்பு! அவள் அன்றோ புண்ணியம் செய்தவள்! (8)

ஆத³ாய பே²ஜ்யாநநுக்³ருஹ்ய தா: புநஸ்
த்வத³ங்க³–ஸங்க³–ஸ்ப்ருஹயோஜ்ஜ்ஹதீ:–க்³ருஹம் ।
விலோக்ய யஜ்ஞாய விஸர்ஜயந்–நிமாஸ்–
சகர்த² ப³ர்த்ரூநபி தாஸ்வக³ர்ஹணாந் ॥ 9 ॥

அவ்வந்தணப் பெண்கள் தங்களுடைய திருமேனியைக் கண்டு களிக்க வீடு வாசல்களையும் துறந்து வந்தது கண்ட தாங்கள், அவர்கள் அளித்த உணவுப் பண்டங்களை அருள்கூர்ந்து ஏற்றுக் கொண்டு, அவர்களைத் திரும்பவும் யாகம் செய்யும் இடத்திற்கே அனுப்பினீர்கள். மேலும் அவர்களது கணவர்கள் அவர்கள் மேல் குற்றங்காணாமல் இருக்கும்படியும் அருள் செய்தீர்கள். (9)

நிரூப்ய தே³ஷம் நிஜமங்க³நாஜநே
விலோக்ய ப³ந்திம் ச புநர்விசாரிபி³: ।
ப்ரபு³த்³த⁴–தத்த்வைஸ்–த்வமபி³ஷ்டுதோ த்³விஜைர்–
மருத்புராதீ⁴ஶ நிருந்தி⁴ மே க³தா³ந் ॥ 10 ॥

அந்த அந்தணர்கள் தங்கள் குற்றத்தையும், தங்கள் மனைவிகளின் பக்தியையும் நன்கு ஆலோசித்துணர்ந்து மனந்தெளிந்து தங்களைத் துதித்தனர். குருவாயூரப்பா! எனது நோய்களைப் போக்கி என்னைக் காப்பாற்றுங்கள். (10)

அறுபத்திரண்டாவது தசகம்

இந்திர வேள்வியைத் தடுத்தல்

கதா³சித்³ கோ³பாலாந் விஹிதமக²–ஸம்பா⁴ரவிப⁴வாந்
நிரீக்ஷ்ய த்வம் ஶௌரே மக⁴வ–மத³–மூத்⁴வம்ஸிதுமநா: ।
விஜ்ஞாநந்–நப்யேதாந் விநயம்ருது³ நந்த³ாதி³பஶ்யா–
நப்ருச்ச²: கோ வாऽயம் ஜநக ப³வதா–முத்³யம இதி ॥ 1 ॥

வஸுதேவர் மைந்தனே! ஒரு சமயம் கோபர்கள் (இந்திரனின்) வேள்விக்காகப் பொருட்களைச் சேகரிப்பதில் முனைந்திருப்பது கண்டு இந்திரனுடைய கர்வத்தைப் போக்கத் திருவுள்ளம் கொண்ட தாங்கள் அனைத்துமறிந்திருந்த போதிலும் (தங்களது தந்தையை அணுகி), 'அப்பா! நீங்கள் செய்யும் இத்தனை முயற்சிகளும் எதற்காக?' என்று நந்தகோபர் முதலிய கோபர்களைக் கேட்டீர்கள். (1)

பு₃பு₄ஷே நந்த₃ஸ்த்வாம் ஸுத நநு விதே₃யோ மகா₄வதோ
மகே₂ா வர்ஷே வர்ஷே ஸுகா₂யதி ஸ வர்ஷேண ப்ருதி₂வீம் ।
ந்ருணாம் வர்ஷாயத்தம் நிகி₂லமுபஜீவ்யம் மஹிதலே
விமேஷா–த₃ஸ்மாகம் த்ருணஸலிலஜீவா ஹி பஶவ: ॥ 2 ॥

இதைச் செவிமடுத்த நந்தகோபர், ''குழந்தாய்! இந்திரனை மகிழ்விப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் இவ்வேள்வி செய்யப்படுகிறது. இந்திரன் மழையை அளித்து பூமியைச் செழிப்புறச் செய்கிறான். பூமியில் மனிதர்களின் வாழ்வு மழையைத்தானே அண்டி உள்ளது? முக்கியமாக நமக்கும் மழைதானே பிழைப்பு? ஏனெனில் பசுக்கள் புல்லையும், தண்ணீரையும் நம்பித்தானே பிழைக்கின்றன?'' என்று கூறினார். (2)

இதி ஶ்ருத்வா வாசம் பிதுரயி பு₄வாநாஹ ஸரஸம்
தி₃கே₂தந்நோ ஸத்யம் மகா₄வஜநிதா வ்ருஷ்டிரிதி யத் ।
அத்₃ருஷ்டம் ஜீவாநாம் ஸ்ருஜதி கா₂லு வ்ருஷ்டிம் ஸமுசிதாம்
மஹாரண்யே வ்ருக்ஷா: கிமிவ பு₃லிமிந்த்₃ராய த₃த₃தே ॥ 3 ॥

ஹே குருவாயூரப்பா! தந்தையின் சொல்லைக் கேட்ட தாங்கள் மிகவும் இனிமையாகப் பேசத் தொடங்கினீர்கள். 'தந்தையே! இந்த எண்ணமே தவறு. இந்திரன் மழை பெய்விக்கிறான் என்பதே உண்மையன்று. பிராணிகளின் முற்பிறவி வினைப்பயனே (அதிர்ஷ்டமே) தேவையான மழையை அளிக்கிறது. பெரிய பெரிய காடுகளில் உள்ள மரங்கள் இந்திரனுக்காக என்ன பூஜை செய்கின்றன?' (3)

இத₃ம் தாவத் ஸத்யம் யதி₃ஹ பஶவோ ந: குலத₄நம்
தத₃ா ஜீவ்யாயாஸௌ பு₃லி–ரசலப₄ர்த்ரே ஸமுசித: ।
ஸுரேப்₄யோऽப்யுத்க்ருஷ்டா நநு த₄ரணிதே₃வா: க்ஷிதிதலே
ததஸ்தே–ऽப்யாராத்₄யா இதி ஜகு₃தி₃ த்வம் நிஜஜநாந் ॥ 4 ॥

''இங்கு பசுக்கள்தான் நமது குலதனம் என்பது உண்மைதான். அவற்றின் பிழைப்புக்கு வேண்டிய புல், நீர் இவற்றை அளிப்பது இந்த கோவர்த்தன மலையே. ஆகவே அதற்குப் பூஜை செய்வது என்பதே சரி. இம்மண்ணுலகில் தேவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் அந்தணர்கள்தான். ஆகையால் அவர்களையும் பூஜிக்கலாம்'' என்று தாங்கள் தங்களைச் சார்ந்தவர்களிடம் கூறினீர்கள். (4)

குறிப்பு:– பரம்பொருளான பகவானைச் சேவிக்காது சிறுதேவர்களான இந்திரன் முதலியவர்களைச் சேவிப்பது அற்பமான பயனை எதிர்நோக்கியே. அதை வேதமும், 'யோ வை ஸ்வாம் தேவதாம் அதியஜதே । ப்ரஸ்வாயை தேவதாயை ச்யவதே । ந பராம் ப்ராப்நோதி । பாபீயாந் பவதி' என்று கூறுகிறது.

பு₄வத்₃வாசம் ஶ்ருத்வா பு₄ஹுமதியுதாஸ்தேऽபி பஶுபாண
த்₃விஜேந்த்₃ரா–நார்சந்தோ பு₃லிமத₃து₃ருச்சை: க்ஷிதிப்₄ருதே ।
வ்யது₄: ப்ராது₄க்ஷிண்யம் ஸுப்₄ருஶ–மநமந்நாத₃ரயுதாஸ்–
த்வமாத₃: ஶைலாத்மா பு₃லிமகி₂ல–மாபீ₄ரபுரத: ॥ 5 ॥

தாங்கள் கூறியதைக் கேட்ட கோபர்கள் மிகுந்த பக்தியுடன் அந்தணப் பெருமக்களைச் சிறப்பித்து கோவர்த்தன மலைக்கும் சிறந்த முறையில் பூஜை செய்தார்கள். மிகுந்த ஆதரவுடன்

கிரிவலம் செய்து மேன்மேலும் வணங்கினார்கள். தாங்களும் மலை போன்று பெரிய உருவில் வெளிப்பட்டு இடையர்கள் எதிரில் அவர்கள் அளித்த நிவேதனம் முழுவதும் உண்டு களித்தீர்கள். (5)

அவோசஂசைவம் தாந் கிமிஹ விததஂம் மே நிகஂதிஂதம்
கிஂரீந்தஂரோ நந்வேஷ ஸ்வபஂலி–முபபுஂங்க்தே ஸ்வவபுஷா ।
அயம் கேஂத்ரோ கேஂத்ரத்ஂவிஷி ச குபிதே ரக்ஷிதுமலம்
ஸமஸ்தா–நித்யுக்த்வா ஜஹ்ருஷு–ரகி்லா கோ்குலஜு்ஷ: ॥ 6 ॥

பிறகு தாங்கள் அவர்களிடம் (பின்வருமாறு) கூறினீர்கள்— ''(பெரியோர்களே!) நான் கூறியது பொய்யா? இம்மலையரசனே நம்முன் தோன்றி நாம் அளித்த நிவேதனங்களைச் சாப்பிடுகிறது பாருங்கள். மலைகளின் பகைவனான இந்திரன் சினங்கொண்டாலும் நம் எல்லோரையும் காப்பாற்றும் திறன் படைத்தது இம்மலை.'' இதைக் கேட்டு இடையர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். (6)

பரிப்ரீதா யாதா: கூலு பூவதுஂபேதா வ்ரஜஜு்ஷோ
வ்ரஜம் யாவத்–தாவந்–நிஜமகூவிபங்கஂம் நிஶமயந் ।
பூவந்தம் ஜாநந்–நப்யதி்கரஜுஸா–ऽऽக்ராந்தஹ்ருதஂயோ
ந ஸேஹே தே்ஂவேந்த்ஂரஸ்–த்வதுஂபரசிதா–த்மோந்நதிரபி ॥ 7 ॥

கோகுலவாசிகள் அனைவரும் மிகுந்த சந்தோஷத்துடன் தங்களைப் பின்பற்றி கோகுலத்திற்குத் திரும்பிச் சென்றனர். தேவேந்திரனோ தனது யாகம் தடுக்கப்பட்டதைக் கண்டு மிகுந்த கோபங்கொண்டு, தங்களது பெருமையை அறிந்திருந்தும், தங்களாலேயே இந்திரப் பதவி பெற்றிருந்தும் ரஜோ குணத்தால் மனங்கலங்கி இச்செயலைப் பொறுத்தானில்லை. (7)

மநுஷ்யத்வம் யாதோ மது்பி்தஂபி தே்ஂவேஷ்வவிநயம்
விதஂத்தே சேந்–நஷ்டஸ்த்ரிதஂஶ–ஸதஂஸாம் கோ்ऽபி மஹிமா ।
ததஶ்ச த்ஂவம்லிஷ்யே பஶுபஹதகஸ்ய ஶ்ரியமிதி
ப்ரவ்ருத்தஸ்–த்வாம் ஜேதும் ஸ கில மகஂவா துஂர்மதஂநிதி்: ॥ 8 ॥

''மதுசூதனனாகிய பகவானே மனிதனாகத் திருவவதாரம் செய்திருந்த போதிலும் தேவர்களுக்கு எதிராக வினயமற்ற செயலைச் செய்வானேயானால், அது அவர்களது பெருமைக்கு இழுக்கு செய்தது போலல்லவா? ஆகவே இவ்விடைச் சிறுவனின் செல்வமனைத்தையும் அழித்து விடுகிறேன்'' என்று அஹங்காரத்திற்கு இருப்பிடமான தேவேந்திரன் தங்களை வெல்ல முற்பட்டான். (8)

த்வதஂாவாஸம் ஹந்தும் ப்ரலயஜலதஂா–நம்பஂரபு்வி
ப்ரஹிண்வந் பி்ப்ராண: குலிஶமய–மப்்ரேப்கஂமந: ।
ப்ரதஸ்தே்ऽந்யை–ரந்தர்தஂஹநமருதஂாத்ஂயை்–விஹஸிதோ
பூவந்மாயா நைவ த்ரிபு்வநபதே மோஹயதி கம் ॥ 9 ॥

இந்திரன் தங்களது இருப்பிடமான இடைச்சேரியை அழிக்க எண்ணி ஐராவதத்தின் மேலேறிக் கொண்டு, தனது வஜ்ராயுதத்தைக் கையிலேந்திப் பிரளய கால மேக தேவதைகளை

ஏவினான். இச்செயலைக் கண்ட அக்னி, வாயு முதலிய தேவர்கள் மனதிற்குள்ளேயே எள்ளி நகையாடினர். மூவுலகங்களுக்கும் தலைவனான குருவாயூரப்பா! தங்கள் மாயை யாரைத்தான் மயக்காது? (9)

ஸுரேந்த்₃ர: க்ருத்₃த₄ஸ்தே₃ த்₃விஜகருணயா ஸைலக்ருபயாऽப்–
யநாதங்கோऽஸ்மாகம் நியத இதி விஶ்வாஸ்ய பஶுபாந் ।
அஹோ கிம் நாயாதோ கி₃ரிபி₃தி₃தி ஸஞ்சிந்த்ய நிவஸந்
மருத்₃கோ₃ஹாதீ₃ஶ ப்ரணுத₃ முரவைரிந் மம கு₃ந்₃தாந் ॥ 10 ॥

(இடையர்களின் பயத்தைக் கண்ட) தாங்கள், 'இந்திரன் சினங்கொண்டால் என்ன? கவலை இல்லை. அந்தணர்கள் கருணையாலும், இம்மலையரசனின் அருளாலும் நமக்கு நிச்சயமாக நன்மையுண்டு' என்று கோபர்களை நம்பச் செய்து, இந்திரனுடைய எண்ணத்தை அறிந்து, 'இந்திரன் ஏன் இன்னும் வரவில்லை?' என்று சிந்தித்து, அங்கேயே காத்திருந்தீர்களே! முராரியே! குருவாயூரப்பா! என்னுடைய நோய்களைத் தீர்த்து அருளுங்கள். (10)

அறுபத்து மூன்றாவது தசகம்

கோவர்த்தன கிரியைக் குடையாகக் கொண்டமை

தத்₃ருஶிரே கில தத்க்ஷணமக்ஷத–ஸ்தநித–ஜ்ரும்பி₄த–கம்பித–தி₃க்தட: ।
ஸுஷமயா ப₄வத₃ங்கு₃துலாம் கு₃தா வ்ரஜபதே₃ராபரி வாரித₄ராஸ்த்வயா ॥ 1 ॥

அப்பொழுது கோகுலத்திற்கு மேல் எங்கும் கருமேகங்கள் சூழ்ந்தன. அந்த மேகங்கள் தங்களது திருமேனியைப்போல் காணப்பட்டன. வானில் தொடர்ந்து உண்டான இடி முழக்கத்தால் அனைத்து திசைகளும் நடுங்கின. இவையனைத்தையும் தாங்கள் பார்த்தீர்கள் அல்லவா? (1)

விபுலகரகமிஶ்ரைஸ்–தோயத₄ாரா–நிபாதைர்–
தி₃ஶிதி₃ஶி பஶுபாநாம் மண்ட₃லே த₃ண்ட்₃யமாநே ।
குபித–ஹரிக்ருதாந்–ந: பாஹி பாஹீதி தேஷாம்
வசநமஜித ஶ்ருண்வந் மா பி₃பீ₄தே–யப₄ாணீ: ॥ 2 ॥

எவராலும் வெல்லப்பட முடியாத பகவானே! பெரிய பெரிய ஆலங்கட்டியுடன் எங்கும் இடைவிடாது மழை கொட்டியது. அதனால் துன்பமடைந்த கோபர்கள், 'கிருஷ்ணா! இந்திரனுடைய சினத்திலிருந்து எங்களைக் காப்பாற்று! காப்பாற்று!' என்று அலற, அவர்களது கூக்குரலைக் கேட்ட தாங்கள் 'பயப்படாதீர்கள்' என்று அவர்களிடம் கூறினீர்கள். (2)

குல இஹ கி₂லு கே₃ாத்ரோ தை₃வதம் கே₃ாத்ரஶத்ரோர்–
விஹிதமிஹ ஸ ருந்த்₄யாத் கோ நு வ: ஸம்ஶயோऽஸ்மிந் ।
இதி ஸஹஸிதவாதீ₃ தே₃வ கே₃ாவர்த்₄த₃நாத்₃ரிம்
த்வரிதமுத₃முமூலோ மூலதோ ப₃ால–தே₃ார்ப்₄யாம் ॥ 3 ॥

'இந்த நம் கோகுலத்திற்கு (பசுக் கூட்டங்களையும், நம்மையும் காப்பாற்றும்) தெய்வம் இந்த கோவர்த்தன மலைதான். மலைகளுக்குப் பகைவனான இந்திரனிடமிருந்து தோன்றும்

நாசத்தை இந்தத் தெய்வம் கட்டாயம் தடுக்கும். இதில் உங்களுக்கு ஏன் சந்தேகம்?' என்று சிரித்துக் கொண்டே கூறிய தாங்கள், கோவர்த்தன மலையைத் தங்களது இளங்கைகளால் அடியோடு பிடுங்கித் தூக்கினீர்கள். (3)

தத₃நு கி₃ரிவரஸ்ய ப்ரோத்₃ʼருதஸ்–யாஸ்ய தாவத்
ஸிகதில–ம்ருது₃தே₃ஶே தூ₃ரதோ வாரிதாபே ।
பரிகர–பரிமிஶ்ராந் தே₄நு–கே₃பாநத₄ஸ்தா–
து₃பநித₃த₄த₃–த₃த்₃தா ஹஸ்தபத்₃மேந ஶைலம் ॥ 4 ॥

அப்படி மேலே தூக்கப்பட்ட மலையின் கீழ்ப்பகுதியில் மணற்பாங்காகவும், மெதுவாகவும், பரவலாகவும் இருந்த இடத்தில் கோபர்களைத் தங்களது உடைமைகளுடனும், பசுக்களுடனும் தங்கச் செய்து, தாங்கள் தங்களது தாமரைக் கையால் மலையைத் தாங்கி நின்றீர்கள். மலை இருந்த இடத்தில் திட்டாக இருந்ததால் மழை வெள்ளம் தொலைவிலேயே தடுக்கப்பட்டுவிட்டது. (4)

ப₄வதி வித்₄ருதஶைலே ப₃ாலிகாபி₃ர்–வயஸ்யை–
ரபி விஹிதவிலாஸம் கேலிலாபாதி₃லோலே ।
ஸவித₄மிலிததே₄நூ–ரேகஹஸ்தேந கண்டூ₃–
யதி ஸதி பஶுபாலாஸ்–தோஷமைஷந்த ஸர்வே ॥ 5 ॥

தாங்கள் ஒரு கையால் மலையைத் தூக்கிக் கொண்டும், மற்றொரு கையால் அருகில் வந்த பசுக்களை சொறிந்து கொடுத்துக் கொண்டும், இடைப்பெண்களுடனும், நண்பர்களுடனும் அபிநயத்துடன் கேலிப் பேச்சுகள் பேசிக் கொண்டும் இருந்ததைக் கண்ட கோபர்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். (5)

அதிமஹாந் கி₃ரிரேஷ து வாமகே கரஸரோருஹி தம் த₃ரதே சிரம் ।
கிமித₃மத்₃பு₄த–மத்₃ரிப₃லம் ந்விதி த்வத₃வலோகிபி₄–ராகதி₂ கே₃பகை: ॥ 6 ॥

'இம்மலையோ மிகப் பெரியதாக உள்ளது. கிருஷ்ணனோ தாமரைப் போன்ற தனது இடது கையினால் அதை நெடுநேரமாகத் தாங்கி நிற்கிறான். இது என்ன வியப்பு! ஒருக்கால் இது மலையின் மகிமையாக இருக்குமோ!' என்று தங்களைப் பார்த்து கோபர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். (6)

அஹஹ த₄ார்ஷ்ட்ய–மமுஷ்ய வடோர்–கி₃ரிம்
வ்யதி₂த–ப₃ாஹு–ரஸாவவரோபயேத் ।
இதி ஹரிஸ்த்வயி ப₃த்₃த₄விக₃்ஹணோ
தி₃வஸஸப்தக–முக்₃ரமவர்ஷயத் ॥ 7 ॥

இதைக் கண்ட இந்திரன், 'இந்தச் சிறுவனுக்குத்தான் எவ்வளவு துணிவு? இவன் கை சோர்வுற்று (நிச்சயம்) மலையைக் கீழே போட்டுவிடுவான்' என்று கர்வத்தால் நினைத்துத் தங்களிடத்தில் வெறுப்பு கொண்டு ஏழுநாட்கள் கடுமையாக மழை பெய்யச் செய்தான். (7)

அசலதி த்வயி தே₃வ பத₃ாத் பத₃ம் க₃லிதஸர்வஜலே ச க₄நோத்கரே ।
அபஹ்ருதே மருதா மருதாம் பதிஸ்–த்வத₃பி₄–ர்மங்கிததீ₄: ஸமுபாத்₃ரவத் ॥ 8 ॥

தேவதேவனே! தாங்கள் (அவ்வேழு நாட்களும்) நின்ற இடத்திலிருந்து ஓர் அடிகூட நகராது இருக்கையில் மழையெல்லாம் கொட்டித் தீர்ந்த மேகக் கூட்டங்கள் காற்றினால் விரட்டியடிக்கப்பட்டன. அப்பொழுது வானவர்கோனான இந்திரன் தங்களிடம் பயந்து அங்கிருந்து ஓடிவிட்டான். (8)

ஒப்புநோக்குக:– 'தூர்ப்பஹா' = கர்வத்தையடக்குபவன் (விஷ்ணுஸஹஸ்ரநாமம் 7/2)

ஸமமுபேயுஷி வர்ஷபூ4ரே ததா3 பஸூபதே3நுகூலே ச விநிர்க்3ஹே ।
பூ4வி விபோ4 ஸமுபாஹிதபூ4த4ர: ப்ரமுதி3தை: பஸூபை: பரிரேபி4ஷே ॥ 9 ॥

விபுவே! அந்த பெருத்த அடைமழை ஓய்ந்ததும் கோபர்களும், பசுக்கூட்டங்களும் (அங்கிருந்து) வெளியே வந்தனர். தாங்கள் அம்மலையை முன்புபோல் இருந்த இடத்திலேயே வைத்தீர்கள். இதைக் கண்ட கோபர்கள் பெருமகிழ்ச்சி கொண்டு தங்களைக் கட்டி அணைத்துக் கொண்டனர். (9)

த்3ருணிமேவ புரா த்ரூதவாநஸி க்ஷிதித்3ரோத்த3ரணே தவ க: ஸ்ரம: ।
இதி நுதஸ்த்ரித3ஸை: கமலாபதே குருபுராலய பாலய மாம் க்3தா3த் ॥ 10 ॥

''திருமகள் கேள்வனே! முன்பொரு சமயம் (வராஹ அவதாரத்தில்) தாங்கள் இப்பூமியையே தூக்கி இருக்கிறீர்கள். (அப்படியிருக்க) இச்சிறிய மலையைத் தூக்குவதில் தங்களுக்கு என்ன கஷ்டம்?'' என்று தேவர்களனைவரும் தங்களைத் துதித்தனர். அப்படிப்பட்ட குருவாயூரப்பா! என்னை நோயிலிருந்து காப்பாற்றுங்கள். (10)

ஒப்புநோக்குக:– 'குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி' (திருப்பாவை 24)

அறுபத்து நான்காவது தசகம்

ஸ்ரீகோவிந்த பட்டாபிஷேகம்

ஆலோக்ய ஸைலோத்3த4ரணாதி3ரூபம்
ப்ரப4ாவமுச்சைஸ்–தவ கோ3பலோகா: ।
விஶ்வேஶ்வரம் த்வாமபி4மத்ய விஶ்வே
நந்த3ம் ப4ஜ்ஜாதகு–மந்வபூ4ச்ச2ந் ॥ 1 ॥

குருவாயூரப்பா! கோவர்த்தன மலையைத் தூக்கியது முதலிய தங்களது பல பெருமைகளைக் கண்ட கோபர்களனைவரும் தங்களை உலகனைத்திற்கும் ஒப்பற்ற தலைவன் (உலகநாதன்) என்று போற்றியுகந்து, நந்தகோபனிடம் தங்களது ஜாதகத்தைப் பற்றி வினவினார்கள். (ஜாதகத்தில் நீர் அவதாரம் புரிந்தவர் என்பதற்குரிய நிலை ஏதாவது காணப்படுகிறதா? என்றறிய ஆவல் கொண்டு வினவினர் என்று கருத்து.) (1)

க்3ர்கோ3தி3தோ நிர்க்3தி3தோ நிஜாய வர்க்3ய தாதேந தவ ப்ரப4ாவ: ।
பூர்வாதி3கஸ்–த்வய்யநுராக3 ஏஷா–மைதி4ஷ்ட தாவத் ப3ஹுமாநப4ார: ॥ 2 ॥

(இதைச் செவியுற்ற) தங்களது தந்தை நந்தன் (பெயரிடும் வைபவத்தில் – நாமகரண காலத்தில்) கர்காசாரியார் (மிகவும் ரகசியமாகக்) கூறிய பெருமைகளை (இப்பொழுது) தனது

உற்றார்–உறவினரிடம் கூறினார். (அதைக் கேட்ட) அவர்களுக்குத் தங்களிடம் முன்பிருந்ததைவிட அன்பும், பெருமதிப்பும் அதிகமாக வளர்ந்தன. (2)

ததோऽவமானோதி³த–தத்வபே³தா³:
ஸுராதி⁴ராஜ: ஸஹ தி³வ்யக³வ்யா ।
உபேத்ய துஷ்டாவ ஸ நஷ்டக³ர்வ:
ஸ்ப்ருஷ்ட்வா பத³ாப்³ஜம் மணிமௌலிநா தே ॥ 3 ॥

அதன் பிறகு தேவேந்திரன் தன் ஆணவம் இழந்து, தான் பட்ட அவமானத்தால் உண்மை உணர்ந்து, (தேவலோகப் பசுவாகிய) காமதேனுவையும் உடன் அழைத்து வந்து, தனது ரத்தின கீரிடம் தங்கள் பாத கமலங்களில் படும்படி விழுந்து வணங்கித் தங்களைத் துதித்தான். (3)

ஸ்நேஹ–ஸ்நுதைஸ்–த்வாம் ஸுரபி⁴: பயோபி⁴ர்–
கோ³விந்த³நாமாங்கித–மப்⁴யஷிஞ்சத் ।
ஐராவதோபாஹ்ருத–தி³வ்யக³ங்கா³–
பாதோ³பி⁴ரிந்த்³ரோऽபி ச ஜாதஹர்ஷ: ॥ 4 ॥

அப்பொழுது தேவலோகப் பசுவாகிய காமதேனு அன்பின் மிகுதியால் தன்னிடம் பெருகிவரும் பால் கொண்டு தங்களை அபிஷேகம் செய்து, 'பசுக்கூட்டங்கள் அனைத்திற்கும் தலைவன்' என்று பொருள்படும்படி 'கோவிந்தன்' என்று பெயரையும் சூட்டியது. வானவர்கோனும் மிக்க மகிழ்ச்சி கொண்டு ஐராவதத்தால் கொண்டு வரப்பட்ட ஆகாச கங்கை தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தான். (4)

ஜக³த்ரயேऽபி த்வயி கோ³குலேऽபி
தத³ாऽபி⁴ஷிக்தே ஸதி கோ³பவாட: ।
நாகேऽபி வைகுண்ட²பதே³ऽப்–யலப்⁴யாம்
ஸ்ரியம் ப்ரபேதே³ ப³வத: ப்ரபா⁴வாத் ॥ 5 ॥

மூவுலகிற்கும் நாயகனாகிய தாங்கள் கோகுலத்திற்கு நாயகனாக அபிஷேகம் செய்யப்பட்டபோது, அந்த கோகுலம் தங்களது பெருமையால் வானுலகிலும், வைகுண்டத்திலும்கூட அடைய முடியாத பெருஞ்செல்வத்தைப் பெற்றதாக ஆயிற்று. (5)

கதா³சித³ந்தர்–யமுநம் ப்ரபா⁴தே ஸ்நாயந் பிதா வாருணபூருஷேண ।
நீதஸ்–தமாநேது–மகா³: புரீம் த்வம் தாம் வாருணீம் காரணமாத்யரூப: ॥ 6 ॥

ஒரு சமயம் தங்கள் தந்தை நந்தகோபர் (ஏகாதசியன்று உபவாசம் இருந்து துவாதசியன்று வேளை தெரியாமல்) விடியற்காலைக்கு முன்பே யமுனையில் அமிழ்ந்து நீராடுகையில் வருணதேவருடைய தூதன் ஒருவனால் (வருண உலகத்திற்கு) அழைத்துச் செல்லப்பட்டார். பூபாரத்தைப் போக்குவான் வேண்டி மனித உருத்தாங்கி வந்த தாங்கள் அவரைத் திருப்பி அழைத்து வர வருண உலகத்திற்குச் சென்றீர்கள். (6)

ஸஸம்ப்⁴ரமம் தேந ஜலாதி⁴பேந ப்ரபூஜிதஸ்–த்வம் ப்ரதிக்³ருஹ்ய தாதம் ।
உபாக³தஸ்–தத்க்ஷண–மாத்மகே³ஹம் பிதாऽவத³த் தச்சரிதம் நிஜேப்⁴ய: ॥ 7 ॥

கடலரசனான வருணன் (தங்களைக் கண்டதும்) மிகவும் பரபரப்படைந்து வரவேற்று உபசரித்துப் பூசனை செய்தான். தாங்களும் தங்கள் தந்தையைத் திருப்பி அழைத்துக் கொண்டு உடனே தங்களது வீடு அடைந்தீர்கள். இந்நிகழ்ச்சியைத் தங்களது தந்தை உறவினர்க்குக் கூறினார். (7)

ஹரிம் விநிஶ்சித்ய பவந்தமேதாந்
பு₄வத்–பதா₃லோகந–பூ₃த்₃ய₄த்ருஷ்ணாந் ।
நிரீக்ஷ்ய விஷ்ணோ பரமம் பதம் தத்₃–
து₃ராபமந்யைஸ்–த்வமதீ₃த்₃ருஶஸ்–தாந் ॥ 8 ॥

எங்கும் நிறைந்த பரம்பொருளே! தங்களை ஸாக்ஷாத் பகவான் ஸ்ரீவிஷ்ணுவே என்று உறுதியாகத் தீர்மானித்த அந்த கோபர்கள், தங்களுடைய இருப்பிடமான ஸ்ரீவைகுண்டத்தை தரிசிக்க ஆசை கொண்டுள்ளது கண்ட தாங்கள், அவர்களுக்கு மற்றவர்களால் (பக்தியற்றவர்களால்) அடைய முடியாத அந்த உயர்ந்த இடமாகிய பரமபதத்தைக் காண்பித்தீர்கள். (8)

ஸ்புரத்பராநந்த₃–ரஸப்ரவாஹ–
ப்ரபூர்ண–கைவல்ய–மஹாபயோதௌ₄ ।
சிரம் நிமக்₃நா: கூ₂லு கே₃பஸங்கா₄ஸ்–
த்வயைவ பூ₄மந் புநருத்₃த்₄ருதாஸ்தே ॥ 9 ॥

பரிபூர்ணானந்த ஸ்வரூபனே! அந்த கோபர்களனைவரும் எங்கும் ஆனந்தமே நிரம்பிய மோக்ஷமாகிய அமுதக் கடலில் மூழ்கி (மெய்மறந்த நிலையில்) வெகுநேரம் கைவல்ய இன்பத்தைப் பருகி நின்றார்கள். அப்படியிருக்கையில் அவர்களை நீங்களே மறுபடியும் இவ்வுலகியலுக்குக் கொண்டு வந்தீர்கள் அல்லவா! (9)

கரபூ₃ரவதே₃வம் தே₃வ குத்ராவதாரே
நிஜபத₃மநவாப்யம் த₃ர்ஶிதம் பு₄க்திபு₄ஜாம் ।
ததி₃ஹ பஶுபரூபீ த்வம் ஹி ஸாக்ஷாத் பராத்மா
பவநபுரநிவாஸிந் பாஹி மாமாமயேப்₄ய: ॥ 10 ॥

தேவதேவனே! தாங்கள் வேறு எந்த அவதாரத்தில்தான் அடைதற்கரிய உமது இருப்பிடமாகிய ஸ்ரீவைகுண்டத்தை (பரமபதத்தை) இவ்வாறு உள்ளங்கை நெல்லிக்கனி போல் பக்தர்கட்குக் காண்பித்தீர்கள்? அதாவது இந்த கோபனாக வந்த அவதாரத்தில் தானே காண்பித்தீர்கள்? ஆகவே நீங்கள் தான் உண்மையிலேயே ஸாக்ஷாத் பகவான். குருவாயூரப்பா! என்னை நோயிலிருந்து காத்தருளுங்கள். (10)

~❁~❁~

அறுபத்தைந்தாவது தசகம்

குரவைக் கூத்து

ராஸக்ரீடை (1)

ஸ்ரீமத்பாகவதத்தில் 'ராஸபஞ்சாத்யாயி' என்ற ஐந்து அத்தியாயங்களில் ராஸக்ரீடை வர்ணிக்கப்படுவது போலவே, இங்கும் ஸ்ரீபட்டதிரி 65வது தசகம் முதல் 69வது தசகம் வரை ராஸக்ரீடையை வர்ணிக்கிறார்.

கே3ாபீஜநாய கதி3தம் நியமாவஸாநே
மாரோத்ஸவம் த்வமத3 ஸாத4யிதும் ப்ரவ்ருத்த: ।
ஸாந்த்3ரேண சாந்த்3ரமஹஸா ஸிஸிரீக்ருதாஸு
ப்ராபூரயோ முரலிகாம் யமுநாவநாந்தே ॥ 1 ॥

குருவாயூரப்பா! கோபிகைகள் காத்யாயனீ விரதத்தை முடித்தபொழுது, அவர்களிடம் தாங்கள் (வருகிற சரத்ருது காலத்தில் பௌர்ணமி இரவில் தங்களது விருப்பம் ஈடேறும் என்று) கூறியபடியே, குரவைக் கூத்து (ராஸக்ரீடை) நிகழ்த்த எண்ணி, பூர்ண நிலவினால் எங்கும் குளிர்ந்திருந்த யமுனைக் கரையில் உள்ள வனத்தில் வேணுகானம் செய்தீர்கள். (1)

ஸம்மூர்ச2நாபி4ருதி3த–ஸ்வரமண்ட3லாபி4:
ஸம்மூர்ச2யந்தமகி2லம் பு4வநாந்தராலம் ।
த்வத்3வேணுநாத3முபகர்ண்ய விபே4 தருண்யஸ்–
தத்தாத்3ருஶம் கமபி சித்தவிமோஹமாபு: ॥ 2 ॥

பிரபோ குருவாயூரப்பா! தங்கள் வேய்குழலிலிருந்து வெளி எழுந்த நாதம் சப்தஸ்வரங்களின் உண்மை நிலையை விளக்குவதாக உலகனைத்தையும் மயங்கச் செய்தது. அதைச் செவிமடுத்த இளம்பெண்கள் விளக்க முடியாத ஏதோ ஒருவிதமான மதி மயக்கத்தை அடைந்தனர். (2)

தா கே2ஹக்ருத்யநிரதாஸ்–தநயப்ரஸக்தா:
காந்தோபஸேவநபராஸ்ச ஸரோருஹாக்ஷ்ய: ।
ஸர்வம் விஸ்ருஜ்ய முரலீரவ–மோஹிதாஸ்தே
காந்தாரதே3ஶமயி காந்ததே3நா ஸமேதா: ॥ 3 ॥

அனைவரையும் கவரும்படியான திருமேனி உடைய குருவாயூரப்பா! தாமரை போன்ற திருக்கண்கள் படைத்த அந்த இளம்பெண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஒரு சிலர் குழந்தைகளைச் சீராட்டிக் கொண்டிருந்தனர். வேறு சிலர் கணவனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தனர். ஆனால் வேணுநாதத்தைச் செவிமடுத்து மயங்கிய அவர்கள் அனைத்து வேலைகளையும் விடுத்துத் தாங்கள் குழலூதும் இடமான வனத்திற்கு ஓடி வந்து ஒருங்கு கூடினர். (3)

ஒப்புநோக்குக:– ஸ்ரீமத்பகவத்கீதையின் சரம சுலோகம் இங்கே ஒப்புநோக்குதற்குரியது.

ஸர்வத4ர்மாந்பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥

ஒவ்வொரு ஜீவன்களுக்கும் யோக சரீரம், போக சரீரம் என்று இரண்டு உண்டு. இது ஜீவர்களுக்குத் தெரியாது. இங்கு கோபிகைகளின் போக சரீரம் வீட்டிலிருக்க யோக சரீரம் மட்டும் பகவானிடம் வந்தது. அல்வாறு இல்லாவிட்டால் கோகுலத்தில் ஒரு பெரிய கலகமேயன்றோ நடந்திருக்கும்?

இக்கருத்தை ஸ்ரீமத்பாகவதம் 10–33–38ல் காணலாம்.

நாஸூயந் க்₂லு க்ருஷ்ணாய மோஹிதாஸ்தஸ்ய மாயயா ।
மந்யமாநா: ஸ்வபார்ச்வஸ்தா₂ந் ஸ்வாந் ஸ்வாந் த₃ாராந் வ்ரஜௌகஸ: ॥

பகவானுடைய மாயையால் மோகமடைந்த கோபர்கள் தங்கள் மனைவிமார்கள் தங்கள் அருகிலேயே இருப்பதாக நினைத்து ஸ்ரீகிருஷ்ணனிடம் பொறாமை கொள்ளவில்லை.

காஸ்சிந்–நிஜாங்க₃பரிஷ்வ₄ண–மாத₃தா₃நா
வேணுப்ரணாத₃–முபகர்ண்ய க்ருதார்த₄பூ₄ஷா: ।
த்வாமாக₃தா நநு ததை₂வ விபூ₄ஷிதாப்₄யஸ்–
தா ஏவ ஸம்ருருசிரே தவ லோசநாய ॥ 4 ॥

சிலர் தங்கள் உடலில் நகைகளைப் பூட்டிக் கொண்டிருந்தனர். அப்போது குழலோசையைக் கேட்ட அவர்கள் பாதி நகையை அணிந்தவர்களாக வந்து சேர்ந்தனர். முழுவதுமாக நன்கு அலங்கரித்துக் கொண்டவர்களைக் காட்டிலும் (பாதி அலங்கரித்துக் கொண்ட) அவர்கள்தான் தங்கள் கண்ணிற்கு அதிகம் அழகு படைத்தவர்களாகத் தோன்றினார்கள். (பகவானிடம் வைத்த அன்பின் திறன் அவர்களை உடலையே மறக்கச் செய்துவிட்டதல்லவா?) (4)

ஹாரம் நிதம்ப₃பு₄வி காசந த₄ாரயந்தீ
காஞ்சீம் ச கண்ட₂பு₄வி தே₃வ ஸமாக₃தா த்வாம் ।
ஹாரித்வ–மாத்மஜக₃நஸ்ய முகுந்த₃ துப்₄யம்
வ்யக்தம் ப₃பூ₄ஷ இவ முக்₃த₄முகீ₃ விஸோஷாத் ॥ 5 ॥

தேவதேவா! ஒரு கோபிகை தனது இடையில் மாலையையும், கழுத்தில் ஒட்டியாணத்தையும் அணிந்து கொண்டு தங்களிடம் வந்தாள். முகுந்தனே! அவ்வாறு அவள் வந்தது அவ்வழகி தன்னிடையின் கவர்ச்சியை, மாலையணிந்துள்ள அழகைத் தங்களுக்கு வெளிப்படையாகச் சொல்வது போலிருந்தது. (5)

குறிப்பு:– இங்கு 'ஹாரித்வம்' என்ற சொல்லை 'மாலையுடைமை', 'கவர்ச்சி' என்ற இரு பொருளில் கவி சிலேடையாகக் கூறியுள்ளார்.

காசித் குசே புநரஸஜ்ஜித–கஞ்சுலீகா
வ்யாமோஹத: பரவதூ₄பி₄–ரலக்ஷ்யமாணா ।
த்வாமாயயௌ நிருபம–ப்ரணயாதிபா₄ர–
ராஜ்யாபி₄ஷேகவித₄யே கலஹீத₄ரேவ ॥ 6 ॥

வேறொருத்தி அன்பின் மயக்கத்தால் மார்பின் மேல் ரவிக்கையணியாமலேயே மற்ற பெண்களுக்குத் தெரியாமல் உங்களிடம் ஓடி வந்தாள். அது உவமை கூற முடியாத பிரேமையாகிற அரசுக் கட்டிலில் தங்களை முடிசூட்டுவதற்கு (பட்டாபிஷேகம் செய்வதற்கு) இரு கலசங்களைத் தாங்கி வந்தது போலிருந்தது. (6)

காஸ்சித் க்₃ருஹாத் கில நிரேது–மபாரயந்த்யஸ்–
த்வாமேவ தே₃வ ஹ்ருத்₃யே ஸுத்₃ருட₃ம் விபா₂வ்ய ।
தே₃ஹம் விதூ₄ய பரசித்–ஸு₂கா₃பமேகம்
த்வாமாவிஸுந் பரமிமா நநு த₃ந்யத₃ந்யா: ॥ 7 ॥

தேவதேவனே! சில கோபிகைகள் (தங்கள் உறவினர்களால் தடுக்கப்பட்டு) வீட்டிலிருந்து வெளியே வரமுடியாமல் (அங்கிருந்தபடியே) தங்களைத் தமது இதயத்தில் மிகுந்த அன்புடன் நினைத்து ஸ்தூலமான இவ்வுடலை உதறித் தள்ளி (மாயைக்கப்பாற்பட்ட) ஸத் சித் ஆனந்தமயமான, இரண்டற்ற பரப்பிரம்மமான தங்களிடம் லயித்துவிட்டார்கள். இவர்களன்றோ கிடைத்தற்கரிய பெரும்பேறு பெற்றவர்கள்! (7)

ஜாராத்மநா ந பரமாத்மதயா ஸ்மரந்த்யோ
நார்யோ க₃தா: பரமஹம்ஸக₃திம் க்ஷணேந ।
தம் த்வாம் ப்ரகாஸ–பரமாத்மதநும் கத₂ஞ்சிச்–
சித்தே வஹந்நம்ருத–மஸ்ரம–மஸ்நுவீய ॥ 8 ॥

கோபிகைகள் தங்களைப் பரமாத்மா என்றறிந்து தியானிக்காது, மனிதன் – ஒரு கோபன் என்ற பாவனையிலேயே காதலாகி நினைந்து கசிந்துருகி துறவிகள் அடையும் (மோக்ஷத்தை) வீடுபேற்றையடைந்தனர். அப்பேர்ப்பட்ட ஒளி மிகுந்த நேருக்கு நேர் காணப்படுகின்ற தங்களது பரமாத்ம ஸ்வரூபத்தை எப்படியாகிலும் உள்ளத்தில் நிலைநிறுத்தித் தியானித்து இறவாமையை (மோக்ஷத்தை) எளிதில் நான் அடையும்படி அருள்புரிய வேண்டுகிறேன். (8)

ஒப்புநோக்குக:–

காமம் க்ரோத₄ம் ப₄யம் ஸ்நேஹமைக்யம் ஸௌஹ்ருத₃மேவ ச ।
நித்யம் ஹரௌ விதத₃தோ யாந்தி தந்மயதாம் ஹி தே ॥
(ஸ்ரீமத்₃ பா₄க₃வதம் 10–29–15)

ஆசை, கோபம், பயம், நட்பு, உறவு, நல்லெண்ணம் என்று ஏதாவது ஒரு எண்ணத்தை கிருஷ்ணனிடம் தொடர்ந்து கொள்பவர் கிருஷ்ணனாகவே மாறிவிடுவர்.

அப்₄யாக₃தாபி₄–ரபி₄தோ வ்ரஜ–ஸுந்த₃ரீபி₄ர்–
முக்₃த₄–ஸ்மிதார்த்₃ர–வத₃ந: கருணாவலோகீ ।
நிஸ்ஸீமகாந்தி–ஜலதி₄ஸ்–த்வமவேக்ஷ்யமாணோ
விஸ்வைகஹ்ருத்₃ய ஹர மே பவநேஸ ரோகா₃ந் ॥ 9 ॥

உலகம் மயங்கும் அழகு படைத்தவரே! குருவாயூரப்பா! நாற்புறமும் சூழ்ந்து நின்ற கோபிகைகள், புன்முறுவலுடன் விளங்கும் தங்கள் திருமுக மண்டலத்தைக் கண்டனர். தாங்கள் அவர்களைக் கருணை ததும்பும் கண்களால் திரும்பக் கண்டீர்கள். எல்லையற்ற அழகுக் கடலே! ஈசனே! எனது நோய்களைப் போக்கியருளுங்கள். (9)

அறுபத்தாறாவது தசகம்

ராஸக்ரீடை (ii)

உபயாதாநாம் ஸுத்3ருஶாம் குஸுமாயுத4–ப3ாணபாத–விவஶாநாம் ।
அபி4வாஞ்சி2தம் வித4ாதும் க்ருதமதிரபி தா ஜக்3ாத2 வாமமிவ ॥ 1 ॥

கண்ணழகு படைத்த அக்கோபிகைகள் காமனது மலர்க் கணைகளால் தாக்கப்பட்டு தன்வயமிழந்து, தங்களை நாடி வந்தனர். அவர்களது விருப்பத்தை நிறைவேற்றி வைக்க மனம் கொண்டவராகத் தாங்கள் இருந்தபோதிலும், அதை விரும்பாதவர்போல மறைத்து மாற்றிப் பேசினீர்கள். (1)

க்3க்3நக்3தம் முநிநிவஹம் ஶ்ராவயிதும் ஜகி3த2 குலவதூ4த4ர்மம் ।
த4ர்ம்யம் க்3லு தே வசநம் கர்ம து நோ நிர்மலஸ்ய விஶ்வாஸ்யம் ॥ 2 ॥

நற்குலப் பெண்டிர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து தர்மங்களையும் விண்ணில் கூடியிருக்கும் முனிவர் குழாம் கேட்கும்படியாகத் தாங்கள் கூறினீர்கள். பற்றற்ற தங்களுடைய திருவாக்கு என்னவோ தர்மத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால் செய்கையோ நம்பமுடிவதாக இல்லையே? (அதாவது பகவான் கூறியனவற்றை நடைமுறையில் கொண்டு வர இயலும். ஆனால் செய்கைகளோ மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக உள்ளதால் பின்பற்றக் கூடியனவாக இல்லையே? என்பது கருத்து.) (2)

ஆகர்ண்ய தே ப்ரதீபாம் வாணீமேணீத்3ருஶ: பரம் தீ3நா: ।
மா மா கருணாஸிந்தோ4 பரித்யஜேத்–யதிசிரம் விலேபுஸ்தா: ॥ 3 ॥

(முன்னுக்குப்பின் முரணாகத் தோன்றும்) தங்களுடைய மாறுபட்ட சொற்களைக் கேட்ட மான்விழி படைத்த அக்கோபிகைகள் மிகவும் வருந்தி, 'கருணைக்கடலே! வேண்டாம். எங்களை விட்டுவிட வேண்டாம்' என்று வெகுநேரம் புலம்பினார்கள். (3)

தாஸாம் ருதி3தை:–லபிதை: கருணாகுலமாநஸோ முராரே த்வம் ।
தாபி4: ஸமம் ப்ரவ்ருத்தோ யமுநா–புலிநேஷு காம–மபி4ரந்தும் ॥ 4 ॥

முரன் என்ற அரக்கனைக் கொன்றவரே! அவர்களது அழுகையையும், புலம்புதலையும் கண்ட தாங்கள் மிகவும் இரக்கம் கொண்டு, யமுனைக் கரை மணல் திட்டுகளில் அவர்களோடு மனம்போல் விளையாடத் தொடங்கினீர்கள். (4)

சந்த்3ரகர–ஸ்யந்த3லஸத்–ஸுந்த3ர–யமுநாதடாந்த–வீதீ3ஷு ।
கே3ாபீஜநோத்தா3ரீயை–ராபாதி3த–ஸம்ஸ்தரோ ந்யஷீத3ஸ்–த்வம் ॥ 5 ॥

சந்திரனின் பூர்ண அமுதப்பெருக்கால் அழகு மிளிரும் யமுனைக் கரையில் கோபிகைகள் தங்கள் மேலாடைகளினால் தங்களுக்கு விரிப்பு விரிக்க, தாங்கள் அதன் மேல் அமர்ந்து கொண்டீர்கள். (5)

ஸுமது4ர–நர்மாலபநை: கரஸங்க்3ரஹணைஶ்ச ஸும்ப3நோல்லாஸை: ।
க்3ாட4ாலிங்க3நஸங்கை3ஸ்–த்வமங்க3நாலோக–மாகுலீ–சக்ருஷே ॥ 6 ॥

இனிமையான விளையாட்டுக் கேலிப் பேச்சுக்கள் பேசியவாறே அவர்களது கைகளைப் பிடித்துக் கொண்டு இறுகத் தழுவி முத்தமிட்டு, அவர்களை மிகவும் இன்புறச் செய்தீர்கள். (6)

வாஸோஹரணதி³நே யத்³ வாஸோஹரணம் ப்ரதிஶ்ருதம் தாஸாம் ।
தத³பி விபே⁴ரஸவிவஶ–ஸ்வாந்தாநாம் காந்தஸுப்⁴ருவா–மதூ³தா³: ॥ 7 ॥

மனதிற்கினியனே! விபோ! முன்பு வஸ்திராபஹரண தினத்தில் அவர்களுக்குத் தாங்கள் வாக்களித்திருந்தபடி சிருங்கார ரஸத்தில் மூழ்கித் தங்களையே மறந்த நிலையில் இருக்கும் அழகு கோபிகைகளின் வஸ்திரங்களை அபகரித்தீர்கள். (7)

கந்த³லித–கர்ணிகாரமலேஶம் குந்த³ம்ருது³–ஸ்மேரவக்த்ர–பாதே²ாஜம் ।
நந்த³ஸுத த்வாம் த்ரிஜகத்–ஸுந்த³ர–முபகூஹ்ய நந்தி³தா பா³லா: ॥ 8 ॥

நந்தகுமாரா! தங்களுடைய உடலிலோ பனித்துளிகள் போன்று வியர்வை துளிர்த்து வருகின்றன. திருமுகமோ குந்தமலர் போன்று ஒளி மிகுந்து புன்முறுவல் நிரம்பி மிளிர்கிறது. இப்படி மூவுலகும் மயங்கும் அழகு படைத்த தங்களைக் கட்டித் தழுவி பேரானந்தத்தை அடைந்தனர் அக்கோபிகைகள். (8)

விரஹேஷ்–வங்கா³ரமய: ஶ்ருங்கா³ரமயஶ்ச ஸங்க³மே ஹி த்வம் ।
நிதராமங்கா³ரமயஸ்–தத்ர புந: ஸங்க³மேঽபி சித்ரமித³ம் ॥ 9 ॥

குருவாயூரப்பா! தங்களைவிட்டுப் பிரிவு ஏற்படுமானால் அது நெருப்பு போன்று வெம்மையளிப்பதாகவும், தங்களோடு கூடும்போது அது சிருங்கார ரஸ மிகுதியால் இன்பமளிப்பதாகவும் இருக்கிறது. ஆனால் தங்களோடு கூடும்போதும் அங்காரமயமாக (வெம்மையளிப்பதாக) இருக்கிறதே! இது என்ன வியப்போ? (கோபிகைகளை அன்பின் அணைப்பினால் – சிருங்கார ரஸத்தினால் உள்ளும், புறமும் மகிழச் செய்தார் பகவான் என்பது கருத்து.) (9)

ராத⁴ாதுங்க³பயோத⁴ர–ஸாது³பரீரம்ப⁴–லோலுபாத்மாநம் ।
ஆராத⁴யே ப⁴வந்தம் பவநபுராதீ⁴ஶ ஶமய ஸகலகா³ந் ॥ 10 ॥

குருவாயூரப்பா! ராதையின் உயர்ந்த திருமுலைத்தடங்களைக் கட்டிக் கொள்வதிலே மிக்க விருப்பங்கொண்ட (ராதா கிருஷ்ணனாகிற) தங்களை வணங்குகிறேன். எனது அனைத்து நோய்களையும் போக்கியருள வேண்டுகிறேன். (10)

குறிப்பு:– ஸ்ரீமத்பாகவத்தில் ஸ்ரீராதையின் பெயரே காணப்படவில்லை. ஆனால் ஸ்ரீமத்தேவீபாகவதத்தில் ஸ்ரீராதையைப் பற்றிய விரிவு காணப்படுகின்றது.

✦〜✦〜✦

அறுபத்தேழாவது தசகம்

ராஸக்ரீடை (iii)

ஸ்பு²ரத்பராநந்த³–ரஸாத்மகேந த்வயா ஸமாஸாதி³த–பே⁴காகீ³லா: ।
அலீம–மாநந்த³ப⁴ரம் ப்ரபந்நா மஹாந்தமாபு:–மத³மம்பு³ஜாக்ஷ்ய: ॥ 1 ॥

பரமானந்த ஸ்வரூபமாக மிளிர்கின்ற தங்களோடு பெற்ற அன்புக் காதல் லீலைகளால் ிக்க மகிழ்ச்சியடைந்த கமலம் போன்ற கண்கள் கொண்ட அக்கோபியர்கள் மிகுந்த சருக்குற்றனர். (1)

நிலீயதேऽஸௌ மயி மய்யமாயம் ரமாபதிர்–விஶ்வமநோऽபி₄ராம: ।
இதி ஸ்ம ஸ்ஸ்வா: கலிதாபி₄மாநா நிரீக்ஷ்ய கே₃விந்த₃ தீரோஹிதோऽபூ₄: ॥ 2 ॥

குருவாயூரப்பா! அனைத்துலகங்களும் மயங்கும் அழகு படைத்த திருமகள் கேள்வனான ஸ்ரீகண்ணன், தன்னிடம் மட்டுமே உண்மையான அன்பு கொண்டிருக்கிறான் என்று நினைத்து, ஒவ்வொரு கோபிகையும் செருக்குற்றதைக் கண்ட தாங்கள் உடனே (அவர்கள் எதிரிலிருந்து) மறைந்தருளினீர்கள். (2)

ராத₄ாபி₃த₄ாம் தாவத₃ஜாதக₃ர்வா–மதிப்ரியாம் கே₃பவது₄ம் முராரே ।
ப₄வாநுபாத₃ாய க₃தோ விதூ₃ரம் தயா ஸஹ ஸ்வைர விஹாரகாரீ ॥ 3 ॥

முரனைக் கொன்ற குருவாயூரப்பா! அப்பொழுது மிகவும் அன்பு கொண்ட கர்வமற்ற ராதை என்கிற கோபியோடு மனம்போலத் தனித்து விளையாட ஆசை கொண்ட தாங்கள், அவளை மட்டும் அழைத்துக் கொண்டு வெகுதூரம் சென்றீர்கள். (3)

திரோஹிதேऽத₂ த்வயி ஜாததாபா: ஸமம் ஸமேதா: கமலாயதாக்ஷ்ய: ।
வநே வநே த்வாம் பரிமார்க₃யந்த்யோ விஷாத₃மாபுர்–ப₄க₃வந்நபாரம் ॥ 4 ॥

பகவானே! (அவ்வாறு) தாங்கள் மறைந்ததும் தாமரை போன்று அகன்ற கண்களுடைய அந்த கோபிகைகள் மிகவும் மனம் வருந்தி அனைவருமாக ஒன்று கூடி, ஒவ்வொரு வனமாகத் தங்களைத் தேடியலைந்து (தங்களைக் காணாது) கவலை அடைந்தார்கள் (எல்லையில்லாத் துன்பமுற்றனர்). (4)

ஹா சூத ஹா சம்பக கர்ணிகார
ஹா மல்லிகே மாலதி பா₃லவல்ய: ।
கிம் வீக்ஷிதோ நோ ஹ்ருது₃யைக–சோர
இத்யாதி₃ தாஸ்–த்வத்ப்ரவணா விலேபு: ॥ 5 ॥

'ஓ மாமரமே! சண்பக மரமே! கர்ணிகாரமே! மல்லிகைக் கொடியே! மாலதிக் கொடியே! இளங்கொடிகளே! எங்களது இதயங்களைத் திருடிச் சென்றவனைக் கண்டீர்களா?' என்றவாறு தங்களிடமே மனதைப் பறிகொடுத்த அந்த கோபிகைகள் புலம்பியழுதார்கள். (5)

நிரீக்ஷிதோऽயம் ஸகி₂ பங்கஜாக்ஷ:
புரோ மமேத்யாகுல–மாலபந்தீ ।
த்வாம் ப₄வநா–சக்ஷுஷி வீக்ஷ்ய காசித்–
தாபம் ஸகீ₂நாம் த்₃விகு₃ணீ சகார ॥ 6 ॥

தியானயோகத்தால் (மனதினுள்ளே) தங்களைக் கண்ட ஒருத்தி 'தோழியே! தாமரைக்கண்ணனான கண்ணன் இதோ என் எதிரில் இப்பொழுது காணப்பட்டானே!' என்று மிகுந்த பரபரப்புடன் கூறி, (இதைக் கேட்ட) மற்ற தோழிகளின் துன்பத்தை இருமடங்காக்கினாள். (6)

த்வத₃ாத்மிகாஸ்–தா யமுநாதடாந்தே
தவாநுசக்ரு: கில சேஷ்டிதாநி ।
விசித்ய பூ₄யோऽபி ததை₂வ மாநாத்
த்வயா வியுக்தாம் த₃த்₃ருஶுஶ்ச ராத₄ாம் ॥ 7 ॥

தங்களையே நினைந்து நினைந்து பாவனையினால் தன்மயமாகிவிட்ட அந்த கோபிகைகள் யமுனைக் கரையில் தங்களுடைய திருவிளையாடல்களை அனுகரணம் செய்தார்கள் (அதேபோல் அபிநயம் செய்து நடித்தார்கள்). அவர்கள் மேலும் மேலும் தங்களைத் தேடிச் செல்கையில், மற்றவர்களைப் போலவே கர்வம் கொண்டதால் தங்களால் கைவிடப்பட்ட ராதையைக் கண்டார்கள். (7)

தத: ஸமம் தா விபிநே ஸமந்தாத்
தமோऽவதாராவதி$_4$ மார்க$_3$யந்த்ய: ।
புநர்விமிஶ்ரா யமுநா–தடாந்தே
ப்$_4$ருஶம் விலேபுஶ்ச ஜகு$_3$ர் கு$_3$ணாம்ஸ்தே ॥ 8 ॥

பிறகு அவர்கள் ராதையோடு கூட காட்டிலே நாற்புறமும் இருட்டும் வரை தேடியலைந்து (பின்) யமுனைக் கரையில் ஒன்று கூடி வருத்த மிகுதியாலே தங்களது குணங்களைப் பாடிப்பாடி அழுது புலம்பினார்கள். (8)

தத$_2$ா வ்யத$_2$ா–ஸங்குலமாநஸாநாம் வ்ரஜாங்க$_3$நாநாம் கருணைகஸிந்தே$_4$ா ।
ஜக$_3$த்–த்ரயீ–மோஹந–மோஹநாத்மா த்வம் ப்ராது$_3$ராஸீ–ரயி மந்த$_3$ஹாஸீ ॥ 9 ॥

கருணைக்கடலே! அவ்வாறு வருந்திக் கலங்கிய மனமுடைய அக்கோபியர்கள் எதிரிலே, மூவுலகையும் மயக்கும் மன்மதனும் மயங்கும்படியான திருமேனியோடு கூட சிறிது புன்முறுவலுடன் மீண்டும் தோன்றினீர்கள். (9)

ஸந்தி$_3$க்$_4$த$_4$–ஸந்த$_3$ர்ஶந–மாத்மகாந்தம்
த்வாம் வீக்ஷ்ய தந்வ்ய: ஸஹஸா தத$_3$ாநீம் ।
கிம் கிம் ந சக்ரு: ப்ரமத$_3$ாதிபா$_4$ராத்
ஸ த்வம் கு$_3$ரோத் பாலய மாருதேஶ ॥ 10 ॥

அக்கோபிகைகள், மீண்டும் தங்களைக் காண்போமா? என்று ஐயம் கொண்டு நிற்கும் வேளையில் ஆன்மநாயகனான தங்களைக் கண்டவுடனே உண்டான மகிழ்ச்சிப்பெருக்கால் என்னதான் செய்யவில்லை? அப்படிப்பட்ட குருவாயூரப்பா! என்னை நோயிலிருந்து காப்பாற்றுங்கள். (10)

அறுபத்தெட்டாவது தசகம்

ராஸக்ரீடை (iv)

தவ விலோகநாத்$_3$கே$_3$பிகாஜநா: ப்ரமத$_3$ஸங்குலா: பங்கஜேக்ஷண ।
அம்ருதத$_4$ாரயா ஸம்ப்லுதா இவ ஸ்திமிததாம் த$_3$து$_4$ஸ்–த்வத்புரோக$_3$தா: ॥ 1 ॥

கமலக்கண்ணா! தங்களை மீண்டும் கண்ணுற்ற கோபிகைகள் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க அமுத மழையிலே நனைந்தாற்போல் உடலும், உள்ளமும் குளிர்ந்து (இன்னது செய்வதென்றறியாது சிறிதுபோழ்து) அசைவற்றிருந்தனர். (1)

தத₃நு காசந த்வத்கராம்பு₃ஜம் ஸபதி₃ க்₃ருஹ்ணதீ நிர்விஶங்கிதம் ।
க₃நபயோத₄ரே ஸந்நிதா₄ய ஸா புலகஸம்வ்ருதா தஸ்து₂ஷீ சிரம் ॥ 2 ॥

அதைத் தொடர்ந்து ஒரு கோபிகை சிறிதும் கூச்சமின்றி தாமரை மலர் போன்று மென்மையான தங்கள் திருக்கையை விரைவாகப் பிடித்துத் தனது பெருத்த நகில்களின் மேல் வைத்துக் கொண்டு நெடுநேரம் மயிர்சிலிர்த்து நின்றாள். (2)

தவ விபோ₄ரபா காமளம் பு₄ஜம் நிஜக₃லாந்தரே பர்யவேஷ்டயத் ।
க₃லஸமுத்₃க₃தம் ப்ராணமாருதம் ப்ரதிநிருந்த₄தீ–வாதிஹர்ஷ்ணா ॥ 3 ॥

பிரபோ! மற்றொருத்தி மகிழ்ச்சி பொங்க (தங்கள் விரக வேதனையால்) கழுத்திலிருந்து கிளம்பும் பிராண வாயுவை (பிராணனை)த் தடுத்து நிறுத்துபவள் போலத் தங்களுடைய அழகான திருக்கையைப் பிடித்துத் தனது கழுத்தில் இறுகச் சுற்றியணைத்துக் கொண்டாள். (3)

அபக₃தத்ரபா காபி காமிநீ தவ முக₂ம்பு₃ஜாத் பூக₃சர்விதம் ।
ப்ரதிக்₃ருஹ்ய தத்₃ வக்த்ரபங்கஜே நிதத₃தீ₄ கதா பூர்ணகாமதாம் ॥ 4 ॥

வேறொரு பெண்ணோ, சிறிதும் வெட்கமின்றித் தங்கள் திருவாயிலிருந்து நீங்கள் மென்ற தாம்பூலத்தைப் பெற்றுத் தனது வாயில் இட்டுக் கொண்டு, ஆசை முழுவதும் முற்றுப் பெற்றதாக (பிறந்த பயன் எய்தியதாக) மகிழ்ந்தாள். (4)

விகருணோ வநே ஸம்விஹாய மாம–பக₃தோ(அ)ஸி கா த்வாமிஹ ஸ்ப்ருஶேத் ।
இதி ஸரோஷயா தாவதே₃கயா ஸஜலலோசநம் வீக்ஷிதோ ப₄வாந் ॥ 5 ॥

'சிறிதும் இரக்கமின்றிக் காட்டிலே என்னைத் தனித்து விட்டுச் சென்றாயே! உன்னை இப்பொழுது எவள்தான் தொடுவாள்?' என்று கோபத்தினால் நீர்நிறைந்த கண்களோடு ஒருத்தி உங்களைப் பார்த்தாள். (5)

இதி முத₃ா(அ)ऽகுலைர்–வல்லவீஜநை: ஸமமுபாக₃தோ யாமுநே தடே ।
ம்ருது₃குசாம்ப₃ரை: கல்பிதாஸநே கு₄ஸ்ருணப₄ஸு₄ரே பர்யஶோப₄தா₂: ॥ 6 ॥

இவ்வாறு ஆனந்தத்தில் திளைத்த கோபிகைகளுடன் கூட யமுனை நதிக்கரையில், குங்குமம் படிந்து அழகாக விளங்கும் அவர்களது மேலாடைகளால் அமைக்கப்பட்ட இருக்கைகளின் மேலமர்ந்து அழகாகத் தோற்றமளித்தீர்கள். (6)

கதிவித₄ா க்ருபா கேபி ஸர்வதோ த்₄ருத–த₃யோத₃யா: கேசித₃ஸ்ப்ருஹே ।
கதிசிதீ₃த்₃ருஶா மாத்₃ருஶேஷ்வபீத்–யபி₃ஹிதோ ப₄வாந் வல்லவீஜநை: ॥ 7 ॥

''கருணை என்பது எத்தனை விதமாக உள்ளது? சிலர் எல்லோரிடமும் (ஒரே மாதிரியாகக்) கருணை புரிகிறார்கள். மற்றும் சிலர் தம்மை அண்டியவரிடத்தே மட்டும் கருணையோடிருக்கிறார்கள். வேறு சிலரோ, எங்களைப் போன்று சரணமடைந்தவர்களிடத்தும் கூட இம்மாதிரி சிறிதும் கருணையின்றி இருக்கிறார்களே'' என்று தங்களிடம் கோபிகைகள் கூறினார்கள். (7)

அயி குமாரிகா நைவ ஶங்க்யதாம் கடி₂நதா மயி ப்ரேமகாதரே ।
மயி து சேதஸோ வோ(அ)நுவ்ருத்தயே க்ருதமித₃ம் மயேத்–யூசிவாந் ப₄வாந் ॥ 8 ॥

(இதைக் கேட்ட தாங்கள்) 'அடி பெண்களே! அன்பிற்காக ஏங்கும் என்னைக் கல்நெஞ்சன் என்றா ஐயம் கொள்கிறீர்கள்? உங்களுடைய மனம் முழுவதுமாக என்னிடமே ஈடுபட வேண்டுமென்றுதான் நான் இம்மாதிரி (மறைந்திருத்தலைச்) செய்தேன்' என்று தாங்கள் கூறினீர்கள். (8)

அயி நிஸம்யதாம் ஜீவவல்லபா:ப்ரியதமோ ஜநோ நேத்ருஸோ மம ।
ததி ஹ ரம்யதாம் ரம்யயாமிநீஷ்–வநுபரோத–மித்யாலபோ விபோ ॥ 9 ॥

'என் உயிர்த் தோழிகளே! நான் கூறுவதைக் கேளுங்கள். உங்களைப் போன்று மிகுந்த அன்பு கொண்டவர் எனக்கு ஒருவருமே கிடையாது. ஆகவே இந்த யமுனைக் கரையில் இந்த இனிய இரவுகளில் தடையொன்றுமின்றி நாம் இனிது விளையாடலாம்' என்று பிரபோ! நீங்கள் கூறியருளினீர்கள். (9)

ஒப்புநோக்குக:–

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே ।
வாஸுதே:வ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥

(ஸ்ரீமத் பகவத்கீதா 7/19)

பல பிறவிகளுக்குப் பிறகு கடைசிப்பிறவியில் தத்துவ ஞானம் அடைந்த மனிதன் அனைத்தும் வாஸுதேவனே என்று என்னைப் புகலாகக் கொள்கிறான். அத்தகைய மஹாத்மா மிகமிக அரிதானவன்.

'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்'

(திருவாய்மொழி 6–7–1)

'மத்பக்த பக்த பக்தேஷு ப்ரீதி: அப்யதிகா மம' (வராஹ புராணம்)

'கீதாசாரியன்' என்பதைவிட 'கோவிந்தன், கோபீஜன வல்லபன்' என்பதிலேயே பகவான் ஆனந்தப்படுகிறான்.

குறைவொன்றுமில்லாத கோவிந்தா! உன் தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன் தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே! இறைவா!

(திருப்பாவை 28)

இதி கி்ராதிகம்ம மோதமேதுரைர்–வ்ரஜவதூ்ஜநை: ஸாகமாரமந் ।
கலிதகௌதுகோ ராஸகே்லநே குருபுரீபதே பாஹி மாம் கதாத் ॥ 10 ॥

இவ்வாறு தாங்கள் கூறக்கேட்ட கோபியர்களின் மகிழ்ச்சி பன்மடங்கு பெருகியது. அவ்வாறு மகிழ்ச்சி கொண்ட கோபியர்களோடு ராஸக்ரீடை (குரவைக்கூத்து) செய்ய மனங்கொண்டு விளையாடத் தொடங்கினீர்களே! குருவாயூரப்பா! என்னை நோயினின்றும் காத்தருள வேண்டுகிறேன். (10)

அறுபத்தொன்பதாவது தசகம்

ராஸக்ரீடை (V)

கேயூபாயூத்₄ருத–பிஞ்சி₂காவிததி–ஸஞ்சலந்மகர–குண்ட₃லம்
ஹாரஜாலவந–மாலிகாலலித–மங்க₃ராக₃க₃ந–ஸௌரப₄ம் ।
பீதசேலத்₃ருத–காஞ்சிகாஞ்சிதமுத₃ஞ்சத₃ம்பூ–மணிநூபுரம்
ராஸகேலிபரி–பூ₄ஷிதம் தவ ஹி ரூபமீயு கலயாமஹே ॥ 1 ॥

ஈசா! தலைமுடியில் மயிலிறகுக்கற்றை, காதுகளில் மகர குண்டலங்கள், திருமார்பிலோ வனமாலையும், பற்பல ஹாரங்களும், திருமேனியிலோ சந்தனம் முதலிய நறுமணம் மிக்க பூச்சுகள், அரையிலோ (இடுப்பிலோ) பீதாம்பரம் அதன்மேல் தங்க மேகலை; திருவடிகளிலோ ஒளிபடைத்த ரத்தினச் சிலம்புகள் – இவ்வாறு குரவைக்கூத்துக்கென்றே அலங்காரம் செய்து கொண்டு விளங்கும் ஸ்ரீகிருஷ்ணா! தங்கள் திருமேனியைத் தியானம் செய்கிறோம். (1)

தாவதே₃வ க்₃ருதமண்ட₃நே கலித–கஞ்சுலீகுசமண்ட₃லே
க₃ண்ட₃லோலமணிகுண்ட₃லே யுவதி–மண்ட₃லேऽத₂ பரிமண்ட₃லே ।
அந்தரா ஸகலஸுந்த₃ரீயுக₃ல–மிந்தி₃ராரமண ஸஞ்சரந்
மஞ்ஜுலாம் தத₃நு ராஸகேலிமயி கஞ்ஜநாப₄ ஸமுபாத₃த₄: ॥ 2 ॥

திருமகள் கேள்வனே, குருவாயூரப்பா! இதற்குள் இளங்கோபிகைகள் தங்கள் திருமார்புத்தடத்தே ரவிக்கைகளையணிந்து கொண்டு, காதுகளில் அணிந்த குண்டலங்கள் கன்னங்களிலே பிரதிபலிக்க, தங்களைத் தானே நன்கு அலங்கரித்துக் கொண்டு கூட்டமாகத் தங்களைச் சுற்றி நிற்கையில், இரு பெண்களுக்கிடையில் ஒரு கிருஷ்ணன், இரு கிருஷ்ணனுக்கிடையில் ஒரு கோபி என்று அவர்களுக்கிடையே (பல திருவுருவங்கள் கொண்டு) அழகான ராஸக்ரீடையைத் தொடங்கினீர்கள். (2)

வாஸுதே₃வ தவ பா₄ஸமாநமிஹ ராஸகேலி–ரஸஸௌரப₄ம்
தூ₃ரதோऽபி க₃லு நாரத₃ாக₃தி₄த–மாகலய்ய குதுகாகுலா ।
வேஷபூ₄ஷண–விலாஸபேஶல–விலாஸிநீஶத–ஸமாவ்ருதா
நாகதோ யுக₃பத₃ாக₃தா வியதி வேக₃தோऽத₂ ஸுரமண்ட₃லீ ॥ 3 ॥

வாஸுதேவா! இங்கு யமுனை நதிக்கரையில் தங்களது அழகான ராஸக்ரீடையைக் கண்ட நாரதர், அதைப் பற்றி வெகுதொலைவிலிருந்து கூற, கேட்ட தேவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஆடை அணிகளால் தங்களை அழகு செய்து கொண்டு, தங்களது மனைவிமார்கள் சூழக் கூட்டம் கூட்டமாகத் தேவருலகினின்று ஒருங்கு கூடி விரைவாக வானகத்தில் வந்து நின்றனர். (3)

வேணுநாத₃க்ருத–தாநத₃ாநகல–க₃ாநராக₃–க₃தியோஜநா–
லோப₄நீயம்ருது₃–பாத₃பாதக்ருத–தாலமேலந–மநோஹரம் ।
பாணிஸங்க்வணித–கங்கணஞ்ச முஹுரம்ஸலம்பி₃த–கராம்பு₃ஜம்
ஸ்ரோணிபி₃ம்ப₃–சலத₃ம்ப₃ரம் ப₄ஜத ராஸகேலி–ரஸட₃ம்ப₃ரம் ॥ 4 ॥

வேணுநாதத்தின் மெட்டைப் பின்பற்றி, வாயினால் பாடும் பாட்டின் ராகமும் கூடி, மனதைக் கவரும் அழகிய மென்மையான கால்களின் வைப்பினால் உண்டாகும் கிண்கிணித்

தாளமும், கைகளில் ஒலிக்கும் வளைகளின் இனிமையான நாதமும் ஒன்று கூடி நிற்க, இந்தக் குரவைக்கூத்து மனதைக் கவருமாறு இருந்தது. அப்பொழுது கோபியர்களது தாமரை போன்று மென்மையான கைகள் கண்ணனின் திருத்தோள் மீது படரவும், அவர்களது ஆடைகள் அரையில் அசைந்தசைந்தாடவும், அழகாக விளங்கியது அந்த ராஸக்ரீடை. அவ்வாறு கோலாகலமாக விளங்கிய அந்த ராஸக்ரீடையைத் தியானிப்போம். (4)

ஶ்ரத்₃த₄யா விரசிதாநுகூ₃நக்ருத–தாரதாரமது₄ரஸ்வரே
நர்தநேऽது₂ லலிதாங்க₃ஹார–லுளிதாங்க₃ஹார–மணிபூ₄ஷணே ।
ஸம்மதே₃ந க்ருத–புஷ்பவர்ஷமல–முந்மிஷத்₃தி₃விஷத₃ாம் குலம்
சிந்மயே த்வயி நிலீயமாநமிவ ஸம்முமோஹ ஸவதூ₄குலம் ॥ 5 ॥

மிகுந்த ஆர்வத்துடன் நடக்கின்ற இந்த ராஸக்ரீடையில் பின்தொடர்ந்து பாடும் பாட்டு இனிய ஸ்வரத்துடன் சிறிது மேல் ஸ்தாயியிலும், சிறிது கீழ் ஸ்தாயியிலுமாகப் பாடப்பட்டது. மேலும் நர்த்தனம் செய்யும்கால் அழகிய உடலவயவங்கள் அசைவதால், அணிந்திருந்த மாலைகளும், அணிகலன்களும் (தம் இருப்பிடம் பெயர்ந்து) நகர்ந்திருந்தாலும் அழகாகவே இருந்தன. கண்ணிமைத்தலின்றி இதைக் கண்ட தேவர்கள் குழாம், பேரானந்தமடைந்து மலர்மாரி பொழிந்தனர். (மேலும்) தங்கள் தங்கள் மனைவிகளுடன் அவர்கள் சித்ரூபனான தங்களிடமே மெய்மறந்து லயமடைந்தாற்போல் மோகமடைந்தனர். (5)

ஸ்விந்ந–ஸந்ததநு–வல்லீ தத₃நு காபி நாம பஶுபாங்க₃நா
காந்தமம்ஸ–மவலம்ப₃தே ஸ்ம தவ தாந்திபூ₄ர–முகுலேக்ஷணா ।
காசித₃ாசலித–குந்தலா நவபடீர–ஸாரக₃ந்தஸௌரபு₄ம்
வஞ்சநேந தவ ஸஞ்சுசும்ப₃ புஜ–மஞ்சிதோருபுலகாங்குரா ॥ 6 ॥

இவ்வாறிருக்க கொடி போன்ற உடலுடைய ஒரு கோபிகை, வியர்த்துச் சோர்ந்து களைத்துப் போய் கண்களை மூடியவண்ணம் தங்கள் தோள் மேல் சாய்ந்தாள். மற்றொருத்தி தனது கூந்தல்கற்றை அவிழ்ந்து நிற்க, புதிய சந்தனப்பூச்சினால் நறுமணமுடைய தங்களது கையை முகர்ந்து பார்ப்பதுபோல் பாவனை செய்து, மயிர்சிலிர்க்கும்படி வஞ்சனையாக முத்தமிட்டாள். (இங்கு வஞ்சனை என்பதன் பொருள் 'கபடம்' என்பதன்று, 'பகவான் அறியாவண்ணம்' என்று பொருள் கொள்ள வேண்டும்.) (6)

காபி கூ₃ண்ட₃பூ₄வி ஸந்நித₄ாய நிஜ–கூ₃ண்ட₃–மாகுலித–குண்ட₃லம்
புண்யபூ₄ரநிதி₄–ரந்வவாப தவ பூக₃ஸ்விதா–ரஸாம்ருதம் ।
இந்தி₃ராவிஹ்ருதி–மந்தி₃ரம் பு₄வந–ஸுந்த₃ரம் ஹி நடநாந்தரே
த்வாமவாப்ய த₃து₄–ரங்க₃நா: கிமு ந ஸம்மதே₃ந்மத₃–து₃ஸ்தரம் ॥ 7 ॥

மெத்த புண்ணியம் செய்த ஒரு கோபி குண்டலங்கள் அசைந்து மின்னும் தனது கன்னத்தைத் தங்களது கன்னத்தோடு ஒட்டி வைத்துக் கொண்டு, தாங்கள் மென்ற தாம்பூல ரஸமாகிய அமுதத்தை(த் தன் வாயினால்) உறிஞ்சிப் பருகினாள். திருமகள் விளையாடல் புரியும், மூவுலகு அழகையும் விஞ்சும் தங்களது சுந்தரத் திருமேனியை அடைந்து, ஆனந்தப் பித்தேறிய அந்த கோபிகைகள் எந்த நிலையைத்தான் அடைந்தனரோ! (மனதாலோ, சொல்லாலோ, செயலாலோ விளக்க முடியாத ஆனந்த நிலையை அடைந்தனர் என்பது கருத்து.) (7)

க்₃ராநமீஶ விரதம் க்ரமேண கில வாத்₃யமேலந–முபாரதம்
ப்₃ரஹ்மஸம்மத₃–ரஸாகுலா: ஸத₃ஸி கேவலம் நந்ருதுரங்க₃நா: ।
நாவித₃ந்நபி ச நீவிகாம் கிமபி குந்தலீமபி ச கஞ்சுலீம்
ஜ்யோதிஷாமபி கத₃ம்ப₃கம் தி₃வி விலம்பி₃தம் கிமபரம் ப்₃ருவே ॥ 8 ॥

ஈசனே! பாட்டு முடிந்தது. வாத்யங்களின் முழக்கமும் படிப்படியாக ஒய்ந்தது. ஆனாலும் பிரம்மானந்த ரஸத்தில் மூழ்கிய அக்கோபிகைகளின் திருக்கூட்டம் மெய்மறந்து ஆடிக் கொண்டேபிருந்தது. அரையில் கட்டிய துகில் நழுவுவதையோ, தலைமுடி அவிழ்வதையோ, ரவிக்கை நெகிழ்வதையோ ஒன்றையும் அவர்கள் உணரவில்லை. வானவெளியில் நக்ஷத்திரங்களும்கூட (சிறிது நேரம்) நின்றுவிட்டன எனில், நான் என்ன சொல்லட்டும்? (கோபிகைகளின் நிலை வர்ணனைக்கெட்டாதது! என்பதன்றோ பொருள்.) (8)

மோத₃மீம்நி பு₄வநம் விலாப்ய விஹ்ருதிம் ஸமாப்ய ச ததோ விபே₄
கேலிஸம்ம்ருதி₃த–நிர்மலாங்க₃நவ–க₃ர்மலேஶ–ஸுப₃₄காத்மநாம் ।
மந்மத₂ாஸஹந–சேதஸாம் பஶூப–யோஷிதாம் ஸுக்ருதஸோதி₃தஸ்–
தாவத₃ாகலித–மூர்திராத₃தி₃த₃ மாரவீரபரமோத்ஸவாந் ॥ 9 ॥

விபோ! அகில உலகையும் ஆனந்தத்தின் எல்லையிலே மூழ்கும்படிச் செய்து ராஸக்ரீடையைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தாலும், அந்த ராஸக்ரீடையினால் மாசற்ற திருமேனியில் புதிதாக வியர்வைத் துளிகள் தோன்ற, அதனால் மேலும் அழகுள்ளவர்களாக விளங்குபவர்களும், காமன் கணைக்கு இலக்காகி நலிகின்றவர்களுமான கோபிமார்களது புண்ணியத்தின் பயனால் தூண்டப்பட்ட தாங்கள் எத்தனை கோபிகைகள் உள்ளனரோ, அத்தனை கண்ணன் வேடம்பூண்டு அவர்களோடு சேர்ந்து மன்மத உத்ஸவங்களை மீண்டும் செய்யத் தொடங்கினீர்கள். (9)

கேலிபே₄த₃–பரிலோலிதாபி₄–ரதிலாலிதாபி₄–ரப₃லாலிபி₄:
ஸ்வைரமீஶ நநு ஸைரஜாபயஸி சாருநாம விஹ்ருதிம் வ்யத₂: ।
காநநேऽபி ச விஸாரிஸீதல–கிஶோரமாருத–மநோஹரே
ஸைநஸௌரப₄மயே விலேஸித₂ விலாஸிநீ–ஸத–விமோஹநம் ॥ 10 ॥

ஈசனே! பற்பலவிதமான லீலைகளால் சீராட்டப்பட்டு, அதனால் சோர்வுற்ற அக்கோபிகைகளோடு யமுனை நீரில் தாங்கள் மனம்போல நீர்விளையாடல் புரிந்தீர்கள். மேலும் மெதுவாக வீசிய மெல்லிய சுகந்தினால் குளிர்ந்தும், நாற்புறமும் வீசுகின்ற மலர்களின் நறுமணத்தால் அழகுமிக்கதுமான வனத்திலும் நூற்றுக்கணக்கான அக்கோபியர்கள் எல்லோரும் மயங்குமாறும் விளையாடினீர்கள். (10)

காமிநீரிதி ஹ்ரி யாமிநீஷு கூ₃லு காமநீயகநிதே₄ ப₃வாந்
பூர்ணஸம்மத₃–ரஸார்ணவம் கமபி யோகி₃க₃ம்ய–மநுபா₄வயந் ।
ப்₃ரஹ்மஶங்கர–முகை₂நபீஹ பஶுபாங்க₃நாஸு பூ₂ஶுமாநயந்
பு₄க்தலோக–க₃மநீயரூப கமநீய க்ருஷ்ண பரிபாஹி மாம் ॥ 11 ॥

அழகின் நிறைகடலே! இவ்வாறு இரவு நேரங்களில் அக்கோபியர்களை, முற்றும் துறந்த யோகியர்களால் மட்டுமே பெறக் கூடியதும், சொல்லுக்கடங்காததுமான முற்றும்

நிறைந்த பிரம்மானந்த அமுதத்தைப் பருகச் செய்து பிரம்மா, பரமசிவன் முதலிய தேவர்களாலும்கூட கொண்டாடும்படிச் செய்தீர்கள். பக்த பெருமக்களால் மட்டுமே அறிந்தனுபவிக்கக் கூடிய அழகும், வடிவமும் படைத்த ஸ்ரீகிருஷ்ணா! குருவாயூரப்பா! என்னைக் காப்பாற்றுங்கள். (11)

எழுபதாவது தசகம்

சுதர்சனன் வரலாறு, சங்கசூடன் வதம் முதலியன

இதி த்வயி ரஸாகுலம் ரமிதவல்லபே வல்லவா:
கதா(அ)பி புரமம்பிகாகமிது–ரம்பிகாகாநநே ।
ஸமேத்ய பவதா ஸமம் நிஶி நிஷேவ்ய திவ்யோத்ஸவம்
ஸுகம் ஸுஷுபுரக்ரஸீத் வ்ரஜப–முக்ரநாக–ஸ்ததா ॥ 1 ॥

இவ்வாறு தாங்கள் கோபிகைகளை மகிழ்ச்சியுறச் செய்து கொண்டிருந்தபொழுது ஒரு நாள் கோபிகைகள் அம்பிகாவனத்தில் உள்ள பரமசிவனது ஆலயத்திற்குத் தங்களோடு சென்று அங்கு இரவில் நடந்த சிறப்பான உத்ஸவத்தைக் கண்டுகளித்து சுகமாகத் தூங்கினார்கள். அப்பொழுது ஒரு கொடிய மலைப்பாம்பு நந்தகோபரை விழுங்கத் தொடங்கிற்று. (1)

ஸமுந்முகமதோலமுகை–ரபிஹதோ(அ)பி தஸ்மிந் பலா–
தமுஞ்சதி பவத்பதே ந்யபதி பாஹி பாஹீதி தை: ।
ததா கலு பதா பவாந் ஸமுபகம்ய பஸ்பர்ஶ தம்
பபௌ ஸ ச நிஜாம் தநும் ஸமுபஸாத்ய வைத்யாதமீம் ॥ 2 ॥

(இதைக்கண்ட) கோபர்கள் கொள்ளிக்கட்டைகளால் அந்தப் பாம்பை பலங்கொண்டமட்டில் அடித்தபோதும் அது (நந்தகோபரை) விடாதபொழுது, அவர்கள் 'காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று கதறித் தங்களது திருவடிக்கமலங்களில் விழுந்தார்கள். அப்பொழுது நீங்கள் அங்கு சென்று பாம்பைக் காலால் தொட்டீர்கள். (உடனே) அந்த பாம்பு தனது சுய உருவமடைந்து வித்யாதரனாக விளங்கியது. (2)

ஸுதர்ஶநதர ப்ரபோ நநு ஸுதர்ஶநாக்யோ(அ)ஸ்மியஹம்
முநீந் க்வசிதபாஹஸம் த இஹ மாம் வ்யதூர்வாஹஸம் ।
பவத்பத–ஸமர்பணாதமலதாம் கதோ(அ)ஸ்மீ–த்யஸௌ
ஸ்துவந் நிஜபதம் யயௌ வ்ரஜபதம் ச கோபா முதா ॥ 3 ॥

'சுதர்சனம் எனும் சக்கரத்தைக் கையிலேந்திய பிரபுவே! எனது பெயர் சுதர்சனன். முன்பொரு சமயம் நான் முனிவர்களை ஏளனம் செய்தேன். அவர்கள் என்னை மலைப்பாம்பாக ஆகுமாறு சபித்தார்கள். தங்களது திருவடிபட்டு நான் தூய்மையடைந்தேன்' என்று துதித்து, அவன் தனது இருப்பிடம் சென்றான். கோபர்களும் மகிழ்ச்சியோடு தங்களது இடைச்சேரிக்குச் சென்றனர். (3)

கதா3பி கா2லு ஸ்ரீணா விஹரதி த்வயி ஸ்த்ரீஜநை–
ர்ஜஹார தா3நதா3நுகா3: ஸ கில ஶங்கா2சூடோ3ऽப3லா: ।
அதித்3ருத–மநுத்3ருதஸ்–தமத2 முக்தநாரீஜநம்
ருரோஜித2 ஶிரோமணிம் ஹலப்4ருதே ச தஸ்யாத3தா3: ॥ 4 ॥

குருவாயூரப்பா! ஒரு சமயம் தாங்கள் ஸ்ரீபலராமனோடும், இடைப்பெண்களோடும் விளையாடிக் கொண்டிருக்கையில் குபேரனின் பணியாளனான சங்கசூடன் என்பான் இடைப்பெண்களைக் கவர்ந்து சென்றான். (அதைக் கண்ட) தாங்கள் வெகுவேகமாக அவனைப் பின்தொடர, அவன் அப்பெண்களை விட்டுவிட்டு ஓடினான். தாங்கள் அவனைக் கொன்று அவன் தலையில் அணிந்திருந்த சிரோமணியை எடுத்து பலராமனுக்கு அளித்தீர்கள் அல்லவா? (4)

தி3நேஷு ச ஸுஹ்ருஜ்ஜநை: ஸஹ வநேஷு லீலாபரம்
மநோப4வ–மநோஹரம் ரஸிதவேணு–நாதா3ம்ருதம் ।
ப4வந்தமமரீத்3ருஶா–மம்ருதபாரணா–தா3யிநம்
விசிந்த்ய கிமு நாலபந் விரஹதாபிதா கோ3பிகா: ॥ 5 ॥

தாங்கள் தினமும் பகலில் நண்பர்களோடு வெவ்வேறு வனங்களில் பலவிதமாக விளையாடினீர்கள். (அப்பொழுது) தங்களது திருமேனி மன்மதனும் மயங்கும்படியாக இருந்தது. வேணுகான மழையால் அனைவரையும் நனையும்படிச் செய்தீர்கள். அமரமடந்தையர் கண்களுக்கு அமுதம் போல விளங்கினீர்கள். இப்படிப்பட்ட தங்களை நினைந்து நினைந்து கோபியர்கள் பிரிவு ஆற்றாது தவித்து, என்ன சொல்லித்தான் புலம்பினார்களோ? (5)

போ4ஜராஜப்4ருதகஸ்–த்வத2 கம்ஸித கஷ்டது3ஷ்டபத2–த்3ருஷ்டிரரிஷ்ட: ।
நிஷ்டுராக்ருதி–ரபஷ்டுநிநாத3ஸ்–திஷ்ட2தே ஸ்ம ப4வதே வ்ருஷரூபீ ॥ 6 ॥

(இவ்வாறிருக்க ஒருநாள்) போஜ மன்னன் கம்ஸனின் பணியாளனான அரிஷ்டன் என்பவன் – தீய வழியிலேயே கண்ணும் கருத்துமுடையவன் – பயங்கரமான தோற்றத்துடன் பெருத்த சத்தம் செய்து கொண்டு காளை மாட்டுருவில் தங்கள் எதிரில் வந்து நின்றான். (6)

ஶாக்வரோத2 ஜக3தீத்4ருதிஹாரீ மூர்திமேஷ ப்3ருஹதீம் ப்ரத2தா2ந:
பங்க்திமாஶு பரிகூ2ர்ண்ய பஶூநாம் ச2ந்த3ஸாம் நிதி4மவாப ப4வந்தம் ॥ 7 ॥

அவ்வஸுரனோ காளையுருக்கொண்டவன் (ஶாக்வரன்); உலகில் அனைவருடைய உறுதியையும் கவர்பவன் (ஜகதீ த்ருதி ஹாரி); பெருத்த உருக்கொண்டவன் (ப்ருஹதீம் மூர்திம் ப்ரததாந:). அவன் பசுக்களின் கூட்டத்தை வெகுவிரைவாகக் கலைத்துக் கொண்டு வேதமே உருவான தங்களைக் கொல்ல வந்தான். (7)

குறிப்பு:– இங்கு ஶாக்வரீ, ஜகதி, த்ருதி, ப்ருஹதீ, பங்க்தி என்ற சொற்கள் வேதத்தின் சந்தங்களைக் (செய்யுள் பிரிவுகளைக்) குறிக்கின்றன. அரக்கனது உருவை வர்ணிக்கும் பட்டதிரி, இச்சந்தங்களின் பெயர்களைக் கையாள்வதன் மூலம் அரக்கன் இவ்வைந்து சந்தங்களைத்தான் தன்னிடத்தே கொண்டவன். ஆனால் பகவானோ சந்தங்களின் கருவுலம் என்பதை விளக்குகிறார்.

துங்க3ஶ்ருங்க3முகா2–மாஸ்வபி4யந்தம் ஸங்க்3ருஹ்ய ரப4ஸாத்3பி4யம் தம் ।
ப4த்3ரரூபமபி தை3த்யமப4த்3ரம் மர்த்3யந்–நமத3ய: ஸ்ஸுரலோகம் ॥ 8 ॥

நீண்ட கொம்புகளுடைய முகம் கொண்ட அவ்வஸுரன் காளையாகிற நல்ல வடிவுடையவனாயினும் தீயவன் (தீய எண்ணம் கொண்டவன்). அவன் சிறிதும் பயமின்றி எதிரே எதிர்த்து ஓடிவர, அவளை வேகமாகப் பற்றிக் கொன்று தேவர்கட்கு மகிழ்ச்சியை அளித்தீர்கள். (8)

சித்ரமத்³ய பூ⁴வந் வ்ருஷகே²தாத் ஸுஸ்தி²ராஜநி வ்ருஷஸ்தி²திர்வ்யாம் ।
வர்த்³தே⁴ ச வ்ருஷசேதஸி பூ⁴யாந் மோத³ இத்யபி²நுதோ²ஸி ஸுரைஸ்த்வம் ॥ 9 ॥

பகவானே! குருவாயூரப்பா! இன்று (அரிஷ்டன் என்கிற) விருஷபாஸுரனைக் கொன்றதால் பூமியில் வ்ருஷத்தின் (தருமத்தின்) நிலை நன்கு வேரூன்றியது. (அதனால்) விருஷனான இந்திரன் மனதில் பெருத்த மகிழ்ச்சி உண்டாயிற்று. (அதாவது) தர்மத்தின் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. இதுவன்றோ வியப்பு! என்று தேவர்கள் தங்களைத் துதித்தனர். (9)

குறிப்பு:– இங்கு 'வ்ருஷ' என்ற சொல்லுக்கு தருமம், இந்திரன், காளை என்ற மூன்று பொருள்களும் கையாளப்பட்டது. வ்ருஷத்தைக் கொன்றால் வ்ருஷத்திற்கு மகிழ்ச்சி ஏற்படாதல்லவா? ஆனால் கவி மகிழ்ச்சி உண்டாயிற்று என்று கூறி, விரோதாபாஸ அலங்காரம் (முரண் விளைந்தழிவணி) என்னும் அணியை எடுத்தாள்கிறார்.

ஔக்ஷகாணி பரித்³ராவத த்³ரூரம் வீக்ஷ்யதாமய–மிஹோக்ஷவிபே⁴தீ³ ।
இத்த²மாத்தஹஸிதை: ஸஹ கே³பைர்–கே³ஹக³ஸ்–த்வமவ வாதபுரேஸ ॥ 10 ॥

'காளைகளே! தொலைவிற்குச் சென்றுவிடுங்கள். இங்கு காளையைக் கொல்பவன் இருக்கிறான் பாருங்கள்' என்று இடையர்கள் கேலியாகப் பேச, அதைக் கேட்டுக் கொண்டே தாங்கள் அவர்களோடு வீடு திரும்பினீர்களாமே! குருவாயூரப்பா! தாங்கள் (தான்) என்னைக் காக்க வேண்டும். (10)

எழுபத்தோராவது தசகம்

கேசி வதம்

யத்நேஷு ஸர்வேஷ்வபி நாவகேஶீ கேஶீ ஸ பே⁴ஜேஶிது–ரிஷ்டப³ந்து⁴: ।
த்வம் ஸிந்து⁴ஜாவாப்ய இதீவ மத்வா ஸம்ப்ராப்தவாந் ஸிந்து⁴ஜ–வாஜிரூப: ॥ 1 ॥

குருவாயூரப்பா! தன் முயற்சியில் தோல்வியே காணாத கேசி என்பான் போஜ மன்னனான கம்ஸனுக்கு நெருங்கிய உறவினன். அவன் (திருப்பாற்கடலில் தோன்றிய) ஸிந்துஜையான திருமகளால் மட்டுமே அடையப்படுபவராகத் தங்களை நினைத்து, சிந்து தேசத்தில் தோன்றிய குதிரை வடிவெடுத்துத் தங்களை வந்தடைந்தான். (1)

க³ந்த⁴ர்வதாமேஷ க³தோऽபி ரூக்ஷை–நாதை²: ஸமுத்³வேஜித–ஸர்வலோக: ।
பூ⁴வத்³விலோகாவதி⁴ கே³பவாடீம் ப்ரமர்த்³ய பாப: புநராபதத் த்வாம் ॥ 2 ॥

பாவியான இந்த கேசி 'கந்தர்வன்' என்கிற குதிரைப் பிறவியைப் பெற்றிருந்தபோதிலும் (தனது) கடோரமான (இனிமையற்ற) கனைத்தலினால் மக்கள் அனைவரையும் அஞ்சும்படிச் செய்து, தங்களைக் காணும்வரை கோகுலத்தைத் துன்புறுத்தினான். அதன்பின் தங்களையும் கண்டு எதிர்த்தான். (2)

குறிப்பு:– இங்கு 'கந்தர்வன்' என்பது 'தேவர்களின் ஒருவகை' என்பதையும், 'குதிரை' என்பதையும் ஒரு சொல் இருபொருள் தோன்றும்படி கவி கையாள்கிறார்.

தார்க்ஷ்யார்பிதாங்க்₄ரேஸ்–தவ தார்க்ஷ்ய ஏஷ
சிக்ஷேப வக்ஷோபு₄வி நாம பாத₃ம் ।
ப்₄ருகே₃: பத₃ாகா₄த–கதா₂ம் நிஶம்ய
ஸ்வேநாபி ஶக்யம் ததி₃வீவ மோஹாத் ॥ 3 ॥

(முன்பொரு சமயம்) பிருகு மஹரிஷி தங்களைத் தன் காலால் உதைத்த கதையைக் கேட்டிருந்த 'தார்க்ஷ்யன்' (குதிரை) உருக்கொண்ட அவ்வஸுரன், தானும் அவ்வாறு செய்ய முடியும் என்று மதிமயங்கி, தார்க்ஷ்யனான கருடன் மேல் திருவடி வைத்து ஏறும் தங்களுடைய திருமார்புத் தடத்தில் உதைத்தான். (3)

ப்ரவஞ்சயந்–நஸ்ய கு₂ராஞ்சலம் த்₃ரா–
கு₃மும் ச சிக்ஷேபித₂ தூ₃ரதூ₃ரம் ।
ஸம்மூர்ச்சி₂தோபி ஹ்யதிமூர்ச்சி₂தேந
க்ரோதே₂ஷ்மணா கா₂தி₃து–மாத்₃ருதஸ்–த்வாம் ॥ 4 ॥

குதிரை வடிவு கொண்ட அவ்வஸுரனின் குளம்பின் தாக்குதல் (தன் மேல்) படாதவாறு அவனை ஏமாற்றி வெகுவேகமாக (அவனது பின்னங்கால்களைப் பற்றி) வெகுதொலைவில் எறிந்தீர்கள். (அவ்வாறு விழுந்த அவன்) மயங்கிய நிலையிலிருப்பினும் சினத்தீயினால் மதிமயங்கித் தங்களைத் தின்றுவிடுவான் போன்று தங்கள் மேல் பாய்ந்தான். (4)

த்வம் வாஹத₃ண்டே₃ க்ருததீ₄ஶ்ச வாஹா–
த₃ண்ட₃ம் ந்யத₄ாஸ்–தஸ்ய முகே₂ ததா₃நீம் ।
தத்₃வ்ருத்₃தி₄–ருத்₃த₄ஶ்வஸநோ கதாஸு:
ஸப்தீப₄வந்–நப்யயமைக்ய–மாக₃ாத் ॥ 5 ॥

அப்பொழுது தாங்கள் குதிரை உருவிலிருக்கும் அவ்வஸுரனைத் தண்டிக்க நினைத்து தண்டம் போன்ற தங்கள் திருக்கரத்தை அவன் வாயில் நுழைத்தீர்கள். அத்திருக்கரம் சற்று பெருகத் தொடங்கவே, அவ்வஸுரன் மூச்சுத் திணறி உயிரிழந்தான். அவ்வஸுரன் ஸப்தியாக (குதிரையாக) இருந்தாலும் தங்களிடம் ஏகியாக (ஐக்கியமாக) ஆனான். (5)

குறிப்பு:– 'ஸப்தி' என்றால் குதிரை என்றும், ஏழு என்றும் பொருள். இங்கு ஏழு ஒன்றாயிற்று என்கிறார் கவி. அதாவது குதிரையாக இருந்த அஸுரன் ஒன்றாக ஆனான். அதாவது ஐக்கியமடைந்தான் என்று கூறுகிறார்.

ஆலம்ப₄மாத்ரேண பஶோ: ஸுராணாம்
ப்ராஸாத₃கே நூத்ந இவாஶ்வமேதே₄ ।
க்ருதே த்வயா ஹர்ஷவஶாத் ஸுரேந்த்₃ராஸ்–
த்வாம் துஷ்டுவு: கேஶவநாமதே₄யம் ॥ 6 ॥

யாகத்தில் யாக பசுவின் ஹவிஸ்ஸினால் மட்டுமே மகிழ்ச்சி கொள்ளும் தேவர்கள், தாங்கள் செய்த புதியதான அசுவமேத யாகத்தால் (அதாவது கேசி என்கிற குதிரையைக் கொன்றதால்) மெத்த மகிழ்ச்சி கொண்டு தங்களுக்கு 'கேசவன்' என்று பெயரிட்டுத் துதித்தார்கள். (6)

குறிப்பு:– அசுவமேத யாகத்தில் குதிரையைக் கொன்று, 'வபை' என்கிற அதன் பாகத்தை எடுத்து மந்திரம் சொல்லி ஹோமம் செய்தால்தான் தேவர்கள் மகிழ்வார்கள். ஆனால் இங்கு மந்திரம் இல்லை, அவியை வேள்வியில் இடவும் இல்லை. குதிரையைக் கொன்றதால் மட்டுமே தேவர்கள் மகிழ்ந்தனர் எனில், தேவர்கட்குப் பகைவனான இவ்வஸுரன் இறந்ததாலேயே 'பகை தொலைந்தது' என்று மகிழ்ந்தனர் என்பது கருத்து.

கம்ஸாய தே ஸௌரிஸுதஸ்த்வ–முக்த்வா
தம் தத்3வதே2ாத்கம் ப்ரதிருத்3ய வாசா ।
ப்ராப்தேந கேஸிக்ஷபணாவஸாநே
ஸ்ரீநாரதே3ந த்வமபி3ஷ்டுதோ(ஸ்)பூ4: ॥ 7 ॥

(இங்கு இவ்வாறிருக்க) ஸ்ரீநாரதர் கம்ஸனிடம் 'தாங்கள் வஸுதேவரின் மைந்தன்' என்று கூற, அவனும் (தன்னை முன்பு ஏமாற்றிய) வஸுதேவரைக் கொல்ல நினைத்து முற்படவே, அவனை நல்ல வார்த்தைகள் கூறித் தடுத்துவிட்டு, பிருந்தாவனம் வந்து கேசியை வதம் செய்து நின்ற தங்களையும் துதித்தார். (7)

கதா3பி கே3பை: ஸஹ காநநாந்தே நிலாயந–க்ரீடநலோலுபம் த்வாம் ।
மயாத்மஜ: ப்ராப து3ரந்தமாயோ வ்யோமாபி4தே4ா வ்யோமசரோபரோதீ3 ॥ 8 ॥

ஒரு சமயம் கோபர்களுடன் வனப் பிரதேசங்களில் தாங்கள் ஒளிந்து விளையாடும் விளையாட்டில் ஈடுபட்டிருக்கையில், வானவர்களுக்குத் துன்பமளிப்பவனும், மாயையில் வல்லவனும், மயனென்னும் அஸுரனின் மைந்தனுமான வியோமன் என்கிற அஸுரன் தங்களை நாடி வந்தான். (8)

ஸ சோரபாலாயித–வல்லவேஷு
சோராயிதோ கே3பஸமூஹ பஞ்சமிம்ஸ்ச ।
கு3ஹாஸு க்ருத்வா பித3தே4 ஸிலாபி4ஸ்–
த்வயா ச பு4த்வா பரிமார்தி3தோ(ஸ்)பூ4த் ॥ 9 ॥

கோபர்களில் சிலர் திருடர்கள் போலவும், சிலர் காவற்காரர்கள் போலவும் விளையாடுகையில், அவ்வஸுரன் திருடன் போல விளையாடி இடைச்சிறுவர்களையும், பசுக்களையும் கவர்ந்து, குகைகளில் அடைத்து வைத்து குகைவாயிலைக் கற்கள் கொண்டு மூடிவிட்டான். இதையறிந்த தாங்கள் அவனைக் கொன்றீர்கள். (9)

ஏவம் விதை4ஸ்சாத்3பு4த–கேலிபி4ே4தை3–ராநந்த3மூர்ச்ச2ா–மதுலாம் வ்ரஜஸ்ய ।
பதே3 பதே3 நூதநயந்நலீமம் பராத்மரூபிந் பவநேஸ பாயா: ॥ 10 ॥

இவ்வாறு வியக்கத்தக்க பற்பலவிதமான திருவிளையாடல்களால் இடைச்சேரியில் உள்ள கோபர்களை சொல்லுக்கடங்காத ஆனந்தத்தில் மெய்மறக்கச் செய்ததோடன்றி, ஒவ்வொரு தரமும் அவர்களது ஆனந்தத்தை மேன்மேலும் புதிது புதிதாகப் பெருக்கிக் கொண்டு திருவிளையாடல் புரிந்த பரமாத்மாவான குருவாயூரப்பா! என்னைக் காத்தருளுங்கள். (10)

எழுபத்திரண்டாவது தசகம்

அக்ரூரர் வருகை

கம்ஸோऽத² நாரத³கி³ரா வ்ரஜவாஸிநம் த்வா–
மாகர்ண்ய தீ³ர்ணஹ்ருத³ய: ஸ ஹி கா³ந்தி³நேயம் ।
ஆஹூய கார்முகமகா²ச்–ச²லதோ ப³வந்த–
மாநேது–மேநமஹிநோ–த³ஹிநாத²ஸாயிந் ॥ 1 ॥

பாம்பணை மேல் பள்ளி கொண்ட குருவாயூரப்பா! தாங்கள் கோகுலத்தில் வசித்து வருவதாக ஸ்ரீநாரதர் கூறக் கேட்ட கம்ஸன் (தனது முயற்சி வீணானது கண்டு) மனம் நொந்து, 'தனுர்யாகம்' என்னும் ஒரு காரணத்தைக் காட்டித் தங்களை அழைத்து வர எண்ணி, காந்தினி என்பவரின் மகனான அக்ரூரை அனுப்பினான். (1)

அக்ரூர ஏஷ ப³வத³ங்க்⁴ரிபரஸ்–சிராய
த்வத்³த³ர்ஸநாக்ஷம–மநா: க்ஷிதிபாலபீ⁴த்யா ।
தஸ்யாஜ்ஞயைவ புநரீக்ஷிதுமுத்³யதஸ்த்வா–
மாநந்த³ப³ர–மதிபூ⁴ரிதரம் ப³ப³ர ॥ 2 ॥

அந்த அக்ரூரர் தங்கள் திருவடிகளையே சரணமாகப் பற்றி வெகுகாலமாகவே தங்களைக் காண வேண்டுமென்ற விருப்பமுடையவராயினும், அரசனான கம்ஸனிடம் கொண்ட பயத்தினால் தங்களைக் காணலாம் என்று மனதிலும் நினைக்க முடியாது தவித்தவர். அத்தகைய அவர் இப்பொழுது அதே அரசனுடைய கட்டளையால் தங்களை தரிசனம் செய்ய ஆவல் கொண்டு மனதில் ஆனந்தத்தின் பூரிப்பை அடைந்தார். (2)

ஸோऽயம் ரதே²ந ஸுக்ருதீ ப³வதோ நிவாஸம்
கஞ்சந் மநோரத²கு³ணாம்ஸ்–த்வயி தா³ர்யமாணாந் ।
ஆஸ்வாத³யந் முஹுரபாயப³யேந தை³வம்
ஸம்ப்ரார்த²யந் பதி²ந கிஞ்சித³பி வ்யஜாநாத் ॥ 3 ॥

பெரும்பேறு படைத்த அந்த அக்ரூரர் தேரில் ஏறிக் கொண்டு தங்கள் இருப்பிடமான கோகுலத்தை நோக்கிச் செல்கையில், தங்களைப் பற்றியே பற்பல சிந்தனைகளில் மூழ்கி அவற்றை சுவைத்துக் கொண்டே (வழியில் கம்ஸனால் அதற்கு ஏதாவது) தடங்கல் வந்துவிடுமோ என்று பயந்து இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டு (செல்கையில்) வழியில் எங்கு என்ன நடக்கிறது என்று எதையுமே உணராது சென்றார். (பகவான் ஒருவனையே நினைந்து சென்றார் என்று பொருள்.) (3)

த்ரக்ஷ்யாமி வேத³ஸுதகீ³தகு³ணம் புமாம்ஸம்
ஸ்ப்ரக்ஷ்யாமி கிம்ஸ்வித³பி நாம பரிஷ்வஜேயம் ।
கிம் வக்ஷ்யதே ஸ கு³லு மாம் க்வநு வீக்ஷித: ஸ்யா–
தி³த்தம் நிநாய ஸ ப³வந்மயமேவ மார்கம் ॥ 4 ॥

"அடைய வேண்டிய பரமபுருஷன் ஸ்ரீபகவானே என்று வேதங்களால் நூற்றுக்கணக்கான இடங்களில் கொண்டாடப்படுகின்ற ஸ்ரீகிருஷ்ணனை நான் காண்பேனா? நான் தொடுவேனா?

இறுகத் தழுவிக் கொள்வேனா? அவர் என்னிடம் 'அக்ரூரரே' என்றழைத்துப் பேசுவாரா? எங்கு சென்றால் அவரைக் காணலாம்?'' என்றிவ்வாறு பலபடியாக நினைத்து, தங்கள் நினைவாகவே அக்ரூர் வழியைக் கடந்தார். (4)

பூ4ய: க்ரமா–த3பி4விஸந் ப4வத3ங்க்4ரிபூதம்
ப்3ருந்தா3வநம் ஹரவிரிஞ்ச–ஸுராபி4வந்த்3யம் ।
ஆநந்த3மக்3ந இவ லக்3ந இவ ப்ரமோஹே
கிம் கிம் த3ஸாந்தரமவாப ந பங்கஜாக்ஷ ॥ 5 ॥

கமலக்கண்ணா! தங்கள் திருவடிகள் படிந்ததால் மிகப் புனிதமானதும், பரமசிவன், பிரம்மா மற்றும் தேவர்களால் வணங்கத்தக்கதுமான பிருந்தாவனத்தில் புகுந்ததும் ஆனந்தக் கடலில் மூழ்கினாற்போலும் மோகத்தில் ஆழ்ந்தாற்போலும் வர்ணிக்க முடியாதவாறு என்னென்ன நிலையைத்தான் அடைந்தாரோ? வெளியிலே உள்ள நிலைகள் ஒன்றும் அறியாது கண்ணனை உள் நினைந்து நினைந்து அதிலேயே தன்மயமானார் என்பது கருத்து. (5)

பஸ்யந்நவந்த3த ப4வத்3–விஹ்ருதிஸ்த2லாநி
பாம்ஸுஷ்–வவேஷ்டத ப4வச்–சரணாங்கிதேஷு ।
கிம் ப்3ரூமஹே பூ4ஜுநா ஹி தத3ாபி ஜாதா
ஏவம் து ப4க்திதரலா விரலா: பராத்மந் ॥ 6 ॥

பரமாத்மா, ஸ்ரீகுருவாயூரப்பா! தாங்கள் விளையாடிய இடங்களைக் கண்டதும் வீழ்ந்து வணங்கினார். தங்கள் திருவடி இலச்சினை பட்டுள்ள புழுதிகளில் விழுந்து புரண்டார். நாங்கள் என்னதான் சொல்வோம்? தாங்கள் திருவவதாரம் செய்திருந்த அச்சமயத்தில் எத்தனையோ பல பெரியோர்கள் தோன்றியிருந்தும், (அக்ரூரரைப்போல) இப்படி பக்தியின் பரவசத்தில் மூழ்கியவர்கள் மிகமிகக் குறைவே. (6)

ஸாயம் ஸ கே3ாப–ப4வநாநி ப4வச்சரித்ர–
கீ3தாம்ருத–ப்ரஸ்ருத–கர்ணரஸாயநாநி ।
பஸ்யந் ப்ரமோத3–ஸரிதேவ கிலோஹ்யமாநோ
க3ச்சந் ப4வத்3ப4வந–ஸந்நிதி4–மந்வயாஸீத் ॥ 7 ॥

தங்களது திருவிளையாடல்களை விளக்கும் பாடல்களை கோபர்கள் தங்கள் இல்லங்களில் பாட, அது அக்ரூருக்கு அமுதினும் இனிமையாகக் காதுகளில் பரவி நிற்க, அவ்வமுதம் தவழ்ந்து வரும் கோபர்களின் வீடுகளைக் கண்டு கொண்டே, அச்செவியமுதப் பெருக்கினால் உந்தித் தள்ளப்பட்டாற்போன்று மெதுவாக நடந்து மாலையில் தங்களது திருமாளிகை முன் வந்தடைந்தார். (7)

தாவத்3 த3த3ர்ஸ பஸுதே3ாஹ–விலோகலோலம்
ப4க்தோத்த–மாக3திமிவ ப்ரதிபாலயந்தம் ।
பூ4மந் ப4வந்தமய–மக்3ரஜவந்த–மந்தர்–
ப்3ரஹ்மாநுபூ4தி–ரஸஸிந்து4–மிவோத்3வமந்தம் ॥ 8 ॥

எங்கும் நிறைந்து விளங்கும் குருவாயூரப்பா! பசுக்கள் பால் கறத்தலைப் பார்ப்பதில் மகிழ்ச்சி கொண்டவராகவும், ஓர் உத்தம பக்தனின் வருகையை எதிர்நோக்கி நிற்பவர் போன்றும், அண்ணனான பலராமனோடுகூட நின்று கொண்டிருப்பவரும், உள்ளம் நிறைந்து அனுபவிக்கப் பெறும் பிரும்மானந்த அமுதக் கடலை (பக்தனுக்காக) வெளியிலே மடை திறந்து விடுபவர் போன்றும் உள்ள தங்களை, இந்த அக்ரூரர் கண்டார். (8)

ஸாயந்தநாப்லவ–விஶேஷ–விவிக்தகாத்ரௌ
த்வௌ பீதநீல–ருசிராம்பர–லோபநீயௌ ।
நாதிப்ரபஞ்ச–த்ருதபூஷண–சாருவேஷௌ
மந்தஸ்மிதார்த்ர–வதநௌ ஸ யுவாம் தத³ர்ஶ ॥ 9 ॥

மாலையில் நீராடித் தூய்மையான திருமேனியுடன் கண்கவரும் அழகிய மஞ்சள்பட்டும், நீலப்பட்டும் உடுத்திக் கவர்ச்சியாக, உலகியல் போன்று அதிகமான அணிகலன்கள் அணியாத, அதனால் மிக அழகாக விளங்கும் வேடத்துடன் குளிர்ந்த புன்முறுவல்பூத்த முகத்துடன் உள்ள உங்களிருவரையும் அவர் தரிசித்தார். (9)

தூராத்³ ரதா²த் ஸமவருஹ்ய நமந்தமேந–
முத்தா²ப்ய பக்தகுலமௌலி–மதே²பகூ²ஹந் ।
ஹர்ஷாந்மிதாக்ஷரகி³ரா குஶலானுயோகீ³
பாணிம் ப்ரக்³ருஹ்ய ஸப³லோதா² க்³ருஹம் நிநேத² ॥ 10 ॥

தொலைவிலிருந்தே (தங்களைக் கண்டதும்) தேரைவிட்டு இறங்கி வணங்கிக் கொண்டே வருகிற பக்த சிரேஷ்டரான அக்ரூரரை, வாரி எடுத்துத் தழுவிக் கொண்டு, மகிழ்ச்சிப் பெருக்கினால் பேசத் திறனற்று தழுதழுத்த குரலுடன் 'க்ஷேமம்' விசாரித்துவிட்டு, பலராமனோடு கூட அவரது கரங்களைப் பற்றிக் கொண்டு வீட்டிற்கு அழைத்து வந்தீர்கள். (10)

நந்தே³ந ஸாக–மமிதாத³ர–மர்சயித்வா
தம் யாத³வம் தது³தி³தாம் நிஶமய்ய வார்தாம் ।
கே³பேஷு பூ⁴பதிநிதே³ஶ–கதா³ம் நிவேத்³ய
நாநாகதா²பி⁴ரிஹ தேந நிஶாமநைஷீ: ॥ 11 ॥

அங்கு ஸ்ரீநந்தகோபருடன் சேர்ந்து யதுகுலத்தோன்றலான அக்ரூரரை முறைப்படி வரவேற்று உபசரித்து, அவர் கூறிய செய்தி கேட்டு, அந்த அரச கட்டளையை கோபர்கள் அனைவருக்கும் தெரிவித்தீர்கள். பின் அவரோடு பற்பல கதைகளைப் பேசிக் கொண்டே அவ்விரவைக் கழித்தீர்கள். (11)

சந்த்³ராக்³ருஹே கிமுத சந்த்³ரப⁴காக்³ருஹே நு
ராதா⁴க்³ருஹே நு ப⁴வநே கிமு மைத்ரவிந்தே³ ।
தூ⁴ர்தோ விலம்ப³த இதி ப்ரமதா²பி⁴ருச்சை–
ராஶங்கிதோ நிஶி மருத்புரநாத² பாயா: ॥ 12 ॥

(அன்றிரவு கண்ணனைக் காணாத) கோபியர்கள் 'வஞ்சகனான ஸ்ரீகிருஷ்ணன் சந்திரா வீட்டிலிருப்பானோ? ஒருவேளை சந்திரபகா வீட்டிலோ அல்லது ராதையின் வீட்டிலோ

இருப்பானோ? அல்லது மித்திரவிந்தையின் வீட்டில்தான் இருப்பானோ? எங்குதான் தங்கியிருப்பான்?' என்றிவ்வாறு அன்றிரவு முழுவதும் தங்களைப் பற்றியே பெருத்த சிந்தனை கொண்டிருந்தனர். அத்தகைய ஸ்ரீகுருவாயூரப்பா! புகலொன்றில்லா அடியேனைக் காத்தருள வேண்டுகிறேன். (12)

எழுபத்து மூன்றாவது தசகம்

பகவான் மதுரைக்குப் புறப்படுதல்

நிஶமய்ய தவாத₂ யாநவார்தாம் ப்₃ருஶமார்தா: பஶுபால–பா₃லிகாஸ்தா: ।
கிமித₃ம் கிமித₃ம் கத₂ம் ந்விதீமா: ஸமவேதா: பரிதே₃விதாந்யகுர்வந் ॥ 1 ॥

குருவாயூரப்பா! தாங்கள் மதுரை நகர் செல்லும் செய்தியைக் கேட்ட அந்த ஆயர் சிறுமிகள் மிக வருந்தி ஒன்று கூடி, 'இதென்ன? இதென்ன? எப்படி இப்படி நடக்கும்?' என்று புலம்பினார்கள். (1)

கருணாநிதி₄ரேஷ நந்த₃ஸூநு: கத₃மஸ்மாந் விஸ்ருஜே–தந்நந்யநாத₂: ।
பூத நு: கிமு தை₃வமேவமாஸீ–தி₃தி தாஸ்–த்₃வத்₃கதமாநஸா விலேபு: ॥ 2 ॥

'நந்தகுமாரனான ஸ்ரீகிருஷ்ணன் கருணைக்கடலாயிற்றே! புகலொன்றில்லா நம்மை அவன் எவ்வாறு கைவிடுவான்? அந்தோ! ஊழ் வந்து உறுத்தியதோ?' என்று தங்களிடமே உள்ளத்தைப் பதிய வைத்த கோபியர்கள் மிகவும் புலம்பினார்கள். (2)

சரமப்ரஹரே ப்ரதிஷ்ட₂மாந: ஸஹ பித்ரா நிஜமித்ரமண்ட₃லைஶ்ச ।
பரிதாபப₄ரம் நிதம்பி₃நீநாம் ஶமயிஷ்யந் வ்யமுச: ஸகா₂யமேகம் ॥ 3 ॥

இரவின் கடைசி பொழுதில் (விடிவோரையில்) தாங்கள் தந்தையான நந்தனுடனும், ஆயர் தோழர்களுடனும் (மதுரைக்குப்) புறப்படும்பொழுது, கோபியர்களின் துயரத்தைத் தணிக்க ஒரு தோழனை அனுப்பியருளினீர்கள். (3)

அசிராது₃பயாமி ஸந்நிதி₄ம் வோ
ப₄விதா ஸாது₄ மயைவ ஸங்க₃மஶ்ரீ: ।
அம்ருதாம்பு₃–நிதே₄ள நிமஜ்ஜயிஷ்யே
த்₃ருத–மித்யாஶ்வஸிதா வதூ₄ரகார்ஷீ: ॥ 4 ॥

'கோபியர்களே! உங்கள் முன் விரைவிலேயே வந்திடுவேன். வெகு சீக்கிரமே என்னுடன் கூடி இன்புறுவீர்கள். உங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தப் போகிறேன்' என்று கோபியர்களுக்கு ஆறுதலாகச் செய்தி கூறியனுப்பினீர்கள். (4)

ஸவிஷாத₃ப₄ரம் ஸயாஞ்சஸமுச்சை–
ரதிதூ₃ரம் வநிதாபி₄–ரீக்ஷ்யமாண: ।
ம்ருது₃ தத்₃தி₃ஶி பாதயந்–நபாங்கா₃ந்
ஸபு₃லோகஸூர–ரதே₂ந நிர்க₃தோऽபூ₄: ॥ 5 ॥

அக்கோபியர்கள் மிகவும் வருந்தித் தங்களை வெகுவிரைவில் திரும்பிவர வேண்டுமென வேண்டி நின்று, தாங்கள் வெகுதூரம் செல்லும் வரையில் தலையை உயர்த்திப் பார்த்துக் கொண்டே நின்றனர். தாங்களும் அவர்களைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே பலராமனுடன் அக்ரூரரது தேரில் சென்றீர்கள். (5)

அநஸா பூஹ்ஈலேந வல்லவாநாம் மநஸா சாநுக³தோ²த² வல்லப⁴நாம் ।
வநமார்தம்ருக³ம் விஷண்ணவ்ருக்ஷம் ஸமதீதோ யமுநாதட–மயாஸீ: ॥ 6 ॥

அவ்வாறு தாங்கள் செல்லும்போது கோபர்களது பல வண்டிகளும், கோபியர்களது மனதும் தங்களைப் பின்தொடர்ந்தன. காட்டிலுள்ள விலங்குகளும் வருந்தின. மரங்களோ வாடி நின்றன. இவையனைத்தையும் கடந்து தாங்கள் யமுனைக் கரையை அடைந்தீர்கள். (6)

நியமாய நிமஜ்ய வாரிணி த்வா–
மபி⁴வீக்ஷ்யாத² ரதே²ऽபி க்³ருந்தி⁴நேய: ।
விவஸோ²ஜநி கிந்விதத்³ம் விபே⁴ஸ்தே
நநு சித்ரம் த்வவலோகநம் ஸமந்தாத் ॥ 7 ॥

தனது நித்தியகர்மானுஷ்டானங்களைச் செய்வதற்காக யமுனை நீரில் இறங்கிய அக்ரூரர், தங்களை யமுனை நீரினுள்ளும், (அதே சமயம்) தேரிலும் இருக்கக் கண்டு வியப்பில் மெய்மறந்தவரானார். எங்கும் நிறைந்துள்ள பிரபுவே! இவ்வாறு தங்களை எங்கும் காண்பதென்பது ஒன்றும் வியப்பல்லவே! (7)

புநரேஷ நிமஜ்ய புண்யஸாலீ புருஷம் த்வாம் பரமம் பூ¤ஜங்க³பே⁴ாகே³ ।
அரிகம்பு³க³தா³ம்பு³ஜை: ஸ்புரந்தம் ஸ்ரூயஸித்³தை⁴ளக⁴–பரீதமாலுலோகே ॥ 8 ॥

திரும்பவும் தண்ணீரில் மூழ்கிய புண்ணியசாலியான அக்ரூரர், பரமாத்மாவான தங்களை ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டவராக சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவற்றைக் கையிலேந்தி, தேவர்கள், சித்தர்கள் ஆகியவர்களால் சூழப்பெற்று எங்கும் ஒளி மிகுந்து விளங்குபவராகக் கண்டார். (8)

ஸ ததா³ பரமாத்ம–ஸௌக்²ய–ஸிந்தௌ⁴ள
விநிமக்³ந: ப்ரணுவந் ப்ரகாரபே⁴தை³: ।
அவிலோக்ய புநஸ்ச ஹர்ஷஸிந்தௌ⁴–
ரநுவ்ருத்யா புலகாவ்ருதோ யயௌ த்வாம் ॥ 9 ॥

அப்பொழுது அந்த அக்ரூர் பிரும்மானந்தமாகிற கடலில் மூழ்கியவராக ஸகுண மூர்த்தியாகவும், நிர்குண பிரம்மமாகவும் தங்களைப் பலவாறாகத் துதித்தார். அதன்பின் தங்களது தரிசனம் மறைந்த பின்பும், மூன்பு பெற்ற தரிசனத்தின் ஆனந்தானுபவத்தால் மெய்சிலிர்க்கத் தங்களிடம் வந்து சேர்ந்தார். (9)

கிமு ஶீதலிமா மஹாந் ஜலே யத் புலகோ²ஸாவிதி சோதி³தேந தேந ।
அதிஹர்ஷ–நிருத்தரேண ஸார்த்³ம் ரத³வாஸீ பவநேஶ பாஹி மாம் த்வம் ॥ 10 ॥

(அவ்விதம் வந்த அக்ரூரரைக் கண்டு 'அக்ரூரரே!) யமுனை நீர் என்ன மிகவும் குளிர்ச்சியாக உள்ளதோ? மெய்சிலிர்த்து இருக்கிறதே?' என்று தாங்கள் வினவவே, மகிழ்ச்சிப்

பெருக்கினால் தழுதழுத்த அவர் பதிலுரைக்க இயலாது நின்றார். தேரிலே வீற்றிருக்கும் குருவாயூரப்பா! என்னைக் காத்தருள வேண்டுகிறேன். (10)



எழுபத்து நான்காவது தசகம்

பகவான் மதுரைக்கு எழுந்தருளுதல்

ஸம்ப்ராப்தோ மது₂ராம் தி₃நார்த₄விக₃மே தத்ராந்தரஸ்மிந் வஸந்–
நாராமே விஹிதாமந: ஸகி₂ஜநைர்யாத: புரீமீக்ஷிதும் ।
ப்ராபோ ராஜபத₂ம் சிரஸ்ருதி₃ருத–வ்யாலோக–கௌதூஹல–
ஸ்த்ரீபி:ஸோத்₃ய–த்₃கு₃ண்ய–புண்யநிக₃லை–ராக்ருஷ்யமாணோ நு கிம் ॥ 1 ॥

நண்பகல் நேரத்தில் மதுரையை அடைந்த தாங்கள், நகரின் எல்லையில் உள்ள ஒரு நந்தவனத்திலே தங்கி ஆகாரத்தை முடித்துக் கொண்டு தோழர்களுடன் நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டீர்கள். நெடுநாட்களாகத் தங்களைப் பற்றிக் கேள்வியுற்று, தங்களைக் காண வேண்டுமென ஆவல் கொண்ட ஆடவரும், பெண்டிரும் செய்திருந்த அளவற்ற புண்ணியமாகிற கயிற்றால் கவர்ந்து இழுக்கப்பட்டவர் போலவன்றோ ராஜவீதியில் வந்து நின்றீர்கள்! (1)

த்வத்பாத₂த்₃யுதிவத் ஸராக₃ஸு₂க₃ாஸ்–த்வந்மூர்திவத்₃ யோஷித:
ஸம்ப்ராப்தா விலஸத்பயோத₄ருசோ லோலா பு₄வத்₃ருஷ்டிவத் ।
ஹாரிண்யஸ் த்வது₃ரஸ்த₂லீவத₃யி தே மந்த₃ஸ்மிதப்ரௌடி₄வந்–
நைர்மல்யோல்லஸிதா: கசௌக₄ருசிவத்₃ ராஜத்கலாபாஸ்ரிதா: ॥ 2 ॥

குருவாயூரப்பா! அப்பொழுது தங்களது திருவடிகளைப் போன்று காந்தியோடு சிவப்பாக உள்ள அழகிய பெண்கள் தங்களைக் காண வந்தனர். அவர்களது நகில்கள் கொண்டல்வண்ணம் கொண்ட தங்களது திருமேனிபோல் அழகாக இருந்தன. தங்களது திருக்கண்கள்போல் அசைந்தாடி வந்தனர். தங்களது அகன்ற திருமார்புத்தடம்போல் அவர்களும் மனதைக் கவரும்வண்ணம் மாலைகள் அணிந்திருந்தனர். தங்களது புன்முறுவல் போன்று மாசற்று விளங்கினர். தங்கள் திருமுடி அழகு போன்று கூந்தலிலே அணிகலன்கள் கொண்டு விளங்கினர். (2)

குறிப்பு:– இங்கு பகவானையே நினைந்து நினைந்து உருகி நின்றதால் இவர்களும் பகவானின் ஸாரூப்ய நிலையை (அதாவது பகவானைப் போன்ற அழகு படைத்த உருவை) அடைந்து விளங்கினர் என்பது கருத்து.

தாஸா–மாகலயந்–நபாங்க₃வலநைர்மோத₃ம் ப்ரஹர்ஷாத்₃பு₄த–
வ்யாலோலேஷு ஜநேஷு தத்ர ரஜகம் கஞ்சித் படம் ப்ரார்த₂யந் ।
கஸ்தே த₃ாஸ்யதி ராஜகீயவஸநம் யாஹீதி தேநோதி₃த:
ஸத்₃யஸ்தஸ்ய கரேண ஶீர்ஷமஹ்ருத₃ா: ஸோபப்யாப புண்யாம் கதிம் ॥ 3 ॥

அவ்வாறு தங்களைக் காண வந்த பெண்களைக் கடைக்கண் நோக்கால் மகிழ்ச்சியடையச் செய்தீர்கள். நகர மக்களும் தங்களைக் கண்டு பெருமகிழ்ச்சியும், வியப்பும் கொண்டு ஒருங்கு வந்து கூடினர். அப்பொழுது (அரசனது) வண்ணான் அங்கு வரவே, அவனிடம் தாங்கள் (அணிந்து கொள்ள) ஆடைகளைக் கேட்டீர்கள். (அதைச் செவியுற்ற அவன்) 'அரசனது ஆடைகளை உனக்கு யார் தருவார்? போ! ஓடிப்போ!' என்று (செருக்கோடு) கூறியவுடனே, அவனது தலையைக் கையால் கொய்தீர்கள். (தங்களது திருக்கரத்தால் மரணமடைந்ததால்) அவனும் புண்ணிய கதியை அடைந்தான். (3)

பூ4யோ வாயக–மேக–மாயதமதிம் தோஷேண வேஷோசிதம்
த3ாஸ்வாம்ஸம் ஸ்வபத3ம் நிநேத2 ஸுக்ருதம் கோ வேத3 ஜீவாத்மநாம் ।
மாலாபி4: ஸ்தபகை: ஸ்தவைரபி புநர்மாலாக்ருதா மாநிதோ
ப4க்திம் தேந வ்ருதாம் தி3தே3ஶித2 பராம் லக்ஷ்மீம் ச லக்ஷ்மீபதே ॥ 4 ॥

திருமகள் கேள்வனே! குருவாயூரப்பா! அதன்பிறகு பெருமனம் படைத்த ஒரு தையற்காரன் தங்கள் வேடத்திற்குப் பொருத்தமாக ஒரு வஸ்திரத்தை மகிழ்வோடு அளித்தான். அவனைத் தாங்கள் ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துக் கொண்டீர்கள். ஜீவாத்மாக்கள் செய்துள்ள புண்ணியத்தை யாரே அறிய வல்லார்? அடுத்து மலர் விற்பவன் ஒருவன் தங்களுக்கு மாலைகளையும், பூச்செண்டுகளையும் அளித்துத் துதித்துப் பாடவே, அவன் வேண்டியபடி உயர்ந்த பக்தியையும், (ஏராளமான) செல்வத்தையும் அவனுக்கு அளித்தருளினீர்கள். (4)

குப்3ஜா–மப்3ஜவிலோசநாம் பதி2 புநர்–த்3ருஷ்ட்வாங்க3ராகே3 தயா
த3த்தே ஸாது4 கிலாங்க3ராக3–மதி3தா3ஸ்தஸ்யா மஹாந்தம் ஹ்ருதி3 ।
சித்தஸ்தா2ம்–ருஜுதாமத2 ப்ரத3யிதும் க3த்வாபி தஸ்யா: ஸ்பு2டம்
க்3ருஹ்ணந் மஞ்ஜு–கரேண தாமுதயஸ்–தாவஜ்–ஜகா3ஸுந்த3ரீம் ॥ 5 ॥

அதன்பிறகு வழியில் தாமரை போன்ற கண் படைத்த ஒரு கூனியைக் காணவே அவள் தங்களுக்கு அங்கராகமான சந்தனத்தை (வாசனை மிகுந்த உடற்பூச்சுகளை) அளித்தாள். தாங்களும் அவளுடைய உள்ளத்தில் அங்கராகத்தை (தங்கள் அழகிய திருமேனியில் பற்றை) மேலும் பெருகச் செய்தீர்கள். அவளுடைய உள்ளத்தின் நேர்மையை உடலிலும் விளங்கும்படிச் செய்ய (மனம் கொண்ட தாங்கள்) மெதுவாக அவளைப் பற்றி அவளது கூனை நிமிர்த்தினீர்கள். உடனே அவளும் உலக அழகியாக ஆகிவிட்டாள். (5)

தாவந்நிஶ்சித–வைப4வாஸ்–தவ விபோ4 நாத்யந்தபாபா ஜநா
யத்கிஞ்சித்3 த3த3தே ஸ்ம ஸக்த்யநுகு3ணம் தாம்பூ3லமால்யாதி3கம் ।
க்3ருஹ்ணாந: குஸுமாதி கிஞ்சந ததா3 மார்கே3 நிப3த்34ாஞ்ஜலிர்–
நாதிஷ்டம் ப3த ஹா யதோऽத்3ய விபுலாமார்திம் வ்ரஜாமி ப்ரபோ4 ॥ 6 ॥

பிரபுவே! அந்த காலத்தில் தங்களது பெருமைகளைக் கண்கூடாகக் கண்டதால் பாவம் நீங்கிய மதுரா நகரவாஸிகள் அவரவர் தகுதிக்கேற்றவாறு தாம்பூலமோ, மாலையோ ஏதோ ஒரு சிறுகாணிக்கையைத் தங்களுக்கு அர்ப்பணித்தார்கள். அதனால் தங்களது அருளைப் பெற்றார்கள். ஆனால் அப்பொழுது நானும் புஷ்பம் முதலிய ஏதாவது ஒரு பொருளை வைத்துக் கொண்டு அஞ்ஜலி செய்து வழியில் நிற்காமல் போய் விட்டேனே. அந்தோ! அதனாலன்றோ இன்று மிகுந்த துன்பத்தை அனுபவிக்கிறேன்! (6)

ஏஷ்யாமீதி விமுக்தயாऽபி ப₄வந்–நாலேப–த்₃ராத்ர்யா தயா
தூ₃ராத் காதரயா நிரீக்ஷித–க₃திஸ்–த்வம் ப்ராவிஶோ கே₃புரம் ।
ஆகே₃ஷாநுமித–த்வத்₃க₃ம–மஹா–ஹர்ஷோல்லஸத்₃–தே₃வகீ–
வக்ஷோஜ–ப்ரக₃லத்–பயோரஸமிஷாத்–த்வத்கீர்தி–ரந்தர்க₃தா ॥ 7 ॥

பகவானான குருவாயூரப்பா! 'பிறகு நான் வருகிறேன்' என்று சந்தனப்பூச்சுகளையளித்த கூனியிடம் கூறிவிட்டுத் தாங்கள் விடைபெற்றுச் சென்றபோதும் பிரிவாற்றாமையால் அவள் வருந்தி, கோபுரவாயிலை அடையும்வரை அரசவீதியில் தாங்கள் நடந்து செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றாள். நகர மக்களின் ஆரவாரத்தினால் தங்களுடைய வரவை ஊகித்தறிந்து பெருமகிழ்ச்சி கொண்ட தேவகியின் நகில்களினின்றும் பால் பெருகியது. அது உள்ளே அடங்கியிருந்த தங்களது புகழ் வெளியே புறப்பட்டது போன்றிருந்தது. (மதுரையில் நுழைந்தது போன்றிருந்தது.) (7)

ஆவிஷ்டோ நக₃ரீம் மஹோத்ஸவவதீம் கோத₃ண்ட₃ஶாலாம் வ்ரஜந்
மாது₃ர்யேண நு தேஜஸா நு புருஷைர்தூ₃ரேண த₃த்தாந்தர: ।
ஸ்ரக்₃பி₃ர்பூ₄ஷிதமர்சிதம் வரத₄நுர்–மாமேதி வாத₃ாத் புர:
ப்ராக்₃ருஹ்ணா: ஸமரோபய: கில ஸமாக்ராக்ஷீ–ரப₃ாங்க்ஷீரபி ॥ 8 ॥

பெருத்த கோலாகலத்துடன் விளங்கும் அந்நகரினுள் புகுந்த தாங்கள் வில் வைத்துள்ள இடத்திற்குச் சென்றீர்கள். தங்களது அழகையும், ஒளியையும் கண்ட காவற்காரர்கள் தொலைவிலிருந்தே வழிவிட்டனர். அங்கு மலர்களால் அலங்கரித்துப் பூஜை செய்து வைக்கப்பட்டிருந்த பெரிய வில்லை அங்குள்ளவர்கள் 'தொடாதே! தொடாதே!!' என்று சொல்லி முடிப்பதற்குள் எடுத்து வளைத்து நாணேற்றி விரைவிலே ஒடித்து எறிந்தீர்கள். (8)

ஶ்வ: கம்ஸக்ஷபணோத்ஸவஸ்ய புரத: ப்ராரம்ப₄–தூர்யோபமஶ்–
சாபத்₃வம்ஸ–மஹாத்₄வநிஸ்–தவ விபே₄ா தே₃வாநரோமாஞ்சயத் ।
கம்ஸஸ்யாபி ச வேபது₃ஸ்–தது₃தி₃த: கோத₃ண்ட₃–க₃ண்ட₃த்₃வயீ–
சண்ட₃ாப்₄யாஹத–ரக்ஷிபூருஷரவை–ருத்கூலிதோऽபூ₄த் த்வயா ॥ 9 ॥

பிரபுவே, குருவாயூரப்பா! நாளை நடக்கப் போகும் கம்ஸ வதமாகிற விழாவிற்கு முதலில் வாசிக்கப்படும் 'தூர்யம்' என்ற மங்கள வாத்தியத்தின் ஒலி போன்றிருந்தது தங்களால் முறிக்கப்பட்ட வில்லின் பேரொலி. இவ்வொலி வானவர்களையும் மயிர்சிலிர்க்கச் செய்தது. கம்ஸனும் நடுங்கினான். பின் தாங்கள் முறிந்த வில்லின் இரு துண்டுகளால் அங்குள்ள காவற்காரர்களை அடிக்க அவர்களது கூக்குரல் கம்ஸனின் நடுக்கத்தை மேலும் பெருகச் செய்தது. (9)

ஶிஷ்டைர்–துஷ்டஜநைஶ்ச த்₃ருஷ்டமஹிமா ப்ரீத்யா ச பீத்யா தத:
ஸம்பஶ்யந் புரஸம்பத₃ம் ப்ரவிசரந் ஸாயம் க்₃தோ வாடிகாம் ।
ஸ்ரீத₃ாம்நா ஸஹ ராதி₄காவிரஹஜம் கே₂த₃ம் வத₃ந் ப்ரஸ்வபந்–
நாநந்த₃ந்–நவதாரகார்யக₃டநாத்₃ வாதேஶ ஸம்ரக்ஷ மாம் ॥ 10 ॥

அன்றைய தினம் தங்களது பெருமைகளை நல்லோர்கள் மனமகிழ்ச்சியுடனும், தீயோர் அச்சத்துடனும் கண்டனர். மதுராபுரியின் அழகைச் சுற்றிப் பார்த்துவிட்டு மாலையில்

(தாங்கள் தங்கியுள்ள) நந்தவனத்திற்குத் திரும்பினீர்கள். அங்கு ஸ்ரீதாமாவிடம் ராதையின் பிரிவால் உண்டான துயரத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டே உறங்கிவிட்டீர்கள். தான் எடுத்த அவதார காரியம் நன்கு நடைபெறுவது கண்டு மகிழ்ந்த குருவாயூரப்பா! என்னைக் காப்பாற்ற வேண்டும். (10)

*****

எழுபத்தைந்தாவது தசகம்

கம்ஸ மோக்ஷம்

ப்ராத: ஸந்த்ரஸ்த–பே₄ஜக்ஷிதிபதி–வசஸா ப்ரஸ்துதே மல்லதூர்யே
ஸங்கே₄ ராஜ்ஞாம் ச மஞ்சாந–பி₄யயுஷி க₃தே நந்த₃கே₃பேऽபி ஹர்ம்யம் ।
கம்ஸே ஸௌத₄ாதி₄ரூடே₄ த்வமபி ஸஹப₃ல: ஸாநுக₃ம்ர–சாருவேஷோ
ரங்க₃த்₃வாரம் க₃தோऽபூ₄: குபிதகுவலயாபீட₃–நாக₃வலீட₃ம் ॥ 1 ॥

மறுநாட்காலையில் பயம்கொண்ட கம்ஸனது கட்டளையால் 'மல்லர்களின் போட்டி விழா' தொடங்குவது பற்றி முரசு அறைவிக்கப்பட்டது. குழுமியிருந்த மன்னர்கள் தங்கள் தங்கள் இருக்கையில் வந்து அமர்ந்தனர். நந்தகோபனும் பார்வையாளர்களிடையே உயர்ந்த இடத்தில் அமர்ந்தார். கம்ஸன் அரண்மனை மேல் மாடியில் (உப்பரிக்கையில்) வந்தமர்ந்தான். அப்பொழுது தாங்கள் நன்கு அலங்கரித்துக் கொண்டு பலராமனுடனும், மற்ற நண்பர்களுடனும் அரங்கத்தின் வாயிலை வந்து அடைந்தீர்கள். (ஆனால்) அங்கு 'குவலயாபீடம்' என்கிற யானை மிகவும் சினம் கொண்டு வாயிலை மறைத்து நின்றது. (1)

பாபிஷ்ட₂ாபேஹி மார்க₃ாத்₃–த்₃ருதமிதி வசஸா நிஷ்டு₂ர–க்ருத்₃த₄–பூ₃த்₃தே₄–
ரம்ப₃ஷ்ட₂ஸ்ய ப்ரணோத₃ா–த₃தி₄க–ஜவஜுஷா ஹஸ்திநா க்₃ருஹ்யமாண: ।
கேலீமுக்தோऽத₂ கே₃பீகுச–கலஶ–சிரஸ்பர்தி₄நம் கும்ப₄மஸ்ய
வ்யாஹத்யா–லீயத₂ாஸ்–த்வம் சரணபு₄வி புநர்–நிர்க₃தோ வல்கு₃ஹாஸீ ॥ 2 ॥

(அப்பொழுது) 'அடே பாவி! வழியை விட்டு விலகிச் செல்! உம். சீக்கிரம்' என்று தங்களால் ஏவப்பட்ட கொடியோனான மாவுத்தன் மிக்க சினம் கொண்டு யானையைத் தூண்ட அது மிகவும் வேகத்தோடு தங்களைப் பிடித்துக் கொண்டது. (ஆனால்) தாங்கள் விளையாட்டாகவே (எளிதாகவே) அதன் பிடியிலிருந்து தப்பி, கோபிகைகளின் பருத்த நகில்களுடன் போட்டியிடுவது போன்று பருத்திருந்த அந்த யானையின் மந்தகத்தில் ஓங்கியடித்துவிட்டு அதன் கால் இடுக்கில் ஒளிந்து கொண்டீர்கள். பின் கேலியாகச் சிரித்துக் கொண்டே வெளியே வந்தீர்கள். (2)

ஹஸ்த–ப்ராப்யோऽப்யக₃ம்யோ ஜடி₄தி முநிஜநஸ்யேவ த₃ாவந் க₃ஜேந்த்₃ரம்
க்ரீட₃ந்–நாபாத்ய பூ₃மௌ புநரபி₄பததஸ்–தஸ்ய தந்தம் ஸஜீவம் ।
மூலாது₃ந்மூல்ய தந்மூலக₃–மஹித–மஹாமௌக்திகாந்–யாத்மமித்ரே
ப்ராத₃ாஸ்த்வம் ஹாரமேபி₄ர்லலிதவிரசிதம் ராதி₄காயை தி₃ஶேதி ॥ 3 ॥

முனிவர்களும்கூடத் தியான யோகத்தினால் தங்களைப் பற்ற முடியாது இருப்பதுபோல, யானையின் துதிக்கைக்கெட்டினாற்போலத் தாங்கள் அருகிலிருப்பினும், அதனால் பற்ற